திருமந்திரம்

மூலபாட ஆய்வுப் பதிப்பு

இரண்டாம் பகுதி

"மான்கன்று நின்று வளர்கின்ற வாறே" - திருமந்திரம், 731

பதிப்பாசிரியர்

டாக்டர் சுப. அண்ணாமலை

டாக்டர் *சுப. அண்ணாமலை*
பதிப்பாசிரியர்

திருமந்திரம் – மூலபாடப் பதிப்பை உருவாக்கிக் கருத்து வரைந்தவர்.

"தமிழாகரர்" என்னும் பட்டம் இவருக்குத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் வழங்கப்பட்டது.

1929 - ஆம் ஆண்டு பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், தேவகோட்டையில் தோன்றினார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பயின்று, 1952 - இல் B.O.L (Hons) தேர்வில் மாநில முதன்மை பெற்றுத் தேறி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் "லாசரஸ்" – தங்கப்பதக்கமும், அரங்கையா செட்டி பரிசும் பெற்றார்.

கோவை பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில் ஓர் ஆண்டும், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் 34 ஆண்டும் தமிழ்த் துறையில் பணியாற்றி, இதில் 20 ஆண்டு, இக்கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகவும், 11 ஆண்டுகள் முதல்வராகவும் பணியாற்றி, 1988 - இல் ஓய்வு பெற்றார்.

(தொடர்ச்சி பின்பக்க உள்அட்டையில்)

C.S.S

உ
சிவமயம்

திருமூலநாதர் அருளிய

திருமந்திரம்

என வழங்கும்

சதாசிவ ஆகமம்

மூலபாட ஆய்வுப் பதிப்பு

இரண்டாம் பகுதி :

நவகுண்டம் முதல்
பசு இலக்கணம் வரை

கருத்துரை எழுதிப் பதிப்பித்தவர்:

டாக்டர் சுப. அண்ணாமலை, எம். ஏ., பிஎச்.டி.

இந்தியப் பண்பாடு - ஆராய்ச்சி நிறுவனம்
84, கலாக்ஷேத்ரா சாலை
திருவான்மியூர், சென்னை - 600 041

முதற் பதிப்பு : ஏப்ரல் 1997
உரிமை: பதிப்பாசிரியர்க்கு

பக்கங்கள் : 29 + 539 = 568
Map Litho Paper - 18.6 Kg.

மூன்று பகுதிகள் சேர்த்து விலை ரூ. 480/-

நன்றியுரை

இந்நூலை வெளியிட அன்புடன்
இசைவு நல்கிய மதுரை, காமராசர்
பல்கலைக் கழகத்தார்க்கு நன்றி

அச்சிட்டோர் :

கலாக்ஷேத்ரா பதிப்பகம்
திருவான்மியூர், சென்னை - 600 041

உள்ளுறை

1.	சொற்சுருக்க விளக்கம்	IV
2.	பதிப்புகளின் பெயரும் குறியீடுகளும்	IV
3.	இடைச்செருகல் காரணங்களும் குறியீடுகளும்	V
4.	நூன் முகம்	VI
5.	அணிந்துரை	VII
6.	முன்னுரை	XI
7.	இயல் நிரல்	XVIII
8.	பொருள் மாலை	XXI
9.	திருமந்திரம்: 'நவகுண்டம்' முதல் 'பசு இலக்கணம்' முடிய	1–508
10.	பின்னிணைப்புகள்:	
	I. பாடல் முதற் குறிப்பு அகரநிரல்	509
	II. இருமுறை / மும்முறை வந்த பாடல்கள் (இரண்டாம் பகுதி)	523
	III. கலைச்சொல் அகரநிரல்	524
	IV. கலைச்சொல் விளக்கம்	528
	V. சிறப்புப் பெயர் அகரநிரல்	534
	VI. அருஞ்சொல் அகர நிரல்	535

சொற்சுருக்க விளக்கம்

1.	அற்புத.	..	அற்புதத் திருவந்தாதி
2.	கம்ப.	..	கம்பராமாயணம்
	அ) அயோ.	..	அயோத்தியா காண்டம்
3.	சிவ. போ.	..	சிவஞான போதம்
	அ) சிற.	..	சிறப்புப்பாயிரம்
4.	சிவ. சித். சுப.	..	சிவஞானசித்தியார், சுபக்கம்
5.	திருவா.	..	திருவாசகம்
	அ) சிவபு.	..	சிவபுராணம்
	ஆ) திருச்சத.	..	திருச்சதகம்
	இ) திருத்தோ.	..	திருத்தோணோக்கம்
	ஈ) அன்.	..	அன்னைப் பத்து
6.	தாயு.	..	தாயுமான சுவாமிகள் பாடல்கள்
7.	தேவா.	..	தேவாரம்
8.	பெ. புரா.	..	பெரிய புராணம்
	அ) திருஞான.	..	திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம்.

பதிப்புகளின் பெயரும் குறியீடுகளும்

முன்னர் வந்த பதிப்புகளுள் கீழ்க்கண்ட பதினொரு பதிப்புகள், பாடத் தேர்வுக்காக ஒப்பு நோக்கப்பட்டன. இப்பதிப்புகளின் பெயரும் இப்பொழுதைய பதிப்பில் இவற்றுக்குக் கொடுக்கப்படும் குறியீடுகளும் வருமாறு

எண்	பதிப்பு	குறியீடு
1.	திருமந்திரம் மூவாயிரம். கொ. சண்முகசுந்தர முதலியார்	(சண்)
2.	திருமந்திரம். மாவை. வே. விசுவநாத பிள்ளை	(விசு)
3.	திருமந்திரம். திரு. வி. கலியாணசுந்தரனார் பார்வை	(திரு. வி. க)
4.	திருமூலர் அருளிய திருமந்திரம். எஸ். சங்கரலிங்க முதலியார்	(சங்)
5.	திருமந்திரம். சைவசித்தாந்த மகாசமாஜம்	(சைவ)

6. திருமந்திரம் மூவாயிரம். துடிசை கிழார் சிதம்பரனார் (துடி)
7. திருமூலர் திருமந்திரம் – பஞ்சாட்சர தீபம் என்னும் உரையுடன் திருவாவடுதுறை ஆதீனம் (திரு) அல்லது (தி)
8. திருமந்திர மாலையாகிய திருமந்திரம். சி. அருணைவடிவேல் முதலியார் தருமபுர ஆதீனம் (த)
9. திருமந்திரம். ஜி. வரதராசன் உரை (வ)
10. திருமூலநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருமந்திரம் – பதிப்பு விவரம் தெரியவில்லை (தெ)
11. திருமந்திரம் – ஆங்கிலமொழி பெயர்ப்புடன். இராமகிருஷ்ண மடம், சென்னை. (இராம)

இடைச் செருக்கல் : காரணங்களும் குறியீடுகளும்

எண்	காரணம்	குறியீடு
1.	கூறியது கூறல்	அ
2.	பொருட் சிறப்பு இன்மை	ஆ
3.	பொருட் பிழை உடைமை	இ
4.	பொருள் தெளிவு இன்மை	ஈ
5.	இயலின் பெயர்க்குப் பொருந்தாமை	உ
6.	இயலின் பிற பாடலுடன் கருத்து மாறுபடுதல்	ஊ
7.	இயலின் பிற பாடலை வடிவால் ஒத்தல்	எ
8.	ஆசிரியர் கருத்துடன் மாறுபடுதல்	ஏ
9.	ஆசிரியர் நூல்கூறும் முறையுடன் மாறுபடுதல்	ஐ
10.	ஆசிரியரைப் படர்க்கையில் குறிப்பிடுதல்	ஒ
11.	ஆசிரியரின் வரலாற்றோடு மாறுபடுதல்	ஓ
12.	நடைச் சிறப்பு இன்மை	ஔ
13.	ஆசிரியரின் நடைக்கு மாறுபடுதல்	க
14.	பிற்காலச் சொல் வழக்கு உடைமை	ங
15.	பொருந்தாச் சொல்லாட்சி, பொருந்தாத் தொடர் உடைமை	ச
16.	சொல்லாட்சியும் நடையும் சிறப்பு இலவாதல்	ஞ
17.	யாப்புப் பிழை உடைமை	ட
18.	இலக்கணப் பிழை உடைமை	ண
19.	வேறுநூற் செய்தி உடைமை	த
20.	நூற்பொருளோடு பொருந்தாமை	ந
21.	சுவடிகளில் இல்லாமை	ப

உ

சிவமயம்

நூன் முகம்

திருமூலர் அருளிய "திருமந்திரம்" என்னும் சதாசிவ ஆகமத்தின் புதிய பதிப்பில், இரண்டாவது பகுதி இந்நூல். முன்னைய பதிப்புகளில் உள்ள தந்திரம் என்ற பிரிவுகள், இப்பொழுதைய பதிப்பில் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலின், ஒவ்வொன்றும் சற்றேறக் குறைய 1000 பாடல்கள் கொண்ட 3 பகுதிகளாக இப்பதிப்பு வெளிவருகின்றது. முதற் பகுதியில், தொடக்கம் முதல் 'திருவம்பலச் சக்கரம்' என்னும் இயல் முடிய, 58 இயல்கள் உள்ளன. இவ்விரண்டாம் பகுதியில் 'நவகுண்டம்' என்ற இயல் முதல், 'பசு இலக்கணம்' என்னும் 111 – ஆவது இயல் முடிய 53 இயல்கள் உள்ளன. எஞ்சிய இயல்கள் மூன்றாம் பகுதியில் இடம்பெறுகின்றன.

சிவயோக நெறியைக் கூறுவதையே பொருளாகக் கொண்டது திருமந்திரம். அதன் இவ்விரண்டாம் பகுதி, அந்த யோகத்தை அங்கமாக, வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகக் கொண்ட சைவநெறியை விளக்குகிறது எனலாம்.

மந்திரம், தந்திரம், யந்திரம் என வழங்கும் பெருங்கிரியைகள், சிவநெறியிலும் அதன் கோட்பாடுகளுக்கு மாறுபடாமல், பெரியோர்களால் வகுக்கப்பட்டிருந்தன என்பதையும், சிறப்பாகத் திருமூலரே, புதுவதாகப் பல யந்திரங்களைச் சக்கரங்கள் என்ற பெயரால் அமைத்துள்ளார் என்பதையும் இவ்விரண்டாம் பகுதியால் அறிகின்றோம். ஸ்ரீ சங்கரர் வெளிப்படுத்திய 'ஸ்ரீவித்தை' என்ற யந்திரத்திற்கு இணையாகத் திருமூலர் 'புவனாபதி சக்கரம்' என்ற யந்திரத்தை வகுத்துள்ளார். ஸ்ரீவித்தை 'சோடசதசாக்ஷரி' என வழங்கும். புவனாபதி சக்கரம் 'பஞ்சதசாக்ஷரி' எனப்படும். திருமூலர் யந்திரங்களின் அகவழிபாடாக, யோகநெறியில் அவற்றை இணைத்துக் கூறுகின்றார்.

இவ்விரண்டாம் பகுதியில் சக்கரங்களைப் பற்றி விரிவாக அறியலாம். இவற்றின் படங்களும் உரிய இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன.

திருமந்திர அறிஞர் திரு. டி.வி. வெங்கட்டராமன் அவர்கள் அன்புடன் இப்பகுதிக்கு அணிந்துரை எழுதியுள்ளார்கள். அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் என் நன்றி உரியது.

"தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்" எனத் திருமூலரே கூறுவது போல், தமிழ் நாட்டில் பரவலாக வழங்கும், இந்நாட்டுக்கே உரிய மெய்யுணர்வுப் பொருளை, இக்காலத்தில் அன்பர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் வெளிவரும் இத் திருமந்திரப் பதிப்பை மக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகின்றேன்.

சுப. அண்ணாமலை

அணிந்துரை

திருமந்திரச் செம்மல்
டி.வி.வெங்கட்டராமன், இ.ஆ.ப., (ஓய்வு)
முன்னாள் தலைமைச் செயலர், தமிழக அரசு

எண் 6, முதல் அவன்யூ
இந்திரா நகர், அடையாறு
சென்னை – 600 020.

திருமூலர் பெருமான் அருளிய திருமந்திரம் சைவப் பெருமக்கள் போற்றி வணங்கும் பன்னிரு திருமுறைகளில் பத்தாவதாக வைக்கப்பட்டுள்ளது. திருமுறைகள் தோத்திரங்களை கொண்டுள்ளதாக கருதப்படுவதால் திருமந்திரமும் பொதுவாக ஒரு தோத்திர நூலாகவே எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆயினும், திருமந்திரம் ஒரு மிக முக்கியமான சாத்திர நூல் என்று எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். தோத்திரங்கள் சாத்திர உண்மைகளைப் பேசுவதையும், சாத்திர நூல்கள் தோத்திரப் பகுதிகளை உள்ளடக்கி இருப்பதையும் அருளாளர்களுடைய படைப்புகளில் பல இடங்களிலேயே சந்திக்கின்றோம். சமய நெறியை தெளிவுபடுத்துவதற்கு இவை இரண்டுமே தக்க அளவில் தேவைப்படுகின்றன. அதற்கு மேலாக ஆன்மிகப் பாதையில் நாம் எல்லோரும் மேற்கொள்ள வேண்டிய பயணம் உள்ளத் தெளிவுடன் நடைபெற வேண்டுமென்றால் சாத்திர அறிவும், தோத்திர உணர்வும் ஒருங்கே இணைந்து இயங்க வேண்டியுள்ளது. திருமந்திரத்திலே அத்தகைய ஒருங்கிணைந்த இயக்கத்தை காண முடிகிறது. இந்த இயக்கம் இறை உணர்வினைப் பெறுவதற்கான வழிகளையும் காட்டுகின்றது.

இறை உணர்வு என்பது ஒரு அனுபவ நிலையாகும். தன்னைப் பற்றியும், பரம்பொருளைப் பற்றியும், தனக்கும் பரம்பொருளுக்கும் இடையே உள்ள உறவைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள முயல்வதும், அவற்றைப் பற்றிய அறிவினைப் பெறுவதும் இறைவன் திருவருளால் உணர்வு நிலையிலேயே நடைபெறும். இதையே ஆன்மிக அனுபவம் என்று சான்றோர்கள் கூறுகின்றார்கள்.

இந்த அனுபவம் நாம் கருவி, கரணங்களைப் பயன்படுத்தி பெறும் உலக அனுபவமாக மட்டும் இல்லாமல், கருவி கரணங்களுக்கு அப்பால் பக்குவமடைந்த உள்ளங்கள் தம்முள் பெறும் திருவருள் அனுபவமாக சான்றோர்கள் உணர்ந்து இருக்கின்றனர். திருமந்திரம் சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும், அதற்கு மேலாக ஒரு மிகச் சிறந்த அனுபவ நூலாகவும் அமைந்துள்ளதை கற்றுணர்ந்த பெரியோர்கள் நமக்கு விளக்கியுள்ளார்கள். திருமூலரும் இந்த அனுபவத்தைப் பெற்று நமக்கு அளிக்க விரும்புகிறார் என்பதில் ஐயமில்லை. “நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்கிற திருமந்திர மொழிக்கு இதுவே பொருள் எனலாம்.

திருமந்திரம் ஒரு அனுபவ நூலாக அமைந்துள்ள காரணத்தினால் அந்த நூலின் உட்கருத்துக்களை, நெறிகளை புரிந்துகொள்வது கடினம் என்று பொதுவாகக் கருதப்படுகின்றது. முற்றும் கற்றுணர்ந்த பெரியவர்கள் மட்டுமே அவற்றை நம்முடைய

உள்ளத்தைத் தொடும் அளவுக்கு விளக்க முடியும் என்பதும் தெளிவாகிறது. பொதுவாக அருள் இலக்கியங்கள் பல படிப்பதற்கு எளிதாக இருக்கலாம். ஆனால் அவற்றில் பொதிந்து கிடக்கக்கூடிய ஆழ்ந்த அனுபவக் கருத்துக்களை உணர்வு நிலையில் தான் தெரிந்துகொள்ள முடியும். திருமந்திரத்தைப் பொறுத்தவரை என்னைப் போன்றவர்கள் படித்து, தெரிந்துகொண்டு சிந்திக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்று, ஆன்மிக அனுபவத்தை ஆழப்படுத்தும் வகையில், அதிக அளவில் நூல்கள் வெளிவரவில்லை என்று கருதினால் நான் மிகைப்படுத்திக் கூறுகிறேன் என்று தயவு செய்து எண்ண வேண்டாம். என்னைப் போன்ற பலரின் அனுபவம் இதுதான் என்கிற காரணத்தினால் இவ்வாறு கூற விரும்புகிறேன். திருமந்திர விளக்கவுரையாக மிகச் சிறந்த நூல்கள் அண்மையில் தருமபுர ஆதீன மகாசந்நிதானம் திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் ஆகியோருடைய பெரும் தவ முயற்சியால் நமக்குக் கிடைத்துள்ளது ஆன்மிக நாட்டம் உள்ளவர்களுக்கும் திருமுறைகளைப் பயின்று, தங்களை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. அதே நேரத்தில் சமயக் கல்வியில் முதற்படியிலேயே நிற்கும் பலருக்கு எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மேலும் நூல்கள் வெளிவர வேண்டும் என்கின்ற அவாவையும் தெரிவிக்க வேண்டியுள்ளது.

சைவ சமயத்தின் அடிப்படை உண்மைகளையும், நெறிகளையும் திருமந்திரம் முதன்முறையாக வகைப்படுத்திக் கூறுகின்றது என்று எடுத்துக்கொள்ளலாம். அதே நேரத்தில் திருமூலர்பெருமான் யோகம், மந்திரம், சக்கர வழிபாடு, அவத்தை நிலை விளக்கம் போன்றவற்றிற்கு, தனித்தன்மை வழங்கியுள்ளது சிந்திக்கத்தக்கது. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் இதுபற்றிப் பலமுறைகள் வினா எழுப்பியுள்ளார்கள். திருமந்திரக் கல்வியிலே இதுபோன்ற பல சிக்கல்கள் உள்ளன. திருமூலர்பெருமானுடைய காலமே கேள்விக்குறியாக இருந்து வருகிறது. அவருடைய வரலாற்றைப் பற்றி சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்புராணத்தில் நமக்கு கொடுக்கும் விவரங்களைத் தவிர வேறு காணப்படவில்லை. திருமந்திரத்திலே காணப்படும் அகச்சான்றுகளைப் பற்றி முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் பல வழங்கப்பட்டுள்ளன. திருமூலர்பெருமான் ஒரு ஒப்பற்ற யோகி என்கிற நிலையில் அவருடைய மந்திர மொழி யோக அனுபவத்தின் அடிப்படையில் விளக்கப்பட வேண்டும் என்பதை சித்த நெறியைக் கடைப்பிடித்து வரும் பல சான்றோர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, பல மந்திரங்கள் யோக சாதனையில் சாதகன் அனுபவிக்கும் நுட்பமான உணர்வுகளை மிகத் துல்லியமாக எடுத்துக்கூறுகின்றன என்பதையும் தெரிந்துகொள்ள முடிகிறது. இதை சமயத்திற்கு அப்பாற்பட்ட நிலை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. சைவ சமய நெறிகளிலே யோக நெறியும் முக்கியமானது. வன்தொண்டராகிய சுந்தரர் பெருமான் யோக நெறியில் நின்றார் என்று சேக்கிழார் பெருமான் தெரிவித்துக் கொள்கின்றார். அறுபத்து மூன்று நாயன்மார்களில் பலர் யோக நெறியின் பல கூறுகளில் தங்களை விசேஷமாக ஈடுபடுத்திக்கொண்டு சிவனருள் பெற்றார்கள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. சிவயோகம் தொன்றுதொட்டு

அருளாளர் பெருமக்களால் பேசப்பட்ட ஒரு நெறியாகும். திருமூலர்பெருமான் அட்டாங்க யோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும், திருமந்திரத்தில் அநேக மந்திரங்கள் குண்டலி யோகம், சந்திர யோகம், பிராசாத யோகம் போன்றவற்றிற்கு விளக்கம் தரும் வகையில் அமைந்துள்ளன என்பதை மறுக்க முடியாது. இந்தப் படைப்பினை நமக்கு நல்கும் பெருமதிப்பிற்குரிய டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களும், இந்த அடிப்படையிலேயே பல மந்திரங்களுக்கு கருத்துரை வழங்கியுள்ளார்கள் என்பது இந்த நூலுக்கு ஒரு தனித்தன்மையைத் தருகிறது.

சிவயோக சாதனைக்கு உடம்பு இன்றியமையாதது என்பதை திருமந்திரத்திலே பல இடங்களில் காணமுடிகிறது. தூல உடம்போடு சூக்கும உடம்பும் கட்டுப்பாடோடு இயங்க வேண்டும் என்பது அட்டாங்க யோக நன்னெறியாகும். சூக்கும உடம்பு என்று கூறும்பொழுது மனநிலை, புத்தியின் இயக்கம், சித்தத்தின் வளர்ச்சி ஆகியவற்றிலும் சாதகன் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதுபற்றி பல மந்திரங்கள் மறைமுகமாகவும், உட்கருத்தோடும் பேசுகின்றன. இவற்றையெல்லாம் சீரிய முறையிலே விளக்க வேண்டுமென்றால் ஆன்ம அனுபவம் முதிர்ந்த நிலையில் அமைய வேண்டும். இந்த நூலில் உள்ள பல கருத்துக்களை நாம் படிக்கும்போது ஆன்மிக அனுபவத்தின் முத்திரையை நாம் காண்கிறோம் என்றால் மிகையாகாது.

நூலாசிரியர் மூவாயிரம் மந்திரங்களையும், தந்திரங்கள் அடிப்படையில் பிரிக்காமல், எண்ணிக்கை அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளது இதுகாறும் மரபாக கடைப்பிடிக்கப்பட்டுள்ள ஒரு முறைக்கு மாறுபட்டதாக இருந்தாலும், அவர் அவ்வாறு செய்வதற்கு கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தக்கவை என்று தோன்றுகின்றது. இரண்டாம் பகுதியாகிய இந்த நூலில் மந்திர உபாசனை, சக்கர வழிபாடு, சைவ சித்தாந்த நெறி போன்றவை இடம்பெறுகின்றன. இவற்றின்மீது நூலாசிரியர் தெளிவான கருத்துக்களை வழங்கியுள்ளதை காணும்பொழுது திருமந்திரத்தைப் படித்து பயனடைய வேண்டும் என்று விருப்பமுடைய என்னைப் போன்ற சாதாரண மக்கள் இந்த நூலை மகிழ்ந்து வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

திருமந்திரத்தில் மந்திரங்களின் எண்ணிக்கை பாட பேதம், இடைச்செருகல், ஆகியவை ஆய்வாளர்களுக்கு தீராத பிரச்சினையை கொடுத்து வருபவை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. பல ஆண்டுகளுக்கு முன்பு திருமந்திரக் கல்வியில் அனுபவமுள்ள பெரியவர்களை ஒரு கூட்டத்திற்கு அடியேன் வரவழைத்து இந்தப் பிரச்சினைகள் மீது எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் முறைப்படி முடிவுகளை வழங்க வேண்டுமென்றும் சான்றோர்கள் இந்த முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் இந்தப் பணியிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, வேறு எந்த நூலிலும் காணாத அளவுக்கு, விரிவாகவும், ஆழமாகவும் பல நூல்களை ஆய்வு செய்து, பல பாட பேதங்களையும், இடைச்செருகல்களையும் தக்க காரணங்களுடன் நிர்ணயம் செய்து ஒரு நூலை நமக்கு

அளித்திருப்பது ஒரு மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க பணியாகும். திருவருள் துணையோடு, கடும் உழைப்புடன் ஒரு மாபெரும் பணி நிறைவேறியுள்ளது. பாட பேதம், இடைச்செருகல் போன்ற பிரச்சினைகள் இல்லாத, திருமூலர்பெருமான் அன்று அருளிச் செய்தவாறே இன்று திருமந்திர நூல் ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. திருமந்திர ஆய்வில் ஈடுபாடுடைய அறிஞர் பெருமக்கள் இந்த நூலைக் குறிப்பாக வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்களுடைய சிந்தனையை ஊக்குவித்து, திருமந்திரக் கல்வி மேலும் வளர இந்த நூல் பெரிதும் உதவும் என்பது அடியேன் கருத்து. டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களுடைய அனுபவ முதிர்ச்சியும், சிந்தனைத் தெளிவும், முழுமையாகக் காணப்படுகின்ற கருத்துரையும் என்போன்றவர்கள் திருமந்திரத்தை நன்கு கற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யும். இந்தப் பெரும் முயற்சிக்காக டாக்டர் சுப. அண்ணாமலை அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் வழங்குவதோடு இந்த முயற்சியில் அவருக்கு துணைநின்ற சிவபெருமான் திருவருளுக்கு நாம் என்றென்றும் கடமைப் பட்டிருக்கின்றோம் என்கிற உணர்வையும் முன்வைக்கின்றேன்.

உ

சிவமயம்

முன்னுரை

சைவத் திருமுறைகள் அன்புநெறி நூல்கள். திருமந்திரம் இப் பொதுத் தன்மைக்கு மாறுபட்டது அன்று. அது விரிவால் யோகநெறி பற்றியது ஆயினும், கருத்தால், முடிபால் அன்புநெறி நூலே ஆகும். அஃது 'யோக–இயலை' (Science of yoga) ஒரு சாத்திரம் போல நின்று, விளக்குவதே மற்ற திருமுறைகளுக்கும், அதற்கும் உள்ள வேறுபாடு. நமது மனம் அன்பில் நிலைத்து நிற்பதற்கு ஒரு வழியாக, அஃது யோகத்தைப் பற்றிப் பேசுகின்றது.

மற்ற திருமுறைகளைப் போலவே திருமந்திரமும் அன்பு, அருள், சிவம் என்பவற்றைப் பற்றிக் கூறுகின்றது. ஆனால், அவை எல்லாம் அவற்றை அனுபவமாக வெளிப்படுத்துகின்றன. திருமந்திரம் அவற்றை அடையும் நெறிமுறையை விளக்குகின்றது.

அன்பு உயிரினுடைய பண்பு. அருள் சிவத்தின் பண்பு. பண்பும், அதை உடைய பொருளும் வேறு வேறு அல்ல. இரக்கத்தையும், தன்னையும் பற்றி இராமலிங்க வள்ளலார்,

"என் உயிர்தான், உயிர் இரக்கம்தான்
ஒன்றதே, இரண்டு இலை"

என்பார்[1]. சிவத்தையும், அதன் அருளையும் பற்றித் திருமூலர்,

"ஒன்று அவன் தானே; இரண்டு அவன்
இன்னருள்".

என்பார்[2]. 'இறைவன் ஒருவனே. விளக்கத்துக்காக, அவனும் அவனது அருளும் தனித்தனியே எண்ணப்படுகின்றன' என்பது இதன் கருத்து.

அன்பையும், அருளையும், சிவத்தையும் அனுபவித்து உணர்ந்தவர்கள் திருமுறை ஆசிரியர்கள். தமது உள்ளத்தில், சிவன்பால், இயல்பாகப் பெருகிய அன்பினால் 'பக்தி அனுபவத்தையும்', அந்த அன்பினால் 'அருள் – அனுபவத்தையும்' பெற்றார்கள்.

1. *திருவருட்பா, 6 ஆம் திருமுறை : பிள்ளைப் பெரு விண்ணப்பம். பா.* 97
2. *திருமந்திரம், கடவுள் வாழ்த்து, பா.* 1

"அவன் அருளாலே அவன்தாள் வணங்கி"[3]

என்றாற் போல, சிவம் வழங்கிய அருளால் மேலும் அன்பு வளரப்பெற்றுச் சிவத்தை அடைந்து இன்பம் எய்தினார்கள். சிவத்துடன் உணர்வு ஒன்றி – 'சிவமாகவே' நின்று, அன்பையும், அருளையும், சிவத்தினையும் நமக்கு உணர்த்துகின்றார்கள்.

"மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு
மாசிலாச் சீர்மறைக் காடு நெய்த்தானம்
நிலையினான் எனதுரை தனதுரையாக
நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமலன்"[4]

என்ற திருஞானசம்பந்தர் திருமொழியையும்,

"சித்த மலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கருளிய வாறு"[5]

என்ற மாணிக்க வாசகர் மணிமொழியையும் காண்க.

இக் காரணத்தால்,

"ஆறது ஏறும் சடையான் அருள்
மேவ, அவனியர்க்கு
வீறது ஏறும் தமிழால்
வழிகண்டவன்" [6]

என, நம்பியாண்டார் நம்பி, திருஞானசம்பந்தரைப் புகழ்வது போலத் திருமுறைகள் சிவபெருமான் திருவடியை அடைவதற்கு, இவ்வுலக மக்களுக்கு வழி ஆயின. தமிழ் "திருநெறிய தமிழ்" – திரு – என்னும் வீடுபேற்றைத் தரும் தமிழ் – ஆயிற்று.

திருமுறை என நம்பியாண்டார் நம்பி பெயர் சூட்டியது, இக்காரணம் பற்றியே போலும்.

3. *திருவாசகம், சிவபுராணம் : அடி* 18

4. *தேவாரம்,* 1 *ஆம் திருமுறை, திருவிலம்பையங் கோட்டூர்,* 1

5. *திருவாசகம், அச்சோப் பதிகம், பா.* 1

6. 11 *ஆம் திருமுறை, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் :* 5.

பிற திருமுறை ஆசிரியர்களைப் போலவே, திருமூலரும் அன்பு, அருள், சிவ–அனுபவங்களைப் பெற்றார். ஆனால் யோகநெறியின் மூலமாகப் பெற்றார். அவர் கூறும் யோகநெறியில் அன்பு, அருள் ஆகியவற்றின் சிறப்பிடம் சிறிதும் குறையவில்லை. இவற்றை அடையவும், அடைந்த பிறகு நிலை நிறுத்தவும் யோகம் அவருக்குத் துணைநின்றது. அந்த யோகநெறியைத் நூலாக வகுத்துரைக்கின்றார். அனுபவத்தை வெளியிடுவதும் இந்நூலில், சிற்சில இடங்களில் உண்டு.

யோகத்தில் பல வகைகள் உள்ளன. அவற்றுள் 'சிவ யோகத்தை' முறையாகப் போதிக்கும் நூல் திருமந்திரம். ஓர் இயலை, அதற்கு என உள்ள போதனை வகுப்பு எவ்வாறு படிப்படியாக விளக்குமோ, அவ்வாறு யோக – இயலை விளக்குகின்றது இவ்வரிய நூல்.

யோகம் என்பது ஒன்றி நிற்றல். வழிபடும் அன்பன் சிவத்துடன் ஒன்றிநிற்றல் சிவயோகம். சைவநெறி ஆன்மிக வளர்ச்சிப் படிநிலைகள் ஆகிய 'தசகாரியத்துள்' (10 படிநிலை உணர்வுகள்), ஒன்பதாவதாகச் சிவயோகத்தைக் கூறும்.

சிவம் எங்கே? நாம் எங்கே? இருவரும் வேறு வேறு அல்லவா? அவனோடு ஒன்றி நிற்க இயலுமா?

இயலும் என்கிறார் திருமூலர். அதற்கு அவர் கூறும் வழி, உலகத்திற்கு அவர் விடுக்கும் செய்தி (Message) ஆகும். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது அது. அஃது எவ்வாறு வழியாகும் என்று அறிய, திருமந்திர நூலின் முழுக்கருத்தையும் பின்னணியாக வைத்து, அந்தச் செய்தியைத் தாங்கிய திருமந்திரப் பாடலின் பொருளைச் சிந்திக்க வேண்டும்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின், நமன் இல்லை, நாணாமே
சென்றே புகும் கதி இல்லை, நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே.

என்பது அப்பாடல்[7]. திருமூலர் கூறும் சில அடிப்படைகளைச் சிந்தித்தபின், இப்பாடலின் பொருளைக் காண்போம்.

1. "அன்பு வேறு, சிவம் வேறு அல்ல. அன்பே சிவம்." இது யோகத்தின் அடிப்படைகளுள் முதன்மை உடையதாகத் திருமூலர் கூறுவது.

இம்முன்னுரையின் தொடக்கத்தில் கூறியது போல, சிவத்தின் பண்பு அருள்; உயிரின் பண்பு அன்பு. எனவே, அன்பும் சிவமும் வேறானவை அல்ல என்பது எவ்வாறு?

7. *திருமந்திரம், பா.* 2080

2. எங்கும் எப்பொருளிலும் கலந்து நிற்கும் சிவம், நம் உள்ளத்திலும் உள்ளான்.

"உள்ளத்து ஒருவனை, உள்ளூறு சோதியை
உள்ளம் விட்டு ஓரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு வறியாதே"

(பா. எண் 240)

என்னும் பாடலையும் காண்க.

நம் உள்ளத்தில், நாம் அறியாமலே மறைவாக உள்ள சிவத்தை இனம் காண்பது எவ்வாறு?

அதற்குப் பல களங்கள் உண்டு. இயற்கையின் அழகில், இசையில், மந்திர ஒலியில், அருளியற் காட்சியில் (Mystic vision) சிவத்தை இனம் காணலாம். ஆனால், திருமூலர், சமுதாயத்தில், மக்களுக்குத் தொண்டு செய்தல், அறம் செய்தல் என்பவற்றின் மூலம், அவர்களிடம் அன்பு காட்டி, உள்ளம் அவர்களுடன் ஒன்றி நின்றால், அந்த ஒருமைப்பாட்டில் இறைவனை இனம் காணலாம். இஃது அவனிடம் அன்பு செலுத்த வழி வகுக்கும்' என்று அவரது சிறப்புக் கொள்கையைக் கூறுகின்றார்.

"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" என்ற அவரது மொழி இக்கருத்தைத் தாங்கி நிற்கின்றது.

உயிர்க்குலம் பல. மக்களிடத்திலும் பல குலங்கள் பிரித்துவிட்டனர். ஆனால், உண்மையில் வேற்றுமை இல்லை. அறிவும், திறமையும், தகுதியும் வேறு வேறாக இருக்கலாம். ஆனால், உயிர்த்தன்மையில், அன்பில் வேற்றுமை இல்லை. இது மட்டும் அன்று. உலகத்து உயிர்கள் அனைத்தும் ஒன்றுபட, ஓர் உரிமையும் இருக்கின்றது. அவற்றின் உள்ளே ஒரே இறைவன் இருக்கின்றான் என்பதே அவ்வுரிமை. 'ஒருவனே தேவன் என்ற அடிப்படையால், உயிர்க் குலம் எல்லாம் ஒன்றே, என்பது திருமூலர் கருத்து.

உரிமை இருப்பதை உணர்ந்து நம் சாதிகளை, சாத்திரங்களை, பற்பல காரணங்களால் வேற்றுமை பார்க்கும் வழக்கத்தை விட்டொழித்து, நம் சுயநலத்தை ஒதுக்கி, எல்லோரும் இன்புற்றிருக்க எண்ண வேண்டும். எண்ணத்தை, முடிந்த அளவு செயலாக்க வேண்டும். நமது அன்பு, ஒரு குறுகிய வட்டத்தில் நின்றுவிடாமல், பரந்த அன்பாகப் பெருகினால், அந்த அன்பில் நம் சிந்தனைகள் தோன்றிட, நாம் அதில் ஒன்றி நின்றால், அன்பிலேயே சிவத்தைக் காணலாம்.

சிவம் வேறு, அருள் வேறு அல்ல. ஆதலால், இந்த அன்பே வழியாக, அருள் பெறலாம். அருளறிவை, அருளாற்றலைப் பெறலாம். பிறகு இறப்பும் இல்லை. பிறப்பும் இல்லை. இதை,

"நன்றே நினைமின், நமன் இல்லை நாணாமே"

என்கிறது பாடலின் அடுத்த அடி. 'நாணாமல், அதாவது தயங்காமல், நன்மை நினைக்க வேண்டும் நினைத்தால், இறப்பு இல்லை' என்பது பொருள்.

சிவநிலையை நாம் பெறவேண்டும் என்றால், அதற்கு அன்பு மட்டுமே வழி. இந்த நிலை, இறந்தபிறகு வருவது அன்று. இந்த வாழ்விலேயே அதைப் பெறவேண்டும்.

"சென்றே புகும் கதி இல்லை"

இவ் வாழ்விலேயே சிவநிலை பெறவேண்டுமாயின், அன்பிலேயே நிலைத்து நிற்கும் சித்தம் வேண்டும். அன்பு மனத்தின் உணர்வு மட்டும் அன்று, உயிரின் குணம். அன்புச் சிந்தனையிலேயே நிலைத்து நின்றால், உயிரை – நம்மை – ஆன்மாவை உணரலாம். அதற்கு வழியாகத் திருமூலர் யோகத்தைக் கூறுகின்றார்.

அவரது கருத்தின்படி, உயிர்களிடத்திலும், சிவத்தினிடமும் அன்பின்றி, யோகம் செய்வதும் பயனில்லை; அன்பு மன உணர்வுதான் என்று, மனப்பக்குவம் அடைவது மட்டும் பயனில்லை. அன்பை நம் உயிர்க் குணமாக அறிந்து, 'ஆன்மாவை' அறியவேண்டும். ஆன்ம உணர்வில் நிலைத்து நிற்க வேண்டும். இந்தக் கருத்துடன் வருகின்றது பாடலின் இறுதி அடி.

"நும் சித்தத்து நின்றே நிலைபெற,
நீர் நினைந்து உய்ம்மினே"

என்பது அது. "நும் சித்தத்து நீர் நினைந்து, நிலை பெற நின்று உய்ம்மின்" என்று மாற்றிக் கொள்ள வேண்டும். சித்தம் என்பது உயிர்; ஆன்மா. அதன் தன்மை அன்பு என்பதை நினைத்து, அதிலேயே நிலைத்து நிற்க; சிவத்தை அறிந்து உய்க' என்பது இதன் பொருள்.

மன உணர்வினால் அல்ல; உயிருணர்வால்தான் சிவத்தை உணர இயலும்.

"உணர்வின் நேர்பெற வரும் சிவபோகம்"[8]

என்பர் சேக்கிழார்.

"உள்ளத்து உணர்ச்சியிற் கொள்ளவும் படான்"[9]

என்பார் மணிவாசகர்.

8. *பெரிய புராணம், பா.* 2064.

9. *திருவாசகம், திருவண்டப் பகுதி.* *அடி* 112.

இராமலிங்க வள்ளலார், தாம் ஆன்மவுணர்வு – உயிருணர்வு – பெற்றமையையே "அன்பு மாலை" என்ற பதிகமாகப் பாடுகின்றார். எனவே 'அன்புப் பேறு' தான் (The Realization of love) ஆன்மா தன்னை அறிதல் (Self - Realization). இந்த நெறியில், ஒருவன் 'தன்னை' அறிந்தால், அவனும் அன்பும் வேறல்ல; அவனும் அருளும் வேறல்ல; அவனும் சிவமும் வேறல்ல என்று உணரும் அனுபவங்கள் அடுத்து அடுத்து உண்டாகும்.

இதனால்தான் "அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்ற முடிவிற்குத் திருமூலர் வருகின்றார். அவரது திருமந்திரத்தின் முடிந்த முடிவான கருத்து இதுவே ஆகும்.

திருமூலர் கூறும் சிவயோகம் நாம் உயிருணர்வைப் பெற வழிவகுத்து, அதன் மூலம் அருள், சிவம் என்ற மிக உயர்நிலைகளை இங்கேயே, இவ்வாழ்விலேயே அடைவதற்குத் துணை செய்கின்றது. இதில், சிறப்பாக அறிய வேண்டுவது. ஆன்மீக சாதனையில், நமது உடம்பும் முக்கியமான பங்கேற்கின்றது என்பதாகும். அதுபற்றியே, திருமூலர் "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்றார்.

அவர் கூறும் சிவயோகம், பதஞ்சலி முனிவரின் 'அட்டாங்க யோகத்' திலிருந்து வளர்ந்ததே. அஃது ஒரு அகவழிபாடாக வளர்த்து அமைக்கப்படுகின்றது. சக்தி – சிவத்தைச் சேர்த்து 'அம்மையப்பனாகவும்', அவர்களைத் தனித்தனியாகவும் வழிபட, திருமூலர் யோக முறை வகுக்கின்றார்.

"அண்டத்தைப் போலப் பிண்டம்"

என்பது யோகியரின் கோட்பாடு. அண்ட வெளியில் உலாவும் சூரியன், சந்திரன், அக்கினி போல உடம்பிலும் உண்டு. உத்தேசமாகக் கூறினால், சந்திரன் நம் தலையிலும், சூரியன் நமது இதயத்திலும், அக்கினி இடையிலும் உள்ளன. நமது உயிரின் ஆற்றல் – உடலின் ஆற்றல் – இவை பின்னிக்கிடக்கும் இடம் இடை. அதை 'மூலாதாரம்' என்பர். அங்கு, இந்த 'இரண்டு ஆற்றல் ஒன்றிப்பு' க்கு வலிமை யூட்டுவதாக அக்கினி உள்ளது. ஆனால் அது சாதாரணமாகச் செயற்படாது. யோகசாதனையால்தான் செயற்படும். அதற்கும் அதிதேவதையாகச் சக்தி, நம் உடம்பில் இருக்கிறாள். அவள் பெயர் 'குண்டலி'. யோகசாதனையில், உரிய மந்திரத்தைத் தியானித்து, அவளை எழுப்பி, அக்கினியைச் செயற்பட வைத்து, மூலாதாரத்தில் கனலை எழுப்பினால், அக்கனலே ஆற்றலாக (energy) உந்த, யோகம் நடைபெறும். இதை நூலில் காண்க.

மந்திரம் இயற்கையானது. அஃது மொழியைச் சேர்ந்தது அன்று. அதில் ஒலியே, குறிப்பிட்ட விளைவை உண்டாக்கும். ஒலியில்லாமல் தியானமாகச் செய்தாலும் இந்த விளைவு உண்டாகும்.

அருளைப் பெற்று, அதன் மூலமே சிவத்தை உணர இயலும். அருள் என்பதுதான் சக்தி. எனவே, திருமூலர் மந்திரத் தியானத்தின் மூலம் சக்தியின் – அம்பிகையின் –

அருளைப் பெறுவதை விளக்குகிறார். இத்தியானத்திற்குச் சக்கரங்கள் வகுக்கின்றார். அதாவது 'யந்திரங்கள்' அமைக்கின்றார். அவை, இந்த இரண்டாம் பகுதியில் இடம் பெறுகின்றன.

சிவயோகம் சைவநெறியின் ஓர் உறுப்பே. ஒரு வழிபாட்டு முறையே. ஆதலால், சைவ சமயம், அதன் கோட்பாடுகள் – ஆகியவற்றை விளக்குகிறார். தத்துவக் கோட்பாடுகளுக்கு மூலமாக அமைந்தது அனுபவமே. ஆதலால், அவற்றைத் திருமூலர் யோக – இயல் அனுபவங்களைக் கொண்டே விளக்குவது குறிப்பிடத்தக்கது.

ஊன் – உடம்பே ஒளி உடம்பாக மாறுவது; மனிதன் இறப்பை வெல்லுவது – ஆகியவையும் சமய சமரச சன்மார்க்கமும் திருமூலர் முதன் முதலில் வகுத்துக் கூறிய செய்திகள். திருமுறைகளுக்குப் பின் வந்த காலத்தில் இது மறக்கப்பட்டது. 19 – ஆம் நூற்றாண்டில், இராமலிங்க வள்ளலார், திருமூலர் காட்டிய கொள்கையின் அடிப்படையில் "சுத்த சன்மார்க்கம்" என்ற நெறியை வகுத்தார். அது நிற்க.

யோகம் சிவயோகமாக வளர்ந்து அமைந்த வகையைச் சைவநெறியின் பின்னணியில் விளக்குவது, திருமந்திரத்தின் இவ்விரண்டாம் பகுதி எனக்கூறி அமைவோம்.

சுப. அண்ணாமலை
பதிப்பாசிரியர்

இயல் நிரல்

எண்	பெயர்	பக்கம்
59.	நவகுண்டம்	1
60	சத்தி பேதம்	18
	(i) திரிபுரைச் சக்கரம்	34
	(ii) ஆதிவயிரவி மந்திரம்	61
	(iii) பூரண சத்தி	79
61.	ஆதாரவாதேயம்	130
62.	ஏரொளிச் சக்கரம்	152
63.	வயிரவச் சக்கரம்	156
64.	சாம்பவி மண்டலச் சக்கரம்	161
65.	புவனாபதி சக்கரம்	167
66.	நவாக்கரி சக்கரம்	214
67.	சுத்த சைவம்	222
68.	சரியை	226
69.	கிரியை	229
70.	யோகம்	234
71.	ஞானம்	239
72.	சன்மார்க்கம்	243
73.	சகமார்க்கம்	246
74.	சற்புத்திர மார்க்கம்	250
75.	தாசமார்க்கம்	253
76.	சாலோகமாதி	256
77.	சத்தி நிபாதம்	266
78.	புறச்சமய தூடணம்	279
79.	உட்சமயம்	285
80.	சிவகுரு தரிசனம்	296
81.	திருவடிப்பேறு	303
82.	ஞாதுரு, ஞான, நேயம்	309
83.	துறவு	

84.	தவம்	317
85.	தவ தூடணம்	320
86.	அருளுடைமை	327
87.	அவ வேடம்	332
88.	தவ வேடம்	334
89.	சிவ வேடம்	337
90.	அபக்குவன்	342
91.	பக்குவன்	348
92.	ஆறாதாரம்	355
93.	அண்ட லிங்கம்	360
94.	பிண்ட லிங்கம்	364
95.	சதாசிவ லிங்கம்	366
96.	ஆன்ம லிங்கம்	375
97.	ஞான லிங்கம்	380
98.	சிவ லிங்கம்	385
99.	சம்பிரதாயம்	387
100.	திருவருள் வைப்பு	392
101.	அருளொளி	403
102.	சிவ பூசை	407
103.	குரு பூசை	415
104.	மாகேசுர பூசை	419
105.	அடியார் பெருமை	424
106.	முத்திரை பேதம்	436
107.	பூரண குகை நெறிச்சமாதி	442
108.	விந்துற்பனம்	448
109.	விந்துச் செயம்	456
110.	ஆதித்தன் நிலை	478
	(i) பிண்டாதித்தன்	484
	(ii) மனவாதித்தன்	485
	(iii) ஞானாதித்தன்	488
	(iv) சிவாதித்தன்	493

111.	பசு இலக்கணம்	496
	(i) பிராணன்	496
	(ii) புருடன்	498
	(iii) அணுவன்	499
	(iv) சீவன்	501
	(v) பசுவன்	503
	(vi) போதன்	505

பொருள் மாலை

எண் | எண் : பாட்டெண் | இயல்

59. நவ குண்டம்

யோகமும் யாகமும் 1005-1006, யோகப் பயன் 1007-1014,
உடம்பின் மாற்றம் 1017 - 1019, சிவக்காட்சி 1020-1031,
மரணம் இல்லா வாழ்வு 1032-1033
குண்டங்களின் வடிவம் 1034.

60. சத்தி பேதம்

(1) திரிபுரைச் சக்கரம்

சத்தி வகை 1935-1936,
திரிபுர சுந்தரி 1037-1041, மூலம் சிவ சத்தியே 1042-1045
சத்தியின் கருணை 1046-1051, அருளாற்றல் தருபவள் 1052-1056
சத்தி தியானம் 1057-1063,
வாழ்வும் அவள், சிவகதியும் அவள் 1064

(2) ஆதி வயிரவி மந்திரம்

மந்திர அமைப்பு 1065-1066
மந்திர தியானம் 1067-1070
வயிரவி உருவம், பண்பு, இடம் 1071-1075
வயிரவிக்கு யோக வழிபாடு 1076-1086
வயிரவி அருள் 1087-1091, வயிரவி காட்சி 1092-1097
உணர்வு 1098-1101, சந்திர மண்டலத்தில் சத்தி 1101-1106
பரசிவத்தை உணர்த்துபவள் 1107-1113.

(3) பூரண சத்தி

பரம்பொருள் ஒன்றே, அதன் இயக்கமே சத்தி 1114-1126,
யோகானுபவத்தில் புருவமத்தி சோதி சத்தியே 1127-1128,
துவாதசாந்த வெளியில் (பரமாகாயத்தில்) சிவத்தினுள்
சத்தி 1129-1131, பராசத்தி 1132-1143.

61. ஆதாரவாதேயம்

உடம்பில் ஆறு ஆதாரங்கள் 1144-1145,
உலகங்களுக்கு ஆதாரம் 1146-1158,
யோகி பராசத்தியைத் தரிசித்தல் 1159-1162,
பராவித்தை (ஸ்ரீ பஞ்சதசாட்சரி மந்திரம்) 1163-1190,
தல வழிபாடு, சிவ புண்ணியம், தியானம் 1191-1201,
சத்தி நம் உயிர்த்துணை 1202-1205,

சத்தி வழிபாடு 1206-1211,
பிரணவ யோகம் (பிராசாத யோகம்) 1213-1229
சத்தி வழிபாட்டின் பயன் 1230

62. ஏரொளிச் சக்கரம்

பிராசாத யோகம் 1242-1246,
ஏரொளிச் சக்கரங்கள் 1247-1259
சத்திக் காட்சி 1260-1263
விந்து – நாதம் உடம்பிற்குள் வருதல் 1264-1269
சிவதரிசனம் 1271, யோகப் பயன் 1272-1277.

63. வயிரவச் சக்கரம்

சக்கர அமைப்பு 1278,
வயிரவர் செயல், கோலம் 1279-1281.

64. சாம்பவி மண்டலச் சக்கரம்

சக்கர அமைப்பும் தியானமும் 1284-1286

65. புவனாபதி சக்கரம்

மந்திர விளக்கம் 1293,
முக்கோணச் சக்கரம் 1294-1295
சக்கரத் தியானத்தின் பயன் 1296
சக்கர அமைப்பு 1297-1300

66. நவாக்கரி சக்கரம்

நவாக்கரி மந்திரம் 1305-1311,
மந்திர யோகத்தின் பயன் 1312-1337,
அருள்வழி வாழ்வு 1338-1349,
சக்கர வழிபாடு 1350-1355, சத்தி தரிசனம் 1356-1403,
சிவன் அமரும் சக்கரம் 1404.

67. சுத்த சைவம்

சுத்த சைவத்தின் தத்துவம் சைவ சித்தாந்தம் 1407-1408,
சுத்த சைவர் 1409-1414, சைவநூல்கள் : ஆகமங்கள் 1415
சைவர் வழிபாடு 1416-1420, சுத்த சைவத்தின் முதன்மைக்
கோட்பாடு 1422, சைவத்தின் சித்தி 1423.

68. சரியை

சைவத் தவம் 1430-1434

69. கிரியை

இறைபணி 1437-1441.

70. யோகம்

உடம்பிலும் உணர்விலும் சிவ தரிசனம் 1442-1450

71. ஞானம்

சிவஞானியின் இலக்கணம் 1452-1461.

72. சன்மார்க்கம்

இறப்பை வெல்வோரே சன்மார்க்கர் 1462,
சன்மார்க்கமே சிவநெறி 1463-1465,
சன்மார்க்கப் பயன் 1466.

73. சக மார்க்கம்

ஞானம் பெற வழி 1474-1475,
சிவபோகம் பெறவழி 1476,
உயிரின் உடற் கருவிகள் சிவ கருவிகளாக மாறுதல் 1477-1479.

74. சற்புத்திர மார்க்கம்

புற வழிபாடு 1480-1485

75. தாச மார்க்கம்

யோக வழிபாட்டுக்குரிய சரியைத் தொண்டு 1487-1491.

76. சாலோகம் ஆதி

பதமுத்தி 1492-1494, காயசித்தியே சாரூபம் 1495
சாயுச்சியம் (பர முத்தி) தருவது சைவ சமயமே 1497

77. சத்தி நிபாதம்

அருள் – அனுபவம் 1500-1512,
சத்தி சிவத்தைக் காட்டுவாள் 1513-1514.

78. புறச்சமய தூடணம்

புறச் சமயங்களின் குறைபாடு 1515-1516,
'சிவம்' – ஆகும் தவம் 1519-1521,
அறிவு வெளி 1524-1526, 1532,
அருள் வழியில் வாழ்தல் 1534-1536, 1541.

79. உட்சமயம்

ஆறு சமயங்களிடையே வேற்றுமை இல்லை,
அவற்றில் ஊடுருவி நிற்பது சைவம் (ஆறு சமயங்களிலும்
பொதுவாக இழையோடுவது சைவம்) 1545-1548.

80. சிவகுரு தரிசனம்

குரு செய்யும் உதவி 1558-1564,
சித்தத்தில் சிவன் ஆட்சி 1567-1568,
குரு உபதேசிக்கும் அபரஞானம் 1569,
சத்தியின் உதவி 1570, தெளிவும் ஒன்றி
உணர்தலும் 1571-1573.

81. திருவடிப் பேறு

திருவடி தீக்கை, அருள் பதிதல் 1574,
சிவம் அருளரசு தருதல் 1575,
சின்முத்திரை 1576-1580, ஞான உடம்பு பெறுதல் 1584,
குருபணியின் பயன் 1585-1588.

82. ஞாதுரு, ஞான, நேயம்

சிவத்தோடு ஒன்றி நின்றால் ஆனந்தம் 1589-1597.

83. துறவு

துறவின் நன்மை 1598-1599,
புலன் மயக்கம் 1601-1602,
அருள் வாழ்வு 1603-1607.

84. தவம்

தவசியர் உணர்வு 1608-1614.

85. தவ தூடணம்

உண்மைத் தவசியின் நிலை 1617-1619,
உலகியல் முயற்சி தவமன்று 1620,
புலன், அடக்கத்திற்கு வழி 1621-1623,
பயன் 1624-1628.

86. அருளுடைமை

அருளின் மூலமே முத்தி 1629-1638

87. அவ வேடம்

பொய்த்தவ வேடம் 1639-1643

88. தவ வேடம்

யோக வேடம் 1645, 1648, 1649

89. சிவ வேடம்

ஞானி நிலை 1652-1663

90. அபக்குவன்

அறியாதார் 1664-1666, மனம் ஒருங்காமை 1667,
அல்லற் படுவோர் 1669-1671, உலகியலில் பித்து 1672-1673.

91. பக்குவன்

நற்சீடன் தன்மை 1674-1683,
அவனுக்கு வாய்க்கும் உயரனுபவம் 1684-1685.

92. ஆறாதாரம்

ஆதாரமும் நிராதாரமும் 1688-1691,
யோகத்தின் பயன் 1692, தூலவுடம்பு, சூக்கும
உடம்பு – இவற்றின் இணைப்பு 1693,
சாந்தி கலை 1694.

93. அண்டலிங்கம்

கலப்பு நிலை 1695, வேறாது இருத்தல் 1696-1697,
பரவெளி 1700, 1706, அண்டமே இலிங்கம் 1708.

94. பிண்டலிங்கம்

யோகத்தால் உடம்பு மாறுதல் 1709-1712

95. சதாசிவ லிங்கம்

சதாசிவன் உருவம் 1713, 1718, சதாசிவன்
யோகியின் உடம்பிற் புகுதல் 1722, 1728-1735.

96. ஆன்மலிங்கம்

உடம்பில் 'விந்து – நாத' அனுபவம் 1937-1945

97. ஞானலிங்கம்

சதாசிவன் குருவாய் வருதல் 1746-1748,
பரசிவமும் பராசத்தியும் 1749-1754.

98. சிவலிங்கம்

அருவம் 1756, உருவம் 1757,
சிவானுபவம் 1758-1760

99. சம்பிரதாயம்

மல நீக்கம் 1766-1772

100. திருவருள் வைப்பு

அருள் வாழ்வு 1774-1779, அருளால் சிவகதி 1780,
அனைத்தும் அவன் செயலே 1781-1792.

101. அருளொளி

அருளனுபவம் 1795-1802

102. சிவபூசை

உடம்பே கோயில் 1804, பாட்டே படையல் 1805,
அக வழிபாடு 1806, புற வழிபாடு 1807-1825.

103. குரு பூசை

குரு பணியின் பயனாக நிராதார யோகம் வாய்த்தல் 1827, 1832
நிராதார யோகத்தின் பயன் சதாசிவ தரிசனம் 1834.

104. மாகேசுவர பூசை

சிவனடியார்க்கு உணவளித்தல் 1836-1838,
அடியார் வழிபாடு 1841-1844.

105. அடியார் பெருமை

நாடு நலம் பெறும் 1847, ஞானச் செல்வர் 1848-1855,
அடியார் பெருமை 1857, சிவத்தைத் தரிசித்தோர் 1864,
அடியார்க்கு உணவு ஒரு பொருட்டன்று 1865-1867.

106. முத்திரை பேதம்

ஞானம் பெறுதற்குக் கருவி 1870-1875,
அருள் வழியில் வாழ்தல் 1876-1884.

107. பூரண குகை நெறிச் சமாதி

யோகியர் இறந்தால், முத்தியடையும் கால
வேறுபாடுகள் 1880-1884, அருள்வழி வாழ்வு 1886-1887.

108. விந்து உற்பனம்

சுத்தமாயை – ஒரு விளக்கம் 1901-1903, சுத்த
மாயையில் பிறக்கும் 'விந்து'– தத்துவம், அசுத்தமாயையில்
பிறப்பதான மனத்துடன் தொடர்பு கொள்ளுதல் – உடம்பு
ஒடுங்கும் போது, மனம் விந்து தத்துவத்தில் ஒடுங்குதல் 1904,
ஐம்பூதம், ஐம்பொறிகள் முதலிய மற்ற அசுத்தமாயா தத்துவங்களுக்கும்
மறைமுகமான தாயகம் (Sustaining energy) விந்து
தத்துவமே 1905-1909, சுக்கிலம் (உடம்பில் உருவாகும்
விந்து) 1911-1912, சுக்கிலத்தின் ஆற்றல் உயிருணர்விற்குப்
பயன்படுதல் 1913-1914.

109. விந்து செயம்

புலனடக்கம் 1915-1916, புணர்ச்சிக்கு ஒழுங்கு
முறை 1917-1921, விதிக் கணிப்பு (ஜாதகம்) எப்போது
தொடங்குகின்றது 1922,1923, சுக்கிலமே உடம்பில்
சோதிக்காட்சிக்கு மூலம்; மூலக்கனலால் எரிக்கப்
படுவது அதுவே 1924, வாழ்க்கை மரத்தின் விதை 1925-1927,
சுக்கிலத்தைப் பேணுவதால் விளையும் நன்மை உடம்பில் ஊறும்
அமுதம் (இவ் வமுதமே முதற் பகுதியில் கூறப்பட்ட அமுரி), சோதிக்
காட்சி 1928-1943, உடம்பு பொன்னுடம்பு ஆதல் 1944,
அருட்சோதி அனுபவம் 1945-1951.

110. **ஆதித்தன் நிலை**

அருட்சோதி அனுபவம் தொடர்தல்:
சூரியனின் ஒளி, அவனிடம் சிவன் வைத்ததே 1952-1955,
அண்டத்தில் உள்ள சூரியன் போல, பிண்டமாகிய உடம்பிலும்
சூரியன் எழுவான் 1956-1961.

(i) பிண்ட ஆதித்தன்

சந்திரனில் சூரியன் ஒடுங்குதல் 1962-1964

(ii) மனஆதித்தன்

சூரிய சந்திரர்களின் ஒளியில் உயிருணர்வு
ஒன்றுதல் 1965-1969

(iii) ஞானாதித்தன்

ஞானம் எப்போது தோன்றும்? 1970,
ஞான சூரியன் சிவனே 1971-1977,
உடம்பின் உறுப்புகளில் எதிரொளி திகழும்
ஞான சூரியன் 1977.

(iv) சிவாதித்தன்

சிவ சூரியன் உடம்பினுள் எழுதல் 1978-1980,
உயிரின் கருவிகள் சிவ கருவிகளாக மாற்றம்
பெறுதல் 1981.

111. **பசு இலக்கணம்**

(i) பிராணன்

உடம்பில் உயிர் நிற்பதற்கு ஆதாரம் மூச்சுக்
காற்றே 1982, உயிர் சிவத்துடன் இணை பிரியாத்
தொடர்பு (உறவு) உடையது 1983.

(ii) புருடன்

உயிர் உணர்வதற்குப் பொய்ச்சாட்சி 1984

(iii) அணுவன்

உயிரினது மூலத்தை அறிய இயலாது 1985-1986,
உயிரும் இறைவனும் 1987.

(iv) சீவன்

நுண்ணியது 1988,
சிவானுபவம் பெறுவதற்கு உரியது 1989,
சார்ந்ததன் வண்ணமாவது 1990.

(v) பசுவன்

இறையனுபவம் பெறும் உயிரே சிறந்த உயிர் 1991

(vi) போதன்

உயிர் (உணர்வால்) சிவமாகும் 1993 - 1997,
உணர்வனுபவமாகிய இது சிவன் அருளால் வாய்க்கும் 1998.

59. நவகுண்டம்

உடம்பினுள் ஓமகுண்டம்

1005. நவகுண்டம் - ஆனவை நான் உரைசெய்யின்,
நவகுண்டத்துள் எழு நல்-தீபம் தானும்
நவகுண்டத்துள் எழு நன்மைகள் எல்லாம்
நவகுண்டம் - ஆனவை நான் உரைப்பேனே.

நவகுண்ட மானவை நானுரை செய்யின்
னவகுண்டத் துள்ளெழு நற்றீபந் தானு[1]
நவகுண்டத் துள்ளெழு நன்மைக ளெல்லா
நவகுண்ட மானவை நானுரைப் பேனே. (1)

வேறு பாடம் : 1. நற்றீப மெட்டு (ஐ) IV.

கருத்து: யோகம் என்பது உடம்பினுள் செய்யப்படும் யாகம். அதற்கு உரிய குண்டங்கள் ஒன்பது. அவற்றில் எழும் தீச்சுடர் பற்றியும், அக்குண்டங்களில் ஓமம் செய்வதால் விளையும் நன்மைகள் பற்றியும் கூறுவேன்.

தீபம் - சிவஜோதி.

கோண வடிவில் குண்டங்கள்

1006. உரைத்திடும் குண்டத்தின் உள்ளே முக்காலும்
நகைத்துஎழு நாற்கோணம், நன்மைகள் ஐந்தும்
பகைத்திடும் முப்புரம் பார் அங்கியோடே
மிகைத்து எழு குண்டங்கள் மேல் அறியோமே.

உரைத்திடுங் குண்டத்தி [1]னுள்ளேமுக் காலு
நகைத்தெழு நாற்கோண நன்மைக ளைந்தும்[2]
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
[3]மிகைத்தெழு [4]குண்டங்கண் மேலறி யோமே. (2)

வேறு பாடம்: 1. னுட்டெளி முக்கால் (ஆ) IV. 2. ளைந்து (ஒ) I. 3. மிகைத்திடு (சண்) (தெ) 4. கண்டங்கள் (இ, எ, ஒ), (சண்) II அண்டங்கள் (ஈ) I.

கருத்து: நவகுண்டத்தில் முக்கோண குண்டம், நாற்கோண குண்டம், ஐங்கோண குண்டம், அறு கோண குண்டம் என்ற நான்கு வகைகள் உண்டு.

4 ஆம் அடியில் 'கண்டங்கள்' என்று பாடம் கொண்டு, அக்கினி கண்டம், சூரிய கண்டம், சந்திர கண்டம் என்ற மூன்று மண்டலங்கள் என்றும் பொருள் கொள்ளலாம். ஓமத்தீ வளர்ப்பதற்கு ஓமகுண்டம் இருத்தல்போல், உடம்பிலும் ஆதாரத் தானங்களில் கோண வடிவுகளில் குண்டங்கள் உண்டு. அதுபற்றி அவை ஆதாரங்கள், ஆதார சக்கரங்கள் எனவும் பெயர் பெறும். நிலம் எனப்படும் பூதத்திற்குரிய இடமாகிய மூலாதாரத்தில் உள்ள மூலக்கனல் இச்சக்கரங்களில் படிந்து நிற்க, இவை ஒளிபெறும்.

மிகைத்து - மிகுந்து. இங்கு ஐம்பெரும் பூதங்களுக்குரிய வடிவங்களில் குண்டங்கள் அமைவதைக் கூறினார். அவையாவன: நிலம் - நாற்கோணம். நீர் - பிறை. தீ - முக்கோணம். காற்று - அறுகோணம். ஆகாயம் - வட்டம்.

என்னுள் எழு பரஞ்சோதி

1007. மேல் அறிந்து உள்ளே வெளி செய்த அப்பொருள்
கால் அறிந்து உள்ளே கருத்து உற்ற செஞ்சுடர்
பார் அறிந்து, அண்டம் சிறகு அற நின்றது;
நான் அறிந்து, உள் எழ நாடிக் கொண்டேனே.

மேலறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந் தண்டஞ் சிறகற நின்றது
நானறிந் [1]துள்ளெழ நாடிக்கொண் டேனே[2]. (3)

வேறு பாடம்: 1. துள்ளே (இ ஆ) II. 2. கண்டேனே (த)

கருத்து: உயிருணர்வு சகஸ்ராரத்தை உணருமாறு செய்து, உடம்பில் ஆகாயத்தின் அனுபவத்தைப் பெறுமாறு செய்த பரம்பொருள் - மூச்சுக் காற்றைத் தலையுச்சிக்குச் செலுத்த அறிந்தமையால், உயிருணர்விற்குப் புலனாகிய செஞ்சோதி - 'பார் பதம் அண்டம் அனைத்துமாய்ப் பரந்து படர்ந்ததோர் படரொளிப் பரப்பாய்' விளங்கிற்று. எல்லையற்ற அதனைத் தரிசிக்கும் வழிமுறைகளை நான் அறிந்து, கடைப்பிடித்து, அஃது என்னுள் எழக்கண்டு கொண்டேன்.

வெளி - ஆகாயம். கருத்து - உயிருணர்வு. சிறகு - பக்கம், எல்லை.

ஐந்தொழில் நம் தொழில்

1008. கொண்ட இக்குண்டத்தின் உள் எழு சோதியாய்
அண்டங்கள் ஈரேழும் ஆக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பு எலாம்
இன்றுசொல் நூலா எடுத்துரைத்தேனே.

கொண்டவிக் குண்டத்தி னுள்ளெழு சோதியா
[1]யண்டங்க ளீரேழு மாக்கி யழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலா
மின்றுசொ [2]னூலா வெடுத்துரைத் தேனே. (4)

வேறு பாடம்: 1. லண்டங்க (திரு) (த) 2. னாலா (அ இ ஈ ஓ) I.

கருத்து: இந்தக் குண்டம் ஒன்பதும் நம்முள் உள்ளன. இவற்றில் எழும் சோதியாகிய சிவத்துடன் கலந்து நின்று, அவன் செயல்களாகிய ஐந்தொழில்களை நம் தொழிலாக உணரலாம். இன்னும் இக்குண்டங்களின் பெருமைகளை - வேதம் சொல்லிய விரிந்த செய்திகளை - இன்று நான் இந்நூலில் உரைக்கின்றேன்.

காக்கும் கலைகள்

1009. எடுத்த இக் குண்டத்து இடம் பதினாறில்
பதித்த கலைகளும் பாலித்து நிற்கும்;
கதித்து அனல் உள் எழக் கண்டுகொள்வார்க்குக்
கொதித்து எழு வல்வினை கூடகிலாவே.

[1]எடுத்தவிக் [2]குண்டத் திடம்பதி னாறிற்
பதித்த கலைகளும் பாலித்து நிற்குங்
[3]கதித்தன லுள்ளெழக் கண்டுகொள் வார்க்குக்[4]
கொதித்தெழு [5]வல்வினை கூடகி லாவே. (5)

வேறு பாடம்: 1. எடுத்தவக் (சண்) 2. குண்டமிடம் பதி (இ ஈ) II. 3. கதிக்கன (அ இ ஈ) II. 4. வார்க்குங் (ஆ) IV, வார்க்கே (எ) IV. 5. வல்வினைக் (சண்).

கருத்து: இக்குண்டங்களுள், பதினாறு இதழ்த்தாமரை உள்ள விசுத்தியில் தொடங்கும் சந்திர மண்டலத்தின் 16 கலைகளும் காத்தலைச் செய்யும். மூலாதாரத்திலிருந்து தீ எழுந்து சுழுமுனை வழியே ஏற, சந்திர கலையின் இவ்வருளைப் பெறுபவர்க்கு வினை நீங்கும்.

கனல் வளர்க்கும் மந்திரம்

1010. கூடிய முக்கோணத்துள் எழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம் புறமாய் நிற்கும்;
பாடிய பன்னீர் இராசியும் அங்கு எழ
நாடிக் கொள்வார்கட்கு நற்சுடர் தானே.

[1]கூடிய முக்கோணத் துள்ளெழு குண்டத்து
ளாடிய வைந்து [2]மகம்புற மாய்நிற்கும்
பாடிய பன்னீ ரிராசியு மங்கெழ
நாடிக்கொள் [3]வார்கட்கு நற்சுடர் தானே. (6)

வேறு பாடம்: 1. கூடமுக் கூடத்தின் (எ) IV. 2. வரும்புற (ஆ) IV; மகம் புறம்பாய் (சண்) (தெ) 3. வார்க்கு (அ இ ஈ) II.

கருத்து: மூலாதாரத்தில் முக்கோண வடிவாய் உள்ள குண்டத்தில் திருவைந்தெழுத்து ஓமத்தீயை வளர்த்து விளங்கும். வெளியிலும் ஓம குண்டத்தில் அம்மந்திரம் தீயை வளர்க்க ஓதப்படும். 12 இராசிகளில் உலவும் சூரியனின் 12 கலைகளும் அத்தீயுடன் கலக்குமாறு யோக சாதனை செய்பவர்கட்கு, அத்தீ புருவமத்தியில் நல்ல சுடராய் ஒளிவிடும்.

ஐந்து - ஐந்தெழுத்து.

தலையைச் சுற்றி ஜோதி

1011. நற்சுடர் ஆகும் சிரம், முக வட்டமாம்;
கைச்சுடர் ஆகும் கருத்து உற்ற கைகளில்;
பைச்சுடர் மேனிப் பதைப்பு அற்று இலிங்கமும்
நற்சுடராய் எழும்; நல்லது என்றானே.

[1]நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைக்சுட ராகுங் [2]கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் [3]மேனிப் [4]பதைப்பற்றி லிங்கமு
நற்சுட ராயெழு நல்லதென் றானே[5]. (7)

வேறு பாடம்: 1. நற்சுடர் குஞ்சி நயனமும் (ஆ) IV. 2. கருத்தற்ற (ஈ) I. 3. மேனி (தெ) 4. பகைபற்றி (அ இ ஈ ஓ) II; பதைப்புற்றி (எ) II. 5. றாளே (சண்) (தெ) (சைவ)

கருத்து: தலையும் முகமும் தம்மைச் சூழ, வட்டமான நல்ல சுடரோடு கூடி ஒளிவீசும். எவ்வாறு எனின்: காற்றை இடகலை, பிங்கலை - இரண்டிலும் கருத்தோடு செலுத்தின், சுழுமுனை ஆகிய வழியில் மூலக்கனல் மேல் ஏறும். அது புருவநடுவை அடைந்தவுடன் குளிர்ந்துவிடுவதால், உடம்பு எவ்வித வாட்டமும் இன்றி விளங்க, உச்சந்தலையில் சிவபரம்பொருள் நற்சோதியாகக் காட்சி நல்குவான், அது நன்று என நந்தி கூறியருளினான்.

சத்தி சொன்ன ஞானம்

1012. நல்லது என்றாளே நமக்குற்ற நாயகம்;
சொல் - அது என்றாளே; சுடர்முடி பாதமா
மெல்ல நின்றாளை வினவகில்லாதவர்
கல் - அதன் தாளையும் கற்குறும் மின்னாளே.

நல்லதென் றாளே நமக்குற்ற நாயகஞ்[1]
[2]சொல்லதென் றாளே [3]சுடர்முடி பாதமா[4]
மெல்லநின் றாளை வினவகில் லாதவர்
கல்லதன் றாளையுங் [5]கற்குறுமின் னாளே. (8)

வேறு பாடம்: 1. நாயகன் (ஆ) IV. 2. சொல்லகன்றானே (ஆ) IV. 3. சுடர்முடிப் (துடி) 4. செம்பதம் (ஆ) IV. 5. கற்றும் வின்னாளே (அ எ ஓ) I கற்றுவல்லீரே (ஆ) IV.

கருத்து: அவள் நம்மை ஆண்டமை நல்லது என்றாள். உபதேச மாகத் திருவைந்தெழுத்தைக் கூறி 'அதுவே உய்விக்கும் மந்திரம்' என்றாள். முடிமுதல் அடிவரை நான் காண, மென்மை யாகக் காட்சியளித்த அந்த அம்மையை யோகத்தில் நாடிக் காணாதவர், வேறு எங்கெங்கோ காணப்புகுந்து, மலையின் அடிப்புறத்திலும் தன்னைத் தேடுமாறு அவள் நிற்கின்றாள்.

அவள் பாதத்தின் மென்மை காணமாட்டாதார் கல்லைக் குடைந்து வன்மை காண்பது என்னே என்ற நயம் காண்க.

வினவுதல் - ஆராய்தல்; யோகத்தில் அனுபவமாகப்பெற நாடுதல்.

பிறையைப் பிடித்த பாம்பு

1013. மின்னா இளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னால் இரண்டு சுடர் நாகம் திக்கு எங்கும்;
பன் நாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என் ஆகத்துள்ளே இடங்கொண்டவாறே.

[1]மின்னா விளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னா [2]லிரண்டு சுடர்நாகந் திக்கெங்கும்[3]
பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுட
ரென்னாகத் துள்ளே யிடங்கொண்ட வாறே. (9)

வேறு பாடம்: 1. வின்னா (அ ஆ எ ஒ) I. 2. லிரண்டுஞ் (சண்) (தெ) 3. தீக்கெங்கும் (சண்) (தெ).

கருத்து: ஒளியில்லாத பிறைபோன்ற வடிவம் உடைய சுவாதிட்டானம் என்ற ஆதாரத்தில் அமையும் குண்டத்தில், பாம்புகள் போன்ற இடகலை, பிங்கலை நாடிகள் பின்னிக்கிடந்து உடம்பு முழுதும் செல்லும். நான்கு இதழ்த் தாமரை ஆகிய மூலாதாரத்தில் தோன்றி, இக்கலைகளின் உதவியால், தலை உச்சியில் உள்ள ஆகாயத்தானம் வரை பரவி நிற்கும் மேலான சோதி யோகிகளுக்குத் தரிசனமாகும். அஃது என் உடம்பிலும் இடங்கொண்டது.

நடமிடும் பாதம் நாபியிலே

1014. இடம்கொண்ட பாகம் எழிற்சுடர் ஏகம்;
நடம் கொண்ட பாதங்கள் நீராகும்; அண்டம்
சகம் கொண்ட கை இரண்டாலும் தழைப்ப
முகம் கொண்ட செஞ்சுடர் முக்கணனார்க்கே.

இடங்கொண்ட [1]பாக மெழிற்சுட ரேக
நடங்கொண்ட [2]பாதங்கண் [3]ணீராகு மண்டஞ்
சகங்கொண்ட கையிரண் [4]டாலுந் தழைப்ப
முகங்கொண்ட [5]செஞ்சுடர் [6]முக்கண னார்க்கே. (10)

வேறு பாடம்: 1. பாத (ஆ இ ஈ எ) II. 2. பாதங்கணண்ணீரதற்குச் (எ) II; வாகங்கணண்ணிடு மண்டலஞ் (ஆ) II. 3. ணீராறதாகு மிடஞ் (இ ஈ) II பாதநன்னீராமவற்குச் (த); பாதங்கணன்னீரதற்குச் (விசு) 4. டாறுந் (எ ஓ) I. 5. செஞ்சடை (ஓ) II. 6. முக்கணனாமே (ஆ) III.

கருத்து: கருவிலிருந்து தோன்றிய உடம்பு, இடகலை, பிங்கலை என்னும் இருபக்க நாடிகளாலும் தழைக்கும் பொருட்டு, சகஸ்ராரத்தில் தோன்றிய செஞ்சோதியாகிய சிவபெருமானுக்கு, அவனது இடப்பக்கத்தில் வீற்றிருப்பவள் எழிற்சோதியாகிய சக்தி. செஞ்சுடரும் எழிற்சுடரும் ஏகசுடரே. நடமாடும் அவன் பாதங்கள் நீர் மண்டலம் ஆகிய மணிபூரகத்தில் உள்ளன.

கை இரண்டு - இடகலை, பிங்கலை. "இடக்கை வலக்கை இரண்டையும்" என்றார் பிறிதோரிடத்தில். (பா. எண் 794)

1015. முக்கணன் றானே முழுச்சுட ராயவ
னக்கணன் றானே யகிலமு முண்டவன்
றிக்கண னாகித் திகையெட்டுங் கண்டவன்
எக்கணன் றானுக்கு மெந்தை பிரானே. (உ, ஔ)

1016. எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்த னிவனென்று மாட்டிக்கொள்ளீரே. (உ, ஔ)

ஒளியுடம்புப் பேறு

1017. மாட்டிய குண்டத்தின் உள் எழு வேதத்துள்
ஆட்டிய கால் ஒன்றும் இரண்டும் அலர்ந்திடும்;
வாட்டிய கை இரண்டு ஒன்று பதைத்து எழ
நாட்டும் சுரர்-இவர் நல்லொளி தானே.

[1]மாட்டிய குண்டத்தி னுள்ளெழு வேதத்து
[2]ளாட்டிய காலொன்று மிரண்டு மலர்ந்திடும்
[3]வாட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ
[4]நாட்டுஞ் சுரரிவர் நல்லொளி தானே.[5] (11)

வேறு பாடம்: 1. மாடிய (ஆ ஈ இ) II. 2. ளாடிய (ஆ இ ஈ) II. 3. வாடிய (இ ஈ) II. 4. நாடிய (இ ஈ) II. 5. யானே (த)

கருத்து: மூலாதாரக் குண்டத்தினிடமாகப் பிரணவமந்திரம் தியானிக்கப்பட, அந்நேரம், சுழுமுனையில் செலுத்தப்படும் மூச்சுக்காற்றினால், இடகலை, பிங்கலை - இரண்டும் ஒளிபெறும். சுழுமுனையில் மூலக்கனல் விரைந்து எழ, இங்ஙனம் தியானிப்போர், தம் உடம்பை ஒளியுடம்பாக நாட்டும் தேவர் ஆவர்.

ஒன்றும் - பொருந்தும் இடமாகிய. இரண்டு - இடகலை, பிங்கலை.

மாமணிச் சோதியான்

1018. நல்லொளியாக நடந்தது உலகு எங்கும்
கல்ஒளியாகக் கலந்து உள் இருந்திடும்;
சொல் ஒளியாகத் தொடர்ந்த உயிர்க்கு எலாம்
கல் ஒளி கண்ணுளும் ஆகி நின்றானே.

நல்லொளி யாக [1]நடந்த துலகெங்குங்[2]
கல்லொளி யாகக் கலந்துள் ளிருந்திடுஞ்
சொல்லொளி யாகத் தொடர்ந்த வுயிர்க்கெலாம்
கல்லொளி கண்ணுளு மாகிநின் றானே[3]. (12)

வேறு பாடம்: 1. நடந்துல கெங்கும் (துடி) 2. வுலகெங்கும் (எ) III. 3. றாளே (ஐ எ இ) IV.

கருத்து: உலகில் ஒளியுடைய பொருள்களில் எல்லாம் அவ்வொளியாக விளங்கும் பரம்பொருள், உயிர்க்குள்ளும், சாணை பிடியாத மணியுள் ஒளியே போல் ஒன்றாக இருக்கின்றது. பிரணவ மந்திரம் ஒளியாக நின்று வழிகாட்ட, யோக சாதனை புரிவோர்க்கு; அது சகஸ்ராரத்தில் ஒளியாகத் திகழும். கண்களில் ஒளியாக நிற்கும்.

கல் - மலை. யோகிக்கு உச்சந்தலை, மலை என்று கூறப்படும்.

பிரணவ உடம்புப் பேறு

1019. நின்ற இக்குண்டம் நிலை ஆறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்து எழும்; ஆறாறும்
கொண்ட இத் தத்துவம் உள்ளே கலந்து எழ,
விண்ணுளும் என்ன எடுக்கலும் ஆமே.

[1]நின்றவிக் குண்ட நிலையாறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் [2]பதைத்தெழு மாறாறுங்
கொண்டவித் தத்துவ முள்ளே கலந்தெழ
[3]விண்ணுளு மென்ன வெடுக்கலு மாமே. (13)

வேறு பாடம்: 1. நின்ற விளக்குண்ட (விசு) 2. பதைத்தெழும் (ஆ இ) I. 3. வின்றுளு (அ இ ஈ) II.

கருத்து: இக்குண்டம் இருப்பது புருவமத்தியில். இதன் வடிவம் அறு கோணம். இக்குண்டத்தில், தீயானது மூலாதாரத்திலிருந்து பிரணவ மந்திரத்தால் விரைந்து எழும். 36 தத்துவங்களாகவும் நிற்பதாகிய பிரணவம், உடம்பில் உள்ள அத் தத்துவங்களை எல்லாம் தன் மயம் ஆக்கி, உடல் முழுவதும் கலந்து, பிரணவ உடம்பாக மாற்றும். அப்பொழுது யோகி தன் உடம்பை, ஆகாயத்தில் பறக்கும் பறவைபோல இலேசாக எங்கும் எடுத்துச் செல்லலாம்.

வட்டம் - பிரணவம். இத்தத்துவம் - நாத தத்துவம்.

சிவாக்கினி

1020. எடுக்கின்ற பாதங்கள் மூன்று; எழு கையும்
கடுக்கின்ற முகம் இரண்டு; ஆறு கண் ஆகப்
படித்து எண்ணும் நா ஏழு; கொம்பு ஒரு நாலு;
மடுத்து எழு கண் ஆனது அந்தம் இலாற்கே.

எடுக்கின்ற பாதங்கண் [1]மூன்றெழு கையுங்
கடுக்கின்ற முகமிரண் டாறுகண் ணாகப்
படித்தெண்ணு நாவேழு கொம்பொரு நாலு
மடுத்தெழு [2]கண்ணான தந்த மிலாற்கே[3]. (14)

வேறு பாடம்: 1. மூன்றதெழுத்தை (இ ஈ எ) II மூன்றதெழுகை (திரு) 2. கண்ணானந்த் (சண்) (தெ) 3. மிலார்க்கே (சண்)

கருத்து: இக்குண்டங்களில் எரியும் சிவாக்கினிக்குப் பாதங்கள் மூன்று, ஏழு கை, இரண்டு முகம், ஆறு கண், நா ஏழு, கொம்பு நான்கு என அமைந்து எழும்.

சிவாக்கினி - அக்கினியாக எழுவது சிவமே.

அவனருளால் அறிக

1021. அந்தம் இலானுக்கு அகலிடம் தான் இல்லை;
அந்தம் இலானை அளப்பவர்தாம் இல்லை;
அந்தம் இலானுக்கு அடுத்த சொல் தான் இல்லை,
அந்தம் இலானை அறிந்து கொளாததே.

அந்த மிலானுக் ககலிடந் தானில்லை
அந்த மிலானை யளப்பவர் தாமில்லை
அந்த மிலானுக் [1]கடுத்தசொற் றானில்லை
அந்த மிலானை [2]யறிந்துகொ ளாததே. (15)

வேறு பாடம்: கடுத்த்தொராளில்லை (ஆ) II. 2. யறிந்துகொள் பத்தே (ஈ எ ஒ) II.

கருத்து: காலம் என்பதில் கட்டுப்படாதவன் ஆகிய இறைவன் இடப்பரப்பினும் அடங்காத பொருள் ஆவான். அவனை அளக்கும் வேறு அளவையும் இல்லை. அவன் இயல்பை முற்றக் கூறும் சொல்லும் இல்லை. இவ்வாறு இருப்பவன் உயிருக்குத் தன் அருளால் வெளிப்படுவான் ஆதலின், அருள்வழியாக அவனை அறிய முயலாதது என்னே!

'அறிந்துகொள் பத்தே' என்ற பாடம் பொருளாற் பொருந்தவில்லை யேனும், அந்தாதித் தொடைக்கு ஏற்புடையதாக உள்ளது.

சிவாக்கினி தோன்றி வளர்தல்

1022. பத்து இட்டு, அங்கு எட்டு இட்டு, நால் இட்டு,
மூன்று - அதன்
மட்டு இட்ட குண்டம் மலர்ந்து எழு தாமரைக்
கட்டிட்டு நின்று கலந்த மெய், ஆகமம்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே.

பத்திட்டங் [1]கெட்டிட்டு நாலிட்டு மூன்றதன்[2]
மட்டிட்ட குண்ட மலர்ந்தெழு தாமரைக்
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமம்[3]
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே[4]. (16)

வேறு பாடம்: 1. கெட்டிடு (அ) I; கெட்டிட் டாறிட்டு (எ) II. 2. நாலிட்டு (எ அ) II. 3. யாகமும் (எ) I யாகமப் (உ) I. 4. யாலே (ஒ) II.

கருத்து: பத்து இதழ்த் தாமரையாகிய மணிபூரகத்தில் பொருத்தி, எட்டு இதழ்த் தாமரை ஆகிய அனாகதத்தில் பொருந்தி, மூன்றாவதாக ஆக்ஞையில் நான்கு இதழ்த் தாமரையாக மலர்ந்த இடத்தில் குண்டம் அமைய, அதில் வளர்க்கப்பட்டு நின்ற சிவாக்கினி, ஆகமத்தில் கூறியவாறு சகஸ்ராரத்தில் பார்வதியிடம் சென்று பொருந்தியது.

சிவனது வடிவம்

1023. பார்ப்பதி பாகன் பரந்தகை நால்அஞ்சு,
காற்பதி பத்து, முகம் பத்து, கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு, சுடர்முடி
நாற்பது, சோத்திரம் நல் இருபத்தஞ்சே.

பார்ப்பதி [1]பாகன் பரந்தகை நாலஞ்சு
[2]காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாத மிரண்டு சுடர்முடி[3]
நாற்பது சோத்திர [4]நல்லிரு பத்தஞ்சே. (17)

வேறு பாடம்: 1. நாதன் (ஆ) IV. 2. காப்பதி (ஆ) IV. 3. புனைமுடி (ஆ) IV. 4. நல்லிருப் (த).

கருத்து: உமையாள் கணவனின் கைகள் இருபது. மூக்குப் பத்து. முகத்தில் உள்ள கண்கள் பத்துப்பத்து (20). மலர்பொருந்தும் திருவடிகள் இரண்டு. ஒளிவீசும் முடிகள் பத்து. காதுகள் இருபதும் ஐந்துமாகும்.

(திருமேனியில் உள்ள காதுகள் இருபது, பிரணவம் ஐந்து, ஆக இருபத்தைந்து). பிரணவம் ஐந்து - அ உ ம, நாதம், விந்து. மூச்சுப்பதியும் இடம் ஆதலின் மூக்கைக் 'காற்பதி' என்றார். நற்பது, நாற்பது என முதல் நீண்டது. சோத்திரம் - சுரோத்திரம் - காது.

எது முத்தி?

1024. அஞ்சு இட்ட கோலம் அளப்பன ஐயைஞ்சும்
அஞ்சிட்ட குண்டம் மலர்ந்து அங்கு இருத்தலால்
பஞ்சு இட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே.

அஞ்சிட்ட [1]கோல மளப்பன வையைஞ்சு
மஞ்சிட்ட குண்ட மலர்ந்தங் கிருத்தலாற்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் [2]கூடுதன் முத்தியே! (18)

வேறு பாடம்: 1. கோண (ஆ) II. 2. கூடலுமாமே (ஆ) IV.

கருத்து: திருவைந்தெழுத்தின் வடிவமான இறைவனது நடனத்திருக் கோலத்தை, இருபத்தைந்து ஆன்ம தத்துவங்களும் உட்படுத்தப் பட்ட தியானத்தில் காண யோகி முயலுதலால், அவனது புருவமத்தியில் உண்டாகும் குண்டத்தில் அவ்விருபத்தைந்து தத்துவங்களும் சுத்த தத்துவமாக மலர்ந்து விளங்கும். ஐந்தாவது பூதமாகிய ஆகாயமாக, யோகியின் உச்சந்தலைக்கு மேல் உள்ள இடம் விளங்கும். அந்த ஆகாயத்தில் சோதி வீசி எழும் சுடராகச் சிவபெருமான் காட்சி வழங்குவார். அந்தச் சுடருடன், யோகியின் மூலக்கனல் இணைவது முத்தியாகும்.

பஞ்சு - ஐந்து; ஐந்தாவது பூதம். கொஞ்சிட்ட - கொய்திட்ட என்பதன் மருஉ. பலவகையாலும் பரவி வீணாகிய மூலசத்தியின் ஆற்றல் குவிந்து ஒன்று சேர்ந்தமையால் ‘கொய்திட்ட’ என்றார். விரிந்த ஆடையைச் சுருக்குதல் ‘கொய்தல்’ என இக்காலத்தும் வழங்கும்.

சிவனைப் புணர யோகவழி

1025. முத்த நற்சோதி முழுச்சுடர் ஆயவன்
கற்று உற்றுநின்றார் கருத்துள் இருந்திடும்;
பற்று அற நாடிப், பரந்த ஒளியூடு போய்
செற்றற்று இருந்தவர் சேர்ந்திருந்தாரே.

[1]முத்தநற் சோதி முழுச்சுட ராயவன்
[2]கற்றுற்று நின்றார் கருத்து ளிருந்திடும்
பற்றற நாடிப் பரந்தொளி யூடுபோய்ச்
செற்றற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே. (19)

வேறு பாடம்: 1. முத்திநற் (இ) IV. 2. கற்றற்று (அ எ) III.

கருத்து: முத்தின் சோதி, முழுச்சுடர், அவன். யோகசாதனை பயின்று, தன்னை அணுகி நின்றவரின் கருத்தில் இருப்பான். பற்றுக்களை விலக்கி, உள் முகமாக நாடி, புருவமத்தியில். எழும் சோதி வழிகாட்ட, சென்று சகஸ்ராரத்தை அடைந்து, ‘இனி

வெல்வதற்கு ஒன்றும் இல்லை' என்று இருந்தோர் சிவனைச் சேர்த்து பேரின்பம் பெறுவர்.

செற்று - அடக்கி.

குறிப்பு: மேற் பாடலுக்கும் இப்பாடலுக்கும் இடையே, 'கூடிய பாதம்' என்ற பாடல் 'ஆ' 'ஐ' என்ற சுவடிகளில் மட்டும் உள்ளது. மேற்பாடலின் இறுதிச்சீர்க்கு இச்சுவடிகளில் கொள்ளப்பட்ட பாடத்திற்கு உரிய அந்தாதியாக இப்பாடல் பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப்பட்டதுபோலும்.

பூத சுத்தி

1026. சேர்ந்த கலை அஞ்சும் சேரும் மின் குண்டமும்;
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்;
பாய்ந்த ஐம்பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே.

சேர்ந்த கலையஞ்சுஞ் [1]சேருமின் குண்டமு
[2]மார்ந்த திசைகளு மங்கே யமர்ந்திடும்
பாய்ந்தவைம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவ [3]ரென்றுங் கலந்தவர் தாமே. (20)

வேறு பாடம்: 1. சேருமிக் (எ) IV. 2. மாய்ந்த (ஆ ஒ) III. 3. ரேதுங் (ஆ) IV.

கருத்து: ஒளிவீசும் நவகுண்டத்தில் நிவிருத்திகலை முதலிய ஐந்து கலைகளும் நிறைவு பெறும். 'திசையனைத்தும் பரவும் ஒளி' அங்கே எழும். புருவ மத்தியில் சோதியாகக் காணும் மூலக் கனலால் உடலின் ஐந்து பூதங்களையும் சுத்த தத்துவங்களாக வேதித்துக் (மாற்றி) கொண்டவர், இறைவனோடு கலப்பர்.

'வன்னியைக் கொண்டு' என்னும் பொருளில் 'வன்னியால்' என வரவேண்டியது, வேற்றுமைமயக்கமாக, 'வன்னியை' என வந்தது.

1027. மெய்கண்ட மாம்விரி நீருல கேழையு
முய்கண்டஞ் செய்த வொருவனைச் சேருமின்
செய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்
பொய்கண்ட மில்லாப் பொருள்கலந் தாரே. (உ, ங, ப)

குறிப்பு: இப் பாடல் 2 சுவடிகளில் இல்லை.

1028. கலந்திரு பாத மிருகர மாகு
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் ணெற்றி
யுணர்ந்திருங் குஞ்சியங் குத்தம னார்க்கே. (ஏ)

மாப்பிள்ளை புறப்படுகிறார்!

1029. உத்தமன் சோதி உளன் ஒரு பாலனாய்;
மத்திமன் ஆகி மலர்ந்து அங்கு இருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குளிர்ந்தன,
சத்திமான் ஆகத் தழைத்த கொடியே.

உத்தமன் சோதி யுளனொரு பாலனாய்
மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குளிர்ந்தன[1]
[2]சத்திமா னாகத் தழைத்த கொடியே. (21)

வேறு பாடம்: 1. குழிந்தன (எ) I குவிந்தன (ஆ ஓ) II. 2. சத்திமாமுகந் (ஐ) IV.

கருத்து: சிவன் மூலாதாரத்தில் பாலனாக உள்ளான். அவன் குமரப் பருவம் அடையவும், சத்தியோடு கலந்து உமையொரு பாகனாக விளங்கவும், அச்சத்தி குண்டலி சத்தியாக நின்று, அவனை மூலக்கனலுடன் மேலே ஏற்றும். தான் சிற்சத்தியாகச் சகஸ்ராரத்தில் வீற்றிருப்பாள். மூலக்கனல் சுழுமுனையில் ஏறித் தலைக்கு வரும்போது, முதலில் பிடரிப்பாகத்தை அடையும். சிற்சத்தியின் செயலால் மூலக்கனல் அவ்விடத்தில் படிந்து குளிர்ச்சியடையும்.

மத்திமன் - குமாரப் பருவம் உடையவன். மத்திமனாகி என்பதை, 'மத்திமன் ஆக' என மாற்றுக. மலர்ந்து இருப்பவள் சிற்சத்தி. கொடி - குண்டலிசத்தி. தழைத்த - மூலக்கனல் வளருமாறு தழைத்த. சத்திமான் - சத்திபாகன், சத்தியை உடையவன். குண்டலிக்கு 'வாலை' எனப் பெயர் உண்டு. சகஸ்ராரத்தில், சிற்சத்தி 'தருணி' எனப்படுவாள்.

நெற்றிச் சுடர்

1030. கொடி ஆறு சென்று குலாவிய குண்டம்
அடி இரு கோணமாய் அந்தமும் ஒக்கும்,
படி ஏழ்உலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதனம் ஆமே.

கொடியாறு [1]சென்று குலாவிய குண்ட
[2]மடியிரு கோணமா யந்தமு மொக்கும்
படியே ழுலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதன மாமே. (22)

வேறு பாடம்: 1. நின்று (ஆ) II. 2. படியுடு (இ) I.

கருத்து: குண்டலி சத்தி சுழுமுனை என்ற வழியில் சென்று பொருந்திய நவகுண்டம், அடியில் (மூலாதாரத்தில்) முக்கோணமாகவும், முடிவில் (புருவமத்தியில்) அறுகோணமாயும் இருப்பது. இது பிரணவ குண்டம் எனவும் கூறப்படும். ஏழு உலகங்களிலும் பரவிய ஒளிவடிவான இறைவனை அக்குண்டத்தில் காண்பவர்க்கு, அவன் பெருஞ்செல்வமாவான்.

உலகை ஆளலாம்

1031. மாதனம் ஆக வளர்கின்ற வன்னியைச்
சாதனம் ஆகச் சமைந்த குரு என்று
போதனம் ஆகப் பொருந்த, உலகு ஆளும்
பார்தனம் ஆகப் பரிந்தது பார்த்தே.

மாதன மாக வளர்கின்ற வன்னியைச்[1]
சாதன மாகச் சமைந்த குருவென்று[2]
போதன [3]மாகப் பொருந்த வுலகாளும்[4]
[5]பார்தன மாகப் பரிந்தது பார்த்தே. (23)

வேறு பாடம்: 1. கன்னியைச் (இ) IV. 2. குருவென்றும் (எ) IV. 3. மாகம் (தெ) 4. வுலகாக்கும் (ஆ) IV. 5. பாதன (ஈ எ) I.

கருத்து: மூலாதாரத்தில் பெரிய செல்வமாக வளரக்கூடிய மூலக்கனலை, குரு உபதேசத்தால், நமக்கு ஒரு அகச்சாதனமாக அமைந்த சிவகுரு என்று, அதைச் சார, (யோகம் பயில) அது கண்டு, அது நவ குண்டத்தில் சிவாக்கினியாக வளர்ந்து, உலகையே ஆளும் அருட்செல்வம் விளையுமாறு அருளியது.

போதனம் - உபதேசம். 4 ஆம் அடி : தனம் - அருட் செல்வம்.

சிவ ஜோதி நமக்குள்ளே!

1032. பார்த்த இடம் எங்கும் பரந்து எழு சோதியை
ஆத்தம்-அது ஆகவே ஆய்ந்து அறிவார் இல்லை
காத்து உடல் உள்ளே, கருதி இருந்தவர்
மூத்து உடல் கோடி உகம் கண்டவாறே.

[1]பார்த்திட மெங்கும் பரந்தெழு சோதியை
[2]யாத்தம தாகவே யாய்ந்தறி வாரில்லை
காத்துட லுள்ளே கருதி யிருந்தவர்
[3]மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே. (24)

வேறு பாடம்: 1. பார்த்தட (ஆ) I. 2. யார்த்தம (இ ஈ உ) I யாத்தமுமாக (ஆ) IV. 3. மூத்துடன் (ஆ) III.

கருத்து: எங்கும் நிறைசோதியாகிய இறைவனை, நெருக்கமாக வைத்து, நாடிக் காண்பவர் (யோகத்தில் காண்பவர்) இல்லை. அவனைத் தியானத்தில் நிறுத்தி நெடுநேரம் இருப்பவர் பல்லாண்டு முதிர்ந்து கோடியுகம் வாழ்வர்.

ஆத்தம் - ஆப்தம் என்ற வடசொல்லின் தமிழ் வடிவம்

உலகையே காணலாம்

1033. உகம் கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகம் கண்ட யோகி உள்நாடி எழுப்பும்
பயம் கண்டுகொண்ட இப்பாய்கரு ஒப்பச்
சகம் கண்டுகொண்டது சாதனம் ஆமே.

உகங்கண்ட வொன்பது குண்டமு மொக்க
[1]வகங்கண்ட யோகியுண் ணாடி யெழுப்பும்
[2]பயங்கண்டு கொண்டவிப் பாய்கரு வொப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாமே. (25)

வேறு பாடம்: 1. நகங்கண்ட (ஆ) IV. 2. பகங்கண்டு (இ) I.

கருத்து: பலகாலமாக, வேள்வி செய்ய அமைக்கும் இடமாக உலகம் அறிந்த ஒன்பது குண்டங்களையும், தன் உடம்பின் உள்ளே கண்ட

யோகி, உள் முகமாக நாடி, மூச்சுக்காற்றைக் கொண்டு மூலக் கனலை எழுப்புதலால் ஆகிய பயனை அனுபவத்தால் அறிவதால், அவன் உலகத்தைக் கருவடிவில் காண்பது கைகூடும். ஆதலின், இதற்கு யோகம் சாதனம் ஆயிற்று.

குண்டங்களின் வடிவம்

1034. சாதனம் நாலு, தழல் மூன்று, வில்வயம்,
வேதன்ஐ வட்டம், வினை ஆறு, பூநிலை,
போதனை, போது, அஞ்சு பொற்கயல், வாரண
நாதனை நாடும் நவகோடி தானே.

[1]சாதன நாலு தழன்மூன்று வில்வயம்
வேதனை வட்டம் [2]வினையாறு பூநிலை[3]
[4]போதனை போதஞ்சு [5]பொற்கயல் வாரண
நாதனை நாடு [6]நவகோடி தானே. (26)

வேறு பாடம்: 1. சாதனை (இ ஈ ஒ) I. 2. விளைவாறு (ஆ எ) I விளையாறு (சண்) 3. வூனிலை (அ) I. 4. பூதன (ஆ) I. 5. பொற்கய (ஆ எ) I பொற்கலை (இ) IV. 6. நவகொடி (ச).

கருத்து: நவ குண்டம் என்ற ஒன்பது குண்டங்களாவன:- சரியை முதலிய நான்கு சாதனம் போன்ற நாற்கோண குண்டம்; ஆகவநீயம் முதலிய மூன்று தீப் போல மூக்கோண குண்டம், வில் போல வளைந்த பிறை வடிவக் குண்டம், ஆகாயம் போன்ற வட்டவடிவக் குண்டம்; அறுதொழில் போன்ற அறுகோணக் குண்டம்; திசைகள் போன்ற எண்கோண குண்டம், அரசிலை போன்ற யோனி குண்டம்; பதுமகுண்டம், ஐந்து மீன் போன்ற பஞ்சகோண குண்டம். இவை அயிராவணம் என்ற யானையை உடைய சிவனை நாடும் வழிகள் ஆகிய ஒன்பது குண்டங்கள் ஆகும்.

வேதன் - வேதங்களின் தலைவனாகிய சிவன். ஐ - சாரியை. சிவரூப மாகிய ஆகாயம் வட்டவடிவானது. மேலே கூறியவற்றுள், பெரும் பாலானவற்றில் 'போன்ற' என்ற உவமை எண் குறித்து வந்தது.

60. சத்திபேதம்

(i) திரிபுரை

ஒன்றே பல

1035. மாமாயை, மாயை, வயிந்தவம், வைகரி
ஓ மாயை, உள்ஒளி, ஓர் ஆறுகோடியின்
தாம் ஆன மந்திரம், சத்திதன் மூர்த்திகள்
ஆம்; ஆய், அலவாம் திரிபுரை ஆங்கே.

மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
யோமாயை யுள்ளொளி யோராறு கோடியிற்
றாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திக
ளாமா யலவாந் திரிபுரை யாங்கே. (1)

கருத்து: சத்தியின் வடிவங்கள் முறையே சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை ஆகியவற்றை இடமாகக் கொள்ளும். சுத்தமாயையின் காரியமான வயிந்தவத்தையும் (விந்து), வைகரி, பைசந்தி, மத்திமை, சூக்குமை (பரை) என்ற வாக்குகளையும் இடமாகக் கொள்ளும். நம் உடலில் விளங்கும் ஆற்றலான குண்டலி சத்தியாகவும் அமையும். ஆறு வகையான முடிவுகளை உடைய மந்திரங்களாகவும் விளங்கும். திரிபுர சுந்தரி ஆகிய பராசத்தியே இவ்வாறு பலவகையாக நிற்பாள்; அவை அல்லாதவளாகவும் நிற்பாள்.

பலவகைச் சத்திகள் தடத்தம். அவை அல்லாத நிலை சொரூபம். "திரிபுரையின் (தடத்தம்) மூர்த்திகளாம்; (சொரூபம்) அவை அலவாம்" என வினை முடிவு செய்க. சுத்த மாயை, அசுத்த மாயை பிரகிருதி மாயை என்ற மூன்றையும் இடமாகக் கொள்ளுதலின் 'திரிபுரை' எனப்பட்டாள். ஓ மாயை - பிரகிருதி மாயை. மூலப்பகுதி என்பதும் இது. ஆறு கோடி - ஆறு வகையான முடிவுகள். அவை நம; வஷட்; வௌஷட்; ஸ்வாஹா; ஸ்வதா; ஹூம்பட் என்பவை. விந்துவின் காரியம் வைந்தவம். விந்து - சுத்தமாயை.

குறிப்பு: இவ்வியலில் சக்கரம் ஏதும் விளக்கப்படவில்லை. ஆதலின் இயற்பெயர் பொருந்தாது. ஆயின், எல்லாச்சுவடிகளிலும் இப்பெயரே உள்ளது. ஆயினும் இப்பதிப்பில் திருத்தப்பெற்றது.

சத்தியின் வடிவங்கள்

1036. திரிபுரை, சுந்தரி, அந்தரி, சிந்துப்
பரிபுரை, நாரணி ஆம் பால வன்னத்து
இருள்புரை ஈசி, மனோன்மணி என்ன
வரு பலவாய் நிற்கும் மாமாது தானே.

[1]திரிபுரை சுந்தரி யந்தரி சிந்துப்[2]
[3]பரிபுரை நாரணி [4]யாம்பால வன்னத்[5]
[6]திருள்புரை யீசி மனோன்மணி யென்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே. (2)

வேறு பாடம்: 1. திரிபுர (இ) IV. 2. சிந்துரப் (ஆ இ) II. 3. பரிபுர (ஆ) IV. 4. யாம்பல (சைவ) 5. வன்னத்தி (எ, ஈ, ஒ) II. 6. யிருள்புரை (அ எ) II.

கருத்து: உடலில் உள்ள மூன்று கண்டங்களுக்குத் தெய்வம். பேரழகி; ஒலியெழுப்பும் சிலம்பினை அணிந்தவள். இளமைத் தோற்றம் உடையாள். சுத்தவித்தை, சாதாக்கியம் என்ற தத்துவங்களில் முறையே மகேசுவரனுடனும் சதாசிவனுடனும் இருக்கும் தேவி. இவ்வாறு அருளால் மேற்கொள்ளும் பல வடிவங்களை உடையாள்.

உடலில் உள்ள 3 கண்டங்கள் : கீழிருந்து அக்னிகண்டம், சூரியகண்டம், சந்திரகண்டம். இவையும் 'திரிபுரை' என்ற பெயருக்குக் காரணம்.

ஒன்றில் மூன்று

1037. தானா வயிந்தவ முப்புரம் தன் இடைத்
தான் ஆன மூ உரு ஓர் உருத் தன்மையள்
தான் ஆன பொன் செம்மை வெண்ணிறத்தாள், கல்வி,
தான் ஆன போகமும் முத்தியும் நல்குமே.

[1]தானா [2]வயிந்தவ முப்புரந் தன்னிடைத்
தானான மூவுரு [3]வோருருத் தன்மைய
டானான பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானான போகமு முத்தியு நல்குமே. (3)

வேறு பாடம்: 1. தானே (த) 2. வமைந்தவ (உ ஈ ஒ) II; வமைந்தவம் (எ) IV யமைந்தவம் (த) 3. வோருத்த (விசு)

கருத்து: விந்து எனப்படும் சுத்தமாயா தத்துவத்தில், தானே சிவம், சத்தி, சாதாக்கியம் என்ற மூன்று நிலைகளில் அமர்ந்து, அந்த மூன்று வடிவங்களும் ஒரு வடிவமாக விளங்கும் தன்மையை உடையவள். பின்னர் உருத்திரன், வி ணு, பிரமன் இவர்களது சத்தியாய் முறையே சிவை, திருமகள், கலைமகளாய், முறையே பொன், செம்மை, வெண்மை நிறம் உடையவளாய் நின்று, முறையே முத்தியும், போகமும், கல்வியும் அருள்வாள்.

திரிபுர சுந்தரி

1038. நல்கும் திரிபுரை; நாத நாதாந்தங்கள்
பல்கும் பரவிந்து, பார், அண்டம் ஆனவை
நல்கும் பரை, அபிராமி, அகோசரி,
புல்கும் அருளும் அப்போதமும் தானே.

நல்குந் திரிபுரை [1]நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரையபி ராமிய கோசரி
புல்கு [2]மருளுமப் போதமுந் தானே. (4)

வேறு பாடம்: 1. நாதாந்த நாதங்கள் (ஓ) IV. 2. மருளும் போதம் வந்தாளே (ஆ) IV மருளுமப் போதந்தந்தாளுமே (ஈ எ) IV.

கருத்து: திரிபுரை ஆகிய சத்தி, நாதமாயும் நாதாந்தமாயும் நிற்பாள். பரவிந்து, உலகம், வானுலகம் முதலியவற்றைப் படைப்பாள். பராசத்தி, அபிராமி, வாக்கு மனங்கட்கு எட்டாதவள், அருட்சத்தி, மேலான ஞானப் பொருள்.

சுந்தரி எழிற் கோலம்

1039. தாள் அணி நூபுரம், செம்பட்டுத்தான் உடை
வார் அணி கொங்கை, மலர், கன்னல்-வாளி, வில்,
ஏர் அணி அங்குச, பாசம் எழில் முடி
காரணி, மாமணிக் குண்டலக் காதிக்கே.

தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்கன்னல் வாளிவில்
லேரணி யங்குச பாச மெழின்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே. (5)

கருத்து: திரிபுரையின் கோலமாவது: காலில் சிலம்பு, அரையில் செம்பட்டு, மார்பில் கச்சு, கைகளில் கரும்பு வில்லும் மலரம்பும், அங்குசமும் கயிறும், தலையில் அழகிய கிரீடம், காதில் மாணிக்கக் குண்டலம் - இவற்றை அணிந்த காரணி அவள்.

மலர்கன்னல் என்பது உம்மைதொக்க தொடர். காரணி - படைத்தவள்.

சண்டிகையும் அவளே

1040. **குண்டலக் காதி, கொலைவில் - புருவத்தள்,**
கொண்ட அரத்தநிறம் மன்னு கோலத்தள்
கண்டிகை ஆரம், கதிர்முடி மாமதிச்
சண்டிகை, நால் - திசை தாங்கி நின்றாளே.

குண்டலக் காதி கொலைவிற் புருவத்தள்
கொண்ட [1]வரத்த நிறமன்னு கோலத்தள்
கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்
சண்டிகை நாற்றிசை தாங்கிநின் றாளே. (6)

வேறு பாடம்: 1. வரத்தினின் மன்னு (எ) II வரத்தள் மன்னு (ஓ) II.

கருத்து: குண்டலம் அணிந்த காதினை உடையவள். வில் ஒத்த புருவத்தாள். சிவந்த மேனியாள். உருத்திராக்க மாலை அணிந்தவள். தலையில் பிறையைச் சூடியவள். 'சண்டிகேஸ்வரி' என்னும் திருப்பெயர் உடையாள்.

வேதப் பொருள்

1041. **நின்ற திரிபுரை, நீளும் புராதனி**
குன்றினில் மோகினி, மா, திருக்குச் சிகை,
நன்று அறி கண்டிகை, நாற்கால் கரீடணி,
துன்றிய நச்சுத் தடா மறைச் சுத்தையே.

நின்ற திரிபுரை நீளும் புராதனி
[1]குன்றினின் மோகினி மாதிருக் குச்சிகை[2]
நன்றறி கண்டிகை [3]நாற்காற் கரீடணி
துன்றிய [4]நச்சுத் தடாமறைச் சுத்தையே. (7)

வேறு பாடம்: 1. குன்றலில் (எ) IV. 2. குஞ்சிகை (இ எ) II. 3. நற்கால் I (இ ஒ) IV. 4. நஞ்சுத்தடாமரைச் (இ) I நற்சுத்த தாமரைச் (எ) II.

கருத்து: அடியவர் நெஞ்சில் நீங்காது நின்ற திரிபுரை மிக்க பழமையுடையவள். கயிலைக்குன்றில் ஈசன் மனம் கவர்பவள். தாய். வளைவான தலையலங்காரம் உடையவள். நன்று என அறியப்பட்ட உருத்திராக்க மாலை அணிந்தவள். நான்கு திசைகளிலும் உள்ளோரை ஈர்ப்பவள். அடர்ந்து வந்த ஆலகால விடத்தால் கொல்ல இயலாதவள். வேதம் கூறும் தூய தெய்வம்.

திருக்கு - வளைவு. தடா - தடுக்காத, கொல்லாத. கரீடணி - ஆகர்ஷணி என்பதன் திரிபு.

அணுவில் அணு

1042. சுத்த அம் பார் - அது அளித்த சுகோதய
வத்துஅது ஆய் உயர் மாசத்தி மாபரை
அத்தகை யாவும் அனோரணி தானுமாய்
வைத்த அக்கோல மதியவள் ஆகுமே.

சுத்தவம் பார [1]தளித்த சுகோதய[2]
வத்துவ [3]தாயுயர் மாசத்தி மாபரை
யத்தகை [4]யாவு [5]மனோரணி தானுமாய்
வைத்தவக் கோல [6]மதியவ ளாகுமே. (8)

வேறு பாடம்: 1. தனத்தி (எ) IV. 2. சுகோதயன் (எ) IV. 3. மாயுயர் (அ) II மாயாளு (எ) II மாராயு (இ) II. 4. யான (இ எ) IV. 5. மணோரணி (சைவ) (த) 6. மதிப்பவ (ஆ) IV.

கருத்து: சுத்தமாயா தத்துவத்தில் உள்ள புவனங்களைக் காப்பவள். வீடுபேறு என்ற இன்பத்தை நல்கும் பரம்பொருளாக உள்ள பராசத்தி. எல்லாப்பொருளும் ஆனவள். அணுவுக்கு அணுவானவள். நிறைமதி போன்ற அழகிய தோற்றம் உடையாள்.

அனோரணி - அணோரணி என்பதன் மரூஉ. அணுவுக்கு அணு எனப் பொருள்படும்.

ஆதி பராசத்தி

1043. அவளை அறியா அமரரும் இல்லை
அவள் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவள் அன்றி ஐவரால் ஆவது ஒன்று இல்லை
அவள் அன்றி ஊர்புகும் ஆறு அறியேனே.

அவளை யறியா வமரரு மில்லை
யவளன்றிச் செய்யு மருந்தவ மில்லை
யவளன்றி யைவரா லாவதொன் றில்லை
யவளன்றி யூர்புகு மாறறி யேனே. (9)

கருத்து: திரிபுரையைத் தெய்வம் என்று உணராத தேவர் இல்லை. தவப்பயன் அவளே அன்றிப் பிறர் ஒருவர் இல்லை. ஐந்தொழில் இயற்றும் காரியக் கடவுளர்க்கு ஆதி அவளே. அவள் அருள் பெறாமல் வீடுபேறு பெறவியலாது.

வடிவமில்லாள் ; கொள்வாள் வடிவம்

1044. அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பார்
அறிவார் அருவுருவாம் அவள் என்பார்
அறிவார் கருமம் அவள் இச்சை என்பார்
அறிவார் பரனும் அவளிடத்தானே.

அறிவார் பராசத்தி யானந்த மென்பா
ரறிவா [1]ரருவுரு வாமவ ளென்பா
ரறிவார் கரும மவளிச்சை யென்பா
ரறிவார் பரனு [2]மவளிடத் தானே. (10)

வேறு பாடம்: 1. ரறிவுரு (எ) IV. 2. மவனிடந் (சண்).

கருத்து: ஞானிகள் பராசத்தி ஆனந்தவடிவி என்பர். அவள் அருவும் உருவும் அருவுருவும் ஆகின்றவள் என்பர். (இவை அவட்குத் தடத்தம். இவை ஆகின்றவள் எனவே, அவள் இவை அல்லாதவள் என்பது பெறப்படும்.) உலகில் நடக்கும் செயல்கள் எல்லாம் அவளது சங்கற்ப மாத்திரையால் (நினைத்த அளவில்) நிகழ்கின்றன என்பர். சிவனும் அவளோடு இயைந்தே தடத்தத் திருமேனி கொள்கின்றான்.

இச்சை - ஈண்டுச் சங்கற்பமாக நிகழும் விருப்பம்.

அவனோடு அவள்

1045. தான் எங்குளன், அங்கு உளள் தையல் - மாதேவி,
ஊன் எங்கு உள, அங்கு உள உயிர்; காவலன்;
வான் எங்கு உள அங்கு உள அந்த மாருதம்;
கோன் எங்கும் நின்ற குறிபல பாரே.

தானெங் [1]குளனங் [2]குளடையன் மாதேவி
யூனெங் குளவங் [3]குளவுயிர் காவலன்
வானெங் குளவங் [4]குளவந்த மாருதங்
கோனெங்கு நின்ற குறிபல பாரே. (11)

வேறு பாடம்: 1. குளதங் (எ) IV குளவங் (அ) II. 2. குளதையன் (சுவடிகள்) V. 3. குள்ளுயிர்க் (எ) II குளவுயிர்க் (ஓ) II. 4. குளேவந்து மப்பாலதாங் (எ) IV குளேவந்தப் பாலதாங் (விசு); குளேவந்து மப்பாலாங் (தி) (த) குளமந்த (துடி)

கருத்து: சிவன் எங்கு உள்ளானோ அங்குச் சத்தியும் உள்ளாள். அவள் தலைவி (அவன் தலைவன்) உடல்கள் எங்கு உள்ளனவோ அங்கு உயிர்கள் உண்டு. உயிர்கள் எங்கு உண்டோ அங்கு அவற்றின் உள் நின்று காப்பவன் உண்டு. ஆகாயம் எங்கு உள்ளது, அங்குக் காற்றும் உண்டு. அவை போல, தலைவனாகிய சிவன் வியாபித்து நிற்கும் இடமெல்லாம் சத்தியும் நின்ற அடையாளம் பல உண்டு - ஆய்ந்து பார்.

காக்கும் சத்தி

1046. பராசத்தி, மாசத்தி, பல்வகையாலும்
தராசத்தியாய் நின்ற தன்மை உணராய்,
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணியம் ஆகிய போகமே.

பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணரா
[1]யுராசத்தி யூழிக டோறு முடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே. (12)

வேறு பாடம்: 1. வுராசத்தி (எ ஓ) II; யராசத்தி (ஆ) II உராசத்தி (துடி)

கருத்து: "நெஞ்சே, திரிபுரையே மேலான சத்தி. பெரிய சத்தி. உயிர்களைப் பலவகையாலும் காப்பவள்" என்பதனை நீ உணராய். அவ்வாறு அவள் காத்தல் என்பது வெவ்வேறு ஊழிகளிலும், உயிருக்கு 'உடனாய்' நின்று, புண்ணியத்தின் பயனாகிய இன்பத்தைக் கொடுப்பதாகும்.

வளர்க்கும் அன்னை

1047. போகம் செய் சத்தி, புரிகுழலாளொடும்
பாகம் செய்து ஆங்கே பராசத்தியாய் நிற்கும்,
ஆகம் செய்து ஆங்கே அடியவர் நாள்தொறும்
பாகம்செய் ஞானம் படர்கின்ற கொம்பே.

போகஞ்செய் சத்தி புரிகுழ லாளொடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கு
மாகஞ்செய் தாங்கே யடியவர் நாடொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கொம்பே. (13)

கருத்து: அடியார்கள் நாள்தோறும் மனத்தில் தியானிக்க, அவர்களது ஞானத்தைப் பக்குவப்படுத்தி, அந்த ஞானம் சுட்டிக்காட்டும் பொருளாக இருப்பவள் பராசத்தி. அவள் முதலில் திரோதான சத்தியாய் நின்று உயிர்களுக்கு இன்பதுன்பங்களை ஊட்டி அவர்களைப் பக்குவப்படுத்திப் பின்பு, பராசத்தியாய் நின்று அருள்வழங்குவாள்.

இஃது ஏகதேசவுருவக அணி. ஞானம் கொடி; சத்தி கொம்பு.

அவளை நம்பிவிட்டேன்

1048. கொம்பு அனையாளை, குவிமுலை மங்கையை,
வம்பு அவிழ் கோதையை, வானவர் நாடியை,
செம்பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பி என்னுள்ளே நயந்து வைத்தேனே.

கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பியென் னுள்ளே நயந்துவைத் தேனே. (14)

கருத்து: கொம்பு போலும் மெல்லியலாளை, மணம் மிகு கூந்தலாளை, வானவர் தலைவியை, செம்மேனி நங்கையை என் மனத்தில் இருத்தினேன்.

அவளே எல்லாம்

1049. வைத்த பொருளு மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் [1]பரையும் பராபரைச்
[2]சித்தக் கரணச் செயல்களுஞ் செய்திடுஞ்
சத்தியும் வித்தைத் [3]தலையவ ளாமே. (15)

வேறு பாடம்: 1. பரையோடபரையுஞ் (ஐ) IV. 2. சித்தமுஞ் சித்தக் கரணமுஞ் செயல்களுஞ் (ஐ) IV சித்தர்கள் காணச் (இ) IV. 3. தலைவியளாமே (த).

கருத்து: வித்தைத் தலைவியாகிய அவளே சடப்பொருளும், சித்துப் பொருளாகிய உயிர்களும் ஆவாள். பத்துத்திசையும் அவளே. பரையும் பராபரையும் அவளே. சித்தம் முதலிய கரணங்களும், செயல்களும், அவற்றைச் செய்யும் ஆற்றலும் அவளே.

மருவு உயிர் - உடல்களை மருவுகின்ற உயிர். இறைப்பொருள் உயிர்களிலும், பொருள்களிலும் 'ஒன்றாய்' நிற்றலைக் கூறினார்.

யோக வழிகாட்டி

1050. தலைவி தடமுலை மேனின்ற தையல்
தொலைவில் தவஞ்செய்யுந் தூய்நெறித் தோகை
கலை பல [1]வென்றிடுங் கன்னியென் னுள்ளம்
நிலைபெற விங்கே நிறைந்துநின் றாளே. (16)

வேறு பாடம்: 1. வேன்றிடுங் (த)

கருத்து: தலைவி. கொங்கைகள் விம்ம நின்றவள். அளவு இல்லாத தவம் புரிதலாகிய தூய வழியைக் காட்டும் பெண்மணி. நூலறிவைக் கடந்து நிற்பவள். என் உள்ளம் நிலைபெறுமாறு, அதில் கோயில் கொண்டாள்.

என் செயல் அவள் செயலே

1051. நின்றவள் நேரிழை நீள்கலையோடு உற;
வென்று என் அகம் படிந்து ஏழ் உலகும் தொழ
மன்று-அது ஒன்றி; மனோன்மணி, மங்கலி
ஒன்று எனோடு ஒன்றி நின்று ஒத்து அடைந்தாளே.

நின்றவ ணேரிழை நீள்கலை யோடுற
[1]வென்றெ னகம்படிந் தேழுல குந்தொழ[2]
மன்றது வொன்றி மனோன்மணி மங்கலி
[3]யொன்றெனோ டொன்றிநின் றொத்தடைந் தாளே. (17)

வேறு பாடம்: 1. வென்ற கம்படிந் (ஒ) IV யென்ற (சண்) 2. கந்தொழ (சண்) 3. யொன்றென்ன வொன்றிநின் (எ) IV யொன்றினோடொன்றி நின் (இ) IV யொன்றனோ (துடி).

கருத்து: பூரண கலையுடன் நின்றவள். நேரிழை. என் மனத்தை வென்று, அங்குக் குடிகொண்டு, உலகெல்லாம் வணங்கும் வண்ணம் சகஸ்ராரம் ஆகிய மன்றத்தைப் பொருந்தியவள். மனோன்மணி. சுமங்கலி. அவளுடன் ஒன்றும் என்னோடு ஒன்றிநின்று என் செயல் யாவும் தன் செயல் ஆக்கி அருள்புரிந்தாள்.

உயிரின் செயல் இறைவியின் செயலாவது எப்போது? உயிர் தன் செயலை இறைவிக்கு அர்ப்பணித்து, அதன் பயனைத் தான் விரும்பாத போது. ஒன்றுதல் - கலத்தல்.

வைப்பீர் சித்தத்திலே

1052. ஒத்து அடங்கும் கமலத்திடை ஆயிழை,
அத்தகை செய்கின்ற ஆய பெரும்பதி
மத்து அடைகின்ற மனோன்மணி, மங்கலி
சித்து அடைக்கும் வழி தேர்ந்து உணரார்களே.

ஒத்தடங் குங்கம லத்திடை யாயிழை
யத்தகை செய்கின்ற வாய பெரும்பதி
மத்தடை கின்ற மனோன்மணி மங்கலி
சித்தடைக் கும்வழி தேர்ந்துண ரார்களே. (18)

கருத்து: உயிருணர்வில் ஒத்து, சகஸ்ராரத் தாமரையில் விளங்கும் பெண்மணி. அவ்வாறே அங்குச் சேர்கின்ற தலைவனான சிவனைக்

களித்துக் கூடுபவளாகிய மனோன்மணி. சுமங்கலி. அவளைச் சித்தத்தில் நிறுத்தும் வழியை ஆய்ந்து உணராதிருக்கின்றார்களே!

முதலில் அருள்பவள்

1053. உணர்ந்து உடனே நிற்கும் உள்ளொளி ஆகி,
மணம் கமழ் பூங்குழல் மங்கையும் தானும்
புணர்ந்து உடனே நிற்கும்; போதரும் காலைக்
கணிந்து எழுவார்க்குக் கதி அளிப்பாளே.

உணர்ந்துட னேநிற்கு முள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழன் மங்கையுந் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே. (19)

கருத்து: சத்தி உள்ளொளியாக உணரப்பட்டு உயிருக்கு உடனாக நிற்பாள். சிவன் சத்தியோடு கூடி அவ்வண்ணம் நிற்பான். அவ்வாறு அவர்கள் அருளும் நேரத்தில், (தியானிப்பவர்க்குச்) சத்தி முதலில் அருள்புரிந்து வீடுபேறு பெற வழி செய்வாள்.

அருட் சோதி தந்தாள்

1054. அளி ஒத்த பெண் பிள்ளை ஆனந்த சுந்தரி
புளி உறு புன்பழம் போல் உள்ளே நோக்கி
தெளி உறுவித்து, சிவகதி காட்டி
ஒளி உறவைத்து என்னை உய்ய உண்டாளே.

அளியொத்த பெண்பிள்ளை யானந்த சுந்தரி
புளியுறு புன்பழம் [1]போல்உள்ளே நோக்கித்
[2]தெளியுறு [3]வித்துச் சிவகதி காட்டி
யொளியுற வைத்தென்னை [4]யுய்யவுண் டாளே. (20)

வேறுபாடம்: 1. போலுள்ள (எ) IV. 2. தெளிவுறு (இ ஐ) IV. 3. சித்துச் (எ) II. 4. யுய்யக் கொண் (ஐ) III.

கருத்து: அருள் செய்தலில் சிவனுக்கு நிகரான பெண்மணி. ஆனந்தமான அழகு வடிவானவள். என்னை அகப்பார்வை பெறச் செய்து, புளியம்பழமும் தோடும் போல் பற்றுகளிலிருந்து நீங்குமாறு ஞானத்தை அருள்செய்து, சிவகதியைக் காட்டி, அருள் ஒளியில் சேர்த்து, தன்னோடு ஒன்றாக்கிக் கொண்டாள்.

இதனாலும் திரிபுரையே

1055. உண்டு, இல்லை என்றது; உருச் செய்து நின்றது
வண்-தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது,
கண்டிலர் காரண காரணி தன்னொடும்,
மண்டலம் மூன்று உற மன்னிநின்றாளே.

உண்டில்லை யென்ற [1]துருச்செய்து நின்றது
வண்டில்லை மன்றினுண் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தன்னொடு[2]
மண்டல மூன்றுற மன்னிநின் றாளே. (21)

வேறு பாடம்: 1. துருச்செய (எ) IV. 2. தம்மொடு (எ) II.

கருத்து: அருவுருவாயும் அருவாயும் உருவாயும் நின்றது சிவபரம்பொருள். அது சத்தியோடும் தில்லைச் சிற்சபையில் நிலை பெற்று, அதுபோலவே ஆன்மாவின் மன்றமாகிய சகஸ்ராரத்திலும் ஒளியாக நிறைந்தது. சிவம்-சத்தி இருவரும் காரணமும் ஆவர். காரியமும் ஆவர். அதாவது சிவம் சத்திக்குக் காரணன். சத்தி சிவனுக்குக் காரணி. அச்சத்தி உடம்பில் அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் ஆகிய மூன்று மண்டலங்களிலும் யோக சாதனையால் பொருந்தி நின்றாள்.

பிரியாத் துணை

1056. நின்றாள் அவன்தன் உடலும் உயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றாக என்னுள் புகுந்து, உணர்வு ஆகியே
நின்றாள் பரஞ்சுடர்; ஏடு அங்கையாளே.

நின்றா ளவன்ற னுடலு முயிருமாய்ச்
சென்றாள் சிவகதி சேரும் பராசத்தி
[1]யொன்றாக வென்னுட் புகுந்துணர் வாகியே
நின்றாள் பரஞ்சுட ரேடங்கை யாளே. (22)

வேறு பாடம்: 1. யொன்றாகி (ஆ) IV.

கருத்து: உருவத்திருமேனி தாங்கிய பொழுது சிவபெருமானது உடலும் ஆற்றலுமாக நின்றாள். சொருபநிலையிலும் அருட்சத்தி யாய், அவனோடு பிரிப்பின்றி நின்று, சிவகதியாய் நிற்பாள். ஒப்பற்ற

ஞானமாக, அனுபவமாக, என்னுள் புகுந்து, உயிருணர்வின் உணர்வாக நின்றாள். அவள் பரஞ்சுடர் வடிவினள். அதே சமயம் அபர ஞானத்தைத் தருவதாகிய நூலினைக் கையில் ஏந்தியவள்.

அவளே கலைமகள்

1057. ஏடு அங்கை நங்கை, இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம், விரும்பும் வெண்டாமரை,
பாடும் திருமுறை, பார்ப்பனி பாதங்கள்
சூடும் என் சென்னி, வாய் தோத்திரம் சொல்லுமே.

ஏடங்கை நங்கை யிறையெங்கண் முக்கண்ணி
வேடம் [1]படிகம் விரும்பும்வெண் டாமரை
பாடுந் [2]திருமுறை [3]பார்ப்பனி பாதங்கள்
[4]சூடுமென் சென்னிவாய் தோத்திரஞ் சொல்லுமே. (23)

வேறு பாடம்: 1. படிகமிருப்பு வெண் (ஆ) IV. 2. திருமறை (ஆ) IV. 3. பார்ப்பதி (த) பார்ப்பினி (சண்) 4. சூடுமின் (அ ஒ) I.

கருத்து: எங்கள் இறைவி ஆகிய, மூன்று கண்உடைய திரிபுரையே கையில் ஏடு ஏந்திய கலைமகளாகவும் உள்ளாள். அப்பொழுது அவள் நிறம் படிகம் போன்ற வெண்மை. வெண்டாமரையை விரும்பி இருப்பிடமாகக் கொள்வாள். திருமுறைகளைப் பாடுவாள். பிரமனின் தேவி. அவளுடைய திருவடியை என் தலை சூடும். அவள் புகழ்ப்பாடலை என் வாய் பாடும்.

திருமூலர் காலத்துக்கு முன்னேயும் திருமுறை இருந்தது போலும்! (அது பன்னிரு திருமுறை யன்று எனல் தெளிவு)

இராஜராஜேஸ்வரி

1058. தோத்திரம் செய்து, தொழுது, துணை அடி
வாய்த்திட ஏத்தி வழிபடுவார், இரும்பு
ஆர்த்திடும் அங்குச பாசம் பசுங்கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை ஆகும் ஆதிக்கே.

தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட [1]வேத்தி [2]வழிபடு வாரிரும்[3]
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்
பார்த்திடும் பூம்பிள்ளை யாகுமா திக்கே[4]. (24)

வேறு பாடம்: 1. வேற்றி (அ ஓ) I. 2. வழிபடும் வாறிரும் (இ ஈ எ) I வழிபடும்வர்நீரும் (ஓ) I. 3. வாறிரும் (சண்) 4. மாதிக்கே (சண்) (சைவ) (துடி).

கருத்து: இரும்பு ஆயுதமாம் அங்குசம், பாசம், கரும்புவில் இவற்றை ஏந்திய மெல்லிய பிள்ளைமைத்தன்மை உடையவள் ஆகிய சத்திக்கு, அவள்புகழ்களைக் கூறி, அவளுடைய திருவடிகளை, தம் எண்ணம் நிறைவு எய்துமாறு ஏத்தித் தொழுது வழிபடுவார்.

அடியார் என்பது தோன்றா எழுவாய். ஆதிக்கு வழிபடுவார் என்க.

சத்தி தியானம்

1059. ஆதி வித மிகுத்து, அண்டம் தமாலம் கை
நீதி மலரின்மேல் நேர்இழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகால் பயில்விரேல்
சோதி மிகுத்து, முக்காலமும் தோன்றுமே.

ஆதி [1]விதமிகுத் தண்டந்த மாலங்கை[2]
நீதி மலரின்மே னேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகாற் பயில்விரேற்[3]
சோதி [4]மிகுத்துமுக் காலமுந் தோன்றுமே. (25)

வேறுபாடம்: 1. யதுமிகுத் (அ) I; விதிமிகுத் (எ) I. 2. மாறங்கை (எ) IV. 3. பயில்வரேற் (அ) பயில்வாரேற் (எ) IV. 4. மிகுத்துமுக்கானமுகந் (ஐ) I; முக்கால முகந் (ஓ) II.

கருத்து: அண்டத்தில் பல்வகை உயிர்களையும் படைத்து, நடுவுநிலையாளரின் உச்சித் தாமரையின்மேல் வீற்றிருக்கும் சத்தியைப் பச்சிலையைக் கைக்கொண்டு, நாமம் பரவி வழிபட்டு, உடம்பின் பாதியாகிய இடுப்புப் பகுதியில் உள்ள மூலாதாரத்தில் அவள் மந்திரத்தை வைத்துப் பன்முறை தியானிப்பீராயின் உங்கள் உயிருணர்விற்குச் சோதி தோன்றி, பெரியதாய் வளர்ந்து விளங்குவதோடு, முக்கால ஞானமும் உண்டாகும்.

நீதி - நடுவுநிலை; சுழுமுனையில் மூச்சைச் செலுத்தும் யோகியர் செயல்.

உலகுக்கு ஆதாரம்

1060. மேதாதி ஈரெட்டும் ஆகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதாரம் ஆகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்துள் நல்லருளாளே.

மேதாதி யீரெட்டு மாகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
யாதார [1]மாகியே யாய்ந்த பரப்பின
ணாதாதி நாதத்து [2]ணல்லரு ளாளே. (26)

வேறு பாடம்: 1. மாகவே (ஐ) IV. 2. நல்லரு (இ ஓ) IV.

கருத்து: மேதை முதலிய கலைகள் பதினாறும் சந்திர கலைகள். அவற்றில் பொருந்தி, அவையாகவே விளங்கும் பெண். வேதம் முதலிய நூல்களில் கூறப்படும் பராபரை. உலகிற்கு எல்லாம் ஆதாரம் ஆகி, எங்கும் வியாபித்துள்ளவள். நாத தத்துவத்தைக் கடந்து, பரநாதத் தலத்தில் விளங்குபவள். அன்பர்க்கு நல்லருள் பாலிப்பவள்.

சந்திர கலைகள் 16 - முதற் பகுதியின் பின்னிணைப்புக் காண்க.

சிந்தனையைத் திருத்தினாள்

1061. அருள் பெற்றவா சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனாபதியார்
மருள் உற்ற சிந்தையை மாற்றி, அருமைப்
பொருள் உற்றுச் சேவடி போற்றுவன் நானே.

அருள்பெற்ற [1]வாசொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனா பதியார்
மருளுற்ற சிந்தையை மாற்றி யருமைப்[2]
பொருளுற்றுச் சேவடி போற்றுவ னானே. (27)

வேறு பாடம்: 1. வார்சொல்ல (விசு) (தி) (த) (வ) 2. யவளிரு (ஈ) II.

கருத்து: நான் அருள்பெற்றமையைக் கூறுவேன், கேட்க வாரீர். மனிதரின் ஞானம் மிக்க சிந்தையில் குடிகொண்ட புவனா

பதியம்மை, எனது மயக்கம் கொண்ட சிந்தையை மாற்றியருள, அவள்பால் அரிய ஞானத்தைப் பெற்று அவளது திருவடியைப் போற்றுகின்றேன்.

வராகி

1062. ஆன வராக முகத்தி, பதத்தினள்,
ஈன வராகம் இடிக்கும் முசலத்தொடு
ஏனைய ஏழ்படை ஏந்திய வெண்ணகை
ஊனம் அற உணர்ந்தார் உள்ளத்து ஓங்குமே.

ஆன வராக [1]முகத்தி பதத்தின[2]
[3]ளீன வராக மிடிக்கு முசலத்தொ
[4]டேனைய [5]வேழ்படை யேந்திய வெண்ணகை
யூன மறவுணர்ந் தாருள்ளத் தோங்குமே. (28)

வேறு பாடம்: 1. முகத்திற் (இ ஈ) I. 2. பதத்தினி (த) 3. னீன (அ எ ஓ) லீன (த) 4. டேனையுழுபடை (விசு) (தி) (வ) 5. வேள்படை (சண்)

கருத்து: அருளால் மேற்கொண்ட வராக முகத்தை உடையவள். அன்பர்க்கு அருட்செவ்வி உடையவள். இழிந்த பன்றி போல்பவரை இடிக்கும் உலக்கையோடு பிற ஏழு ஆயுதங்களை ஏந்தியவள். வெள்ளிய புன்னகை உடையாள். அவள் தன்னைக் குற்றமற உணர்ந்தவரின் உள்ளத்தில் ஓங்குவாள்.

சத்தி பீஜ மந்திரம்

1063. ஓங்காரி என்பாள் அவள் ஒரு பெண் பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்,
ஆங்காரி ஆகியே ஐவரைப் பெற்றிட்டு
இரீங்காரத்துள்ளே இனிது இருந்தாளே.

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவ
ளாங்காரி [1]யாகியே யைவரைப் பெற்றிட்
டிரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. (29)

வேறு பாடம்: 1. யாகவே (இ) IV.

கருத்து: பராசத்தி பிரணவமந்திரமே வடிவமாக உடையவள். கன்னிப்பெண். எனினும் பச்சைநிறம் உடைய சத்தியாய், சதாசிவன், மாயேச்சுரன், பிரமன், திருமால், உருத்திரன் என்னும் ஐவரையும் தோற்றுவித்து, 'ஹ்ரீம்' என்ற தனது பீச மந்திரத்தில் வீற்றிருக்கின்றாள்.

வாழ்வும், வரும் சிவகதியும்

1064. தானே தலைவி என நின்ற தற்பரை,
தானே உயிர்வித்துத் தந்த பதினாலும்
மான் ஓர் தலமும், மனம் இன்பப் புத்தியும்
தானே சிவகதித் தன்மையும் ஆமே.

தானே [1]தலைவி யெனநின்ற தற்பரை
தானே [2]யுயிர்வித்துத் தந்த பதினாலுந்[3]
[4]மானோர் தலமு [5]மனமின்பப் புத்தியுந்
தானே [6]சிவகதித் தன்மையு மாமே. (30)

வேறு பாடம்: 1. தலையெனத் தானின்ற (ஈ) IV. 2.யுயிர்வித்தாய்த் (சண்) யுயர்வித்துத் (த) 3. பதினாறுந் (தி) 4. வானோர் (சண்) 5.மனமுநற் (எ) IV மன்பின்ப பத்தியுந் (இ) I. 6. சிவகதி (சண்) (சைவ).

கருத்து: அண்ட சராசரங்கட்குத் தலைவி அவளே. உயிர்கள் பிறக்கும் பதினான்கு உலகங்களும் அவளே. பிரதிருதியும் அவளே. மனம், புத்தி முதலிய ஆன்ம தத்துவங்களும் அவளே. சிவகதியும் அவளே.

அருட்சத்தி இன்றி ஒன்றும் இல்லை என்பதை இவ்வாறு கூறினார்.

(ii) ஆதிவயிரவி மந்திரம்

மந்திரம்

1065. பன்னிரண்டாம் கலை ஆதிவயிரவி
தன்னில், அகாரமும் மாயையும் கற்பித்து,
பன்னிரண்டு ஆதியோடு, அந்தம் பதினாலும்
சொல் நிலை சோடசம் அந்தம் என்று ஓதிடே.

பன்னிரண் டாங்கலை [1]யாதி வயிரவி
தன்னி [2]லகாரமு மாயையுங் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ [3]டந்தம் பதினாலுஞ்
சொன்னிலை [4]சோடச மந்தமென் றோதிடே. (1)

வேறு பாடம்: 1. ஆதிப் பயிரவி (ஐ) IV. 2. லிகாரமு (ஓ) (ஈ) II. 3. டந்தப் (எ) I. 4. சோதிட (அ இ ஈ ஓ) I.

கருத்து: ஆதி வயிரவியின் மந்திரம், "ஓம் ஐம் ஔம் வயிரவ்யை நம:" என்பது. இதனை இப்பாடல் விளக்குகின்றது.

பிரணவமாகிய ஓம் என்பதோடு நாதம் விந்து ஆகியவற்றைத் தியானித்து இணைத்துக்கொள்க. பின்பு பன்னிரண்டாம் எழுத்தாகிய 'ஐ' என்பதை 'ஐம்' என்ற பீசமாக வைக்க. பின்பு பதினான்காம் எழுத்தாகிய ஔ வைக்க. பின்பு வயிரவி நாமம். பின்பு பதினாறாம் எழுத்தாகிய விசர்க்கம் வரும்.

கொண்டு கூட்டு: பன்னிரண்டாங் கலைதன்னில் அகாரமும் மாயையும் கற்பித்து, ஆதி வயிரவி பன்னிரண்டு ஆதியோடு, அந்தம் பதினாலும், சொல்நிலை சோடசம் அந்தம் என்று ஓதிடே - என வினைமுடிவு செய்க.

அகாரம் - நாதம். மாயை - சுத்த மாயை - விந்து. எழுத்து எண்ணிக்கை வடமொழிப்படி.

மந்திர அமைப்பு

1066. அந்தம் பதினால் அதுவே வயிரவி
முந்து, நடுவு, முடிவு முதலாகச்
சிந்தைக் கமலத்து எழுகின்ற மாசத்தி
அந்தமும் ஆதியும் ஆகி நின்றாளே.

[1]அந்தம் [2]பதினா லதுவே வயிரவி
முந்து நடுவு முடிவு முதலாகச்
சிந்தைக் [3]கமலத் தெழுகின்ற மாசத்தி
யந்தமு மாதியு மாகிநின் றாளே. (2)

வேறு பாடம்: 1. அந்தப் (எ) II. 2. பதினாலு மதுவே (அ இ ஈ எ ஓ) II. 3. கலசத் (ஓ) IV; வசத்திலெழுகின்ற (எ) I; கலசத்தி லெழுகின்ற (சண்)

கருத்து: வயிரவி மந்திரத்தின் அமைப்பையே இப்பாடலிலும் விளக்குகின்றார். வயிரவி என்ற பெயருக்கு முன் உள்ள பீஜ

மந்திரங்களுள் இறுதியாக உள்ளது பதினான்காம் எழுத்தாகிய ஔ. முதலில் உள்ள பகுதி 'ஓம் ஐம்' என்பது. ஔ-வை அடுத்து நடுவில் இருப்பது வயிரவி என்ற பெயர். முடிவு 'நம:' என்பது, இம்மந்திரத்தினை உடைய சத்தியே உலகுக்கு ஆதியும் அந்தமும் ஆவாள்.

சகஸ்ராரத்தில் வயிரவி

1067. ஆகின்ற மூவரு மங்கே யடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வுழிச் சாரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோர்க்கே[1]. (3)

வேறு பாடம்: 1. தோரே (எ) II.

கருத்து: அந்தப் பராசத்தியால் படைக்கப்படுகின்ற பிரமன், திருமால், உருத்திரன் என்ற மூவரும் அவளது படைத்தல், காத்தல், அழித்தல் - செயல்களில் அடங்குபவர். அவர்கள் அழியும் ஐம்பூதங்களால் உண்டாகும் புவனங்களை விரும்புபவர். அவர்கள் சார்கின்ற சார்வில் செல்லாமல், வீடுபேற்றை நோக்கமாகக் கொண்டு, வயிரவியை வழிபடும் புண்ணியம் உடையார்க்கு அவள், அவரது சகஸ்ராரத் தாமரையில் திறம்பட விளங்குவாள்.

வயிரவியின் அருள்

1068. புண்ணிய நந்தி புனிதன் திரு ஆகும்,
எண்ணிய நாள்கள் இருபத்தேழ் சூழ்பதி
பண்ணிய வன்னி, பகலோன், மதி ஈறு
திண்ணிய சிந்தை, தன் தென்னனும் ஆமே.

புண்ணிய நந்தி புனிதன் றிருவாகு
மெண்ணிய நாள்க ளிருபத்தேழ் சூழ்பதி[1]
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய [2]சிந்தைதன் றென்னனு மாமே. (4)

வேறு பாடம்: 1. சூழ்மதி (எ) IV. 2. சிந்தைநற் (ஆ) IV.

கருத்து: வயிரவி, நந்தியாகிய புனிதனின் சத்தி ஆவாள். இருபத்தேழு நாள்கள் கொண்ட ஒருமாத காலம் அவளை உடம்பின் அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம்

ஆகியவற்றில் தியானித்தால், அவளருளால் அருள்வண்ணம் ஆகின்ற சிந்தையில், சிவன் இனிமை உடையவனாக வீற்றிருப்பான்.

பதி - தலைவன்; நட்சத்திர மங்கையரின் கணவனாகிய சந்திரன்; இங்கு மாதத்தைக் குறித்தது.

தியானத்தில் திரிபுரசுந்தரி

1069. தென்னன், திருநந்தி, சேவகன் தன்னொடும்
பொன்னங்கிரி உள; பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி, அந்தம் பகவனோடு
உன்னும் திரிபுரை ஓதிநின்றானுக்கே.

தென்னன் றிருநந்தி [1]சேவகன் றன்னொடும்
பொன்னங் [2]கிரியுள பூதலம் போற்றிடும்
பன்னும் [3]பரிபிடி யந்தம் பகவனோ[4]
டுன்னுந் திரிபுரை யோதிநின் றானுக்கே. (5)

வேறு பாடம்: 1. தேசிகன் (ஆ) IV. 2. கிரியிற் (எ) II. 3. பரியடி (இ ஈ) I. 4. பகவானோ (உ. ஓ) I பகவனோடுமுன்னுந் (இ ஈ ஓ) I.

கருத்து: வேதம் கூறுகின்ற சத்தியின் பிரணவம் ஆகிய 'ஹ்ரீம்' சேர்ந்த வயிரவி மந்திரத்தை, சிவனுக்கு உரிய பீச மந்திரத்துடன் சேர்த்துத் திரிபுரையைத் தியானிப்பவனுக்கு, அவனது சகஸ்ராரத்தில், சத்தியும் சிவமும் வீற்றிருக்கும் இருப்பினை உலகம் போற்றும்.

பரிபிடி - அன்மொழித் தொகை. சத்தியைக் குறித்தது. 'உள இருப்பை' என ஒரு சொல் வருவிக்க.

கொண்டு கூட்டு: பன்னும் பரிபிடி அந்தம், பகவனோடு உன்னும் திரிபுரை ஓதிநின்றானுக்கே, அவள் தென்னன், திருநந்தி, சேவகன் தன்னொடும் பொன்னங்கிரியுள (இருப்பைப்) பூதலம் போற்றும்.

வயிரவி காவல்

1070. ஓதிய நந்தி உணரும் திருவருள்
நீதியில் வேதநெறி வந்து உரை செயும்
போதும் இருபத்தெழு நாள் புணர்மதி,
சோதி வயிரவி சூலம் வந்து ஆளுமே.

ஓதிய நந்தி யுணருந் திருவருள்[1]
நீதியில் வேத நெறிவந் துரைசெயும்
[2]போது மிருபத் தெழுநாள் புணர்மதி
சோதி வயிரவி சூலம்வந் தாளுமே. (6)

வேறு பாடம்: 1. திருவானை (ஆ) IV. 2. போத (எ) IV.

கருத்து: வேதநெறிமரபில் உள்ள வயிரவி மந்திரத்தைச் முறைப்படி செபிக்கும் காலம் ஒரு மாதம். வயிரவி நந்தியின் அருட்சத்தி யாதலின், அவள் இங்ஙனம் தியானிப்பவரைக் கருணையுடன் உணர்வாள். ஆதலின் சூலத்தைக் கைக்கொண்டு அவரைப் பாதுகாப்பாள்.

வயிரவி திருவுருவம்

1071. சூலம், கபாலம், கை ஏந்திய சூலிக்கு
நால் அம் கரம் உள; நாகபாச அங்குசம்
மால், அங்கு அயன் அறியாத வடிவுக்கு
மேல் அங்கமாய் நின்ற மெல்லியலாளே.

சூலங் கபாலங்கை யேந்திய சூலிக்கு
[1]நாலங் கரமுள நாகபா சாங்குசம்
மாலங் கயனறி யாத வடிவுக்கு[2]
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே. (7)

வேறு பாடம்: 1. நாலாங் (எ) IV. 2. வடிவற்கு (த)

கருத்து: வயிரவிக்கு நான்கு கரம். அவற்றில் சூலம். மண்டையோடு, நாகபாசம், அங்குசம் ஆகியவற்றை ஏந்தியவள். திருமாலும், பிரமனும் அறியாத வடிவினனாகிய சிவனுக்கு இடப்பக்கத்தில் நின்றவள்.

வயிரவி பண்பு

1072. மெல்லியல், வஞ்சி, விடமி, கலைஞானி,
சொல்லிய கிஞ்சுகநிறம் மன்னு சேயிழை,
கல்இயல் ஒப்பது காணும் திருமேனி,
பல்இயல் ஆடையும் பன்மணி தானே.

மெல்லியல் வஞ்சி [1]விடமி கலைஞானி
[2]சொல்லிய [3]கிஞ்சுக நிறமன்னு சேயிழை
கல்லிய லொப்பது காணுந் திருமேனி
பல்லிய லாடையும் பன்மணி தானே. (8)

வேறு பாடம்: 1.விடைபிங் (ஆ) II. 2. சொல்லியல் (த) 3. கிஞ்ச (த)

கருத்து: மென்மைத்தன்மை உடையாள். வஞ்சிக்கொடி போல்வாள். சிறிது கோபம் உடையாள். பல்கலைப் பண்டிதை. முள் முருக்கம் பூ அனைய சிவந்த வாயுடையாள். அவள் திருமேனி மாணிக்க நிறம் உடையது. ஆடையும் பல மணிகளால் அணி செய்யப்பெற்றது.

என்னிடமும் வயிரவி

1073. பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி[1]
நன்மணி சூரிய சோம நயனத்தாள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே. (9)

வேறு பாடம்: 1. குழைக்கண்ணி (ஆ எ ஒ) I.

கருத்து: பல மணிகள் இழைக்கப்பட்ட, கோடிச் சந்திரர் போன்ற திருமுடியும், குண்டலம் விளங்கும் காதும், மான் போன்றவையும் சூரிய சந்திரர் போன்றவையுமான கண்களும் உடையவள். பொன்னும் இரத்தினமும் போன்ற என் உடம்பின் மூலாக்கினியிலும் திகழ்கின்றாள்.

திரிபுரையின் பரிவாரம்

1074. பூரித்த பூ-இதழ் எட்டினுக்குள்ளே ஓர்
ஆரியத்தாள் உண்டு, அங்கு ஓர் எண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வரும்
சாரித்துச் சத்தியைத் தாங்கள் கண்டாரே.

பூரித்த பூவித ழெட்டினுக் குள்ளேயோ
ராரியத் தாளுண்டங் [1]கோரெண்மர் கன்னியர்
பாரித்த பெண்க ளறுபத்து நால்வருஞ்
சாரித்துச் சத்தியைத் தாங்கள்கண் டாரே. (10)

வேறு பாடம்: 1. கெண்மர் (அ எ) II.

கருத்து: தலையில், சகஸ்ராரத்தில் மலர்ந்து விளங்கும் எட்டிதழ்த் தாமரையில், மனோன்மணி என்னும் பெயருடைய திரிபுரை உள்ளாள். அவளைச் சுற்றிலும் வாமை, சேட்டை, ரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரதமனி, சர்வபூததமனி என்ற எட்டுச் சத்திகள் உள்ளனர். இவர் ஒவ்வொருவர்க்கும் எண்மராய், அறுபத்து நான்கு பணிப்பெண்களும் உள்ளனர். இவர்கள் சூழ்ந்து சத்தியைத் தரிசிக்கின்றனர்.

சாரித்தல் - சூழ்தல். (சாரிகை - வட்டமாய் ஓடல்)

அருட் செல்வி

1075. கண்ட சிலம்பு, வளை, சங்கு, சக்கரம்,
எண் திசை யோகி இறைவன் பராசத்தி
அண்டமொடு எண்-திசை தாங்கும் அருட்செல்வி
புண்டரிகத்துள்ளும் பூசனையாளே.

கண்ட சிலம்பு வளைசங்கு சக்கர
மெண்டிசை யோகி [1]யிறைவன் பராசத்தி
யண்டமொ டெண்டிசை தாங்கு மருட்செல்வி
புண்டரி [2]கத்துள்ளும் பூசனை யாளே. (11)

வேறு பாடம்: 1. யிறைவி (எ) IV. 2. கத்தினுட் (எ) IV.

கருத்து: சிலம்பு, வளை, சங்கு, சக்கரம் ஆகியவற்றைத் தரித்தவள். எட்டுத்திசையிலும் நிறைந்திருக்கும் சிவபெருமானது பராசத்தி. எல்லாக் கண்டங்களையும் காக்கும் அருட்டெய்வம். அவள் சகஸ்ராரத் தாமரையில் தியானிக்கும் வழிபாட்டுக்கு உரியாள்.

செபிக்காத மந்திரம்

1076. பூசனை கெந்தம், புனைமலர் மாகோடி,
யோசனை பஞ்சத்து ஒலிவந்து உரைசெய்யும்,
வாசம் இலாத மணி மந்திர யோகம்
தேசம் திகழும் திரிபுரை காணே.

பூசனை கெந்தம் புனைமலர் மாகோடி
யோசனை பஞ்சத் தொலிவந் துரைசெய்யும்
வாச [1]மிலாத மணிமந் திரயோகந்
தேசந் திகழுந் திரிபுரை காணே[2]. (12)

வேறு பாடம்: 1. மலர் (அ) I. 2. தானே (அ எ) IV.

கருத்து: யோகி திரிபுரையைப் பூசிக்கும் பொருள் அவனது வீரியம். அவன் புனையும் மலர் கணக்கு இல்லாத நாம மந்திரத் தியானம். அவ்வழிபாட்டில் பாஞ்சசன்னியத்தின் ஓசை போல நாதம் கேட்பான். வாசகம் சொல்லாத மந்திரயோகம் இது. இதில் ஒளி மிக்க திரிபுரை விளங்குவாள்.

கெந்தம் - கந்தம்; வாசனை; ஈண்டுக் கனலாகமாறிய சுக்கிலம். வாசம், வாசகம் என்பதன் மரூஉ. தேசம் - ஒளி.

அவளே அனைத்துத் தெய்வமும்

1077. காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் [1]பலபல பொன்போலத் தோன்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனு மாயனுங்
காணுந் தலைவிநற் காரணி தானே. (13)

வேறு பாடம்: 1. பணிபல (இ ஆ) IV.

கருத்து: பொன்னைக் கொண்டே பற்பல அணிகலன்கள் தோன்று வது போல், காரணி ஆகிய பராசத்தி நாம் காணும் பற்பல தெய்வங்களாகத் தோன்றுகின்றாள்.

வேதாந்தம் - அனுபவத்தில்

1078. காரணி, மந்திரம் ஓதும் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
நாரண நந்தி நடு, அங்கு உரைசெய்ய
ஆரண வேதம் நால், அந்தமும் ஆமே.

[1]காரணி மந்திர [2]மோதுங் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
[3]நாரண நந்தி நடுவங் குரைசெய்ய[4]
வாரண [5]வேதநா லந்தமு மாமே. (14)

வேறு பாடம்: 1. காரண (எ ஒ) IV. 2. மொன்றுங் (இ ஈ) IV. 3. நாரணி (எ) IV. 4. குரைசெய்த (எ) I. 5. வேதநூ (எ) I.

கருத்து: எல்லாவற்றுக்கும் முதல்வி. அவளது மந்திரத்தைத் (வயிரவி மந்திரத்தை) தியானிக்கையில், காற்றை வெளித்தள்ளுதலால் உண்டாகும் "பூரண கும்பகம்" என்ற பிராணாயாம நிலையில், சகஸ்ராரத்தாமரையில் நாராயணனாகிய சிவபெருமானது நடுவாக எழுந்தருளுபவள். அதனைக் கூறப்புகின், நான்குவேதம், உபநிடதம் ஆகியவற்றின் முடிபொருள் ஆகும். அதாவது, அங்கு வேதாந்த ஞானத்தை விளைத்து வீற்றிருப்பாள்.

விரேசம் - விரேசனம் என்ற வடசொல்லின் திரிபு; கழிகை.

அருளாளர் பாடல் வழிகாட்டும்

1079. அந்தம் நடுவிரல், ஆதி சிறு விரல்
வந்த வழிமுறை மாறி உரை செயும்
செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு;
நந்தி இதனை நலம் உரைத்தானே.

அந்த நடுவிர லாதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி யுரைசெயுஞ்
செந்தமி ழாதி தெளிந்து வழிபடு[1]
நந்தி யிதனை நலமுரைத் தானே. (15)

வேறு பாடம்: 1. வழிபடும் (ஒ) I.

கருத்து: மந்திரங்களை உருச்செபிக்கும் போது, எண்ணுவதற்குக் கை விரல்களைப் பயன்படுத்துவர். முறையே சிறுவிரல், மோதிர விரல், சுட்டுவிரல், பெருவிரல், நடுவிரல் ஆகியவற்றில் உள்ள இறைகளை எண்ணி (10 இறை எண்ணி) ஒரு வட்டம் என்று கொள்வர். வயிரவியின் புகழை உரைக்கின்ற செந்தமிழ் முதல் நூல்களின் மொழியை (அருளாளர் பாடல்களை) அவற்றில் உறுதி வைத்து, ஓதி, அவளை வழிபடுக. நந்தி இதன் நன்மையை உரைத்தருளினான்.

அருளாளர் பாடல்களில் உரைத்த முறையை நன்கு அறிந்து வழிபடுக; ஆழ்ந்த அன்பு யோகமேயாகும். எண்ணிக்கை முக்கியம் அன்று என்பது கருத்து.

செந்தமிழ் ஆதி - தமிழில் உள்ள ஆதி நூல் - திருமந்திரத்திற்கு முன்னையவை. இதனால், வயிரவியை வழிபடுதற்குத் திருமந்திரத்திற்கு முன்னைய தமிழ் நூல்களில் வழிமுறை கூறப்பட்டிருந்தமை தெரிய வருகின்றது.

நவசத்தி தியானம்

1080. உரைத்த நவசத்தி ஒன்று முடிய
நிரைத்த இராசி நெறிமுறை எண்ணி,
பிரச்சதம் எட்டும் முன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமம் செய்தானே.

உரைத்த நவசத்தி யொன்று முடிய
நிரைத்த விராசி 'நெறிமுறை யெண்ணிப்
பிரச்சத மெட்டுமுன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமஞ்செய் தானே. (16)

வேறு பாடம்: 1. நெடுமுறை (எ) IV.

கருத்து: முன்பு "பூரித்த பூ விதழ்" என்ற பாடலில் சொல்லப் பட்டவாறு, எட்டு இதழ்களை உடைய சகஸ்ராரத் தாமரையில், நடுவில் மனோன்மணியும், அவளைச் சூழ எட்டுச் சத்திகளும் உள்ளனர். இவர்கள் நவ சத்திகள். இவர்களைத் தியானிக்கும் போது, சந்திர கலைகளுள், 12 கலைகளைச் (இவை பிராசாத கலைகள் எனப்படும்) உணர்வில் சேர்த்தல் வேண்டும். இது மந்திர யோகமுறை.

ஆசிரியர் 'அசபை' என்னும் அதிகாரம் முதல் மந்திரயோக முறையே கூறிவருகின்றார். பிரசாதம் பிரச்சதம் எனத் திரிந்தது. இராசி நெறிமுறை என்பது 12 என்ற எண். சந்திரகலைகள் பதினாறு ஆகும். அவற்றை முதற் பகுதியின் பின்னிணைப்பிற் காண்க. அவற்றுள் 1 முதல் 10 வரையும் 15, 16 ஆகியவையும் பிராசாத கலைகள் ஆகும்.

அன்னை அளிக்கும் அமுதம்

1081. தாமக் குழலி, தயங்கு அணி உள்நின்ற
ஏமத்து இருள் அற வீசும் இளங்கொடி;
ஓமப் பெருஞ்சுடர் உள் எழு நுண்புகை
மேவித்து அமுதொடு மீண்டது காணே.

தாமக் குழலி [1]தயங்கணி யுண்ணின்ற
வேமத் திருளற வீசு மிளங்கொடி
யோமப் பெருஞ்சுட ருள்ளெழு நுண்புகை
[2]மேவித் தமுதொடு மீண்டது காணே. (17)

வேறு பாடம்: 1. தயங்கனி (இ ஐ ஒ) I; தயைக்கண்ணி (எ) IV. 2. மேவித்த முத்தொடு (இ) II; மேவித்தமதொடு (ஆ) II.

கருத்து: மாலை சூடிய கூந்தலாள். தன்னுடைய அருள் ஆகிய அணியில் எழும் சோதி. உயிரில் பாதுகாப்புடன் பதிந்துள்ள ஆணவ மலம் என்ற இருளை ஓட்ட நின்ற இளங்கொடி. மூலாதாரம் ஆகிய ஓம குண்டத்தில் எரியும் மூலக்கனலுடன் எழுகின்ற பிராண வாயுவை, சகஸ்ராரத்தினை அடையச் செய்து, அங்கு விளையும் அமுத தாரை கீழ் இறங்கி, உடல் எங்கும் பரவச்செய்தாள்.

அங்க மந்திரம் - I

1082. காணும் இருதய மந்திரமும் கண்டு
பேணும் நம என்று பேசும் தலைமேலே
வேணு நடுவு மிக நின்ற ஆகுதி
பூணும்; நடு என்ற அந்தம் சிகையே.

காணு மிருதய மந்திர முங்கண்டு
பேணு நமவென்று பேசுந் தலைமேலே
வேணு நடுவு [1]மிகநின்ற வாகுதி
பூணு நடுவென்ற வந்தஞ் சிகையே. (18)

வேறு பாடம்: 1. மிகநினைவாகும் (அ) II.

கருத்து: இப்பாடலிலும் அடுத்ததிலும் அங்க மந்திரங்களைக் கூறுகின்றார். மூலக்கனலை அநாகதம் என்ற ஆதாரத்தில் செலுத்தி 'இருதயாய நம:' என்று தியானிக்க. சுழுமுனையில் நின்ற மூலக்கனலைச் சகஸ்ராரத்தில் ஏற்றுமாறு வயிரவி அருள்வாள். அப்போது 'சிரசேநம:' என்றும், 'சிகாயை வஷட்' என்றும் தியானிக்க.

வேணு - மூங்கில்; புல்லாங்குழல். நாதம் எழுப்புதலின் சுழுமுனைநாடி வேணு எனப்பட்டது.

அங்க மந்திரம் - II

1083. சிகைநின்ற அந்தக் கவசம் கொண்டு ஆதிப்
பகை நின்ற அங்கத்தைப் பார் என்று மாறி,
தொகை நின்ற நேத்திரம் முத்திரை சூலம்
வகை நின்ற யோனி வருத்தலும் ஆமே.

சிகைநின்ற வந்தக் கவசங்கொண் டாதிப்[1]
பகைநின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்
தொகைநின்ற நேத்திர முத்திரை சூலம்
வகைநின்ற யோனி வருத்தலு மாமே. (19)

வேறு பாடம்: 1. டோதிப் (ஆ) IV.

கருத்து: சகஸ்ராரத் தாமரையில் வீற்றிருக்கும் வயிரவியைக் 'கவசாய வௌஷட்' என்று தியானித்து, "அனாதி காலம் முதல் ஆணவ மலத்துடன் கூடிய உயிர் நின்ற உடம்பைக் காப்பாயாக" என்று வேண்டி, சூல முத்திரையால் 'நேத்ரேப்யோ நம:' என்று கூறித் தியானித்தால் பிறவி அறும்.

யோனி முத்திரை

1084. வருத்தம் இரண்டும் சிறுவிரல் மாறிப்
பொருத்தி, அணிவிரல் சுட்டிப் பிடித்து
நெரித்து, ஒன்றவைத்து, நெடிது நடுவே
பெருத்த விரல் இரண்டு உள்புகப் பேசே.

வருத்த [1]மிரண்டுஞ் சிறுவிரன் மாறிப்[2]
[3]பொருத்தி யணிவிரல் சுட்டிப் பிடித்து
[4]நெரித்தொன்ற வைத்து நெடிது நடுவே
பெருத்த விரலிரண் [5]டுள்புகப் பேசே. (20)

வேறு பாடம்: 1. மிரண்டு (அ ஈ) II. 2. மாறிய (ஆ) II. 3. பெருத்த (ஆ) II. 4. நெரித் தொன்றை (ஆ) I. 5. டுள்புக்குப் (அ இ எ இ ஈ ஒ) II.

கருத்து: இப்பாடலில் யோனி முத்திரை கூறினார்: இரண்டு கைச் சிறுவிரல்களையும் ஒன்றின்மேல் ஒன்றாக, மாறி வைத்து, அணிவிரல்களையும் அப்படியே சுட்டுவிரல்களால் மாற்றிப் பிடித்து, அந்த அணிவிரல்களின்மேல் நடுவிரல்களைப் பொருந்த

வைத்து, பெருவிரல் இரண்டையும் உள்ளே புகச்செய்து, (மேலே சொல்லிய) நேத்திர மந்திரத்தைத் தியானிக்க.

வருத்தம் - முயற்சி.

பிராணாயாம மந்திரம்

1085. பேசிய மந்திரம் இகாரம் பிரித்து உரை
கூசம் இலாத சகாரத்தை முன் கொண்டு
வாசிப் பிராணன் உபதேசம் ஆகைக்குக்
கூசிய விந்துவுடன் கொண்டு கூவே.

பேசிய மந்திர மிகாரம் பிரித்துரை
கூச மிலாத [1]சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிராண னுபதேச மாகைக்குச்
கூசிய விந்து வுடன்கொண்டு கூவே. (21)

வேறு பாடம்: 1. சக்கரத்தை (ஆ) II.

கருத்து: இப்பாடலில் வயிரவி வழிபாட்டிற்குப் பிராணாயாம மந்திரம் கூறினார். அம்ச மந்திரத்தின் 'சம்' என்ற பகுதியில் இகாரம் சேர்த்து, 'சிம்' என்று ஓதுக. இதில் உள்ள மகரமெய் விந்துவாகும்.

சங்கு முத்திரை

1086. கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய 'ச' உடன் பண்ணும் 'மகாரத்தை'
மேவிய மாயை விரி சங்கு முத்திரை
தேவி நடுவுள் திகழ்ந்து நின்றாளே.

கூவிய சீவன் பிராணன் முதலாகப்
[1]பாவிய சவ்வுடன் பண்ணு மகாரத்தை[2]
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவுட் டிகழ்ந்துநின் றாளே[3]. (22)

வேறு பாடம்: 1. பாவியல் (எ) I. 2. யகாரத்தை (ஓ) II; வகாரத்தை (அ) I. 3. றானே (அ) I.

கருத்து: பிராணாயாம மந்திரமாகிய 'சம்' என்பதைத் தியானித்து மாயையின் அடையாளமாகிய சங்கு முத்திரையைக் காட்டிட, அதன் நடுவே தேவி விளங்குவாள்.

வயிரவி அருள்

1087. நின்ற வயிரவி, நீலி, நிசாசரி,
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்று அருள் நாயகி, தேவர் பிரானுக்கே
நன்று அருள் ஞானத்து நாடிடும் சாற்றியே.

நின்ற வயிரவி நீலி நிசாசரி
யொன்று மிரண்டு மொருங்கிய வுள்ளத்துச்[1]
சென்றரு ணாயகி தேவர்பி ரானுக்கே
நன்றருள் [2]ஞானத்து நாடிடுஞ் சாற்றியே[3]. (23)

வேறு பாடம்: 1. துள்ளத்துச் (அ) I. 2. ஞாலத்து (எ) IV. 3. சத்தியே (ஐ) IV.

கருத்து: நிலைபெற்ற வயிரவி நீலநிறம் உடையவள். இரவு நேரத்தில் உலாவுபவள். முக்குணங்களும் ஒருவழிப்பட்ட மனத்தில் சென்று நின்று அருள்புரிபவள். சிவபிரானுக்கு நல்ல அருட் சத்தி. ஆன்மாக்கள் ஞானம் பெறுங்கால், அவர்கட்கு வீடு பேற்றினைச் சாற்றிக் கொடுத்துச் சிவப்பேறாக எய்துபவள்.

முழுதாகிய முதல்வி

1088. சாற்றிய வேதம், சராசரம், ஐம்பூதம்,
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருவெளி,
தோற்றும் உயிர்ப்பன்மை, சோதி, பராபரை
ஆற்றலோடு ஆய்நிற்கும் ஆதி முதல்வியே.

சாற்றிய வேதஞ் சராசர மைம்பூத
நாற்றிசை [1]முக்கண்ணி [2]நாடு மிருவெளி[3]
தோற்று முயிர்ப்பன்மை சோதி பராபரை
யாற்றலோ டாய்நிற்கு மாதி முதல்வியே. (24)

வேறு பாடம்: 1. முக்கண்ண (ஓ) IV; முக்கோண (ஐ) II. 2. னாடு (ஓ) I. 3. மிருள்வெளி (எ ஓ) I.

கருத்து: மூன்று கண்ணை உடைய வயிரவி; வேதம், சராசரம், ஐம்பூதம், ஞானாகாயம், பலவாகிய உயிர்கள், சோதி ஆகியவை யாக வலிமையுடன் நிற்கும் பராபரை; முதல்வி.

மரணம் இல்லை!

1089. ஆதி வயிரவி, கன்னித்துறை மன்னி,
ஓதி உணரில் உடல், உயிர் ஈசன் ஆம்;
பேதை உலகில் பிறவிகள் நாசமாம்;
ஓத உலவாத கோலம் ஒன்று ஆமே.

ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
யோதி யுணரி லுடலுயி ரீசனாம்[1]
பேதை யுலகிற் பிறவிக ணாசமா
மோத வுலவாத [2]கோலமொன் றாமே. (25)

வேறு பாடம்: 1. தேவராம் (ஆ) IV. 2. கோலமென் (ஐ) I.

கருத்து: வயிரவி குண்டலி சத்தியாகப் பொருந்தியுள்ள மூலாதாரத்தில், முதலில் அவளது மந்திரத்தைத் தியானித்து, அவளை அருட்சத்தியாகச் சகஸ்ராரத்தில் உணர்ந்தால், உடல் அழியாது. உயிரும் சிவத்தன்மை எய்தும். அறியாமை காரணமாக உண்டாகும் பிறவிகள் நீங்கும். சொல்லில் அடங்காத அருளுடைய உருவம் நம் காட்சியில் வந்தமையும்.

அன்னை காட்டினாள் அத்தனை

1090. கோலக் குழலி, குலாய புருவத்தள்,
நீலக் குவளை மலர்கின்ற கண்ணினாள்,
ஆலிக்கும் இன்னமுது, ஆனந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத்தாளே.

கோலக் குழலி குலாய புருவத்த[1]
ணீலக் குவளை [2]மலர்கின்ற கண்ணினா
ளாலிக்கு மின்னமு தானந்த சுந்தரி
[3]மேலைச் சிவத்தை வெளிப்படுத் தாளே. (26)

வேறு பாடம்: 1. புருவத்தா (இ ஈ) IV. 2. மலரன்ன (எ) IV. 3. மேலிச் (எ) IV; மேவிச் (தி)

கருத்து: அழகிய கூந்தலாள். வளைந்த புருவத்தாள். குவளை மலர் போல மலர்ந்து விளங்கும் கண்ணாள். களிப்பைத் தரும் இனிய அமுதம் போல்வாள். ஆனந்தம், அழகு . - இவ்விரண்டும்

வடிவானாள். இவள், அனைத்தும் கடந்த சிவத்தை எனக்குக் காட்டி யருளினாள்.

ஞானம் தந்தாள்

1091. வெளிப்படுவித்து, விளைவு அறிவித்து,
தெளிப்படுவித்து, என சிந்தையின் உள்ளே
களிப்படுவித்து, கதிர்ப்படு சோதி
ஒளிப்படுவித்து என்னை உய்யக்கொண்டாளே.

வெளிப்படு வித்து விளைவறி வித்துத்
தெளிப்படு [1]வித்தென சிந்தையி னுள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி
யொளிப்படு வித்தென்னை யுய்யக்கொண் டாளே. (27)

வேறு பாடம்: 1. வித்தெனச் (இ ஒ) IV.

கருத்து: என்னைத் தத்துவங்களினின்றும் தனியாக்கி, ஆன்மலாபம் யாது என்பதை அறிவித்து, என் பலவகைப்பட்ட எண்ணங்களின் ஊடே தெளிவை உண்டாக்கி, ஆனந்தம் தந்து, என் உச்சந்தலையில் கதிர்விடுகின்ற சோதியை எழச்செய்து உய்வித்தாள்.

கொண்டு கூட்டு : 'என்னை' என்பதை முதலிற் கூட்டுக.

மூன்றும் ஒன்றான சோதி

1092. கொண்டனள் கோலம் கொடிய அனேகங்கள்;
கண்டனள் எண்ணெண் கலையின் கணமாலை;
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையும்
தண்டலைமேல் நின்ற தையல் - நல்லாளே.

[1]கொண்டனள் கோலங் [2]கொடியவ னேகங்கள்
கண்டன ளெண்ணெண் [3]கலையின் கணமாலை
[4]விண்டனண் மேலை விரிகதிர் மூன்றையுந்
தண்டலை மேனின்ற தையனல் லாளே. (28)

வேறு பாடம்: 1. கொண்டன (ஈ ஒ) IV. 2. கோடியனேகங்கள் (எ) II. 3. கலையின்கண் மாலைகள் (இ ஈ ஐ எ ஒ) II. 4. விண்டன்ன (சண்)

கருத்து: பூமியாகிய சோலையில் எங்கும் பரவிய, 'அபிராமி' என்ற பெயர் கொண்ட வயிரவி, கொடிய கோலங்கள் அனேகம்

கொண்டாள். அறுபத்து நான்கு கலைகளின் தொகுதியைத் தோற்றுவித்தாள். மேலைநிலமாகிய சகஸ்ராரத்தில் சூரிய, சந்திர, அக்கினிச் சுடர்களை இணைத்துச் சோதியாக வெளிப்பட்டாள்.

பிறப்பு இல்லை

1093. ஃதயல் நல்லாளை, தவத்தில் தலைவியை,
மையலை நூக்கும் மனோன்மணி மங்கையை,
பைய நின்று ஏத்திப் பணிமின், பணிந்தபின்
வெய்ய பவம் இனி மேவகிலாவே.

தையனல் லாளைத் தவத்திற் றலைவியை
மையலை [1]நூக்கு மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவமினி மேவகி லாவே. (29)

வேறு பாடம்: 1. நோக்கு (அ இ எ ஒ) I.

கருத்து: பெண்டிரில் சிறந்தவள். யோகசாதனையில் முடிமணியாகத் திகழ்பவள். மயக்கத்தைப் போக்குபவள். மனோன்மணி. அவளைப் பதறாது நின்று புகழ்ந்து பணிக. பணிந்தால் பிறவி நீங்கும்.

உள்ளக் கோயிலில் உறைபவள்

1094. வேய் அன தோளி, விரைஉறு மென்மலர்
ஏய குழலி, இளம்பிறை ஏந்திழை,
தூய சடைமுடிச் சூலினி, சுந்தரி
ஏய், எனது உள்ளத்து இனிது இருந்தாளே.

வேயன தோளி விரையுறு மென்மல
ரேய குழலி யிளம்பிறை யேந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
யேயென துள்ளத் தினிதிருந் தாளே. (30)

கருத்து: மூங்கிலை ஒத்த தோள் உடையாள். மலர் அணி கூந்தலாள். இளம்பிறை அணிந்தவள். சடைமுடி உடையவள். சூலத்தை ஏந்தியவள். அவள் என் உள்ளத்தில் இனிது குடி கொண்டாள். ஏகி என்பது ‘ஏய்’ ஆயிற்று.

அன்னையின் அரவணைப்பில் ....

1095. இனிய தென் மூலை இருக்கும் குமரி
தனி ஒரு நாயகி, தானே தலைவி,
தனி படுவித்த நன் சார்பு படுத்து
நனிபடுவித்து உள்ளம் நாடி நின்றாளே.

இனியதென் மூலை யிருக்குங் குமரி
தனியொரு நாயகி தானே தலைவி
[1]தனிபடு [2]வித்தநன் [3]சார்பு படுத்து[4]
[5]நனிபடு வித்துள்ள நாடிநின் றாளே. (31)

வேறு பாடம்: 1. தனிப்படு (பதிப்புகள்) 2. வித்தனன் (அ ஈ ஓ) I. 3. சார்வு (துடி) (சண்) 4. படுத்த (இ ஈ) I. 5. நனிப்படு (பதிப்புகள்)

கருத்து: மூலாதரத்தில் வாழும் வாலை. ஒப்பற்ற தலைவி. உலக முதல்வி (காரணி). அவள் என்னைத் தத்துவங்களினின்றும் தனியே பிரித்து (என்னை உணரச் செய்து) இருத்திய நல்ல அருட் சார்பில் அழுந்தவைத்து, மிகுபேரின்பம் உண்டாகச் செய்து, இவ்வாறு என் உயிரறிவானது அவளை அறியுமாறு நின்றாள்.

நாடி என்ற வினையெச்சத்தை நாட என்ற வினையெச்சமாக மாற்றுக.

தேவியின் சிலம்பொலி

1096. நாடிகள் மூன்றுள் நடு எழு ஞாளத்துக்
கூடியிருந்த குமரி, குலக்கன்னி
பாடகச் சீறடி பைம்பொன் - சிலம்பு ஒலி
ஊடகம் மேவி உறங்குகின்றேனே.

[1]நாடிகண் மூன்று [2]ணடுவெழு ஞாளத்துக்[3]
கூடி யிருந்த குமரி குலக்கன்னி
[4]பாடகச் சீறடி [5]பைம்பொற் சிலம்பொலி
யூடக மேவி யுறங்குகின் றேனே[6]. (32)

வேறு பாடம்: 1. நாடிய கண் மூன்று (எ) I. 2. நடுவெழு (அ ஈ ஈ எ ஓ) I. 3. ஞானத்துக் (ஆ எ) I; ஞானத்திற் (ஈ) I. 4. யாடகச் (எ) II. 5. யம்பொற் (எ) II. 6. றாளே (அ ஆ இ எ ஓ) I; றானே (ஈ) I.

கருத்து: மூன்று நாடிகளுள், நடுவில் உள்ளதாகிய சுழுமுனை நாடியில் பொருந்திய வாலைப்பெண். அவளது பாதச் சிலம்பு ஒலி கேட்டு, அதில் பொருந்தி அமைதியுற்றேன்.

ஞாளம் - நாளம் - நாடி. முதற்போலி.

விழித்திரு

1097. உறங்கும் அளவில் மனோன்மணி வந்து
கறங்கு வளைக்கை கழுத்து ஆரப் புல்லி,
உறங்கு, ஒளிர் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்டு,
"உறங்கல் ஐயா" என்று உபாயம் தந்தாளே.

[1]உறங்கு மளவின் மனோன்மணி வந்து
கறங்கு வளைக்கை கழுத்தாரப் புல்லி
[2]யுறங்கொளிர் தம்பலம் வாயி லுமிழ்ந்திட்
டுறங்கலை [3]யாவென் றுபாயந்தந் தாளே. (33)

வேறு பாடம்: 1. உறங்கும்பொழுது (ஆ) IV. 2. பிறங்கொளித் (எ) IV. 3. யானென் (ஆ) I யாயென் (இ ஒ) I.

கருத்து: நான் அவ்வாறு உறங்கும்போது, மனோன்மணி தோன்றி, என்னைக் கழுத்துப் பொருந்தத் தழுவி, அவள் வாயில் கிடப்பதும், ஒளியுடையதுமான தாம்பூலத்தை என் வாயில் உமிழ்ந்து, உறங்காதே எனக் கூறி, அதற்கான உபாயத்தையும் உபதேசித்தாள்.

இப்பாடல் குறியீட்டு ஆட்சி உடையது. புல்லுதல் - மூச்சுக்காற்று கீழே போகாதவாறு தொண்டையை அடைத்தல். வாயில் உமிழ்தல் - தலையில் அடங்கிக் கிடந்த உயிராற்றலைப் பிரமரந்திரம் வழியாக வெளிப்படச் செய்தல். உறங்காமை - துரியநிலை.

அவா அடங்கிற்று

1098. உபாயம் அளிக்கும் ஒருத்தி என் உள்ளத்து,
அபாயம் அறக்கெடுத்து, அன்பு விளைத்து,
சுவாவை விளைக்கும் சுழியகத்துள்ளே
அவாவை அடக்கிவைத்து "அஞ்சல்" என்றாளே.

உபாய மளிக்கு மொருத்தியென் னுள்ளத்
தபாய மறக்கெடுத் தன்பு விளைத்துச்
சுவாவை [1]விளைக்குஞ் சுழியகத் துள்ளே
யவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே. (34)

வேறு பாடம்: 1. விளக்குஞ் (எ) IV.

கருத்து: துரிய நிலையை எய்த உபாயம் உபதேசித்த அன்னை, என் மனத்தின் உட்பகையாகிய கேடுகளை எல்லாம் போக நீக்கி, தன் திருவடியின்கண் அன்பு மிகக்கொள்ளச் செய்து, சுவானு பூதியை உண்டாக்கும் சுழுமுனை வழிப் பிராணாயாமப் பயிற்சி வாயிலாக அவாவை அடக்கி, எனக்கு அபயம் அளித்தாள்.

1099. அஞ்சொன் மொழியா ளருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொன் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கிஞ்சொ லளிக்கு மிறைவியென் றாரே. (ஔ, ப)

படைப்பவள் அவளே துடைப்பவள் அவளே

1100. ஆருயிர் ஆயும் அருந்தவப் பெண்பிள்ளை,
காரிய கோதை, அம் காரணி, நாரணி,
ஊரும் உயிரும் உலகும் ஒடுங்கிடும்
கோரி, என் உள்ளம் குலாவி நின்றாளே

ஆருயி [1]ராயு [2]மருந்தவப் பெண்பிள்ளை
[3]காரிய [4]கோதையங் காரணி நாரணி
யூரு முயிரு முலகு மொடுங்கிடுங்[5]
கோரியென் னுள்ளங் குலாவிநின் றாளே. (35)

வேறு பாடம்: 1. ரேயு (ஈ) IV ராய (ஈ) IV. 2. வருந்தலப் (இ) I. 3. காரியல் (எ) IV. 4. கோதையள் (எ) IV கோதையுங் (அ) I. 5. மொருங்கிடுங் (இ ஈ) IV மொடுக்கிடுங் (துடி)

கருத்து: அரிய ஆன்மாக்கள் ஆகிய யோகியர் ஆய்ந்து செய்யும் தவத்தின் தலைவி. தான் இயற்றும் காரியமாகிய உலகில் 'ஒன்றாய்'க் கலந்துநிற்பவள். இவற்றிற்கு நிமித்த காரணமாய் இருப்பவள். எல்லாம் ஒடுங்குதற்கு இடமாயிருப்பவள். கோர வடிவினள். அவள் என் உள்ளத்தில் பொருந்தி நின்றாள்.

உணர்வாய் என்னுள் கலந்து ...

1101. குலாவிய கோலக் குமரி, என் உள்ளம்
நிலாவியிருந்து, நெடுநாள் அனைத்தும்
உலாவியிருந்து, உணர்ந்து, உச்சியின் உள்ளே
கலாவி இருந்த கலைத்தலையாளே.

குலாவிய கோலக் குமரியென் னுள்ள
நிலாவி யிருந்து நெடுநா ளனைத்து[1]
முலாவி யிருந்துணர்ந் துச்சியி னுள்ளே
கலாவி யிருந்த கலைத்தலை யாளே. (36)

வேறு பாடம்: 1. ளணைந்து (எ) IV

கருத்து: சிவனோடு பிரிவு அற்று இருப்பவள் ஆகிய வயிரவி, நெடுநாள் என் உள்ளத்தில் பொருந்தி, பிராணனாக உலாவி, உயிர் உணர்வாக உணர்ந்து, என் தலைஉச்சிச் சகஸ்ராரத்தில் 'உன்மனி' என்ற சந்திர கலையுடன் கலந்து, சோதியாய் விளங்கினாள்.

கலாவி - கலந்து.

காத்திருப்பாள் சந்திரனில்

1102. கலைத்தலை நெற்றி ஓர் கண் உடை, கண்ணுள்
முலைத்தலை மங்கை முயங்கி இருக்கும்
சிலைத்தலை ஆறு தெரிவினை நோக்கி
அலைத்த பூங்கொம்பினள் அங்கு இருந்தாளே.

கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுண்
முலைத்தலை மங்கை முயங்கி யிருக்குஞ்
சிலைத்தலை [1]யாறு [2]தெரிவினை நோக்கி
[3]யலைத்தபூங் கொம்பின [4]ளங்கிருந் தாளே. (37)

வேறு பாடம்: 1. யாய (எ) IV. 2. தெரிவனை (ஆ) I. 3. யலைத்தலைப் (ஆ) I. 4. ளங்கிருந் (ஆ ஓ) I.

கருத்து: நெற்றிக்கண் உடையவளும், அமுதம் பொழியும் மார்பகங்கள் உடையவளும், பூங்கொம்பு போன்றவளும், தலைவியும் ஆகிய வயிரவி, சிவனுடன் கூடியிருக்கும் தலையுச்சிச்

சகஸ்ராரத்திற்கு உரிய வழி, யோகியால் அறியப்படுதலை எதிர் பார்த்து, சந்திரமண்டலத்தில் இருக்கிறாள்.

மறைந்திருந்து வழிகாட்டி, சகஸ்ராரம் அறியப்பட்டவுடன், அங்குத் தோன்றுவாள் என்க.

தவப்பயன் ஆகிய தாய்

1103. இருந்தனள் ஏந்திழை என் உள்ளம் மேவிப்
பொருந்திய நால்விரல் புக்கனள் புல்கி,
திருந்திய தாணுவில் சேர்ந்து, உடன் ஒன்றி
அருந்தவம் எய்தினள் ஆதியினாளே.

இருந்தன ளேந்திழை யென்னுள்ள மேவிப்
[1]பொருந்திய நால்விரல் [2]புக்கனள் புல்கித்[3]
திருந்திய தாணுவிற் சேர்ந்துட னொன்றி
யருந்தவ மெய்தின [4]ளாதியி னாளே. (38)

வேறு பாடம்: 1. பொருந்திரு (சண்) 2. புக்கனல் (விசு தி) 3. புல்லித் (துடி) 4. ளாயிழை தானே (ஆ) II.

கருத்து: என் சிந்தையில் வாழ்பவளாகிய வயிரவி, அண்ணாக்கின் மேல், நான்கு விரற்கடை அளவு உள்ள மூச்சுக் காற்றைச் செல்வித்து, தானும் எழுந்தருளி, சிவனுடன் புணர்ந்து, என் தவத்தின் அரிய பயனாக வீற்றிருந்தாள்.

இங்குக் குறிப்பிட்ட தவம் கேசரி யோகம்.

துணை நிற்கும் தோகை

1104. ஆதி, அனாதி, அகாரண காரணி,
சோதி, அசோதி, சுகம்பர, சுந்தரி
மாது, சமாதி மனோன்மணி, மங்கலி
ஓதி என் உள்ளத்து உடன் இயைந்தாளே.

ஆதி யனாதிய [1]காரண காரணி
சோதி யசோதி [2]சுகம்பர சுந்தரி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
யோதியென் னுள்ளத் துடனியைந் தாளே. (39)

வேறு பாடம்: 1. காரணி நாரணி (ஈ) I. 2. சுகபர (துடி)

கருத்து: அனைத்துலகுக்கும் முதல்வி. தனக்கு முதல் அற்றவள். தனக்குக் காரணம் அற்றவள். அனைத்திற்கும் காரணம் ஆனவள். ஒளிவடிவாய் உள்ளவள். இருள் உருவாய் உள்ளவள். மேலான வீட்டின்பம் அளிப்பவள். அழகி. அன்பரிடம் அருள் விருப்புடையாள். அவள் சமாதி நிலைபற்றி எனக்கு உண்ணின்று உணர்த்தி, என் உயிருடன் உடனாயிருந்து பேரின்பம் வழங்கினாள்.

குறிப்பு: இப்பாடலை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "இயைந்தனள் ஏந்திழை" என்ற பாடல் 'திருவம்பலச் சக்கர' வியலில் வந்தது.

அன்னையின் கருணைப் பார்வை

1105. பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்,
முயற்றியில் முத்தி அருளும் முதல்வி
கயல் திகழ் முக்கண்ணும், கம்பலைச் செவ்வாய்
முகத்து அருள்நோக்கமும் முன் உள்ளதாமே.

பிதற்றிக் [1]கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி யருளு முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணுங் கம்பலைச் செவ்வாய்
முகத்தரு ணோக்கமு முன்னுள்ள தாமே[2]. (40)

வேறு பாடம்: 1. யிகழ்ந்தன (அ ஆ) II. 2. வாமே (த)

கருத்து: அறியா மாந்தர் உலகச் செய்திகளைப் பேசி மாண்டனர். அங்ஙனம் பேசாது, யோகமுயற்சி செய்தார்க்கு முத்தி வழங்கும் தலைவியின் ஒலிதரும் வாய் திகழும் முகத்தில் மீன் போன்ற மூன்று கண்களும், அருட்பார்வையும் நமக்கு முன்னே உள்ளன.

கண்ணும் நோக்கமும் வேறல்ல ஆதலின் 'உள்ளது' என ஒருமையால் கூறினார்.

அன்னையின் தரிசனம்

1106. உள்ளத்து, இதையத்து, நெஞ்சத்து-ஒருமூன்றுள்
பிள்ளைத்தடம் உள்ளே பேச, பிறந்தது
வள்ளல் திருவின் வயிற்றினுள் மாமாயைக்
கள்ள ஒளியின் கருத்து ஆகும் கன்னியே.

[1]உள்ளத் திதையத்து நெஞ்சத் தொருமூன்றுட்
பிள்ளைத் தடமுள்ளே [2]பேசப் பிறந்தது
[3]வள்ளற் றிருவின் [4]வயிற்றினுண் மாமாயைக்
கள்ள [5]வொளியின் கருத்தாகுங் கன்னியே. (41)

வேறு பாடம்: 1. உள்ள (எ) I. 2. பேசிப் (இ) I. 3. வள்ளத்திருவின் (ஆ) I வள்ளத்திருவினை (எ) II. 4. வயத்தினுண் (எ) I. 5. வெளியின் (ஆ) IV.

கருத்து: உயிர் உணர்வு, மன உணர்வு - இவற்றுடன், யோக சாதனையில், அநாகதம் என்ற இடத்தில் மூலக்கனலுடன் குண்டலி சத்தி சேர்வதால் உண்டாகும் உணர்வு - ஆக இவை மூன்றும் சுழுமுனை நாடியில் மூச்சுக்காற்று இயங்குவதால் கிளர்ச்சி பெற்று எழும். அந்த மூச்சுக் காற்று அண்ணாக்கைத் தாண்டி, நான்குவிரல் உள்ள 'பிள்ளைத்தடம்' என்ற வழியைக் கடந்து, சகஸ்ராரத்தை அடைந்தால், பராசத்தி, தன் கருவில் உள்ள சுத்த மாயையைத் தனக்கு இடமாகக் கொண்டு, ஒளிவடிவாகத் தோன்றுவாள்.

பிறந்தது மாயையாகிய ஒளி என்க. பிள்ளைத்தடம் - நுண்ணிய வழி.

மாயை மயக்குவது வியப்பு

1107. கன்னியும் கன்னி அழிந்திலள், காதலி
துன்னி அங்கு ஐவரைப் பெற்றனள் தூய்மொழி;
பன்னிய நன்னூற் பகவனும் அங்குளன்
என்னே இம் மாயை இருள்-அது தானே.

கன்னியுங் கன்னி யழிந்திலள் காதலி[1]
துன்னியங் கைவரைப் பெற்றன டூய்மொழி
பன்னிய நன்னூற் [2]பகவனு மங்குள
[3]னென்னேயிம் மாயை யிருளது தானே. (42)

வேறு பாடம்: 1. காதலித் (அ) IV. 2. பகைவரு (இ ஈ ஓ) II; பகைவனு (அ) II பகவரு (த) 3. வென்னவிம் (எ) II; வென்னேயிம் (இ ஈ) II; ரென்னவிம் (விசு) ரென்னேயிம் (த).

கருத்து: சத்தி தன் கன்னிமை மாறாமலே, சிவனுக்குக் காதலியாய்ச் சேர்ந்து, சுத்தமாயையை இடமாகக் கொண்டு ஐவரைப் பெற்றாள் (சதாசிவன், மயேச்சுரன், அயன், திருமால், அரன்). வேதம் தூயமொழியால் கூறிய பரம்பொருளும் இந்த ஐவரை

அதிட்டித்துள்ளான். இவ்வாறிருக்க, மாயை இருள் தன்மையும் (மயக்கம்) உடையது ஆவது வியப்பேயாகும்.

சிவன் உறையும் இடம்

1108. இருள்-அது சத்தி, வெளி-அது எம் அண்ணல்
பொருள்-அது புண்ணியர் போகத்துள் இன்பம்,
தெருள் உறு சிந்தையைத் தெய்வம் என்று எண்ணில்
அருள்-அது செய்யும் எம் ஆதிப் பிரானே.

இருளது சத்தி [1]வெளியதெம் மண்ணல்
பொருளது புண்ணியர் போகத்து ளின்பந்
[2]தெருளுறு சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
[3]லருளது செய்யுமெம் மாதிப்பி ரானே. (43)

வேறு பாடம்: 1. வொளியதெம் (துடி) 2. தெருளது (எ) I. 3. யருளது (எ) I.

கருத்து: மறைப்பைச் செய்பவள் திரோதாயி என்னும் நிலையில் உள்ள சத்தி. அதை நீக்கி, அவள் அருட்சத்தியாக வெளிப்படும் போது, அந்த அருள்வெளியில், வெளிப்பட்டுச் சிவன் தோன்றுவன். எனவே சிவனுடன் கலந்து எய்தும் இன்பமே நிலையான உண்மையாகும். அருட்சத்தியை அடைவதற்கான ஞானத்தை எய்தும் சிந்தையே - ஆன்ம உணர்வே - அருள்வெளியில் கலந்து, சிவநிலை அடையும் எனத்தேர்ந்து, சத்தியை வழிபட்டால், முதல்வன் அருள்புரிவான்.

நினைத்தேன், வந்தாள்!

1109. ஆதி அனாதியும் ஆய பராசத்தி,
பாதி, பராபரை, மேல் உறை பைந்தொடி,
மாது, சமாதி மனோன்மணி, மங்கலி
ஓதும் என் உள்ளத்து உடன் முகிழ்த்தாளே.

ஆதி யனாதியு மாய பராசத்தி
பாதி [1]பராபரை மேலுறை பைந்தொடி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
யோதுமென் னுள்ளத் [2]துடன்முகிழ்த் தாளே. (44)

வேறு பாடம்: 1. பராபரன் (ஆ) IV. 2. துடன்முகிழ்ந் (சண்)

கருத்து: எல்லாவற்றுக்கும் மூலமாயுள்ளவள். தனக்கு மூலம் இல்லாதவள். பரசிவனிடத்துப் பாதியாக விளங்கும் பராபரை. எல்லாவற்றையும் தன் அருள் வியாபகத்துள் அடக்கிக் கொண்டிருப்பவள். எனினும், அனைத்திற்கும் அப்பால் விளங்கு பவள். அவளைத் தியானிக்கும் என் உயிர் உணர்வில் விரைந்து தோன்றினாள்.

வேதம் கூறிய உண்மை

1110. ஓதிய வண்ணம் கலையின் உயர்கலை
ஆதியில் வேதமேயாம் என்று அறிகிலர்
சாதியும் பேதமும் தத்துவமாய் நிற்பள்
ஆதி என்று ஓதினள் ஆவின் கிழத்தியே.

ஓதிய [1]வண்ணங் கலையி னுயர்கலை
யாதியில் வேதமே யாமென் றறிகிலர்
சாதியும் பேதமுந் தத்துவ மாய்நிற்ப
ளாதியென் றோதின ளாவின் கிழத்தியே. (45)

வேறு பாடம்: 1. வெண்ணெண் (தி)

கருத்து: பிறப்பு வகைகளும், பல்வேறுபட்ட பொருள்களும், இவற்றிற்கு அடிப்படை ஆகிய தத்துவங்களுமாக நிற்பவள் பராசத்தியே என்று பசுவடிவாக வந்த அம்மை (திருவாவடுதுறை) எனக்கு உணர்த்தினாள். எல்லாக் கலைகளிலும் மேம்பட்டதும், தனக்கு முதல் இல்லாததும் ஆகிய வேதம் கூறியதும் இதுவே என்று பலரும் அறியவில்லை.

ஆவின் கிழத்தி - ஆன்மாவிற்குத் தலைவி; உடையவள் என்றும் பொருள்படும்.

பசுவாக வந்தவள்

1111. ஆவின் கிழத்தி, நல் ஆவடுதண்-துறை
நாவின் கிழத்தி, நலம் புகழ்ந்து ஏத்திட,
தேவின் கிழத்தி, திரு ஆம் சிவமங்கை,
மேவும் கிழத்தி, வினை கடிந்தாளே.

ஆவின் கிழத்திநல் லாவடு தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடத்[1]
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி வினைகடிந் தாளே. (46)

வேறு பாடம்: 1. தேத்திடுந் (எ) IV.

கருத்து: திருவாவடுதுறையில் பசு வடிவாக வந்தவள். குருவாக இருந்து உண்மையை உணர்த்துபவள். யாவரும் தன்னைத் துதிக்க வீற்றிருந்த தெய்வம். வீடுபேறே ஆகின்ற சிவை. என் தலைவி. எனது வினையை அகற்றினாள்.

ஈசனை ஈன்றவள்

1112. வினை கடிந்தார் உள்ளத்து உள்ஒளி மேவி,
தனை அடைந்தோர்க்கு எல்லாம் தத்துவமாய் நிற்பள்
எனை அடிமைகொண்ட ஏந்திழை, ஈசன்
கணவனைக் காண அனாதியும் ஆமே.

வினைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்
தனையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்ப
ளெனையடி மைகொண்ட வேந்திழை யீசன்
கணவனைக் காண வனாதியு மாமே. (47)

கருத்து: கன்ம மலத்தை நீக்கியவரின் ஆன்ம உணர்வு ஆகிய ஒளியில் திகழும் உள்ளொளியாகப் பொருந்தி, தன்னைச் சரணடைந்தோர் யாவராயினும், அவர்க்கு உண்மையாக வெளித் தோன்றுவாள். என் தலைவி. ஈசன் ஆகிய தன் கணவனை நோக்க அவள் அநாதியாவாள்.

அவனையே அவள் தோற்றுவித்தாள் என்பது கருத்து. சிவன், சதாசிவன், மயேச்சுரன், உருத்திரன் முதலிய மூர்த்தங்கள், சிற்சத்தி சுத்தமாயையைக் கலக்குவதால் உருவானவை. ஆதலின் இவற்றை அவள் தோற்றுவித்தாள் என்றார். பரசிவமும் அவனது குணமாகிய பரா சத்தியும் என்றும் உள்ளவை யாதலின் “அனாதி” என்றார்.

சோதியின் பாதி

1113. ஆதி, அனாதி, அகாரண, காரணி,
வேதம்-அது ஆய்ந்தனள், வேதியர்க்காய் நின்ற
சோதி, சகளி, சுடர்உருவாய் நிற்கும்
பாதி, பராபரை, பன்னிரண்டு ஆதியே.

ஆதி யனாதி [1]யகாரண காரணி
வேதம [2]தாய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதி [3]சகளி சுடருரு வாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே. (48)

வேறு பாடம்: 1. யகாரணி (த) 2. தானந்த (ஆ) IV. 3. தனிச்சுடருருவமாய் (எ) IV தனிச்சுடர் சொரூபமாய் (தி) (சைவ). தனிச்சுடர்ச் சொரூபம தாய் (த)

கருத்து: (முன்பு ஒரு பாடல் முதலடி இப்பாடலின் முதலடியை ஒத்துள்ளது. உரை ஆங்குக் கூறப்பட்டது). வேதியர்க்காக வேதத்தை ஆய்ந்து, உண்மையை உபதேசித்தாள். சகளமாக (உருவமாக) நிற்பவள். பன்னிரண்டு கலைகளை உடையவனாய்ச் சோதியாய் நிற்கும் பரசிவனின் பாதி. பராபரை.

(iii) பூரண சத்தி

ஆட்டி வைப்பவள்

1114. அளந்தேன் அகலிடத்து அந்தமும் ஈறும்,
அளந்தேன் அகலிடத்து ஆதிப் பிரானை,
அளந்தேன் அகலிடத்து ஆணொடு பெண்ணும்,
அளந்தேன் அவன் அருள் ஆய்ந்து உணர்ந்தேனே.

அளந்தே னகலிடத் தந்தமு மீறு[1]
மளந்தே னகலிடத் தாதிப் பிரானை
யளந்தே னகலிடத் தாணொடு பெண்ணு
மளந்தே னவனரு ளாய்ந்துணர்ந் தேனே. (1)

வேறு பாடம்: 1. னீறு (த)

கருத்து: என் உயிருணர்வால் உணர்ந்தவை பின்வருவன : அண்டங்களின் முடிவையும், புவனப்பதிகளின் முடிவையும் செய்பவனாகிய மகா சங்கார மூர்த்தி சிவனே. இவற்றையும் இவர்களையும் மீளப் படைப்பவள் அவனே. உலகில் ஆணும் பெண்ணுமாக இயங்கி, இன வளர்ச்சி செய்யும் உயிர்ப்பொருள் களை நோக்கி, அப்பரம்பொருளின் அருட் சத்தியே அந்த இயக்கத்தின் காரணம் என உணர்ந்தேன்.

“அருளது என்ற அகலிடம் ஒன்றும்” என ஆசிரியர் பின்னும் கூறுவர்.
அந்தம் - அண்டங்களின் முடிவு. ஈறு - புவனப்பதிகளின் முடிவு.

அன்னை வழிகாட்ட . . .

1115. உணர்ந்திலர்; ஈசனை ஊழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம்; புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன் அருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பகம் ஆமே.

[1]உணர்ந்தில ரீசனை யூழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
[2]கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே. (2)

வேறு பாடம்: 1. உணர்ந்திலீ (ஒ) IV. 2. குணர்ந்த (ஆ உ எ) I.

கருத்து: ஊழி முடிவு தோறும் மகாசங்காரத்திற்குப் பின், மீண்டும் உலகங்களைப் படைப்பதற்கு, இறைவனுடன் தானும் ஆதியாய் உள்ளவள் பராசத்தி அவள் யோகியின் உடம்பில் சகஸ்ராரத்தில், அந்த ஈசனைச் சேர்ந்து நிற்பது, அவளது முழு வல்லபத்திற்கு இடமாகும். அவள் அங்கு அருட்சத்தியாக நின்று அருள் புரிகின்றாள். இதனைப் பலர் அறியவில்லை. புண்ணியரைச் சிவகணங்கள் ஆக்கி, அவர்களைத் தனது அருள்வழியில் நிற்குமாறு பாலிக்கும் நங்கை அவள். அவள் தன் அருளால் நல்கும் வழியில், யோகி பூரணகும்பகம் செய்ய வேண்டும் (பூரகமும் இரேசகமும் இன்றி வாளாவிருத்தல் பூரண கும்பகம்)

சிவ - சத்தி தரிசனம்

1116. கும்பக் களிறு ஐந்தும், கோலொடு பாகனும்
வம்பின் திகழும் மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி இனிது உறை தையலும்
அன்பின் கலவியுளாய் ஒழிந்தாரே.

கும்பக் களிறைந்துங் [1]கோலொடு பாகனும்
வம்பிற் றிகழு மணிமுடி வண்ணனு[2]
மின்பக் கலவி யினிதுறை தையலு
[3]மன்பிற் [4]கலவியு ளாயொழிந் தாரே. (3)

வேறு பாடம்: 1. கோளொடு (ஆ இ) I. 2. யண்ணலும் (தி). வள்ளலும் (த)
3. மின்பிற் (எ) II மின்பக் (த) 4. கலவிக்கு (இ) IV. 5. ளின்பமுற்றாரே (த)

கருத்து: யோகிக்குச் சகஸ்ராரத்தில் அனுபவம் நிகழ்கின்றபொழுது, யானை போன்ற ஐம்புலன்களும் அடங்கும். அவற்றை நடத்தும் பாகனாகிய சீவனின் கோலாகிய மனம் அடங்கும். அவ்வான்மாவின் பேரன்பு காரணமாக சகஸ்ராரத்தானம் ஆகிய தலை முடியில் (உச்சியில்) புது அனுபவம் திகழும். மாணிக்க மணி போலச் செவ்வொளி வீசும் சுடர் உருவனாகிய சிவனும், அவனுடன் பிரிப்பின்றி உறையும் சத்தியும் கலந்து காட்சி வழங்கி ஆன்ம உணர்வுக்கு விருந்தாவர்.

சிவன் வரும் நேரம்

1117. இன்பக் கலவியில் இட்டு எழுகின்றது ஓர்
அன்பில் புகவல்லனாம் எங்கள் அப்பனும்,
துன்பக் குழம்பில் துயர் உறு பாசத்துள்
என்பில் பராசத்தி, என் அம்மை தானே.

இன்பக் கலவியி லிட்டெழு கின்றதோ
ரன்பிற் புகவல்ல னாமெங்க ளப்பனுந்
துன்பக் குழம்பிற் [1]றுயருறு பாசத்து
[2]ளென்பிற் பராசத்தி யென்னம்மை தானே. (4)

வேறு பாடம்: 1. றுயரறு (அ) II. 2. என்பிற் (ஓ) II.

கருத்து: பலவாகிய துன்பச் சேற்றில் துயர் அடைவதற்கு ஏதுவான, ஆணவமலப் பிணிப்பின் விளைவாக வந்த உடம்பில், மூலாதாரத்தில் குண்டலியாக இருந்து பராசத்தி காக்கின்றாள். எங்கள் தந்தையாம் சிவன் அவளுடன் சேர்க்கை பெறச் செய்வதாக என் அன்பு முதிரும் காலத்தில், என் உடலில் புகுந்து அருள் செய்வான்.

கலவி - புணர்ச்சி. இங்கு சிவ - சத்திசேர்க்கை. குழம்பு - சேறு. என்பு - உடம்பு.

தாயுமானவன்

1118. 'என் அம்மை, என் அப்பன்'- என்னும் செருக்கு அற்று
உன் அம்மை ஊழித்தலைவனும் அங்கு உளன்.
மன் அம்மை ஆகி மருவி, உரைசெய்யும்
பின், அம்மையாய் நின்ற பேர் நந்திதானே.

என்னம்மை யென்னப்ப னென்னுஞ் செருக்கற்று[1]
[2]வுன்னம்மை யூழித் தலைவனு மங்குளன்
மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்
பின்னம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே. (5)

வேறு பாடம்: 1. செருக்கற் (விசு) 2. றுன்னம்மை (விசு)

கருத்து: முதலில் உடலில் குண்டலிசத்தி (திரோதானசத்தி) யாகப் பொருந்தி, ஞானத்தை உபதேசம் செய்த பின், அருட் சத்தியாய் நிற்கும் உன்னுடைய அம்மையாய்; "என் தாய், என் தந்தை" என வேறு பிரித்து எண்ணும் தற்போதம் கெட்டு நினைக்கின்ற அம்மையப்பனாய், இறைவன் சகஸ்ராரத்தில் விளங்குவான். அவன் பெயர் நந்தி என்பது.

'பேர்நந்தி' என்றார், அம்மையும் அப்பனும் அவனே என்னும் கருத்தால்.

அருட்சத்தியின் ஆணை

1119. தாம் மேல் உறைமலர், தண்மலர் நான்முகன்
பார்மேல் இருப்பது, ஒரு நூறு தான் உள,
பூ மேல் உறைகின்ற போதகம், வந்தனள்
நாமேல் உறைகின்ற நாயகி ஆணையே.

[1]தாமே [2]லுறைமலர் தண்மலர் நான்முகன்
பார்மே லிருப்ப தொருநூறு தானுள
பூமே லுறைகின்ற போதகம் வந்தனள்[3]
நாமே லுறைகின்ற நாயகி யாணையே[4] (6)

வேறு பாடம்: 1. தார்மே (ஆ எ) IV. 2. லுறைகின்ற (எ) IV. 3. வந்தனர் (ஒ) I வந்தன (எ) I. 4. யானே (ஆ இ) II.

கருத்து: அம்மையும் அப்பனும் இடமாகக்கொண்டு வீற்றிருக்கும் மலர்; குளிர்ந்த தாமரை மலரில் அமர்ந்துள்ள பிரமன் படைத்த பூவுலகில் இருப்பது; யோகியின் தலையுச்சியில் இருப்பது; நூறு இதழ்களை உடையது. இந்தச் சகஸ்ரார அனுபவத்தில் யோகிக்கு விளையும் ஞானம், அவனது நெற்றிப் பகுதியில் எழுந்தருளி, அண்ணாக்கின் மேல் வீற்றிருப்பவளாகிய அருட்சத்தியின் ஆணையால் விளைவதாகும்.

வந்தனள் - முற்றெச்சம். முதல் அடியில் "தார்மேல் உறைகின்ற" என்று பாடங் கொண்டு, பலவாறு உரை கூறி இடர்ப்படுவர்.

அருளே ஐயனின் ஆசனம்

1120. ஆணையமாய், அருந்தாது, உள் இருந்தவர்
மாண் ஐயம் ஆய மனத்தை ஒருக்கி, பின்
பாழ்நயம் ஆய பரத்தை அறிந்தபின்,
தாள் நயம் ஆய தன் ஆதனத்தானே.

ஆணைய [1]மாயருந் தாதுள் ளிருந்தவர்
மானைய [2]மாய மனத்தை யொருக்கிப்பின்
[3]பாணய மாய பரத்தை யறிந்தபின்
[4]றாணய மாயதன் [5]னாதனத் தானே. (7)

வேறு பாடம்: 1. மாய்வருந் (ஈ எ) IV. 2. மான (அ ஈ) IV. 3. பாணைய (சைவ) 4. றாணையு (சைவ) 5. னாதனந் (எ) IV னாதனன்ற ரனே (தி) (த) (வ) மாய தனாதனன் (சைவ)

கருத்து: அருட் சத்தியின் வசம் ஆகி, முன்போல விடயங்களைத் துய்க்காது, அகத்தில் ஒன்றியிருந்தோர் அன்புடைமையோடு, பெரிதும் ஐயத்திற்கும் இடமாய்ப் புலன்களில் செல்லும் மனத்தை ஒன்றச் செய்து, பாழ் என்று சொல்லப்படும் பரத்தை அறிந்த பிறகு, சிவன் தனது திருவடியாகிய அருளையே ஆசனமாகக் கொண்டு, அவர்களிடத்தில் வீற்றிருப்பான்.

ஆணையகம் என்பது ஆணையம் என மருவியது. மாண் - மாண்பு, பெருமை.

நடம் புரியும் இடம்

1121. தானே எழுந்த இத்தத்துவ நாயகி
வான்நேர் எழுந்து, மதியை விளக்கினள்,
தேன் நேர் எழுகின்ற தீபத்து ஒளியுடன்
மானே நடம் உடை மன்று அறியீரே.

தானே [1]யெழுந்தவித் தத்துவ நாயகி
வானே ரெழுந்து மதியை விளக்கின
டேனே ரெழுகின்ற தீபத் தொளியுடன்
[2]மானே [3]நடமுடை மன்றறி யீரே. (8)

வேறு பாடம்: 1. யெழுந்தவத் (இ ஈ) IV. 2. மானேர் (ஆ) IV. 3. நம்முடை (ஆ) I; கடமுடை (சண்)

கருத்து: ஆன்மாவின் தகுதியைப் பாராமல், தன் கருணை காரணமாகவே தோன்றிய அருட்சத்தி, துவாதசாந்தத் தானமாகிய பரமாகாயத்தில் (யோகியின் உச்சந்தலைக்கு மேல் 12 அங்குலம் உள்ள வெளி. அஃது அவனுக்குச் சிதாகாயமாக அனுபவப்படும்) விளங்கி, அவனது சந்திர மண்டலத்தை (நெற்றி) - ஞானத்தை - ஒளிபெறச் செய்தாள். அப்பொழுது அங்கு விளங்குவது தேனை ஒத்த குளிர்ந்த விளக்கொளி. அச்சோதியின் நடுவில், அதன் உள் ளொளியாக எம்பெருமான் நடனம்புரிகின்றான். எனவே நெற்றிப் பகுதி நடன சபை என்று அறிக.

புருவமத்தி முதல் தலையுச்சி முடிய உள்ள பகுதி "சிதாகாயம்" எனப்படும். பரமாகாயமும் உணர்வு எட்ட, எட்டச் சிதாகாயமே.

சித்தம் தெளியும் போது...

1122. அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டத்து
அறிவான மங்கை அருள் - அது சேரின்,
பிறியா அறிவு அறிவார்; உள்ளம் பேணும்
நெறி வாய சித்தம் நினைந்து இருந்தாளே.

அறிவான மாயையு [1]மைம்புலக் கூட்டத்
தறிவான மங்கை யருளது சேரிற்
பிறியா வறிவறி வாருள்ளம் பேணு[2]
[3]நெறிவாய சித்த நினைந்திருந் தாளே. (9)

வேறு பாடம்: 1. மைம்புலன் (இ ஈ ஒ) III. 2. பேணி (ஆ) IV. 3. நெறியாய (ஆ எ) IV.

கருத்து: மாயா காரியமாகிய உடற்கருவிகளின் மூலம் அறிகின்ற அறிவானது விடயங்களை நுகரும் ஐம்புல அனுபவத்தின்போது, ஞானமே வடிவான அருட் சத்தியின் அருளைச் சார்ந்திருக்கு மானால், ஆனமாவுக்கு உயிராக உறையும் இறைவனை அறிவர். அங்ஙனம் அறிபவரின் மனம் பின்பற்றும் நெறியில், அவர்கள் சித்தம் தெளிவு (ஞானம்) பெறும். சத்தி அந்த ஞானத்தின் முதிர்ச்சியை நோக்கி அருள் புரியக் காத்திருக்கின்றாள்.

சுந்தரமூர்த்தியும் பரவையாரும் புணர்ந்து, "பன்னாளும் பயில் யோக பரம்பரையின் மேவினார்" என்ற சேக்கிழார் கருத்தையும் நினைக. (பெ.பு. பாடல் 327)

என்றும் இளைஞனாய் இருக்க

1123. இரவும் பகலும் இலாத இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை நாடி,
அரவம் செய்யாமல் அருளுடன் தூங்க,
பருவம் செய்யாததோர் பாலனும் ஆமே.

இரவும் பகலு மிலாத விடத்தே
குரவஞ்செய் கின்ற [1]குழலியை நாடி
அரவஞ்செய் யாம [2]லருளுடன் றூங்கப்
பருவஞ்செய் யாததோர் பாலனு மாமே. (10)

வேறு பாடம்: 1. குழவியை (எ) IV. 2. லவளுடன் (த)

கருத்து: இரவு, பகல் வேறுபாட்டை உணராத துரிய சமாதியில், குராமலர் மணம் கமழும் கூந்தலை உடைய அருட்சத்தியைச் சேர்ந்து, பரநாத வெளியிலே அவளது அருளோடு ஒன்றி, தன் செயலற்று (தற்சுதந்திரம் அற்று) இருந்தால், என்றும் இளையனாய் இருக்கலாம்.

சத்தி பரம் பொருளே

1124. பாலனும் ஆகும் பராசத்தி தன்னொடு,
மேல் அணுகா, விந்து நாதங்கள் விட்டிட,
மூலம்-அது ஆம் மனு முத்திக்கு நேர்படச்
சாலவுமாய் நின்ற தற்பரத்தாளே.

பாலனு மாகும் பராசத்தி தன்னொடு
மேலணு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம [1]தாமனு முத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே. (11)

வேறு பாடம்: 1. தாமெனு (எ) IV; தாமது (அ) I.

கருத்து: பாலன் ஆவதற்குத் துணைநிற்கும் பராசத்தியது அருளினால், இன்னும் மேல் நிலைக்குச் சென்று, விந்து தத்துவமும், நாததத்துவமும் கடந்து, ஆதிமூலப் பொருளாகிய சிவமாகவே நிலைபெற்று நிற்கின்ற முத்திக்கு யோகி ஆயத்தம் ஆகும் பொழுது, அவனது காட்சியில் எல்லாமாகி - எல்லாப் பொருளும் சத்தி -

சிவமாய் - நிற்கின்ற தலைவி அவள். அங்ஙனம், எல்லாம் சத்தி சிவமாக இருப்பினும், அவள் தனிப்பரம் பொருளே. அவளே சிவன்.

அணுகா - செய்யா என்னும் வாய்பாட்டுவினையெச்சம். மூலம் - படைப்பிற்கு நிமித்த காரணம். 'மன்னும்' என்பது இடைக்குறைந்து, 'மனு' என நின்றது. சத்தி சிவத்தின் வேறன்று.

ஆற்றல் எல்லாம் அன்னையே

1125. நின்ற பராசத்தி நீள்பரன் தன்னொடும்
நின்று அறி ஞானமும் இச்சையுமாய் நிற்கும்,
நன்று அறியும் கிரியாசத்தி நண்ணவே
மன்றன் அவற்றுள் மருவிடும் தானே.

நின்ற பராசத்தி [1]நீள்பரன் றன்னொடு
நின்றறி ஞானமு மிச்சையு மாய்நிற்கு
நன்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே
மன்ற னவற்றுண் மருவிடுந் தானே. (12)

வேறு பாடம்: 1. நிகழ்பரன் (அ) II.

கருத்து: "நீள்பரன் தன்னொடு (யோகியின் ஆன்மவுணர்வில்) நின்ற பராசத்தி" என முதலிரண்டு அடிகளைக் கொண்டுகூட்டுக. சென்ற பாடலில் சொல்லப்பட்டவாறு, யோகியின் உணர்வில் காலம் கடந்தவனாகிய சிவபிரானோடு நிற்கும் பராசத்தி, அந்த யோகிக்கு எல்லாம் அறிவிக்கும் ஞானசத்தியாகவும், விருப்பத்தைக் கொடுக்கும் இச்சாசத்தியாகவும் விளங்குவாள். முன்பு யோகிக்கு உலகியலில் துணை செய்த கிரியாசத்தி, இப்போது நன்மையைச் செய்ய முனைவாள். சபேசனாகிய சிவன் இச்சத்திகளுடன் இயைந்து நிற்பான்.

அம்மையப்பன்

1126. மரு ஒத்த மங்கையும் தானும் உடனே
உரு ஒத்து நின்றமை ஒன்றும் உணரார்,
கரு ஒத்துநின்று கலக்கின்ற போது,
திரு ஒத்த சிந்தை வைத்து எந்தை நின்றானே.

மருவொத்த மங்கையுந் தானு முடனே
யுருவொத்து நின்றமை யொன்று முணரார்[1]
கருவொத்து நின்று [2]கலக்கின்ற போது
திருவொத்த சிந்தைவைத் தெந்தைநின் றானே. (13)

வேறு பாடம்: 1. முணராக் (அ எ) I. 2. கலக்கின (சைவ)

கருத்து: மலரும் மணமும் போன்ற சிவமும் சத்தியும் ஆன்மாவின் உணர்விலும் அவ்வாறே விளங்குவதை (இத்தகைய அனுபவம் நிகழ்வதை) உலகவர் அறியார். (அதனால், சத்திவேறு, சிவம் வேறு என்பர்) உலகப்படைப்பின்போது, எவ்வாறு சத்தியுடன் எந்தையாகிய சிவம் இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று நிலையிலும் நின்று, படைப்பினை நிகழ்த்துகின்றானோ, அவ்வாறே ஆன்மாவின் சித்தத்திலும் நின்று, பேரின்பத்தை விளைக்கின்றான்.

அருளனுபவம்

1127. சிந்தையின் உள்ளே திரியும் சிவசத்தி
விந்துவும் நாதமும் ஆயே விரிந்தனள்,
சந்திர பூமி, சடாதரி, சாத்தவி
அந்தமொடு ஆதியதுஆ வணத்தாளே.

சிந்தையி னுள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவு நாதமு மாயே விரிந்தனள்
[1]சந்திர பூமி சடாதரி சாத்தவி
யந்தமொ டாதிய [2]தாவணத் தாளே. (14)

வேறு பாடம்: 1. சந்திரப் பூவி (இ) IV. 2. தாம்வண்ணத் (எ) IV; தாம் வன்னத்தாளே (த)

கருத்து: ஆன்மாவின் சிந்தனையைத் திருத்தியாளும் சிவசத்தி, அந்த ஆன்மா முன்பு கடந்து வந்த விந்துவும், நாதமுமாக அவன் உடைய அனுபவத்தில் விரிந்து நிற்பாள். அவனது நெற்றியில் உள்ள சந்திரமண்டலத்தில் விளங்குவாள். ஆறு ஆதாரங்களிலும் நிற்பாள். அவனது சாத்துவிக குணமாக நிற்பாள். பின்பு அவனுக்கு அருள் அனுபவத்தைத் தரவிருக்கும் சிவசத்தியே இப்போது உலகியல் அனுபவத்தையும் அருள் அனுபவமாக்கித் தருவாள். அவள் அந்தம் முதல் ஆதிவரை விளங்கும் அருள் வண்ணம் உடையவள்.

ஆதியதா - ஆதியது ஆக. வணம் - இடைக்குறை.

மறைந்திருந்தவள் வெளிப்படுவாள்

1128. ஆறி இருந்த அமுத பயோதரி
மாறி இருந்த வழி அறிவார் இல்லை,
தேறி, இருந்து, நல்-தீபத்து ஒளியுடன்
ஊறி இருந்தனள் உள் உடையார்க்கே.

ஆறி யிருந்த வமுத பயோதரி
மாறி யிருந்த வழியறி வாரில்லை
தேறி யிருந்துநற் றீபத் தொளியுட
னூறி யிருந்தன ளுள்ளுடை யார்க்கே. (15)

கருத்து: உலகவர்க்கு வேறு வேறு சத்திகளாகவும், திரோதான சத்தியாகவும், யோகிக்குக் குண்டலி சத்தியாகவும், தனது நேரான செயலற்று இருந்த அருட்சத்தி, பிறகு யோகியின் அனுபவத்தில் தனது இயல்பு நிலையில் வெளிப்படும் வழியை உலகர் அறியார். அவளே கதி என்று தெளிந்து, தியானித்து, தமது ஆன்ம உணர்வில் அவள் எழுந்தருளப் பெற்றவர்களுக்கு, அவள் புருவ மத்தியில் சோதியாக விளங்குகிறாள்.

அமுத பயோதரி - அருட்சத்தியைக் குறிப்பால் உணர்த்தியது.

ஊறியிருத்தல் - உயிர் உணர்வில் திளைத்தல். உள் - உயிருணர்வினுள். உடையார்க்கு - அவளை உடையவர்க்கு.

யோக சாதனையின் உச்சம்

1129. உடையவன் அங்கி, உருத்திர சோதி
விடையவன் ஏறி விளங்கி யிருக்கும்,
கடையவர் போயிடும், கண்டவர் நெஞ்சத்
தலை; அது ஆகிய சாதகர் தாமே.

உடையவ [1]னங்கி யுருத்திர சோதி
விடையவ [2]னேறி விளங்கி யிருக்குங்
கடையவர் போயிடுங் கண்டவர் நெஞ்சத்
[3]தலையது வாகிய சாதகர் தாமே. (16)

வேறு பாடம்: 1. ளங்கி (அ ஓ) IV. 2. ளேறி (அ) IV. 3. தடையது (எ) IV.

கருத்து: மகா சங்கார உருத்திரனாக உள்ள சிவசோதி, மாந்தரின் உடலில், அக்கினி மண்டலத்திற்கு உரிய அதிதேவதையாகவும் உள்ளான். அவன் மூலக்கனலுடன் மேல் நோக்கி ஏறி, இடப வாகனனாக (அம்மையுடன் கலந்துநின்று அருள் புரிபவனாக) விளங்கித்தோன்றும் இடம், யோகியின் உச்சந்தலைக்கு மேல் 12 அங்குல வெளியாகிய துவாதசாந்தத் தானம். யோகி நெஞ்சில் உணர்வது போலவே இங்கும் உயிருணர்வால் உணர்வான். அவன், தன் யோக சாதனையின் முடிநிலையாக, இவ்விடத்திற்கு உயிருணர்வைச் செலுத்துவன். செலுத்தி, இறைக்காட்சி காண்பான்.

அங்கி - அக்கினி மண்டலம். "அவர் கடை போயிடும்" என மாறிக் கூட்டுக. அவர் - யோகியர். கடை - முடிந்த நிலை. நெஞ்சத் தலை - நெஞ்சம் போன்று உணர்தற்கு இடமாகிய உச்சந்தலைச் சகஸ்ராரம். சாதகர் - யோகியர்.

வினைமுடிபு: "அங்கி உடையவன் ஆகிய சோதி, விடையவனாகச் (சந்திர மண்டலத்தில்) ஏறி விளங்கியிருக்கும், அவர் போயிடும் நெஞ்சத்தலை. கண்டவர், அது ஆகிய சாதகர் தாமே".

யோக உச்சத்தில், அம்மையை ஐக்கியப்படுத்திக் கொண்ட சொரூப சிவத்தைக் காண்பர்.

எங்கும் உள்ளவள்

1130. தாம்மேல் உறைவிடம் ஆறு இதழ் ஆனது;
பார்மேல் இதழ் பதினெட்டு இருநூறு உள,
பூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனள்
பார்மேல் உறைகின்ற பைங்கொடி யாளே.

தாமே லுறைவிட மாறித ழானது
பார்மே லிதழ்பதி னெட்டிரு நூறுள
பூமே லுறைகின்ற [1]புண்ணியம் வந்தனள்
பார்மே லுறைகின்ற [2]பைங்கொடி யாளே[3]. (17)

வேறு பாடம்: 1. புண்ணியை (த) 2. பைந்தொடி (தி) (த) (வ) 3. தானே (ஆ) IV.

கருத்து: சத்தியும் சிவமும் தமக்கென உரிய உறைவிடமாகக் கொண்டவை ஆறு புவனங்கள். அவையன்றி 228 புவனங்களிலும் உறைகின்றனர். புவனங்களைக் கடந்தும் உறைகின்ற பராசத்தி,

யோகியின் உச்சந்தலைச் சகஸ்ராரத்தில் உறைகின்றாள். அவனது சிவபுண்ணியப் பயனாகவும் அவனுக்குத் தரிசனம் அருள்கிறாள்.

சத்திமயம்

1131. பைங்கொடியாளும் பரமன் இருந்த இடம்
திங்கொடியாகத் திகழ்தரு சோதியாம்,
விண்கொடியாக விளங்கி வருதலால்
பெண்கொடியாக நடந்தது உலகே.

[1]பைங்கொடி யாளும் பரம னிருந்திடந்[2]
[3]திங்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாக விளங்கி வருதலாற்
பெண்கொடி யாக நடந்த துலகே[4]. (18)

வேறு பாடம்: 1. பைந்தொடி (தி) (த) (வ) 2. னிருந்திடத் (விசு) (தி) (த) (வ) (சைவ) 3. திண்கொடி (ஆ இ எ) III. 4. துலகமே (ஒ) II.

கருத்து: பராசத்தி பரமனது சொரூப நிலையில், அவனுடன் பிரிப்பின்றிக் கொம்பில் சுற்றிய கொடிபோல் இருப்பாள். உலகப் படைப்பின் போது, சுத்தமாயா தத்துவத்தில், சத்தி - சிவம், நாதம்-விந்து, சதாசிவன் - மனோன்மணி, மகேசுவரன் - மகேசுவரி, உருத்திரன் - உமை, வி ணு - இலக்குமி, பிரமன் - சரஸ்வதி என்று கடவுளரை வரிசைப்பட அந்தச் சத்தியே தோற்றுவித்தலால், உலகம் சத்திமயம்.

"அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கையெல்லாம்," என்பர் அருணந்தி சிவனார். (சிவ. சித். சுப. 89)

திண்கொடி என்பது திங்கொடி என மருவியது.

பராசத்தியே குண்டலி

1132. நடந்தது அம்மலர் நாலுடன் அஞ்சாய்,
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்றாய்,
படர்ந்தது தன்வழி பங்கயத் துள்ளே,
தொடர்ந்தது உள்வழி சோதி அடுத்தே.

நடந்தது வம்மலர் நாலுட னஞ்சா
யிருந்தனர் கன்னிக ளெட்டுட னொன்றாய்ப்
படர்ந்தது [1]தன்வழி பங்கயத் துள்ளே
தொடர்ந்தது [2]வுள்வழி சோதி யடுத்தே. (19)

வேறு பாடம்: 1. தன்வழிப் (எ) IV. 2. வுள்வழிச் (விசு) (த)

கருத்து: சத்தி என்னும் கொடியில் தோன்றிய மலராகிய உலகம் 9 இதழ்த் தாமரையாகும். அதில் நவசத்திகள் வீற்றிருக்கின்றனர். உடலில் உள்ள குண்டலி ஆகிய சத்தியும் பராசத்தியின் பேதமே. அக்குண்டலி சத்தி, சுழுமுனை நாடி வழியாக மூலக்கனலை மேன்முகமாக ஏற்றி, சகஸ்ராரத் தாமரையை அடையச் செய்து, அந்தக் கனலின் அதிதேவதையாகிய சிவனை, தான் பராசத்தி யாகிக் கூடி நின்று, சோதியாக விளங்குவாள்.

மூலாதாரத்தில் குண்டலியாக நின்ற பராசத்தியே, சகஸ்ராரத்தில், தனது இயல்பு நிலையை மேற்கொள்கிறாா்.

1133. அடுக்குந் தாமரை யாதி யிருப்பிட
மெடுக்குந் தாமரை யில்லகத் துள்ளது
மடுக்குந் தாமரை மத்தகத் தேசெல
முளைக்குந் தாமரை முச்சது ரத்தே. (அ, ஆ, ட)

1134. முச்சது ரத்தி லெழுந்த முளைச்சுட
ரெச்சது ரத்து மிடம்பெற வோடிடக்
கைச்சது ரத்துக் கடந்துள் ளொளிபெற
வெச்சது ரத்து மிருந்தன டானே. (ஏ)

அன்னை தோன்றினால் தான் அமுதம்

1135. இருந்தனள் தன்முகம் ஆறொடு நாலாய்,
பரந்தனள் வாயுத் திசை திசை தோறும்,
குவிந்தன முத்தின் முக ஒளி நோக்கி
நடந்தது தேறல்; அதோமுகம் அம்பே.

இருந்தன டன்முக மாறொடு நாலாய்ப்
[1]பரந்தனள் [2]வாயுத் திசைதிசை தோறுங்
[3]குவிந்தன முத்தின் முகவொளி நோக்கி[4]
நடந்தது தேற லதோமுக மம்பே. (20)

வேறுபாடம்: 1. பரந்தன (இ ஈ எ) II. 2. வாயு (எ) IV. 3. குவிந்தனள் (ஈ) IV. 4. நோக்கின் (தி)

கருத்து: பராசத்தி பத்துத் திருமுகம் கொண்டு திகழ்கின்றாள். காற்றுச் செல்லும் திசை எங்கும் வியாபித்திருக்கின்றாள். குவியலான முத்துக்களைப் போன்ற அவளது முகத்தின் ஒளியை, யோகி தன் சகஸ்ராரத்தில் கண்டபின்னர், அங்கு அமுதம் தோன்றி, அவனது உடல் எங்கும் பரவியது. மூலாதாரத்தில் கனலாக மாறி மேலே ஏறாதிருந்தால், அவனது சுக்கிலம் கீழ்நோக்கிச் சென்று வெறும் நீராய் வீணாகியிருக்கும்.

அப்பு மெலித்தல் விகாரம் பெற்றது; நீர்.

அப்பனைக் காட்டும் அன்னை

1136. அம்பு அன்ன கண்ணி, அரிவை, மனோன்மணி,
கொம்பு அன்ன நுண் இடைக் கோதை, குலாவிய
செம்பொன் செய் யாக்கை செறிகமழ், நாள்தொறும்
நம்பனை நோக்கி நவிலுகின்றாளே.

அம்பன்ன கண்ணி யரிவை மனோன்மணி
கொம்பன்ன நுண்ணிடைக் கோதை குலாவிய
செம்பொன்செ யாக்கை செறிகமழ் நாடொறு
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே. (21)

கருத்து: அம்பு போன்ற கண்ணை உடையவள். மனோன்மணி. கொம்பு போன்ற இடையுடையாள். மணம் வீசுவதும், பொன்னால் செய்தது போன்றதும், எம்பிரானொடும் புணர்வதும் ஆகிய திருமேனியாள். ஒவ்வொரு நாளும் அன்பர்க்குப் பதியைச் சுட்டிக் காட்டுகின்றாள்.

விசுவ ரூபம்

1137. நவிலும் பெருந்தெய்வம் நான்மறை, சத்தி,
துகில்உழை ஆடை, நிலம் பொதி பாதம்,
அகிலமும் அண்ட முழுதும் செம்மாந்து
புகலும் முச்சோதி புனைய நிற்பாளே.

நவிலும் பெருந்தெய்வ [1]நான்மறை சத்தி
[2]துகிலுழை யாடை நிலம்பொதி பாத
மகிலமு மண்ட முழுதுஞ்செம் மாந்து
[3]புகலுமுச் சோதி புனையநிற் பாளே. (22)

வேறு பாடம்: 1. நான்மறைச் (இ எ) IV. 2. துகிலுடை (அ) IV. 3. பயிலுமுற் (ஒ) II முயலுமுச் (ஆ) II.

கருத்து: சத்தி வேதம் கூறும் பெருந்தெய்வம். திசைகளே அவளுக்கு ஆடை. திருவடி நிலத்தையும் கடந்து கீழ்ச்செல்வது. திருமுடி அண்டமுற நிமிர்ந்து கடந்து, மூன்று கதிர்களையும் (சோம, சூரிய, அக்கினி). சூடி விளங்குவது.

புவனேசுவரி

1138. புனைய வல்லாள் புவனத் திரயங்கள்,
மனைய வல்லாள் அண்ட கோடிகள் உள்ளே,
மனைய வல்லாள் மண்டலத்து ஒளி தன்னை,
புனைய வல்லாளையும் போற்றி என்பேனே.

புனையவல் லாள்புவ [1]னத்திர யங்கண்
மனையவல் லாளண்ட கோடிக ளுள்ளே
[2]மனையவல் லாண்மண் [3]டலத்தொளி தன்னைப்
புனையவல் [4]லாளையும் போற்றியென் பேனே. (23)

வேறு பாடம்: 1. னத்திறை யெங்கள் (எ) IV. 2. புனையவல் (எ) IV. 3. டலத்தொழில் (இ) IV. 4. லாளையே (த)

கருத்து: திரிபுவனங்கள் எனப்படும் மூவகைப் புவனங்களையும், அவற்றின் உள்ளே கோடிக்கணக்கான அண்டங்களையும் படைத்தவள். இப்புவனங்களில் வாழ்பவர்க்குத் தெய்வ ஒளியைச் சேர்ப்பவள். அவ்வவ்வுயிருக்கு அருட் பேற்றையும், பக்குவத்திற்கு ஏற்ப வழங்குபவள்.

இறுதியில் உள்ள புனைதல் அருள்வாழ்வை ஆக்குதலைக் குறித்தது. உயிரின் பக்குவத்துக்கு ஏற்ப அவள் நல்கும் அருள் வாழ்வு அமைதலின் "புனைய வல்லாள்" என்றார்.

மரணத்தை மாற்றினாள்

1139. போற்றி என்றாள் புவனாபதி அம்மை, என்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை,
சீற்றம் கடிந்த திருநுதல் சேயிழை
கூற்றம் துரக்கின்ற கொள் பைந்தொடியே.

போற்றியென் [1]றாள்புவ னாபதி யம்மையென்
னாற்றலு [2]ணிற்கு மருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றந் துரக்கின்ற [3]கொள்பைந் நொடியே. (24)

வேறு பாடம்: 1. பேன்புவ (விசு) 2. ணீக்கு (ஒ) IV. 3. கோள்பைந் (விசு) (தி) (த) (வ)

கருத்து: யானோ அவளைப் 'போற்றி' என்றேன்? அவள் அல்லவோ சொல்லச் செய்தாள்! அரிய தவத்தை என் சிறிய ஆற்றலினாலும் இயற்றவைத்து, அத்தவத்தின் பயனாய்த் தோன்றியருளிய சத்தி அவள். வேகசத்தி ஆதலைத் தவிர்த்து, நான் வரங்கள் கொள்வதற்கு ஏற்ற அருட்சத்தியாக நின்று, எனது மரணத்தைத் தவிர்த்தாள்.

வேக சத்தி, அசுரரை வதம் செய்த கோலம். வேகமூர்த்தி, யோக மூர்த்தி, போக மூர்த்தி எனத் தெய்வமூர்த்தம் மூன்று வகை.

வினைதீர்த்தாள்

1140. தொடி ஆர் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவு ஆர் திரிபுரையாம் மங்கை, சங்கை
செடி ஆர் வினை கெடச் சேர்வரை ஏன்று, ஏன்று
அடியார் வினைகெடுத்து ஆதியும் ஆமே.

[1]தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி[2]
வடிவார் திரிபுரை யாமங்கை சங்கை[3]
செடியார் வினைகெடச் சேர்வரை யேன்றேன்[4]
றடியார் வினைகெடுத் தாதியு மாமே. (25)

வேறு பாடம்: 1. தொடியாள் (அ ஆ) IV. 2. சுந்தர (த) 3. நங்கை (எ) IV கங்கைச் (விசு) (தி) (வ) 4. யென்றெேன் (சைவ) (சண்)

கருத்து: வளையொலிக்கும் கையாள். இன்பப்பேற்றைத் தரும் அழகி. யோகியின் உடம்பில் திரிபுரையாக எழுந்தருளும் மங்கை. துன்பம் நிறைந்த, எண்ணற்ற வினைகள் கெடுமாறு, தன்னைச் சாரும் அன்பரை ஏற்று, அவ்வடியார்களின் வினைகளை நீக்கி, முதல்வியாக விளங்குகின்றாள்.

சேர்வர் - சேர்பவர். துன்பம் வருத்துந்தோறும் "அடைக்கலம்" என்பவரை, மீண்டும் மீண்டும் தாங்குதலின், "ஏன்று, ஏன்று" என அடுக்கிக் கூறினார்.

குண்டலியைத் துரத்தினாள்

1141. மெல்லியல், பாவை, வியோமத்தின் மென்கொடி,
பல்லிசைப் பாவை, பயன்தரு பைங்கொடி,
புல்லிசைப் பாவையைப் போதத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம் புகுந்தாளே.

[1]மெல்லியல் பாவை வியோமத்தின் மென்கொடி[2]
பல்லிசைப் பாவை பயன்றரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் [3]போதத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே. (26)

வேறு பாடம்: 1. மெல்லிசைப் (இ ஈ எ ஓ) II. 2. பெண்கொடி (ஓ) IV. 3. போகந் (எ) IV; போகத் (விசு) (தி) (த) (வ) (சைவ)

கருத்து: மென்மையாள். பாவைபோல்வாள். பராகாயத்தில் திகழும் அருட்சத்தி. பலபுகழ் உடையாள். யோகப்பயன் தரும் நங்கை. சிறு புகழை உடைய குண்டலியை யோகியின் மனத்தை விட்டு நீங்கச் செய்து, உயிருணர்வில் நன்கு பொருந்துதலை உடைய அருட்சத்தி யாக அங்கு வீற்றிருப்பாள்.

குண்டலியும் அவளே. ஆயினும் உயிரின் பக்குவநிலையில், திரோதான சத்தி (குண்டலி) யாக நின்ற நிலை மாறி, அருட்சத்தியாக நின்று அருள்புரிவாள் என்க.

வல் இசை - பெரும்புகழ். "நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபேராள" என்பது திருமுருகாற்றுப்படை "பெரும்பெயர்க் கடவுளின் கண்டு" என்பதும் (சிவ. போ. சிறப்பாயிரம்) காண்க.

சத்தியே உயிர்நாடி

1142. தாவித்த அப்பொருள்தான் அவன்; எம் இறை;
பாவித்து உலகம் படைக்கின்ற காலத்து,
மேவிப் பராசத்தி மேலொடு கீழ் தொடர்ந்து
ஆவிக்கும், அப்பொருள்-தாம் அது தானே.

தாவித்த வப்பொரு டானவ னெம்மிறை
பாவித் துலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசத்தி மேலொடு கீழ்தொடர்ந்
[1]தாவிக்கு மப்பொரு [2]டாமது தானே. (27)

வேறு பாடம்: 1. தாலிக்கு (இ ஈ) IV. 2. தானது (இ) IV; ளானது (ஈ) III.

கருத்து: அப்பராசத்தி ஆன்மாவுக்குச் சுட்டிக்காட்டி நிலைநிறுத்திய பொருளே சிவம். அச்சிவம் உலகைப் படைக்க எண்ணி, அவ்வாறே படைக்கும் பொழுது, பராசத்தி எல்லா அண்டங்களிலும், பொருள் களில் உயிர்நாடியாகக் கலந்து நிற்பாள். அவ்வண்டங்களும் பொருள்களும் எல்லாம் ஊழி முடிவில் அவளிடத்து ஒடுங்கும்.

அறியார் கூற்று

1143. அது, இது என்பார் அவளை அறியார்,
கதி வர நின்றது ஓர் காரணம் காணார்
மது விரி பூங்குழல் மாமங்கை நங்கை
திதம்-அது உன்னார்கள் தேர்ந்து அறியாரே.

அதுவிது வென்பா [1]ரவளை யறியார்
கதிவர நின்றதோர் காரணங் காணார்
மதுவிரி பூங்குழன் மாமங்கை நங்கை
திதமது வுன்னார்க [2]டேர்ந்தறி யாரே. (28)

வேறு பாடம்: 1. ரவனை (எ) IV. 2. டேர்ந்தவர் தாமே (இ ஈ எ) III.

கருத்து: மக்கள் இறைநிலை பற்றிப் பலவாகச் சொல்லுவார். அனுபவம் இன்மையால் பராசத்தியை அறியார். முத்தி வாய்க்கு மாறு என்றும் முன் நிற்கும் தலைமைப் பொருளை (பதி) அறியார். அப்பதியினிடம் சத்தியாகிய மங்கை பிரிப்பின்றி நிற்கும் நிலையை (உறுதியை) எண்ணார். இன்னோர் ஆய்ந்துணராதோர் ஆவர்.

திதம் - ஸ்திதம் என்ற வடசொல் திரிபு; நிலை.

61. ஆதார வாதேயம்

ஆதாரத்திற்கு ஆதாரம்

1144. நாலிதழ் ஆறில் விரிந்தது தொண்ணூறு
தான் இதழ் ஆனவை நாற்பத்து நால் உள;
பால் இதழ் ஆனவள் பங்கயம் மூலமாய்த்
தான் இதழ் ஆகி, தரித்தனள் தானே.

நாலித [1]ழாறில் [2]விரிந்தது தொண்ணூறு
[3]தானித ழானவை நாற்பத்து நாலுள
பாலித [4]ழானவள் பங்கய மூலமாய்த்
தானித ழாகித் [5]தரித்தன டானே. (1)

வேறு பாடம் : 1. ளாறு (இ) IV. 2. அவிர்ந்தது (சைவ) (சங்) 3. நாலித (த)
4. ழானவன் (அ) IV ழானவப் (எ) I. 5. தரித்திருந்தாளே (எ) IV.

கருத்து: நான்கு இதழ்த்தாமரை ஆகிய மூலாதாரம், ஆறாம் ஆதாரம் ஆகிய ஆக்ஞை - இவற்றுக்கு இடையே சத்தி, 90 நரம்புகளாய் விரிந்துள்ளாள். இவ்விரண்டு ஆதாரங்கட்கும் இடையில் உள்ள நான்கு ஆதாரங்கட்கும் மொத்தம் 44 இதழ்கள். ஆக 44 + 4 + 2 = 50 இதழ்களாக நின்று உயிர்ச்சத்தியைத் தாங்குபவள் சத்தி. அவள் நிற்கும் இடம் இரண்டு இதழ்களை உடைய ஆக்ஞை உள்ள நெற்றி மண்டலம். அங்கு இருந்தவாறு அதையும் மற்ற ஆதாரங்களையும், தான் அவற்றுக்கு ஆதாரமாக இருந்து தாங்குகின்றாள்.

உயிர்ச் சத்திக்கு ஆதாரம் ஆறு ஆதாரங்கள். அவற்றுக்கு ஆதாரம் சத்தி என்க. ஆறு ஆதாரமும் சத்தியை நோக்க ஆதேயம். இங்குக் குறிப்பிட்ட 90 நரம்புகளும் ஆக்ஞையிலேயே உள்ளன என்பாரும் உண்டு.

ஒடுக்குபவளும் அவளே

1145. தரித்திருந்தாள் அவள் தன் ஒளி நோக்கி,
விரித்திருந்தாள் அவள் வேதப் பொருளை;
குறித்திருந்தாள் அவள் கூறிய அஞ்சும்
மறித்திருந்தாள் அவள் மாது நல்லாளே.

தரித்திருந் தாளவ டன்னொளி நோக்கி
விரித்திருந் தாளவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாளவள் கூறிய வஞ்சு[1]
[2]மறித்திருந் தாளவள் மாதுநல் லாளே. (2)

வேறு பாடம்: 1. வைந்து (எ) III. 2. மரித்திருந் (அ இ ஈ) I.

கருத்து: உயிர் சத்தியின் அருளொளியை அடையும் பொருட்டு, உடலின் ஆதாரங்கள் ஆறினையும் அவள் தாங்கியுள்ளாள். ஞானத்தை உயிரின் அறிவினுள் நின்று ஊட்டுகின்றாள். தான் ஆக்ஞையில் நின்று அதை இயக்கி, அதே சமயம் தான் அருட் சத்தியாகத் தொழிற்படும்பொழுது, கீழே உள்ள 5 ஆதாரங் களையும் தொழிற்படாமல் ஒடுக்குவாள்.

அருட் சத்தியாதலின் 'மாது நல்லாள்' என்றார்.

ஐவரைப் படைத்தாள்

1146. மாதுநல் லாளு மணாள னிருந்திடப்[1]
பாதிநல் லாளும் [2]பகவரு மானது
சோதிநல் லாளைத் துணைப்பெய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே. (3)

வேறு பாடம்: 1. னிருந்திடம் (ஈ ஒ) IV. 2. பகவனு (தி) (வ) (த) (சைவ)

கருத்து: பரசிவன் படைப்புக் காலத்தில், இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று நிலையில் தன்னிடம் ஆதேயமாக இருக்க, சத்தி ஐவர் இறைவரையும் அவர்தம் துணைவியராம் சத்திகளையும் படைத்தாள். ஆற்றலையுடைய அப் பராசத்தியை, அருட்சத்தி நிலையில் துணையாகக் கொள்வீரானால், பிறவிப்பிணி நீங்கும். பரமாகாயத்தில் அருள் வியாயகத்தில் அடங்குவீர்.

ஆனது - ஆயினமை என்ற பொருள் தரும் தொழிற் பெயர். பகவர் - ஐந்து கடவுளர்; சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், பிரமன், விட்டுணு என்போர்.

வெள்ளடை - பரமாகாயம்.

1147. வெள்ளடை யானிரு மாமிகு மாமலர்க்
கள்ளடை யாரக் கமழ்குழ லார்மன
மள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகம் பிறவிபெண் ணாமே. (ஔ, ட)

பெண்ணிடம் ஆண்

1148. பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை
பெண்ணிடை [1]யாணும் பிறந்து கிடந்தது
[2]பெண்ணிடை யானெனன் பிறப்பறிந் தீர்க்கின்ற
[3]பெண்ணுடை [4]யாணிடைப் பேச்சற்ற வாறே (4)

வேறு பாடம்: 1. யானும் (அ ஆ எ) I. 2. பெண்ணுடை (ஒ) IV. 3. பெண்ணிடை (ஆ) I. 4. யாணுடைப் (ஆ இ எ ஒ) I.

கருத்து: படைப்பில் பெண் ஆதாரமாக இல்லாத உருவமே இல்லை. ஆணிலும் வடிவமாக இருப்பது பெண்ணே. ஆதலால் உலகில் நடை பெறுவது பெண், மற்றொரு பெண்ணைப் புணரும் அறியாமைதான். பிறப்பின் உண்மையே ‘பெண்ணிடம் ஆண்’ என்பது தான். இதனை அறியின், நம்மை இறைவன் தன்பால் ஈர்ப்பான். அந்தப் பரசிவம் பெண்ணை உடன் கொண்டது. அதனுடன் சேர்ந்தால் பேச்சற்ற மோனம் வாய்க்கும். அதன்பின் பிறப்பில்லை.

சத்தியும் சிவனும்

1149. பேச்சு அற்ற நன் பொருள், காணும் பெருந்தகை,
மாச்சு அற்ற சோதி, மனோன்மணி மங்கையாம்
காச்சு அற்ற சோதிக் கடவுளுடன் புணர்ந்து,
ஆ செற்று என்னுள் புகுந்து ஆலிக்கும் தானே.

பேச்சற்ற [1]நன்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மனோன்மணி மங்கையாங்[2]
காச்சற்ற சோதிக் கடவு ளுடன்புணர்ந்
[3]தாச்செற்றெ னுட்புகுந் தாலிக்குந் தானே. (5)

வேறு பாடம்: 1. நன்பொருள் (ஈ) IV நற்பொருள் (விசு) (தி) (வ) (த) (சைவ) 2. மங்கையர் (அ) IV. 3. தாச்சென்ற (எ) I தாச்சற்றெ (வ) (த)

கருத்து: சொல்லால் வரையறுத்துக் கூறவியலாத பரம்பொருளும், அன்பர் காணும் நிலையில் கருணையுடன் தோன்றுபவனும், குற்ற மற்ற சோதி வடிவுடையவனுமாகிய சிவபெருமான், மனோன்மணி என்ற சத்தியாகிய சோதியுடன் சேர்ந்து, எனது ஆன்ம போதத் தைக் கெடுத்து, என் உணர்வினுள் கலந்து மகிழ்வூட்டுகிறான்.

நற்பொருள் எனற் பாலது நன்பொருள் என மெலித்தல் விகாரம் பெற்றது. மாசு, காசு என்பன விரித்தல் விகாரம் பெற்றன. சதா சிவமூர்த்தி அருவுருவமாதலின் சோதி என்றார். இங்கு மனோன்மணி ஆதாரம், சதாசிவன் ஆதேயம்.

வினை முடிவு: பெருந்தகை கடவுளுடன் புணர்ந்து, ஆலிக்கும் என முடிவு செய்க.

1150. ஆலிக்குங் கன்னி யரிவை மனோன்மணி
பாலித் துலகிற் பரந்துபெண் ணாணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
யாலித் தொருவ னுகந்துநின் றானே. (அ)

1151. உகந்துநின் றானம்பி யொண்ணுதற் கண்ணோ
டுகந்துநின் றானம் முழைபுக நோக்கி
யுகந்துநின் றானிவ் வுலகங்க ளெல்லா
முகந்துநின் றானவ டன்றோ டொகுத்தே. (அ)

1152. குத்து முலைச்சி குழைந்த மருங்கின
டுத்தி விரிந்த சுணங்கின டுய்மொழி
பொத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்
தொத்த கருத்தது சொல்லகில் லேனே. (அ, ஔ)

1153. சொல்லவொண் ணாத வழற்பொதி மண்டலஞ்
செல்லவொண் ணாது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணாத வினைத்தனி நாயகி
மல்லவொண் ணாத மனோன்மணி தானே. (அ)

குறிப்பு : "தானே இருநிலம்" என்ற பாடல் 'கடவுள் வாழ்த்து' இயலில் வந்தது.

1154. கண்ணுடை யாளைக் கடிந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனிதரிற் கூட்டொணாப்
பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களை மேலுறைக் கண்டே (உ, ஔ)

1155. கண்டெண் டிசையுங் கலந்து வருங்கன்னி
பண்டெண் டிசையும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டெண் டிசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டெண் டிசையுந் தொழநின்ற கன்னியே. (அ)

1156. கன்னி யொளியென நின்றவிச் சந்திரன்
மன்னி யிருக்கின்ற மாளிகை செந்நிறம்
சென்னி யிருப்பிடஞ் சேர்பதி னாறுடன்
பன்னி யிருப்பப் பராசத்தி யாமே. (உ, ஔ)

1157. பராசத்தி யென்றென்று பல்வகை யாலுந்
தராசத்தி யென்ற தலைப்பிர மாணி
பராசத்தி யாமன மாகத்த னாகுங்
குராசத்தி கோலம் பலவுணர்ந் தேனே. (அ, ஔ)

போகமும் யோகமும் தருபவள்

1158. உணர்ந்த உலகு ஏழையும் யோகினி சத்தி
உணர்ந்து, உயிராய் நிற்கும், முன் அதன் ஈசன்
புணர்ந்த ஒரு காலத்துப் போகம் -அது ஆகி,
இணைந்து, பரம் என்று இசைந்த இது தானே.

உணர்ந்துல கேழையும் யோகினி சத்தி
யுணர்ந்துயி ராய்நிற்கு [1]முன்னத னீசன்
புணர்ந்தொரு காலத்துப் [2]போகம தாகி[3]
யிணைந்து பரமென் [4]றிசைந்திது தானே. (6)

வேறு பாடம்: 1. முள்ளத (உ) IV. 2. போதம (இ) IV. 3. தாதி (த)
4. றிசைந்தது (ஆ) IV.

கருத்து: படைப்பிற்காக என்னும் போது, சிவபெருமான் பராசத்தி யைச் சேர்வான். அப்பொழுது அவள் போக சத்தி ஆகி, பின்பு உலகம் ஒடுங்கும் காலத்தில் அவனுக்குள் ஐக்கியப்பட்டுப் பரமாக

விளங்குவாள். இவள் யோகினிசத்தி எனவும் கூறப்பட்டு, யோகியர்க்கு அருள் புரிவாள். அவர்தம் உணர்வுக்கு உணர்வாகி நிற்பாள். இவள் சிவபெருமானால் எண்ணிப் படைக்கப்பட்ட ஏழு உலகங்களின் உயிர்களையும் தானும் எண்ணி, அவற்றின் உயிராய் விளங்குகிறாள்.

பராசத்தி உயிர்களுக்குப் போக சத்தியாகவும், யோக சத்தியாகவும் விளங்குதல் இப்பாடலிற் கூறப்பட்டது. அடுத்த பாடலும் இக்கருத்துப் பற்றியதே.

வினை முடிவு: "முன் அதன் ஈசன் புணர்ந்த ஒரு காலத்துப் போகமது ஆகி, (பின்) இணைந்து பரம் என்று இசைந்த இதுதானே யோகினி சத்தி. (இது) உணர்ந்த உலகு ஏழையும் (தான்) உணர்ந்து உயிராய் நிற்கும்" என முடிவு செய்க.

யோகம்

1159. இது அப்பெருந்தகை எம்பெருமானும்
பொது அக்கலவியும் போகமும் ஆகி,
மதுவக் குழலி மனோன்மணி மங்கை
அது அக் கலவியுள் ஆயுழி யோகமே.

இதுவப் பெருந்தகை யெம்பெரு மானும்
பொதுவக் [1]கலவியும் [2]போகமு மாகி
மதுவக் குழலி மனோன்மணி மங்கை
யதுவக் [3]கலவியு ளாயுழி யோகமே. (7)

வேறு பாடம்: 1. கல்வியும் (சைவ) (துடி) 2. போதமு (அ) IV. 3. கல்வியு (சைவ) (துடி).

கருத்து: 'இது' எனப் ப்ராசத்தியைக் குறித்தார். பராசத்தியும் முதல்வனாகிய சிவபெருமானும், அனைத்துயிர்கட்கும் போகத்தை விளைவிப்பதற்காகத் தம்முள் கலந்து நிற்பர். பக்குவம் உற்ற உயிர்கட்கு அருள்புரியும் பொருட்டுப் பராசத்தியே தேன்மணக்கும் கூந்தலை உடைய மனோன்மணி ஆகி, சதாசிவமூர்த்தியுடன் கலந்து நிற்கும்பொழுது, உயிர்கட்கு அவ்வம்மையப்பனுடன் கலந்து நிற்கும் பேரின்பம் வாய்க்கிறது. அதை யோகம் எனலாம்.

யோகம் - ஒன்றுபடுதல். மது, குழல் - மதுவக்குழல்: 'அம்' சாரியை திரிந்தது. "மங்கை கலவியுள் ஆயுழி, அது யோகமே" எனக் கூட்டுக. ஆயுழி - ஆகும் பொழுது.

ஒளி மண்டலம்

1160. யோகநற் சத்தி யொளிபீடந் தானாகும்
யோகநற் சத்தி யொளிமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி யுதர நடுவாகும்
யோகநற் சத்திதா ளுத்தரந் தேரே. (8)

கருத்து: யோகசத்தி வீற்றிருக்கும் பீடம் ஒளி மண்டலம். யோகியரின் நெற்றி மண்டலத்தில் அக்கினி சூரியன், சந்திரன் என்ற மூன்று கலைகளும் கூடும்பொழுது இந்த ஒளி மண்டலம் காட்சிப் படும். அச்சத்தியின் முகம் உள்ள திசை தெற்கு. திருவடி உள்ள திசை வடக்கு. அவளது திருவயிற்றில் அனைத்து உலகங்களும் அடங்கி உள்ளன. அவள் விசுவ ரூபி.

பராசத்தி தோன்றுவாள்

1161. தேர்ந்து எழும் மேலாம் சிவன் அங்கியோடு உற,
ஆய்ந்து எழும் மாயையும் அந்தம்-அது ஆய்நிற்கும்,
ஓர்ந்து எழும் விந்துவும் நாதமும் ஓங்கிட,
கூர்ந்து எழுகின்றனள் கோல்வளை தானே.

தேர்ந்தெழு மேலாஞ் சிவனங்கி யோடுற
வார்ந்தெழு மாயையு மந்தம தாய்நிற்கு
மோர்ந்தெழு விந்துவு நாதமு மோங்கிடக்
கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானே. (9)

கருத்து: யோகியரால் ஆய்ந்து எழுப்பப்படும் மூலக்கனலுடன் சிவ பெருமான், சகஸ்ராரத்தை அடைய, நிறைந்து, கிளைத்து எழும் மாயை இறுதியை அடையும். விந்துவும் (ஒளி) நாதமும் (ஒலி) ஓங்கப் பராசத்தி சகஸ்ராரத்தில் ஒளி நிறைந்து எழுவாள்.

கட்டுவதும் விடுவிப்பதும்

1162. தான் ஆனவாறு எட்டு-அது-ஆம் பரைக்குள்; மிசை
தான் ஆனவாறும் ஈர்-ஏழும் சமைகலை;
தான் ஆன விந்து சகமே, பரம் எனும்
தான் ஆம்; பரவாதனை எனத்தக்காரே.

தானான [1]வாறெட்ட [2]தாம்பரைக் குண்மிசை[3]
தானான வாறுமீ ரேழுஞ் சமைகலை[4]
தானான [5]விந்து சகமே பரமெனுந்
தானாம் பரவா தனையெனத் தக்காரே[6]. (10)

வேறு பாடம்: 1. வாறெட்டுந் (ஆ இ) IV. 2. தான்பரை (இ) IV தாமரை (ஈ) IV. 3. கன்னிகை (இ) IV. 4. சமகலை (இ ஒ) IV. 5. விந்துச் (ஒ) IV. 6. தக்கதே (ஆ இ எ) II.

கருத்து: யோகியின் உடம்பில் பக்குவம் உற்று அமையும் சந்திரகலை 16-இல், அகரமும் அதன் விரிவும் ஆகிய முதல் 9 கலைகளாக உள்ள சத்தியினுள் சிவன் உள்ளான். இவை ஒன்பதும் உடம்பில் இருந்து இயங்கும். பிற 7 கலைகளும் முறையே உடம்பிலும் தலைக்கு மேலே, ஆகாயவெளியிலும் இயங்கும். எனவே சத்தியின் புறத்தே சிவன் இந்த 7 கலைகளில் செயல்படுவான். சத்தியின் தத்துவ வடிவமாகிய விந்து (ஒளி) உலகமாகின்றது. சிவன் அவ்வுலகைக் கடந்து பரமாக உள்ளான். அவ்விருவரும் பரத்திலும் இணைந் துள்ளனர். உலகமாக உள்ளபோது அவர்கள் உயிர்களுக்குப் பந்தத்தை உண்டாக்கித் தடையைத் தோற்றுவித்தனர். எனவே அவர்களை 'வாதனை' எனலாம். உயிர்கட்குப் பக்குவம் வருவித்துப் பரத்தை அடைவிப்பவரும் சிவசத்திகளே. எனவே அவர்களைப் 'பரம்' எனலாம்.

விந்து என்பது சந்திர கலைகளில் எட்டாவது. சந்திரகலை 16 - இன் விளக்கத்திற்கு இந்நூல் 'சந்திரயோகம்' என்னும் இயல் காண்க. முதற்பகுதியின் பின்னிணைப்பிலும் காண்க. எட்டு என்னும் எண்ணின் வடிவம் 'அ' - என்பது. இது அகர எழுத்தும் ஆகும்.

கொண்டு கூட்டு: சமைகலை எட்டதாம் பரைக்குள் தான் ஆனவாறும், (பரை) மிசை. சமைகலை ஈரேழும் தான் ஆனவாறும், தான் ஆனவிந்து சகமே, பரம் எனும் தான் ஆம். (ஆதலின்) பர வாதனை எனத் தக்காரே.

குறிப்பு: இப்பாடலின் திரண்ட பொருளை நோக்க, இது சந்திர கலை 16 ஆர்ந்து எழும் மாயையும் அந்தம் - அது இலும் நின்று செயல்படும் (அருள்புரியும்) சிவனையும் சத்தியையும் பற்றியதென அறியலாம். இப்பொருளுக்கு, இப்பாடலின், 2ஆம் அடி, 2, 3 ஆம் சீர்கள் "வாறுமீரேழுஞ்" என இருப்பது பொருந்தும். ஆனால் அனைத்துச் சுவடிகளிலும் உள்ள பாடமே இங்குத் தரப்பட்டுள்ளது. கீழே, 'ஈரேழு' என்ற பாடவாய்ப்பை உளங்கொண்டு, கருத்து வரையப்பட்டுள்ளது.

இப்பாடலுக்கு உரையெழுதிய ச. தண்டபாணி தேசிகரும், அருணை வடிவேல் முதலியாரும் இது ஸ்ரீசக்கரம் பற்றிக் கூறுவதென்றனர்.

பராவித்தை

1163. தக்க பராவித்தை தான் இருபத்தேழில்
தக்கு எழும் ஓர் ருத்திரம் சொல்லச் சொல்லவே
மிக்கிடும் மென்சத்தி, வெண்ணிற முக்கண்ணி
தொக்க கையோடு தொன் முத்திரை யாளே.

தக்க பராவித்தை தானிரு பத்தேழிற்[1]
றக்கெழு மோருத்தி ரஞ்சொல்லச் சொல்லவே
மிக்கிடு [2]மென்சத்தி வெண்ணிற முக்கண்ணி
[3]தொக்ககை [4]யோடுதொன் [5]முத்திரை யாளே. (11)

வேறு பாடம்: 1. பானேழிற் (சைவ) (துடி) 2. மெண்சத்தி (இ எ) IV. 3. தொக்கதை (அ எ) I தொக்க கதை (இ ஓ) I தொக்கத்தை (ஓ) I யோடுதோண் (எ) IV. 4. யோடுடைத் (ஆ) I; யோடுசொன் (சைவ - 1) 5. முத்தி (ஆ) I.

கருத்து: சத்தியின் மூலமந்திரம் பீசமந்திரங்களின் எண்ணிக்கையால் பலவகைப்படும். அவற்றுள் 27 பீசங்களை உடைய மந்திரம் 'பராவித்தை' எனப்படும். அந்த மந்திரத்தைத் தியானம் செய்வதால், வெள்ளை நிறமும், மூன்று கண்ணும், பல கைகளும் உடைய மென்மையான (கருணைமிக்க) பராசத்தி, அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று கண்டங்களை உடையவளாய்க் காட்சியளிப்பாள்.

மூன்று கண்டங்களையும் அடுத்த பாடலில் கூறுவார். முத்திரை - மூன்று மடிப்பு, மூன்று பிரிவு. ருத்திரம் - மந்திரம் என்ற பொதுப் பொருள் தந்தது. சீருத்திர மந்திரமன்று.

பராபரை

1164. முத்திரை மூன்றில் முடிந்த மெய்ஞ் ஞானத்தள்
அத்துவமாய், அல்ல ஆய சகலத்தள்,
வைத்த பராபரன் ஆய பராபரை
சத்தியும் ஆனந்த சத்தியும் கொங்கே.

முத்திரை [1]மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்த
[2]ளத்துவ மாயல்ல வாய சகலத்தள்
வைத்த பராபர னாய பராபரை
சத்தியு மானந்த சத்தியுங் கொங்கே. (12)

வேறு பாடம்: 1. மூல (ஈ) IV. 2. டத்துவ (சைவ)

கருத்து: அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று கண்டங்களில் (பிரிவுகளில்) வைத்துத் தியானிக்கப்படும் மூன்று பகுதிகளை உடையதான ஸ்ரீபஞ்சதசாட்சரி என்ற மந்திரத்தால் எய்தப்படும் ஞானவடிவினாள்; அனைத்துப் பொருளிலும் அத்துவிதமாய்க் (ஒன்றாய் - ஏகமாய்) கலந்து நிற்பதோடு, வேறாயும் விளங்குபவள். தன்னைச் சத்தியாகக் கொண்ட பராபரனின் வேறாகாத பராபரை. அவளிடம் அருளாற்றலும் ஆனந்தமும் பிரிவின்றி உள்ளன.

கொங்கு - மணம். மலரில் மணம் போலக் கலந்து நிற்றலின், அந்தக் கலப்பைக் 'கொங்கு' (மணம்) என்ற உவமையாகுபெயரால் கூறினார். மூன்று கண்டம் - மூன்று பிரிவு. பஞ்ச தசாட்சரி மந்திரம் 3 கூறுகளை உடையது. முதற்கூறு 5 பீசங்களை உடையது: இச் சத்தியின் திருமுகமாகத் தியானிக்கப்படும். இரண்டாம் கூறு 6 பீசங்களை உடையது. சத்தியின் கழுத்து முதல் இடைவரை உள்ள பகுதியாகத் தியானிக்கப்படும். மூன்றாம்கூறு 4 பீசங்களை உடையது. சத்தியின் இடை முதல் திருவடி வரை உள்ள பகுதியாகத் தியானிக்கப்படும். இவை மூன்றும் முறையே ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தித் தானங்கள் என்றும் கூறப்படும்.

உலகமே அரண்மனை

1165. கொங்கு ஈன்ற கொம்பின் குரும்பை குலாம் கன்னி
பொங்கிய குங்குமத்து ஒளி பொருந்தினள்
அங்குச பாசம் எனும் அகிலம், கனி
தங்கும் அவள் மனை தான்; அறிவாயே.

கொங்கீன்ற கொம்பின் [1]குரும்பை குலாங்கன்னி
பொங்கிய குங்குமத் [2]தொளிபொ ருந்தின
ளங்குச பாச மெனுமகி லங்கனி[3]
தங்கு மவண்மனை தானறி வாயே. (13)

வேறு பாடம்: 1. குரும்பைக் (விசு) (வ) (தி) (சைவ) 2. தோளி (வ) (த) (சைவ) 3. லாங்கணி (அ இ ஈ) I லங்களி (த)

கருத்து: மணம் மிக்க கொம்பு போன்ற கன்னி. குரும்பை போலும் மார்பகம் உடையாள். குங்குமத்தின் ஒளியுடையாள். யோகியர்க்கு அங்குசம் போலவும், பிறர்க்குப் பாசம் விளைப்பதாகவும் உள்ள உலகம், சிவானுபவம் அமைந்த அவளது அரண்மனை.

கொண்டு கூட்டு: "கொம்பின் கன்னி, குரும்பை குலாம் கன்னி" எனக் கூட்டுக.

மூன்று உறவு

1166. வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் [1]பெரிதுடைப் பெண்பிள்ளை
யாயு மறிவுங் கடந்த வரனுக்குத்
தாயு மகளுநற் றாரமு மாமே. (14)

வேறு பாடம்: 1. பிறந்துடைப் (அ ஆ இ) II.

கருத்து: மனோன்மணி வாக்கும் சிந்தனையும் கடந்தவள். பேய்க் கணமும் தோழியர் கட்டமும் மிகவும் உடையாள். பாச ஞானத்தைக் கடந்து நிற்கும் சிவனுக்கு அவள் தாயும், மகளும், மனைவியும் ஆவாள்.

"சிவம் சத்தியை ஈன்றும், சத்திதான் சிவத்தை ஈன்றும்" என்பது சிவஞான சித்தியார் (சு பக்கம் பா 167)

உலகம் அவளுடையது

1167. தாரமும் ஆகுவள் தத்துவமாய் நிற்பள்
காரணி, காரியம் ஆகும் கலப்பினள்,
பூரண விந்து பொதிந்த புராதனி
பார் அளவாம் திசை பத்து உடையாளே.

தாரமு மாகுவ டத்துவ மாய்நிற்பள்
[1]காரணி காரிய மாகுங் கலப்பினள்
பூரண [2]விந்து பொதிந்த புராதனி
பாரள [3]வாந்திசை பத்துடை யாளே. (15)

வேறு பாடம்: 1. காரண (ஆ ஈ ஓ) III. 2. விந்துப் (சைவ) 3. வார்திசை (ஓ) IV.

கருத்து: சிவபெருமானுக்கு மனைவியும் ஆவாள். அப்பெருமானின் வேறன்றி மெய்ப் பொருளாயும் இருப்பாள். அனைத்திற்கும் காரணம் (முதல்வி) அவளே. காரியப் பொருளாகிய உலகில் 'ஒன்றாய்' க் கலந்து நிற்கின்றாள். எங்கும் வியாபித்துள்ளவள். சுத்த மாயையில் நிறைந்துள்ள பழம் பொருள். உலகம் முழுதுடையாள்.

சோதி வடிவில்

1168. பத்து முகம் உடையாள் எம் பராசத்தி,
வைத்தனள் ஆறு அங்கம், நாலுடன் தான்வேதம்
ஒத்தனள் ஆதாரம் ஒன்றுடன் ஓங்கியே
நித்தமாய் நின்றாள் எம் நேரிழை கூறே.

பத்து முகமுடை [1]யாளெம் பராசத்தி
வைத்தன ளாறங்க நாலுடன் றான்வேத
மொத்தன ளாதார மொன்றுட னோங்கியே
நித்தமாய் நின்றாளெந் நேரிழை கூறே[2]. (16)

வேறு பாடம்: 1. யாணம் (அ இ எ ஒ) III. 2. கூரே. (விசு) (தி)

கருத்து: திசைகள் பத்தையும் முகமாக உடைய பராசத்தி மனித உடம்பில், ஆறு இதழ் உடைய சுவாதிட்டான ஆதாரத்தை அங்கம் போலவும், நான்கு இதழ் உடைய மூலாதாரத்தை வேதம் போலவும் அமைத்தாள். தான் இறைவனின் இடப்பாதியாய் விளங்குவது போல, சகஸ்ராரத்தில் (ஏழாவது ஆதாரம்) அச்சிவனுடன் ஒளியுருவாய் ஓங்கினள். என்றும் உள்ளாள்.

கொண்டு கூட்டு: "நேரிழை கூறே ஒத்தனள், ஆதாரம் ஒன்றுடன் ஓங்கி நித்தமாய் நின்றனள்" எனக் கூட்டுக.

சிவனை ஆள்பவள்

1169. கூறிய கன்னி, குலாய புருவத்தள்,
சீறியள் ஆய் உலகு ஏழும் திகழ்ந்தவள்,
ஆரிய நங்கை, அமுத பயோதரி
பேருயிர் ஆவி, பிறிவு அறுத்தாளே.

[1]கூறிய [2]கன்னி குலாய புருவத்தள்[3]
[4]சீறிய ளாயுல கேழுந் திகழ்ந்தவ
[5]ளாரிய நங்கை யமுத பயோதரி
[6]பேருயி ராளி [7]பிறிவறுத் தாளே. (17)

வேறு பாடம்: 1. கூரிய (ஆ இ) III கூரியல் (எ) IV. 2. கண்ணி (அ எ) III. 3. பருவத்தள் (த) 4. சீரிய (இ எ) III. 5. ளாறிய (த) 6. பேறுயி (த) 7. பிறப்பறுத் (ஆ இ) IV.

கருத்து: மேலே கூறிய பராசத்தி வாலையாய் (குண்டலி) மூலாதாரத்திலிருந்து, பின்பு சத்திகளுடன் புருவத்தின் இடையில் விளங்குவாள். உயிர்க்கு உயிர் என்ற அணு அளவாய் எல்லா வற்றிலும் விளங்குபவள். மேலானவள், சூரிய சந்திரர் ஆகிய தனங்களை உடையவள். சிவத்தை ஆள்பவள். உயிர் வேறு, அவள் வேறு என்ற வேறுபாட்டுணர்வை நீக்கினாள்.

சிறியள் நீட்டல் விகாரமும் பிரிவு வலித்தல் விகாரமும் பெற்றன.

ஒன்றாய், உடனாய் ....

1170. பிறிவு இன்றி நின்ற பெருந்தகைப் பேதை,
குறி ஒன்றி நின்றிடும் கோமளக் கொம்பு,
பொறி ஒன்றிநின்று புணர்ச்சி செய்து, ஆங்கே
அறிவு ஒன்றி நின்றனள் ஆருயிருள்ளே.

[1]பிறிவின்றி நின்ற [2]பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
[3]யறிவொன்றி நின்றன ளாருயி ருள்ளே. (18)

வேறு பாடம்: 1. பிறவன்றி (சைவ-1) 2. பெருந்தவப் (ஆ)IV. 3. யறிவொன்ற (விசு) (தி) (வ) (சைவ)

கருத்து: சிவபெருமானோடு பிரிவின்றி விளங்கும் கருணை உடைய பராசத்தி, யோகியின் தியானப் பொருளாய்ப் பொருந்தி நிற்பாள். உலகியல் வாழ்வில், கருவி கரணங்களுடன் 'ஒன்றாய்' நின்று, அவற்றின் வாயிலாக அறிவு பெற உயிருக்கு உதவி, ஆன்மிக வாழ்வில், உயிருடன் 'உடனாய்' க் கலந்து நின்றாள்.

தவநெறி காட்டினாள்

1171. உள்ளத்தின் உள்ளே உடன் இருந்து ஐவர்தம்
கள்ளத்தை நீக்கி, கலந்துஉடனே புல்கி,
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளத் தலைவி மருட்டிப் புரிந்தே.

உள்ளத்தி னுள்ளே யுடனிருந் தைவர்தங்
கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய வின்பத்து
[1]வள்ளத் தலைவி மருட்டிப் புரிந்தே[2] (19)

வேறு பாடம்: 1. வள்ளற் றலைவி (எ ஒ) III. 2. புரிந்ததே (ஆ) IV.

கருத்து: பராசத்தி என் உயிரின் உள்ளே மறைந்திருந்து, எனது அறிவை மறைத்து உலகியலில் இயக்கி, பின் உயிரோடு "உடனாய்" இருந்து, புலன்களை மாற்றி, என்னிற் கலந்து, யான் தவநெறி மேற்கொள்ளுமாறு இயக்கி, பெருகிய இன்பத்தினை வள்ளத்தில் வைத்து ஊட்டிய தலைவி ஆவாள்.

கொண்டு கூட்டு: "உள்ளத்தின் உள்ளே மருட்டிப் புரிந்து, உடன் இருந்து ஐவர்தம் கள்ளத்தை நீக்கிக் கலந்துடனே புல்கி, தவநெறி கொள்ள, கூடிய இன்பத்து வள்ளத் தலைவி (ஆவாள்)"

பேரின்பம் தருபவள்

1172. புரிந்து அருள் செய்கின்ற போக மாசத்தி
இருந்து அருள் செய்கின்ற இன்பம் அறியார்,
பொருந்தி இருந்த புதல்வி பூ வண்ணத்து
இருந்த இலக்கில் இனிது இருந்தாளே.

புரிந்தருள் செய்கின்ற [1]போகமா சத்தி
யிருந்தருள் செய்கின்ற வின்ப மறியார்
பொருந்தி யிருந்த புதல்விபூ வண்ணத்
திருந்த [2]விலக்கி லினிதிருந் தாளே. (20)

வேறு பாடம்: 1. போதம (இ) I போகமார் (சைவ 1) 2. விலக்கினா (ஈ) I.

கருத்து: உயிர்கள் போகத்தை விரும்புதலின், தானும் அதை விரும்பி அருள்கின்ற போகசத்தி ஆகிய பராசத்தி, பின்னும் அவ்வுயிர்களுக்குப் பக்குவம் வரும் காலத்திலும் 'உடனாய்' இருந்து, பேரின்பத்தை அருளுதலை உலகவர் அறியார். மலரில் மணம் போல உயிரில் உறையும் அவள், யோகியரின் தியானப் பொருளாய், புருவமத்தி, சகஸ்ராரம் ஆகிய குறியிடங்களில் இனிதாக வீற்றிருக்கின்றாள்.

உள்ளத்தில் கலந்தாள்

1173. இருந்தனள் ஏந்திழை என் உள்ளம் மேவி,
திருந்து புணர்ச்சியில் தேர்ந்து உணர்ந்து, உன்னி;
நிரந்தரம் ஆகிய நீர் திசையோடு
பொருந்த, இலக்கில் புணர்ச்சி அதுவே.

இருந்தன ளேந்திழை [1]யென்னுள்ள மேவித்
திருந்து புணர்ச்சியிற் [2]றேர்ந்துணர்ந் துன்னி
நிரந்தர மாகிய [3]நீர்திசை யோடு
பொருந்த விலக்கிற் புணர்ச்சி யதுவே[4]. (21)

வேறு பாடம்: 1. யென்னுள (சைவ) 2. றேர்ந்துணர்வுன்னி (ஈ) IV. 3. நிரதி சயமொடு (எ) II நீள் திசை (இ) IV. 4. யவளே (இ ஈ) II.

கருத்து: யான் ஆராய்ந்து தெளிந்து தியானிக்க, (சத்தி) என் உள்ளத்தில் பொருந்தி, செவ்விதிற் கலந்து, வீற்றிருந்தாள். அது, நிலைபெற்றதாகிய என் உயிருணர்வு (ஆன்மபோதம்) பத்துத்திசை களிலும் வியாபகமாய்ப் பொருந்துமாறு செய்த சகஸ்ரார இடத்துப் புணர்ச்சி ஆகும்.

நீர் - இயல்பு, உணர்வு. பரமகாய அனுபவம் பெற்றமையை இவ்வாறு கூறுகின்றார்.

1174. அதுவிது வென்னு மவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகு
மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே. (அ, உ)

1175. மூன்றுள மண்டல மோகினி சேர்விட
மேன்றுள வீரா றெழுகலை யுச்சியில்
தோன்று மிலக்குற வாகுதன் மாமாயை
யேன்றன ளேழிரண் டிந்துவோ டீறே. (அ)

நாதம் கேட்கும்

1176. இந்துவினின்று எழும் நாதம், இரவி போல்
வந்து பின் நாக்கில், மதித்து எழும் கண்டத்தில்,
உந்திய சோதி இதயத்து எழும் ஒலி
இந்துவின்மேல் உற்ற ஈறு அது தானே.

இந்துவி னின்றெழு நாத மிரவிபோல்
வந்தபின் [1]னாக்கின் [2]மதித்தெழுங் கண்டத்தி
லுந்திய சோதி யிதயத் தெழுமொலி
யிந்துவின் மேலுற்ற வீறது தானே. (22)

வேறு பாடம்: 1. னாகு (சைவ - 1) 2. மதித்தெழு (அ ஆ இ ஈ ஓ) I.

கருத்து: சந்திர மண்டலத்தில் தோன்றும் நாதம் (ஒலி) சூரிய மண்டலப்பகுதிக்கு வந்து பின்பு, நாக்கில் பொருந்தி, கழுத்தில் ஓசையாக உருவாகி வெளிப்படும். அஃது எவ்வாறு உண்டாயிற்று என்றால், மூலாதாரத்திலிருந்து மூலக்கனல் எழுந்து, இதயத்தில் (சூரியமண்டலம்) அநாகதச் சக்கரத்தில், இதயத்துடிப்பின் ஒலியுடன் சேர்ந்து, மேல் ஏறி, சந்திர மண்டலத்தில் சேரும் (இது மூச்சுக்காற்றே). அதுவே அங்கு நாதமாக எழுந்து, கழுத்தில் ஒலியாக உண்டாகி வெளிப்படுகின்றது என்க.

"நாதப் பறையினர் அன்னே என்னும்" என்பது திருவாசகம் (அன். 1)

அழகுக் குவியல்

1177. ஈறு-அது தான் முதல், எண் இரண்டு, ஆயிரம்
மாறுதல் இன்றி, மனோவசமாய், எழில்
தூறு - அது செய்யும் சுகந்தச் சுழி அது;
பேறு - அது செய்து பிறந்து இருந்தாளே.

ஈறது தான்முத லெண்ணிரண் டாயிர
மாறுத லின்றி [1]மனோவச மாயெழிற்[2]
றூறது செய்யுஞ் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்திருந் தாளே. (23)

வேறு பாடம்: 1. மனோவாச (சைவ - 1) 2. மாயொழித் (ஆ) I மாவெழிற் (சைவ - 1)

கருத்து: அந்த நாதம் தோன்றும் பரநிலைதான், உலகப்படைப்பிற்கு ஈறாகவும் மீண்டும் ஆதியாகவும் உள்ளது. உயிர் உணர்வு இப் பரநிலையை அணுகினால், பலவாறாகச் சலிக்கும் நிலை இன்றி மனம் தன் வசப்படும். அழகுக்குவியலாக, மன நிறைவாக உள்ள இடம் அது. பராசத்தி, அவ்விடத்தில் காட்சி தந்து இப்பேரின் பத்தை - பரநிலையைத் தந்தருள்வாள்.

தாயன்பு

1178. இருந்தனள் ஏந்திழை, ஈறு - அது இல் ஆக
திருந்திய ஆனந்தம், செல்நெறி நண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றிசெய்து ஏத்த,
வருந்த, இருந்தனள் மங்கை நல்லாளே.

இருந்தன ளேந்திழை [1]யீறதி லாகத்
திருந்திய வானந்தஞ் [2]சென்னெறி நண்ணிப்[3]
பொருந்து புவனங்கள் போற்றிசெய் தேத்த[4]
வருந்த விருந்தனள் மங்கைநல் வாளே. (24)

வேறு பாடம்: 1. ஈறிதி (சைவ - 1) 2. செந்நெறி (விசு) (தி) (த) (வ) 3. கண்ணி (ஒ) IV. 4. தேத்தி (எ) IV; தோத (சைவ - 1)

கருத்து: பேரின்பம் முடிவு அற்றதாக விளங்குமாறு, பராசத்தி வீற்றிருக்கிறாள். (அவளை அடைதற்குரிய வழியைப் புவனங்களில் உள்ளவர்கள் அடைந்து,) சிலர் துதிபாடி வழிபடவும், மற்றும் சிலர் யோக நெறியில் வருந்தவும், அவள் அவர்களின் பக்குவம் நோக்கி, அருள் செய்தற்காகத் தாயன்புடன் வீற்றிருக்கிறாள்.

உள்ளேயும் வெளியிலும் காட்சி

1179. மங்கையும் மாரனும் தம்மொடு கூடிநின்று
அங்குலி கூடி, அகம் புறம் பார்த்தனர்
கொங்கை நல்லாளும் குமரர்கள் ஐவரும்
தங்களின் மேவிச் சடங்கு செய்தாரே.

மங்கையு [1]மாரனுந் தம்மொடு கூடிநின்
றங்குலி [2]கூடி யகம்புறம் பார்த்தனர்
கொங்கைநல் [3]லாளுங் குமரர்க ளைவருந்
தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே[4]. (25)

வேறு பாடம்: 1. மாறனுந் (ஆ) I. 2. கூட்டி (த) (வ) (சைவ) 3. லாருங் (த) 4. வார்களே (ஆ) IV.

கருத்து: பராசத்தியும் பரசிவமும் இணைந்துநின்று, சகஸ்ராரத்திற்கு மேலே, பராகாயம் ஆகிய 12 அங்குல இடத்தில் பொருந்தி, யோகி தன்னுள் அகமுகமாகவும், வியாபகம் ஆகி, புறமுகமாக அனைத்துப் பொருள்களிலும், எங்கெங்கும் தம்மைக் காணுமாறு விளங்கினர். அப்பொழுது குண்டலிசத்தியும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் அப்பரசிவம் - பராசத்தியோடு சார்ந்து தத்தம் செயல்களைச் செய்தன.

பரத்தைத் தரிசித்த யோகிக்கு உலக வாழ்க்கை இல்லாமற் போகவில்லை. ஆனால் அவனது ஆற்றலும் புலன்களும் சிவத்தைச் சார்ந்திருக்கும். "சித்தம் சிவம் ஆக்கிச் செய்தனவே தவமாக்கும்" என்றார் மணிவாசகர். (திருவா திருத்தோ. 6) ஆசிரியர், "கள்ளப் புலன் ஐந்தும் காள மணி விளக்கே" என்று பின்னும் கூறுவார். "கொங்கை நல்லாள்" எனக் குண்டலியைக் கூறியது, வளர்க்கின்றவள் அவள் ஆதலின்.

அன்பே சிவம்

1180\. சடங்கு - அது செய்து தவம் புரிவார்கள்
கடம்தனில் உள்ளே கருதுவராகில்
தொடர்ந்து எழு சோதி துணைவழி ஏறி,
அடங்கிடும் அன்பினது ஆயிழை பாலே.

சடங்கது செய்து தவம்புரி வார்கள்
கடந்தனி [1]லுள்ளே கருதுவ ராகிற்
றொடர்ந்தெழு சோதி [2]துணைவழி யேறி
யடங்கிடு மன்பின தாயிழை பாலே[3] (26)

வேறு பாடம்: 1. னுள்ளே (எ) IV. 2. துணைவழி (ஒ) IV துணைவிழி (ஈ) I; தொளைவழி (துடி) 3. யாலே (அ ஆ) I.

கருத்து: மேற்பாடலில் கூறியவாறு உலகியலில் வாழும் யோகியர், தம் உடம்பில் அகமுகமாகத் தியானிப்பராயின், பராகாயத்தில் நீடித்து விளங்கும் சோதியின் காட்சித்துணையாலே உயர்நிலை எய்தி, பராசத்தியின் அருள் வியாபகத்தில் தமது அன்பு கலக்கப் பெறுவர். இதனை ஆசிரியர் 'அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்றார் முன்னும்.

கடம் - உடம்பு.

மந்திர முத்து

1181. பாலித்து இருக்கும்; பனிமலர் ஆறினும்
ஆலித்து இருக்கும்; அவற்றின் அகம் படி
சீலத்தை நீக்கித் திகழ்ந்து எழு மந்திரம்
மூலத்து மேலது; முத்து - அது ஆமே.

பாலித் திருக்கும் பனிமல ராறினு[1]
மாலித் திருக்கு மவற்றி னகம்படி
சீலத்தை [2]நீக்கித் திகழ்ந்தெழு மந்திர
மூலத்து மேலது [3]முத்தது வாமே. (27)

வேறு பாடம்: 1. ராற்றினு (அ ஒ) IV. 2. நீக்கத் (எ) IV. 3. மூத்தது (ஆ) IV.

கருத்து: மேற்பாடல்களில் கூறிய அனுபவத்தை எய்தச்செய்வது யாது எனின், அது மூலாதாரத்தில் வைத்துத் தியானிக்கப்படும் சத்தி பீசத்துடன் கூடிய மந்திரமாம். அதன் தியானத்தினால் சத்தி ஆறு ஆதாரங்களிலும் சகஸ்ராரத் தாமரையிலும் மகிழ்ந்து வீற்றிருப்பாள். ஒவ்வோர் ஆதாரத்திலும் அனுபவம் தந்து, அதிலேயே தங்கிவிடாமல் மேன்மேல் மூலக்கனலை ஏற்றுவதும் இம்மந்திரமே. இது மந்திரங்களுள் முத்துப் போன்றது.

உள்ளத்தில் உள்ளாள்

1182. முத்து [1]வணத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி [2]சதிரி சகளி சடாதாரி[3]
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி[4]
வித்தகி யென்னுள்ள மேவிநின் றாளே. (28)

வேறு பாடம்: 1. வனத்தி (ஒ) IV வன்னத்தி (இ) II வதனத்தி (எ) II. 2. சதுரி (த) 3. சடாதரி (எ) IV.

கருத்து: முத்துப் போன்ற நிறம் உடையாள். ஐந்து முகங்களிலும் மூன்று மூன்று கண்ணை உடையாள். திறமையுடையாள். உருவம் உடையாள். சடைமுடியாள்; பத்துக்கையினாள். பராசத்தி. ஞான சொரூபி. என் உள்ளம் பொருந்தி நிற்கின்றாள்.

பேரொளித் திருமேனி

1183. மேவிய மண்டலம் மூன்றுடன் கீழ் எரி
தாவிய நற்பதத் தண்மதி, அங்கதிர்
மூவரும் கூடி முதல்வியா முன்னிற்பர்
ஓவினும் மேவிடும் உள்ளொளி ஆமே.

மேவிய மண்டல மூன்றுடன் கீழெரி
தாவிய நற்பதத் தண்மதி யங்கதிர்
மூவருங் கூடி [1]முதல்வியா முன்னிற்ப
ரோவினு [2]மேவிடு முள்ளொளி யாமே. (29)

வேறு பாடம்: 1. முதல்வியாய் (ஆ எ) ; IV முதல்வியார் (விசு) 2. மேலிடு (சைவ).

கருத்து: உடம்பில் உள்ள மூன்று மண்டலங்களுள், கீழே உள்ளதாகிய அக்கினி மண்டலம் சத்தியின் திருவடியாகவும், சூரிய மண்டலம் திருமேனியாகவும், சந்திர மண்டலம் திருமுடியாகவும் விளங்கும் அவளது பேரொளி, நாம் விலக்கினாலும் நம்மைச் சூழ்ந்து நிற்கும்.

ஓதல் - விலக்குதல்; பிற் காலத்தே உகரச் சாரியை பெற்றது.

அமுதம் ஊறும்

1184. உள்ளொளி, மூவிரண்டு ஓங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி, அவரொடும்
கள் அவிழ் கோனைக் கலந்து உடனே நிற்கும்
கொள்ள விசுத்திக் கொடி அமுது ஆமே.

உள்ளொளி மூவிரண் டோங்கிய வங்கங்கள்
வெள்ளொளி யங்கியின் [1]மேவி யவரொடுங்
கள்ளவிழ் [2]கோனைக் கலந்துட னேநிற்குங்
கொள்ள [3]விசுத்திக் கொடியமு தாமே. (30)

வேறு பாடம்: 1. மேவிய வேரொடுங் (ஈ) IV. 2. கோதை (இ) II கோதைக் (சைவ) 3. கொள்ளவி சித்திக் (த)

கருத்து: ஆறு ஆதாரங்களிலும் மூலக்கனலோடு, குண்டலிசத்தி யாகப் பொருந்தி, அந்த ஆதாரத்தேவர்களோடு சேர்ந்து, அமுதம்

விளையும் சகஸ்ராரத் தாமரையில், தலைவனாகிய பரசிவனைக் கூடி, அவனுடன் நிற்கும் உள்ளொளிதான் பராசத்தி. அத்தரிசனத்தைப் பெற, விசுத்தித்தானத்தில் அமுதம் விளையும்.

விசுத்தி ஆதராரத்தைக் 'கொடி' என்றல் மரபு. இது கழுத்தின் பின்புறம் உள்ளது.

சத்தி தரும் ஆனந்தம்

1185. கொடியது இரேகை குறியுள் இருப்ப,
படியது வாருணை; பைங்கழல் ஈசன்
வடிவு அது; ஆனந்தம் வந்து முறையே
இடும், முதல் ஆறங்கம் ஏந்திழை யாளே.

கொடியதி ரேகை [1]குறியு ளிருப்பப்
[2]படியது [3]வாருணைப் பைங்கழ லீசன்
வடிவது வானந்தம் வந்து முறையே
[4]யிடுமுத லாறங்க மேந்திழை யாளே. (31)

வேறு பாடம்: 1. குறுவுள் (அ ஓ) I குருவுள் (எ) III குருவரு (ஈ) II. 2. படிவது (த) 3. வாருனைப் (சைவ) யிடுதலாறங்க (த)

கருத்து: விசுத்தி ஆதாரத்தில் மின்னற்கொடி போலத் தோன்றும் சத்தி, சகஸ்ராரம் ஆகிய இலக்கில் சோதியாக விளங்கும்போது, அங்கும் அமுதம் விளையும். அவள் சிவனது திருவடியாகிய அருளின் வடிவமாவாள். ஆறு ஆதாரங்களையும் அங்கமாக உடைய முதல்வியாகிய சத்தியே படிமுறையில் தோன்றி, இந்த ஆனந்தத்தை அருள்கின்றாள்.

படி - முதனிலைத் தொழிற்பெயர். படியது - படிதலை உடையது. வாருணி என்பது வாருணை - ஆயிற்று. கள்; இங்கு அமுது.

பராசத்தி சன்னிதி

1186. ஏந்திழையாளும், இறைவர்கள் மூவரும்,
காந்தாரம் ஆறும், கலைமுதல் ஈரெட்டும்,
ஆந்த குளத்தியும் மந்திர ராயுவும்
சார்ந்தனர் ஏத்த இருந்தனள் சத்தியே.

ஏந்திழை [1]யாளு மிறைவர்கண் மூவருங்
காந்தார மாறுங் கலைமுத லீரெட்டு
மாந்த [2]குளத்தியு மந்திர ராயுவுஞ்[3]
[4]சார்ந்தன ரேத்த விருந்தனள் சத்தியே (32)

வேறு பாடம்: 1. யாரு (த) 2. ருளத்தியு (ஒ) III. 3. ராயமுஞ் (த) ராயவுஞ் (இ ஈ ஒ) I. 4. சார்ந்தவ (இ) IV.

கருத்து: குண்டலியும், அயன், அரி, உருத்திரன் - மூவரும், ஆறு ஆதாரத்தேவர்களும், சந்திர கலைகள் 16 ம் ஆக்னஞ ஆதாரத்தில் விளங்கும் சத்தியும் மந்திர அரசாகிய திருவைந்தெழுத்தும் - ஆகிய இவற்றை யோகியர் சார்ந்துநின்று வழிபட, பராசத்தி வீற்றிருந்தாள்.

காந்து ஆரம் - காந்தாரம். ஆரம் - சக்கரம்; ஆதாரம் ஆறு.

அன்பற்றோர் புலம்பல்

1187. சத்தியென் பாளொரு [1]சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி யென்ப தறிகிலர்
பத்தியைப் பாழி லுகுத்தவப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றாரே. (33)

வேறு பாடம்: 1. சாந்தப் (ஒ) II.

கருத்து: யோக சாதனைக்குத் துணையாயிருக்கும் சத்தி வீடுபேற் றுக்கும் முதல்வி என்பதை அறியாமல், அவளிடம் பக்தி இன்றி வாழ்வோர், ஏதேதோ கூறிப் புலம்புவர்.

யார் காண இயலும்?

1188. ஆரே திருவின் திருவடி காண்பர்கள்?
நேரே நின்று ஓதி நினையவும் வல்லார்க்குக்
கார் ஏய் குழலி கமல மலர் அன்ன
சீர் ஏயும் சேவடி சிந்தை வைத்தாளே.

ஆரே திருவின் திருவடி காண்பர்கண்
ணேரேநின் றோதி [1]நினையவும் வல்லார்க்குக்
[2]காரேய் குழலி கமல மலரன்ன
சீரேயுஞ் சேவடி சிந்தைவைத் தாளே. (34)

வேறு பாடம்: 1. நினையும் (எ) II நிலையவும் (ஈ) I. 2. காரே (அ இ ஈ எ ஒ) I; காரேர் (துடி)

கருத்து: நெறிதவறாமல் நின்று, ஓதியும் தியானித்தும் இருப்பவர்க்கு மேகம் போன்ற கூந்தலை உடைய பராசத்தி, தாமரைபோன்ற தன் திருவடிகளை நெஞ்சில் நிறுத்துவள். அங்ஙனம் செய்யாதார் யார் அத்திருமகளின் திருவடியைக் காண இயலும்?

வாழ் முதல்

1189. சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில் [1]வையா நினைவதி லேவைத்து
[2]சந்தியில் வைத்துச் சமாதிசெய் வீரே. (35)

வேறு பாடம்: 1. வையார் (ஆ ஈ ஒ) II. 2. சந்தையில் (எ) IV.

கருத்து: பராசத்தியை உள்ளத்தில் இடையறாது எண்ணி., யோகப் பயிற்சியில் புருவமத்தி, உச்சந்தலை ஆகிய இடங்களில் தரிசித்து, வாழ்வின் முதலாக அவளையே கொண்டு, மூலாதாரத்தில் அவளே குண்டலியாக விளங்குபவள் என்பதைக் குற்றமற எண்ணி, அவளது துணையுடன் ஆறு ஆதாரங்களிலும் தேவர்களைக் கூடி, நிட்டையில் இருப்பீராக.

சிர ஆதி - தலை முதலிய உறுப்புகள். சந்தி - புணர்ப்பு, தேவர்களைக் கூடல்.

உருவம் அற்று நிற்பாள்

1190. சமாதி செய்வார்கட்குத் தான் முதல் ஆகி,
சிவ-ஆதியில் ஆரும் சிலைநுதலாளை
நவாதியில் ஆக நயந்தது ஓதில்
உவாதி அவளுக்கு உறைவிலது ஆமே.

சமாதிசெய் வார்கட்குச் தான்முத லாகிச்
சிவாதியி [1]லாருஞ் சிலைநுத லாளை
நவாதியி [2]லாக நயந்தது வோதி
லுவாதி யவளுக் [3]குறைவில தாமே. (36)

வேறு பாடம்: 1. லாகுஞ் (இ ஈ) I. 2. லாத (அ எ ஒ) I. 3. குறைவில்லைத் தானே (ஆ இ) III குறையில்லைத் தானே (ஈ) III.

கருத்து: தன்னைத் தியானிப்பவர்க்கு முதல்வியாகிச் சிவ என்பதை முதலாகக் கொண்ட திருவைந்தெழுத்தால் அனுபவப்படும் சத்தியை, நவாக்கரி மந்திரத்தால் விருப்புடன் ஓதினால், செயற்கை யான சகள நிலை விட்டு நிற்கின்ற நிலையில் - உருவம் அற்ற நிலையில் - நின்று அருள்புரிவாள்.

தல வழிபாடு

1191. உறைபதி தோறும் முறைமுறை மேவி,
நறை கமழ் கோதையை நாடொறும் நண்ணி,
மறையுடனே நிற்கும் மற்றுஉள்ள நான்கும்
இறைதினை, போது இடில், எய்திடலாமே.

உறைபதி தோறு [1]முறைமுறை மேவி[2]
நறைகமழ் கோதையை நாடொறு நண்ணி
மறையுட னேநிற்கு மற்றுள்ள நான்கு
[3]மிறைதினை [4]போதிடி லெய்திட லாமே. (37)

வேறு பாடம்: 1. முறைமறை (இ ஈ ஒ) I. 2. வேள்வி (ஒ) IV. 3. மிறைதினைப் (அ) I மிறைதனைப் (இ) I மிறைவனைப் (ஈ) IV மிறை திளைப் (த) மிறைதினைப் (சைவ) 4. போதினி (ஆ எ) III போத்தி (ஈ) I போற்றிடி (இ) IV.

கருத்து: சத்தி உறைகின்ற தலங்கட்கு எல்லாம் சென்று நாள்தோறும் தினையும் மலரும் தூவி வழிபட்டால், வேதங்களில் கூறப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களை எய்தலாம்.

சிவபுண்ணியம் செய்க

1192. எய்திடலாகும் இருவினையின் பயன்
கொய்தளிர் மேனிக் குமரி, குலாம் கன்னி,
மைதவழ் கண்ணி, நன் மாதுரிகையொடு
கைதவம் இன்றிக் கருத்து உறும் வாறே.

எய்திட லாகு மிருவினை யின்பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாங்கன்னி
மைதவழ் கண்ணிநன் [1]மாதுரி கையொடு
கைதவ [2]மின்றிக் [3]கருத்துறும் வாறே. (38)

வேறு பாடம்: 1. மாரிதுர்க் (எ) IV. 2. மன்றிக் (துடி) 3. கருத்துறுவார்க்கே (ஆ) III.

கருத்து: பெரிய சிவபுண்ணியங்கள் செய்தால், இளம் பருவத்தாளும், கன்னியும், மைதீட்டிய கண்ணை உடையவளும் ஆகிய இனிமையைச் செய்யும் சத்தியை, வஞ்சனை இன்றி, மனத்தில் இருத்தும் பேறு வாய்க்கும்.

சத்தி தியானம்

1193. கருத்து உறும் காலம் கருது மனமும்
திருத்தி இருந்து, அவை சேரும் நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு; மண்மேல்
இருத்திடும், எண்குணம் எய்தலும் ஆமே.

[1]கருத்துறுங் காலங் கருது மனமுந்
திருத்தி யிருந்தவை சேரு நிலத்து[2]
ஒருத்தியை [3]யுன்னி யுணர்ந்திடு மண்மே[4]
லிருத்திடு மெண்குண மெய்தலு மாமே. (39)

வேறு பாடம்: 1. கருத்தது (ஆ) IV. 2. நலத்து (இ) IV. 3. யங்கே (ஆ) IV. 4. மென்மே (ஈ) IV.

கருத்து: பலவற்றை எண்ணும் மனத்தை, பராசத்தியைத் தியானிக்கும் பக்குவம் வரும் அளவில் திருத்தி, சிவமும் சத்தியும் உடம்பில் சேரும் இடமாகிய சகஸ்ராரத்தில், உயிருணர்வைச் செலுத்தித் தியானம் செய்க. சத்தியின் திருவருள் கிடைக்கும். மரணமின்றி வாழலாம். சிவனுக்கே உரிய எண் குணங்களையும் எய்தலாம்.

அவை - இவ்வியல் ஆதாரம் ஆகிய சத்தியைப் பற்றியும் ஆதேயம் ஆகிய சிவத்தைப் பற்றியும் ஆதலின், இங்குச் சிவ - சத்தியைக் குறிக்கும்.

கொண்டு கூட்டு: கருதும் மனமும் கருத்து உறும் காலம் திருத்தி, அவை சேரும் நிலத்து ஒருத்தியை உன்னி உணர்ந்திடு எனக்கூட்டுக.

அவளானேன்

1194. ஆமை ஒன்று ஏறி, அகம்படி யான் என
ஓம என்ற ஓதி, எம் உள்ளொளியாய் நிற்கும்
தாம நறுங்குழல் தையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடி நின்றாளே.

ஆமையொன் றேறி யகம்படி யானென
வோமவென் [1]றோதியெம் முள்ளொளி யாய்நிற்குந்
[2]தாம நறுங்குழற் றையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடிநின் றாளே[3]. (40)

வேறு பாடம்: 1. றோதியென் (சைவ-1) 2. நாம (எ) IV. 3. றானே (ஈ) ஈ. I.

கருத்து: ஆமையைப் போலப் புலன் ஐந்தும் அடக்கி, 'உள்முக நோக்கம் மட்டும் உடையேன் யான்' என்று தியானத்தில் இருந்து 'ஓம்' என்று பிரணவத்தைத் தியானத்தில் வைத்து, எமக்கு உள்ளொளியாக இருக்கும் பராசத்தியை அந்த ஒளிவடிவில் புருவமத்தியில் கண்டபின் அவள் சந்திரமண்டலத்தில் 16 கலைகளையும் சூடிப் பேரொளிப் பெருவெள்ளமாகக் காட்சியளித்தாள். என் உருவில் நிறைந்து நின்றாள். எனக்கும் அவளுக்கும் வேற்றுமை கண்டிலேன்.

சோம நறு மலர் - சந்திரனாகிய பூ.

சத்தி நடனம்

1195. சூடிடும் அங்குச பாசத் துளைவழி,
கூடும் இருவளை, கோலக்கை, குண்டிகை,
நாடும் இருபதம் நன்னெடு உருத்திரம்,
ஆடிடும் சீர்புனை ஆடகம் ஆமே.

சூடிடு மங்குச [1]பாசத் துளைவழி[2]
கூடு [3]மிருவளை [4]கோலக்கை குண்டிகை[5]
நாடு மிருபத நன்னெடு ருத்திர
[6]மாடிடு சீர்புனை யாடக மாமே. (41)

வேறு பாடம்: 1. பாசந் (எ) IV. 2. துணைவழி (எ) IV தொளைவழி (துடி) 3. மிருகலை (ஆ) IV. 4. கோளகை (ஆ) I கோலக்கைக் (எ) I. 5. குண்டகை (ஆ) I. 6. மாயிடுஞ் (ஒ) I மாடிடஞ் (த)

கருத்து: அங்குசம் போல் மேலே வளைந்திருக்கும் சுழுமுனை நாடியாகிய கயிற்று வழியின் முடிவில் வீற்றிருப்பாள். அழகிய கைகளில் பெரிய சங்கும் அமுத கலசமும் கொண்டிருப்பாள். சி, வா என்ற இரண்டு பதங்கள் சேர்ந்த ஸ்ரீருத்திர மந்திரத்தால் (மந்திர தியானத்தால்) அடையப்படுவாள். யோகசாதனையில் புகழ்வாய்ந்த சகஸ்ராரம் என்ற பொதுவில் (அம்பலத்தில்) ஆடுவாள்.

'சிவா' என்ற பதம் சீருத்திர மந்திரப்பிரச்சினத்தில் பலவிடங்களில் வரும். ஆடகம்: ஆடு அகம் - வெற்றிபெறும் இடம். யோகசாதனையில் வெற்றி பெறுவோர் சகஸ்ராரத்தை அடைவர் ஆதலின், அவ்விடம் 'ஆடகம்' எனப்பட்டது. சீர் - புகழ், அவ்வெற்றியால் வரும் புகழ்.

கொண்டு கூட்டு: அங்குச பாசத்துளைவழி சூடிடும், கோலக்கையும் (அதில்) இருவளையும் குண்டிகையும் கூடும், இருபத நன்னெடு ருத்திரம் நாடும், சீர்புனை ஆடகம் ஆடிடும் எனக் கூட்டுக.

ஐவரும் தேவரும் வணங்க ....

1196. ஆம் அயன், மால், அரன், ஈசன், சதாசிவன்
தாம் அடி சூடிநின்று எய்தினர் தம் பதம்,
காமனும், சாமன், இரவி, கனலுடன்
சோமனும் வந்து, அடி சூட நின்றாளே.

ஆமயன் மாலர னீசன் சதாசிவன்
றாமடி சூடிநின் [1]றெய்தினர் தம்பதங்
காமனுஞ் சாம னிரவி கனலுடன்
சோமனும் வந்தடி [2]சூடநின் றாளே[3]. (42)

வேறு பாடம்: 1. றேத்தினர் (ஆ) I. 2. சூடிநின் (அ ஆ இ ஈ) I. 3. றானே (அ ஆ ஈ) I.

கருத்து: சத்தியால் தோற்றுவிக்கப்படும் பிரமன், திருமால், உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன் என்னும் ஐவரும் அவளுடைய திருவடிகளை வணங்கி, தமது பதவிகளைப் பெற்றனர். மன்மதனும், அவன் தம்பியும், சூரியனும், அக்கினி தேவனும், சந்திரனும் வந்து தன் திருவடியில் வணங்க, அவள் வீற்றிருக்கின்றாள்.

தியானப் பயன்

1197. சூடும் இளம்பிறை சூல கபாலினி,
நீடும் இளங்கொடி, நின்மலி, நேரிழை,
நாடி நடு இடை ஞானம் உருவ நின்று
ஆடும் அதன்வழி அண்ட முதல்வியே.

சூடு [1]மிளம்பிறை [2]சூல கபாலினி
நீடு மிளங்கொடி நின்மலி நேரிழை
நாடி நடுவிடை [3]ஞான முருவநின்[4]
றாடு [5]மதன்வழி யண்ட முதல்வியே. (43)

வேறு பாடம்: 1. மிளம்பிறைச் (ஆ) I. 2. சூலி (எ) IV. 3. ஞான (சைவ - 1) 4. முருவிநின் (அ ஆ ஈ) III. 5. மிதன்வழி (ஆ) IV.

கருத்து: இளம்பிறையைத் திருமுடியில் சூடியவள். கையில் சூலமும் கபாலமும் ஏந்தியவன். இளங்கொடி முதிராமல் இருப்பதைப் போன்றவள். மலமற்றவள். நடு நாடி வழியாக மூலக்கனலை ஏற்றித் தியானிப்பவர்க்கு ஞானம் விளங்குமாறு, அதன் பயனாகச் சகஸ்ராரத்தில் திருநடம் செய்பவள். அவள் அண்டங்களின் தலைவி.

எல்லாம் சத்தியே

1198. அண்டம் முதலா அவனி பரியந்தம்
கண்டது ஒன்று இல்லை கனங்குழை அல்லது
கண்டனும் கண்டியும் ஆகிய காரணம்
குண்டிகை, கோளிகை கண்டதனாலே.

அண்ட முதலா வவனி பரியந்தங்
கண்டதொன் றில்லை கனங்குழை யல்லது
கண்டனுங் கண்டியு [1]மாகிய காரணங்
குண்டிகை [2]கோளிகை கண்டத னாலே. (44)

வேறு பாடம்: 1. மாகின்ற (ஆ) III. 2. கோளகை (ஆ) III.

கருத்து: ஆகாயம் முதல் பூமி வரை எல்லா அண்டங்களிலும் பராசத்தியைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. பரம்பொருள், இவ்வாறு சிவமும் சத்தியுமாகிய காரணம் உயிர்களை ஆண், பெண்ணாகப் படைப்பதற்கே.

குண்டிகை, கோளிகை - இவை முறையே ஆண், பெண்ணைக் குறிக்கும் இடக்கர்ச் சொற்கள்.

ஆதாரத்தில் அமர்ந்தவள்

1199. ஆலம் உண்டான் அமுது ஆங்கு அவர்தம் பதம்
சால வந்து எய்தும், தவத்து இன்பம் தான்வரும்,
கோலி வந்து எய்தும் குவிந்த பதவையோடு
ஏல வந்து ஈண்டி, இருந்தனள் மேலே.

ஆலமுண் [1]டானமு தாங்கவர் தம்பதஞ்
சாலவந் தெய்துந் தவத்தின்பந் தான்வருங்
கோலிவந் தெய்னுங் குவிந்த பதவையோ[2]
டேலவந் [3]தீண்டி யிருந்தனண் மேலே. (45)

வேறு பாடம்: 1. டான்முத (சண்) 2. பதவியோ (ஈ) II. 3. தீண்ட (இ ஈ) IV.

கருத்து: சிவபெருமான் நஞ்சையுண்டாலும், அவனுக்கு அமுதம் போல்வாள் அவனால் காக்கப்பட்ட தேவர்களுக்குப் பதமுத்தி அளிப்பவள், மிக்க தவத்தின் பயனாகிய இன்பமாகத் தானே யோகியர்க்கு அமைபவள். அவர்கட்கு, ஆதாரம் தோறும் சூழ்ந்து நிலவுபவள். துளை வழியாகிய சுழுமுனை நாடியின் வழியாகப் பொருந்தி, மேலே ஏறி, உச்சந்தலையில் வீற்றிருந்தாள்.

பதவை - வழி.

வாழ்வை வீணாக்குவோர்

1200. மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்து எய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலாம் நளினம் நின்று ஏந்த, நட்டுச்சிதன்
மேலாம் எழுத்தினள் ஆமத்தினாளே.

மேலா மருந்தவ மேன்மேலும் வந்தெய்தக்[1]
[2]காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
[3]நாலா நளினநின் [4]றேத்தநட் டுச்சிதன்
மேலா மெழுத்தின [5]ளாமத்தி னாளே. (43)

வேறு பாடம்: 1. வந்தெய்திக் (அ ஐ இ ஈ ஒ) II. 2. கால (இ ஈ) IV. 3. நாலாளின் நின்றேத்தி நட்டுச்சி தன்னின் (அ ஒ) I. 4. றேற்றிநட் (த) றேத்திநட் (அ ஆ இ ஒ) II. 5. லாமத்தி (த)

கருத்து: மேன்மையான தவம் இடையறவு படாது, மேன் மேலும் வளரவும், அதைச் செய்யாதுவிட்டு, பிராண வாயுவைக் கட்டுப் படுத்தாமல் வீணாக்கிக் கணத்தில் மடிவர். அன்னமயமாகிய உடம்பில் வாழும் அம்மை நான்கு இதழ்த் தாமரை வடிவாய் உள்ள மூலாதாரத்தில் தன்னைப் பாவித்து வழிபடுவோருக்கு, அவர்களின் உச்சந்தலையின் நடுவில் பிரணவமாக விளங்குவாள். அமுதமாகச் சொரிவாள்.

ஆமம் - உணவு; அமுதம்.

குறிப்பு: இப்பாடலை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "ஆமத்தினிதிருந்" என்ற பாடல், சிறிது வேறுபாட்டுடன், 'திருவம்பலச் சக்கர' வியலில் வந்தது.

நம்முடம்பில் இருக்கின்றாள்

1201. நிலாமயம் ஆகிய நீள் படிகத்தின்
சிலாமயம் ஆகும் செழுந்தரளத்தின்
சுலாமயம் ஆகும் சுரி குழல் கோதை
கலாமயமாகச் கலந்து நின்றாளே.

நிலாமய மாகிய நீள்படி கத்தின்[1]
சிலாமய மாகுஞ் செழுந்தர ளத்தின்[2]
சுலாமய மாகுஞ் சுரிகுழற் கோதை
கலாமய மாகக் கலந்துநின் றாளே. (44)

வேறு பாடம்: 1. கத்தி (த) 2. ளத்தி (த) ளத்தினில் (ஆ) II.

கருத்து: சுருண்ட கூந்தலை உடைய சத்தி எங்ஙனம், முத்துப் போலும் வெள்ளொளி உடைய பளிங்குக்கல்லில், தெய்வ உருவாய்க் கலந்து நிற்கிறாளோ, அங்ஙனமே நிவிர்த்தி முதலிய கலைகளாக, உடம்பில் கலந்து விளங்குகின்றாள்.

கொண்டு கூட்டு: கோதை, செழுந்தரளத்தின் நிலாமயமாகிய நீள்படிகத் தின் சிலாமயம் ஆகும். கலாமயம் ஆகத் கலந்து நின்றாள்.

தலைவி

1202. கலந்துநின் றாள்கன்னி காதல னோடுங்
கலந்துநின் [1]றாளுயிர் [2]கற்பன வெல்லாங்
கலந்துநின் றாள்கலை ஞானங்க ளெல்லாங்
கலந்துநின் றாள்கன்னி காலமு மாமே[3]. (45)

வேறு பாடம்: 1. றாளுயிர்க் (விசு) 2. கற்பனை யெல்லாங் (எ) IV. 3. மாயே (எ) IV.

கருத்து: சத்தி சிவனோடு பிரிவின்றி நின்றே, உயிரின் அறிவு, இச்சை, செயல் என்னும் ஆற்றலாக நிற்கிறாள். உயிர் கற்று அறியும்போது, தான் அறிகின்றாள். கலைஞானங்களாகிய வேதம் முதலிய நூல்களாற் கருதப்படும் முடிபொருளாகி நிற்கிறாள். கால தத்துவத்துடன் கூடி, படைக்கப்பட்ட எல்லாவற்றுக்கும் ஒடுக்கத்தையும் அளிக்கின்றாள்.

காலமும் கலந்துநின்றாள் ஆமே என்க.

உயிருக்குத் துணை

1203. காலவி; எங்கும் கருத்தும் அருத்தியும்
கூலவி ஒன்றாகும் கூடல் இழைத்தனள்,
மாலினி, மாகுலி, மந்திர சண்டிகை,
பாலினி, பாலவன் பாகம்-அது ஆமே.

காலவி [1]யெங்குங் கருத்து மருத்தியுங்
கூலவி [2]யொன்றாகுங் கூட லிழைத்தனள்[3]
மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி [4]பாலவன் பாகம தாமே. (46)

வேறு பாடம்: 1. யங்குங் (இ) IV. 2. யொன்றாக்குங் (இ) IV. 3. விழைத்தனள் (சைவ) 4. பாலவண் (சைவ - 1)

கருத்து: காலம் அவளே. எங்கும் உள்ள உயிர்களின் எண்ணமும் விருப்பமும் கைகூட உதவுபவள். அவ்வுயிர்களில் 'ஒன்றாக' (அந்தர்யாமியாய்க் கலந்து) நிற்பவள்; மயக்கம் செய்பவள், தெளிவு தருபவள். மந்திரங்களின் ஆற்றலாய் உள்ளவள். உயிர்களைக் காப்பவள். சிவனின் இடப்பாகம் அமர்ந்தவள்.

அனுகூலவி - முதற் குறைந்து கூலவி ஆயிற்று.

நீங்காத் துணை

1204. பாகம் பராசத்தி, பைம்பொற் சடைமுடி,
ஏகம் இருதயம், ஈரைந்து திண்புயம்
மோக முகம் ஐந்து, முக்கண் முகம் தொறும்,
நாகம் உரித்து நடம் செய்யும் நாதர்க்கே.

பாகம் பராசத்தி பைம்பொற் சடைமுடி
யேக மிருதய மீரைந்து திண்புய
மோக முகமைந்து முக்கண் முகந்தொறு
நாக முரித்து நடஞ்செய்யு நாதர்க்கே. (47)

கருத்து: பொன்னிறச் சடைமுடியும், அம்மையுடன் பங்கு கொள்ளும் ஓர் உடலும், பத்துத் தோள்களும் ஐந்து முகமும், முகந்தோறும் மூன்று கண்ணும் கொண்டு, யானைப் போர்வை போர்த்து நடமாடும் சிவனுக்குப் பராசத்தி நீங்காத துணை.

கலை நிலையம்

1205. நாதனும் நால் - ஒன்பதின்மரும் கூடிநின்று
ஓதிடும் கூட்டங்கள் ஓர் ஐந்து உள; அவை
வேதனும் ஈர் - ஒன்பதின்மரும் மேவி நின்று
ஆதியும் அந்தமும் ஆகி நின்றாளே.

நாதனு நாலொன் பதின்மருங் கூடிநின்
றோதிடுங் [1]கூட்டங்க ளோரைந் துளவவை[2]
வேதனு மீரொன் பதின்மரு மேவிநின்[3]
றாதியு மந்தமு மாகிநின் றாளே. (48)

வேறு பாடம்: 1. கூடங்க (சைவ - 1) 2. துள்ளவை (ஒ) IV. 3. மேவநின் (எ) III.

கருத்து: புருடனும் முப்பத்தாறு தத்துவங்களும் கூடிநிற்கும் நிலையங்கள் ஐந்து உள. அவற்றில் பிரமன், பதினெட்டுத் தேவ கணங்கள் ஆகியோர் வந்து வணங்க, பராசத்தி ஆதியும் அந்தமும் ஆகி நிற்கின்றாள்.

ஐந்து நிலையங்கள் - நிவிர்த்தி, பிரதிட்டை, வித்யா, சாந்தி, சாந்தியதீதை என்ற கலைகள்.

ஒலிகளிலிருந்து . . .

1206. ஆகின்ற நாள், கலை ஐம்பத்தொருவர்கள்
ஆகி நின்றார்களில், ஆருயிராம் அவள்;
ஆகி நின்றாளுடன் ஆகிய சக்கரத்து
ஆகிநின்றான் அவன் ஆயிழை பாடே.

ஆகின்ற நாள்கலை யைம்பத் தொருவர்க
ளாகிநின் றார்களி லாருயி ராமவ
ளாகிநின் [1]றாளுட [2]னாகிய சக்கரத்
தாகிநின் [3]றானவ னாயிழை பாடே[4]. (49)

வேறு பாடம்: 1. றாருட (சைவ - 1) 2. னாயகி (சைவ - 1) 3. றாளவ (துடி) 4. பாலே (இ) IV.

கருத்து: படைப்புக்காலத்தில் நிவர்த்தி முதலிய ஐந்து கலைகளிலும் தோன்றும் 51 அட்சரங்களுக்கும் அதி தேவதைகள் 51 பேர். அவர்களுக்கு உயிராய் நிற்பவள் பராசத்தி. அந்த அட்சரங்களிலிருந்து உலகங்களும் உடம்புகளும் தோன்றும். அவ்வுடம்புக்குள் மந்திர மாலைகள் (மந்திர வரிசைகள்) சக்கரங்களாக அமைத்து, உபாசகராலும் யோகிகளாலும் முறையே புறவழிபாடு, அக வழிபாடும் செய்யப்பெறும். அச்சக்கரங்களுள் சத்தியுடன் சிவனும் விளங்குகின்றான். (எடுத்துக்காட்டு: திருவம்பலச் சக்கரம்)

1207. ஆயிழை யாளொடு மாதி பரமிடம்
ஆயதோ ரண்டவை யாறு மிரண்டுள
வாய மனந்தோ றறுமுக மவைதனி
லேயவார் குழலி யினிதுநின் றாளே. (அ)

பிராணசத்தி நிரம்பியது

1208. நின்றனள் நேரிழையோடு உடல் நேர்பட,
இன்று என் அகம்படி ஏழும் உயிர்ப்பு எய்தும்,
துன்றிய ஓர் ஒன்பதின்மரும் சூழலுள்
ஒன்று உயர்வு ஓதி, உணர்ந்து நின்றாளே.

நின்றன [1]ணேரிழை யோடுட னேர்பட
வின்றெ னகம்படி யேழு முயிர்ப்பெய்துந்[2]
துன்றிய வோரொன் பதின்மருஞ் சூழலு
[3]ளொன்றுயர் [4]வோதி யுணர்ந்துநின் றாளே. (50)

வேறு பாடம்: 1. னேரிழை (ஆ ஈ) II. 2. முயிர்ப்பெய்து (அ) I. 3. னொன்றிய (ஆ) II. 4. யோகி (அ ஆ ஒ) II.

கருத்து: என் அகத்துள் நின்ற சத்தியோடு, உடலில், சுழுமுனையில், மேல் முகமாக, உடலகத்துச் சக்கரங்கள் ஏழிலும் பிராணசத்தி நிறைந்தது. உடலில் உள்ள 9 வாயுக்களும் உடனாகச் சூழ, தலைமையாக நின்றது பிராணனே என்று அவள் எனக்கு உணர்த்தித் தானும் உணர்கின்றாள்.

சோதியில் சத்தி

1209. உணர்ந்து எழு மந்திரம் 'ஓம்' - எனும் உள்ளே
மணந்து எழுமாம் கதி ஆதியது ஆகும்;
குணந்து எழு சூதனும் சூதியும் கூடிக்
கணந்து எழும், காணும் அக் காமுகையாமே.

உணர்ந்தெழு மந்திர மோமெனு முள்ளே
மணந்தெழு [1]மாங்கதி [2]யாதிய தாகுங்
[3]குணந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காமுகை யாமே. (51)

வேறு பாடம்: 1. மாங்கே (இ) 2. யாகிய (எ) II. 3. குணர்ந்தெழு (எ) I கொணர்ந்தெழு (தி) (த)

கருத்து: சத்தி உயிருணர்வால் மட்டும் உணர்ந்து கொள்ளப்பட்டு, உடம்பினுள் எழுகின்ற பிரணவ மந்திரத்துடன் கலந்து எழுவாள். வீடு பேறாவாள். நாதமும் விந்துவும் அருளால் எழுந்து ஒரே ஜோதி யனுபவமாக ஆகும்போது , அக்கலப்பில் தோன்றுவாள். உயிரோடு ஒன்றி நின்று, இக்காட்சியைக் கண்டு, உயிருக்குக் காட்டுவாள்.

குணத்து, கணத்து என்பன மெலித்தல் விகாரம் பெற்றன. காமுகை - அருள்கின்ற விருப்பம் உடையவள்.

வினை முடிவு: அக்காமுகை மணந்தெழும், கதி ஆதியது ஆகும், கணந்து எழும், காணும் என்க.

மூலக் கனல்

1210. ஆம் அது அங்கியும் ஆதியும் ஈசனும்,
மா மதுமண்டலம் மாருதம் ஆதியும்
ஏமது சீவன்; சிகை அங்கு இருண்ட இடம்
கோமலர்க் கோதையும் கோதண்டம் ஆகுமே.

ஆமது வங்கியு மாதியு மீசனு
மாமது மண்டல மாருத மாதியு
மேம்து சீவன் சிகையங் கிருண்டிடங்[1]
கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே. (52)

வேறு பாடம்: 1. கிருண்டிடக் (எ) I.

கருத்து: மூலக்கனல் சத்தியும் சிவனுமாம். சந்திர மண்டலம், காற்று முதலியவை சிவனுக்குப் பாதுகாப்பாகும். நரைமயிர் கறுக்கும் நேரம் அது. சத்தி அப்போது புருவமத்தியில் விளங்குவாள்.

ஏம் - பாதுகாப்பு. கோதண்டம் - புருவமத்தி. மது - அமுதம்.

மனோன்மணி

1211. ஆகிய கோதண்டத்து ஆகும் மனோன்மணி
ஆகிய ஐம்பது உடனே அடங்கிடும்;
ஆகும் பராபரையோடு, அப்பரை அவள்;
ஆகும் அவள் ஐங்கருமத்தள் தானே.

ஆகிய கோதண்டத் தாகு மனோன்மணி
யாகிய [1]வைம்ப துடனே யடங்கிடு
மாகும் பராபரை யோடப் பரையவ
ளாகு மவளைங் கருமத்த டானே. (53)

வேறு பாடம்: 1. வைம்பத் (ஆ எ) IV.

கருத்து: உயிர்ப்பாற்றல் பெற்று விளங்கும் 'ஆணை' (ஆக்ஞைச்) சக்கரத்தில் (புருவமத்தி) மனோன்மணி விளங்குவாள். ஐம்பத்தோர் எழுபத்தொலிகளும் அப்பொழுது, அவளிடம் அடங்கும். தத்துவம் கடந்து விளங்கும் பராசத்தியும், பராபரையும் அவளே. அவள் படைத்தல் முதலிய ஐந்தொழில்களும் இயற்றுகின்றாள்.

அடியார் உயிரில் சிவம்

1212. தான்நிகழ் மோகினி, சார்வான யோகினி
போன மயம் உடையார் அடிபோற்றுவர்
ஆனவர் ஆவியின் ஆகிய அச்சிவம்
தான் ஆம் பரசிவ மேலது தானே.

தானிகழ் மோகினி சார்வான யோகினி
போன மயமுடை யாரடி போற்றுவ
ரானவ [1]ராவியி னாகிய வச்சிவந்
தானாம் பரசிவ மேலது தானே. (54)

வேறு பாடம்: 1. ராவிய (உ) I.

கருத்து: சத்தி தானே குண்டலினி சத்தியாய் இயங்குவாள். அக்குண்டலினியையும், யோகினி சத்திகளையும் கடந்து, பராசத்தி மயமாக விளங்கும் அடியார்கள், அவள் அடியைப் போற்றுவர். அவர்களின் உயிரில் விளங்கும் சிவம், பரசிவமும், பராபர சிவமும் ஆகும்.

பிரணவ யோகத்தின் பயன்

1213. தான் அந்தம் மேலே தரும் சிகைதன்னுடன்,
ஆனந்த மோகினி அம்பொன்-திருவொடு
மோனையில் வைத்து மொழிதரு கூறு அது
ஆனவை ஓம் எனும் அவ் உயிர் மார்க்கமே.

தானந்த மேலே தருஞ்சிகை தன்னுட
னானந்த [1]மோகினி யம்பொற் றிருவொடு
மோனையில் வைத்து மொழிதரு கூறது
வானவை யோமெனு [2]மவ்வுயிர் மார்க்கமே. (55)

வேறு பாடம்: 1. யோகினி (ஆ) IV. 2. மிவ்வுயிர் (வ)

கருத்து: உடம்பின் உச்சியில், முடியின்மேல் விளங்கும் சத்தி, இறுதியில் காட்சி தருவாள். அவள் ஆனந்த மோகினி. பிரணவத்தில் சிவத்துட ன் முதலில் உள்ள கூறு. பிரணவத்தில் உகரம் சத்தி; மகரம் சிவம். அவளை அடைவதே பிரணவமாகிய வழி. பிரணவம் என்பது பிரணவ யோகம்.

பிரணவ விளக்கம் திருவம்பலச் சக்கர வியலிற் கூறினார்.

கொண்டு கூட்டு: மேலே தரும் சிகைதன்னுடன் தான் அந்தம்;

நுண்ணிய ஞானமே அவள்

1214. மார்க்கங்கள் ஈன்ற மனோன்மணி, மங்கலி,
யார்க்கும் அறிய அரியாள் அவள் ஆகும்;
வாக்கும் மனமும் மருவி ஒன்றாய்விட,
நோக்கும் பெருமைக்கு நுண்ணறிவு ஆமே.

மார்க்கங்க ளீன்ற மனோன்மணி மங்கலி
யார்க்கு மறிய வரியா ளவளாகும்
வாக்கு மனமு மருவியொன் றாய்விட[1]
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாகுமே. (56)

வேறு பாடம்: 1. மருவவொன்றாவிட்டு (த); யாய்விட்ட (சைவ)

கருத்து: பல சமய நெறிகளையும் தோற்றுவித்த மனோன்மணி; மங்கலம் உடையவள்; யாராலும் அறிய முடியாதவள். அன்பரின் பாச ஞானமும், பசு ஞானமும் பதிஞானத்தில் இணைய, அந்த நுண்ணிய ஞானமாகவே அவள் நின்று, தன்னைத் தரிசிக்கத் தருவாள்.

சன்மார்க்கம்

1215. நுண்ணறிவு ஆகும் நுழைபுலன் மாந்தர்க்குப்
பின் அறிவு ஆகும் பிரான் அறிவால் தடம்
செல்நெறி ஆகும் சிவகதி சேர்வார்க்குத்
தன் நெறி ஆவது சன்மார்க்கம் ஆமே.

நுண்ணறி வாகு நுழைபுலன் மாந்தர்க்குப்
பின்னறி வாகும் பிரானறி வாற்றடஞ்[1]
சென்னெறி யாகும் சிவகதி சேர்வார்க்குத்
தன்னெறி யாவது சன்மார்க்க மாமே. (57)

வேறு பாடம்: 1. வற்றிடஞ் (ஆ இ ஈ ஒ) I; வத்தடஞ் (எ) I.

கருத்து: ஆ:ராய்கின்ற அறிவை உடைய மாந்தர்க்கு, அதன் பின்புலமாக இருந்து அறிவிக்கும் நுண்ணறிவு ஆவதும், பாசஞானம், பசு ஞானங்களுக்கும் பின் அறியும் பதிஞானம் ஆவதும் ஆகிய சிவனது பேரறிவால், வழிகண்டு, செல்லவேண்டிய இடமாகிய சிவகதியினை எய்த முயல்வார்க்கு, உரிய வழியாய் அமைவது சன்மார்க்கம்.

தீமையை ஓட்டும்

1216. சன்மார்க்கம் ஆகும் சமைதரு மார்க்கமும்;
துன்மார்க்கமானவை எல்லாம் துரந்திடும்;
நன்மார்க்கத் தேவரும் நன்னெறி ஆவதும்
சன்மார்க்கத் தேவியும் சத்தி என்பாளே.

சன்மார்க்க [1]மாகுஞ் சமைதரு மார்க்கமுந்
துன்மார்க்க மானவை யெல்லாந் துரந்திடு
நன்மார்க்கத் தேவரு நன்னெறி யாவதுஞ்
சன்மார்க்கத் தேவியுஞ் சத்தியென் பாளே. (58)

வேறு பாடம்: 1. மாகச் (எ) IV.

கருத்து: சத்தியின் அருளால் அன்பர்க்கு அமையும் மார்க்கம் சன்மார்க்கம் ஆகும். அது, தீய நெறிகளை எல்லாம் ஓட்டும். நன்மை செய்யும் தேவர்களும், சன்மார்க்கமும், அதனால் அடையப்படும் இறைவியும் சத்தியே.

பிரணவமே வழி

1217. சத்தியு நானுஞ் சயம்புவு மல்லது
முத்தியை யாரு முதலறி வாரில்லை
யத்திமேல் [1]வித்திடி லத்தி பழுத்தக்கான்
[2]மத்தியி லேற வழியது வாமே. (59)

வேறு பாடம்: 1. வித்தினா (இ) IV. 2. அத்தியி IV.

கருத்து: சத்தியும் சீவனும், சிவமும் தவிர, முத்தியை அறிவாரில்லை. தலையுச்சியில், சகஸ்ராரத்திற்கு உயிருணர்வு சென்றால், அங்குச் சத்தி - சிவத்தைத் தரிசித்து முத்தி பெறக்கூடும். ஓ - என்பதை அடுத்து மகரமெய்யை இட்டு, புருவமத்தியில் உயிருணர்வை வலிமையுடையது ஆக்கி, அப்பிரணவமந்திரத்தைத் தியானித்து, அச் சாதனை முதிரப் பெற்றால், உயிருணர்வு புருவமத்தியை விட்டுத் தலை யுச்சிக்கு ஏறும். இது ஒன்றே அதற்குரிய வழியாகும்.

இதன் விரிவைப் பின்னர் "அவத்தைகள்" பற்றிய இயல்களிற் காண்க.

விதியை வெல்லலாம்

1218. அது இது என்று அவமே கழியாதே
மது விரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதி-அது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி ஓடிட வென்றிடல் ஆமே.

அதுவிது வென்றவ மேகழி யாதே
மதுவிரி பூங்குழன் மங்கைநல் லாளைப்
[1]பதியது மேவிப் பணியவல் லார்க்கு
[2]விதிவழி [3]யோடிட வென்றிட லாமே. (60)

வேறு பாடம்: 1. பதிமது (எ) IV. 2. விதிதன்னை (சைவ) 3. தன்னையும் (எ) IV.

கருத்து: பல சமய நெறிகளையும் நாடிக் காலத்தை வீணே. கழியாமல், பராசத்தியை - சகஸ்ராரத்தில் அவள் வீற்றிருக்கும் காட்சியை - உயிருணர்வால் கண்டு வணங்கவல்லார்க்கு விதியை வெல்லவும் கூடும்.

வினையைத் தள்ளலாம்

1219. வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் றன்னையும்
வென்றிடு [1]மங்கைதாண் மெய்யுணர் வோரே[2]. (61)

வேறு பாடம்: 1. மங்கைதான் (அ ஐ) I; மங்கைதன் (எ) I. 2. வோர்க்கே (எ) IV.

கருத்து: பராசத்தியின் திருவடி ஞானம் பெறுவோர் பிராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம் ஆகிய வினைகளையும் ஐம்புலன்களையும் வெல்லலாம்.

சத்தியே மந்திரமானாள்

1220. ஓர் ஐம்பதின்மருள் தோன்றியே நின்றது;
பாரம்பரியத்து வந்த பரம் இது;
மாரம் குழலாளும் அப்பதி தானும் முன்
சாரும் பதம் இது; சத்தியும் ஆமே.

ஓரைம் [1]பதின்மருட் டோன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரமிது
[2]மாரங் குழலாளு மப்பதி தானுமுன்
சாரும் பதமிது [3]சத்தியு மாமே. (62)

வேறு பாடம்: 1. பதின்மருளொன்றியே (எ) IV. 2. வாரங் (ஆ) IV. 3. சத்திய (சைவ)

கருத்து: மாலா மந்திரங்கள் எனப்படும் ஐம்பத்தோர் எழுத்துக்களுள், அவற்றின் அதி தேவதைகளாகத் தோன்றியது, மரபு வழியாக வந்த தெய்வ வரிசையாக உள்ள பரம்பொருள், அம்மையப்பனாகத் தோன்றும் தெய்வம், பராசத்தியாக உள்ளது - இவை ஒரு தெய்வமே.

மடை மாற்றம்

1221. சத்தியினோடு சயம்புவும் நேர்படில்
வித்து-அது இன்றியே எல்லாம் விளைந்தன
அத்தகை ஆகிய ஐம்பத்தொருவரும்
சித்து-அது மேவித் திரிந்திடுவாரே.

சத்தியி னோடு சயம்புவு நேர்படில்
வித்தது வின்றியே யெல்லாம் விளைந்தன
வத்தகை யாகிய வைம்பத் தொருவருஞ்
[1]சித்தது மேவித் [2]திரிந்திடு வாரே. (63)

வேறு பாடம்: 1. சித்தனு (ஆ) IV. 2. திருந்திடு (எ) IV; திருந்திடும்வாரே (ஈ) IV சிறந்திடும்வாறே (ஒ) IV.

கருத்து: சத்தியும் சிவனும் ஒருவனுக்கு அனுபவப்பட்டால், காரணம் இன்றியே பயன் விளையும். ஐம்பத்தோர் எழுத்துக்களின் அதிதேவதைகளும் ஆன்மாவிடம் பொருந்தி, உலகியல் உணர்வினைத் தோற்றுவிப்பதினின்றும் மாறி, மெய்ப்பொருள் உணர்வைத் தோற்றுவிப்பர்.

பரமாகாயத்தில் இளம்பிறை

1222. திருந்து சிவனும் சிலை நுதலாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய்து ஏத்த,
அருந்திட அவ் இடம் ஆரமுது ஆக
இருந்தனள் தான் அங்கு இளம்பிறை என்றே.

[1]திருந்து சிவனுஞ் சிலைநுத லாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த
[2]வருந்திட வவ்விட மாரமு தாக
[3]விருந்தன டானங் கிளம்பிறை யென்றே[4]. (64)

வேறு பாடம்: 1. திருந்துஞ் (ஒ) IV. 2. வருந்தின (ஆ) I. 3. விருந்தனர் தானம் இளம்பிறையென்றே (த) 4. வென்றே (சைவ - 1)

கருத்து: உயிர்கட்கு அருளும் செவ்வி உடையவராக இருந்த சிவனையும் அம்மையையும், அவரது அருள் பெறுதற்காக எய்திய தேவர்கள் போற்றி பாடி வணங்க, யோகி தன் உடம்பில், சகஸ்ராரத்தில் அமுதம் நுகருமாறு, அங்குச் சத்தி, இளம்பிறை போன்ற எழிலுடன் வீற்றிருக்கின்றாள்.

யோகிக்குப் பரமாகாயத் தொடர்பு கிடைப்பதை உணர்த்தத் தேவர்கள் வணங்குதல் கூறப்பட்டது.

பின் 2 அடிகட்குப் பிறிதோர் பொருள்: பாற்கடலில் எழுந்த ஆலகால நஞ்சினை அமுதமாகச் சிவன் அருந்துமாறு, அங்குச் சத்தி இளம் பிறை போலே விளங்கினாள். சத்தி, விடத்தை அமுதாக்கினாள் என்பது கருத்து.

கொண்டு கூட்டு: இறுதி இரண்டு அடிகள் சிலேடைப் பொருள் தந்தன. அவ்விடம் ஆரமுதாக (சிவன்) அருந்திட, அங்குத்தான் இளம்பிறை என்றே இருந்தனள் என்றும், அவ் இடம் (யோகி) ஆரமுதாக அருந்திட, தான் இளம்பிறை என்றே இருந்தனள் என்றும் கொள்க.

வளர்ந்து விளங்கும் சத்தி எழில்

1223. என்றும் எழுகின்ற ஏரினை ஏத்தினார்
அன்று-அது ஆகுவர் தாழ்குழலாளொடு,
மன் தரு கங்கை, மதியொடு, மாதவர்
தொன்றிய தாரகை சோதி நின்றாளே.

என்று மெழுகின்ற வேரினை யேத்தினா[1]
[2]ரன்றது வாகுவர் [3]தாழ்குழ லாளொடு
[4]மன்றரு கங்கை மதியொடு மாதவர்
[5]தொன்றிய தாரகை சோதிநின் றாளே. (65)

வேறு பாடம்: 1. யேற்றினா (அ) I யெய்தினா (எ) II யெய்தினோர் (த) 2. ரான்றது (ஆ ஈ உ) I தன்றது (த) 3. தார்குழ (அனை. சுவ) I. 4. மன்றருங் (அ) I; மன்றருள் (இ ஈ) I; வான்றரு (ஆ) I. 5. துன்றிய (எ) IV.

கருத்து: சத்தி, யோகிக்குச் சகஸ்ராரத்தில், நிலைபேற்றுக்காகத் தந்தருள்கின்ற கங்கை ஆகிய அமுதம், அந்தச் சந்திர மண்டலம், முனிவர்கள் தோன்றிய நட்சத்திரங்கள், சோதி - இவை எல்லாமாகத் தானே விளங்குகின்றாள். அவளது வளரும் அழகினை யோகக் காட்சியிற் கண்டு வணங்குபவர், அவளருளால், அச்சத்திமயமே ஆகுவர்.

தாழ்குழலாளொடு - நீண்டு தாழ்ந்த கூந்தலை உடைய சத்தியின் அருளால். தோன்றிய என்பது குறுகி நின்றது.

விரும்பியதைப் பெறுவர்

1224. நின்றனள் நேரிழையாளொடு நேர்பட
ஒன்றிய உள்ளொளியாலே உணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடும், ஞானங்கள் தோன்றிடும் தானே.

நின்றன ணேரிழை யாளொடு நேர்பட
ஒன்றிய [1]வுள்ளொளி யாலே யுணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய[2]
[3]துன்றிடு [4]ஞானங்க டோன்றிடுந் தானே. (66)

வேறு பாடம்: 1. துள்ளொளி (த) 2. வேண்டிட (ஈ) IV வேண்டிய (ஓ) I. 3. துன்றிய (ஆ) IV. 4. மாதவந் (ஈ) IV.

கருத்து: அங்ஙனம் பலவாறு நின்றவளாகிய பராசத்தியுடன் நேராக அனுபவம் உற்றமையால், உள்ளொளியாம் ஞானம் பெற்று, அதில் முன்னேறும் யோகிகள், தமது சித்தத்தில் வேண்டுவன எய்தும் ஞானம் மேலும் பெருகும்.

தெய்வக் காட்சி

1225. தோன்றிடும் வேண்டுஉரு ஆகிய தூய்நெறி,
ஈன்றிடும் ஆங்கு அவள் எய்திய பல்கலை,
மான்தரு கண்ணியும் மாகனும் வந்து எதிர்
சான்று - அது ஆகுவர் தாம் அவள் ஆயுமே.

தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி
யீன்றிடு மாங்கவ ளெய்திய பல்கலை
மான்றரு கண்ணியு [1]மாகனும் வந்தெதிர்
சான்றது வாகுவர் தாமவ ளாயுமே. (67)

வேறு பாடம்: 1. மாரனும் (எ) IV.

கருத்து: அன்பர் விரும்பிய வடிவத்தைச் சத்தி மேற்கொள்ளும் தூயநெறி தோன்றும். சத்தியைப் பொருளாகக் கொண்ட பல கலைகளின் ஞானம் எய்தும். உமாதேவியும் சிவனும் சத்தி சொரூபமே ஆயினும், வேறு வேறாக யோகியின் எதிரே தோன்றி, அப்பரம் பொருளுண்மைக்குச் சான்று பகர்வர்.

நுண்ணியள்; பெரியள்

1226. ஆயும் அறிவும் கடந்த அணுவாரணி,
மாயம் - அது ஆகி, மதோமகி ஆயிடும்
சேய அரிவை, சிவானந்த சுந்தரி,
நேயம் - அது ஆய், நெறியாகி நின்றாளே.

ஆயு மறிவுங் [1]கடந்தணு வாரணி
மாயம [2]தாகி மதோமகி யாயிடுஞ்
சேய வரிவை சிவானந்த சுந்தரி
நேயம [3]தாய்நெறி யாகிநின் றாளே. (68)

வேறு பாடம்: 1. கடந்தனு (உ) I கடந்தனி (இ ஈ) I; கடந்தவ னோரணி (ஆ) IV. 2. தாய் மகதோமகி (இ) IV தாகிய (ஓ) II. 3. தாநெறி (சைவ)

கருத்து: நுண்ணிதாக அறியும் அறிவையும் கடந்து விளங்கும் - அணுவுக்கு அணுவானவள். இல்லை என்றும் சொல்லப்படும் நிலை எய்துவாள். பெரியதற்குப் பெரிதாய் நிற்பாள். உலகப் பொருள்களை எல்லாம் கடந்து நிற்கும் பெண். சிவானந்த சுந்தரி. அன்பரின் அன்பாகக் கலந்தும், அவர் மேற்கொண்ட நெறியாயும் நின்றாள்.

1 ஆம் அடி, 3, 4 ஆம் சீர்கள்: (ஆ) சுவடியில் உள்ள "கடந்த அனோரணி" என்ற பாடம் 'அணோரணி' என்ற வடசொல்லைக் கொண்டுள்ளது. தற்பவமாக்கிச் கொள்ளுதலே பழைய மரபு ஆதலாலும், பெரும் பாலான சுவடிகளில் 'அணு வாரணி' என்ற பாடத்தை ஒத்த பாடமே உள்ளமையாலும், இப்பாடம் கொள்ளப்

பட்டது. 2 ஆம் அடி, 2, 3 ஆம் சீர்கள்: (இ - சுவடியில் உள்ள 'மகதோமகி' என்ற பாடம் ஈண்டு உரிய வடமொழி எழுத்தைக் கொண்டுள்ளது. மேலதைப்போலவே, தறபவமே பிற சுவடிகளில் எல்லாம் காணப்படுவதால், "மதோமகி" என்ற பாடமே கொள்ளப் பட்டது.

சிவமே சத்தி

1227. நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞக னோடுங்
குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கு
மறிவொடு மாங்கே யடங்கிட லாமே. (69)

கருத்து: தன்னை எய்தும் வழியும் தானேயாய் நின்ற பராசத்தியை, சிவத்தினிடமிருந்து வேறாகக் கருதாமல், சகஸ்ராரத்தில் கண்டு, தியானித்துச் சமாதி கூடலாம்.

ஆனந்தப் பாட்டு

1228. ஆம் அயன் மால் அரன் ஈசன் மாலாங்கதி
'ஓம்'- மயம் ஆகிய ஒன்பதும் ஒன்றிட,
தேம்மயன் நாளும் 'தெனாதென' என்றிடும்
மா மயமானது வந்து எய்தலாமே.

ஆமயன் மாலர [1]னீசன்மா லாங்கதி
யோமய மாகிய வொன்பது மொன்றிடத்
தேமய னாளுந் தெனாதென வென்றிடு
[2]மாமய மானது வந்தெய்த லாமே. (70)

வேறு பாடம்: 1. னீசன்மே (த) 2. வாமய (ஆ) I.

கருத்து: பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் ஆகியோர் விரும்பும் கதியில் (சிவானந்தநிலை) மூலாதாரம் முதல் சகஸ்ராரம், துவாதசம், துவாதசாந்தம் - என்ற ஒன்பது நிலைகளிலும் பிராண சத்தி பொருந்தி, இறுதியாகச் சிவத்தில் ஒடுங்க, ஆன்மா இனிமை நிரம்பி, தேன் உண்ட வண்டு போலப், பாடும் ஆனந்தநிலை வந்து எய்தும்.

மால் - (1 ஆம் அடி 4 ஆம் சீர்) விருப்பம். தேம் - இனிமை. மா - வண்டு.

சொன்னாலே உயர்வு

1229. வந்து அடிபோற்றுவர் வானவர் தானவர்,
இந்து முதலாக எண்திசையோர்களும்
கொந்து அணியும் குழலாளொடு கோனையும்
வந்தனை செய்யும் வழி நவில்வீரே.

வந்தடி போற்றுவர் வானவர் தானவ
ரிந்து முதலாக வெண்டிசை யோர்களுங்
கொந்தணி [1]யுங்குழ லாளொடு கோனையும்
வந்தனை செய்யும் [2]வழிநவில் வீரே. (71)

வேறு பாடம்: 1. பூங்குழ (ஆ) IV. 2. வழிநவிலீரே (ஐ ஓ) IV.

கருத்து: பூங்கொத்தினை அணிந்த கூந்தலினை உடையவளோடு உடனாய சிவனை, சகஸ்ராத்திற் கண்டு வழிபடும் யோக நெறியைக் கூறினாலே, உங்களைத் தேவரும் அசுரரும், இந்திரன் முதலிய திக்குபாலகரும் வணங்குவர்.

சத்தி வழிபாடே சிவவழிபாடு

1230. நவிற்றும் நல் மந்திரம், நன்மலர், தூபம்
கவற்றிய கந்தம், கவர்ந்து எரி தீபம்,
பயிற்றும் உலகினில் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்கு ஓர் அர்ச்சனை தானே.

நவிற்றுநன் மந்திர [1]நன்மலர் தூபங்
கவற்றிய கந்தங் கவர்ந்தெரி தீபம்
பயிற்று முலகினிற் [2]பார்ப்பதி பூசை
யவிக்கொண்ட சோதிக்கொ ரர்ச்சனை தானே[3]. (72)

வேறு பாடம்: 1. நாண்மலர் (ஆ) IV. 2. பார்வதி (ஓ) IV. 3. யாமே (த)

கருத்து: மந்திரம், மலர், தூபம், தீபம் - இவை கொண்டு சத்திக்குச் செய்யும் வழிபாடு சோதி வடிவாகிய சிவத்திற்குச் செய்யும் பூசையுமாம்.

அவி - தற்போதம் என்ற அவிப் பொருள்.

ஒருவனே இருவராய் . . .

1231. தாங்கி உலகில் தரித்த பராபரன்,
ஓங்கிய காலத்து ஒருவன், உலப்பு - இலி,
பூங்கிளி தங்கும் புரிகுழலாள் அன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே.

தாங்கி யுலகிற் றரித்த பராபர
னோங்கிய காலத் தொருவ னுலப்பிலி
பூங்கிளி [1]தங்கும் புரிகுழ லாளன்று
பாங்குட னேற்பப் பராசத்தி போற்றே. (73)

வேறு பாடம்: 1. தாங்கும் (த).

கருத்து: உலகைப் படைத்துக் காத்து, அதை அழித்த பின்பும் நிலைபெற்றுநிற்கும் ஒருவனேயாய், அழிவின்றி நிற்கும் பராபரன் ஆகிய சிவன், உலகம் விரிந்த காலத்தில், சத்தியை ஒரு பாகத்தில் ஏற்ப, அவள் பராசத்தி ஆகிட, இருவரும் இறைவர் ஆயினர். ஒருவனே இருவர் ஆனான். இதை அறிந்து, அவர்களை வணங்கு.

அவளை வணங்கி வாழ்க

1232. பொற்கொடி மாதர் புனைகழல் ஏத்துவர்
அற்கொடி மாதும் என் ஆர்வத் தலைமகள்,
நற்கொடி மாதை, நயனங்கள் மூன்று உடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே.

பொற்கொடி மாதர் புனைகழ லேத்துவ
ரற்கொடி [1]மாதுமெ னார்வத் தலைமக
ணற்கொடி மாதை நயனங்கண் மூன்றுடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே. (74)

வேறு பாடம்: 1. மாதுமை யார்வத் (எ) IV.

கருத்து: கரிய கொடி போலும் சத்தி என் அன்புக்குரிய தலைவி. அவள் திருவடிகளைத் திருமகளும் கலைமகளும் பாடிப்பரவி வணங்குவர். மூன்று கண் உடைய, ஒளிவடிவினளாகிய அவளை வழிபட விரும்பி , என்றும் நிலைபெற்று விளங்குவாயாக.

விற்கொடி - ஆணைச் சக்கரத்தைக் குறிக்கும். எனவே ஆணையில் (புருவ மத்தியில்) வீற்றிருக்கும் சத்தியை இங்குக் கூறினார் என்க.

பெரும் பேறு

1233. விளங்கு ஒளி ஆய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கு இருள் நீங்கக்
களம்கொள் மணியுடன் காம வினோதம்
உளம்கொள் இலம்பியம், ஒன்று தொடரே.

விளங்கொளி யாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிரு ணீங்கக்
களங்கொண் மணியுடன் காமவி னோத
முளங்கொளி [1]லம்பிய [2]மொன்று தொடரே. (75)

வேறு பாடம்: 1. லம்புய (ஆ) I. 2. மொன்றத் (இ) IV.

கருத்து: ஒளி வீசும் சுடர் பொருந்திய மாலை அசையும் கழுத்தை உடைய பராசத்தி, ஆன்மாவில் நிறைந்து கிடக்கும் ஆணவமலம் ஆகிய இருள் நீங்குமாறு, நீலகண்டம் உடைய சிவனுடன் இணைந்து இருத்தலைத் திருவுளம் பற்றினாள். அவள் நமக்கு ஒரு பேறு. அவளுடன் ஒன்றியிருத்தலைத் தொடர்ந்து மேற்கொள்க.

விசுத்தி எனப்படும் கழுத்தில் வீற்றிருக்கும் சத்திக்கு ஐம்பத்தொரு எழுத்துக்கள் ஆகிய மாலாமந்திரங்கள் மாலையாக, கழுத்து முதல், தொப்புள்வரை விளங்கும். காமவினோதம் - உயிர்கட்கு அருளுதற்கு இச்சை கொண்டு, அதன் பொருட்டு இறைவனுடன் சேர்ந்திருத்தல்.

கருணைக்கடல்

1234. தொடங்கி உலகினில், சோதி மணாளன்
அடங்கி இருப்பது என்? அன்பின் பெருமை;
விடம்கொள் பெருஞ்சடைமேல் வரு கங்கை
ஒடுங்கி, உமையொடும் ஓர் உரு ஆமே.

தொடங்கி யுலகினிற் சோதி மணாள
னடங்கி [1]யிருப்பதெ னன்பின் பெருமை
விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை
[2]யொடுங்கி யுமையொடு மோருரு வாமே. (76)

வேறு பாடம்: 1. யிருப்பன (ஆ) IV. 2. யொடுங்கும் பிரானொடு (இ ஈ) II ஒடுங்க (த)

கருத்து: ஒளி வடிவாகிய சத்தியும் சிவமும், உலகப் படைப்புக் காலம் தொடங்கி, உயிர்களோடு ஒன்றாகியும் உடனாகியும் இருப்பது எதற்கு? அதுவே அவர் உயிர்களிடம் கொண்ட அன்பின் பெருமையாகும். பெருகிவந்த கங்கையை, நஞ்சையுடைய பாம்பினை அணிந்த சடையில் ஒடுக்கிக் கொண்ட அந்தக் கருணாமூர்த்தி, உமையம்மையை இடப்பாகத்திற் கொண்டு ஒரே வடிவாகவும் உள்ளான்.

அவர்கள் செய்த மாயம்

1235. உருவம் பல உயிராய் வல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிப்
புரிவளைக் கைச்சி எம் பொன்அணி மாதை
மருவி இறைவன் மகிழ்வன மாயமே.

உருவம் [1]பலவுயி ராய்வல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிப்[2]
புரிவளைக் [3]கைச்சியெம் பொன்னணி மாதை
மருவி யிறைவன் மகிழ்வன மாயமே. (77)

வேறு பாடம்: 1. பலவுமுருவாய (அ) IV; ராயல்ல (ஒ) I; ராய்வல் (ஈ) I. 2. நாடிற் (எ) IV. 3. கச்சி யெம் (ஈ) I.

கருத்து: நந்தி பல உருவம் உடைய உயிர்களாக உலகில் விளங்குவதை ஆராய்ந்தால், அந்த இறைவன், சத்தியைக் கலந்து நின்று, படைத்த படைப்பு அது. அவர்கள் செய்த மாயம் அது!

பெறுதற்குரிய பேறு

1236. மாயம் புணர்க்கும் வளர்சடையான் அடித்
தாயம் புணர்க்கும் சலம் தீ அமலனைக்
காயம் புணர்க்கும் கலவியுள் மா சத்தி
ஆயம் புணர்க்கும் அவ் யோனியும் ஆமே.

மாயம் புணர்க்கும் வளர்சடை யானடித்[1]
[2]தாயம் புணர்க்குஞ் [3]சலந்தீ யமலனைக்
காயம் புணர்க்குங் [4]கலவியுண் மாசத்தி
யாயம் புணர்க்குமவ் வியோனியு மாமே. (78)

வேறு பாடம்: 1. யானடிக் (ஆ) I. 2. காயம் (ஆ ஓ) I. 3. சலந்தி (ஆ எ) I. 4. கலவி (உ) II.

கருத்து: மாயையினின்று உலகையும் உடம்பையும் தோற்றுவித்து, அவற்றில் உயிர்களைச் சேர்க்கின்ற சிவபெருமானது திருவடி, அவ்வுயிர்கள் பெறுவதற்கு உரிமையுடைய பேறு ஆகும். சிவனுடன் கலந்துநின்று, உயிர்க் கூட்டத்தை உடல்களில் சேர்த்துப் பிறப்பிப் பவளாகிய பராசத்தியே, திருவடிப் பேற்றை அடைய உதவும் மூலக்கனலாகவும் உடம்பினில் உள்ளாள்.

தாயம் - உரிமை. "உயிர் தானும் சிவானந்தம் ஒன்றற்கே உரித்து" என்பவாகலான் சிவானந்தம் தருவதாகிய திருவடியைத் தாயம் என்றார். உரிமை உடையதை 'உரிமை' என்றே கூறியது ஆகுபெயர். சலம் தீ - சுக்கிலமாகிய நீரே கனலாகின்றது ஆதலின் 'சலம் தீ' என்றார்.

யோனி - பிறப்பு. பிறப்புக்குக் காரணம் (நிமித்த காரணம்) ஆகும் சத்தியைப் 'பிறப்பு' என்றே கூறினார். பிறப்பிக்கும் சத்தியே, பிறப்பறுத்து வீடு பெறுதற்கும் காரணம் ஆகின்றாள் என்பது கருத்து.

அருளைப் பெற்றேன்

1237. உணர்ந்து - ஒழிந்தேன் நுவல் நாமங்கள் ஈசன்;
புணர்ந்து - ஒழிந்தேன் புவனாபதியாரை;
அணைந்து - ஒழிந்தேன் எங்கள் ஆதிதன் பாதம்
பிணைந்து - ஒழிந்தேன் தன் அருள் பெற்றவாறே.

[1]உணர்ந்தொழிந் [2]தேனுவ [3]னாமங்க ளீசன்[4]
புணர்ந்தொழிந் தேன்புவ னாபதி யாரை[5]
யணைந்தொழிந் தேனெங்க ளாதிதன் பாதம்
பிணைந்தொழிந் [6]தேன்ற னருள்பெற்ற வாறே. (79)

வேறு பாடம்: 1. புணந்தெழுந் தெண்ணுவ (ஆ) IV. 2. தேனவ (எ) IV. 3. னாமெங்க (இ ஈ எ) IV. 4. ளீசனை (எ) II. 5. யானை (த) 6. தென்றென் றருள்பெற்ற (இ) IV.

கருத்து: சொல்லப்படுகின்ற அவனுடைய திருப்பெயர்களை உணர்ந்தேன். புவனாபதியாம் சத்தியின் திருவருளை என் அறிவோடு கலக்கப்பெற்றேன். முதல்வனின் திருவடியில் கலந்தேன். இறைநெறியில் ஈடுபட்ட நான், அவனது அருள்பெற்ற முறைமை இது.

சத்தியே குரு

1238. பெற்றான் பெருமை, பெரிய மனோன்மணி
நற்றாள், இறைவனே நன்பயனே என்பர்,
கற்றான் அறியும் கருத்து அறிவார்கட்குப்
பொற்றாள் உலகம் புகல் தனி ஆமே.

[1]பெற்றான் பெருமை பெரிய மனோன்மணி
நற்றா [2]ளிறைவனே [3]நன்பய னேயென்பர்[4]
கற்றா [5]னறியுங் கருத்தறி வார்கட்குப்[6]
பொற்றா [7]ளுலகம் புகறனி யாமே. (80)

வேறு பாடம்: 1. பெற்றாள் (எ) IV பெற்றாளருமை (ஈ) IV. 2. ளிறைவருன் (ஈ) IV. 3. நயன்பய (அ) I; நன்பல (ஒ) I; நற்பய (சைவ) 4. னென்பர் (இ) II னேனென்பர் (ஓ) I. 5. ரறியுங் (ஐ) IV. 6. வார்க்குப் (ஓ) II. 7. ருலகம் (ஐ) IV.

கருத்து: பராசத்தியின் திருவடிகளைப் பெற்றவனின் பெருமை, அதன் பயனாக, இறைவனை உணர்தலே ஆகும். அம்மை திருவடிகளில் அவன் பெறும் ஞானம் இறைவன் திருவடியில் வீடுபேற்றை எய்துவிக்கின்றது.

முதல் 2 அடிகளில் கொண்டு கூட்டு: பெரிய மனோன்மணி நற்றாள் பெற்றான் பெருமை, இறைவனே நன்பயனே என்பர்.

உருக வைத்தது உன் அருள்

1239. தனி நாயகன் தன்னோடு என் நெஞ்சம் நாடி
இனியார் இருப்பிடம் ஏழ் - உலகு என்பர்;
பனியால் மலர்ந்தவை போதுகை ஏந்திக்
கனியா நினைவது என் காரணம் அம்மையே?

தனிநாய கன்றனோ [1]டென்னெஞ்ச நாடி
[2]யினியா ரிருப்பிட மேழுல கென்பர்
பனியான் [3]மலர்ந்தவை போதுகை யேந்திக்
[4]கனியா [5]நினைவதென் காரண மம்மையே. (81)

வேறு பாடம்: 1. டென்னெஞ்சை (ஆ) IV. 2. யினியாள் இருப்பிடம் (த) 3. மலர்ந்தமைப் (ஆ) IV. மலர்ந்தவைம் (எ) III. 4. கனியாய் (சுவ) V. 5. நினைந்தேன் (ஆ) IV நினைவதன் (ஈ) I.

கருத்து: இனியவராகிய சிவனும் சத்தியும் ஏழு உலகங்களிலும் உறைகின்றார் என்பர். ஆனால், அம்மையே, குளிர்ச்சியுடன் மலர்ந்த மலர்களை ஏந்தி, உன்னை உன் ஒப்பற்ற நாயகனுடன் என் உள்ளம் ஆராய்ந்து, அன்பினால் கனிந்து, நினைப்பதற்கு என்ன காரணம்? உன் அருளே அல்லவோ?

மனைத்தலைவி

1240. அம்மனை அம்மை அரிவை மனோன்மணி
செம்மனை செய்து, திருமங்கையாய் நிற்கும்,
இம்மனை செய்த இருநில மங்கையும்
அம்மனை ஆகி அமர்ந்து நின்றாளே.

[1]அம்மனை யம்மை யரிவை மனோன்மணி
செம்மனை செய்து திருமங்கை யாய்நிற்கு
மிம்மனை செய்த [2]விருநில மங்கையு
மம்மனை யாகி யமர்ந்துநின் றாளே. (82)

வேறு பாடம்: 1. அம்மை யுமையாளரிவை (ஆ) IV. 2. விந்நில (சண்).

கருத்து: ஏழாவது ஆதாரம் ஆகிய சகஸ்ராரத்தின் தலைவியாகிய மனோன்மணி, வீடுபேறு என்ற மனையையும் ஆக்கி, ஞானச்செல்வி யாக வீற்றிருப்பாள். உடம்பாகிய வீட்டைப் படைத்த பிரகிருதி மாயையும் ஒரு வகையில் தாயே ஆவாள்.

உலகப்பன் - உலகம்மை

1241. அம்மையும் அத்தனும் அன்பு உற்றது அல்லது
அம்மையும் அத்தனும் ஆர் அறிவார் என்னை;
அம்மையொடு அத்தனும் யானும் உடன் இருந்து
அம்மையொடு அத்தனை யான் புரிந்தேனே.

அம்மையு மத்தனு மன்புற்ற தல்லது
வம்மையு [1]மத்தனு மாரறிவா ரென்னை
யம்மையொ டத்தனு மியானு முடனிருந்
தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே. (83)

வேறு பாடம்: 1. மப்பனு (ஐ) III.

கருத்து: உலகுக்குத் தாயும் தந்தையும் ஆகிய சத்தியும் சிவனும் என்னிடம் அன்புற்றனரே அன்றி என்னைப் பெற்ற தாய் தந்தையர் எவ்வாறு முன்பாகவே அறிவர்? அவ்வருளால், அம்மையப்பனாக இறைவனைக் கண்டு கூடி, மேலும் மேலும் அன்பு செய்கின்றேன்.

62. ஏரொளிச் சக்கரம்

பிராசாத யோகம்

1242. ஏர் ஒளி உள் எழு தாமரை நால் இதழ்;
ஏர் ஒளி விந்துவினால் எழும் நாதமாம்;
ஏர் ஒளி அக்கலையெங்கும் நிறைந்தபின்
ஏர் ஒளிச்சக்கரமாம்; நடு வன்னியே.

ஏரொளி யுள்ளெழு தாமரை நாலித
ழேரொளி விந்துவி னாலெழு நாதமா
மேரொளி யக்கலை யெங்கு நிறைந்தபி
னேரொளிச் சக்கர [1]மாநடு வன்னியே. (1)

வேறு பாடம்: 1. மன்னிடும் (இ ஈ) IV; மந்நடு (எ) IV.

கருத்து: ஏரொளிச் சக்கரம் யாது எனப் பொதுவாகக் கூறுகின்றார். உடம்பினுள் மூலாதாரத்தில் உள்ள நான்கு இதழ்த் தாமரையில், குண்டலி சத்தி உறைவதால், அது ஒளி உடையது. அஃது மேல் நோக்கி எழும் இயல்புடையது. அச்சத்தியின் துணையால், சுக்கிலம் தீயாக மாற்றப்பட்டு ஆணை என்ற சக்கரம் வரை (புருவமத்தி) சென்று, பின்பு அருட்சத்தியின் துணையால், தலையில் நாதமாகவும் (ஒலி) விந்தாகவும் (ஒளி) எழும். அது பிரணவம் ஆகிய நாதம். அந்த யோகம் 'பிரணவ யோகம்' அல்லது 'பிராசாத யோகம்' ஆகும். பிராசாத கலைகள் 12. அவை, அக்கினிகலை 64 - ஆக உள்ள மூலக்கனலுடன் இணையும். ஆதலால் இப்பிராசாத கலைகளுக்கு உரிய 12 எழுத்துக்களும் 'அக்கினி எழுத்து' எனப்படும்.

'சந்திர யோகம்' என்ற முன்னை அதிகாரத்தில், "பத்தும் இரண்டும்" எனத் தொடங்கும் பாடலில், "பத்தினொடு ஆறும் உயர்கலை பான்மதி, ஒத்த நல் அங்கியது எட்டெட்டு உயர்கலை" எனக் கூறியமை காண்க. சந்திரகலை பதினாறனுள் முதல் 10 - ம் (வியாபினி வரை) இறுதியில்

உள்ள சமனை, உன்மனை என்பவையும், ஆக 12 - ம் பிராசாத கலைகள் எனப்படும்.

பிரணவமே 'ஏரொளிச் சக்கரமாக அமையும். இதன் மையமாக அமைவது சிவம். இது மகார எழுத்தால் குறிக்கப்படுவது. "திருவம்பலச் சக்கரம்" என்ற அதிகாரத்தில், "அகாரம் உயிரே" எனத் தொடங்கும் பாடலில், "மகாரம் சிவமாய் வரும் முப்பதத்தில்" (இப்பதிப்பு 810) என வருதல் காண்க. சிவத்தை 'வன்னி' என்றது, உயிருணர்வு அக்கினி கலைகளின் ஆற்றலைப் பெற்று, பிரசாத கலைகளுடன் ஒன்றிச் சிவத்துடன் ஒன்றி நிற்றலால் என்க. எனவே, வன்னி, உயிருணர்வில் விளங்கும் சிவ ஒளி எனக் கொள்க.

பிராசாத மந்திரம்

1243. வன்னி எழுத்து - அவை மாபலம் உள்ளன;
வன்னி எழுத்து - அவை வான்உற ஓங்கின,
வன்னி எழுத்து - அவை மாபெருஞ் சக்கரம்,
வன்ளி எழுத்து இடுமாறு - அது சொல்லுவாம்.

வன்னி யெழுத்தவை மாபல முள்ளன
வன்னி யெழுத்தவை வானுற வோங்கின[1]
வன்னி யெழுத்தவை மாபெருஞ் சக்கரம்
வன்னி [2]யெழுத்திடு மாறது சொல்லுவாம்[3] (2)

வேறு பாடம்: 1. வோங்கிடும் (ஐ) IV. 2. யெழுத்திடும் வாறது (சண்) 3. சொல்லுமே (எ) II.

கருத்து: அருட் சத்தியால் குளிர்ந்த அக்கினிச் சோதியாக உள்ள உயிரின் உணர்வில் ஒளி வீசும் சிவம் வன்னி எனப்படும். அவனை அடைவதற்குரிய பிராசாத கலைகளுக்கு உரிய மந்திர எழுத்துக்கள் மிக்க வலிமை உடையவை. அவை பரமாகாயம் வரை ஆற்றலைச் செலுத்துவன. அவை 'ஏரொளிச் சக்கரமாக' அமையும். பிரணவமே இச்சக்கரமாக அமையும் என்பதை உணர்த்தப் பிராசாத கலை 12க்கும் உரிய எழுத்துக்கள் பன்னிரு சக்கரங்களாக அமைக்கப் படும். இச்சக்கரத்தின் அறைகளில் இவ்வெழுத்துக்களை அடைப்பது பற்றிக் கூறுவோம்.

ஏரொளிச் சக்கரம்

(1245 முதல் 1250 வரை உள்ள பாடல்களில் குறிக்கப் பெறுவது)

அகர கலாய நம: ஹ்லாம்	அ	ஆ	இ	ஈ	உகர கலாய நம: ஹ்ரீம்	ஆ	இ	ஈ	உ
	உ	ஊ	ரு	ரூ		ஊ	ரு	ரூ	லு
	லு	லூ	அம்	அஃ		லூ	அம்	அஃ	அ
	ஐ	ஐ3	ஓ	ஓ3		ஐ	ஐ3	ஓ	ஓ3
அர்த்த சந்த்ர கலாய நம:	உ	ஊ	ரு	ரூ	நாத கலாய நம:	ரு	ரூ	லு	லூ
	லு	லூ	அம்	அஃ		அம்	அஃ	அ	ஆ
	அ	ஆ	இ	ஈ		இ	ஈ	உ	ஊ
	ஐ	ஐ3	ஓ	ஓ3		ஐ	ஐ3	ஓ	ஓ3
நிரோதினி கலாய நம:	ஊ	ரு	ரூ	லு	நாதாந்த கலாய நம:	ரூ	லு	லூ	அம்
	லூ	அம்	அஃ	அ		அஃ	அ	ஆ	இ
	ஆ	இ	ஈ	உ		ஈ	உ	ஊ	ரு
	ஐ	ஐ3	ஓ	ஓ3		ஐ	ஐ3	ஓ	ஓ3

ஏரொளிச் சக்கரம்

(1245 முதல் 1250 வரை உள்ள பாடல்களில் குறிக்கப் பெறுவது)



எத்தனை எழுத்து

1244. சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாம்;
சொல்லிடும் அப்பதி அவ்-எழுத்து ஆவன
சொல்லிடும் நூறொடு நாற்பத்து நால் உருச்
சொல்லிடு சக்கரமாய் வரும் மேலதே.

[1]சொல்லிய விந்துவு மீராறு நாதமாஞ்[2]
[3]சொல்லிடு மப்பதி யவ்வெழுத் தாவன[4]
[5]சொல்லிடு நூறொடு நாற்பத்து நாலுருச்[6]
சொல்லிடு சக்கர மாய்வரு மேலதே[7]. (3)

வேறு பாடம்: 1. சொல்லிடில் (ஆ) IV. 2. நாதமுஞ் (இ) IV. 3. சொல்லிடில் (அ) IV. 4. தாமெனச் (ஆ) IV. 5. சொல்லிய (அ) IV. 6. நாலுமாய்ச் (ஆ ஈ) IV. 7. ஞாலமே (த)

கருத்து: முன்னைப் பாடலில் (1243) கூறிய விந்து, 12 பிராசாத கலைகளை உடைய பிரணவ ஒலியாகவும் கேட்கப்படும். இக்கலைகளுக்கு உரிய மந்திர எழுத்துக்கள் 144 - ம் சிவனது திருவைந்தெழுத்தை ஒத்தவை. இந்த 144 எழுத்துக்கள் ஏரொளிச் சக்கரமாய் அமைக்கப்படும்.

மேலது - பிரணவம். பிராசாத கலை 12 ஆவன: அ, உ, ம, விந்து, அர்த்த சந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, சமனை, உன்மனி என்பவை. வடமொழி உயிரெழுத்துக்கள் பதினாறும் ஒருசக்கரத்தின் 16 அறைகளிலும் எழுதப்படும். இவ்வாறு 12 சக்கரங்கள் அமைக்கப்படும். 12 சக்கரத்திலும் இவ்வாறு 192 எழுத்துக்கள் அமையும். அவற்றுள் ரு, ரூ, ளு, ளூ, என்ற நான்கை விட்டு எண்ண, 144 எழுத்துக்கள்.

பன்னிரு சக்கர அமைப்பு

1245. மேல்வரும் விந்துவும் அவ்வெழுத்து ஆய்விடும்
மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்;
மேல்வரும் அப்பதி அவ்வெழுத்தே வரின்
மேல்வரும் சக்கரமாய் வரும் ஞாலமே.

மேல்வரும் விந்துவு மவ்வெழுத் தாய்விடு[1]
மேல்வரு நாதமு [2]மோங்கு மெழுத்துடன்
மேல்வரு மப்பதி [3]யவ்வெழுத் தேவரின்
மேல்வரு சக்கர மாய்வரும் ஞாலமே. (4)

வேறு பாடம்: 1. தாயிடு (ஆ ஒ) IV. 2. மொக்கு (ஆ) I. 3. மவ்வெழுத் (இ, ஈ) I.

கருத்து: வடமொழி நெடுங்கணக்கில், உயிரெழுத்துக்களின் இறுதியில் உள்ள 'அம்' என்ற விந்துவும், அஃ என்ற நாதமும் பிராசாத கலைகளுக்கு உரிய எழுத்துக்களின் தொகுதியில், அதாவது உயிரெழுத்து 16 - இல் அடங்கும். பிராசாத கலை 12 க்கும் 12 சக்கரங்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு சக்கரமும் அக்கலைக் குரிய எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்டு அமைக்கப்படும். தியானத்திற்கு உள்ள இச்சக்கரம் புறவழிபாட்டிற்காகச் செப்புத் தகட்டில் அமைக்கப்படும்.

மந்திரமே உலகம்

1246. ஞாலம் - அது ஆக விரிந்தது சக்கரம்;
ஞாலம் - அது ஆயிடும் விந்துவும் நாதமும்;
ஞாலம் - அது ஆயிடும் அப்பதி யோசனை;
ஞாலம் - அது ஆக விரிந்தது எழுத்தே.

ஞாலம தாக விரிந்தது சக்கரம்
ஞாலம [1]தாயிடும் விந்துவு நாதமும்
ஞாலம தாயிடு மப்பதி யோசனை
ஞாலம தாக விரிந்த தெழுத்தே[2]. (5)

வேறு பாடம்: 1. தாய் விடும் (பதிப்) 2. வெழுத்தே (த)

கருத்து: இச்சக்கரமாகிய பிரணவமே உலகங்களின் தோற்றத்திற்குக் காரணம். பரசிவம் சுத்தமாயையைக் கலக்கி விந்துவாகவும் நாதமாகவும் நிற்கும். அவை உலகத்தோற்றத்திற்கு அடிப்படை (நிமித்தகாரணம்) ஆகும். சிவத்தின் சங்கற்பமே உலகங்களைத் தோற்றுவிக்கும். உலகங்களாக விரிந்துள்ளவை இச்சக்கரத்தின் 144 எழுத்துக்களே.

சக்கர வரிசை - I

1247. விரிந்த எழுத்து - அது விந்துவும் நாதமும்;
விரிந்த எழுத்து-அது சக்கரமாக;
விரிந்த எழுத்து-அது மேல்வரும் பூமி,
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே.

விரிந்த [1]வெழுத்தது விந்துவு நாதமும்
விரிந்த [2]வெழுத்தது சக்கர மாக
விரிந்த [3]வெழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த வெழுத்தினி லப்புற மப்பே. (6)

வேறு பாடம்: 1. 2. 3. வெழுத்தவை (ஆ) IV.

கருத்து: சுத்தமாயையில் முதலில் நாதமும் விந்துவும் தோன்றின. அவற்றின் விரிவுகளான ஒலி எழுத்துக்கள் சக்கரமாக அமையும் போது, முதலில் பிருதிவி சக்கரமும், அதன் பிறகு அப்பு சக்கரமும் அமையும்.

சக்கர வரிசை - II

1248. அப்பு - அது வாக விரிந்தது சக்கரம்,
அப்பினில் அப்புறம் அவ்வனல் ஆயிடும்,
அப்பினில் அப்புறம் மாருதமாய் எழ,
அப்பினில் அப்புறம் ஆகாசம் ஆமே.

அப்பது வாக விரிந்தது சக்கரம்
மப்பினி லப்புற மவ்வன லாயிடு
மப்பினி லப்புற மாருத மாயெழ
வப்பினி லப்புற மாகாச மாமே. (7)

கருத்து: அப்பு சக்கரமும் அதன் மேல் தேயு சக்கரமும், அதன் மேல் வாயு சக்கரமும், அதன்மேல் ஆகாய சக்கரமும் அமையும்.

முதலில் தோன்றுவது ஆகாயமே ஆயினும், பூதங்கள் ஒடுங்கும் வரிசை காரணமாக இவ்வாறு கூறினார். தியானத்தில் தேவை ஒடுக்கமே.

சிவானந்த எழுத்து

1249. ஆகாச அக்கரம் ஆவது சொல்லிடில்,
ஆகாச அக்கரத்துள்ளே எழுத்து-அவை;
ஆகாச அவ் எழுத்து ஆகிச் சிவானந்தம்
ஆகாச சக்கரம் ஆவது அறிமினே.

ஆகாச வக்கர மாவது சொல்லிடி
லாகாச வக்கரத் துள்ளே யெழுத்தவை
யாகாச வவ்வெழுத் தாகிச் சிவானந்த
மாகாச வக்கர மாவ தறிமினே. (8)

கருத்து: ஆகாசபீஜ சக்கரம் 'ஹம்' என்பது. இது அகரகலை (பிராசாத கலை 12 - இல் முதலாவது) யின் எழுத்து. எழுத்துக்கள் யாவும் அகரத்தில் அடங்கும். ஆகாச சக்கரத்தில் உள்ள எழுத்துக் களும், ஆகாச பீஜமும் சிவானந்தம் விளைவிப்பன என்று அறிக.

சக்கரங்களில் எழுத்துக்கள்

1250. அறிந்திடு சக்கரம் ஐயைந்து விந்து;
அறிந்திடு சக்கரம் நாதம் முதலா;
அறிந்திடும் அவ்வெழுத்து அப்பதி ஒக்கும்;
அறிந்திடும் அப்பகலோன் நிலையாமே.

அறிந்திடு சக்கர [1]மையைந்து விந்து
வறிந்திடு சக்கர நாத முதலா
மறிந்திடு மவ்வெழுத் தப்பதி யொக்கு[2]
மறிந்திடு மப்பக லோனிலை யாமே. (9)

வேறு பாடம்: 1. மையஞ்சு (சைவ) 2. யோர்க்கு (சைவ) (சண்)

கருத்து: அண்டவெளியில் சூரியன் தங்கும் வீடுகள் பன்னிரண்டு. அவை போல ஏரொளிச் சக்கரமும், பிராசாத கலை பன்னிரண்டிற்கும் பன்னிரண்டாக அமைக்கப்படும். இச்சக்கரங்கள் பன்னிரண்டு இராசிகளின் வரிசையிலேயே அமைக்கப்படும். (பிண்டத்தில் (உடம்பில்) செய்யப்படும் யோகம், அண்டத்திற்கு உரியதாகவும் அமைவதைக் 'கேசரி யோகம்' என்ற முன்னை அதிகாரத்தில் காண்க) அச்சக்கரம் ஒவ்வொன்றும் 25 புள்ளி இட்டு, அவற்றைக் கோடுகளால் இணைத்து, 16 அறைகள் ஆக

அமைக்கப்படும். அவற்றினுள் அகரம் முதல் அஃ வரை 16 உயிரெழுத்துக்களும் எழுதப்படும். முதற்சக்கரத்தில்அகரம் தொடக்க எழுத்து. அடுத்ததில் ஆகாரம் தொடக்க எழுத்து. இவ்வாறு 12 சக்கரமும் அமையும். ரு, ரூ, ளு, ளூ, என்ற உயிரெழுத்துக்களை முதலாகக் கொண்டு சக்கரங்கள் அமைப்பதில்லை.

1251. அம்முத லாறுமவ் வாதி யெழுத்தாகு
மம்முத லாறுமவ் வம்மை யெழுத்தாகு
மிம்முத னாலு மிருநடு வன்னியே
யிம்முத லாகு மெழுத்தவை யெல்லாம். (ஏ, க)

ஆதியும் அந்தமும்

1252. எழுத்து - அவை நூறொடு நாற்பத்து நாலு;
எழுத்து - அவை ஆறு அது, அந்நடு வன்னி;
எழுத்து - அவை அந்நடு, அச்சுடர் ஆகி,
எழுத்து - அவை தான் முதல், அந்தமும் ஆமே.

எழுத்தவை நூறொடு நாற்பத்து நாலு
[1]வெழுத்தவை யாறது வந்நடு வன்னி
யெழுத்தவை யந்நடு வச்சுட ராகி
யெழுத்தவை தான்முத லந்தமு மாமே. (10)

வேறு பாடம்: 1. மெழுத்தவை (சண்) (துடி) (விசு)

கருத்து: பன்னிரு பிராசாத கலைகளின் எழுத்துக்கள் 144. அவை 12 சக்கரமாக அமையும் முறை இது. இச்சக்கரங்களுள் மையமாக இருப்பது, மகர கலைக்குரிய சக்கரம். அந்தக் கலையாக விளங்குவது சிவமே. இப் பிராசாத யோகத்தில், உயிருணர்வில் சிவம் விளங்கும். மகர கலையே பிரகாசம் உள்ளதாகத் திகழும். ஆதலின் மகர கலைதான் 144 எழுத்துக்கட்கும் ஆதியும் அந்தமுமாகத் திகழும். அவ்வெழுத்துக்கள் அனைத்திலும் வியாபித்து நிற்கும்.

சக்கரங்கள் பரவும் இடங்கள்

1253. அந்தமும் ஈறு முதலா நவை அற,
அந்தமும் அப்பதினெட்டுடன் நால் - அதால்;
அந்தமும் அப்பதின்மூன்றில் அமைந்தபின்
அந்தமும் இந்துகை ஆருடம் ஆனதே.

அந்தமு மீறு முதலா நவையற[1]
வந்தமு மப்பதி னெட்டுட னாலதா[2]
லந்தமு மப்பதின் மூன்றி லமைந்தபி[3]
னந்தமு மிந்துகை யாருட மானதே. (11)

வேறு பாடம்: 1. யவையுற (இ ஈ) I; னதவையற (ஒ) I; னவையற (சைவ (சண்) 2. னாதலா (எ) I; னாவதா (இ) I. 3. லமர்ந்தபின் (இ) IV லெறிந்தபின் (ஒ) II.

கருத்து: வன்னிச் சோதியே 1 முதல் 144 முடிய உள்ள எழுத்துக் களுக்கு ஆதியும் அந்தமுமாக நிற்றலின், அவை குற்றம் அற்று விளங்க, ஆறு ஆதாரங்களுள் இறுதியாகிய விசுத்தி, ஆணை என்பவற்றுக்குரிய 18 எழுத்துக்களுடன், 8 சக்கரங்கள் முடிவுற, மீதி 4 சக்கரங்கள் ஆணைக்கு மேலே, சந்திர மண்டலத்தினையும் கடந்து, துவாத சாந்தத்தானம் என்ற 13 ஆவது அங்குலம் அமைந்த இடத்திலும் அதற்கு மேலும் அமையும்.

ஏரொளிச் சக்கரம் 12 ம் மூலாதாரம் முதல் சகஸ்ராரம் வரையும் அதன் மேல் துவாத சாந்தத்திலும் அமையும் என்பது கருத்து.

இந்துகை - சந்திரமண்டலம். ஆருடம் - மேல் ஏறுதல்.

ஆதாரம் ஒளி வீசும்

1254. ஆ இனம் ஆனவை முந்நூற்றுறுபதும்;
ஆ இனம் அப்பதினைந்து இனமாய் உறும்;
ஆ இனம் அப் பதினெட்டுடனாய் உறும்;
ஆ இனம் அக் கதிரோன் வர வந்தே.

ஆவின மானவை முந்நூற் றறுபது
மாவின மப்பதி னைந்தின மாயுறு
மாவின மப்பதி னெட்டுட னாயுறு[1]
மாவின மக்கதி ரோன்வர வந்தே[2]. (12)

வேறு பாடம்: 1. னாறு (இ ஈ) I னாயறு (ஓ) I. 2. வந்ததே (சண்)

கருத்து: உயிருணர்வில் ஒளிமயமாக விளங்கும் சிவம், சிவ சூரியனாகும். பன்னிரண்டு சக்கரங்களும் பன்னிரண்டு இராசிகள் ஆகும். அப்பன்னிரண்டு சக்கரத்திலும் சிவசூரியன் ஒளிவீசுவான். ஆகவே 360 நாள், 15 திதிகள் முறையே கொண்ட சுக்கில பக்கம், கிரு ண பக்கம் என்பவை, ஆறு பருவங்கள், 12 மாதங்கள் என்ற காலக்கணக்கு, யோகிக்கு இப்பன்னிரண்டு சக்கரங்களில் தியானிக்கும் காலமே. அவனுக்கு மூலாதாரம் முதல் சகஸ்ராரம் வரை ஒவ்வோர் ஆதாரமும் ஒளிவிடும் என்க.

'ஏர் ஒளிச்சக்கரம்' மூலாதாரத்திலிருந்து எழும் ஒளியினை உடைய உடல் என்பது இதனால் பெறப்படும் பொருள். அவ்வினம், என்பது சுட்டு நீண்டு ஆவினம் ஆயிற்று.

தியான முறை

1255. வந்திடும் ஆகாசம் ஆறு அது; நாழிகை,
வந்திடும் அக்கரம் முப்பது இராசியும்
வந்திடும் நாள்-அது முந்நூற்றறுபதும்
வந்திடும் ஆண்டு, வகுத்துரை அவ்வியே.

வந்திடு [1]மாகாச மாறது நாழிகை
வந்திடு மக்கர முப்பதி ராசியும்
வந்திடு நாளது முந்நூற் றறுபதும்
வந்திடு மாண்டு வகுத்துரை யவ்வியே[2]. (13)

வேறு பாடம்: 1. மக்கர (ஆ) IV. 2. யாமே (ஆ) IV.

கருத்து: ஏரொளிச்சக்கரமே சிவசூரியன் வரும் ஆகாச வழி (சிதாகாயம்). இச்சக்கரங்களில் வைத்து மந்திர எழுத்து 144 - ஐயும் தியானம் செய்யும் காலமே, நாழிகை, நாள், மாதம், ஆண்டு என்னும் காலமாகும். அண்டத்தில் சூரியன் நிற்கும் இராசிக்குரிய தாகப் பிண்டத்தில் உள்ள சக்கரத்தில், பிரணவத்தை இப்பிராசாத கலை எழுத்துக்களால் தியானம் செய்யும் முறை இங்குக் குறிக்கப்பட்டது.

"அவ்விதியே" என்பது 'அவ்வியே' என மருவியது.

இராசி இனம்

1256. அவ் இனம் மூன்றும் அவ் ஆடு - அதுவாய் வரும்;
கெவ்வினம் மூன்றும் கிளர்தரும் ஏறு - அது ஆம்,
சவ்வினம் மூன்றும் தழைத்திடு தண்டு - அது ஆம்;
இவ்வினம் மூன்றும் இராசிகள் எல்லாம்.

அவ்வின மூன்றுமவ் வாடது வாய்வருங்[1]
[2]கெவ்வின மூன்றுங் கிளர்தரு வேறதாஞ்[3]
[4]சவ்வின மூன்றுந் தழைத்திடு தண்டதா
மிவ்வின மூன்று மிராசிக ளெல்லாம். (14)

வேறு பாடம்: 1. வாய்வரு (விசு) (வ) 2. மெவ்வின (விசு) (வ) 3. வேரதாஞ் (சைவ) 4. எவ்வின (தி) ; தவ்வின (த); செவ்வின (சண்).

கருத்து: இராசிகள் மூன்று இனம் ஆகும் (1) மேடவீதி: இடபம், மிதுனம், கடகம், சிம்மம். (2) இடபவீதி: கன்னி, துலாம், மீனம், மேடம். (3) மிதுன வீதி: விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம்.

ஆடு - மேடம். ஏறு - இடபம், தண்டு - மிதுனம்.

குறிப்பு: இப்பாட்டு ஏகாரவீற்றுச் சொல்லில் முடியவில்லை.

சக்கரம் இராசியே

1257. இராசியுள் சக்கரம் எங்கும் நிறைந்தபின்,
இராசியுள் சக்கரம் என்று அறி விந்துவாம்;
இராசியுள் சக்கரம் நாதமும் ஒத்தபின்
இராசியுள் சக்கரம் நின்றிடும் வாறே.

[1]இராசியுட் சக்கர மெங்கு நிறைந்தபி
னிராசியுட் சக்கர மென்றறி விந்துவா
மிராசியுட் சக்கர நாதமு மொத்தபி
னிராசியுட் சக்கர நின்றிடும் வாறே[2]. (15)

வேறு பாடம்: 1. இராசியு ளக்கர (ஆ) IV. 2. நின்றிடுமாறே (அ) IV.

கருத்து: 12 சக்கரமும் 12 இராசிகளை ஒத்தவை. ஏனெனில் இராசிகளில் சூரியவொளி வியாபித்து நிற்பதுபோல் சுத்தமாயை

யின் விந்துத் தானத்தில் நிற்கும் சிவத்தின் அருளால், உடலின் மூலக்கனல் அந்த விந்து மயமாகி, ஒவ்வொரு சக்கரத்திலும் ஒளி வீசும். தியானம் மேலும் ஆழமானால், பிரணவ நாதமும் இராசிகள் தோறும் அசபையாக எழும். இது சுத்தமாயையில் நாதத் தானத்தில் நிற்கும் இறைவனது அருளால் என்க. இந்த நிலை தோன்றினால் பிண்டத்தில் உள்ள சக்கரம் அண்டத்தில் உள்ள இராசியை ஒக்கும் என அறியலாம்.

நட்சத்திரக் கலை

1258. நின்றிடும் விந்து என்று, உள்ள எழுத்து எல்லாம்;
நின்றிடும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்;
நின்றிடும் அப்பதி அவ் எழுத்தே வரின்
நின்றிடும் அப்புறம் தாரகை ஆனதே.

நின்றிடும் [1]விந்துவென் றுள்ள வெழுத்தெல்லா
நின்றிடு நாதமு [2]மோங்கு மெழுத்துட
னின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரின்[3]
னின்றிடு மப்புறந் தாரகை யானதே. (16)

வேறு பாடம்: 1. விந்துவொன் (ஆ) IV. 2. மொக்கு (ஆ) IV. 3. தேவிரி (ஆ) I.

கருத்து: மேற்கூறிய 16 உயிர் எழுத்துக்களுள் ‘அம்’, ‘அஃ’ என்பவை முறையே விந்து, நாதம் எனப்படும். இவை மெய்யுடன் சேர்ந்து, ‘கம், கஃ’ ; ‘பம், பஃ’ என்பவை போல வந்தாலும் முறையே இப்பெயர் பெறும். சக்கரத்தின் முதல் எழுத்தாக இவை அமைந்தால் நட்சத்திரக் கலைகளின் ஆற்றலைப் பெறலாம்.

உடம்பில் மூலாதாரத்திலிருந்து முறையே அக்கினி மண்டலம், சூரியமண்டலம், சந்திர மண்டலம், நட்சத்திர மண்டலம் என்பவை ஒன்றுக்கு மேல் ஒன்றாக உள்ளன. இவற்றுள் கடைசி மண்டலம் உச்சந்தலைக்குமேல் துவாத சாந்தத்தில் உள்ளது.

மும்மடங்கு ஆற்றல்

1259. தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் [1]தழைத்தது பேரொளி
தாரகை சந்திர னற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை காணுமே[2]. (17)

வேறு பாடம்: 1. தழைத்த தோர் (த) 2. கண்டதே (சைவ) (சண்) (துடி)

கருத்து: ஏரொளிச் சக்கரம், உயிருணர்வு நட்சத்திர மண்டலத்தின் ஆற்றலைப் பெறும் வகையில் அமைந்தது. இம்மண்டலத்தில் ஒரு பேரொளி தழைத்து விளங்கும். அக்கினி, சூரியன், சந்திரன் என்ற மூன்று மண்டலங்களின் ஆற்றலையும் பெற்ற உயிருணர்வு, இப்போது நட்சத்திர மண்டலத்தின் ஆற்றலை, அவற்றோடு சேர்த்துப் பெற, நட்சத்திர ஆற்றலே மூன்று மடங்காக விளங்கும்.

ஆக - ஆவதற்காக. பேரொளி - சிவ ஒளி. மூன்று மடங்கு என்பதை - தாரகைச் சொல்லை மும்முறை அடுக்கி உணர்த்தினார்.

சிவ ஒளியும் சத்தி ஒளியும்

1260. கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்
கண்டிடு நாதமுந் [1]தன்மே லெழுந்திடக்[2]
கண்டிடும் வன்னிக் [3]கொழுந்தனல் போகப்பின்[4]
கண்டிடு மப்புறங் காரொளி யானதே. (18)

வேறு பாடம்: 1. மேலே (ஆ) IV. 2. லெழுத்திடக் (அ ஈ ஒ) I. 3. கொழுந்தனள் (அ) I கொழுந்தனை (ஒ) I; கொழுந்தள (ஆ ஈ) I. 4. வொத்த பின் (இ எ) II.

கருத்து: பன்னிரு சக்கரங்களிலும் முறையே ஒளிக்காட்சி வளர்ந்து தோன்றும். நாதம் கேட்கப்படுவதும் அவ்வாறே. இவ்வொளிக் காட்சி, செவ்வொளி, நீலவொளி என்ற இரண்டையும் மாறிமாறிக் காண்பதாய் அமையும். இவற்றுள் செவ்வொளி சிவத்தின் ஒளி. நீல வொளி சத்தியின் ஒளி. இவ்விரண்டும் வெம்மை நீங்கிய ஒளிகள் ஆகும்.

வன்னிக் கொழுந்து - சிவ ஒளி. போக - நீங்க. காரொளி - நீலவொளி.

கொண்டு கூட்டு: 2, 3 ஆம் அடிகள்: தன் மேல் எழுந்திட, அனல் போக, பின் கண்டிடும் வன்னிக் கொழுந்து எனக் கூட்டுக.

ஒளிக்குள் ஒளி

1261. காரொளி அண்டம் பொதிந்தது உலகு எங்கும்
பார்ஒளி, நீர்ஒளி, சார் ஒளி, கால்-ஒளி,
வான்ஒளி ஒக்க வளர்ந்து கிடந்த பின்
நேர் ஒளி ஒன்றாய் நிறைந்து, அங்கு நின்றதே.

காரொளி யண்டம் [1]பொதிந்த துலகெங்கும்
பாரொளி நீரொளி [2]சாரொளி காலொளி[3]
வானொளி யொக்க வளர்ந்து கிடந்தபின்[4]
னேரொளி யொன்றாய் [5]நிறைந்தங்கு நின்றதே. (19)

வேறு பாடம்: 1. பொதிந்துல கெங்கும் (ஈ எ) I. 2. காரொளி (அ ஆ இ) I. 3. சாலொளி (எ) I. 4. சுமந்த பின் (ஆ) IV கிடந்துபின் (சைவ) 5. யியம் பரம் (ஆ) IV.

கருத்து: யோகக் காட்சியில் தோன்றும் நீலவொளி பரமாகாய வெளியில் அண்டங்களையும் உலகங்களையும் சூழ்ந்து விளங்குவது. அச்சத்தியொளி ஐந்து பூதங்களிலும் நிறையும். அதில் இசைந்து நின்ற சிவவொளியும் அங்கே திகழும்.

விந்துத் தானத்தில் சத்தி

1262. நின்றது அண்டமும் நீளும் புவி எலாம்
நின்ற இவ் அண்டம் நிலைபெறக் கண்டிட;
நின்ற இவ் அண்டமும் மூலமலம் ஒக்கும்
நின்ற இவ் அண்டம் பலம் - அது விந்துவே.

நின்றது வண்டமு [1]நீளும் புவியெலா
நின்றவிவ் வண்ட நிலைபெறக் கண்டிட[2]
நின்றவிவ் வண்டமு மூல மலமொக்கு[3]
நின்றவிவ் வண்டம் பலமது விந்துவே. (20)

வேறு பாடம்: 1. நீள்புவியெல்லா (ஆ) IV. 2. கண்டிடின் (ஆ) IV. 3. மெலாமொக்கு (ஆ) I.

கருத்து: யோகக் காட்சியில் சத்தியொளி அண்டம், உலகம் யாவற்றிலும் விளங்குகிறது. இது கொண்டு, அண்டம், உலகம் ஆகியவற்றைத் தாங்கிநிற்பது யாது என அறியலாம். அது சத்தியே. சத்தி தியானம் இன்றி, அண்டத்தை நோக்குவார்க்கு அது மூல மலம் போல மயக்கத்தைச் செய்யும். இங்கு வாழ்வோர்க்கு ஞான ஆற்றலைத் தருபவள் சுத்தமாயா காரியமான விந்துவில் நிற்கும் சத்தியே.

எண்ண வடிவில் விந்து

1263. விந்துவும் நாதமும் ஒக்க எழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விரை-அது ஆம்;
விந்தில் குறைந்திடு நாதம் எழுந்திடில்
விந்துவை எண் வடி கொண்டது வீசமே.

விந்துவு நாதமு மொக்க வெழுந்திடில்[1]
விந்துவு நாதமு மொக்க விரையதாம்[2]
[3]விந்திற் குறைந்திடு நாத மெழுந்திடில்
விந்துவை [4]யெண்வடி கொண்டது வீசமே. (21)

வேறு பாடம்: 1. விழுந்திடில் (எ) II. 2. விதையதாம் (இ) IV விரையமாம் (ஈ) I. 3. விந்துக் குறைந்திட்டு (ஆ இ) III. 4. எண்ணவடி (ஈ) I எண்மடி (எ) I.

கருத்து: சுத்தமாயையில் விந்து, நாதம் இரண்டும் தனி நிலைகள். இவை சமமாகக் கலந்து 'சாதாக்கியம் என்று ஆகும். இது உலகப் படைப்புக்கு நிமித்த காரணம். விந்து குறைந்து, நாதம் மிகுந்தால் அது 'சுத்த வித்தை' ஆகும். அதிலிருந்து உலகத்தோற்றத்திற்கான பீச மந்திரம் தோன்றும்பொழுது, அதில் விந்து எண்ண வடிவ மாத்திரமாக இருக்கும். (இதே போல் நாதத்தை எண்ண வடிவில் கொண்ட பீச மந்திரமும் உண்டு).

பீஜ மந்திரங்கள்

1264. வீசம் இரண்டு உள நாதத்து எழுவன;
வீசமும் ஒன்று விரைந்திடும் மேலுற;
வீசமும் நாதத்து எழுந்துஅளவு ஒத்த பின்,
வீசமும் விந்து விரிந்தது காணுமே.

வீச மிரண்டுள நாதத் தெழுவன
வீசமு மொன்று [1]விரைந்திடு மேலுற
வீசமு [2]நாதத் [3]தெழுந்தள வொத்தபின்[4]
வீசமும் விந்து விரிந்தது காணுமே. (22)

வேறு பாடம்: 1. விந்து விரைந்திடும் (ஆ) II. 2. நாதமு (அ ஒ) II. 3. மெழுந்துட (அ ஒ) IV. 4. னொத்தபின் (அ ஒ) IV.

கருத்து: நாதத் தத்துவத்தில் தோன்றும் பீசங்கள், நாதம், விந்து என்ற இரண்டும். இவை மூன்று வகையான தத்துவங்களாக உருவாகும். இவ்விரண்டும் ஒத்த அளவில் கலப்பது சாதாக்கியம். நாதம் மிகுந்தும் விந்து குறைந்தும் உருவாவது சுத்த வித்தை. விந்து மிகுந்தும் நாதம் குறைந்தும் உருவாவது மாயேச்சுரம். இத்தத்துவங்களில் நின்று, சிவன் சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டையும் அவற்றிலிருந்து அண்டங்களையும் உலகங்களையும் படைப்பதற்குப் பீச மந்திரங்களை உருவாக்குவான்.

மாயையின் பீஜங்கள்

1265. விரிந்த இவ்விந்துவுக்கு எட்டு - அது வீசம்;
விரிந்தது விந்துவும் நாதத்து அளவினில்
விரிந்தது உட்கட்டம் எட்டெட்டும் ஆகில்
விரிந்தது விந்து விரையது; ஆமே.

[1]விரிந்தவிவ் [2]விந்துவுக் கெட்டது வீசம்
விரிந்தது விந்துவு நாதத் தளவினில்
விரிந்தது [3]வுட்கட்ட மெட்டெட்டு மாகில்
விரிந்தது விந்து விரையது வாமே. (23)

வேறு பாடம்: 1. விரிந்தது (உ ஒ) IV. 2. விந்துவுங் (உ எ ஒ) I. 3. வுட்பட்ட (த)

கருத்து: அசுத்த மாயையில் எட்டுப் பீசங்கள் எழும். அவை வித்தியாதத்துவம் ஏழும் ஐம்பூதங்களும் ஆகும் (ஐம்பூதங்களை ஆகாயம் என ஒன்றாக எண்ண, ஒரு பீசமாகும்.) சிவத்தின் சக்கரப்பத்தின் அளவு, அசுத்த மாயை விரியும். 64 கலைகளும் மாயையின் பீஜத்திலிருந்து தோன்றியவையே.

உட்கட்டம் - உள்கட்டு; உள்ளார்ந்த கட்டமைப்பு.

விதையும் விளைத்தவனும்

1266. விரையது விந்து [1]விளைந்தன வெல்லாம்
விரையது விந்து விளைந்த வுயிரும்
விரையது விந்து விளைந்தவிஞ் ஞாலம்[2]
விரையது விந்து விளைந்தவன் றானே[3]. (24)

வேறு பாடம்: 1. விளைவன (ஐ) IV. 2. ஞானம் (எ) IV. 3. றாளே (எ) IV.

கருத்து: மாயை வித்தாக, உலகமும் உயிரினங்களும் தோன்றின. அதற்கு நிமித்த காரணம் சிவன்.

விந்துவும் நாதமும் உடம்பில்

1267. விளைந்த எழுத்து-அவை விந்துவும் நாதம்;
விளைந்த எழுத்து-அவை சக்கரம் ஆக,
விளைந்த எழுத்து-அவை மெய்யினுள் நிற்கும்,
விளைந்த எழுத்து-அவை மந்திரம் ஆமே.

விளைந்த [1]வெழுத்தவை விந்துவு நாதம்[2]
விளைந்த [3]வெழுத்தவை சக்கர மாக
விளைந்த வெழுத்தவை [4]மெய்யினு ணிற்கும்
விளைந்த வெழுத்தவை மந்திர மாமே. (25)

வேறு பாடம்: 1. வெழுத்தது (சைவ) (சண்) 2. நாதமும் (ஆ இ ஈ எ ஒ) I. 3. வெழுத்தது (சைவ) (சண்) 4. மெய்யினினிற்கும் (ஆ எ) IV.

கருத்து: எழுத்துக்கள் எல்லாம் விந்து, நாதங்களிலிருந்து தோன்றியவை. அவற்றைச் சக்கரமாக அமைத்துத் தியானிக்க, உடம்பினுள்ளேயே விந்துவும் நாதமும் தோன்றும். ஏனெனில் அவை மந்திரம்.

நாதம் ஒளியாக...

1268. மந்திர சக்கம் ஆனவை சொல்லிடில்
தந்திரத்துள், எழுத்து ஒன்று எரிவட்டம் ஆம்;
கந்தரத்துள்ளும் இரேகையில் ஒன்றில்லை,
பந்தமும் ஆகும் பிரணவம் உன்னிடே.

[1]மந்திர சக்கர மானவை சொல்லிடிற்
றந்திரத் துள்ளெழுத் [2]தொன்றெரி வட்டமாங்
[3]கந்தரத் துள்ளு மிரேகையி லொன்றில்லை
[4]பந்தமு மாகும் பிரணவ முன்னிடே. (26)

வேறு பாடம்: 1. மந்திரஞ் (சைவ) 2. தொன்றெறி (அ ஆ இ ஒ) I; துள்ளெழு தோன்றெரி (எ) II; தொன்றறி (ஈ) I. 3. தந்திரத் (ஆ இ) I. 4. பந்தம தாகும் (உ எ ஒ) III.

கருத்து: மந்திரம் எழுதப்பட்ட சக்கரத்தின் பயன் யாது? என்றால் குரு சொல்லும் வழியில் தியானம் செய்து உடம்பினுள் நாதத்தை (பிரணவத்தை) ஒளி மயமாகக் காண்பதே ஆகும். இப்பயன், மந்திர செபத்தாலும், சக்கரத்தைத் தகட்டில் எழுதிவைத்து வழிபடுவ தாலும் விளையாது. வீடுபேற்றில் நம்மைச் சேர்க்கும் மந்திரமாகிய பிரணவத்தைத் தியானம் செய்க.

தந்திரத்துள் - யோகவழியில். கந்தரம் - கழுத்து. உச்சரிப்பிற்கு ஆயிற்று.

மந்திர யோகப் பயன்

1269. உன்னிட்ட வட்டத்தில் ஒத்து எழும் மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பதுதான் இல்லை;
தன்னிட்டு எழுந்து தகைப்பு அறப் பின்நிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலும் ஆமே.

உன்னிட்ட [1]வட்டத்தி லொத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட் [2]டெழுந்து [3]தகைப்பறப் பின்னிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே. (27)

வேறு பாடம்: 1. வட்டத்து ளொத்தெழு (ஆ) IV. 2. டெழுந்த (இ எ) II; டெழுத்து (ஆ) I. 3. தகைப்பிறப் (ஈ) I தகைவறப் (ஆ) IV.

கருத்து: தியானிக்கும் சக்கரத்தில், வரிசையாக எழும் எழுத்துக்கள் தம் வரிசை முறையில் பிறழ்வதில்லை. பயிற்சியால், மந்திரம் தானே உள்ளே எழுந்து, பின்புலமாக நிற்க, அதன் பயனாக அனுபவம் விளைவதை உணரலாம்.

தகைப்பு - மறைப்பு. மந்திரம் (4 ஆம் அடி) - மந்திரத்தால் யோகத்தில் விளையும் அனுபவம்.

சிவத்தை உணரலாம்

1270. பார்க்கலும் ஆகும் பகை அறு சக்கரம்
காக்கலும் ஆகும், கருத்துற்ற இடம் எங்கும்
நோக்கலும் ஆகும், நுணுக்கு அற்ற நுண் பொருள்
ஆக்கலும் ஆகும் அறிந்துகொள்வார்க்கே.

பார்க்கலு மாகும் பகையறு சக்கரங்
காக்கலு மாகுங் [1]கருத்துற் றிடமெங்கு
நோக்கலு மாகு [2]நுணுக்கற்ற நுண்பொரு
ளாக்கலு மாகு மறிந்துகொள் வார்க்கே. (28)

வேறு பாடம்: 1. கருத்திற் றடமெங்கு (எ) IV. 2. நுனுக்கற்ற (எ) IV.

கருத்து: மூல மலம் ஆகிய பகையை அறுக்கின்ற வழியாகிய ஏரொளிச் சக்கரத்தால் யோகானுபவம் பெறலாம். வாழ்வைக் காத்துக் கொள்ளலாம். எங்கெங்கே கருத்துச் செல்லுமோ, அங்கெல்லாம் இருந்த இடத்திலிருந்தே நோக்கலாம். ஆய்ந்து உணர முடியாத நுண்பொருளான சிவத்தை உயிருணர்வினால் உணரலாம்.

1271. அறிந்திடு சக்கர மாதி யெழுத்து
விரிந்திடு சக்கர மேலெழுத் தம்மை
பரிந்திடு சக்கரம் பாரங்கி நாலும்
குவிந்திடு சக்கரம் கூறலு மாமே. (ஏ)

மாறிடும் தன்மை

1272. கூறிய சக்கரத்துள் எழுமந்திரம்
மாறு இயல்பாக அமைந்து விரிந்திடும்;
தேறிய அஞ்சுடன் செந்தழல் மாரணம்
மாறு இயல்பாக மறித்துக்கொள்வார்க்கே.

கூறிய சக்கரத் துள்ளெழு மந்திர
மாறியல் பாக வமைந்து விரிந்திடுந்
தேறிய வஞ்சுடன் [1]செந்தழன் மாரண
மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே. (29)

வேறு பாடம்: 1. சேர்ந்தெழு (விசு) (தி) (த) (வ) (சைவ) (சண்) (குடி)

கருத்து: தம்பனம், வசியம், மோகனம், ஆகருடணம், உச்சாடனம் என்ற ஐந்துடன், தீயால் சுடும் வண்ணம் உடலைப் பிணமாக்கும் மாரணம் - என்ற ஆறும், வழக்கமான செயல்களை அன்றி,வேறு செயல்களைக் குறிப்பிடுவதை அறிந்துகொள்ளுவோர்க்கு, ஏரொளிச் சக்கரத்தில் எழும் மந்திரம், மாறிய தன்மையை உடையதாக அனுபவப்படும்.

ஆறு - ஷட்கர்மவித்தை.

கொதிப்புக் குணம் போகும்

1273. மதித்திடும் அம்மையும் மாமாதும் ஆகும்,
மதித்திடும் அம்மையும் அங்கனல் ஒக்கும்,
மதித்து அங்கு எழுந்தவை காரணம் ஆக,
கொதித்து அங்கு எழுந்தவை கூடகிலாவே.

மதித்திடு மம்மையு [1]மாமாது மாகு
மதித்திடு மம்மையு மங்கன லொக்கு
மதித்தங் கெழுந்தவை காரண மாகக்[2]
கொதித்தங் கெழுந்தவை கூட கிலாவே. (30)

வேறு பாடம்: 1. மாதன (ஆ) IV. 2. மாகிக் (அ ஆ ஒ) I மாகிற் (விசு)

கருத்து: அருட்சத்தியே, தன் இயல்பில் அருள்பொழிதலும் உண்டு; தீப்போல நின்று அழித்தலும் உண்டு. ஏரொளிச் சக்கரம் அவளை அருட்சத்தியாகவே அனுபவப்படச் செய்வதால், ஆசை, கோபம் முதலிய கொதிப்புக் குணங்களால் செய்யும் தம்பனம் முதலிய ஆறு செயல்கள் இச்சக்கரத்தால் நடைபெறமாட்டா.

அரியது எளியதாகும்

1274. கூடிய தம்பனம் மாரணம் வசியம்
ஆடு இயல்பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள்ளாகப் பகைவரும் வந்துறார்
தேடி உள் ஆகத் தெளிந்து கொள்வார்க்கே.

கூடிய தம்பன மாரணம் வசிய[1]
மாடியல் பாக வமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறார்
தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே. (31)

வேறு பாடம்: 1. வாசி (ஒ) II.

கருத்து: ஏரொளிச் சக்கரத்தியானத்தின் மூலம் சிவத்தை நாடி, உடம்பினுள்ளே சிவவொளியைக் கண்டுகொண்டவர்க்குத் தம்பனம் முதலிய ஆறு செயல்களும் விளையாட்டாக வந்து அமையும். அவர்கட்குப் பகைவர் தோன்றார்.

உயிர்ச் சத்தியை எழுப்ப...

1275. தெளிந்திடு சக்கரம் மூலத்தின் உள்ளே
அளிந்த அகாரத்தை அந்நடு ஆக்கி,
குளிர்ந்த அரவினைக் கூடி உள்வைத்து,
நளிந்தவை அங்கு எழும் நாடிய காலே.

தெளிந்திடு சக்கர மூலத்தி னுள்ளே
யளிந்த வகாரத்தை யந்நடு வாக்கிக்
குளிர்ந்த [1]வரவினைக் கூடியுள் வைத்து
[2]நளிந்தவை யங்கெழு [3]நாடிய காலே. (32)

வேறு பாடம்: 1. வரனைக் (சைவ) 2. வளிந்தவை (இ) II 3. ஆடிய (த).

கருத்து: மூலாதாரத்தில் அகார கலைக்கு உரிய சக்கரத்தைத் தியானித்து, உறங்கிக்கிடக்கும் குண்டலியை எழுப்பிச் சுழுமுனையில் செலுத்தினால், அடங்கியிருந்த உயிர் ஆற்றல் எழும்.

நளிந்தவை - நளி என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர். நளிதல் - செறிதல்.

மந்திரத்தின் நிறை பயன்

1276. கால், அரை, முக்கால், முழுது எனும் மந்திரம்
ஆலித்து எழுந்த ஐந்து ஊன்றி எழுந்ததாய்ப்
பாலித்து எழுந்து பகை அற நின்ற பின்,
மால் உற்ற, மந்திரம் மாறிக் கொள்வார்க்கே.

காலரை முக்கான் [1]முழுதெனு மந்திர
மாலித் [2]தெழுந்தவைந் தூன்றி யெழுந்ததாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே. (33)

வேறு பாடம்: 1. முழுவெனு (அ ஒ) I. 2. தெழுந்தமைந் தூறி (விசு) (தி) (த) (வ) (சண்).

கருத்து: அக மகிழ்விற்குக் காரணமான பிராசாத மந்திரம் அ, உ, ம, விந்து, நாதம் என்ற ஐந்து கலைகளை உடையது. இந்த ஐந்தே, பன்னிரு கலைகளாக விரிக்கப்படும் (16 கலைகளாக விரிக்கப் படுதலும் உண்டு).

இக்கலைகளுக்குப் பன்னிரண்டு சக்கரங்கள் அமைத்து, மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களிலும் சகஸ்ராரத்திலும் வைத்து, அச்சக்கரங் களின் எழுத்துக்களை வரிசையாகத் தியானிக்கும்பொழுது, பிராசாத மந்திரம் கால், அரை, முக்கால் என நடந்து, முழுமை பெறும். அதன் விளைவு அருட்சத்தியின் அருள். அதனால் மூல மலம் நீங்கும். இத்துணை நிறைவும் இருக்க, இம்மந்திரத்தைத் தம்பனம் முதலியன செயல்கட்குப் பயன்படுத்த எண்ணுவோர் மயக்க அறிவுடையோரே.

மந்திரச் சோதி

1277. கொண்ட இம் மந்திரம் கூத்தன் எழுத்து-அது ஆய்ப்
பண்டை உன் ஆவிப்பகை அற நின்றபின்,
மன்று நிறைந்த மணிவிளக்கு ஆயிடும்,
இன்றும் இதயத்து எழுந்து "நம" எனே.

கொண்டவிம் மந்திரங் கூத்த னெழுத்ததாய்ப்[1]
[2]பண்டையுன் னாவிப் பகையற நின்றபின்[3]
மன்று [4]நிறைந்த மணிவிளக் காயிடு
[5]மின்று மிதயத் தெழுந்து நமவெனே. (34)

வேறு பாடம்: 1. னெழுத்தாய்ப் (இ ஈ ஐ) I. 2. பண்டையுணாவிற் (விசு) (தி) (த) (சண்) 3. விண்டபின் (ஓ) III. 4. னிறைந்த (சண்) 5. மென்று (த).

கருத்து: ஏரொளிச் சக்கரமாகக் கொண்ட மந்திரம், திருவைந் தெழுத்துப் போலவே செயற்பட்டு, உன் உயிர்ப் பகையாகிய ஆணவ மலம் நீங்குமாறு செய்யும். பின்பு, உனக்குச் சிவானுபவம் தரும் வண்ணம், உனது தலையுச்சி மன்றத்தில், நிரம்பிப் பூரணமாய் நிற்கும் சோதியாய்த் திகழும். அச்சிவானு பூதியை நினைந்து, உணர்வு நிறையப் பெற்றுப் "போற்றி" என்று வணங்குவாயாக.

63. வயிரவச் சக்கரம்

சக்கர அமைப்பு

1278. அறிந்த பிரதமையோடு ஆறும் அணைஞ்சு
அறிந்த இச் சத்தமி மேவி வைகுற்ற
மறிந்தவை ஒன்றுவிட்டு ஒன்று பத்து ஆக
அறிந்து, வலம் அதுவாக நடவே.

வயிரவச் சக்கரம்

(1278 - ஆம் பாடல்களில் குறிக்கப் பெறுவது)



அறிந்த பிரதமை யோடா றுமணைஞ்[1]
சறிந்தவிச் சத்தமி [2]மேவிவை குற்ற
மறிந்தவை யொன்றுவிட் [3]டொன்றுபத் தாக
வறிந்து வலமது வாக நடவே[4]. (1)

வேறு பாடம்: 1. மழைசு (அ ஒ) I; மளசு (இ) I; மளசு (ஈ) I; மனைஞ்சு (ஐ) I; மறிந்ஞசு (வைச), 2. மேலிவை (இ ஈ ஐ ஒ) I. 3. டொன்றுபற்றாக (ஈ ஐ ஒ) I. 4. நடத்தே (த)

கருத்து: வயிரவச் சக்கர அமைப்பு இப்பாடலிற் கூறப்பட்டது. குறுக்காக 7 கோடுகளும் நெடுகில் 7 கோடுகளும் வரைந்து, இவற்றுள் அமைந்த 36 அறைகளில் வயிரவ மந்திரத்தை அமைக்க.

எவ்வாறு எனின்:

'பிரதமையோடு ஆறும்' என்பது, அமாவாசை அல்லது பௌர்ணமி, பிரதமை முதல் ச டி வரை ஆறு திதிகள், ஆக 7 திதிகள்.

'சத்தமி மேவி வைகுற்ற மறிந்தவை' என்பது, வளர்பிறையில் பிரதமை முதல் 14 திதிகள், தேய்பிறையில் பிரதமை முதல் 14 திதிகள் ஆகும்.

வளர்பிறையில் அ தொடங்கி அம் வரை உள்ள 15 உயிரெழுத்துக்கள் உரியன. தேய்பிறையில் அஃ தொடங்கி ஆ வரை உள்ள 15 உயிரெழுத்துக்கள் உரியன

எனவே அ என்பதை முதல் அறையில் எழுதி, ஆ முதல் அஃ: வரை இரண்டிரண்டு அறைகளில் எழுதி, அஃ என்பதை 30 ஆம் அறையில் எழுதுக. 31 முதல் 36 ஆம் அறை வரை உள்ள 6 அறைகளில் (ஓம் பம் பைரவாய நமஹ) என்ற பிரணவம், பீஜம், மூலமந்திர எழுத்துக்களை வரைக.

அ - அமாவாசைக்கு உரியது

அஃ: - பௌர்ணமிக்கு உரியது

ஆ முதல் அம் வரை 14ம் 14 திதிகட்கு உரியன

ஒவ்வொரு நிதியிலும் அதற்குரிய எழுத்தில் தொடங்கி 15 எழுத்துக்களையும் 10 உருசெபித்து தியானித்து, பின்பு பிரணவம், பீஜம், மூலமந்திரத்தை 10 உருச்செபிக்க. எழுத்துக்களைச் செபிக்கும் போதும், ஓம் அம்; ஓம் ஆம்; ஓம் இம்; ஓம் ஈம்' என்பன போலச் செபிக்க வேண்டும்.

அடியார்க்குக் காவல்

1279. [1]நடந்த வயிரவன் சூல கபாலி
[2]கடந்த [3]பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது [4]வுண்ணும் பொழுது
படர்ந்த [5]வுடல்கொடு பந்தாட லாமே.

வேறு பாடம்: 1. நடந்து (சைவ) 2. கடந்து (சண்) 3. பகவனைக் (இ ஈ ஒ ஓ) I. 4. தொட்டுண்ணும் போழ்து (விசு) 5. வுலகொடு (ஐ) I.

கருத்து: சூலம் ஏந்தியவனும் கபாலியும் ஆகிய வயிரவன் செயல் யாது எனின், அடியாரின் பகைவனது அறிவைப் போக்கி, வென்று, உயிரை உண்டு, உடலைப் பந்தாடுதலாம்.

வயிரவன் கோலம்

1280. ஆமேவப் பூண்டருள் ஆதி வயிரவன்
ஆமே கபாலமும் சூலமும் கைக்கொண்டு அங்கு
ஆமே தமருக பாசமும் கையது;
ஆமே சிரத்தொடு வாளொடு கையே.

[1]ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவ
னாமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு [2]வாளொடு கையே. (3)

வேறு பாடம்: 1. ஆமேயப் (இ ஐ) I. 2. வாளது (சைவ) (துடி)

கருத்து: திருமாலின் தோலைப் பூண்டருளும் வயிரவ மூர்த்தி, கபாலத்தையும் சூலத்தையும் உடுக்கையையும், பாசக் கயிற்றையும் ஏந்தி, பகைவரின் வெட்டப்பட்ட தலையையும் வாளையும் கையில் கொண்டுள்ளார்.

வயிரவன் தோற்றம்

1281. [1]கையவை யாறுங் [2]கருத்தது நோக்கிடு
மெய்யது செம்மை [3]விளங்கும் வயிரவன்
றுய்யருள் ளத்திற் [4]றுளங்குமெய் யுற்றதாப்[5]
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே. (4)

வேறு பாடம்: 1. கையது (விசு) 2. கருத்துற (விசு) 3. விளக்கும் (இ ஈ ஒ) I. 4. றுலங்குமெய் (த) 5. யுற்றதாய்ப் (சுவ) V.

கருத்து: வயிரவப் பெருமானின் கைகளில் உள்ள படைக்கலன்கள் ஆறும், அவனது கருத்து அறிந்து ஏவல் செய்யக் காத்திருக்கும். திருமேனியில் செம்மை நிறம் விளங்கும். இவ் வடிவம், தூய அடியாரது உள்ளத்தில் நிலவுவதாகலின், நீ பொய்யுலகியலை விட்டகன்று அவனை வழிபடுக.

1282. பூசனை செய்யப் பொருந்தியொ ராயிரம்
பூசனை செய்ய மதுவுட னாடுமாம்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே. (ஙு)

1283. வேண்டிய வாறு முலகமு மாயிடும்
வேண்டிய வாறினுண் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வருவழி நீநட
வேண்டிய வாறது வாகுங் கருத்தே. (க)

64. சாம்பவி மண்டலச் சக்கரம்

விந்துவின் அனுபவம்

1284. சாம்பவி மண்டலச் சக்கரம் சொல்லிடில்
ஆம் பதம் எட்டாக இட்டிடின் மேலதாம்
காண்பதம் தத்துவம் நாலுள் நயனமும்
நாம் பதம் கண்டபின் நாடறிந் தோமே.

சாம்பவி மண்டலச் சக்கரங் சொல்லிடி
லாம்பத மெட்டாக விட்டிடின் மேலதாங்[1]
காண்பதந் தத்துவ நாலு ணயனமு[2]
நாம்பதங் கண்டபின் னாடறிந் தோமே. (1)

வேறு பாடம்: 1. மேலதாக் (த) 2. நயனமு (இ ஈ ஒ) I.

கருத்து: வரிசைக்கு 8 அறையாக 8 வரிசை அமைத்தால் உண்டாகும் 64 அறைகள் உடைய சக்கரத்தில், சுத்தமாயைப் பதம் ஐந்தனுள் சிறந்த சத்தி, சிவம், நாதம், விந்து என்பனவற்றுள் இறுதியாகிய

விந்து கண்ணாக அமையும். அந்தப் பதத்தின் அனுபவத்தைப் பெற்றால், நாட அறிந்தவர் ஆவோம்.

நாடுதல் - ஆராய்தல், தியானத்தில் கண்டறிதல்.

கொண்டுகூட்டு: பதம் எட்டாக இட்டிடின், காண்பதம் தத்துவம் நாலுள் மேலதாம் நயனமும் எனக் கூட்டுக.

சக்கர அமைப்பு

1285. நாடு அறி மண்டலம் நல்ல இக்குண்டத்துக்
கோடு அறி வீதியும் கோள்தந்து, உள் இரண்டு அறி
பாடு அறி பத்துடன் நாறும், நடு வீதி
ஏடு அற, நால் - ஐந்து இடவகை தானே.

நாடறி மண்டல நல்லவிக் குண்டத்துக்[1]
[2]கோடறி வீதியுங் [3]கோடந்துள் ளிரண்டறி[4]
பாடறி பத்துட னாறு நடுவீதி[5]
ஏடற நாலைந் திடவகை தானே[6]. (2)

வேறு பாடம்: 1. தண்டத்துக் (இ ஈ ஓ) I. 2. கோடற (விசு) (தி) (த) (வ) (துடி) 3. கொணர்ந்துள் (விசு) (தி) (த) (வ) கொடர்ந்து (சைவ) (துடி) 4. ளிரண்டழி (அ ஓ) I. 5. நெடுவீதி (த) 6. யாமே (சைவ) (சண்).

கருத்து: மேலே கூறியவாறு, இந்தச் சக்கரத்தில், உள்ளே, நடுவில் உள்ள நான்கு அறைகள் முறையே சத்தி, சிவம், நாதம், விந்து ஆகியவற்றுக்கு உரியவை. அவைகளில் எழுத்துக்கள் இடப்பெறா. அவற்றைச் சுற்றி வளைந்த வீதி உள்வீதியாகும். அது 12 அறைகள் கொண்டது. அவற்றைச் சுற்றி 20 அறைகள் கொண்டது நடுவீதி. புறவீதியில் மொத்தம் 28 அறைகளுள் மூலைகளையும் மையத்தையும் விட்டு, 8 எழுத்துக்கள் எழுதப்பெறும். ஆக 40 எழுத்துக்கள்.

சக்கர அமைப்பு

1286. நால்-அஞ்சு இடவகை உள்ளது ஓர்மண்டலம்,
நாலு நல்வீதியுள் நல்ல இலிங்கமாய்
நாலு நற்கோணமும் நல் நால் இலிங்கமாய்
நாலு நற்பூ நடுவண் நல்ல வாறே.

சாம்பவி மண்டலச் சக்கர அமைப்பு

(1284 முதல் 1286 வரை உள்ள பாடல்களில் குறிக்கப் பெறுவது)



சாம்பவி மண்டலச் சக்கர அமைப்பு

(1284 முதல் 1286 வரை உள்ள பாடல்களில் குறிக்கப் பெறுவது)

—	—		—	—		—	—
—	1	2	3	4	5	6	—
	20	1	2	3	4	7	
—	19	12			5	8	—
—	18	11			6	9	—
	17	10	9	8	7	10	
—	16	15	14	13	12	11	—
—	—		—	—		—	—

நாலஞ் சிடவகை யுள்ளதோர் மண்டல
நாலுநல் வீதியு [1]ணல்லவி லிங்கமாய்
நாலுநற் கோணமு [2]நன்னா லிலிங்கமாய்
நாலுநற் [3]பூநடு [4]வண்ணல்ல வாறே. (3)

வேறு பாடம்: 1. நந்நா (த) 2. நண்ணா (விசு) (தி) (த) (வ) 3. பூவின் ணடுநல்ல (ஈ) III. 4. வன்னல்ல (ஆ இ ஒ) V நண்ணலவ் (விசு) (தி) (த) (வ) (சைவ) (துடி)

கருத்து: இச்சக்கரத்தில் இரண்டு பகுதிகள் இரண்டு மண்டலமாய்ப் பிரியும் ஒவ்வொரு மண்டலத்திலும் இருபது அறைகள் உண்டு. மீதம் உள்ள 24 அறைகளாவன:- புறவீதி நான்கிலும் நான்கு நான்கு அறைகள். நான்கு கோணத்திலும் நான்கு. நடுவில் நான்கு. ஆக 24. இவ்வறைகள் 24 - லும் இலிங்க உருவம் அமைக்கப்படும். மைய இலிங்கம் நான்கிற்கும் நடுவில் ஓர் இலிங்கம் அமைக்கப்படும்.

குறிப்பு: இதனை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "உணர்ந்தெழு" என்ற பாடல் "ஆதார வாதேயம்" இயலில் வந்தது.

1287. ஆறிரு பத்துநா லஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறிநீ ரும்மிற் சிவாய நமவென்று
கூறுமின் கூறிற் குறைகளு மில்லையே. (ங, ண)

1288. குறைவது மில்லை குறைகழற் கூடு
மறைவது மாரண மவ்வெழுத் தாகித்
திறமது வாகத் தெளியவல் லாருக்
கிறவில்லை என்றென் றியம்பினர் தானே. (உ)

1289. காணும் பொருளுங் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊனு முணர்வு முறக்கமுந் தானாகத்
காணுங் கனகமுங் காரிகை யாமே. (உ)

1290. ஆமே எழுத்தஞ்சு மாம்வழி யேயாகப்
போமே யதுதானும் போம்வழி யேபோனால்
நாமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மே லொருவர் பகையில்லை தானே. (உ, ஔ)

1291. பகையில்லை யென்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாணாளு நன்மைக ளாகும்
வினையில்லை யென்றும் விருத்தமு மில்லை
தகைவில்லை தானுஞ் சலமது வாமே. (உ, ட)

1292. ஆரு முறைசெய்ய லாமஞ் செழுத்தாலே
யாரு மறியாத வானந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலு மதியதி
யூனும் உயிரு முணர்வது வாமே. (உ)

65. புவனாபதி சக்கரம்

மந்திர விளக்கம்

1293. ககார-ஆதி ஓர் - ஐந்தும் காணிய பொன்மை,
அகார - ஆதி ஓர் - ஆறு அரத்தமே போலும்,
சகார - ஆதி ஓர் நான்கும் தான்சுத்த வெண்மை,
ககார-ஆதி மூவித்தை காமிய முத்தியே.

[1]ககாராதி யோரைந்துங் [2]காணிய பொன்மை
யகாராதி [3]யோரா றரத்தமே போலுஞ்
[4]சகாராதி [5]யோர்நான்குந் தான்சுத்த வெண்மை
[6]ககாராதி மூவித்தை காமிய முத்தியே. (1)

வேறு பாடம்: 1. ஞகராதி (திருமந்திரமாலை) III. 2. காணிற் (ஈ) II. 3. யோரக் கரத்தமே (இ ஈ ஒ ஓ) I. 4. நகராதி (ஆ இ ஓ) I. 5. நாலைஞ்சுந் (அ ஆ இ ஈ ஒ ஓ) II. 6. மகராதி (அ இ ஒ ஓ) II.

கருத்து: புவனாபதி சக்கரம் என்பது, 'பஞ்ச தசாட்சரி வித்தை' என்றும் கூறப்படும். இம்மந்திரம் மூன்று பகுதிகளாக அமைந்தது. பகுதிகள் கூடம் அல்லது கண்டம் எனப்படும். முதல் கூடத்தில் சகரம் முதல் ஐந்து பீசங்கள், அதாவது, க, ஏ, ஈ, ல, ஹ்ரீம் என்பவை உள. இதன் நிறம் பொன்மை. இரண்டாம் கூடத்தில் ஹகாரம் முதல் ஆறு பீசங்கள், ஹ, ஸ, க, ஹ, ல, ஹ்ரீம் என்பவை இதன் நிறம் செம்மை. மூன்றாங் கூடத்தில் சகாரம் முதல் நான்கு பீசங்கள், ஸ, க, ல, ஹ்ரீம் என்பவை உள. இதன் நிறம் வெண்மை.

ககாராதி மூ வித்தை - இம் மந்திரம் காதி வித்தை, சாதி வித்தை, ஹாதி வித்தை என்ற மூன்று வித்தைகள் எனவும் கூறப்படும்.

மேற்குறித்த மூன்று கூடமும் முறையே, வாக்பவ கூடம், காமகூடம், சக்திகூடம் என்று வழங்கும்.

15 எழுத்துக்கள் உடைய இம் மந்திரம் புவனாபதியின் மூல மந்திரம் ஆகும். திருமூலர் புவனாபதியின் உபாசகர் என்பதை இந்நூலில் முன்னும் கண்டோம். காமியம் - விரும்பிய வரம். மூவித்தை காமியமும் முத்தியும் தரும் என்க.

குறிப்பு: இப்பாடல் 'திருமந்திர மாலை' என்னும் நூலின் முதற் பாட்டாகவும் உள்ளது. அந்நூலின் உரையாசிரியர் இச்சக்கரத்தை 'ஸ்ரீ வித்தை' என்பார்.

சிவன் திருமேனி

1294. ஓர்இல் இதுவே உரையும், அத் தெய்வத்தைத்
தேரின் பிறிது இல்லை, யான் ஒன்று செப்பக்கேள்
வாரித் திரிகோண் மனம் இன்ப முத்தியும்
தேரில் அறியும் சிவகாயம் தானே.

[1]ஓரி லிதுவே [2]யுரையுமத் தெய்வத்தைத்
தேரிற் பிறிதில்லை யானொன்று செப்பக்கேள்
வாரித் [3]திரிகோண் [4]மனமின்ப முத்தியுந்
தேரி லறியுஞ் சிவகாயந் தானே. (2)

வேறு பாடம்: 1. ஒருமிதுவே (இ ஒ) IV. 2. யுறையுமித் (த) (சைவ) 3. திரிகோண (சைவ) 4. மன வின்ப (இ ஈ ஒ) I; மாவின்ப (த)

கருத்து: ஆராயின் இதுவே என் உரை. புவனாபதியைத் தவிர வேறு தெய்வம் இல்லை. புது வரவாகிய திரிகோணம், இம்மை இன்பத்தையும், முத்தியையும் நாம் அடைதற்கு ஏதுவாகிய சிவகாயம் ஆகும்.

திரிகோணம், இச்சக்கரம். சிவகாயம் - சிவன் திருமேனி.

முத்தியும் சித்தியும்

1295. ஏகம் பராசத்தி ஈசற்கு ஆம் அங்கமே;
ஆகம் பராவித்தை ஆம் முத்தி சித்தியே;
ஏகம் பராசத்தி ஆக, சிவகுரு
யோகம் பராசத்தி உண்மை எட்டு ஆமே.

[1]ஏகம் பராசத்தி யீசற்கா மங்கமே
[2]யாகம் பராவித்தை யாமுத்தி சித்தியே
யேகம் பராசத்தி யாகச் சிவகுரு[3]
[4]யோகம் பராசத்தி யுண்மையெட் டாமே. (3)

வேறு பாடம்: 1. ஏக (ஓ) III; ஏகப் (இ ஈ ஓ) I. 2. யாகப் (இ ஈ ஓ) I. 3. சிவனுரு (த) 4. யோகப் (இ ஓ) III.

கருத்து: பரம் என்ற நிலையில் சத்தி ஒன்றே. அவள் சிவனுக்குத் துணைவியும் ஆவாள். அவள் வடிவம் பராவித்தை. (இங்குப் பஞ்சதசாட்சரி வித்தை) அதை வழிபடுவோர்க்கு முத்தியும் சித்தியும் கிடைக்கும். பராசத்தி ஒன்றே யாயினும் சிவகுருவுடன் சேர்ந்த நிலையில் மொத்தம் எட்டுச் சத்திகள் உண்டு.

அருட் சத்தியின் சார்பு

1296. எட்டு ஆகிய சத்தி எட்டு ஆகும் யோகத்துக்
கட்டு ஆகி நாதாந்தத்து எட்டும் கலப்பித்தது
ஒட்டாத விந்துவும் தான் அற்று ஒழிந்தது,
கிட்டாது ஒழிந்தது கீழான மூடர்க்கே

எட்டா [1]கியசத்தி [2]யெட்டாகும் யோகத்துக்
[3]கட்டாகி நாதாந்தத் தெட்டுங் கலப்பித்த
தொட்டாத விந்துவுந் தானற் றொழிந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே. (4)

வேறு பாடம்: 1. கியசித்தி (ஓ) I; கியமுத்தி (ஈ) II. 2. யெட்டாமி (ஆ) III. 3. கட்டாகிய (ஐ ஒ ஓ) I; கட்டாகு (சைவ) (சண்).

கருத்து: எட்டுச் சத்திகளாய் நின்ற பராசத்தி அட்டாங்க யோகத்தால் வயப்பட்டு, 36 தத்துவங்களையும் கடக்கச் செய்து, எட்டுச்சத்திகளும் தானே என்பதை உணர்த்தினாள். சுத்தமாயை

நீங்கியது இந்த அனுபவம். இது மூடர்க்கு எய்தாது. இஃது ஆன்மா மாயாவ சத்தினின்று நீங்கி, அருட்சத்தியின் சார்பில் நிற்கும் நிலை.

சக்கர அமைப்பு

1297. ஏதும் பலம் ஆம் இயந்திராசன் அடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீ தங்கும் அங்க நியாசம் தனைப் பண்ணிச்
சாதம் கெடச் செம்பில் சட் கோணம் தான் இடே.

ஏதும் [1]பலமா மியந்திரா சன்னடி[2]
யோதிக் குருவி னுபதேச முட்கொண்டு
நீதங்கு மங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே. (5)

வேறு பாடம்: 1. பலவா (ஆ) I பலமாக (துடி) 2. தன்னடி (ஆ) I.

கருத்து: எவ்வகையிலும் பயன் தருவதாகிய, இயந்திரங்களின் அரசனாகிய புவனாபதிச் சக்கரத்தை, குருவின் உபதேசப்படி ஓதி, அங்கநியாசம் செய்து, பிறவி நீங்க, செப்புத் தகட்டில் அறுகோணம் ஒன்றை வரைக.

சக்கர அமைப்பு

1298. சட்கோணம் தன்னில் சிறீ இறீ தான் இட்டு,
அக்கோணம் ஆறின் தலையில் இரீங்காரம் இட்டு,
எக்கோணமும் சூழ் எழில் வட்டம் இட்டுப்பின்
மிக்க ஈரெட்டு அக்கரம் அம்முதல் மேல் இடே.

சட்கோணந் தன்னிற் சீறியிறீ தானிட்டு
[1]வக்கோண மாறின் தலையிலிரீங் காரமிட்
டெக்கோண [2]முஞ்சூ [3]ழெழில்வட்ட மிட்டுப்பின்
மிக்கீரெட் டக்கர மம்முதன் மேலிடே. (6)

வேறு பாடம்: 1. வட்கோண (விசு) 2. முஞ்சூழ (சண்) 3. ழெயில் வட்ட (ஐ) I வெழில் வட்ட (சண்)

கருத்து: மேற்கூறிய அறு கோணத்தில் உள்ள அறைகளில் "ஸ்ரீம்", "ஹ்ரீம்" என்ற பீஜ எழுத்துக்களை வரைக. இக்கோணத்தின் தலையில் "ஹ்ரீம்" என்ற பீஜ எழுத்தை எழுதுக. எல்லா மூலைகளும் உள்ளடங்குமாறு வட்டம் வரைக. அதற்கு வெளியே

புவனாபதி சக்கரம்

(1297 முதல் 1300 வரை உள்ள பாடல்களில் குறிக்கப் பெறுவது)

நன்றி : தருமை ஆதீனப் பதிப்பு



எட்டுத் தாமரை இதழ் அமைத்து, வட்டத்தில், வடக்கு முதல், அகரம் முதல் 16 உயிரெழுத்துக்களையும் எழுதுக.

சக்கர அமைப்பு

1299. இட்ட இதழ்கள் இடை அந்தரத்திலே
அட்ட 'ஹ' இட்டு, அதன் மேலே உ-இட்டு
கிட்ட இதழ்களின் மேலே கிரோம் சிரோம்
விட்டு அவ் வாமத்து 'ஆம்' 'கிரோங்' என்று மேலிடே.

இட்ட விதழ்க ளிடையந் தரத்திலே
யட்டஹ [1]விட்டதன் மேலே யுவ்விட்டுக்
கிட்ட விதழ்களின் மேலே கிரோம்சிரோம்
[2]விட்டவா மத்தாங் கிரோங்கென்று மேலிடே. (7)

வேறு பாடம்: 1. விட்டிட் டதன்மேலே (த) 2. விட்டுவா (ஒ) I மிட்டுவா (சைவ)

கருத்து: இதழ்களின் இடைநிலம் எட்டிலும் எட்டு 'ஹும்' எழுதி, இதழ்களில் 'க்ரோம் ஸ்ரோம்' என்பவற்றை எழுதி. இதழ்களின் இடப்பக்கத்தில் 'ஆம்', 'க்ரோம்' என்பவற்றை வரைக.

பீஜ எழுத்துக்கள்

1300. மேவிய சக்கரம் மீது வலத்திலே
கோவை அடைவே குரோங், கிரோங் என்று இட்டு,
தாவு இல் ரீங்காரத்தால் சக்கரம் சூழ்ந்து
பூவை புவனாபதியைப் பின் பூசியே.

மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை [1]யடைவே குரோங்கிரோங் கென்றிட்டுத்
தாவி லிரீங்காரத் தாற்சக்க ரஞ்சூழ்ந்து
[2]பூவை புவனா பதியைப்பின் பூசியே. (8)

வேறு பாடம்: 1. யுடைய (த) 2. பூவைப் (துடி)

கருத்து: சக்கரத்தின் வெளியே உள்ள இதழ்களின் வலப்பக்கங் களில் 'க்ரோம், ஸ்ரோம்' என்ற பீஜ எழுத்துக்களை எழுதி, எல்லாவற்றையும் 'ஹ்ரீம்' என்ற பீஜத்தால் வளைத்துப் புவனாபதி அம்மையை வழிபடுக.

1301. பூசிக்கும் போது புவனா பதிதன்னை
யாசற் றகத்தினி லாவா கனம்பண்ணிப்
பேசிப் பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே. (உ)

1302. செய்ய திருமேனி செம்பட் டுடைதானுங்
கையிற் படையங் குசபாசத் தோடபய
மெய்யி லணிகல மிரத்தின மாமேனி
துய்ய முடியும் அவயவத்திற் றோற்றமே. (உ)

1303. தோற்போர்வை நீக்கித் துதித்தடைவிற் பூசித்துப்
பாற்போ னகமந் திரத்தாற் பயின்றேத்தி
நாற்பால நாரதா யசுவா காவென்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சீவியே. (உ)

1304. சீவிப் பதன்முன்னே தேவியையுத் வாகனத்தாற்
பாவித் திதய கமலம் பதிவித்தங்
கியாவர்க்கு மெட்டா வியந்திர ராசனை
நீவைத்துச் சேவி நினைந்தது தருமே. (உ)

66. நவாக்கரி சக்கரம்

பெயர்க் காரணம்

1305. நவாக்கரி சக்கரம் நான் உரை செய்யின்,
நவாக்கரி ஒன்று நவாக்கரி ஆக,
நவாக்கரி எண்பத்தொரு வகையாக
நவாக்கரி அக் 'கிலீ', 'சௌ' முதல் - ஈறே.

நவாக்கரி சக்கர நானுரை செய்யி
னவாக்கரி [1]யொன்று நவாக்கரி யாக[2]
நவாக்கரி யெண்பத் தொருவகை யாக
நவாக்கரி [3]யக்கிலீ [4]சௌமுத லீறே. (1)

வேறு பாடம்: 1. யென்று (அ ஆ) I. 2. யோக (ஆ) III. 3. யக்கிலீஞ் (இ ஈ) III யக்கிலீ (சைவ) யாகக்கலீஞ் (சைவ - 1) 4. சம்முத (சைவ - 1)

கருத்து: ஒன்பது எழுத்துச் சக்கரம் இது. தொடக்கம் “சௌம்”; முடிவு “க்லீம்”. இந்த ஒன்பது பீஜ எழுத்துக்களுள் ஒவ்வொன்றும் முதலெழுத்தாய் மாறி எழுதப்படும் இவ்வகையில் இச்சக்கரத்தில் 81 எழுத்துக்கள் இருக்கும்.

பீஜங்கள்

1306. சௌ முதல் அவ்வொடு ‘ஹௌ’ உடன், ஆம், க்ரீம்,
கௌ வுளும் ஐயுளும் கலந்து ஹ்ரீம் ஸ்ரீம் என்று
ஒவ்வில் எழும் கிலீம் மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாயநம என்னே.

[1]சௌமுத [2]லவ்வொடு [3]ஹௌவுட னாங்கிரீம்
கௌவுளு மையுளுங் கலந்திரீம் சீரீமென்
றொவ்வி லெழுங்கிலீ மந்திர பாதமாச்
செவ்வு ளெழுந்து சிவாய நமவென்னே. (2)

வேறு பாடம்: 1. சௌ முதல் வௌவொட (அ ஆ இ ஈ ஒ ஓ) I; சம்முதல் (சைவ - 1) 2. வௌவொடு (சைவ - 1) 3. தௌவுடனாகுமீறீ (சைவ - 1)

கருத்து: “க்லீம் சௌ முதல் ஈறே” என மேற்கூறியதை ஈண்டு விரித்துரைக்கின்றார். க்லீம், ஸ்ரீம், ஹ்ரீம், ஐம், கௌம், க்ரீம், ஹௌம், ஔம், சௌம்” என்ற ஒன்பது பீஜங்களைத் தலைகீழாகக் கூறிப்பின் ‘சிவாய நம’ எனக்கூறு. ஒன்பது பீஜங்கள் உடையது ஆதலின் இந்த மந்திரம் ‘நவாக்கரி’ எனப்படும்.

முன்னைப் பாடலில் “கிலீம் சௌ முதல் ஈறே” எனக் கூறியது எதிர் நிரனிறை என்பதை இப்பாடலால் அறியலாம். மந்திர பாதம் - மந்திரத்தின் இறுதி.

சிறந்த வித்தை

1307. நவாக்கரி யாவது நானறி வித்தை
நவாக்கரி யுள்ளெழு நன்மைக ளெல்லா
நவாக்கரி மந்திர நாவுளே யோத
நவாக்கரி சத்தி நலந்தருந் தானே. (3)

கருத்து: நான் அறிந்த வித்தைகளுள் நவாக்கரி வித்தை சிறந்தது. அவ்வித்தையால் எல்லா நன்மைகளும் எய்தும். அதனை அசபையாகத் தியானிக்க, அதுவாக அமர்ந்துள்ள பராசத்தி அந்நன்மைகளை அருள்வாள்.

1308. நலந்தரு கல்வியு ஞானமு மெல்லா
முரந்தரு வல்வினை யும்மைவிட் டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வந்திடுங் காணே. (ச, ண)

1309. கண்டிடுஞ் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடைக்
கொண்டிடு முள்ளே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கு
நின்றிடுஞ் சக்கர நினைக்கு மளவே. (ந, ஔ.)

மந்திரம் தெய்வமே

1310. நினைத்திடும் அச்சிறீம்' அக் 'கிலீம்' ஈறா
நினைத்திடு சக்கரம் ஆதியும் ஈறும்
நினைத்திடும் நெல்லொடு புல்லினை உள்ளே
நினைத்திடும் அர்ச்சனை நேர்தருவாளே.

நினைத்திடு மச்சிறீ மக்கிலீ மீறா
நினைத்திடு சக்கர மாதியு மீறு[1]
நினைத்திடு நெல்லொடு புல்லினை யுள்ளே
நினைத்திடு மர்ச்சனை நேர்தரு வாளே[2]. *(4)*

வேறு பாடம்: 1. மந்தமு (ஆ) II. 2. வோமே (ஆ) II.

கருத்து: 'ஸ்ரீம்' என்பதை முதலாகவும் 'க்லீம்' என்பதை இறுதியாகவும் கொண்டு தியானத்தில் வைக்கும் மந்திரம், ஆதியும் அந்தமும் ஆகிய பராசத்தியே ஆகும். வழிபாட்டில் பலிப் பொருளாக இடும் நெல்லையும் அறுகம்புல்லையும் இந்த அகவழிபாட்டில் இடுவதாகப் பாவிக்க. இந்த வழிபாட்டுக்குப் பராசத்தி அருள் வழங்குவாள்.

நாளும் வழிபாடு

1311. நேர்தரு மத்திரு நாயகி யானவள்
யாதொரு வண்ண மறிந்திடும் பொற்பூவை
கார்தரு வண்ணம் கருதின கைவரும்
[1]நாள்தரு வண்ணம் [2]நடந்திடு நீயே[3]. (5)

வேறு பாடம்: 1. நார்தரு (விசு) 2. நடத்திடு (ஆ ஓ) I 3. நீரே (ஓ) I; நன்மையே (ஆ) II.

கருத்து: வெளிப்பட்டு அருள் வழங்குபவளும், செல்வங்கட்கு எல்லாம் தலைவியும் ஆன பராசத்தி; அன்பரின் உள்ளத்தை அறிந்து கொள்பவள். அவளது நிறம் கருமை. அவளைத் தொழுபவர் எண்ணிய பொருள் கிடைக்கும். ஒவ்வொரு நாளும் அவளது அருளைப் பெறும் வண்ணம் முயல்க.

வாழ்நாள் பெருக

1312. நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாம்
கடந்திடும் காலனும் எண்ணிய நாளும்
படர்ந்திடும் நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடும் வண்ணம் அடைந்திடு நீயே.

நடந்திடும் பாரினி னன்மைக ளெல்லாங்
கடந்திடுங் காலனு மெண்ணிய நாளும்
படர்ந்திடு நாமமும் [1]பாய்கதிர் போல
வடைந்திடும் வண்ண மடைந்திடு நீயே. (6)

வேறு பாடம்: 1. பாத்திரம் (ஆ) II.

கருத்து: இவ்வுலக வாழ்வில் எல்லா நன்மைகளும் கிடைக்கும். ஆயுள் எல்லை கடக்கும். சூரியனைப் போல (கதிர்கள் போல)ப் புகழ் பரவும். ஆதலின் பராசத்தியை உரிய முறையில் வழிபட்டு அருள் பெறுக.

இங்கும் நன்மை, அங்கும் நன்மை

1313. அடைந்திடு பொன், வெள்ளி, கல்லுடன் எல்லாம்
அடைந்திடும் ஆதி அருளும் திருவும்
அடைந்திடும் அண்டத்து, அமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே.

அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுட னெல்லா
மடைந்திடு மாதி யருளுந் திருவு
மடைந்திடு மண்டத் தமரர்கள் வாழ்வு
மடைந்திடும் வண்ண மறிந்திடு நீயே. (7)

கருத்து: இம்மையில், பொன், வெள்ளி, இரத்தினக் கற்கள் முதலிய மதிப்புடைய பொருள்கள் எய்தும். மறுமையில் பராசத்தி அருளும் வீடுபேற்றுச் செல்வமும் எய்தும். விண்ணுலகத் தேவர்களின் வாழ்வும் எய்தும். ஆதலின் அவளைச் சாரும் வழியை அறிக.

தேவ தேவன்

1314. அறிந்திடுவார்கள் அமரர்களாகத்
தெரிந்திடு வானோரும் தேவர்கள் தேவன்
பரிந்திடு வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடு வானை முயன்றிடு நீயே.

அறிந்திடு வார்க ளமரர்க ளாகத்
தெரிந்திடு [1]வானோருந் தேவர்க டேவன்
பரிந்திடு வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடு வானை முயன்றிடு நீயே[2]. (8)

வேறு பாடம்: 1. வானோர் (விசு) (தி) (த) (வ) (சண்) (சைவ) 2. நீரே (சைவ)

கருத்து: அறிந்தோர் தெய்வங்களாகத் தெரிந்து கொண்ட வானுலகினர்க்கும் தலைவன். கருணையுடயோன். பாய்ந்து வரும் கங்கையைச் சடையில் தாங்கி, அதன் வேகத்தைக் கெடுத்தவன். (அவன் சத்தியை இணைபிரியாத் தலைவன். அவளது அருளால்) அவனை அடைய முயல்க.

முரித்திடுவான் - மெலித்தல் விகாரம் பெற்றது. அருளே சக்தி.

சந்திரமண்டலத்தில் சத்தி

1315. நீர்தரு சக்கரம் நேர்தரு வண்ணங்கள்
பார்மதியும், 'ஹ்ரீம் முன் 'ஶ்ரீம்' ஈறான
தார் அணியும் புகழ்த் தையல் நல்லாள் தன்னைக்
கார் அணியும் பொழில் கண்டு கொள்ளீரே.

[1]நீர்தரு சக்கர நேர்தரு வண்ணங்கள்
[2]பார்மதி யும்மிறீ [3]முன்சிறீ யீறான[4]
தாரணி யும்புகழ்த் தையனல் லாடன்னைக்
காரணி யும்பொழிற் கண்டுகொள் ளீரே. (9)

வேறு பாடம்: 1. நீர்பணி (ஆ) III. 2. பாரணி (ஆ) II. 3. மன்சிறீ (ஈ ஓ) II. 4. மேவாருந் (ஆ) III யீறாந் (சண்) மீறாஞ் (சைவ)

கருத்து: சத்தியின் தன்மையைக் கொண்ட நவாக்கரி சக்கரத்தின் வகைகள், உடம்பில் பிருதிவி மண்டலம் முதல் சந்திரமண்டலம் வரை தியானத்தில் வைக்கத் தகுந்தவை. அவற்றுள் ஒன்று 'ஹ்ரீம்' முதல் 'ஸ்ரீம்' ஈறானது. அதனைச் (சந்திர மண்டலத்தில்) தியானத்தில் வைத்து, பராசத்தியை இவ்வுலகத்தில் தரிசிப்பீர் களாக.

பிருதிவிமண்டலம் - மூலாதாரம். சந்திரமண்டலம் - சகஸ்ராரம்.

1316. கண்டு கொளுந்தனி நாயகி தன்னையும்
மொண்டுகொ ளும்முக வசியம தாயிடும்
பண்டுகொ ளும்பர மாய பரஞ்சுடர்
நின்றுகொ ளுந்நிலை பேறுடை யாளே. (ட, ந)

அரசரும் வசமாவர்

1317. பேறு உடையாள்தன் பெருமையை எண்ணிடில்,
நாடு உடையார்களும் நம் வசம் ஆகுவர்,
மாறு உடையார்களும் வாழ்வது தான் இலை;
கூறு உடையாளையும் கூறுமின் நீரே.

பேறுடை யாடன் பெருமையை யெண்ணிடி
னாடுடை யார்களு நம்வச மாகுவர்'
மாறுடை யார்களும் வாழ்வது தானிலை
கூறுடை யாளையுங் கூறுமின் னீரே. (10)

வேறு பாடம்: 1. மாயிடும் (சுவ)

கருத்து: வீடுபேறு அருள்பவளின் பெருமையை எண்ணினால், மன்னர்களும் நம் வசமாவர். பகைவர் தோல்வியுறுவர். ஆதலின் பரமசிவனின் பங்கில் இருப்பவளை வழிபடுக.

அமரர் போல் வாழ்க

1318. கூறுமின் எட்டுத் திசைக்கும் தலைவியை,
மாறுமின் அண்டத்து அமரர்கள் வாழ்வு என;
மாறுமின் வையம் வரும்வழி தன்னையும்,
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே.

கூறுமி னெட்டுத் திசைக்குந் தலைவியை
[1]மாறுமி னண்டத் தமரர்கள் வாழ்வென[2]
மாறுமின் வையம் வரும்வழி தன்னையுந்
தேறுமின் னாயகி சேவடி சேர்ந்தே. (11)

வேறு பாடம்: 1. யாறுமின் (விசு) 2. வாழ்வெனல் (த)

கருத்து: உலகின் தலைவியது புகழை ஏத்துக. அதனால் விண்ணுலகத்தேவர்கள் வாழ்தல் போல இங்கே இன்புறுக. அடுத்து பிறவிகள் வருதலை மாற்றுக. பராசத்தியின் திருவடி சார்ந்து பதி ஞானம் பெறுக.

சொரூபசத்தி

1319. சேவடி [1]சேரச் செறிய விருந்தவர்
நாவடி யுள்ளே நவின்றுநின் றேத்துவர்
பூவடி யிட்டுப் பொலிய விருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே. (12)

வேறு பாடம்: 1. சேர்ந்து (த)

கருத்து: பராசத்தியின் திருவடியைச் சேரும் பொருட்டு, அவளைச் சார்ந்து இருக்கும் அன்பர் நவாக்கரி மந்திரத்தை அசபையாகத் தியானிப்பர். ஆயிர விதழ்த் தாமரையாகிய சகஸ்ராரத்தில் பராசத்தி திருவடி வைத்து விளங்க அவளைத் தரிசிக்கும் பேறு பெற்று, யோகத்தில் இருக்கும் அன்பர், பரமாகாயத்தில் விளங்கும் அவள் திருவுருவைக் காணும் வழியை அறிய வருவார்.

நாவடி - அண்ணாக்கின் அடி. மா அடி - பெரிய திருவடி, பரமாகாயத்தில் விளங்கும் திருவுருவம். உருவம் என்றாரேனும், இது தடத்தம் அன்று; அதனைக்கடந்த சொரூபம் என்க.

இதனால் கேசரி யோகத்தைக் குறித்தார்.

சிவசத்தி வழிபாடு

1320. ஐ முதலாக அலர்ந்து எழு சக்கரம்
'ஐம்' முதலாக மலர்ந்து, 'ஹ்ரீம்' ஈறாகும்;
ஐ முதலாகிய வாக்கு உடையாள் தனை
'ஐம்' முதலாக வழுத்திடு நீயே.

ஐம்முத லாக [1]வலர்ந்தெழு சக்கர
மைம்முத லாக மலர்ந்திறீ யீறாகு[2]
[3]மைம்முத [4]லாகிய வாக்குடை யாடனை
[5]யைம்முத லாக வழுத்திடு நீயே. (13)

வேறு பாடம்: 1. வளர்ந்தெழு (அ) I மலர்ந்தெழு (ஓ) III வமர்ந்தெழு (ஆ) III. 2. மீறாகு (சைவ) 3. மம்முத (சைவ) 4. லாகியவர்க்குடை (விசு) (தி) சண். (சைவ); லாகி யவற்றுடை (த) 5. மைம்முத (சைவ)

கருத்து: தலைவியாகிய பராசத்தியை முதலாகக் கொண்டு, விரிந்து எழும் நவாக்கரி சக்கரத்தின் ஒருவகை, 'ஐம்' முதலாக 'ஹ்ரீம்' இறுதியாகக் கொள்ளும். இம்மந்திரத்தால் நுண்ணியதாகிய சூக்குமை முதலிய நான்கு வாக்குகளை உடைய சத்தியை, அவள் தலைவன் ஆகிய சிவனை முதலாகக் கொண்டு வழிபடுக.

யோக தரிசனம்

1321. வழுத்திடும் நாவுக்கரசு இவள் தன்னைப்
பகுத்திடு வேதம் மெய் ஆகமம் எல்லாம்
தொகுத்து ஒரு நாவிடைச் சொல்லவல்லாளை
முகத்துளும் முன் எழக் கண்டுகொளீரே.

[1]வழுத்திடு நாவுக் கரசிவ டன்னைப்
பகுத்திடு வேதமெய் யாகம மெல்லாந்
தொகுத்தொரு [2]நாவிடைச் சொல்லவல் லாளை
முகத்துளு முன்னெழக் கண்டுகொ ளீரே. (14)

வேறு பாடம்: 1. அளித்திடு (ஓ) III. 2. நாவினிற் (ஆ) III.

கருத்து: வணங்கப்படும் வாசீசுவரியான பராசத்தியை வேதாகமங்கள் எல்லாம் விளக்கமாகப் பேசும். அப்பொருளை எல்லாம் நவாக்கரி மந்திரமாகத் தொகுத்து ஒரே வாசகமாகச்

சொல்ல அருளிய அவளை, அவ்வாறு கூறி, அண்ணாக்கின் உள்ளே அவள் எழுந்தருள்வதைத் தரிசிக்க.

உலகையே வெல்லலாம்

1322. கண்ட இச்சக்கரம் நாவில் எழுந்திடில்
கொண்ட இம் மந்திரம் கூத்தன் குறியதாம்;
மன்றினுள் வித்தையும் மானிடர் கையதா
வென்றிடும் வையகம் மெல்லியல் மேவியே.

கண்டவிச் சக்கர நாவி லெழுந்திடிற்[1]
கொண்டவிம் மந்திரங் கூத்தன் குறியதா
மன்றினுள் வித்தையு மானுடர் கையதா[2]
வென்றிடும் வையக [3]மெல்லியன் மேவியே. (15)

வேறு பாடம்: 1. லெழுந்திடக் (ஐ) III லெழுதிடிற் (விசு) (தி) (த) (வ) (சண்) (சைவ) 2. கையதாய் (அ ஓ) I. 3. மெல்லிய ளாளதே (அ) IV.

கருத்து: இச்சக்கரத்தை ஒருவன் செபித்தால், இந்த மந்திரம் கூத்தப் பெருமான் திருவடிவாம். திருவம்பலவித்தை மனிதர்க்குக் கைவரும். பராசத்தியின் அருள் எய்துவதால் உலகையே வெல்லலாம்.

வழிபட்ட நாள் நல்ல நாள்

1323. மெல்லியல் ஆகிய மெய்ப்பொருளாள் தனைச்
சொல் இயலாலே தொடர்ந்து அங்கு இருந்திடும்
பல்லியல் ஆகப் பரந்து எழு நாள் பல
நல்லியல்பாலே நடந்திடும் தானே.

மெல்லிய லாகிய மெய்ப்பொரு ளாடனைச்
சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்
[1]பல்லிய லாகப் பரந்தெழு நாள்பல
நல்லியல் பாலே நடந்திடுந் தானே. (16)

வேறு பாடம்: 1. பல்லியல்பாகப் (ஓ) IV.

கருத்து: மெய்ப் பொருளாகிய பராசத்தியை ஆசாரியன் உபதே சித்த நெறியில் வழிபட்டு இருக்கும் நாள் - பல தன்மை

உடையனவாக உள்ள பல நாட்சள் - நல்ல தன்மையுடையனவயாக நடக்கும்.

கல்விப்புகழ் வரும்

1324. நடந்திடும் நாவினுள் நன்மைகள் எல்லாம்
தொடர்ந்திடு சொல்லொடு சொற்பொருள் தானும்
கடந்திடும் கல்விக்கு அரசு இவனாகப்
படர்ந்திடும் பாரில் பகை இல்லை தானே.

நடந்திடு நாவினு ணன்மைக ளெல்லாந்
தொடர்ந்திடு சொல்லொடு சொற்பொரு டானுங்
கடந்திடுங் கல்விக் கரசிவ னாகப்[1]
படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே. (17)

வேறு பாடம்: 1. ளாகப் (விசு) (தி) (த) (வ) (சைவ)

கருத்து: இம்மந்திரம் செபிப்பவனுக்கு, நன்மைகள் தொடர்ந்து நடைபெறும். சொற்புலமையுடன் பொருளாட்சியும் கைவரும். உலகில் கல்விக்கு அரசாகத் திகழ்வான். இவனுக்குப் பகை இல்லை.

எல்லாரும் வணங்குவர்

1325. பகை இல்லை 'கௌ' முதல் 'ஐ' அது ஈறா
நகை இல்லை சக்கரம் நன்று அறிவார்க்கு
மிகை இல்லை சொல்லிய பல்உரு எல்லாம்
வகை இல்லையாக வணங்கிடும் தானே.

பகையில்லைக் கௌம்முத [1]லையது வீறா
நகையில்லைச் சக்கர [2]நன்றறி வார்க்கு
மிகையில்லைச் சொல்லிய பல்லுரு வெல்லாம்
வகையில்லை யாக வணங்கிடுந் தானே (18)

வேறு பாடம்: 1. லைந்து மேலாகும் (ஆ, ஈ, ஓ) II. 2. நல்லறி (விசு)

கருத்து: இம் மந்திரத்தைக் 'கௌம்' முதலாக 'ஐம்' ஈறாகத் தியானிப்பவர்க்குப் பகை இல்லை. நன்கு தியானித்துப் பழகியவர்க்கு யாரும் பரிகசித்தல் இல்லை. பல உயிர்களுள் எதுவும் இவரை வெல்ல இயலாமையால் வணங்கி நிற்கும்.

1326. வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடு நல்லுயி ரானவை யெல்லாங்
கலங்கிடுங் காம வெகுளி மயக்கந்
துலங்கிடுஞ் சொல்லிய சூழ்வினை தானே. (ங)

எண்ணத்தை அறிபவன்

1327. தானே கழறிற்று அறியவும் வல்லனாய்,
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்த்
தானே தனிநடம் கண்டவள் தன்னையும்
தானே வணங்கித் தலைவனும் ஆமே.

தானே [1]கழறிற் றறியவும் வல்லனாய்த்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனாய்த்
தானே தனிநடங் [2]கண்டவ டன்னையுந்
தானே வணங்கித் தலைவனு மாமே. (19)

வேறு பாடம்: 1. கழறித் தணியவும் (விசு) (த) (வ) (சைவ) 2. கண்டவன் றன்னையுந் (ஓ) I.

கருத்து: இறைவனை நடஞ் செய்யுமாறு ஆக்கிய சத்தியை வணங்குபவன், பிற உயிர்கள் 'பேசுவதை' அறிய வல்லவனாய், பிறர் நினைத்தவற்றைச் சொல்ல வல்லவனாய், அனைவர்க்கும் தலைவன் ஆவான் .

1328. ஆமே யனைத்துயி ராகிய வம்மையுந்
தாமே சகலமு மீன்றவத் தையலு
மாமே யவளடி போற்றி வணங்கிடிற்
போமே வினைகளும் புண்ணிய னாகுமே. (ஆ, ஔ)

கருணை நிலையம்

1329. புண்ணியன் ஆகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணியன் ஆகிக் கலந்து இங்கு இருந்திடும்;
தண்ணியன் ஆகி, தரணி முழுதுக்கும்
அண்ணியன் ஆக அமர்ந்திடுந்தானே.

புண்ணிய னாகிப் பொருந்தி யுலகெங்குங்
கண்ணிய னாகிக் [1]கலந்திங் கிருந்திடுந்
தண்ணிய னாகித் தரணி முழுதுக்கு
மண்ணிய னாக [2]வமர்ந்திடுந் தானே. (20)

வேறு பாடம்: 1. கலந்தங் (அ ஆ ஒ ஓ) II. 2. யமர்ந்திருந் (சண்) (சைவ)

கருத்து: சத்தியை வழிபடுவோன் உலகம் எங்கும் புண்ணியன் என்ற பெயருடன் வாழ்ந்து, பெருமையுடன் விளங்குவான். யாவரோடும் அன்பினால் கலந்து உறவு கொள்வான். உலகத்துயிர் அத்துணைக்கும் கருணை உடையோனாய், நெருங்கியிருப்பவனாய் வாழ்வான்.

அருள் - ஒளி

1330. தான் - அது 'கம்-இறீம்' 'கௌ' - அது ஈறா,
நான் அது சக்கரம்; நன்று அறிவார்க்கு எல்லாம்
கான் - அது; கன்னி, கலந்த பராசத்தி;
கேள் அது, வையம் கிளர்ஒளி யானதே.

தானது [1]கம்மிறீ கௌவது வீறா[2]
நானது சக்கர நன்றறி வார்க்கெல்லாங்
கானது கன்னி கலந்த பராசத்தி
கேளது வையங் கிளரொளி யானதே. (21)

வேறு பாடம்: 1. கிறீம் (சண்) 2. மேலாகும் (ஆ) IV.

கருத்து: "நான்" ஆக என்னில் கலந்த சக்கரத்தில் உள்ள மந்திரம் 'க்ரீம்' முதலாக 'கௌம்' ஈறாக உள்ளது. அதன் பயனை நன்றாக அறிவார்க்கு, அது (அனுபவம்) சோலை போல்வது. உலகில் உள்ளோர், கன்னியும், உயிரில் கலந்து நிற்கும் பராசத்தியும் ஆக உள்ள தெய்வத்தின் சுற்றமாக (தமராக; அடியாராக) நிற்பர். இவ்வுலகம் அவளது அருள் ஒளியால் ஒளி பெற்று விளங்குகின்றது. அந்த அனுபவம் இருந்தவாறு என்னே!

'க்ரீம்' என்பதை கம், ஹ்ரீம் எனப் பிரித்துக் கூறியது செய்யுட்காக. சக்கரத்தையே சத்தி வாழும் சோலை எனலும் ஆம். கேள் - சுற்றம்.

அருள் மழை

1331. ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரின்
களிக்கும் இச்சிந்தையில் காரணம் காட்டித்
தெளிக்கும்; மழையுடன் செல்வம் உண்டாக்கும்;
அளிக்கும் இவளை அறிந்து கொள்வார்க்கே.

ஒளிக்கும் பராசத்தி யுள்ளே யமரிற்
களிக்குமிச் [1]சிந்தையிற் காரணங் காட்டித்[2]
தெளிக்கு மழையுடன் செல்வமுண் டாக்கு
மளிக்கு மிவளை யறிந்துகொள் வார்க்கே. (22)

வேறு பாடம்: 1. சிந்தையுங் (ஈ ஐ ஒ ஓ) I. 2. காட்டுந் (அ ஈ ஓ) III.

கருத்து: இன்ன உரு எனத் தன்னைக் காட்டாது மறைந்து நிற்கும் பராசத்தி, அவளையறியும் அன்பரின் சிந்தையில் எழுந்தருள்வாள். மயக்க உணர்வால் களிக்கும் அச்சிந்தையில், காரணத்தை உணர்த்தி, அந்த மயக்கத்தை நீக்கி, அருள் மழை பொழிவாள். ஞானச் செல்வம் விளைவிப்பாள்.

அரசனும் பணிவான்

1332. அறிந்திடும் சக்கரம் அர்ச்சனை யோடே
எறிந்திடும் வையத்து இடர்-அவை காணின்;
மறிந்திடும் மன்னனும் வந்தனை செய்யின்;
பொறிந்திடும் சிந்தை புகை இல்லை தானே.

அறிந்திடுஞ் [1]சக்கர மர்ச்சனை யோடே[2]
[3]யெறிந்திடும் வையத் [4]திடரவை காணின்[5]
மறிந்திடும் மன்னனும் வந்தனை செய்யிற்[6]
பொறிந்திடும் சிந்தை புகையில்லை தானே. (23)

வேறு பாடம்: 1. சக்கர அர்ச்சனை (த) 2. யெட்டே (ஓ) I. 3. வெறிந்திடும் (விசு) 4. திடரது (ஆ) IV திடர்வகை (ஈ ஓ) III. 5. காணல் (தி) ; காவன் (விசு) 6. செய்யும் (விசு) (சைவ) செய்வான் (த)

கருத்து: அருச்சனை செய்யும் முறை அறியப்பட்டு வழிபடப் பெறுவது இச்சக்கரம். உலகில் அன்பர்கள் இடர்கள் உறும்போது, அவற்றை நீக்கும் பராசத்தியை இவ்வாறு வழிபட்டால், மன்னனும்

அன்பர்க்குப் பணிவான். இயல்பாகப் புழுங்கும் மனத்தில், வெறுப்பு மறையும். அன்பு உண்டாகும்.

உயிர்களுக்குத் தலைவர்

1333. புகையில்லை சொல்லிய [1]பொன்னொளி யுண்டாங்
குகையில்லை கொல்வ திலாமையி னாலே
வகையில்லை வாழ்கின்ற [2]மன்னுயிர்க் கெல்லாஞ்
சிகையில்லை சக்கரஞ் சேர்ந்தவர் தாமே. (24)

வேறு பாடம்: 1. போரொளி (ஆ) I. 2. மன்னுயிரெல்லாஞ் (ஆ) IV.

கருத்து: இம்மந்திரத்தால் பராசத்தியை வழிபடுவார்க்கு உள்ளத்தில் துயரில்லை. உடல் ஒளியாகும். அவர்கள் உயிர்களைக் கொல்லாமையால் நரகில் புகார். உயிர்களிடையே அவர்கள் வேறுபாடு உணரார் இச்சக்கரத்தால் பராசத்தியின் அருளைச் சேர்ந்தவர்களே அவ்வுயிர்கட்குத் தலைவர் ஆவர். வேறு யாரும் இலர்.

இருள் மாற ஒளி

1334. சேர்ந்தவர் என்றும் திசைஒளி ஆனவர்,
காய்ந்தெழும் மேல்வினை காணகிலாதவர்;
பாய்ந்தெழும் உள்ளொளி பாரில் பரந்தது,
மாய்ந்தது காரிருள்; மாறுஒளி தானே.

சேர்ந்தவ ரென்றுந் திசையொளி யானவர்[1]
காய்ந்தெழு மேல்வினை காணகி லாதவர்
பாய்ந்தெழு முன்ளொளி பாரிற் பரந்தது
மாய்ந்தது காரிருண் மாறொளி தானே. (25)

வேறு பாடம்: 1. வானவர் (ஈ) IV.

கருத்து: பராசத்தியின் அருள்நிழலைச் சேர்ந்த அன்பர், திக்குகளிலும் ஒளி பரப்பும் சோதியாய் ஆகியவர். முடுகி எழும் ஆகாமிய வினைவைச் சந்திக்காதவர். அவர் உயிருணர்வில் பதிந்த பதிஞானம், இவ்வுலகையும் அவர்க்குத் தெளிவாக்கி, ‘எல்லாம் சிவம்’ எனக் காணச் செய்தது. அவர்தம் உயிரைப் பிடித்த ஆணவமலம் ஆகிய இருள் மறைந்தது; அதன் இடத்தில் ஞானவிளக்கம் நின்றது.

சிந்தை தெளிய

1335. ஒளியது ஹௌமுன் கிரிமது வீறாங்
களியது சக்கரங் கண்டறி வார்க்குத்
[1]தெளிவது ஞானமுஞ் சிந்தையுந் தேறப்
[2]பளியது பஞ்சாக் கரமது தானே.

வேறு பாடம்: 1. தெளியவு (ஆ) II. 2. பணிவது (ஈ ஐ) II. 3. வாகுமே (ஆ ஈ ஓ) II; வாமே (விசு) (தி) (த) (சைவ)

கருத்து: "ஹௌம்" என்பது முதலாகவும் க்ரீம் என்பது ஈறாகவும் கொண்ட சக்கரம், அதன் அனுபவம்பெறும் யோகியர்க்கு ஒளி தருவது; ஆனந்தம் நல்குவது; தெளிவு அருள்வது; ஞானம் பெறவும், சிந்தை தெளியவும் பள்ளிச் சாலை ஆவது. திருவைந்தெழுத்தைப் போலச் சிறந்தது.

பள்ளி இடைக்குறைந்தது.

உள்ளறிவு

1336. ஆமே சதாசிவ நாயகி ஆனவவ்;
ஆமே அதோமுகத்து உள்-அறிவு ஆனவள்;
ஆமே சுவை ஒளி ஊறு ஓசை கண்டவள்;
ஆமே அனைத்துயிர்; தன்னுளும் ஆமே.

ஆமே சதாசிவ நாயகி யானவ
ளாமே யதோமுகத் துள்ளறி வானவ
ளாமே சுவையொளி யூறோசை கண்டவ[1]
ளாமே யனைத்துயிர் தன்னுளு மாமே. (27)

வேறு பாடம்: 1. கொண்டவ (ஈ ஓ) I.

கருத்து: பராசத்தியே மனோன்மணி. அவளே அசுத்த மாயையின் காரியமான உடம்பு உடையவர்கட்கு உள் அறிவாக நிற்கும் வித்யேகரரின் சத்தி வித்யேசுவரி. அவளே பிரகிருதி மாயையில் சுவை முதலிய தன்மாத்திரைகளைப் படைத்தவள். அவளே அனைத்து உயிர்க்கும் உயிராக நிற்பவள். அவளே இச்சக்கரத்திலும் நிற்கிறாள்.

கண்ணிலும் உடம்பிலும் சத்தி

1337. தன்னுளும் ஆகித் தரணி முழுதும் கொண்டு
என்னுளும் ஆகி இடம்பெற நின்றவள்
மண்ணுளும், நீர், அனல், காலுளும் வானுளும்
கண்ணுளும் மெய்யுளும் காணலும் ஆமே.

தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்
டென்னுளு மாகி யிடம்பெற நின்றவண்[1]
மண்ணுளு நீரனல் காலுளும் வானுளுங்
கண்ணுளு [2]மெய்யுளுங் காணலு மாமே. (28)

வேறு பாடம்: 1. நின்றிடின் (ஆ) I. 2. மெவ்வுயிர் (ஆ) I.

கருத்து: இச்சக்கரத்தில் நின்றும், உலகம் முழுவதையும் தனக்குள் ஒடுக்கி நின்றும், என் உணர்வாய்க் கலந்தும் உள்ள பராசத்தி, ஐம்பூதங்களிலும் என் கண்ணிலும் உடம்பிலும் உள்ளமையை யோகத்தில் காணலாம்.

அருள் நெறி வாழ்க்கை

1338. காணலு மாகுங் கலந்துயிர் செய்வன
காணலு மாகுங் கருத்து ளிருந்திடிற்
காணலு மாகுங் [1]கலந்து வழிசெய்யக்[2]
காணலு மாகுங் கருத்துற நில்லே. (29)

வேறு பாடம்: 1. கலந்த (உ ஒ) I. 2. வழிசெய்து (ஆ) III; வழிசெயல் (த)

கருத்து: பராசத்தி நம் சிந்தையுள் நின்றால், அவள் அருளால், அவள் உயிர்களுடன் கலந்து இயங்குவதைக் காணலாம். அதே போல் அவள் அருள் பெற்ற ஆன்மா அவளுடன் 'ஏகன்' ஆகிக் கலந்து, அவள் அருள்வழியே செயலாற்றுவதையும் காணலாம். இவற்றை நீயும் காணக் கருத்து ஊன்றி நிற்க.

நோக்கும் இடமெல்லாம் நான்

1339. நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றாகக்
கண்டிடும்; உள்ளம் கலந்து எங்கும் தானாகக்
கொண்டிடும் வையம்; குணம் பல; தன்னையும்
விண்டிடும் வல்வினை; மெய்ப்பொருள் ஆகுமே.

நின்றிடு மேழு புவனமு மொன்றாகக்
கண்டிடு முள்ளங் [1]கலந்தெங்குந் தானாகக்
கொண்டிடும் வையங் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே. (30)

வேறு பாடம்: 1. கருத்தெங்குந் (ஆ) IV.

கருத்து: பராசத்தியின் அருள், அன்பனின் உயிருணர்வில் பதிவதால், அவன் உலகம் முழுவதையும், மற்றுள்ள புவனங் களையும் இருந்த இடத்தில் இருந்தே, ஒருங்கே காணும் வியாபாக உணர்வைப் பெறுவான். எங்கும் உள்ள உயிர்களோடு உள்ளம் கலந்து, 'அவை தான்' ஆகக் கொள்வான். முக்குணவசப் படுதலையும், தான் இறைவனுக்கு அன்னியம் என்ற உணர்வையும், வினையால் தொடக்குறுதலையும் நீத்துவிடுவான். மெய்ப்பொருட் சிவத்தைக் கலந்து, 'சிவமே' ஆகி நிற்பான்.

கைப்பொருள்

1340. மெய்ப்பொருள் 'ஔ' முதல் "ஹௌ"-அது ஈறாகக்
கைப்பொருளாகக் கலந்து எழு சக்கரம்
தற்பொருளாகச் சமைந்து, அமுதேவரி
நற்பொருளாக நடு இருந்தாளே.

மெய்ப்பொரு ளௌமுதல் ஹௌவது வீறாகக்
கைப்பொரு ளாகக் கலந்துதெழு சக்கரந்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேவரி[1]
நற்பொரு ளாக நடுவிருந் தாளே. (31)

வேறு பாடம்: 1. தேனு (ஓ) II; தேஸ்வரி (ஈ) IV; தேஸ்பரி (ஆ) I; தேச்சரி (த) தேச்சுரி (துடி)

கருத்து: மெய்ப்பொருளின் வடிவமான இம்மந்திரம், 'ஔம்' என்பதை முதலாகவும் 'ஹௌம்' என்பதை ஈறாகவும் கொண்டு, யோகிக்கு ஒரு கைப்பொருளாக எழும். சக்கரத்தின் பொருளாக, பராசத்தி, அமுதேசுவரியாக அமர்ந்திருக்கின்றாள்.

நாடு - சுழுமுனையையும் சுட்டும். அமுதேவரி - வடசொல் திரிபு.

உடம்பு அழியாது

1341. தாள்-அதின் உள்ளே சமைந்த அமுதேவரி
கால்-அது கொண்டு கருத்துஉற வீசிடின்
நாள்-அது நாளும் புதுமைகள் கண்டபின்
கேள்-அது காயமும், கேடு இல்லை காணுமே.

தாளதி னுள்ளே சமைந்தமு தேவரி
காலது கொண்டு [1]கருத்துற வீசிடி
னாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமுங் கேடில்லை காணுமே. (32)

வேறு பாடம்: 1. கலந்துற (சண்) (சைவ).

கருத்து: யோக முயற்சிக்கு உதவும் சக்கரத்தில் பொருந்திய அமுதேசுவரியின் அருளால், கேசரி யோகத்தில் பிராணவாயுவை அண்ணாக்கின் வழியே உச்சந்தலைக்குச் செலுத்தினால், நாள்தோறும் புதிய அனுபவங்களைப் பெறலாம். பெற்றால், உடம்பு என்றும் ஆன்மாவுடனே உறவாக இருக்கும்; அழியாது.

காண், உம், ஏ - என்பன அசைகள். தாள் - முயற்சி. இது சக்கரத்துக்கு ஆகியது; கருவியாகு பெயர்.

நீடித்த வாழ்வு

1342. கேடு இல்லை காணும் கிளர்ஒளி கண்டபின்,
நாடு இல்லை காணும் அந்நாள் முதல் அற்றபின்,
மாடு இல்லை காணும் வரும்வழி கண்டபின்,
காடு இல்லை காணும் கருத்துற்ற இடத்துக்கே.

கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின்
னாடில்லை [1]காணுமந் [2]நாண்முத லற்றபின்
மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்
காடில்லை காணுங் கருத்துற் றிடத்துக்கே. (33)

வேறு பாடம்: 1. காணும் (சைவ) 2. நான்முத (அ) I நாமுத (ஆ ஓ) I.

கருத்து: சகஸ்ராரத்தில் பொங்கியெழும் பேரொளியாகப் பரம்பொருளைக் கண்டால், ஆன்மாவிற்கும் உடம்பிற்கும் அழிவு

இல்லை. அந்நாளில் (ஒளியைக் காணும் நாளில்) ஆன்மா மாயை ஆகிய முதலினைச் சார்தலினின்றும் நீங்குவதால், இடம், காலம் என்ற வகையில் போக்குவரவு செய்தல் இல்லை. அருள் பெறும் வழியைக் கண்டால், அதனினும் சிறந்த செல்வம் இல்லை. அப்போது உயிருணர்வினால் உணர்ந்து வாழும் வாழ்வுக்கு முடிவிடம் இல்லை.

நாடு - நாடுதல்; முதனிலைத் தொழிற் பெயர். காடு வாழ்வின் முடிவிடம் ஆதலின், இங்கு முடிவிடத்தை மட்டும் குறித்தது.

முடிவற்ற வெளி

1343. உற்ற இடம் எல்லாம் உலப்பு - இலி பாழ் ஆகக்
கற்ற இடம் எல்லாம் கடுவெளியானது
மற்று இடம் இல்லை, வழி இல்லை, தான் இல்லை,
சற்று இடம் இல்லை, சலிப்பு அற நின்றிடே.

உற்றிட மெல்லா [1]முலப்பிலி பாழாகக்[2]
கற்றிட மெல்லாங் [3]கடுவெளி யானது
மற்றிட மில்லை வழியில்லை தானில்லை
சற்றிட மில்லை சலிப்பற நின்றிடே. (34)

வேறு பாடம்: 1. ஒப்பிலி (ஓ) I உலப்பில் (விசு) 2. பாழாகிக் (அ ஈ ஓ) I; பாழாக்கிக் (விசு) (தி) (வ) 3. கருவெளி (ஓ) I.

கருத்து: நிருவிகற்ப சமாதியைக் கூறுகின்றார்: யோகிக்குக் காட்சிப் பட்டது அளவு, வடிவு, குணம் மூன்றும் அற்ற, முடிவற்ற பாழ். பதிஞானத்தைப் பெறும் இடமாகிய அது வெட்ட வெளியாகும். அது பூரணம் ஆதலின் அது அன்றி வேறு இடமில்லை. அதனை அடைய, அருள்வழியன்றி வேறு வழியில்லை. அவ்வருளில் கலந்தோர் 'தான்' அற்றுநிற்பர். அக்காட்சியைவிட்டுச் சலனம் அடைந்து, வேறு காட்சி காண்பது என்பது இல்லை. இந்த நிலையை நீயும் எய்தி நிற்க.

அருளனுபவம்

1344. நின்றிடும் ஏழ்கடல் ஏழ்புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தான் ஒக்கும்,
நின்றிடும் சத்தி நிலைபெறக் கண்டிட,
நின்றிடும் மேலை விளக்கொளி தானே.

நின்றிடு மேழ்கட லேழ்புவி யெல்லாம்
நின்றிடு முள்ள நினைத்தவை தானொக்கு[1]
நின்றிடுஞ் சத்தி [2]நிலைபெறக் கண்டிட
நின்றிடு மேலை விளக்கொளி தானே. (35)

வேறு பாடம்: 1. தானே (அ) II. 2. நிலைபேறு (ஆ ஓ) IV.

கருத்து: இந்த யோகி ஏழு கடலிலும், ஏழு உலகங்களிலும் தன் உள்ளம் நினைத்தவாறே செயற்படுவான். இவனிடத்தில் பராசத்தி நிலைபெற்று நிற்க, இவனது சகஸ்ராரத்தில் ஜோதி காட்சிப்பட்டவாறே இருக்கும்.

இதனால் கூறியது, அருளனுபவம் நிலைத்து நிற்கும்போது சிவதரிசனம் மறைதல் இல்லை என்பதாம்.

சத்தியால் ஞானம் பெறுக

1345. விளக்கொளி சௌமுத லௌவது வீறாம்
விளக்கொளிச் சக்கரம் மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி [1]யாக விளங்கிடு நீயே[2]. (36)

வேறு பாடம்: 1. யாகி (விசு) 2. நீரே (அ ஆ ஒ ஓ) I.

கருத்து: ஞான விளக்கத்தைத் தரவல்ல 'சௌம்' முதலாக 'ஔம்' ஈறாக உள்ள மந்திரம், ஒளிவிளக்கத்தை யோகிக்குத் தரும் சக்கரத்தின் மெய்ப்பொருளாகிய பராசத்தியின் வடிவமே யாகும். உலகில் அனைத்தையும் தனது அருளொளியால் விளக்கும் பராசத்தியை உன் உடம்பில் சகஸ்ராரத்தில் தோன்றும் சோதியாகத் தரிசித்து, ஞானம் பெறுவாயாக.

சத்தியை உணர்ந்தோரே உணர்ந்தோர்

1346. விளங்கிடும் மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடும் மெல்லியலாள் அது ஆகும்;
விளங்கிடும் மெய் நின்ற ஞானப் பொருளை
விளங்கிடுவார்கள் விளங்கினர் தானே.

விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடு மெல்லிய [1]லாளது வாகும்
விளங்கிடு மெய்ந்நின்ற ஞானப் பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே. (37)

வேறு பாடம்: 1. லானது (சண்) (சைவ)

கருத்து: யோகத்தின் மேல்நிலையில் எய்தும் ஞானப்பயனாக மெய்ப் பொருளைச் சொல்லப்புகின், அது பராசத்தியே ஆகும். சோதியாகவே வெளிநின்ற அவளை உணர்ந்தோரே உண்மையில் உணர்ந்தோர் ஆவர்.

தான், ஏ: அசைகள்.

தாய்

1347. தானே வெளி என எங்கும் நிறைந்தவள்;
தானே பரமவெளி-அது ஆனவள்;
தானே சகலமும் ஆக்கி அழிந்தவள்;
தானே அனைத்துஉள அண்ட சகலமே. (38)

தானே [1]வெளியென வெங்கு நிறைந்தவ
டானே பரம வெளியது வானவ
டானே சகலமு [2]மாக்கி யழித்தவ[3]
டானே [4]யனைத்துள வண்ட சகலமே[5]. (38)

வேறு பாடம்: 1. வெளியன (ஆ ஒ) I வெளியவ ளெங்கு (ஒ) IV. 2. மாகி (ஆ ஒ) I. 3. யளித்தவ (ஆ ஈ ஒ) I. 4. யளிந்துள (ஈ) IV. 5. சகளமே (த).

கருத்து: பராசத்தியே பூதாகாயமாக எங்கும் நிறைந்துள்ளவள். அவளே பரமாகாயமும் ஆவள். அனைத்துலகங்களையும் அவற்றில் பொருள் அனைத்தையும் படைப்பவளும் அவனே, அழிப்பவளும் அவளே. இவ்வுலகம் மட்டும் அன்றி அனைத்துப் புவனங்களையும் படைத்து, அவையாக நிற்பவளும் அவளே.

கழுத்தில் கலந்தவள்

1348. அண்டத்தினுள்ளே அளப்பரிது ஆனவள்
பிண்டத்தினுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தின் உள்ளே குணம் பல காணினும்
கண்டத்தில் நின்ற கலப்பு அறியாரே.

அண்டத்தி னுள்ளே யளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே [1]பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணினுங்[2]
கண்டத்தி னின்ற கலப்பறி யாரே[3]. (39)

வேறு பாடம்: 1. பெருவழி (அ ஈ) III. 2.காணிலுங் (ஒ ஓ) III. 3. யார்களே (அ ஈ ஓ) II.

கருத்து: அண்டவெளியில் கலந்துநிற்கும் பராசத்தி காணற் கரியவள்; ஆனால் உடம்பினுள் தன் அருளால் பெரு வெளியைக் காணச் செய்வாள். யாக குண்டத்தில் செய்யும் ஓமத்தால் பல நன்மைகளை இவ்வுலகோர் அடைந்தாலும், பராசத்தி, தம் உடம்பில் ‘விசுத்தி’ எனப்படும் கழுத்துப் பகுதியில் நிற்கும் கலப்பினை, உத்திக் கமலத்தையே யாக குண்டமாகக் கொண்டு செய்யும் யோகத்தினால் அன்றி அறிய இயலாது. அதனைப் பலர் அறியார்.

பொன்னுடம்பு பெற்றோர்

1349. கலப்பு அறியார் கடல் சூழ் உலகு எல்லாம்
உலப்பு அறியார் உடலோடு உயிர் தன்னை;
சிலப்பு அறியார், சில தேவரை நாடித்
தலைப்பறியாகச் சமைந்தவர் தாமே.

கலப்பறி யார்கடல் சூழுல கெல்லா
முலப்பறி யாருட லோடுயிர் தன்னைச்
சிலப்பறி [1]யார்சில தேவரை நாடித்
தலைப்பறி யாகச் சமைந்தவர் தாமே[2]. (40)

வேறு பாடம்: 1. யார்பல (ஓ) IV. 2. தானே (அ ஆ ஈ) II.

கருத்து: சத்தியின் அருளால் சிறந்த பொன் உடம்பைப் பெற்ற அன்பர் பிறவார்; இறவார். சிறு தேவர்களை வழிபட்டு ஆரவாரம் செய்யார்.

சிலம்பு என்ற முதனிலைத் தொழிற் பெயர் வலித்தல் விகாரம் பெற்றது.

பறி - பொன்.

சக்கர அமைப்பு

1350. தானே எழுந்த அச்சக்கரம் சொல்லிடில்
மானே மதி வரை பத்து இட்டு வைத்தபின்
தேனே இரேகை திகைப்பு அற ஒன்பதில்
தானே கலந்த அறை எண்பத்தொன்றுமே.

தானே யெழுந்தவச் சக்கரஞ் சொல்லிடின்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
றேனே யிரேகை திகைப்பற வொன்பதிற்
றானே [1]கலந்த வறையெண்பத் தொன்றுமே. (41)

வேறு பாடம்: 1. கலங்கரை எண்பத் தொடொன்றே (ஆ ஓ) I.

கருத்து: பராசத்தியே நாத வடிவமாக எழுந்த அந்த நவாக்கரி சக்கரமாவது: குறுக்கும் நெடுக்குமாகப் பத்துக் கோடு இட்டால், வரிசைக்கு ஒன்பது அறையாக, ஒன்பது வரிசைக்கு எண்பத்தோர் அறைகள் கொண்டு அமைவது. (வரிசைகள் இதுவரை கூறப்பட்டன).

சக்கரத்தில் நிறங்கள்

1351. ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்,
வென்றிகொள் மேல்மதி வட்டமும் பொன்மையாம்;
கன்றிய ரேகை கலந்திடும் செம்மையில்,
என்று இயல் அம்மை எழுத்து-அவை பச்சையே.

ஒன்றிய சக்கர [1]மோதிடும் வேளையில்[2]
வென்றிகொண் [3]மேன்மதி வட்டமும் பொன்மையாங்
கன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையி
[4]லென்றிய லம்மை யெழுத்தவை பச்சையே. (42)

வேறு பாடம்: 1. மெய்திடும் (அ) IV. 2. வெள்ளையில் (ஆ ஈ) I. 3. மேனி மதி வட்டம் (விசு) 4. லன்றிய (அ ஈ) IV; மன்றிய (ஆ ஓ) II.

கருத்து: இச்சக்கரத்தில் உடம்பாகிய மதிவட்டம் பொன்னிறம். கோடுகள் செந்நிறம். சூரியனை ஒத்த ஒளியுடன் யோகியின் உடம்பில் எழும் சத்தியின் எழுத்துக்களின் நிறம் பச்சை.

யாகமும் யோகமும்

1352. ஏய்ந்த மரஉரி தன்னில் எழுதி நீ
வாய்ந்த இப் பெண் எண்பத்தொன்றில் நிரைத்தபின்
காய்ந்த அவி, நெய், எள் கலந்து உடன் ஓமமும்
ஆம் தலத்து, ஆம் உயிர் ஆகுதி பண்ணே.

[1]ஏய்ந்த மரவுரி தன்னி லெழுதிநீ[2]
வாய்ந்தவிப் பெண்ணெண்பத் தொன்றி னிரைத்தபின்
காய்ந்தவி [3]நெய்யெட் கலந்துட னோமமு
மாந்தலத் தாமுயி ராகுதி பண்ணே[4]. (43)

வேறு பாடம்: 1. ஏய்ந்தமராபதி (ஆ) I. 2. லெழுதிநீர் (ஒ) IV லெழுந்தினி (ஆ) I லெழுதிய (விசு) (தி) (த) (வ) (சண்) 3. நெய்யுட் (சைவ) 4. பண்ணுமே (சண்) (சைவ).

கருத்து: நவாக்கரி சக்கரத்தை மரப்பட்டையில் வரைந்து, சத்தி பீஜமாகிய நவாக்கரியை ஒன்பது வரிசைகளாக எழுதி, அதனைப் புறத்தே ஓமத்தீயில் அவிப் பொருளாக நெய், எள் ஆகியவற்றைச் சொரிந்து, உன் உயிரையே ஆகுதி செய்வது போல் பாவித்திடுக. அகத்தே மூலாதாரமாகிய ஓம குண்டத்தில், உயிரையே நெய்யும் எள்ளும் ஆகிய அவிப்பொருளாகச் சொரிந்து மூலக்கனலாகிய ஓமத்தீயில் ஆகுதி பண்ணுக.

நீ சிவம் ஆவாய்

1353. பண்ணிய பொன்னைப் பரப்பு அற நீ பிடி
எண்ணிய நாள்களில் இன்பமும் எய்திடும்;
நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்தபின்
துண்ணென மேயநற் சொக்கனும் ஆமே.

[1]பண்ணிய பொன்னைப் [2]பரப்பற நீபிடி
யெண்ணிய நாள்களி லின்பமு மெய்திடு
நண்ணிய நாமமு நான்முக னொத்தபின்[3]
[4]றுண்ணென [5]மேயநற் [6]சொக்கனு மாமே. (44)

வேறு பாடம்: 1. பண்ணியப் பெண்ணைப் (த) 2. பகைப்பற (ஆ ஒ) II. 3. னோதிடுஞ் (ஆ ஒ) II. 4. சொல்லியலேறிநற் (ஆ ஒ) II. 5. நேயநற் சேர்க்கலு மாமே (விசு) (தி) (வ) 6. சேர்க்கலு (சண்) (சைவ).

கருத்து: எழுதிய, பொன் போன்ற சக்கரத்தை, உலகியல் எண்ணங்களில் அலையாமல் தொடர்ந்து தியானம் செய்க. அந்த நாட்களில் இன்பம் எய்தும். உன் பெயரான 'ஞாதா' என்பது (அறிபவன்) பிரமனின் பெயராகிய 'வேதா' என்பதை (அறியப்படுவது) ஒத்தால், அதாவது அறிபவனும் அறியப்படும் பொருளும் ஒன்றானால், ஞாதா சொக்கனாகிய சிவமே ஆகிவிடுவான். அதாவது நீ சிவம் ஆவாய்.

வேதா என்னும் வடசொல் பிரமனையும், அறியப்படும் பொருளையும் குறிக்கும் இருபொருட் சொல். இதுகொண்டு 'பிரமன்' என்ற பொருள் தோன்ற 'நான்முகன்' எனக் கூறினாலும் 'அறியப்படும் பொருள்' என்ற பொருளையே இங்குக் கொள்க. அப்பொருள், இங்குச் 'சிவம்' ஆகும்.

சக்கர வழிபாடு

1354. ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
யாகின்ற கற்பூர மாகோ சனநீருஞ்
சேர்கின்ற வொன்பதுஞ் [1]சேரநீ வைத்திடே. (45)

வேறு பாடம்: 1. சேரநீர் (ஒ) IV.

கருத்து: சக்கரத்தை இவ்வொன்பது பொருள்களைக் கொண்டு வழிபடுக.

சத்தியின் அருள்பெற

1355. வைத்திடும் பொன்னுடன் மாதவம் நோக்கிடில்,
கைச்சிறு கொங்கை கலந்து எழு கன்னியைத்
தச்சு இதுவாகச் சமைந்த இம்மந்திரம்
அர்ச்சனை ஆயிரம் ஆயிரம் சிந்தியே.

[1]வைத்திடும் [2]பொன்னுடன் மாதவ நோக்கிடிற்
[3]கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத்
[4]தச்சிது வாகச் சமைந்தவிம் மந்திர
மர்ச்சனை யாயிர [5]மாயிரஞ் சிந்தியே. (46)

வேறு பாடம்: 1. வைத்தவை (ஆ ஓ) IV. 2. பொன்னோ டமர்பதம் (ஒ) IV. 3. கச்சிறு (ஆ ஓ) III; கச்சிருள்(ஓ) I. 4. தச்சது (ஒ ஓ) III. 5. வாகுடன் (ஓ) I.

கருத்து: தியானப் பொருளாக வைத்த பராசத்தியின் அருளோடு செய்யும் பெரிய தவமாகிய யோகம் இது. மிக்க இளையவளாகிய பராசத்தியை வசியப்படுத்தும் உபாயமாக அமைந்த இந்நவாக்கரி மந்திரத்தை ஆயிரக்கணக்கில் உருவேற்றும் இத்தியானத்தைச் செய்க.

சத்தி தரிசனம்

1356. சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியா
[1]யெந்தை கரங்க ளிருமூன்று முள்ளது[2]
பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு
[3]முந்த [4]கிலீயெழ முன்னிருந் தாளே. (47)

வேறு பாடம்: 1. வெந்தை (விசு) யெந்தாய் (த) 2. முன்னள (த) 3. முந்தை (சைவ) 4. கிலீமெழ (சைவ).

கருத்து: 'க்லீம்' என்பது முதலான நவாக்கரி மந்திரம் எழுந்தவுடன், பராசத்தி என் சிந்தையுள் விளங்கும் சோதியாயும், ஆறு கைகள் உடைய வடிவமாயும், அக்கைகளில் சூலம், பாசக்கயிறு, வில், அம்பு ஆகிய ஆயுதங்களை ஏந்தியவளாகவும் முன் நிற்கின்றாள்.

உள்ளது - உடைய வடிவம். தேவியின் அருவுருவமும் உருவமும் கூறப்பட்டன.

சத்தியின் பரிவாரம்

1357. இருந்தனர் சத்தி அறுபத்து நால்வர்;
இருந்தனர் க்ன்னிகள் எண்வகை எண்மர்;
இருந்தனள் சூழ எதிர் சக்கரத்தே
இருந்த கரம் இரு வில் அம்பு கொண்டே.

[1]இருந்தனர் [2]சத்தி யறுபத்து நால்வ
ரிருந்தனர் கன்னிக ளெண்வகை யெண்ம
[3]ரிருந்தனள் சூழ வெதிர்சக் கரத்தே[4]
யிருந்த [5]கரமிரு வில்லம்பு கொண்டே. (48)

வேறு பாடம்: 1. இருந்தன (ஆ ஒ ஓ) I. 2. சத்திகளறுபத்து (விசு) (தி) (வ) (த) 3. ரிருந்தனர் (ஆ ஒ ஓ) I. 4. கரமா (ஆ ஓ) III. 5. கரமழு (ஓ) IV.

கருத்து: சக்கரத்தில் 64 யோகினி சத்திகளும் அட்ட கன்னிகளும் சூழ, பராசத்தி இரு கைகளிலும் வில்லும் அம்பு ஏந்தி வீற்றிருந்தாள்.

“சக்கரத்தே” என்றாராயினும் சக்கரத் தியானத்தின் பயனாக என்க.

தியானம் எவ்வடிவில், அவ்வடிவில் தரிசனம்

1358. கொண்ட கனகம், குழை, முடி, ஆடையா,
கண்ட இம் மூர்த்தம் கனல் திரு மேனியா,
பண்டு அமர் சோதிப் படர் இதழ் ஆனவள்
உண்டு அங்கு ஒருத்தி, உணரவல்லார்க்கே.

கொண்ட [1]கனகங் குழைமுடி யாடையாக்
கண்டவிம் [2]மூர்த்தங் [3]கனறிரு மேனியாப்
பண்டமர் சோதிப் படரித ழானவ
ளுண்டங் கொருத்தி [4]யுணரவல் லார்க்கே. (49)

வேறு பாடம்: 1. களங்குழை (ஒ) I கனங்குழை கோமுடி (த) 2. முத்தங் (ஆ) IV. 3. கலந்திரு (ஆ) IV. 4. யுணர்ந்துகொள்வார்கட்கே (ஆ ஓ) II.

கருத்து: பொன்னணி கலங்கள், காதணி, திருமுடி, ஆடை - இவை அணிந்து விளங்கிய வடிவம் சுடர்விடும் சோதியாகவும், இதழ்கள் இரண்டும் சோதியாகவும் உடைய ஒருத்தி; அவளை அங்ஙனம் உணர வல்லவர்க்கு அவ்வாறே காட்சியளிப்பாள்.

நாதமும் விந்துவும்

1359. உணர்ந்து இருந்து, உள்ளே ஒருத்தியை நோக்கில்
கலந்திருந்து அங்கே கருணை பொழியும்,
மணந்து, எழும் ஓசை, ஒளி - அது காணும்,
தணந்து எழு சக்கரம் தான் தருவாளே.

உணர்ந்திருந் துள்ளே யொருத்தியை நோக்கிற்
கலந்திருந் [1]தங்கே கருணை பொழியும்
[2]மணந்தெழு மோசை [3]யொளியது காணுந்
[4]தணந்தெழு சக்கரந் தான்றரு வாளே. (50)

வேறு பாடம்: 1. தெங்குங் (அ) IV. 2. மலர்ந்தெழு (ஆ ஓ) II. 3. யொலியது (விசு) 4. தளர்ந்தெழு (ஓ) II.

கருத்து: பராசத்தியை உள்முகமாக நோக்கி, உயிருணர்வினால் நாடினால், அவ்வுணர்விற்கு வெளிப்பட்டுக் கருணைமழை பொழிவாள். அவளது காட்சியில், ஒருசேர நாதம் எழும். சோதி தோன்றும். சக்கரத்தில் மந்திர வடிவாக இருந்த அவள், அதை விட்டு, இவ்வாறு உடம்பினுள் காட்சி தருவாள்.

பெருவாழ்வு தரும் பேரொளி

1360. தருவழி யாகிய தத்துவ ஞானங்
குருவழி [1]யாகுங் [2]குணங்களில் நின்று
கருவழி [3]யாகும் கணக்கை யறுத்துப்
பெருவழி [4]யாக்கும் பேரொளி தானே[5]. (51)

வேறு பாடம்: 1. யாய (ஓ) IV. 2. குணங்களுணின்று (விசு) 3. யாய (ஐ. ஓ) III. 4. யாகிய (ஆ ஓ) IV. 5. காணே (ஆ ஓ) IV.

கருத்து: வீடுபேற்றிற்கு வழியாகிய தத்துவ ஞானம் குரு உபதேசத்தின் மூலம் கைவரும். அதன்வழி, பராசத்தி ஆன்மாவுக்கு அனுபவப் பொருளாகி, பிறவிக்கு மூலமான வினையை அறுத்துப் பெருவாழ்வு தரும் பேரொளி ஆவாள்.

சகஸ்ராரத்தில் சத்தி

1361. பேரொளி ஆய பெரிய மலர் நடுச்
சீரொளி யாகித் திகழ்திரு நாயகி,
தார்ஒளி ஆயவள் தன் நிறம் பொன்மையாப்
பார்ஒளியாகப் பரந்துநின்றாளே.

பேரொளி யாய பெரிய மலர்நடுச்[1]
சீரொளி [2]யாகித் திகழ்திரு நாயகி
[3]தாரொளி யாயவ டன்னிறம் பொன்மையாப்
பாரொளி [4]யாகப் பரந்துநின் றாளே. (52)

வேறு பாடம்: 1. பெருஞ்சுடர் (அ) II. 2. யாய (ஆ ஓ) II. 3. காரொளி யாகிய கன்னியைப் பொன்னிறம் (அ ஈ ஓ) II கன்னிகை (விசு) (தி) (வ) (த) 4. யாகிப் (அ) I.

கருத்து: மிக்க ஒளியுடன் விளங்கும் சகஸ்ராரத் தாமரையில், அதற்கு ஒளி நல்கி விளங்கும் தலைவி, பொன்னிறம் உடையவளாய் உள்ளமையோடு, பாரின் இடம் எங்கும் ஒளியாகப் பரவி நிற்கிறாள்.

பராசத்தியின் தோற்றம்

1362. பரந்த கரம் இரு பங்கயம் ஏந்தி,
குவிந்த கரம் இரு கொய்தளிர்ப் பாணி,
பரிந்தன கொங்கைகள் முத்து ஆர் பவளம்,
இருந்த நல்லாடை மணி பொதிந்தன்றே.

பரந்த [1]கரமிரு பங்கய மேந்திக்
குவிந்த கரமிரு [2]கொய்தளிர்ப் பாணி
[3]பரிந்தன கொங்கைகண் முத்தார் பவள
மிருந்தநல் லாடைட் மணிபொதிந் தன்றே. (53)

வேறு பாடம்: 1. கரமிது (ஈ) I. 2. கொய்தமா (ஆ ஐ) IV. 3. மலர்ந் தணி (ஆ ஓ) II பரிந்தருள் (சண்) 4. மிருந்தல்குலாடை (ஆ ஓ) III.

கருத்து: பராசத்தியின் இரு கைகள் தாமரை மலரை ஏந்தி விரிந்தன. மற்றும் இரு கைகள் அபயமுத்திரையும் வரத முத்திரையும் காட்டி உடம்பிற்குள் அடங்கி, தளிர் போன்றவையாய் விளங்கின. மார்பில் அணிந்த முத்துமாலை, பவளமாலை ஆகியவற்றைக் கொங்கைகள் தம் பருமையால் அறுத்தன. அவள் இடையில் அணிந்த பொன்னாடை மணிமேகலையை மறைத்தது.

கொண்டு கூட்டு: இருகரம் பங்கயம் ஏந்திப் பரந்த; இருகரம் குவிந்த கொய்தளிர்ப்பாணி; கொங்கைகள் முத்தார் பவளம் பரிந்தன, இருந்த நல்லாடை மணி பொதிந்தன்றே.

அருட் கோலம்

1363. மணிமுடி, பாதம் சிலம்பு அணி மங்கை
அணிபவள் அன்றி அருள் இல்லை ஆகும்,
தணிபவர் நெஞ்சினுள் தன் அருள் ஆகிப்
பணிபவர்க்கு அன்றே பரகதி ஆமே?

மணிமுடி [1]பாதஞ் சிலம்பணி மங்கை
[2]யணிபவ ளன்றி யருளில்லை யாகுந்
[3]தணிபவர் நெஞ்சினுட் டன்னரு ளாகிப்
[4]பணிபவர்க் கன்றே பரகதி யாமே. (54)

வேறு பாடம்: 1. பாதச் (ஐ ஓ) I. 2. யணிந்தவர்க் (ஆ ஓ) II. 3. தணிந்தவர் (ஆ ஓ) III. 4. பணிந்தவர்க் (ஆ ஓ) III. 5. கன்றோ (சண்) .

கருத்து: தலையில் இரத்தினக் கிரீடமும், திருவடியில் சிலம்பும் அணிந்தவளும், அருளையே தன் இயல்பாகக் கொண்டவளுமாகிய பராசத்தியை அல்லாது, அருள்இல்லை. உலகியற்பற்று நீங்கப் பெற்றவரின் மனத்தில் தனது இயல்பான அருட்டிருக்கோலத்தில் வீற்றிருப்பாள். தன்னை வழிபடுவோர்க்கு வீடுபேறு அளிப்பாள்.

அன்றே - என்பது வினா. தன் அருள் - அருட்சத்தி. இஃது அவள் சொரூபத்திருமேனி.

இலக்குமி வடிவில்

1364. பரந்திருந் துள்ளே [1]யறுபது சத்தி
[2]கரந்தன கன்னிக ளப்படிச் சூழ
மலர்ந்திரு கையின் மலரவை யேந்திச்[3]
சிறந்தவ ரேத்துஞ் சிரீதன மாமே. (55)

வேறு பாடம்: 1. யறுபத சந்ததி (ஓ) I. 2. கரந்தனர் (த) 3. யேந்தச் (சைவ) 4. சீர்ம்தன (சைவ).

கருத்து: சக்கரத்தினுள்ளே அறுபது யோகினி சத்திகள் பரவி மறைந்து நிற்க, 'வசினி' முதலிய எட்டுக் கன்னிகள் சூழ, அன்பில் சிறந்தவர் தம் விரிந்த கைகளில் மலர்களை ஏந்தி வழிபட, 'ஸ்ரீம்' என்ற பீஜத்தை உடைய இலக்குமி வடிவாகப் பராசத்தி விளங்கிச் செல்வம் அளிப்பாள்.

1365. தனமது வாகிய தையலை நோக்கி
மனமது வோடி மரிக்கிலோ ராண்டிற்
கனமவை யற்றுக் கருதிய நெஞ்சந்
தினகர னாரிட செய்திய தாமே. (ங, க)

உடல் முழுதும் ஒளி

1366. ஆகின்ற மூலத்து எழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி ஆய மலரது ஆய்,
போகின்ற பூரணமாக நிறைந்தபிவ்,
சேர்கின்ற செந்தழல் மண்டலம் ஆனதே.

ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி யாய மலரதாய்ப்[1]
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழன் மண்டல மானதே[2] (56)

வேறு பாடம்: 1. மலர்த்தாய்ப் (விசு) 2. மாமே (ஓ) I.

கருத்து: மூலாதாரத்தில் வேர் கொண்டு, சகஸ்ராரத்தில் மேல் நோக்கி மலர்ந்த ஆயிரவிதழ்த்தாமரை சுழுமுனையில் தண்டு கொண்டு, எங்கும் பரவுகின்ற பேரொளி உடைய மலராக, எங்கும் வியாபித்துள்ள பூரணப்பொருளாக (பூரண சோதியாக) நிறைவுற்ற பிறகு, உடல் முழுதும் ஏரொளிச் சக்கரமாயிற்று.

ஆறு ஆதாரத்திலும் அவள்

1367. ஆகின்ற மண்டலத்துள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத்தறு வகை ஆனவள்
ஆகின்ற ஐம்பத்தறு சத்தி நேர்தரு
ஆகின்ற ஐம்பத்தறு வகை சூழவே.

ஆகின்ற மண்டலத் துள்ளே யமர்ந்தவ[1]
ளாகின்ற வைம்பத் தறுவகை யானவ
ளாகின்ற வைம்பத் தறுசத்தி நேர்தரு
வாகின்ற வைம்பத் தறுவகை சூழவே. (57)

வேறு பாடம்: 1. யமைந்தவ (ஆ ஓ) III.

கருத்து: உடம்பு முழுவதுமாய் நிறைந்த ஏரொளி மண்டலத்தில் வீற்றிருப்பவள் ஆகிய பராசத்தி, ஐம்பத்தாறு எழுத்துக்கள் அமைந்த சக்கர வடிவாக, ஆறு ஆதாரங்களிலும் வியாபித்து நிற்பவள். அந்த எழுத்துக்களை இயக்கும் ஐம்பத்தாறு சத்திகள் அவளைச் சூழ நின்று பணி செய்கின்றனர்.

குறிப்பு: ஐம்பத்தாறு எழுத்து: வடமொழி நெடுங்கணக்கில் உள்ள 51 எழுத்துக்களும், வியட்டிப் பிரணவமாகிய அ, உ, ம, நாதம், விந்து என்னும் ஐந்தும். சத்திகள் - அட்சர தேவதைகள்.

பராசத்தி கோலம்

1368. சூழ்ந்து எழு சோதி, சுடர்முடி, பாதமா,
ஆங்கு அணி முத்தம், அழகிய மேனியும்,
தாங்கிய கை-அவை தார்க்கிளி ஞானமா
ஏந்து கரங்கள் எடுத்த மா பாசமே.

சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமா
[1]வாங்கணி [2]முத்த மழகிய மேனியும்
[3]தாங்கிய கையவை [4]தார்க்கிளி ஞானமா
வேந்து கரங்க [5]ளெடுத்தமா பாசமே. (58)

வேறு பாடம்: 1. யாங்கனி (அ ஐ ஓ) I. 2. முத்தமிழாகிய (ஈ ஐ) I. 3. தாங்கிரு (ஐ ஓ) III. 4. தார்கிளி (சைவ), தத்துவ (ஓ) IV. 5. ளெடுத் தமர் (சண்).

கருத்து: சுற்றிலும் எழுகின்ற சோதியும் ஒளி வீசும் திருமுடியும், திருவடியும் முத்துமாலையும் அழகிய மேனியும், கைகளில் கிளியும், சின்முத்திரையும், மற்றும் இரு கைகளில் பாசம் முதலிய ஆயுதங்களும் கொண்டு பராசத்தி திகழ்வாள்.

1369. பாசம தாகிய வேரை யறுத்திட்டு
நேசம தாக நினைந்திரு mம்முளே
நாசம தெல்லா நடந்திடு மையாண்டிற்
காசினி மேலமர் கண்ணுத லாகுமே. (௫)

பிரணவ ஒலி எழ

1370. கண்ணுடை நாயகி தன் அருள் ஆம் வழி
பண் உயர் நாதம் பகை அற நின்றிடின்,
விண் அமர் சோதி விளங்க, இறீங்காரம்
மண் உடை நாயகி மண்டலம் ஆகுமே.

கண்ணுடை நாயகி [1]தன்னரு ளாம்வழி
[2]பண்ணுயர் நாதம் பகையற நின்றிடின்
விண்ணமர் சோதி [3]விளங்கவி றீங்கார (59)
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே[4].

வேறு பாடம்: தண்ணரு (ஈ) IV. 2. பண்ணுறு (விசு) (தி) (து) (வ) (சண்) 3. விளங்கிடி (ஈ ஐ ஓ) II. 4. மானதே (ஓ) IV.

கருத்து: நெற்றிக் கண்ணை உடைய பராசத்தியின் அருள் கிடைத்தற்கு உரிய வழியில், பிரணவ நாதம் எழுந்து ஒத்துநிற்க வேண்டின், பராகாசத்தில் சோதி விளங்கத் தருவதாகிய 'ஹ்ரீம்' என்பதை முதலாக உடைய நவாக்கரியைத் தியானம் செய்க.

பராகாசம் - பேரறிவு வெளி. சிதாகாசம் - உயிரின் அறிவு வெளி.

கருவிகரணங்களும் ஒளி மயம்

1371. மண்டலத்துள்ளே மலர்ந்து எழு தீபத்தைக்
கண்டு, அகத்துள்ளே கருதி இருந்திடும்
விண்-தலத்துள்ளே விளங்கி வருதலால்
தண்டகத்துள் அவை தாங்கலும் ஆமே.

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்
[1]கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
[2]விண்டலத் துள்ளே விளங்கி வருதலாற்
[3]றண்டகத் துள்ளவை தாங்கலு மாமே. (60)

வேறு பாடம்: 1. கண்டிடத் (ஐ) IV. 2. விண்டகத் (அ ஈ ஓ) I. 3. றண்டலத் (ஆ ஈ) I.

கருத்து: நவாக்கரி சக்கரத் தியானத்தால் உடம்பினுள் விரிந்து எழுகின்ற சோதியைத் தரிசித்து, பின்பு பரமாகாயத்திலும் அச்சோதி தோன்றுதலால், உடம்பில் கருவி கரணங்களைத் தாங்குவதும் ஓர் அனுபவமாக அமையும். அவையும் ஒளிபெறும்.

அனுபவம் கிடைக்குமுன் மாயைக் காடாக இருந்த பொறி புலன்கள், அது கிடைத்த பின் விளக்கைப் போல் ஒளி வீசுதலைக் கூறினார்.

தண்டகம் - தண்டு, அகம் - உடம்பு.

பிரணவத்தின் ஆற்றல்

1372. தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்து
ஓங்கி எழும் கலைக்கு உள்ளுணர்வு ஆனவள்
ஏங்க வரும் பிறப்பு எண்ணி அறுத்திட
வாங்கிய நாதம் வலியுடன் ஆமே.

தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்
தோங்கி [1]யெழுங்கலைக் குள்ளுணர் வானவ
ளேங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய நாதம் வலியுட னாமே[2]. (61)

வேறு பாடம்: 1. லருங்கலைக் (ஐ) IV. 2. னாகுமே (சைவ)

கருத்து: பராசத்தி, யோகியின் உந்தியில் உள்ள ஆதாரத்தை ஒரு நிலையில் தானே தாங்குகிறாள். அந்த ஆதாரத்தில் தோன்றி எழும் கலைக்கு (அக்கினி கலைக்கு) உள்ளுணர்வாக விளங்குபவள் அவளே. அவள், யோகியின் பிறப்பை நீக்கச் சங்கற்பித்து, அவ்வாறே நீக்குவதற்காக உண்டாக்கி, யோகியைக் கேட்கச் செய்யும் நாதம் அவளது அருளால் ஆற்றல் உடையதாக இருக்கும்.

உயிரின் தலைவி

1373. நாவுக்கு நாயகி நன்மணி பூணாரம்[1]
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்[2]
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தா
ளாவுக்கு நாயகி யங்கமர்ந் தாளே. (62)

வேறு பாடம்: 1. பூரணம் (ஓ) II. 2. யாடையாள் (ஓ) III.

கருத்து: வாகீஸ்வரியும், இலக்குமியும், கலைமகளுமாக வீற்றிருக்கும் பராசத்தி, மணி பதிக்கப்பட்ட பொன்மாலையும், கிரீடமும், பொன்னாடையும் அணிந்து, பால் போன்ற நிறம் உடையவளாகச் சகஸ்ராரத்தில் ஆன்மநாயகியாக வீற்றிருக்கிறாள்.

ஆ - ஆன்மா. பசு எனவுமாய்த் திருவாவடுதுறை அம்பிகையையும் சிறப்பாற் சுட்டும்.

அமுத நாடி

1374. அன்று இரு கையில் அளந்த பொருள்முறை
இன்று இரு கையில் எடுத்த வெண் குண்டிகை
மன்று-அது காணும் வழி அதுவாகவே
கண்டு அங்கு இருந்த அக் காரணி காணுமே.

அன்றிரு கையி லளந்த பொருண்முறை
யின்றிரு கையி [1]லெடுத்தவெண் குண்டிகை
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் [2]கிருந்தவக் காரணி காணுமே[3]. (63)

வேறு பாடம்: 1. லெடுத்து வெண் (ஓ) I. 2. கிருந்தவர் (ஓ) II. 3. காணதே (ஐ) I.

கருத்து: பிராணவாயு இடைகலை, பிங்கலை என்ற இரு நாடிகளில் இயங்கி வெளியேயிருந்து உட் புகுந்து ஆற்றல்தர, மாந்தர் உலக அறிவைப் பெற்றது அன்று. மாறாக, இன்று, பராசத்தி தன் அருளால், அவ்விடை கலை, பிங்கலைகளை அமுத நாடிகளாக மாற்றி, யோகி அந்த அமுதத்தைப் பருகி அனுபவம் பெற்று, இறைவன் ஆடியருளும் பொன் மன்றத்தைக் காணும்படி, அவ்வனுபவத்தை அதற்கு வழியாக்குகின்றாள்.

குண்டிகை - குடம்; இங்கு அமுத நாடி.

குண்டிகை - கலசம். காரணி - படைப்புக்குக் காரணமாதல் போலவே வீடு பேற்றுக்கும் காரணமானவள். காணும் என்றது பராசத்தி யோகியுடன் 'ஒன்றாய்' இருந்து காண்பதை. யோகி அருட்கண் பெற்றுக் காண்கின்றான் என்க.

சக்கரத்தில் சத்திகள்

1375. காரணி சத்திக ளைம்பத் திரண்டெனக்
காரணி கன்னிக ளைம்பத் திருவராய்க்
காரணி சக்கரத் துள்ளே கரந்தெங்குங்
காரணி தன்னரு ளாகிநின் றாளே. (64)

கருத்து: உலகக்காரணியாகிய பராசத்தியே, காரணி சத்திகள் 52 பேராகவும், காரணி கன்னியர் 52 பேராகவும் நவாக்கரி சக்கரத்தில் மறைந்து, எங்கும் தனது அருளே பரவ நின்றாள்.

1376. நின்றவிச் சத்தி நிலைபெற நின்றிடிற்
கண்டவிவ் வன்னி கலந்திடு மோராண்டிற்
கொண்ட விரதநீர் குன்றாம னின்றிடின்
மன்றினி லாடு மணியது காணுமே. (ரு)

மூச்சு நிற்கும்

1377. கண்டவிச் [1]சத்தி யிருதய பங்கயங்
கொண்டவித் தத்துவ நாயகி யானவள்
[2]பண்டையவ் [3]வாயுப் பகையை யறுத்திட
வின்றென் மனத்து ளினிதிருந் தாளே. (65)

வேறு பாடம்: 1. சோதி (ஐ) I. 2. பண்டைய (அ ஐ ஓ) I. 3. வாவு (த)

கருத்து: ஆன்மாவின் கருத்து உலகப் பொருள்களில் இருந்த பொழுது, இருதயத் தாமரையில் வீற்றிருந்த பராசத்தி, அவ்வான்மா விந்து, நாதங்களின் மயமானபொழுது, முன்பு பிறவிக் கட்டினை நிலைப்படுத்திக்கொண்டு உலகப்பொருள்களில் எண்ணத்தைச் செலுத்திய பிராணவாயுவின் இயக்கத்தை நிறுத்துமாறு (கேவல கும்பகம் வாய்க்குமாறு) மனத்தில் வீற்றிருக்கின்றாள்.

யோகிக்கு வலிமை தருபவள்

1378. இருந்த இச்சத்தி இரு நாலு கையில்
பரந்த இப் பூ, கிளி, பாசம், மழுவாள்,
கரந்த கிடுகுடன், வில் அம்பு கொண்டு அங்கு
உரந்தங்க இருந்தவள் கூத்து உகந்தாளே.

இருந்தவிச் சத்தி [1]யிருநாலு கையிற்
பரந்தவிப் [2]பூக்கிளி பாச மழுவாள்
[3]கரந்த [4]கிடுகுடன் வில்லம்பு கொண்டங்[5]
குரந்தங் [6]கிருந்தவள் கூத்துகந் தாளே. (66)

வேறு பாடம்: 1. யிருநாலுலகிற் (ஈ) II. 2. பூங்கிளி (விசு) (தி) (வ) 3. கரந்திடு (விசு) (தி) (த) (வ) 4. கேடகம் (விசு) (தி) (த) (வ) 5. கொண்டு (ஐ) II. 6. இருந்தவன் (ஓ) IV.

கருத்து: உடம்பினுள் இருந்த பராசத்தி, எட்டுக் கையிலும் தாமரை, கிளி, பாசம், மழு, வாள், கேடயம், வில், அம்பு என்ற எட்டுப் பொருள்களையும் ஏந்தி, யோகிக்கு வலிமை நிலையாக இருக்கு மாறு வீற்றிருப்பவள். அவள் நடனம் ஆடுகின்றாள்.

1379. உகந்தனள் பொன்முடி முத்தார மாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான் பச்சை யாமே. (அ, ட, ண)

1380. பச்சை யிவளுக்குப் பாங்கிமார் ஆறெட்டு
கொச்சையா ரெண்மர்கள் கூடி வருதலாற்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச விடைச்சி யினிதிருந் தாளே. (ஏ, ஔ)

1381. தாளதி னுள்ளே தயங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்துகொள் ளென்று
மாலது வாக வழிபாடு செய்துநீர்
பாலது போலப் பரந்தெழும் விண்ணிலே. (அ, உ, ட)

1382. விண்ணமர் நாபி யிருதய மாங்கிடைக்
கண்ணமர் கூடங் கலந்து வருதலாற்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே. (ங, க)

1383. கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலா
லாபத்துக் கைக ளடைந்தன நாலைந்து
பாச மறக்கப் பரந்தன சூழவே (ட, க)

1384. சூலந்தண் டொள்வாள் சுடர்பறை ஞானமாய்
வேலம்பு தமருக மாகிளி விற்கொண்டு
காலம்பூப் பாசம் மழுகத்தி கைக்கொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே. (அ, ண)

ஆதாரசத்தி

1385. எண் அமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண் அமர் சத்திகள் நாற்பத்து நால்வராய்
எண்ணிய பூவிதழ் உள்ளே இருந்தவள்
எண்ணிய எண்ணம் கடந்து நின்றாளே.

எண்ணமர் சத்திக ணாற்பத்து நாலுட
னெண்ணமர் [1]சத்திக ணாற்பத்து நால்வரா
[2]யெண்ணிய பூவித மூள்ளே யிருந்தவ[3]
ளெண்ணிய வெண்ணங் கடந்துநின் றாளே. (67)

வேறு பாடம்: 1. கன்னிக (வ) 2. மெண்ணிய (அ ஓ ஓ) III. 3. யெழுந்திவ (ஐ) IV.

கருத்து: சுவாதிட்டானம் முதல் விசுத்தி வரையுள்ள நான்கு ஆதாரங்களில் உள்ள தாமரைப்பூக்களின் இதழ்கள் நாற்பத்து நான்கிலும், நாற்பத்து நான்கு சத்திகளாய், நாற்பத்து நான்கு தோழியர் சூழ வீற்றிருக்கும் பராசத்தி, சிந்தை கடந்தவளாவாள்.

சத்தி தரிசனம்

1386. கடந்தவள் பொன்முடி மாணிக்கத்தோடு
தொடர்ந்த அணி முத்து, பவளம் கச்சு ஆக,
படர்ந்த அல்குல் பட்டாடை, பாதச் சிலம்பு,
மடந்தைக் குமரி இல் வந்து நின்றாளே.

[1]கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்துப் பவளங்கச் சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு
[2]மடந்தைக் குமரியில் வந்துநின் றாளே. (68)

வேறு பாடம்: 1. கடந்தன (ஐ) IV. 2. மடந்தை சிறியவள் (ஐ) IV.

கருத்து: உலகங்களின் வேறான பரம்பொருளாகிய பராசத்தி, மாணிக்கம் பதித்த கிரீடத்துடன், முத்துமாலை, பவளம் பதித்த கச்சு, பட்டாடை, சிலம்பு - ஆகியவற்றை அணிந்து, குமரிப் பருவத்தினளாக, யோகக்காட்சியில் புலப்பட்டாள்.

குமரி - வாலை, குண்டலி சத்தி.

உணர்வில் ஒன்றும் சோதி

1387. நின்ற இச்சத்தி நிரந்தரமாகவே
கண்டிடு மேரு அணிமாதி தான் ஆகி,
பண்டைய ஆனின் பகட்டை அறுத்திட
ஒன்றிய தீபம் உணர்ந்தார்க்கு உண்டாமே.

நின்றவிச் [1]சத்தி நிரந்தர மாகவே
[2]கண்டிடு மேரு [3]வணிமாதி தானாகிப்
பண்டைய [4]வானின் பகட்டை யறுத்திட[5]
[6]வொன்றிய தீப முணர்ந்தார்க்குண் டாமே. (69)

வேறு பாடம்: 1. சோதி (ஐ) IV. 2. கண்டவிம் (ஐ) IV. 3. வனுவாதி (அ ஈ) V வனுமாதி (ஐ) V. 4. வாளின் (அ ஈ) I. 5. யறுத்திட் (சைவ) 6. பொன்றிய (ஐ) I; டொன்றிய (சைவ).

கருத்து: பராசத்தி 'மேரு' என்னும் உச்சந்தலையில் நிலையாகத் தரிசனம் தருவாள். அணிமா முதலிய அட்டமாசித்திகள், தானாகவே நிற்பாள். அவள் என்றும் உள்ளதாகிய ஆன்மாவின் பாசத்தை நீக்கிட, சகஸ்ராரத்தில் உயிருணர்வில் ஒன்றிச் சோதியாகக் காட்சியளிப்பதை, அவ்வுணர்வில் மிக்கவர் காணலாம்.

மனோன்மணி

1388. உண்டு ஓர் அதோமுகம், உத்தமமானது
கண்ட இச்சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகம் ஐந்து, கூறும் கரங்களும்
ஒன்று இரண்டாகவே மூன்று நால் ஆனவே.

உண்டோ ரதோமுக முத்தம மானது
கண்டவிச் சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகமைந்து கூறுங் கரங்களு
மொன்றிரண் டாகவே மூன்றுநா லானவே[1]. (70)

வேறு பாடம்: 1. லானதே (சைவ)

கருத்து: சகஸ்ராரத்தில் காட்சி தரும் இச்சத்தி, சதாசிவ பத்தினி ஆகிய மனோன்மணி ஆவாள். அவளுக்கு முகம் ஐந்து. இவற்றுடன் மறைவாக, கீழ் நோக்கும் முகம் ஒன்றும் உண்டு. வெளிப்பட்டுத் தோன்றும் கைகள் பத்து.

வழிபாட்டுத் திருக்கோலம்

1389. நன்மணி சூலங் கபாலங் கிளியுடன்
பன்மணி நாக [1]மழுக்கத்தி பந்தாகுங்
கன்மணித் தாமரைக் கையிற் றமருகம்
பொன்மணி [2]பூணாரம் பூசனை யானதே. (71)

வேறு பாடம்: 1. மழுகத்தி (சைவ) 2. பூரணம் (ஐ) I.

கருத்து: பூசைக்கு ஏற்ற சத்தியின் திருக்கோலம், சூலம், கபாலம், கிளி, நாகம், மழு, வாள், பந்து, மாணிக்கக் கல் பதித்த மோதிரம் அணிந்த கையில் உடுக்கை, தங்க மாலைகள், பிற அணிகலங்கள் - இவற்றை ஏந்தி விளங்குவதாகும்.

வினை முடிவு: பூசனை இவையெல்லாம் ஆனது என முடிக்க

சத்திகள் அருள்

1390. பூசனைச் சத்திகள் எண்-ஐவர் சூழவே
நேசவள் கன்னிகள் நாற்பது நேர்தர
காசினிச் சக்கரத்துள்ளே கலந்தவர்
மாசு அடையாமல் மகிழ்ந்திருந்தார்களே.

பூசனைச் [1]சத்திக ளெண்ணைவர் சூழவே
நேசவள் [2]கன்னிக [3]ணாற்பது நேர்தரக்[4]
காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவர்[5]
மாசடை யாமன் மகிழ்ந்திருந் தார்களே. (72)

வேறு பாடம்: 1. கன்னிக (த) 2. சத்திக (த) 3. ணாற்பத்து நேரதாய்க் (சண்) 4. நேர தாய்க் (சைவ) 5. கலந்தவள் (சண்)

கருத்து: நவாக்கரி சக்கரத்துள், வழிபாட்டுக்குரிய நாற்பது சத்திகள், தம்மைச் சுற்றி நாற்பது கன்னிகள் நின்று பணி செய்ய, வழிபடும் யோகி மாசு எய்தாதபடி, மகிழ்வுடன் வீற்றிருந்து அருள் செய்கின்றனர்.

மனமய ஜோதி

1391. தாரத்தின் உள்ளே தயங்கிய சோதியைப்
பாரத்தின் உள்ளே பரந்துஉள் எழுந்திட
வேர்-அது ஒன்றிநின்று எண்ணும் மனோமயம்
கார்-அது போலக் கலந்து எழும் மண்ணிலே.

[1]தாரத்தி னுள்ளே [2]தயங்கிய சோதியைப்
[3]பாரத்தி னுள்ளே [4]பரந்து ளெழுந்திட
வேரது வொன்றிநின் றெண்ணு மனோமயங்
காரது போலக் கலந்தெழு மண்ணிலே. (73)

வேறு பாடம்: தாரதி (ஓ) I. 2. தங்கிய (சண்) 3. பாரதி (ஈ ஐ ஓ) I. 4. பரந்துள்ளுஞ் சூழ்ந்திட (ஈ) III.

கருத்து: பிரணவத்தில் விளங்கும் சோதியாகிய சத்தி, பார்முதல், பதம், அண்டம் அனைத்துமாய்ப் பரந்தும் விளங்குகின்றாள். அவள் உடம்பின் அகத்தும் எழுமாறு, வேர் போன்றதாகிய அப்பிரண வத்தில் ஒன்றிநின்று தியானித்தால், மண்ணிலே கலந்திருந்த நீர் ஆவியாகி - மேகமாக வானில் எழுவது போல, சோதி, மனோமயமாய்ப் பரமாகாயத்தில் (சகஸ்ராரத்தின் மேல் உள்ள வெளியில்) எழுந்து காட்சி தரும்.

பாரது என்பது விரித்தல் விகாரம் பெற்றது.

நாதம் ஜோதியாயிற்றா?

1392. மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாயநம என்று
கண்ணில் எழுந்தது காண்பரிது என்றுகொல்
கண்ணில் எழுந்தது காட்சிதர என்றே.

மண்ணி லெழுந்த [1]வகார வுகாரங்கள்
விண்ணி லெழுந்து சிவாய நமவென்று
கண்ணி லெழுந்தது காண்பரி தென்றுகொல்[2]
கண்ணி லெழுந்தது காட்சி தரவென்றே (74)

வேறு பாடம்: 1. மகார (ஈ) I. 2. தென்றுதால் (அ ஈ) I தென்றுகால் (ஓ) I தன்றுகொல் (விசு) (தி) (த) (வ).

கருத்து: மூலாதாரத்தில் எழுந்த 'ஓம்' (பிரணவம்) பரவாக்காகவே "சிவாய நம" - எனச் சிதாகாயத்தில் எழும். அதை உணர்தல் அரிது என்று தான், சோதியாகக் காட்சி தந்தது போலும்.

குறிப்பு: 3 ஆம் அடி: கண் - விண்ணின்கண், பரமா காயத்தின்கண். 4 ஆம் அடியில் கண் - ஆன்மாவின் உணர்வு வெளியில்.

அமுத வடிவு

1393. என்று அங்கு இருந்த அமுதக் கலையிடைச்
சென்று அங்கு இருந்த அமுத பயோதரி
கண்டம், கரம் இரு வெள்ளி, பொன் மண்டையாய்க்
கொண்டு அங்கு இருந்தது வண்ணம் அமுதே.

என்றங் கிருந்த [1]வமுதக் கலையிடைச்
சென்றங் கிருந்த வமுத பயோதரி
[2]கண்டங் கரமிரு வெள்ளிபொன் மண்டையாய்க்[3]
கொண்டங் கிருந்தது வண்ண மமுதே. (75)

வேறு பாடம்: 1. வமுதத் தலையிடை (அ) I வமுத கலையிடை (சைவ) 2. கண்ட (ஈ ஓ ஓ) I. 3. மண்ணடை (சண்) (துடி)

கருத்து: உடம்பின் சந்திர மண்டலத்தில் காட்சிதரும் சத்தி, அக்கினி கண்டத்தில் இடைகலை, பிங்கலையால், சுவாதிட்டானச் சக்கரத்தில் தொழிற்படும் சுக்கிலம், சுரோணிதம் என்ற இரண்டையும் கொண்டு, அமுத வடிவாக இருந்தாள்.

வெள்ளை நிறத்தாள்

1394. அமுதம தாக வழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு முள்ளே
குமுதம தாகக் [1]குளிர்ந்தெழு முத்துக்
[2]கெமுதம தாகிய கேடிலி தானே. (76)

வேறு பாடம்: 1. கொணர்ந்தெழு (அ) I. 2. கெழுமும் (த)

கருத்து: அல்லி மலர்போலவும் முத்துப் போலவும் முறையே நிறமும் தண்ணிய சாயலும் உடையவளாய், ஆனந்த வடிவாய் விளங்கும், அழிவில் பொருளாகிய பர்ாசத்தி, யோகியின் உடம்பினுள் அமுதம் போன்ற இனிமையும், அழகும் கொண்ட தன் திருமேனி, படிகம் போன்ற வெண்மை நிறம் உடையதாக விளங்க, காட்சி தருவாள்.

கெமுதம் - ஆனந்தம்.

சத்தியின் பரிவாரம்

1395. கேடு-இலி சத்திகள் முப்பத்தறுவரும்
நாடு-இலி கன்னிகள் நால்-ஒன்பதின்மரும்
பூ-இலி பூவிதழ் உள்ளே இருந்தவர்
நாள்-இலி தன்னை நணுகிநின்றாரே.

கேடிலி சத்திகள் முப்பத் தறுவரு
நாடிலி கன்னிக ணாலொன் பதின்மரும்
[1]பூவிலி பூவித [2]முள்ளே யிருந்தவர்[3]
நாளிலி தன்னை நணுகிநின் றாரே. (77)

வேறு பாடம்: 1. பூவிரி (அ) I. 2. யிருந்திவர் (அ ஓ) I. 3. றார்கேளே (ஈ ஐ ஒ ஓ) I றார்க்கே (விசு) (சண்).

கருத்து: அழிவற்ற 36 சத்திகளும், நாடுதற்கு அரிய 36 தோழியரும், சக்கரத்தின் இதழ்களில் வீற்றிருந்து, காலங்கடந்தவளாகிய பராசத்தியைச் சூழ்ந்துள்ளார்கள்.

ஓராண்டில் ஒளிக்காட்சி

1396. நின்றது புந்தி [1]நிறைந்திடு வன்னியுங்
கண்டது சோதி கருத்து ளிருந்திடக்[2]
கொண்டது வோராண்டு கூடி வருகைக்கு
விண்டவௌ காரம் [3]விளங்குநம வென்றே[4]. (78)

வேறு பாடம்: 1. நிறைந்திரும் (ஓ ஓ) III நிறைந்தது (ஐ) I. 2. ளெழுந்திடக் (ஐ) I. 3. விளங்கின (ஈ ஒ ஓ) I. 4. வன்றே (விசு) (தி) (வ) (த) (சண்).

கருத்து: யோகப் பயிற்சியில், மூலக்கனல் யோகியின் அறிவை (உயிருணர்வை) ஆற்றல் மிக்கதாக்கும். அதன் விளைவாக, அவள் தன் கருத்தில் சோதி விளங்கக் காண்பான். இது ஓராண்டு யோக சாதனையால் கைகூடும். அந்தச் சாதனைக்கு "ஔம்" என்பதை முதலாக உடைய பீசங்கள், 'நம' என முடியும் மந்திரமாக விரிந்தன.

நாராயணன் போல்

1397. விளங்கிடு வானிடை நின்றவை எல்லாம்
வணங்கிடும் மண்டலம் மன்னுயிராக,
நலம்கிளர் நன்மைகள் நாரணன் ஒத்து,
சுணங்கிடை நின்று, அவை சொல்லலும் ஆமே.

விளங்கிடு வானிடை [1]நின்றவை யெல்லாம்
வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக[2]
நலங்கிளர் [3]நன்மைக ணாரண னொத்துச்
சுணங்கிடை நின்றவை சொல்லலு மாமே. (79)

வேறு பாடம்: 1. நின்றவ ரெல்லாம் (த) 2. ரேக (ஓ) I. 3. தன்மைக (ஓ) IV.

கருத்து: விண்ணுலகில் இருந்து வாழும் உயிர்கள் எல்லாம் இந்நவாக்கரி மண்டலத்தை (சக்கரத்தை) மண்ணுலகத்து உயிர்களைப் போலவே வணங்கும். அதனால் அவை, நாராயணனை

ஒத்த நலங்களைப் பெறும். இல்வாழ்வில் நலிவிடையே நின்றவாறு அந்த நன்மைகளைக் குறித்துக் கூற இயலுமோ? இயலாது.

தாமரை நிமிரும்

1398. ஆமே அதோமுகம், மேலே அமுதமாய்த்
தானே உகாரம் தழைத்து எழு சோமனும்,
கா மேல் வருகின்ற கற்பகம் ஆனது,
பூ மேல் வருகின்ற பொற்கொடி யானதே.

ஆமே யதோமுக மேலே யமுதமாய்த்
[1]தானே [2]யுகாரந் தழைத்தெழு சோமனுங்
[3]காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கொடி யானதே. (80)

வேறு பாடம்: 1. தாமே (ஆ) I. 2. வகாரந் (ஆ) I. 3. கார்மேல் (ஆ) II.

கருத்து: பராசத்தியே சகஸ்ராரத்தில் கீழ்நோக்கி மலர்ந்துள்ள ஆயிரவிதழ்த் தாமரையாகும். உகர எழுத்தினால் குறிக்கப்படும் சந்திர கலையும் அவளே. மண்ணுலகில் காட்சி நல்கி, கற்பகதருப் போல வேண்டியவெல்லாம் தருபவள் அவளே. யோகிக்குச் சகஸ்ராரத்தில், தாமரை மேல் நோக்கி மலர, அதில் அமர்ந்து விளங் கும் பொற்கொடியாவாளும் அவளே.

கொண்டுகூட்டு: தானே அதோமுகம் ஆமே, தானே மேலே அமுதமாய் உகாரம் தழைத்து எழு சோமனும், தானே காமேல் வருகின்ற கற்பகம் ஆனது, தானே. பூமேல் வருகின்ற பொற்கொடி ஆனதே.

நிலையான காவல்

1399. பொற்கொடியாளுடன் பூசனை செய்திட
அக்களி ஆகிய ஆங்காரம் போயிடும்,
மற்கடி ஆகிய மண்டலம் தன்னுளே
பிற்கொடி ஆகிய பேதையைக் காணுமே.

பொற்கொடி [1]யாளுடன் பூசனை செய்திட
[2]வக்களி யாகிய வாங்காரம் போயிடு[3]
[4]மற்கடி யாகிய மண்டலந் தன்னுளே
பிற்கொடி யாகிய பேதையைக் காணுமே (81)

வேறு பாடம்: 1. யாளிடைப் (ஓ) I; யாளுடைப் (விசு) யாரிடைப் (த) 2. வக்கினி (ஆ உ) I; வக்கினி (ஓ) I. 3. போய்விடு (ஈ ஓ) I. 4. மற்கடமாகிய (ஓ) III.

கருத்து: பராசத்தியுடன் சிவனை வழிபட, மயக்கம் செய்வதாகிய ஆணவமலம் நீங்கும். அங்ஙனம் வழிபடுவோன், நிலைபெற்ற காவலாகிய இச்சக்கரத்தில் (நவாக்கரி) அச்சிவனுக்குப் பின் வைத்து எண்ணப்படும் சத்தியைக் காண்பான்.

மன், கடி - மற்கடி என வலித்தல் விகாரம் பெற்றது.

பூமியே திலகம்

1400. பேதை இவளுக்குப் பெண்மை அழகு ஆகும்,
தாதை இவளுக்குத் தாணுவுமாய் நிற்கும்,
மாது ஐ இவளுக்கு மண்ணும் திலகமாக்
கோதையர் சூழக் குவிந்த இடம் காணுமே.

பேதை யிவளுக்குப் [1]பெண்மை யழகாகுந்
தாதை யிவளுக்குத் தாணுவு மாய்நிற்கு
மாதை யிவளுக்கு மண்ணுந் திலகமாக்
கோதையர் சூழக் குவிந்திடங் காணுமே. (82)

வேறு பாடம்: 1. பீடா தனமாகுந் (ஆ) IV.

கருத்து: பராசத்திக்குப் பெண்மைப் பண்புகள் அழகாகும். தாணுவாகிய சிவமே இவளுக்குத் தந்தையும் ஆவான். மாதரசியாகிய இவளுக்கு மண்ணுலகமே நெற்றிப் பொட்டு. பணி செய்யும் சத்திகள் சூழ இவள் சகஸ்ராரத்தில் வீற்றிருப்பாள்.

சத்தி பரிவாரம்

1401. குவிந்தனர் சத்திகள் முப்பத்திருவர்,
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழ,
பரந்த இதழ் ஆகிய பங்கயத்துள்ளே
இருந்தனர் காணும் இடம்பல கொண்டே.

[1]குவிந்தனர் சத்திகள் முப்பத் திருவர்
நடந்தனர் கன்னிக ணாலெண்மர் சூழப்
பரந்தித ழாகிய பங்கயத் துள்ளே
[2]யிருந்தனர் காணு மிடம்பல கொண்டே. (83)

வேறு பாடம்: 1. குவிந்தன (அ ஆ ஈ ஒ ஓ) I. 2. யிருந்தனள் (உ) I.

கருத்து: பராசத்தியைச் சூழ 32 சத்திகள் கூடினர். அவர்களுடன் 32 கன்னிகளும் சூழ்ந்தனர். அவர்கள் சகஸ்ராரத் தாமரையில் பல இதழ்களில் நின்றனர்.

வேதம் தேட . . .

1402. கொண்டு அங்கு இருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்ட அங்கு இருந்தனர் காரணத்து உள்ளது
பண்டை மறைகள் பரந்து எங்கும் தேடுமாம்
இன்று என் மனத்துளே இல் அடைந்து ஆளுமே.

கொண்டங் [1]கிருந்தனர் கூத்த னொளியினைக்
கண்டங் [2]கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை [3]மறைகள் பரந்தெங்குந் தேடுமா[4]
மின்றென் மனத்துளே யில்லடைந் தாளுமே. (84)

வேறு பாடம்: 1. கிருந்தது (ஆ) I. 2. கிருந்தது (ஆ) I. 3. மணங்கள் (ஆ) IV. 4. தோன்றுமா (ஆ) IV.

கருத்து: யோகியர் கூத்தப் பிரானது சோதியைத் தரிசித்து வாழ்ந்தனர். அச் சோதியே காரணமாக அனைத்தும் உள்ளமையைக் கண்டு மகிழ்ந்தனர். ஆனால் பழைய வேதங்களோ, அவ்வனுபூதிப் பொருளை எங்கெங்கும் தேடுகின்றன. அப்பொருள் இன்று என் சிந்தையே கோயிலாகக் கொண்டு என்னை ஆட்கொண்டது.

எல்லாம் பெற்றான்

1403. இல் அடைந்தானுக்கும் இல்லாதது ஒன்றில்லை
இல் அடைந்தானுக்கு இறப்பதுதான் இல்லை,
இல் அடைந்தானுக்கு இமையவர் தாம் ஒவ்வார்
இல் அடைந்தானுக்கு இல்லாது இல் ஆன் ஐயே.

இல்லடைந் [1]தானுக்கு மில்லாத தொன்றில்லை
யில்லடைந் தானுக் [2]கிறப்பது தானில்லை
யில்லடைந் தானுக் கிமையவர் தாமொவ்வா
ரில்லடைந் தானுக்கு [3]வில்லாதில் லானையே. (85)

வேறு பாடம்: 1. தாளுக்கு (ஆ) II. 2. கிரப்பது (சைவ) 3. இல்லா திலையானையே (ஒ) III தானுக்கில் லாததில் லானையே (த).

கருத்து: பராசத்தியைத் தன் உடம்பில் குடி கொள்ளப் பெற்றவனுக்கு, இல்லாத செல்வம் இல்லை. அவன் இறப்பதில்லை. அவனுக்குத் தேவர் ஒப்பாகார். அவனிடம் சிவம் இல்லாது இருப்பதில்லை.

ஆன் ஐ - ஆன்மாவின் தலைவன்.

பிரணவத்தின் கலைகள்

1404. ஆனை மயக்கும் அறுபத்து நால் தறி,
ஆன்ஐ இருக்கும் அறுபத்து நால் ஒளி,
ஆன் ஐ இருக்கும் அறுபத்து நால் அறை,
ஆனையும் கோடும் அறுபத்து நாலிலே.

ஆனை மயக்கு மறுபத்து நாற்றறி'
ஆனை யிருக்கு மறுபத்து நாலொளி
ஆனை [2]யிருக்கு மறுபத்து நாலறை
[3]ஆனையுங் கோடு மறுபத்து நாலிலே. (86)

வேறு பாடம்: 1. நாற்கரி (ஆ) I. 2. கிடக்கு (ஐ) IV. 3. ஆனையங் (அ ஆ ஒ ஓ) I.

கருத்து: ஆன்மாவை மயக்குவன 64 கலைகள் (இவை உலகியற் கலைகள் ஆதலின்). ஆன்மாவின் தலைவனாகிய சிவன் தனக்குப் பீடமாகக் கொண்டு விளங்குவது, 64 யோகினி சத்திகளில். சிவன் உறைவது 'ஓம் சிவாய நம' என்ற 8 அட்சரங்கள் (ஓம் என்பதை, அ, உ, ம என 3 ஆகக் கணக்கிடுக) 64 அறைகளில் அமைந்த சக்கரத்தில்.

பிராசாத மந்திரமாகிய அ, உ, ம, நாதம், விந்து என்பவற்றின் கலைகள் 64.

ஆன் - ஆன்மா என்ற பொருளிலும் பிரணவம் என்ற பொருளிலும் இங்கு ஆளப்படுகின்றது. கோடு - நாதம்.

67. சுத்த சைவம்

1405. ஊரு முலகமு மொக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவு மூவுல காளியி லங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே. (ஏ)

1406. சத்தும சத்துஞ் சதசத்துந் தான்கண்டு
சித்தும சித்துஞ் சேர்வுறா மேநீத்த
சுத்த மசுத்தமுநீ தோய்வுறா மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே. (கூ)

யார் சைவ சித்தாந்தி?

1407. கற்பன கற்று, கலை மன்னும் மெய் யோகம்,
முற்பத ஞானம் முறை முறை நண்ணியே,
சொற்பதம் மேவி, துரிசு அற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவ சித்தாந்தரே.

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
[1]சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே. (1)

வேறு பாடம்: 1. தொற்பத (ஓ) I.

கருத்து: ஞான நூல் கற்று, மூவகைக் கலைகள் (அக்கினி, சூரியன், சந்திரன்) பொருந்திய மெய்யான சிவயோகம் பயின்று, சிறப்பான, நிலையான ஞானத்தைப் படிப்படியான அனுபவத்தால் ஏய்தி, இறைவன் பதங்களைச் சார்ந்து, மாயை, வினை, ஆணவம் என்ற மலங்களை அனுபவித்துக் கொண்டு, மேலான பரம் பொருள் நிலையை உணர்ந்தோர் சித்தாந்த சைவர் ஆவர்.

துரிசு - குற்றம். ஆணவமலம் அறுத்துப் பெறுவது தற்பரம்.

குறிப்பு: இப்பாடலுக்கு முன் இரண்டு பாடல்களுடனும் இதன் பின்னர் உள்ள ஒரு பாடலுடனும் ஆக 4 பாடல்கள் 'சுத்த சைவம்' என்ற பெயருள்ள இயலாகத் தரப்பட்டுள்ளன. இப்பாடல்களுள் முதலிரண்டும் இடைச்செருகல் எனக் கருதற்குரியவை. பதிப்புகளில் 'சுத்த சைவம்' என்ற இயலை அடுத்து, 'அசுத்த சைவம்', 'மார்க்க சைவம்', 'கடுஞ் சுத்த சைவம்' என்ற இயல்களில் பாடல்கள் உள்ளன. தற்போதைய பதிப்பிற்குக் கிடைத்த சுவடிகளுள் இரண்டில் மட்டுமே (ஈ; ஒ) ஐந்தாம் தந்திரத்தின் தொடக்கத்தில் இவ்வியல்கள் உள்ளன. இவ்விரண்டுள்ளும், ஒன்றில் மட்டுமே (ஈ) இவ்வியல்களுக்குச் 'சுத்த சைவம்' முதலிய மேற்கண்ட பெயர்கள் தரப்பட்டுள்ளன. (ஓ - சுவடியை ஒத்த எ - சுவடியில் இப்பதிப்பாசிரியர்க்குக் கிடைத்த இதழ்கள் சிலவே, 'இ' - சுவடியில் சில இதழ்கள் கிடைத்தில. ஊ - சுவடியில் சில இதழ்களே கிடைத்தன, பிற சுவடிகளில் இவ்வியல்கள் இல்லை). இவ்வியற் பெயர்கள் நூலாசிரியர் இட்டவையாகத் தோன்ற வில்லை. இவற்றில் உள்ள பாடல்களுள் பல 'சுத்த சைவம்' என்ற தலைப்புக்கே பொருத்தமாக உள்ளன. ஏனைய இடைச்செருகலாக எண்ணத் தக்கவை.

மூன்றும் ஒன்று

1408. வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்தம்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
[1]பூதாந்தம் போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞானதே யத்தரே. (2)

வேறு பாடம்: 1. பூதாந்த (சைவ)

கருத்து: வேதாந்தமாவது சுத்தசைவ சித்தாந்தமே. இந்நெறியில் நின்று, 36 ஆவது தத்துவமாகிய நாதத்தையும் கடந்த அனுபவம் உடையோர், மனம் வேறு எதிலும் சலனப்படாத ஞானம் உடையோர் ஆவர். ஐம்பூதங்களின் காரியமாகிய உலகத்தை, ஞானக்காட்சியாகப் பக்குவமுற்றுப் பார்த்து, நாதாந்தத்தில் உள்ள பூரணப் பொருளாகிய சிவமேயாகி நிற்பர். அறிபவராகிய (ஞாதுரு) தாமும், அறிவாகிய ஞானமும் அறியப்படு பொருளாகிய (நேயம்) சிவமும் ஒன்றாகி விளங்குவர்.

பூதாந்தம் - பூதங்களின் முடிவு. போதாந்தம் - ஞானத்தின் எல்லை. புனஞ்செய்ய - பண்படுத்த. பண்பட்ட காட்சியைக் காண. சுத்தசைவ சித்தாந்தம் - சுத்தசைவ சமயத்தின் கொள்கை.

சைவர் கோலம்

1409. இணை ஆர் திருவடி ஏத்தும் சீர் அங்கத்து
இணை ஆர் இணைக்குழை, ஈரணை முத்திரை,
குணம் ஆர் இணைக் கண்டமாலையும் குன்றாது
அணைவாம் சரியை கிரியையினார்க்கே.

இணையார் திருவடி யேத்துஞ்சீ ரங்கத்
திணையா ரிணைக்குழை யீரணை முத்திரை
குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்றா
தணைவாஞ் சரியை கிரியையி னார்க்கே. (3)

கருத்து: சரியை, சிரியை என்ற பாதங்களில் (நெறிகளில்) நிற்கும் சைவருக்கு, சிவபிரானின் திருவடிகளை வணங்கும் பெருமை பொருந்திய உடம்பில், காதில் குழைகளும் தோளில் இடபக்குறியும் சூலக் குறியும், இரட்டையாயுள்ள கழுத்து மாலைகளும் அணியப்படும்.

1410. காதுப்பொ னார்ந்த கடுக்க னிரண்டுஞ்சேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து வுபதேச மார்க்கரா
யோதி யிருப்பா ரொருசைவ ராகுமே. (ஏ, ங, ண)

1411. கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்க ளொன்பதுங் கண்டா யரும்பொருள்
கண்டங்க ளொன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. (ஏ, ஆ)

1412. ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையு முழுவெண்ணெண் சித்தியு
மேனை நிலமு மெழுதா மறையீறுங்
கோனொடு தன்னையும் காணுங் குணத்தரே. (ண)

சைவ சாதனம்

1413. பொன் ஆர் சிவசாதனம், பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம், மாஞான சாதனம்,
துன்மார்க்க சாதனம் தோன்றாத சாதனம்,
சன்மார்க்க சாதனமாம் சுத்த சைவர்க்கே.

[1]பொன்னார் சிவசா தனம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதன [2]மாஞான சாதனந்
துன்மார்க்க சாதனந் தோன்றாத சாதனஞ்
சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே. (5)

வேறு பாடம்: 1. பொன்னாற் (சண்) 2. நவஞான (ஈ) II.

கருத்து: சுத்த சைவருக்குப் பொன்னாலாகிய உருத்திராக்க மாலையும் திருநீறும் சைவசாதனமாகும். அவை நன்னெறிச் செலுத்தும் சாதனமும் ஞானம்பெறும் சாதனமும் ஆகும். அவற்றை அணிந்தால் துன்மார்க்க எண்ணமே தோன்றா. சன்மார்க்க எண்ணமே தோன்றும்.

முத்திக்கு உரியோன்

1414. கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை [1]வப்பத்த நித்தனே. (5)

வேறு பாடம்: 1. வன்பத்த (த)

கருத்து: சுத்தசைவப்பக்தன் அழியாத ஞானியும், மேன் மேல் எழும் ஞானத்திற்கு உரிமையுடையோனும், 'வேதாந்தசித்தாந்தம்' என்ற தத்துவத்தின் உட்பொருளாகிய உண்மை ஞானத்தை எய்தியவனும், உண்மையான முத்தியாகிய பர முத்திக்கு உரிமை பெறுவோனும் ஆவான்.

சித்தாந்த நூல் ஆகமம்

1415. ஆகமம் ஒன்பான், அதில் ஆன நால் - ஏழு,
மோகம் இல் நாலேழும் முப்பேதம் உற்றுஉடன்
வேகம் இல் வேதாந்த சித்தாந்த மெய்ம்மை ஒன்று
ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே.

ஆகம மொன்பா னதிலான நாலேழு
மோகமி னாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்
றாக முடிந்த வருஞ்சுத்த சைவமே. (6)

கருத்து: சுத்த சைவத்தில் ஆகமங்களின் வகை ஒன்பது, எண்ணிக்கை இருபத்தெட்டு, அவை மூன்று பேதமாகச் சொல்லப் படும். அவை சைவம், ரௌத்திரம், ஆரிடம் எனப்படும். இவ்வாறு ஆகமம் பலவாயினும், வேதாந்த முடிவாகிய சித்தாந்த உண்மையையே அவை துணிந்துரைக்கும்.

சத்தி இயக்குகிறாள்

1416. சுத்தம் அசுத்தம் துரியங்கள் ஓர் ஏழும்
சத்தும் அசத்தும் தணந்த பராபரை
உய்த்த பராபரை உள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தியாய் எங்கும் ஆமே.

சுத்தம சுத்தந் துரியங்க ளோரேழுஞ்
சத்தும சத்துந் தணந்த பராபரை
[1]யுய்த்த பராபரை யுள்ளாம் பராபரை
யத்த னருட்சத்தி யாயெங்கு மாமே. (7)

வேறு பாடம்: 1. யுத்த (ஓ) I.

கருத்து: சுத்த நிலையில் 2, அசுத்த நிலையில் 3, துரிய நிலையில் 2, ஆக 7 அவத்தைகளையும், சத்து, அசத்து என்ற பொருள் நிலைகளையும் கடந்த பராசத்தி, சிவபிரானது அருட்சத்தி. அவள் இயக்கும் சத்தியாகவும், இயங்குவனவாகிய ஆன்மாக்களுக்கு உள் நின்ற சத்தியாகவும் எங்கும் நிறைந்துள்ளாள்.

சத்தி மயமாவர்

1417. சத்தும் அசத்தும் தணந்தவர், தான் ஆகிச்
சித்தும் அசித்தும் தெரியாச் சிவோகமாய்,
முத்தியுள், ஆனந்த சத்தியுள் மூழ்கினோர்
சித்தியும் அங்கே சிறந்துளர் தாமே.

சத்தும சத்துந் [1]தணந்தவர் தானாகிச்
சித்தும சித்துந் தெரியாச் சிவோகமாய்
முத்தியு ளானந்த சத்தியுண் மூழ்கினோர்
சித்தியு மங்கே [2]சிறந்துளர் தாமே[3]. (8)

வேறு பாடம்: 1. தணந்தவனாகி (ஈ) II. 2. சிறந்துள (ஈ) II. 3. தானே (ஈ ஓ) V.

கருத்து: சத்து, அசத்து என்ற பொருள்நிலைகளைக் கடந்தோர். பராசத்தியே ஆகி, சித்துப் பொருள், அசித்துப்பொருள் - என்ற இரண்டுமாகாத நிலையை எய்தி, சிவோகம் பாவனை கூடி, பரமுத்தியில் விளையும் ஆனந்த சத்தியில் மூழ்குவர். அவர்கள் சிறந்த சித்திகளும் கைவரப்பெற்றவர்.

உபாய மார்க்கம்

1418. தன்னைப் பரனைச் சதாசிவ னென்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவ ருபாயமே. (9)

கருத்து: சுத்த சைவர் மேற்கொள்ளும் உபாய மார்க்கமாவது, ஆன்மா தன்னையும், மேலான சிவபரம்பொருளையும், சதாசிவ மூர்த்தியாக அருட்டிருமேனி கொண்டு அச்சிவம் அருளுதலையும், பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் இயல்பையும், அவற்றுள் மாசற்ற வீடுபேற்றினையும், ஆன்மா சகசமலமாகிய ஆணவ மலத்தால் அநாதியே பிடிக்கப்பட்டிருத்தலையும் எண்ணுதலாகும்.

இவை பற்றி நூல் முகமாகக் கேட்டுணர்தல் உபாய ஞானம் ஆகும். உபதேச மார்க்கத்தில் ஆசாரியனிடம் ஆன்மா பதிஞானம் பெறுதலே உண்மை ஞானம் ஆகும்.

உபதேச மார்க்கம்

1419. பூரணம் தன்னிலே வைத்து அற்ற அப்போதம்
ஆரணம் அந்தம் மதித்து, ஆனந்தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும்போகம்
காரணம் ஆம் சுத்த சைவர்க்குக் காட்சியே.

பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போத[1]
[2]மாரண மந்த மதித்தானந் தத்தோடு
நேரென வீராறு நீதி நெடும்போகங்
காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே. (10)

வேறு பாடம்: 1. வப்போதத் (த) வப்போதே (சைவ) 2. தாரண வந்த மதி சித்தாந் (த).

கருத்து: பூரணமாக உள்ள சிவபரம் பொருளிடம் சித்தத்தை வைத்துப் பழகிய சிறப்பால், ஆன்ம போதமற்ற, பதிபோதக் காட்சியோடு வேதாந்தங்களைச் சிந்தித்து ஆனந்தம் பெறுவர் சுத்த சைவர். இதனோடு, துவாதசாந்தப் பெருவெளியில் சிவபோகமும் பெறுவர்.

ஞானியின் செயல்

1420. மாறாத ஞான [1]பதிபர மாயோகந்
[2]தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான பாவனை பேணி நெறிநிற்றல்
கூறாகும் ஞானி சரிதை குறிக்கிலே. (11)

வேறு பாடம்: 1. மதிப்பற (விசு) (தி) (த) (சண்) 2. தேறாது (சண்)

கருத்து: தெளியாத சிந்தையை, மாறாத பதி ஞானத்தாலும் சிவயோகத்தாலும் தெளிவித்து, இச்சாதனை முதிர்ச்சியில் அச்சித்தத்தைச் 'சிவம்' ஆக்கி, சிவோகம் பாவனை கூடி, அருள்நெறியில் நிற்பது, ஞானியின் செய்கையாகும்.

கூறு ஆகும் - சரியை, கிரியை முதலிய கூறுகளாக அமையும். சரிதை - செய்கை, ஒழுக்கம்.

மார்க்க சைவம்

1421. வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவ ருபாயமே. (ஆ ங)

ஆன்மாவைச் சேரும், சிவத்தைச் சேரா

1422. விண்ணினைச் சென்று அணுகா வியன்மேகங்கள்,
கண்ணினைச் சென்று அணுகா பல காட்சிகள்,
எண்ணினைச் சென்று அணுகாமல் எணப்படும்
அண்ணலைச் சென்று அணுகா பசு பாசமே.

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிக
ளெண்ணினைச் சென்றணு [1]காம லெணப்படு
மண்ணலைச் சென்றணு காப்பசு பாசமே. (12)

வேறு பாடம்: 1. காத லெண்ணப்படும் (ஈ) I.

கருத்து: பரந்த மேகங்களும் ஆகாயத்தை நெருங்கமாட்டா. கண் காட்சியைக் காண்பதன்றி, எத்துணை ஆழ்ந்த காட்சியும் தானே கண்ணை வந்தடையாது. அதுபோல் பசுபோதமும் பாசஞானமும் எண்ணுபவனாகிய ஆன்மாவை அணுகி (சார்ந்து) நிற்குமேயன்றிப் பதியினைச் சாரா.

சித்தாந்தம் என்ன செய்கிறது?

1423. ஒன்றும், இரண்டும், இலதுமாய், ஒன்றாக
நின்று, சமய நிராகாரம் நீங்கியே
நின்று, பராபரை நேயத்தைப் பாதத்தால்
சென்று, சிவமாதல், சித்தாந்த சத்தியே.

ஒன்று மிரண்டு மிலதுமா யொன்றாக
[1]நின்று சமய [2]நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே (13)

வேறு பாடம்: 1. நின்ற (ஓ) I. 2. நிராங்கார (ஓ) I.

கருத்து: பொருள் ஒன்றே என்னும் நிலையும், இரண்டு என்னும் நிலையும், சூனியமும் எனப் பலவகையாகச் சொல்லப்பட்டு, ஒரே பரம்பொருளாக நின்று, சமய கண்டனங்கட்கு அப்பாற்பட்டு நிற்கும் இறைவனை, சத்தி வழிபாட்டின் மூலம் பெறும் சத்தி நிபாதத்தால் அடைதல் சித்தாந்தத்தால் எய்தும் பேறு ஆகும்.

கடுஞ்சுத்த சைவம்

1424. உடலான வைந்தையு மோராறு மைந்து
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தனையுறல் சித்தாந்த மார்க்கமே. (சு)

1425. வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
யாடம் பரமின்றி யாசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவபோத கர்சுத்த சைவரே. (அ, ங)

1426. சுத்த சிவனுரை தானத்திற் றோயாமல்
முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூல
மத்தகை யான்மா வரனை யடைந்தற்றாற்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே. (ஔ, ண)

1427. நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே. (அ)

1428. சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தா
லாற்றரி தாகிய வைந்து மடங்கிடு
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. (ஔ)

68. சரியை

1429. சேர்ந்திடு மூல சரியை நெறியிதென்
றாய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்த சைவத் துயிரதே. (ஓ)

ஞானம் முதலிய நான்கு

1430. உயிர்க்கு உயிராய் நிற்றல் ஒண் ஞான பூசை,
உயிர்க்கு ஒளி நோக்கல் மகாயோக பூசை,
உயிர் பெறும் ஆவாகனம் புறப்பூசை
செயற்கு அடை நெஞ்சம் சிவபூசை தானே.

உயிர்க்குயி ராய்நிற்ற லொண்ஞான பூசை
யுயிர்க்கொளி [1]நோக்கன் மகாயோக பூசை
[2]யுயிர்பெறு மாவா கனம்புறப் பூசை
[3]செயற்கடை [4]நெஞ்சஞ் சிவபூசை தானே[5]. (1)

வேறு பாடம்: 1. நோக்கின் (விசு) 2. யயர்ப்புறு (ஐ) I. 3. செயிற்கடை (சைவ), 4. நேசஞ் (சைவ) (சண்) 5. யாமே (சைவ).

கருத்து: ஞானம் முதல் கீழ் நோக்கிக் கூறி வருகின்றார்: உயிருக்கு உயிராய் நிற்கும் சிவனை, அவ்வண்ணமே 'ஏகனாகி' உணர்தல் ஞானபூசை. உயிருக்கு ஒளி நல்கி விளங்கும் பேரொளியாக இறைவனைக் காணல் யோகம். மூர்த்தியில் இறைவனை எழுந்தருளச் செய்து (ஆவாகனம் செய்து) வழிபடுதல் கிரியை ஆகிய புறப்பூசை. ஆலயத் தொண்டு செய்தல் சரியை. அது வாளா சிவபூசை எனப்படும்.

சரியை - இயங்குதல். சிவபூசைக்குரிய சாதனங்களைச் சேர்த்தலுக்காக இயங்குதல். இவ்வியங்கலைச் 'செயல்' என்றார்.

நெஞ்சமே கோயில்

1431. நாடு நகரமு [1]நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்[2]
கூடிய [3]நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே. (2)

வேறு பாடம்: 1. முதற்றிருக் (சண்) 2. பணிந்தன்பு (ஐ) IV. 3. நெஞ்சத்தைக் (த)

கருத்து: பொருள் வெளிப்படை.

சைவர் பல வகை

1432. பத்தர் சரியை படுவோர், கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள் வேடத்து ஆகுவோர்
சத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்று எய்துவோர்களே.

பத்தர் சரியை படுவோர் கிரியையோ
[1]ரத்தகு தொண்ட [2]ரருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி [3]சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே. (3)

வேறு பாடம்: 1. ரத்தருள் (ஓ) I. 2. ருள்வேடத் (அ ஐ ஒ ஓ) I. 3. சாத்தர் (அ) I; சத்தாதி யோகாதி (ஆ) I.

பக்குவப் படிகள்

1433. சார்ந்த மெய்ஞ்ஞானத்தோர் தான் அவனாய் அற்றோர்;
சேர்ந்த எண் யோகத்தர் சித்திச் சமாதியோர்;
ஆய்ந்த கிரியையோர் அர்ச்சனை தப்பாதோர்;
நேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே.

[1]சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ னாயற்றோர்[2]
சேர்ந்தவெண் யோகத்தர் [3]சித்திச் சமாதியோ
ராய்ந்த கிரியையோ ரர்ச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீணிலத் தோரே[4]. (4)

வேறு பாடம்: 1. சாந்த (அ) I. 2. னாயினோர் (விசு) (சண்) 3. சித்தர் (ஐ) II. சித்த (த) 4. தோர்களே (அ ஈ ஐ ஓ) II.

கருத்து: ஞானமுடையோர், 'தான் சிவன் ஆகும்' நிலை எய்தி, தற்போதம் அற்றோர் ஆவர். அட்டாங்க யோகியர் சமாதிநிலை சித்திக்கப்பெற்றோர். கிரியைநெறியோர், புற வழிபாட்டைத் தவறாது செய்வோர். சரியை நெறியினர் உலகவாழ்வின் பயனைத் துய்ப்போர்.

உலக வாழ்வின் பயன் - தொண்டு. "நீள் நிலத்தோருள் கிரியைக்குத் தொண்டு செய்வோர் சரியையோர்" என்றும் கொள்ளலாம்.

வழிபாடு பல

1434. கிரியையே, யோகம், கிளர் ஞான பூசை
அரிய சிவன் உருவமா, அருபம்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத்து உயர் பூசையாமே.

[1]கிரியையே [2]யோகங் கிளர்ஞான பூசை
யரிய [3]சிவனுருவ [4]மாவ ரூபந்[5]
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
[6]உரியன நேயத் துயர்பூசை யாமே. (5)

வேறு பாடம்: 1. கிரியையில் (ஆ) I கிரியை (சைவ) 2. யோகங்கள் (சைவ) 3. சிவனுரு (சைவ) 4. மாமவ (அ ஒ ஓ) I; வமரும் (சைவ) 5. அருபந் (சைவ) 6. உரியநன் (ஆ) IV.

கருத்து: கிரியை, யோகம், ஞானம் என்ற வழிபாடுகளுள் முறையே, முதலிரண்டும் சிவபெருமானை உருவமாகக் கண்டு ஆற்றப் படுபவை. ஞானபூசை, அவனை அருவமாகக் காண்பது. இம்மூவகை வழிபாடும், நேயத்தால் செய்யப்படுபவை யாதலின் உயர்ந்த பூசை ஆகும்.

ஆறு சமயப்பொருளும் ஒன்றே

1435. சரிய - ஆதி நான்கும், தகும் ஞானம் நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்தம்; ஆறும்
பொருளானது; நந்தி பொன்னகர் போந்து
மருள் ஆகும் மாந்தர் வணங்க வைத்தானே.

சரியாதி நான்குந் [1]தகுஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. (6)

வேறு பாடம்: 1. தருஞான (விசு) (தி).

கருத்து: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு தவநெறிகளும், அவற்றுள் தகுதி மிக்க ஞானத்தின் கூறுகளான, சரியையில் ஞானம், கிரியையில் ஞானம், யோகத்தில் ஞானம்,

ஞானத்தில் ஞானம் என்னும் நான்கு உட்பிரிவு நெறிகளும் “வேதாந்த சித்தாந்தம்” ஆகிய சிவாகமங்களில் விரிவாகச் சொல்லப்பட்டவை ஆகும். இந்நெறிகள் அகச்சமயங்கள் ஆறிலும் கூறப்பட்டன. இவ்வாறு, இவை ஆறு சமயங்களில் பொருளாகக் கூறப்பட்டது ஏன் எனின், அறியாமையுடைய மாந்தர், தத்தம் பக்குவத்திற்கு ஏற்பப் பின்பற்றுதற்கு எளிதாகும் பொருட்டுச் சிவபெருமானே கைலாயம் விட்டு நிலவுலகிற்கு வந்து, ஆசாரியனாக இருந்து, சித்தாந்த விரிவையே ஆறு சமயங்களாக வகுத்தான் என்க.

பொருளானது, பொருள் ஆயினமை எனத் தொழிற் பெயர்ப் பொருள் தந்தது.

1436. சமயம் பலசுத்தி தன்செய லற்றிடு
மமையும் விசேடமு மரன்மந் திரசுத்தி
சமய நிருவாணங் கலாசுத்தி யாகு
மமைமன்னு ஞானமார்க் கம்மபி டேகமே. (உ, ஔ, ப)

குறிப்பு: 1436 ஆம் பாடல் 4 சுவடிகளில் இல்லை. அவற்றுள் ஒன்று பிற்காலச் சுவடி.

69. கிரியை

தெய்வம் பல; பரம்பொருள் ஒன்றே

1437. பத்துத் திசைக்கும் பரம் ஒரு தெய்வம் உண்டு
எத்திக்கு இவர் இல்லை என்பது, இனமலர்
கொத்துத் திருவடி நீழல் சரண் எனத்
தத்தும் வினைக் கடல் சாராது காணுமே.

பத்துத் [1]திசைக்கும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் [2]கிவரில்லை யென்ப தினமலர்[3]
கொத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே. (1)

வேறு பாடம்: 1. திசையும் (விசு) (வ) (த) 2. கிலக்கில்லை (ஈ) III. 3. தினமலர்க் (துடி)

கருத்து: பத்துத் திசைகளிலும் பல தெய்வங்கள் இருப்பினும், மேலான பரம்பொருள் ஒன்று உண்டு. அத்தெய்வம் வியாபியாத

திக்கு என்பது இல்லை. மலர் வகைகளைக் கொத்தாகச் சாத்தும் அவர் திருவடியே சரணாகச் சார்ந்தால், கடல் போன்ற வினைகள் நம்மைச் சாரமாட்டா.

எத்திக்கு இவர் என்பது இல்லை என மாறுக. காணும், ஏ - அசைகள்.

குறிப்பு: இப்பாடலை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "கானுறு கோடி" என்ற பாடல், பின்னர்க் 'குருபூசை' இயலில் வரும் அங்கு அஃது இடைச்செருகல் என அடையாளமிட்டுக் காட்டப் படுகிறது. எனவே, இங்கு விடப்படுகின்றது.

ஏத்தி அருள் பெறுக

1438. கோனக் கன்று ஆயே குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன்று ஆயே நடுவே உழிதரும்
வானக்கன்று ஆகி வானவர் கைதொழும்
ஆனைக்கன்று ஈசன் அருள் பள்ளம் ஆமே.

கோனக்கன் [1]றாயே குரைகழ லேத்துமின்
ஞானக்கன் [2]றாயே நடுவே யுழிதரும்
வானக்கன் [3]றாயே வானவர் கைதொழு
[4]மானைக்கன் றீச னருள்பள்ள மாமே. (2)

வேறு பாடம்: 1. றாய (த) 2. றாய (த) றாகிய (சைவ) 3. றாகிய (ஓ) II; றாகி (அ ஆ இ ஓ) V. 4. மானக்கன் (விசு) 5. னருள்வள்ள (விசு) (தி) (வ) (சண்).

கருத்து: ஆயன் கையில் உள்ள மிக்க இளைய கன்று போல், இறைவன் திருவடியை ஏத்துக. ஏத்தினால், ஞானச் செல்வனாகி மன்றத்தின் நடுவில் ஆடுபவனும், வானவர் செல்வனாகி, அவர் வணங்கும் தலைவனும் ஆகிய, இளங்களிறு போன்ற சிவபிரானது அருள், பள்ளமடையாகும்.

பதிபணி

1439. இது பணிந்து எண் திசை மண்டலம் எல்லாம்
அது பணி செய்கின்றவள் ஒரு கூறன்
இது பணி மானிடர் செய்பணி, ஈசன்
பதி பணி செய்வது பத்திமை காணே.

இதுபணிந் தெண்டிசை மண்டல மெல்லா
மதுபணி செய்கின் றவளொரு கூறன்
[1]இதுபணி மானிடர் செய்பணி யீசன்
பதிபணி செய்வது பத்திமை காணே. (3)

வேறு பாடம்: 1. எதுபணி (த).

கருத்து: உலகங்களை எல்லாம் படைக்கின்ற சத்தியை இடப் பாகத்தில் உடையவனாகிய ஈசனுக்கு, அவனை இம்முறையால் வணங்கிப் பணியும் மனிதர் செய்யும் பணி கிரியை நெறி வழிபாடாகும். அது பதி பணி. அதனைச் செய்வதே அவனிடம் அன்புடைமைக்குச் சான்றாகும்.

படிப்படியே

1440. பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசு அற்ற யோகத்தில்
உய்த்த நெறி உற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குரு அருளால் சிவம் ஆகுமே.

[1]பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த வருளாற் றுரிசற்ற யோகத்தி
லுய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே. (4)

வேறு பாடம்: 1. பத்திமை யுற்றகை (ஒ) I.

கருத்து: அன்பன் சரியை கிரியை நெறிகளில் நின்று, சிவனது தூய அருளால் குற்றமற்ற யோக சாதனை செய்து, அவ்வருளால் செலுத்தப்பட்ட நெறியில் ஞானம் எய்தி, அந்த ஞானத்தால், குருவருள் காரணமாக, சிவமாம் தன்மை பெறுவான்.

உருகுவேன், பணி செய்வேன்

1441. அன்பின் உருகுவன் நாளும் பணி செய்வன்
செம்பொன் செய் மேனிக் கமலத்திருவடி
முன்புநின்று ஆங்கே மொழிவது எனக்கு அருள்
என்பினுட் சோதி இலங்குகின்றானே.

அன்பி னுருகுவன் னாளும் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனிக் கமலத் திருவடி
முன்புநின் றாங்கே [1]மொழிவ தெனக்கரு
ளென்பினுட் சோதி யிலங்குகின் றானே[2]. (5)

வேறு பாடம்: 1. மொழிந்தேன்றக்கருள் (ஆ) I. 2. யிலிங்குநின்றானே (ஆ) III யிலங்கிநின்றானே (ஈ) III யிலிங்குகின்றானே (ஓ) I.

கருத்து: சிவந்த மேனியும் தாமரைத் திருவடியும் கண்டு, சன்னிதியில் நின்று, நான் வேண்டுவதை அருளுகின்ற சோதி, எனது உடம்பினுள் விளங்குகின்றான். அவனது தண்ணருளை நினையுந்தோறும் பேரன்பால் உருகுவேன். அவன் பணியே நாள்தோறும் செய்வேன்.

70. யோகம்

மேல்நோக்கும் உணர்வு

1442. நெறி வழியே சென்று, நேர்மையுள் ஒன்றி,
தறி இருந்தாற்போலத் தம்மை இருத்தி,
சொறியினும் தாக்கினும் துண் என்று உணராக்
குறி அறிவாளர்க்குக் கூடலும் ஆமே.

நெறிவழி யேசென்று [1]நேர்மையு ளொன்றித்
தறியிருந் [2]தாற்போலத் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே. (1)

வேறு பாடம்: 1. நேர்மையி லொன்றித் (ஆ ஓ) III நேர்வழி யொன்றித் (ஓ) IV. 2. தாற்போற் (சுவடிகள்) V.

கருத்து: மூலாதாரத்திலிருந்து தொடங்கிச் சகஸ்ராரம் வரை, ஆதாரங்களின் வழியே உணர்வைச் செலுத்தி அங்குச் சிவத்துடன் பொருந்தி, கம்பம் போல அசையாமல் இருந்து, கீறினாலும் தாக்கினாலும் திடுக்கிட்டு உணராமல், குறியாகிய சிவத்தை அறிவார்க்கு, அதனுடன் ஒன்றிக் கலக்க இயலும்.

பதிஞானமே வேண்டும்

1443. ஊழிதோறு ஊழி உணர்ந்தவர்க்கு அல்லது
ஊழிதோறு ஊழி உணரவும் தான் ஒட்டான்
ஆழி அமரும் அரி அயன் என்று உளோர்
ஊழி முயன்றும் ஓர் உச்சி உள்ளானே.

ஊழிதோ றூழி யுணர்ந்தவர்க் கல்லது[1]
வூழிதோ றூழி யுணரவுந் தானொட்டா
[2]னாழி யமரு மரியய னென்றுளோர்[3]
ரூழி முயன்றுமோ ருச்சியுள் ளானே. (2)

வேறு பாடம்: 1. கல்லால் (விசு) 2. ரூழீ (அ) I; னூழி (ஓ) I; ராழி (ஈ ஐ ஓ) I. 3. னென்றுளா (துடி).

கருத்து: பற்பல ஊழிக்காலத்திலும், பதிபோதத்தால் அவனை உணர்ந்தவர்க்கு அல்லால், பிறருக்குப் பல்லூழிக் காலமாயினும் உணர இயலாதவன். அதற்குச் சான்று, பாற்கடலில் துயிலும் மாலும் பிரமனும், முன்பு ஓர் ஊழிக் காலம் முயன்றும் அவனைக் காண வியலாத 'கடப்புநிலை' யில் இருந்தான் என்பதாகும்.

உச்சி - கடப்புநிலை.

சீவனில் சிவம்

1444. பூவினில் கந்தம் பொருந்தியவாறு போல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்து அறிவாளர்க்கு
நாவி அணைந்த நடுதறி ஆமே.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
வோவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. (3)

கருத்து: அரும்பில் மணம் உள்ளுறையாக இருந்து, அஃது மலராகிய போது வெளிப்படுவதே போல, சீவனுக்குள் சிவசத்தி உள்ளுறையாக இருந்து யோக சாதனையால் வெளிப்படும். உடலசைவும் மனச் சலனமும் இன்றி, ஓவியம் போல,

உயிருணர்வால் அறியும் யோகிகட்கு, புனுகு பூனை சேர்ந்து இருந்த மூங்கில் கம்பு, அதன் மணத்தைப் பெற்று, என்றும் மணத்துடன் இருப்பதைப் போலச் சீவனில் சிவவொளி விளங்கும்.

மணம் விரியும் மலர்

1445. உய்ந்தனம் என்பீர், உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரில் கரக்கின்ற நத்தியை,
சிந்தை உறவே தெளிந்து, இருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு மூலவித்து ஆமே.

உய்ந்தன மென்பீ ருறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் [1]கரக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திரு ணீங்கினான்
[2]முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே[3]. (4)

வேறு பாடம்: 1. கலக்கின்ற (விசு) (தி) (வ) (த) 2. முந்தப் (சண்) 3. தாகுமே (சண்).

கருத்து: 'பிறவிச் சுழலினின்றும் தப்பினோம்' என்று வாயால் முழங்குகின்றீர். ஆயின் "உற்ற யாக்கையின் உறுபொருள்" ஆகிய சிவத்தைக் காணமாட்டீர், (அதனைக் காணும் பொருட்டு யோக சாதனை செய்யமாட்டீர்) பூவில் மணம், முன்னர்த் தோன்றாது, அது மலர்ந்த காலத்தே தோன்றுவது போல, உடம்பில் முன்னர்த் தோன்றாமல், சாதனையால் தோன்றும் சிவத்தைக் காண்டலே நெறியெனத் தெளிந்து, அறியாமை இருள் நீங்கப் பெற்றால், உங்களின் முன்னைப் பிறவிகளை எல்லாம் நிமித்த காரணமாக இருந்து உண்டாக்கிய சிவம் உங்கள் உணர்விற்குத் தோன்றும். அதுவே பிறப்பை அறுக்கும்.

கலைக்கல்வி அன்று, கலை உள்ள உடம்பே உதவும்

1446. எழுத்தொடு பாடலு மெண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் [1]பிறவியு நீங்கார்[2]
[3]வழித்தலைச் சோமனோ டங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே. (5)

வேறு பாடம்: 1. பிறவியை (த) 2. நீங்கா (ஈ ஓ) I; நீக்கா (த) 3. விழித் தலைச் (ஓ) I வழித்தலை (அ ஓ) I.

கருத்து: இலக்கண, இலக்கிய, கலைக்கல்வி உடையோர், அதனால் வந்த ஞானத்தால், பழியும் பாசமும் உடைய பிறவியினின்றும் உய்யார். ஏனெனில் அது பாச ஞானமே. சந்திரன், சூரியன், அக்கினி ஆகிய வரிசையான மண்டலங்கள் உடம்பின் மேற் பகுதியிலிருந்து மூலாதாரம் வரை அமைந்து, யோக நெறியில் சாதனை செய்வார்க்கு உதவி செய்யும் வகையை நான் உணர்ந்தேன்.

வழித்தலை (3ஆம் அடி) வழிமுறை. வழித்தலை (4ஆம் அடி) - வழியின் கண், நெயின் கண். பிறர் பிறரெல்லாம் கல்வி கேள்விகளால் நிரம்பியும் பிறவியறாராக, யான் யோக நெறியில் அதற்கு வழியுணர்ந்தேன் என்க.

1447. விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெயின் விண்ணவ னாகுமே. (ஆ, ண)

யோகம் செய்யத் தயங்க வேண்டாம்

1448. பேணிப் பிறவா வழி அருள்செய்திடும்;
காணின் தனது கலவியுளே நிற்கும்;
நாணின் நரக வழிக்கே நெறி செய்யும்
ஊனில் சுடும் அங்கி உத்தமன் தானே.

[1]பேணிப் பிறவா [2]வழியருள் செய்திடுங்
காணிற் றனது கலவியு ளேநிற்கு
நாணி னரக [3]வழிக்கே நெறிசெய்யு[4]
மூனிற் சுடுமங்கி யுத்தமன் றானே. (6)

வேறு பாடம்: 1. பேணிற் (விசு) (தி) (த) (வ) 2. வுலகருள் (சைவ) 3. நெறிக்கே (சைவ) 4. வழிசெய்யும் (சைவ) 5. மூணிற் (ஆ) I.

கருத்து: உடம்பில் சுடுகின்ற தீயாக (மூலக் கனல்) உள்ள இறைவன், தன்னை யோகி காணப்பெற்றால், தன்னை அவன் கூடுமாறு அருள் செய்வான். அவனை அருள் நெறியில் வளர்த்து, இறுதியில் பிறவா நிலையும் அருள்வான். உலகியலில் மயங்கி யோகசாதனை செய்யக் கூசினால், நரக உலகத்தை அடையவே வழிசெய்வான்.

1449. ஒத்தசெங் கோலா ருலப்பிலி மாதவ
ரெத்தனை யாயிரம் வீழ்ந்தன ரெண்ணிலி
சித்தர்க டேவர்கண் மூவர் பெருமையா
மத்த னிவனென்றே யன்புறு வார்களே. (உ, க)

யோகத்தில் மூன்று.

1450. யோகிக்கு யோகாதி மூன்றுஉள கொண்டு உற்றோர்
ஆகத் தகு கிரியாதி சரிதையாம்
தாகத்தை விட்ட சரிதை ஒன்று, ஒன்றுள
ஆதித்தன் பத்தியுள் அன்பு வைத்தேனே.

யோகிக்கு யோகாதி [1]மூன்றுள கொண்டுற்றோ
ராகத் தகுகிரி [2]யாதி சரிதையாந்
தாகத்தை விட்ட சரிதையொன் றொன்றுள்[3]
வாதித்தன் பத்தியு ளன்புவைத் தேனே. (7)

வேறு பாடம்: 1. மூன்றுகொண்டுற்றோ (ஈ) I. 2. யாதி சரிதாதியாந் (அ ஐ ஓ) I. 3. றாமொன்றுள் (ஓ) III.

கருத்து: யோகிக்கு யோகம், கிரியை, சரியை என்ற மூன்று நெறிகள் உள்ளன. இவற்றுள் சரியை பயின்றோர் சாலோகம் பெறுவர். கிரியை பயின்றோர் சாமீபம் பெறுவர். சரியைநெறி ஆசையை அகற்றிய நெறியாம். கிரியை, சூரிய மண்டலம், அக்கினி மண்டலம், சந்திர மண்டலம் என்ற மண்டலங்களில் இறைக் காட்சி பெறுதல்.

1451. யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே. (ஔ, ப)

குறிப்பு: இப் பாடல் 2 சுவடிகளில் இல்லை

71. ஞானம்

ஞானிகளே சிறந்தோர்

1452. ஞானத்தின் மிக்க வறநெறி நாட்டில்லை[1]
[2]ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவால்[3]
ஞானத்தின் மிக்கார் [4]நரரின்மிக காரே. (1)

வேறு பாடம்: 1. நாடில்லை (அ) I. 2. ஞானத்திலே மிக்க (அ) II. 3. நல்காவாம் (ஓ) IV. 4. நகரின்மிக் (விசு).

கருத்து: ஞானத்தைக் காட்டிலும் சிறந்த அறநெறி எங்கும் இல்லை. ஞானம் அன்றி வேறு சாதனம் உண்டு என்று கூறும் சமயம் உளதாயின், அது நன்றன்று. ஞானம் அல்லாத ஏனைய நெறிகள் பரமுத்தி நல்கமாட்டா. ஆதலின் ஞானத்திற் சிறந்தோரே மக்களுள் சிறந்தோராவர்.

தன்னை உணர்தலே சன்மார்க்கம்

1453. சத்தமும், சத்த மனமும், தகுமனம்
உய்த்த உணர்வும் உணர்த்தும் அகந்தையும்
சித்தம் என்ற இம்மூன்றும் சிந்திக்கும் செய்கையும்
சத்தம் கடந்தவர் பெற்ற சன்மார்க்கமே.

சத்தமுஞ் சத்த மனனுந் தகுமன
முய்த்த வுணர்வு முணர்த்து மகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன்றுந் சிந்திக்குஞ் செய்கையுஞ்
சத்தங் [1]கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. (2)

வேறு பாடம்: 1. கெடாதவர் (ஐ) II.

கருத்து: ஓசை முதலிய ஐம்புலன்களும், அவற்றில் படியும் மனமும், மனத்தின் எண்ணத்தை இன்னது என்று துணியும் புத்தியும், பலமுறை எழுச்சி கொண்டு எண்ணத்தைத் தன்னோடு ஒப்ப வைத்துச் சிந்திக்கத் தூண்டும் அகங்காரமும், இந்த மூன்றாலும் சிந்திக்கும் சித்தமும் என்பன முதலிய ஆன்ம தத்துவம் 24 - ஐயும் ஆன்மா, தான் வேறாக நின்று, தெளிய உணர்தலே சன்மார்க்கத்தின் முதற்படியாகும்.

சத்தம் கடந்தவர் - ஓசைமுதலிய இருபத்து நான்கு தத்துவங்களும் அல்லாத ஆன்மா.

பொருளும் அவனே, அருளும் அவனே

1454. தன்பால் உலகும், தனக்கு அருகு ஆவதும்
அன்பால் எனக்கு அருளாவதும் ஆனவன்
என்பார்கள் ஞானமும், எய்துசிவ யோகமும்;
பின்பாலின் நேயமும் பெற்றிடும் தானே.

தன்பா [1]லுலகுந் தனக்கரு காவது[2]
மன்பா [3]லெனக்கரு ளாவது மானவ[4]
[5]னென்பார்கள் ஞானமு [6]மெய்துசிவ யோகமும்[7]
பின்பாலின் னேயமும் பெற்றிடுந் தானே. (3)

வேறு பாடம்: 1. லுலகாந் (ஈ) I. 2. ளானது (அ ஈ) I; ளாவது (ஐ) I. 3. வினக்கரு (அ ஈ ஒ) I. 4. மாவன (அ ஈ ஐ ஒ ஓ) I. 5. வென்பார்கள் (ஓ) I; மென்பார் (ஐ) I; வெண்பார்கள் (ஈ) I. 6. மெய்துஞ்சிவ (ஈ ஐ ஓ) I மெய்துஞ் (ஓ) IV. 7.சிவோகமும் (ஓ) IV.

கருத்து: ஞானம் என்பது, உலகமும், பொருள்களுமாக இருப்பவன் இறைவனே என உணர்தல்; சிவயோகம் என்பது, எனக்கு அருள் அனுபவம் தந்து நிற்பவன் இறைவனே என உணர்தல் என்பர். ஞானி இவ்வாறு தன்னால் அறியப்பட்ட 'நேயம்' ஆகிய சிவத்தினைப் (சிவநிலையை) பிறகு பெறுவான்.

செய்தனவே தவம்

1455. இருக்கும் சேம இடம் பிரமம் ஆகும்,
வருக்கம் சராசரம் ஆகும் உலகம்
தருக்கிய ஆசாரம் எல்லாம் தருமே
திருக்கம் இல் ஞானத்தைத் தேர்ந்து உணர்ந்தோர்க்கே.

இருக்குஞ் [1]சேம விடம்பிரம மாகும்
வருக்கஞ் சராசர மாகு முலகந்
தருக்கிய வாசார மெல்லாந் தருமே
[2]திருக்கமில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. (4)

வேறு பாடம்: 1. சேயிடம் (ஈ) I. 2. திருக்கிலா (விசு) (தி) (த)

கருத்து: மாறுபாடு இல்லாத ஞானத்தை ஆராய்ந்து, உணர்ந்த வர்க்கு, இருக்கும் பாதுகாப்பான இடம் பிரமமாகும். சராசரங்களில் பல வகைகளை உடைய உலகம், அவர்கள் மேம்பட்டதான அருள் அனுபவம் பெறுதற்குரிய இடமாக அமையும்.

"சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" என மணிவாசகரும் பகருவர். (திருவா - திருத்தோ: 6) ஆசாரம் - ஒழுக்கம்; வாழ்க்கை; ஈண்டு அருள் வாழ்க்கை.

குறி, குணம் கடந்தோர்

1456. அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர் மன்னும் பேரருளாளன்
குறியும் குணமும் குரைகழல் நீங்கா
நெறி அறிவார்க்கு இது நீர்த்தொனி ஆமே.

அறிவு மடக்கமு மன்பு முடனே
பிரியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைகழ னீங்கா
நெறியறி [1]வார்க்கிது [2]நீர்த்தொனி யாமே. (5)

வேறு பாடம்: 1. வார்க்கது (ஒ) III. 2. நீர்த்தோணி (அ ஈ) I நீத்தொளி (த)

கருத்து: பதிஞானம், தற்போத நீக்கம், பேரன்பு - இவை ஆன்மாவை விட்டு நீங்காது இருக்கும் நகர் வீடுபேறு. அதனைத் தரும் சிவபெருமானது திருவடியைச் சார்ந்த ஞானியர்க்கு, குறி, குணம் என்பனவெல்லாம் தண்ணீரினுள் எழும் ஒலி போல அடங்கிடும்.

அவர்கள் நோக்குக் குறி குணம் கடந்து நிற்கும் என்க.

கொண்டு கூட்டு: "பேருளாளன் குரைகழல் நீங்கா நெறி அறிவார்க்கு, குறியும் குணமும் இது நீர்த் தொனியாமே".

ஒளி விளக்கு

1457. ஞானம் விளைந்து எழுகின்றது ஓர் சிந்தையுள்
ஏனம் விளைந்து, எதிரே, கான்வழி தொறும்
கூனல் மதிமண்டலத்து எதிர் நீர் தண்டும்
ஊனம் அறுத்து நின்று, ஒண்சுடர் ஆமே.

ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையு[1]
[2]ளேனம் [3]விளைந்தெதி [4]ரேகான் வழிதொறுங்
கூனன் மதிமண் டலத்தெதிர் நீர்தண்டு[5]
[6]மூன மறுத்துநின் றொண்சுட ராமே?[7] (6)

வேறு பாடம்: 1. சிந்தையி (ஒ) IV. 2. லேனம் (ஒ) IV; யானம் (த) 3. விழைந்தெதிர் (த) 4. ரேகாண் (ஈ) I. 5. நீர்கண்டு (ஆ ஓ) I. 6. மூன்று (அ ஒ) I வூன (ஆ ஓ) I. 7. ராகுமே (ஒ) II.

கருத்து: ஞானம் தோன்றி வளர்தற்குரிய சிந்தையில் காமம், குரோதம் முதலிய தவறுகள் தோன்றப் பெற்று, எதிரே உள்ள, காடு போன்ற உலகியல் வழிதோறும் சென்று, சந்திர மண்டலத்தில் ஊறத்தக்கதாகிய அமுதத்தை அற்றுப் போகச் செய்கின்ற பிழைபாட்டை - அதற்குக் காரணமாகிய ஆணவமலத்தைக் - கெடுத்து, அச்சிந்தையை ஒளிவிளக்காக ஆக்குவது பதி ஞானம்.

ஞானத்தில் படி நிலை - 1

1458. ஞானிக்கு உடன் குணம் ஞானத்தில் நான்குமாம்,
மோனிக்கு இவை ஒன்றும் கூடா; முன் மோகித்து
மேல் நிற்றலாம் சத்திவித்தை விளைந்திடும்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே.

ஞானிக் குடன்குண ஞானத்தி னான்குமா
மோனிக் கிவையொன்றுங் கூடாமுன் மோகித்து
மேனிற்ற [1]லாஞ்சத்தி [2]வித்தை விளைந்திடுந்[3]
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. (7)

வேறு பாடம்: 1. லாற் சத்தி (த) 2. வித்து (ஆ) I. 3. விளைத்திடுந் (தி) (த) (வ).

கருத்து: ஞானிக்கு, ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் நான்கு படி நிலைகள் உள்ளன. இவற்றின் இறுதியை எட்டி மௌன நிலையை எய்தியவனுக்கு, முன்னைப்படிகள் ஒன்றும் வேண்டா. அவற்றுள் யோகத்தில் ஞானம் என்னும் படிநிலையில் 'சத்திவித்தை' விளையும். அதை 'ஞானம்' என மயங்குவர். ஆறு ஆதாரங்களில் நின்று யோகம் செய்வோர், யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை என்னும் படிநிலைகளில் உள்ளோரே.

ஞானத்தில் படி நிலை - 2

1459. ஞானத்தின் ஞானாதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நானென தென்னாமை
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
[1]ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. (8)

வேறு பாடம்: 1. ஞானத்தின் (ஓ) I.

கருத்து: ஞானிக்கு ஞானத்தில் நான்கு படிநிலைகள் உள்ளன. அவற்றுள், ஞானத்தில் ஞானமாவது தற்போத இழப்பு. ஞானத்தில் யோகம், நாதம் கடந்த இடத்தில் 'சிவ ஒளியைக் காண்டல்'. ஞான்த்தில் கிரியை, முத்தியை நாடுதல்.

ஞானக் கனி

1460. நண்ணிய ஞானத்தின் ஞானாதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் [1]கடந்த பிணக்கற்றோன்[2]
கண்ணிய [3]ஞேயங் கரைஞானங் கண்டுளோன்[4]
திண்ணிய சுத்தன் [5]சிவமுத்தன் சித்தனே. (9)

வேறு பாடம்: 1. கடந்து (ஓ) III. 2. பிணக்கற்றோர் (அ ஆ இ ஒ ஓ) I. 3. நேயங் (அ இ ஈ) III. 4. கண்டுளோர் (அ ஆ இ ஈ) I. 5. சிவமுற்ற (ஈ) IV.

கருத்து: ஞானத்தில் நான்கு படிநிலைகளையும் எய்தியவன், வினையின் நீங்கியவன். பதிஞானத்தால் நேயமாகிய சிவம் ஒன்றையே காண்பான். ஆணவமலம் அறப்பெற்றோன்; பர முத்தி எய்துவோன்; முடிந்த பேற்றினை அடைவோன்.

1461. ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதயம்
ஞானநிர் வாணமே நன்றறி வானருள்
ஞானாபி டேகமே நற்குரு பாதமே. (ஔ, ப)

குறிப்பு: இப்பாடல் 5 சுவடிகளில் இல்லை.

72. சன்மார்க்கம்

யார் சன்மார்க்கி?

1462. சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவந்[1]
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. (1)

வேறு பாடம்: 1. தத்துவத் (ஓ) I.

கருத்து: ஆன்மாவாகிய தானும் சிவமும் வேறல்ல என உணரும் நிலையை எய்துவிப்பதே சன்மார்க்கமாம். வேதத்தில் ஒளி விளங்க ஏத்தப் பெறும் அச்சிவத்தின் பல்வேறு வடிவங்களான தெய்வங் களைக் கண்டு மகிழ்ந்து, கோபம் முதலிய ஆறு பகைகளை வென்று, சிவயோகம் புரியும் சித்தராய் விளங்கி, இறப்பை வென்றவரே சன்மார்க்கத்தின் கருத்தை (சாரத்தை, அனுபவத்தை) அறிந்தோர் .

குறிப்பு: அ உ இ ஐ ஒ - சுவடிகளில் "ஞானம்" என்னும் இயலை அடுத்துச் 'சத்திநிபாதம்' என்னும் இயல் இடம்பெறுகிறது. ஈ ஓ - சுவடி களில் சன்மார்க்கம் என்னும் இவ்வியல் இடம் பெறுகிறது. வரிசை முறையின் பொருத்தம் நோக்கி, பின்னதே இப்பதிப்பில் மேற் கொள்ளப்படுகின்றது.

தெய்வ நிலை தரும் நெறி

1463. சைவப் பெருமைத் தனி நாயகன் நந்தி
உய்ய வகுத்த குரு நெறி ஒன்று உண்டு,
தெய்வச் சிவநெறி, சன்மார்க்கம்; சேர்ந்து உய்ய
வையத்து உள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

சைவப் பெருமைத் தனிநா யகனந்தி
யுய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே. (2)

கருத்து: சைவ நாயகன், பெருமையை உடைய நாயகன், ஒப்பற்ற நாயகன் - ஆகிய நந்தி ஆன்மாக்கள் ஈடேற வகுத்த உபதேச நெறி

ஒன்றுண்டு. அதுவே தெய்வநிலை தரும் சிவநெறி; சன்மார்க்கம். அதைச் சார்ந்து, கடைப்பிடித்து, ஈடேறும் பொருட்டு, அதனை உலகமக்களுக்கு உரிய நிலையில் வகுத்து அமைத்தான்.

குரு வழிபாடு

1464. தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே. (3)

கருத்து: குருவை வழிபடுவோர்க்கு, சன்மார்க்கம் இறைவனைக் காண, வழிபட, சிந்திக்க, யோகசாதனையில் அவனை உடம்பினுள் தீண்ட, அவனது பெருமை பேச, அவன் திருவடிகளைச் சகஸ்ராரத்தில் அனுபவிக்க வழி செய்து முத்தியைப் பெறும் சார்பில் வைப்பான்.

ஞானமே உய்வுக்கு வழி

1465. தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவை யறியாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் [1]தீரார் பிறப்பே. (4)

வேறு பாடம்: 1. தீராப் (அ ஆ இ ஈ ஓ) I; தீதிற் (ஓ) I.

கருத்து: பதி ஞானம் பெறாதவர் சிவனை அறியார். தம்மையும் உணரார். அவர் மலம் அறுத்துச் சிவமாதல் இல்லை. மாறாகப் பிறவிச் சுழலில் கிடப்பர்.

சன்மார்க்கப் பயன்

1466. தான் அவன் ஆகி, தான் ஐந்தாம் மலம் செற்று
மோனம்-அது ஆம் பொழிப்பால் முத்தர் ஆவதும்,
ஈனம் இல் ஞான-அனுபூதியில் இன்பமும்,
தான் அவனாய் அற்றல் ஆன சன்மார்க்கமே.

தானவ னாகித்தா [1]னைந்தா மலஞ்செற்று
மோனம [2]தாமொழிப் பான்முத்த ராவது
மீனமில் ஞானானு பூதியி லின்பமுந்[3]
தானவ [4]னாயற்ற லானசன் மாக்கமே. (5)

வேறு பாடம்: 1. னஞ்சப் (ஓ) III. 2. தான பரன்முத்த (ஆ) I. 3. லின்பந் (அ) I. 4. னாற்ற (அ ஓ) I; னாயுற (விசு) (தி) (த).

கருத்து: சிவோகம் பாவனை செய்து, ஐந்து மலங்களையும் நீக்கி, இறைவன் உயிர்க்குயிராய் நின்று உணர்த்திய மௌன உபதேசத்தின் வழியே நின்று முத்திக்குரியவர் ஆவதும், ஞான அனுபவம் பெற்றுப் பேரின்பம் துய்த்தலும், ஆன்மா தற்போதம் அற்றுச் சிவம் ஆகும் நெறியாகிய சன்மார்க்கத்தின் பயனாகும்.

1467. சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு மிடத்தொடு தெய்வமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கந் தெரிசன
மெய்ம் மார்க்கத் தார்க்கு மியம்புவன் கேண்மினோ (உ)

1468. சன்மாக்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மாக்க சாதனம் பேதையர்க் காய்நிற்குந்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றார்
சன்மாக்கர் தானவ னாகுஞ்சன் மார்க்கமே. (ஊ)

1469. சன்மார்க்க மேத்த வரும்பெருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பிறவியல் பாமென்றால்
நன்மார்க்கந் தான்சிவ னோடுற நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே.
(அ,க)

1470 அன்னிய பாசமு மாகுங் கருமமு
முன்னு மவத்தையு மூலப் பகுதியும்
பின்னிய பாசமும் பேதாதி பேதமுந்
தன்னொடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே (ஆ, ப)

குறிப்பு: இப்பாடல் ஒரு சுவடியில் இல்லை.

உள்ளம் கனிய

1471. பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மாக்கமே. (6)

கருத்து: ஆன்மாவிடமிருந்து பாசத்தை நீக்கி, ஆன்மாவைத் தலைவனுடன் சேர்த்து, கனியாத உள்ளத்தையும் கனியச் செய்து, மாறாத - உண்மையாகிய இறைவனது சொரூபத்தைக் காணச் செய்து, அத்தரிசனத்திலேயே 'சமாதி' கூடச்செய்வது, சன்மார்க்கம் ஆகும்.

சித்த யோகம்

1472. மார்க்கம் சன்மார்க்கிகட்கு இட்ட வகுப்பு - அது
மார்க்கம் சன்மார்க்கமே அன்றி, மற்றொன்று இல்லை
மார்க்கம் சன்மார்க்கம் எனும் நெறி வைகாதார்
மார்க்கம் சன்மார்க்கம், அது சித்த யோகமே.

மார்க்கஞ்சன் [1]மார்க்கிகட் [2]கிட்ட வகுப்பது
மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை
மார்க்கஞ்சன் மார்க்க [3]மெனுநெறி வைகாதோர்
மார்க்கஞ்சன் மார்க்க [4]மதுசித்த யோகமே. (7)

வேறு பாடம்: 1. மார்க்கிகள் (பதிப்.) 2. கட்ட (இ ஐ ஒ) I. 3. மென் னெறி (ஐ) I. 4. மதிசித்த (இ ஐ) I மாஞ்சித்த (ஓ) II மாஞ்சித்தி (ஈ ஓ) I.

கருத்து: சன்மார்க்கிகட்கு உரியதாக வைக்கப்பட்ட பிரிவு சன்மார்க்கம். சிறந்த மார்க்கம் இதுவே அன்றி, வேறில்லை. இச்சன்மார்க்கத்தை அடையும் நெறி சித்த யோகமாகும். அதுபற்றி, அதுவும் சன்மார்க்கம் எனப்படும்.

73. சகமார்க்கம்

ஞானத்திற்கு ஏணி

1473. சன்மார்க்கம் தானே சகமார்க்கம் ஆனது,
மன்மார்க்கம் ஆம், முத்தி சித்திக்கும் வைப்பு -அது ஆம்
பின் மார்க்கம் ஆனது, பேராப் பிறந்துஇறந்து
உன் மார்க்கம், ஞானத்து உறுதியும் ஆமே?

சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி [1]சித்திக்கும் வைப்பதாம்[2]
பின்மார்க்க [3]மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே. (1)

வேறு பாடம்: 1. சித்திக்குள் (ஓ) I. 2. வைப்பது (த) 3. மாவது (இ) IV.

கருத்து: சன்மார்க்கத்தை எய்தும் படிநிலையே சகமார்க்கம். ஆதலின் அதில் சன்மார்க்கத்தின் இயல்பு உண்டு. அது நிலையான வழி. முத்தி, சித்திகளைப் பெறுதற்கும் ஏதுவாம். வேறு நெறிகள் எல்லாம் இடையறாமல் பிறந்தும் இறந்தும் உலகியலைச் சார்வனவாம். அவை ஞானமாகிய உறுதிப் பொருளைத் தருமோ? தாரா.

யோகச் சமயம்

1474. மருவும் துவாதச மார்க்கம் இலாதார்
குருவும் சிவனும் சமயமும் கூடார்
வெருவும் திருமகள் வீட்டு இல்லையாகும்
உருவும் கிளையும் ஒருங்கு இழப்போரே.

மருவுந் துவாதச மார்க்க மிலாதார்
குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்
வெருவுந் திருமகள் [1]வீட்டில்லை யாகு
முருவுங் கிளையு மொருங்கிழப் போரே[2]. (2)

வேறு பாடம்: 1. வீடில்லை (ஓ) 2. பாரே (பதிப்.)

கருத்து: தலையுச்சியின் மேல் 12 அங்குலத்தில் பொருந்தும் யோக மார்க்கத்தை அறியாதார், குருமண்டலத்தையும் சிவத்தையும்,

யோக சமயத்தையும் அறியாதார். அவர்களைக் கண்டு அஞ்சும் திருமகள், அவர்களது இல்லத்தை நீப்பாள். அவர்களுக்குப் புகழும், சுற்றமும் இல்லை.

யோகச் சமாதி

1475. யோகச் சமாதியி னுள்ளே யகலிடம்
யோகச் சமாதி னுள்ளே யுளரொளி[1]
யோகச் சமாதியி னுள்ளே யுளசத்தி[2]
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே[3]. (3)

வேறு பாடம்: 1. யுள்ளொளி (அ) I. 2. யுளள்சத்தி (த) 3.சத்தரே (ஐ ஓ) I.

கருத்து: யோகத்தில் சமாதி கூடியவர்க்கு அண்டங்கள் எல்லாம் காட்சிப்படும். அவர்களின் உயிரின் நடுவே அசையும் சிவ ஒளியும் தரிசனப்படும். இவ்வாறு தம்முள்ளும் வெளியிலும் இறைக்காட்சி பெறுபவர், ஆங்குச் சத்தியும், சிவத்தோடு பிரிவின்றி நிற்றலைக் காண்பர். (இஃது அருள் அனுபவம் ஆதலின், சத்தியும் காட்சிப் படுவதாகக் கூறினார்). இத்தகையதாதலின், சித்தர் யோகச் சமாதியை விரும்புவர்.

சிவபோகம் இங்கே

1476. யோகமும் போகமும் யோகியர்க்கு ஆகுமாம்,
யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியில், புருடார்த்த சித்தியாம்,
ஆகும் இரண்டும் அழியாத யோகிக்கே.

யோகமும் போகமும் [1]யோகியர்க் காகுமாம்[2]
யோகஞ் [3]சிவரூப முற்றிடு முள்ளத்தோர்[4]
போகம் புவியிற் [5]புருடார்த்த சித்தியா[6]
[7]மாகு மிரண்டு மழியாத யோகிக்கே. (4)

வேறு பாடம்: யோகிகட் (ஐ) IV. 2. காகுமால் (ஓ) IV. 3. சிவபோக (ஐ) IV. 4. முள்ளதோர் (ஓ) I. 5. புருடாதி (இ) I. 6. சித்திய (ஓ) IV. 7. மாக (இ ஐ) IV; ராகு (ஓ) I; தாகு (விசு).

கருத்து: யோகியர்க்கு யோகமும் போகமும் எய்தும். சிவத்தோடு ஒன்றி நிற்கும் உயிருணர்வு உடையோர் சிவபோகத்தை இவ்வுலகி

லேயே அனுபவிப்பர். அது எதைப் போன்றது? இங்கு அறம், பொருள், இன்பங்களை எய்துவது போன்றது. எனவே யோகிக்குப் புருடார்த்தம் சிவபோகமே. என்றும் அழியாத உடம்புடன் வாழும் யோகிக்கு இப்போகமும் யோகமும் உரியன.

வள்ளலார், ஏமசித்தி, சாகாக் கல்வி, கடவுள்நிலை அறிந்து அம்மயம் ஆதல், தத்துவ நிக்கிரகம் - இவற்றைப் புருடார்த்தம் என்றல் காண்க.

கருவி மாற்றம்

1477. ஆதார சோதனையால் நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலந்தது விண்-ஒளி
போத - ஆலயத்துப் புலன், கரணம், புந்தி
சாதாரணம் கெடலாம் சக மார்க்கமே.

ஆதார சோதனை யானாடி சுத்திகண்
மேதாதி யீரெண் [1]கலந்தது விண்ணொளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே[2]. (5)

வேறு பாடம்: 1. கலாந்தத்து (வ) (த) 2. மார்க்கத்தே (த).

கருத்து: ஆறு ஆதாரங்களிலும் வாசியைச் செலுத்துவதால், இடகலை, பிங்கலை, சுழுமுனை நாடிகள் தூய்மையுற்று, ஆற்றல் பெறும். சந்திர மண்டலத்தில், மேதை முதலிய 16 கலைகளிலும் உயிருணர்வு கலப்பது, பரம ஆகாயத்தில் பரஞ்சோதியைக் காண உதவும். அதற்கு மேல், ஞான (உயிருணர்வு) ஆலயத்தில் தியானம் செய்வதால், புலன்களும், பொறிகளும், புத்தியும் இயல்பாகிய சீவத் தன்மையை விட்டுச் சிவகரணமாக மாறுவது சக மார்க்கம் ஆகும்.

மேதை முதலிய கலைகள் சந்திர கலைகள் ஆகும்.

மனக் கோயில்

1478. பிணங்கி நிற்கின்ற ஐ-ஐந்தையும் பின்னை
அணங்கி எறிவன் அயிர்மன வாளால்,
கணம் பதினெட்டும் கருதும் ஒருவன்
வணங்க வல்லான் சிந்தை வந்து நின்றானே.

பிணங்கிநிற் கின்றவை [1]யைந்தையும் பின்னை
யணங்கி [2]யெறிவ [3]னயிர்மன வாளாற்
கணம்பதி னெட்டுங் கருது மொருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானே. (6)

வேறு பாடம்: 1. யெந்தையும் (ஆ இ) I. 2. யெறிவன் வயிர் (அ) I. 3. னயில் மன (த).

கருத்து: அருளாற்றல் பெற்று, தம்முள் மாறுபடும் ஆன்ம தத்துவம் 24-ஐயும் புருட தத்துவம் ஒன்றையும், நுண்மையான மனம் என்ற வாளால் (ஞானம்) யோகி வெட்டுவான். பதினெண் கணத்தாரும் தம் தலைவன் எனக் கருதும் சிவன், தன்னை வணங்க வல்ல அந்த யோகியின் சிந்தையில் குடியிருப்பான்.

கனிச் சாறு

1479. வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்[1]
வளங்கனி யொப்பதோர் [2]வாய்மைய னாகு
முளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே. (7)

வேறு பாடம்: 1. தார்க்கு (ஓ) IV. 2. வாய்மையி (இ) I.

கருத்து: சிவன் தோற்றத்தால் வளம் பொருந்திய கனியை ஒத்திருப்பவர்க்கு (புறப்பூசை செய்பவர்க்கு) அப்பழம் போலத் தோன்றி அமைவான். ஆனால் அகப்பூசையால் உள்ளம் உள்ளார்ந்து கனிந்து நினைப்பவர்க்கு, அவனும் பழம் கனிந்து ஒழுகும் சாறு போல், உயிருணர்வில் தான் நின்று இனித்திருப்பான்.

உணர்வும் தானுமாய் உடன் நின்று அனுபவம் தருதலின், 'பகுந்து நின்றான்' என்றார். பகிர்ந்து என்பதன் மரூஉ. நிறம் - தோற்றம்.

74. சற்புத்திர மார்க்கம்

புற வழிபாடு

1480. மேவிய சற்புத்திர மார்க்கம் மெய்த் தொழில்
தாவிப்பதாம், சகமார்க்கம் சகத்தொழில்
ஆவது இரண்டும் அகன்று, சகமார்க்கத்
தேவியோடு ஒன்றல், சன்மார்க்கத் தெளிவே.

மேவிய சற்புத் [1]திரமார்க்க மெய்த்தொழில்[2]
தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழி
லாவ திரண்டு மகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல்சன் [3]மார்க்கத் தெளிவே[4] (1)

வேறு பாடம்: 1. திரமார்க்கமே (ஆ) II. 2. யத்தொழில் (விசு) மே தொழில் (துடி) 3. மார்க்கந் (த) 4. தெளிவதே (ஆ) II.

கருத்து: சன்மார்க்கத்தோடு பொருந்திய சற்புத்திர மார்க்கமாவது, உடலின் புறக்கருவிகளால் செய்யும் வழிபாடாகும். அது 'தாபனம்' முதலிய பல கிரியைகளாகும். சகமார்க்கமோ, புறத்தொழில், அகத்தே செய்யும் பாவனை என்ற இரண்டும் நீத்து, உடன் இருந்து அனுபவிக்கத் தருபவளாகிய சத்தியோடு (அருளனுபவத்தோடு) ஒன்றி, பின்பு சிவத்துடன் ஒன்றுவதாகும். இவ்வுண்மைகள், சன்மார்க்கத்தில் நின்று உணரப்பட்ட தெளிவாகும்.

ஆசிரியர், சன்மார்க்கப் பின்னணியில் ஏனைய மார்க்கங்களை விளக்குதலை இதனால் உணரலாம்.

வழிபாட்டுப் பிரிவு

1481. பூசித்தல் வாசித்தல் போற்றல் செவித்திட
லாசற்ற நற்றவம், வாய்மை, அழுக்கின்மை
[1]நேசித்திட் டன்னமு [2]நீசுத்தி செய்குதன்[3]
[4]மாசற்ற சற்புத் திரமார்க்க மாமே. (2)

வேறு பாடம்: 1.நேசத்திட் (ஓ) IV. 2. நீர்சுத்தி (இ ஓ) I. 3. செய்தலு (அ) IV செய்தன்மற் (இ ஓ) III செய்தலுமற் (ஓ) IV. 4. றாசற்றல் (இ ஓ) III நாசற்ற (ஓ) IV.

கருத்து: மந்திரமலர் தூவுதல், தோத்திரம் சொல்லுதல், வழிபடு மூர்த்தியைப் பேணுதல், மந்திரம் செபித்தல், தவம், உண்மை, மாசற்ற குணம் உடைமை, நீ அவனாகி, ஹம்ச மந்திர சுத்தி செய்தல் - இவை சற்புத்திர மார்க்கமாகும்.

கண்டும் பயன் இல்லை

1482. அறுகால் பறவை அலர்தேர்ந்து உழலும்
மறுகால் நரை அன்னம் தாமரை நீலம்;
குறுகால், நறுமலர் கொய்வன கண்டும்
சிறுகால் அரன்நெறி செல்லுகிலாரே.

அறுகாற் பறவை யலர்தேர்ந் துழலும்
[1]மறுகா [2]னரையன்னந் தாமரை நீலங்
[3]குறுகார் நறுமலர் கொய்வன கண்டுஞ்
சிறுகா [4]லரனெறி செல்லுகி லாரே. (3)

வேறு பாடம்: 1. மறுகா (ஐ ஓ) I. 2. னறையன்னந் (சண்) 3. குறுகா (ஓ) I. 4. லறநெறி (சண்).

கருத்து: ஒரு புறம் வண்டு தேன் மலர்களை ஆய்ந்து திரியும். மறுபுறம், வெள்ளை அன்னம் தாமரையைத் தேடும். குவளை முதலிய நன்மலர்களை அடியார் கொய்து மாலை கட்டுவதைக் கண்டும் அந்த மலர்களை அணுகாதவராய் இளமைப் போதிலேயே சிவநெறி சேராமல் இருக்கின்றனர் சிலர்.

உலகத் தலைவன்

1483. அருங்கரை யாவது அவ்வடி நீழல்
பெருங்கரை யாவது பிஞ்ஞகன் ஆணை
வருங்கரை ஏகின்ற மன்னுயிர்க்கு எல்லாம்
ஒருங்கு அரையா, உலகு ஏழின் ஒத்தானே.

அருங்கரை யாவது [1]வவ்வடி நீழல்
பெருங்கரை யாவது பிஞ்ஞக னாணை
வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லா
மொருங்கரை [2]யாவுல கேழினொத் தானே. (4)

வேறு பாடம்: 1. யவ்வடி (ஆ) I தரனடி (த) 2. வாயுல (இ) I.

கருத்து: பிறவிக் கடலின் கரை இறைவன் திருவடியே. அதனை அடைவதற்குரிய நெறி திருவருளாணையின்படி நிற்றல். அவ்வாறு எய்தும் திருவடியை நோக்கிச் செல்கின்ற உயிர்கட்கு ஒரே அரசனாய் இறைவன் விளங்குவான். அது எங்ஙனம் எனில், உலகங்கள் யாவற்றையும் படைத்தல், காத்தல், அழித்தல்கட்கு "உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே". என்றவாறு நிற்றல் போல என்க.

உயிர்கட்குப் பெத்த நிலையிலும், முத்தி நிலையிலும் இறைவனே தலைவனாதலை உணர்த்தினார்.

வழிபாட்டில் அன்பு

1484. [1]உயர்ந்து [2]பணிந்து முகந்து தழுவி
வியந்து மரனடிக் [3]கைமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
[4]பயந்தும் [5]பரிக்கிலர் [6]பான்மைய னாமே? (5)

வேறு பாடம்: 1. உயர்ந்தும் (ஆ) IV. 2. பணிந்தும் (ஆ) IV. 3. கேமுறை (விசு) (தி) (வ) (த) 4. பயந்து (விசு) (தி) (வ) (த) 5. பரிக்கிலப் (ஆ) I பரிகிலர் (இ) I. 6. பானவை (அ) IV பானன்மை (இ) II.

கருத்து: இறையன்பில் மேம்பட்டும், அவன் திருவடியில் வணங்கியும், அவன் உருவத்தைக் கைகளால் அள்ளி அணைத்தும், அவன் அருட்புகழை வியந்தும், அவன் திருவடிக்குக் கிரியை முறையில் வழிபாடு செய்க. அது பல நன்மைகளைத் தருவதோடு பிறவியெடுத்ததன் பயனாகிய முத்தியையும் தரும். அங்ஙனம் இருக்க, இந்த நெறியை மேற்கொள்ளாதவர் பக்கம் இறைவன் நிற்பானோ?

மலர் தூவித் துதிக்க

1485. நின்று தொழுவன், கிடந்து எம் பிரான் தன்னை
என்றும் தொழுவன் எழில் - பரஞ் சோதியை;
துன்று மலர் தூவித் தொழுமின்; தொழுந்தொறும்
சென்று வெளிப்படும் தேவர் பிரானே.

[1]நின்று [2]தொழுவன் [3]கிடந்தெம் பிரான்றன்னை
[4]யென்றுந் [5]தொழுவ [6]னெழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் றொழுந்தொறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. (6)

வேறு பாடம்: 1.நின்றுந் (அ) IV. 2. தொழுவேன் (ஓ) IV. 3. கிடந்தே (ஓ) IV. 4. யென்று (ஆ ஈ) I. 5. தொழுவே (ஓ) IV. 6. னியற்பரஞ் (இ) IV.

கருத்து: எம் இறைவனைக் கையால் தொழுவேன். திருவடியில் விழுந்து வணங்குவேன். என் உயிரில் விளங்கும் எழில் மிக்க பரஞ்சோதியை என்றும் தொழுவேன். நீவிரும் அவனை மலரிட்டு வழிபடுக. வழிபட்டால், அங்ஙனம் தொழுந்தோறும், உங்கள் உயிர்வெளியில் அவன் காட்சி தருவான்.

1486. திருமன்னு சற்புத்திர மார்க்க சரிதை
யுருமன்னி வாழு முலகத்தீர் கேண்மின்
கருமன்று பாசங்கை கூம்பத் தொழுது
இருமன்னு நாடொறு மின்புற் றிருந்தே. (ஆ, ஐ)

75. தாச மார்க்கம்

கோயிற் பணி

1487. எளியன தீபம் இடல், மலர் கொய்தல்
அளியின் மெழுகல், அது தூர்த்தல், வாழ்த்தல்,
பளிபணி பற்றல், பல்மஞ்சனம் ஆதி
தளி தொழில் செய்வதுதான்தாச மார்க்கமே.

எளியன [1]தீப [2]மிடன்மலர் கொய்த
[3]லளியின் மெழுக [4]லதுதூர்த்தல் வாழ்த்தல்
[5]பளிபணி பற்றல்பன் மஞ்சன மாதி
தளிதொழில் செய்வது தான்றாச மார்க்கமே. (1)

வேறு பாடம்: 1. றீபம் (சண்) 2. மிடமலர் (அ ஆ ஒ) I. 3. லளிதன் (அ ஆ ஒ) I. 4. லது தூற்றல் (ஈ) I லது தூர்க்கல் (ஆ இ) III. 5. பளிபனி (இ ஈ ஐ ஒ) I பளிமணி (விசு) (தி) (வ).

கருத்து: விளக்கிடல், பூக்கொய்து மாலை தொடுத்தல், திருக்கோயில் தூய்மை செய்தல், மெழுகுதல், பாடற்பணி ஆற்றல், மற்றும் வீற்றிருக்கைக்குரிய பணிகள் செய்தல், பலவகை மஞ்சனப் பொருள்கள் கொணர்தல் முதலிய திருக்கோயிற் பணிகள் செய்தல் தாசமார்க்கம் ஆகும்.

சந்திரமண்டலத்தின் வழியே

1488. அது, இது ஆதிப்பரம் என்று அகல,
விதுவழி என்று அங்கு இறைஞ்சினர் இல்லை,
விதி வழியே சென்று வேந்தனை நாடும்
அது, விதுநெஞ்சில் தளிர்க்கின்றவாறே.

அதுவிது [1]வாதிப் பரமென் றகல[2]
[3]விதுவழி [4]யென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடு
[5]மதுவிது நெஞ்சிற் [6]றளிர்க்கின்ற வாறே. (2)

வேறு பாடம்: 1. வாகிப் (அ) I. 2. றகல்வ (விசு) (தி) (வ) (த) 3. ரிதுவழி (விசு), (தி) (வ) (த) I. 4. சென்றங் (த) 5. மதுவிதி (ஐ) I. 6. றளிர்கின்ற (உ) I; றளிக்கின்ற (ஈ ஐ ஒ ஓ) I றணிக்கின்ற (சைவ).

கருத்து: உலகிற்கு ஆதியாய் உள்ள பரம்பொருள் அது, இது என்று பலவாறு கூறிச் சமயவாதிகள் நீங்கினர். யோக சாதனையில், சந்திர மண்டலத்தின் வழியே உயிருணர்வைச் செலுத்தி, அவனைச் சோதியாகக் கண்டு வணங்கியவர் இல்லை. விதிப்படி நடந்து அத்தலைவனை அடையும் அந்தச் செயல், சந்திர மண்டலத்தில் பொருந்தும் நெஞ்சத்தில் (உணர்வில்) தளிர்விடும்.

சுழுமுனையில் நிற்பேன்

1489. அந்திப்பன் திங்கள்; அதன் பின்பு ஞாயிறு;
சிந்திப்பன் என்றும் ஒருவன் செறி கழல்;
வந்திப்பர் வானவர் தேவனை நாள்தொறும்;
வந்திப்பது எல்லாம் வகையின் முடிந்ததே.

அந்திப்பன் றிங்க ளதன்பின்பு ஞாயிறு
சிந்திப்ப னென்று மொருவன் செறிகழல்
[1]வந்திப்பர் வானவர் தேவனை நாடொறும்
[2]வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே[3]. (3)

வேறு பாடம்: 1. வந்திப்பன் (இ) I வந்திப்ப (ஓ) I. 2. வந்திப்பவர்கள் (ஐ) II. 3. முடிந்தே (இ ஓ) I.

கருத்து: சந்திரகலையாகிய இடை கலையை முதலிலும், சூரிய கலையாகிய பிங்கலையைப் பிறகும் அடக்குவேன். சுழுமுனையில் நின்று, ஒப்பற்றவனது திருவடிக்காட்சி என்னுள் செறிந்து தோன்றுவதையே தியானிப்பேன். நாள்தோறும் தேவர்கள், தேவ தேவனை வந்தனை செய்வார்கள். ஆனால், அவர்களின் வழிபாடெல்லாம், கிரியையால் செய்யும் வழிபாட்டு வகையே. அவை பயன் தரவில்லை.

கிரியை ஒன்று மட்டும் போதாது என்றார்.

காயமே கோயில்

1490. அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர், உள் மகிழ்ந்து, உள் நின்ற அடி தொழ,
கண் அவன் என்று கருதுமவர்கட்கு,
பண்ணவன் பேரன்பு பற்றி நின்றானே.

அண்ணலை வானவ ராயிரம் பேர்சொல்லி
[1]யுன்னுவ ருண்மகிழ்ந் [2]துண்ணின் றடிதொழக்
கண்ணவ னென்று கருது மவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு [3]பற்றிநின் றானே. (4)

வேறு பாடம்: 1. யுண்ணுவ (ஆ ஓ) I. 2. நுன்றின் (ஓ) I. 3. பற்றநின் (உ ஓ) I.

கருத்து: தேவர்கள் இறைவனை, அவன்றன் ஆயிரம் பெயரும் கூறி வழிபடுதலோடு தியானமும் செய்வர். ஆனால், இறைவனின் திருவடிகள் தம்முள்ளே நிற்கின்றன என்று உள்ளார்ந்த மகிழ்ச்சி கொண்டு, “தமது அறிவு அவன்” என்று கருதுபவர்களுக்கு, அம்மகாதேவன் தானும் பேரன்பு கொண்டு, அவர்களின் உடம்பில் விளங்குகின்றான். அவர்களின் உயிரை, உடம்பை இடமாகக் கொண்டு விளங்குகின்றான்.

பாசிக் குளம்

1491. [1]வாசித்தும் பூசித்து மாமலர் கொய்திட்டும்
பாசிக் [2]குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலை
[3]நேசித் [4]திருத்த நினைவறி யாரே. (5)

வேறு பாடம்: 1. வாசித்துப் (ஆ) I. 2. குளத்தில் வீழ்கின்ற பாறை போன் (ஆ) IV. 3. நேசத்திருத்த (தி) 4. திருந்த (ஆ ஓ) I.

கருத்து: சிவ நூல் ஓதியும், வழிபட்டும், மலர்கொய்தும் வரினும், மனம், கல்விழுந்த பாசிக்குளமாக நிற்கும். (அதாவது, கல் விழுந்த போது பாசி கலையும் குளம் போல், ஞானத்தால் இந்திரிய இச்சை விலகப் பெற்றும், சிறிது நேரத்தில் அவ்விச்சை வயப்பட்டும் நிற்கும்) இவ்வாறு இருப்போர் சோதி வடிவான சிவபெருமானை அன்பினால் மனத்தில் நிறுத்தும் உபாயத்தை அறியார்.

இடையறா அன்பே இன்றியமையாதது என்பது இதனால் அறியப்படும்.

76. சாலோகமாதி

சிவனைப் போல

1492. சாலோகம் ஆதி, சரியாதியின் பெறும்,
சாலோகம் சாமீபம் தங்கும், சரியையாம்
மாலோகம் சேரின் வழியாகும், சாரூபம்
பா லோகம் இல்லாப் பரன்உரு ஆமே.

சாலோக [1]மாதி சரியாதி யிற்பெறுஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையா[2]
[3]மாலோகஞ் [4]சேரின் வழியாகுஞ் சாரூபம்
பாலோக மில்லாப் பரனுரு வாமே. (1)

வேறு பாடம்: 1. மாகிச் (இ) I. 2. சரியையான் (விசு) (வ) கிரியையால் (த) 3. சாலோகஞ் (த) 4. சொல்வழி (அ) I.

கருத்து: சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற முத்திகள் முறையே சரியை முதலிய நெறிகளால் எய்தப்பெறுவன. அவற்றுள் சரியையால் பெறும் சாலோகத்தில் சாமீபம் தங்கும் பெரிய காட்சி கிடைக்குமாயின், அதுவே சாரூபத்திற்கு வழியாகும். அதாவது, பரந்த உலகத் தொடர்பு இல்லாத சிவனுடைய உருவுடன் விளங்கலாம்.

மாலோகம் - பெரிய காட்சி. பா லேகம் - பரந்த உலகம்.

குறிப்பு: இது முதல் 5 பாடல்கள் கொண்ட "சாலோகமாதி" என்னும் இயல் ஆ ஐ - சுவடிகளில் இல்லை.

1493. சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்
சமய மனுமுறை தானே விசேடஞ்
சமயத்து மூலந் தனைத்தேறன் மூன்றாஞ்
சமயாபி டேகஞ் தானாஞ் சமாதியே. (த)

பதமுத்திகளின் தன்மை

1494. பாசம் பசுவான் அது ஆகும் சாலோகம்
பாசம் அருளான் அது ஆகும் சாமீபம்
பாசம் சிவம் ஆனது ஆகும் இச் சாரூபம்
பாசம் கரைபதி சாயுச்சியமே

பாசம் பசுவான தாகுமிச் சாலோகம்
பாச மருளான தாகுமிச் சாமீபம்
பாசஞ் [1]சிவமான தாகுமிச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே. (2)

வேறு பாடம்: 1. சிரமான (சைவ).

கருத்து: ஆன்மா தன் அறிவால், பாசம் வேறு, தான் வேறு என்று உணர்வது சாலோக முத்தியில். இறையருளால், பாசம் அருள் போல ஆதல் சாமீப முத்தியில். ஆணவமலம் சிவனது சன்னிதியில் தன் செயலற்று நிற்றல் சாரூப முத்தியில். அப்பாசம் கரைந்துவிடும் நிலை எய்துவது சாயுச்சிய முத்தியில்.

பாசம் - உலகம். ‘திருவம்பலச் சக்கரம்’ என்ற இயலில் பாசம் (மல சத்தி) சிவமாய் விளங்குவதைக் காட்டினார் (பாட்டெண்: 765, 766)

காயசித்தி

1495. தங்கிய சாரூபம் தான் எட்டாம் யோகம் ஆம்
தங்கும் சன்மார்க்கம் தனில் அன்றிக் கை கூடா;
அங்கத்து உடல் சித்தி சாதனர் ஆகுவர்;
இங்கு இவர் ஆக இழிவு அற்ற யோகரே.

தங்கிய சாரூபந் தானெட்டாம் யோகமாந்
தங்குஞ்சன் மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
வங்கத் [1]துடல்சித்தி சாதன ராகுவ
ரிங்கிவ ராக விழிவற்ற யோகரே[2]. (3)

வேறு பாடம்: 1. துடல்சித்த (இ) IV. 2. யோகமே (அ இ) I.

கருத்து: யோகத்தின் எட்டாம் அங்கமாகிய சமாதி கைவரப் பெற்றவர்க்குச் சாரூப முத்தி எய்தும். இதனை எய்தியவரே சன்மார்க்கம் ஆகிய ஞானம் பெறத் தக்கவர். இவர் அட்டாங்க யோகத்தால் காயசித்தி பெறுவர். இவரே குறைவற்ற யோகியர் ஆவர்.

சார்பின் பெருமை

1496. சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகுஞ் சராசரம் போலப்
பயிலுங் குருவின் பதிபுக்க போதே
கயிலை யிறைவன் கதிர்வடி வாமே. (4)

கருத்து: பொன்மலை சாரும் எவ்வுயிரும், எப்பொருளும் பொன்னிறம் பெறும். அதுபோல, பதிஞானம் பயிலத்தக்க குருவின் இடத்தை அடைந்த போதே, சிவனது ஒளியுருவினை ஒருவன் எய்தலாம்.

முத்தி தரும் சமயம்

1497. சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது,
சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்;
சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்;
சைவம் சிவானந்தம், சாயுச்சியமே.

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் [1]சிவந்தனைச் சாராம னீவுதல்
சைவஞ் [2]சிவானந்தஞ் [3]சாயுச் சியமே. (5)

வேறு பாடம்: 1.சிவமன்றிச் (த) 2. சிவானந்த மாகுஞ் சாயுச்சமே (ஈ) IV. 3. சாயுச்சிய மாமே (அ) II.

கருத்து: சைவமாவது சிவனுடன் நேர்த் தொடர்பு கொள்ளுதல், உயிர் தன்னை அறிந்து, சிவத்தைச் சாருதல், தற்போதத்தை விட்டுச் சிவத்தைச் சார்ந்திருக்கிறோம் என்னும் உணர்வும் இன்றி இருத்தல், சிவானந்தம் அனுபவித்தல் ஆகிய சாயுச்சிய முத்தியைப் பெறுதல் என்பவை ஆகும்.

மாறாப் பேரின்பம்

1498. சாயுச்சியம் சாக்கிர - அதீதம் சாருதல்,
சாயுச்சியம் உபசாந்தத்துத் தங்குதல்
சாயுச்சியம் சிவம் ஆதல், முடிவு இலாச்
சாயுச்சியம் மனத்து ஆனந்த சத்தியே.

சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே. (6)

கருத்து: சாயுச்சியம் என்னும் பரமுத்தி யாது எனின், ஆன்மாவின் உணர்வு, கேவல, சகல, சுத்த வரிசைகளில் உள்ள 15 உணர்வு நிலைகளையும் கடந்து, பரசாக்கிரத்தை எட்டி, அதையும் தாண்டி, மேலே யுள்ள உணர்வு நிலைகளை எய்துதலாகும். அதன்பின் மேல் நிலை உணர்வுகளுள், பரதுரியம் என்ற நிலையை எய்தி, உணர்வு போக்கு வரவு அற்று (சலனமற்று) இருத்தலாகிய 'உபசாந்தம்' என்ற நிலையை எட்டி, அங்கேயே தங்குதல் ஆகும். இது மட்டுமன்று. இதன்பின் 'உபசாந்தத்தையும்' கடந்து, சிவநிலை அவத்தைகளை அடைந்து, அவற்றுள் 'சிவதுரியாதீதத்தை' எய்திச் 'சிவமே யாதல்' சாயுச்சியமாகும். என்றும் நீங்காத வீடுபேறு என்பது இதுவே. இப்போது ஆன்மா சிவானந்தத்தை நுகர்ந்து இன்புறும்.

77. சத்திநிபாதம்

மந்தமாதி

கட்டாயக் கல்யாணம்

1499. இருட்டறை மூலை யிருந்த குமரி[1]
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை [2]மணம்புணர்ந் தாளே. (1)

வேறு பாடம்: 1. கிழவி (த) 2. மணம் புரிந் (விசு).

கருத்து: உயிர் உடம்பில் வாழும்போது, அருட்சத்தி திரோதான சத்தியாக உடனுறைகின்றாள். மலங்களின் பக்கம் நின்று, அவற்றின் வழியாக உயிர்களைப் பிறவித் துன்பத்தில் ஆழ்த்துவாள். அவளை யோகநூலில் குண்டலி சத்தி என்பர். ஆணவமலம் உண்டாக்கும் மறைப்பாகிய இருளில் ஆன்மா இருக்கும்போது, அவனது உடம்பில், மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும் நாடிகளில் குண்டலியாக உள்ள அருட்சத்தி, தனது இயற்கையான நிலையில், அறியாமையுடைய அவனது அறிவைச் சேர்ந்து நிற்கக் கருதி அறியாமையை நீக்கி, நல்லுணர்வு உண்டாக்கி, அவனது உலகியல் உணர்வில் அதிர்ச்சியை உண்டாக்கி, அவனது உயிருணர்வில் பதிந்து நிற்பாள்.

குறிப்பு: மந்தம் முதலிய பகுதிப் பெயர் இடுதலில் சுவடிகள் தம்முள் வேறுபடுகின்றன. ஒ - சுவடியில் பொதுவாக 'மந்தமாதி' எனக் காணும் பெயரே இப்பதிப்பில் மேற்கொள்ளப்படுகின்றது.

உடம்பில் ஊறும் அமுதம்

1500. தீம்புனல் ஆன திசை - அது சிந்திக்கில்,
ஆம்புனலாய் அறிவார்க்கு அமுதாய் நிற்கும்,
தேம்புனலான தெளிவு அறிவார்கட்குக்
கோம்புனல் ஆடிய கொல்லையும் ஆமே.

[1]தீம்புன லான [2]திசையது சிந்திக்கி
[3]லாம்புன லாயறி வார்க்கமு தாய்நிற்குந்
[4]தேம்புன லான [5]தெளிவறி வார்கட்குக்
[6]கோம்புன லாடிய கொல்லையு மாமே. (2)

வேறு பாடம்: 1. தீம்புல னான (ஓ) II. 2. திகையது (ஆ) III. 3. லாம்புலனாயறி (ஓ) II. 4. தேம்புலனான (ஓ) I. 5. தெளியறி (அ) III. 6. கோம்புலனாடிய (ஓ) I.

கருத்து: யோசிக்குச் சத்திநிபாதம் வாய்க்கும் அனுபவத்தைக் கூறுகிறார். யோகிக்குச் சத்திநிபாதம் இனிய நீர் சொரிதல் போல், உடம்பில் கிடைக்கும். அவ்விடம் யாது எனச் சிந்தித்தால், அஃது வயலுக்கு ஆக்கம் விளைவிக்கும் தண்ணீர்போல, உயிருணர்வால் உணர்வார்க்கு, உடம்பின் கண் ஊறும் அமுதாய் விளங்கும். தெய்வ நீரோடு ஒத்த பதிஞானத்தை உணர்பவர்க்கு, அவ்வருள் - அமுது ஊறும் இடம், பசுக்கள் நீராடி இன்புறும் காடு போன்றது.

கோ, புனல் - கோப்புனல் என்பது மெலித்தல் விகாரமாய்க் கோம்புனல் ஆகிறது. இவ்விடம் தலை ஆகும். ஆன்மா - பசு. அஃது ஆணவ மலம் நீங்கப் பெற்று, அருள் - அனுபவம் பெறுதலின், பசு நீராடித் தூய்மை பெறுதலை உவமித்தார்.

சத்தியின் கருணை

1501. இருள் நீக்கி, எண்ணில் பிறவி கடத்தி
அருள் நீங்கா வண்ணமே ஆதி அருளும்,
மருள் நீங்கா, வானவர் கோனொடும் கூடிப்
பொருள் நீங்கா இன்பம் புலம் பயில் தானே.

இருணீக்கி யெண்ணில் பிறவி கடத்தி
யருணீங்கா வண்ணமே யாதி யருளும்
மருணீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருணீங்கா [1]வின்பம் புலம்பயி றானே. (3)

வேறு பாடம்: 1. வென்று (ஒ) IV; வின்பப் (தி)

கருத்து: ஆதியாகிய அருட்சத்தி ஆன்மாவிற்கு அறியாமையை நீக்கி, எண்ணற்ற பிறவிச் சூழலினின்றும் விடுவித்து, அருள் அனுபவத்தால் பெற்ற ஞானம், பதியைக் காட்டுமளவும் தனது கருணையைப் பொழிவாள். அதனால் ஆன்மா, தனது மயக்கம் நீங்கி, சிவபெருமானோடு கூடி, உண்மை ஆனந்தத்தை நுகரும் இடம், உடம்பில் தலைப்பகுதியாகும்.

'பயில் புலம் தானே' என மாறுக.

அருள் விளக்கு

1502. இருள்சூழ் அறையில் இருந்தது நாடின்,
பொருள் சூழ் விளக்கு-அது புக்கு எரிந்தாற்போல்
மருள் சூழ் மயக்கத்து, மாமலர் நந்தி
அருள் சூழ் இறைவனும் அம்மையும் ஆமே.

இருள்சூ ழறையி லிருந்தது நாடிற்
பொருள்சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போன்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
'யருள்சூ ழிறைவனு மம்மையு மாமே. (4)

வேறு பாடம்: யிருள்சூ (ஒ) I.

கருத்து: இருண்ட அறையில் உள்ள பொருளைத் தேடுங்கால், பொருள்களிற்பட்டு அவற்றைப் புலப்படுத்தும் விளக்கு ஏற்றப்படுவதே போல், அறியாமை இருளில் ஆழ்ந்த ஆன்மா தனது இதயத்தாமரையில் இருக்கும் சிவத்தை ஆராயுங்கால், அருட்சத்தி அவனறிவிற் பதிந்து விளக்குவாள்.

1503. மருட்டிப் புணர்ந்து மயக்கமு நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
யருட்டிகழ் ஞான மதுபுரிந் தாளே. (அ)

பிறவி நீங்க

1504. கன்னித் துறைபடிந் தாடிய வாடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. (5)

கருத்து: பெண்டிரோடு கூடிச் சிற்றின்பத் துறையில் இன்பம் நுகரும் ஆடவர், சத்தியின் அருள் பெற்று நுகரும் எண்ணம் கொண்டிலர். அக்கருத்துக் கொள்வாராயின், அவர்க்குப் பிறவி அறும்.

ஆதாரங்களில் தெய்வங்கள்

1505. செய்யன், கரியன், வெளியன், நற்பச்சை என்று,
எய்த உணர்ந்தவர் எய்வர் இறைவனை
மை வென்று அகன்ற பகடு, உரி போர்த்த வெங்
கையன் இவன் என்று காதல் செய்யீரே.

[1]செய்யன் கரியன் [2]வெளியனற் பச்சையென்
[3]றெய்த வுணர்ந்தவ [4]ரெய்வ ரிறைவனை
[5]மைவென் றகன்ற [6]பகடுரி போர்த்தவெங்
கைய னிவனென்று காதல்செய் யீரே[7]. (6)

வேறு பாடம்: 1. செய்ய கரிய (ஓ) I. 2. வெளியன் பசியனென் (அ) III. பச்சைய (இ) I. 3. னெய்த (இ) I. 4. ரெய்துமிறைவனை (இ) II ரெய்யல (தி) 5. மையன் கண்ணற (இ) I ஐயனற்கண்ணல் (த) 6. லடுகரி (த) 7. வீரே. (இ ஓ) III.

கருத்து: அருட்சத்தியின் பதிவால் யோகி, தன் ஆதாரங்களில் இறைக்காட்சி பெறுதலைக் கூறுகின்றார். சுவாதிட்டானத்தில் விளங்கும் பிரமன், மணிபூரகத்தில் விளங்கும் திருமால், மூலாதாரத்தில் விளங்கும் உருத்திரன், விசுத்தியிலிருக்கும் மகேசுவரன் ஆகியோரைத் 'தரிசித்தவர்' இறைவனை அறிவர். 'இவன் இருளை விட மிகுதியான கரு நிறம் உடைய யானையின் தோலைப் போர்த்திக் கொண்டவன்; அக்கினி கலையில் விளங்குபவன்' என்று அன்பு செய்க.

மாதொருபாகன்

1506. எய்திய காலங்கள் எத்தனை ஆயினும்
தையலும் தானும் தனி நாயகம் என்பர்,
வைகலும் தன்னை வணங்குமவர்கட்குக்
கையிற் கருமம் செய் கோட்டது ஆமே.

எய்திய காலங்க ளெத்தனை யாயினுந்
தையலுந் தானுந் தனிநா யகமென்பர்[1]
வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்[2]
கையிற் கருமஞ்செய் [3]கோட்டது வாமே. (7)

வேறு பாடம்: 1. யகனென்பர் (ஓ) IV. 2. மவர்க்குக் (ஓ) II. 3. கோடது (ஆ ஈ) I காட்டது (ஓ) I.

கருத்து: காலங்கள் எத்தனை கழிந்தாலும், அத்துணையிலும் மாதுடன் கூடிய சிவனே தனிப்பெருந் தலைவன் என்பர் அறிந்தோர். அவன் நாள்தோறுத் தன்னை வணங்கும் யோகியர்க்கு, அவர் சுழுமுனை நாடியிடத்துச் செய்யும் கருமமாகிய யோகத்தின் பயனாக, அவர்தம் உச்சந்தலையில் மாதும் தானுமாகக் காட்சியருளுவான்.

மாதும் தானும் என்றது, அவள் அருள் ஆன்ம அறிவிற் பதிந்தாலன்றி சிவனைத் தரிசித்தல் இயலாது ஆகலின். கோடு - மலை; உச்சந்தலைக்கு யோகநூற் குறியீடு. கை - சுழுமுனைநாடி. இதனை ஆசிரியர் முன்னும் 'துதிக்கை' என்றார். அண்ட நாயகன் பிண்டத்துள்ளும் விளங்குவான் என்றார். பிறர், "காட்டது வாமே" எனப் பாடம் கொண்டு இடர்ப்பட்டனர்.

இருள் அகற்றினான்

1507. கண்டுகொண்டோம் இரண்டும் தொடர்ந்து ஆங்கு ஒளி
பண்டு பண்டு ஓயும் பரமன்; பரஞ்சுடர்
வண்டு கொண்டாடும் மலர் வார்சடை அண்ணல்
நின்று கண்டார்க்கு இருள் நீக்கி நின்றானே.

கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி
[1]பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்
வண்டுகொண் [2]டாடு [3]மலர்வார் சடையண்ணல்
[4]நின்றுகண் [5]டார்க்கிரு [6]ணீக்கிநின் றானே. (8)

வேறு பாடம்: 1. பண்டுகண் (ஆ இ) II. 2. டோடு (அ ஒ) II. 3. வளர்சடையண்ணலைக் (ஆ இ) IV. 4. கண்டுகொண் (ஆ இ) IV. 5. டோற்கிரு (இ) IV டேயிரு (ஆ) II. 6. ணீங்கிநின் (ஆ இ) II.

கருத்து: உடம்பில் உள்ள சூரிய, சந்திர ஒளியைத் தொடர்ந்து சென்று, பேரொளியாக விளங்கும் சிவனைக் கண்டுகொண்டோம். பல காலங்களும் பல அண்டங்களும் பொருள்களும் ஒடுங்குதற்கு இடமாயுள்ள பரமனும், பரஞ்சுடரும், வண்டு ரீங்காரமிடும் சகஸ்ராரத்தாமரையில் வீற்றிருப்பவனும், நீண்ட சடை முடியுடையவனுமாகிய அத்தலைவன், அவ்விடத்தே நிலை பெற்றுக் கண்ட யோகியர்க்கு, ஆணவமலவிருளை நீக்கி, பேரின்பம் நல்கி நின்றான்.

தோட்டத்தில் தொங்கும் பழம்

1508. அண்ணிக்கும் பெண்பிள்ளை, அப்பனார் தோட்டத்தில்
எண் நிற்கும் ஏழ்-ஏழ் பிறவி உணர்விக்கும்
உள் நிற்பது எல்லாம் ஒழிய, முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனி - அது ஆமே.

[1]அண்ணிக்கும் பெண்பிள்ளை யப்பனார் தோட்டத்தி[2]
[3]லெண்ணிற்கு மேழேழ் பிறவி யுணர்விக்கு[4]
முண்ணிற்ப [5]தெல்லா [6]மொழிய முதல்வனைக்
[7]கண்ணுற்று [8]நின்ற [9]கனியது வாமே. (9)

வேறு பாடம்: 1. அண்ணிற்கும் (ஆ) I. 2. கொட்டத்தி (த) 3. லெண்ணிக்கு (அ இ ஆ ஒ ஓ) I. 4. புணவிக்கு (ஈ) I. 5. வெல்லா (த) 6. மொழிவ (இ) I. 7. கண்ணுற்ற (ஓ) I. 8. நின்றக் (தி) 9. களியது (அ) I; கதியது (ஒ) I.

கருத்து: தன் அருளால் அன்பர்க்கு இனிக்கின்ற அனுபவமாக விளங்கும் சத்தி, சிவனார் படைத்த இவ்வுலகில், அளவில்லாமல் பிறவி எடுக்கும் ஆன்மாவை, பதிஞானம் பெறச் செய்வாள். அந்நிலையில், அதுவரை ஆன்மாவைச் சேர்ந்திருந்த மலம், மாயை, கன்மம் என்பவை நீங்க, ஆன்மா சிவத்தைத் தரிசித்துப் பெறும் சிவானந்தத்திற்கும் ஏது ஆவாள்.

தோட்டத்தில் கனி ஆவாள் என்ற நயம் காண்க.

வினைமுடிவு: பெண்பிள்ளை உணர்விக்கும்; கனியதுவாம் என்க.

1509. பிறப்பை யறுக்கும் பெருந்தவ நல்கு
மறப்பை யறுக்கும் வழிபட வைக்கும்
குறப்பெண் குவிமுலைக் கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றாளே. (க, ண)

நீலநிற ஜோதி

1510. தாங்குமி னெட்டுத் திசைக்குஞ் தலைமகள்[1]
பூங்கமழ் [2]பொய்கைப் புரிகுழ லாளொடு
மாங்கது சேரு மறிவுடை யார்கட்குத்[3]
தூங்கொளி நீலந் தொடர்தலு மாமே. (10)

வேறு பாடம்: 1. தலைமகன் (விசு) (தி) (வ) (த) 2. கோதை (ஓ) IV. 3. யாளர்க்குத் (இ) IV.

கருத்து: அண்டத்திற்கெல்லாம் தலைவியும், பிண்டத்தில் (உடம்பில்) உச்சந்தலையில் உள்ள, சகஸ்ராரத் தா்மரை மலர் மணம் வீசும் பொய்கையில் வீற்றிருப்பவளும் ஆகிய அருட்சத்தியோடு, அந்த இடத்தில் பொருந்துகின்ற உயிருணர்வு உடையவர்களுக்கு, அவள் நீலச் சோதியாகத் தொடர்ந்து காட்சி நல்குவாள். அவளைத் தியானத்தில் நிறுத்துக.

அது என்னும் சுட்டு, பொய்கையைக் குறித்தது.

எவ்வழிபாட்டிலும் அருள்பவள் அவளே

1511. நணுகினும், ஞானக்கொழுந்து, ஒன்று நல்கும்
பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவன்
அணுகியது ஒன்று அறியாத ஒருவன்
அணுகும் உலகெங்கும் ஆவியும் ஆமே.

நணுகினு ஞானக் கொழுந்தொன்று நல்கும்
[1]பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவ[2]
[3]னணுகிய [4]தொன்றறி யாத வொருவ
[5]னணுகு முலகெங்கு மாவியு மாமே. (11)

வேறுபாடம்: 1. பணியினும் (ஆ) IV. 2. பணிகுவ (விசு) 3. நணுகிய (ஆ) IV. 4. வொன்றறி (இ) IV. 5. நணுகு (ஓ) IV.

கருத்து: ஆவியும் ஞானக் கொழுந்தும் இறைவன். அவனை யான் பணிவன் என்பது திரண்ட கருத்து.

பதமுத்தி பெற்று இறைவனை நெருங்கினும் ஆன்மா, அவனை முழுதும் அறியமாட்டாது. இறைவன் தான் 'ஒன்றாய்' - இருக்கும் உலகத்து உயிர்களுக்கு எல்லாம், 'உடனாயும்' இருப்பவன் ஆதலின், அவனைச் சத்தியின் மூலம் நெருங்கினால், அந்த ஞானக் கொழுந்தாகிய சிவம், அவனுடன் ஒன்றி நிற்றலை அருள்வான். அதுவன்றி, அவனைக் கிரியை வழியில் பணிவதாயினும், என் முன்னே உருவமாக (வழிபடு மூர்த்தியாக) உள்ள அவனை, மலர் பலவும் தூவிப் போற்றி சொல்லி வணங்குவேன்.

ஒன்றுதல் என்பது ஒன்று என முதனிலை யளவாக நின்றது. யோகத்திலும், கிரியையிலும் சத்திநிபாதம் உதவுதலைக் கூறினார்.

என் செயல் எது?

1512. இருவினை நேர்ஒப்பில் இன்னருட்சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும் எனும் ஞானத்தால் தன்செயல் அற்றால்
திரிமலம் தீந்து, சிவன் - அவன் ஆமே.

இருவினை நேரொப்பி [1]லின்னருட் சத்தி
குருவென வந்து [2]குணம்பல நீக்கித்
[3]தருமெனு ஞானத்தாற் றன்செய லற்றாற்
றிரிமலந் [4]தீந்து சிவனவ னாமே. (12)

வேறு பாடம்: 1. னின்னருட் (ஆ) III. 2. குணமல (ஈ ஓ) I. 3. தருவெனு (ஆ) I. 4. தீர்ந்து (ஆ ஓ) III.

கருத்து: இரு வினைப் பயன்களையும் (இன்ப துன்பங்கள்) ஒப்ப நோக்கும் மனநிலை வந்துற்ற போது, சிவம் சத்தியும் தானுமாகக் குருவாய் வந்து, ஆன்மா பாசஞானத்தால் பெற்றிருந்த பல குணங்களையும் நீக்கிப் பதிஞானம் நல்கும். ஆன்மா தன் செயல் என ஒன்றுமில்லை என உணர்ந்தால், அதனுடைய மும்மலங்களும் தீய, அது சிவமாகும்.

சிவத்தைக் காட்டுவாள்

1513. இரவும் பகலும் இறந்த இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை உன்னி,
அரவம் செய்யாமல் அவளுடன் சேர,
பரிவு ஒன்றில் ஆளும் பராபரை தானே.

இரவும் பகலு [1]மிறந்த விடத்தே
[2]குரவஞ்செய் கின்ற குழலியை யுன்னி
யரவஞ்செய் யாம லவளுடன் சேரப்
பரிவொன்றி [3]லாளும் பராபரை தானே. (13)

வேறு பாடம்: 1. மிலாத (ஓ) III. 2. குரவன்செய் (ஆ இ) I. 3. யாகும் (து) வாழும் (தி).

கருத்து: பகல் என்று காட்டுவதாகிய நனவு, இரவு நேரத்தில் வந்தெய்தும் துயில், கனவு - என்னும் உணர்வு நிலைகள் அன்றி, அவற்றைக் கடந்த - மாறாது விழித்தல் (துரியம்) எனக்கூறப் படுகின்ற - உணர்வு நிலையில், (அதாவது, உயிர் தன் கருவிகள் ஆகிய அந்தக்கரணங்களைக் கொண்டு உணரும் நிலையை விடுத்துத் தானே உணரும் நிலையில்) குரா மலர் சூடிய கூந்தலை உடைய பராசத்தியைத் தியானத்தில் வைத்து. 'நான் உயிர், நான் இறைவனின் வேறாக, தனித்து நிற்கும் பொருள்' என்று நம்மிடம் ஆழப் படிந்து நிற்பதாகிய 'தற்போதம்' என்ற படிவை (Impression) அவளால் நீக்கிடப் பெற்று, அவளுடன் ஒன்றி நின்றால், 'சிவத்தை' நமக்குக் காட்டுதலாகிய பரிவினை மேற்கொண்டு எம்மை ஆளும் பராபரையாக விளங்குவாள்.

பரிவு ஒன்று - அத்தகைய பரிவினை அவள் மட்டுமே உடைய வளாதலின் ஒப்பற்ற பரிவு என்பார், 'பரிவு ஒன்று' என்றார். அவள் நம்மை ஆட்கொள்ளுவது, 'சிவத்தை' க் காட்டியே என்பார், 'பரிவு ஒன்றில் ஆளும்' என்றார். இல் - உருபு ஏதுப் பொருளில் (5ஆம் வேற்றுமை) வந்தது.

உடானாய் நின்றான்

1514. மாலை விளக்கும், மதியமும், ஞாயிறும்
சால விளக்கும் தனிச்சுடர் அண்ணலும்
ஞானம் விளக்கிய நாதன் என்னுள் புகுந்து
ஊனை விளக்கி, உடன் இருந்தானே.

மாலை விளக்கு மதியமு ஞாயிறுஞ்
சால விளக்குந் தனிச்சுட ரண்ணலும்[1]
ஞானம் [2]விளக்கிய நாதனென் னுட்புகுந்
தூனை விளக்கி [3]யுடனிருந் தானே[4]. (14)

வேறு பாடம்: 1. ரண்ணலுள் (ஓ) IV. 2. விளக்கியல் (அ ஓ) I. 3. யுடந் திருந் (ஓ) I. 4. தாளே (ஈ) I.

கருத்து: அவ்வாறு பராசத்தி அருள்புரிந்தவுடன், வரிசையாக விளங்கும் நட்சத்திரங்களையும் சந்திரனையும், சூரியனையும், அவற்றுடன் 'ஒன்றாய்' இருந்து ஒளிவீசச் செய்பவன் ஆகிய சிவனும், பதிஞானத்தை எனக்குப் புகட்டுதற்காக, என்னுள் கலந்து, எனது உடம்பை ஒளிபெறச் செய்து, எனக்கு 'உடனாய்' இருந்து, சிவானுபவத்தில் செலுத்தினான்.

இங்கு, உயிருள் உயிராய் இருந்து சிவானுபவத்தை ஊட்டியவனும், சிவானுபவமாகவே எனது உடம்பினுள் பேரொளியாய் விளங்கிய வனும், அந்த அனுபவத்தின் பயனான பதிஞானமாக விளங்கியவனும், ஆன்மாவுக்கும் அவனுக்கும் வேறுபாடு இன்மையால், இவற்றை உணர்பவனும் நாதனே என்க. இதனையே காரைக்கால் அம்மை, "அறிவானும் தானே, அறிவிப்பான் தானே, அறிவாய் அறிகின்றான் தானே, அறிகின்ற மெய்ப்பொருளும் தானே" என்றார். (அற்புத. 20) மணிவாசகர், "ஊனாய் உயிராய், உணர்வாய் என் உட்கலந்து, தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய், வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும் .... சேவகனார்". என்றார் (திருவா. திருவம்மானை, 16).

நட்சத்திரங்களும், சந்திரனும், சூரியனும் உடம்பிலும் உள்ளமையை முன்பும் கூறினார். அவை யோக சாதனையில், இறைவனால் ஒளி பெறுதலை அங்குக் (ஏரொளிச் சக்கரம்) கூறினார். மாலை நேரத்தை விளக்கம் செய்யும் மதியையும் நட்சத்திரங்களையும், இறைவன்தான் விளக்கம் செய்கின்றான் என்க. அவன், தம் உடலை ஒளிபெறச் செய்து, உயிரையும் ஞானத்தால் ஒளிபெறச் செய்தான் என்றார்.

78. புறச்சமய தூடணம்

சமயங்களின் குறைபாடு

1515. ஆயத்துள் நின்ற அறு சமயங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா,
மாயக் குழியில் விழுவர், மனை, மக்கட்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே.

ஆயத்து [1]ணின்ற வறுசம யங்களுங்
[2]காயத்து [3]ணின்ற கடவுளைக் காண்கிலா[4]
மாயக் குழியில் [5]விழுவர் மனைமக்கட்
[6]பாசத்தி லுற்றுப் பதைக்கின்ற வாறே. (1)

வேறு பாடம்: 1. நின்ற (ஆ ஓ) III. 2. காயத்தில் (ஆ) IV. 3. நின்ற (ஓ) III காண்கிலார் (ஈ) II காண்கில் (த) 5. விழுவ (த) 6. பாயத்தி (ஈ) I.

கருத்து: தொகுதியாக எண்ணப்படும் ஆறு சமயங்களும் உடம்பினுள் உறையும் உத்தமனைக் காண நெறி கூறாதவை. அவற்றைப் பின்பற்றுவோர், மாயையின் காரியமான பிறப்பு என்ற குழியில் விழுவர். ஆணவமலத்தின் பிடியில் தொடர்ந்து கிடந்து அல்லல் உறுவர்.

குறிப்பு: ஈ ஒ - சுவடிகளில், இவ்வியல் 'சத்திநிபாதத்தை' அடுத்து உள்ளது. அ ஆ ஒ - சுவடிகளில் 'கடுஞ்சுத்த சைவம்' என்னும் இயலினை அடுத்து உள்ளது. இப்பாடல் 'ஓ' - சுவடியில் இல்லை).

அவர் அறியாதவை

1516. உள்ளத்து உளே தான் உகந்து, எங்கும் நின்றவன்,
வள்ளல் - தலைவன், மலர்உறை மாதவன்,
பொள்ளல் குரம்பைப் புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்து அறியார்களே.

உள்ளத்து [1]ளேதா [2]னுகந்தெங்கு நின்றவன்
வள்ளற் றலைவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே. (2)

வேறு பாடம்: 1. ளேதான் (ஈ ஓ) III ளேகரந் (ஆ) II. 2. கரந்தெங்கு (ஓ) III கலந்தெங்கு (ஈ) I; தெங்குமாய் (ஆ) IV.

கருத்து: அப்புறச்சமயிகள், இறைவன் மாந்தரின் உயிருக்கு உயிராயும், எங்கும் வியாபகமாகவும் விரும்பி நிற்பதனையும், அவன் அன்பருக்குப் பேரருள் வழங்கும் வள்ளலாக, அவர்தம் தலைவனாக, அவரது உடலினுள்ளும் புகுந்து சகஸ்ராரத் தாமரை யில், பேரொளியாய்த் தரிசனப்படுவதையும், அவரது உள்ளம் கவர் கள்வனாக விளங்குவதையும் அவனது திருவுள்ளக் கருத்தையும் அறியார்.

நம்பிக்கை

1517. உள்ளத்து முள்ளன் புறத்துள னென்பவர்க்
குள்ளத்து முள்ளன் புறத்துள னெம்மிறை
யுள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க்
குள்ளத்து மில்லைப் புறத்தில்லை தானே (3)

வேறு பாடம்: 1. புறத்துள்ள (சண்)

கருத்து : வெளிப்படை

உண்மை கூறும் சமயம்

1518. ஆறு சமயமுங் கண்டவர் கண்டில
ராறு சமயப் பொருளும் பயனில்லை[1]
தேறுமின் றேறித் தெளிமின் றெளிந்தபின்
மாறுத லின்றி மனைபுக லாமே. (4)

வேறு பாடம்: 1. அவனலன் (விசு) (தி) (த) (வ).

கருத்து: ஆறு சமயங்களையும் தோற்றுவித்தோர் உண்மை கண்டிலர் ஆதலின் அச்சமயங்களில் உரைக்கப்படும் செய்திகளின் கண் பயன் ஏதுமில்லை. இதனைத் தெளிக. சைவத்தைத் தெளிக. நிட்டை. கூடுவதால் அங்ஙனம் தெளிந்தால், மாறுபட்ட ஞானத்தை அடைந்து மயங்காமல், உண்மை ஞானம் எய்திப், பேரின்ப வீட்டை அடையலாம்.

சிவமேயாகச் செய்யும் தவம்

1519. சிவம் அல்லது இல்லை, அறையோ, சிவமாம்
தவம் அல்லது இல்லை, தலைப்படுவோர்க்கு இங்கு,
அவம் அல்லது இல்லை அறுசமயங்கள்,
தவம் அல்ல, நந்திதாள் சார்ந்து உய்மின் நீரே.

சிவமல்ல தில்லை [1]யறையோ சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வோர்க்கிங்[2]
கவமல்ல தில்லை யறுசம யங்கள்
[3]தவமல்ல நந்திதாள் [4]சார்ந்துய்மி னீரே. (5)

வேறு பாடம்: 1. யறையே (விசு) (சைவ) 2. வோர்க்குங் (ஈ) I. 3. தவம் வல்ல (விசு) (சண்) (தி) (வ) 4. சார்ந்துய்யு (துடி).

கருத்து: மெய்யை அறியத் தொடங்குவோர்க்கு, அதனை உணர்த்த வல்ல இறைவன் சிவன் அல்லது வேறு யாருமிலர். அவ்வுண்மையை அடையும் நெறி, சிவமேயாக நிறைவுறச் செய்யும் தவம் அல்லது வேறில்லை. ஆறு வகைச் சமயங்களும் வீண். அவை தவம் அல்ல. ஆதலின், நந்தியின் திருவடிகளைச் சார்ந்து உய்க.

தவம் - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை.

பதவியில் விருப்பம்

1520. அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவராக மிகவும் விரும்பி, ஏம்
உள்நின்று அழிய முயன்றிலர் ஆதலால்,
மண் நின்று ஒழியும் வகை அறியார்களே.

அண்ணலை நாடிய வாறு சமயமும்[1]
விண்ணவ ராக மிகவும் விரும்பியே
முண்ணின் [2]றழிய [3]முயன்றில ராதலான்
மண்ணின் றொழியும் வகையறி யார்களே[4]. (6)

வேறு பாடம்: 1. சமயரும் (த) 2. றழியு (ஆ இ ஈ ஒ) I. 3. முயற்றில ராதலின் (த) 4. வார்களே (ஆ) I.

கருத்து: சிவபெருமானை வணங்கிய அகச் சமயம் ஆறும் விண்ணுலகப் பதவியையே மிகவும் விரும்பி, மயக்கமாகிய ஆணவ

மலம் உயிரை விட்டு நீங்குதற்காக முயலவில்லை. ஆதலின், பிரகிருதியினின்றும் நீங்கும் வகை அறியாராயினர்.

அகச்சமயம் 6: திருமூலர் காலத்தில் (1) பாசுபதம் (2) மாவிரதம் (3) பைரவம் (4) சாக்தம் (5) வாமம் (6) காளாமுகம். ஏம் - மயக்கம்.

பிறவாப் பேறு

1521. சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்[1]
[2]பவகதி பாசப் பிறவியொன்றுண்டு
தவகதி தன்னொடு [3]நேரொன்று தோன்றி
லவகதி [4]மூவரு மவ்வகை யாமே. (7)

வேறு பாடம்: 1. தெல்லாம் (அ ஆ இ ஈ ஓ) I. 2. பவபதி (ஆ) I. 3. தேரொன்று (ஓ) I. 4. மூவிரு (ஓ) I.

கருத்து: சிவனை அடைதலாகிய கதியே முத்திப் பேறு; மற்றை அடைவுகள் யாவும் மீண்டும் பிறத்தலாகிய கதிக்கே சேர்க்கும். அப்பிறவிகளில் ஆணவம் உயிரைவிட்டு நீங்காமல் நிற்கும். வீணான அக்கதிகளின் தெய்வங்களாக உள்ள அயன், அரி, உருத்திரன் என்பாரின் நெறிகளும், தவத்தைச் செய்தலாகிய நெறியில் ஒருவன் நின்றால், தவகதியே ஆகும். அதாவது அந்நெறிகளிலும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை மேற்கொள்ளப்பட்டால் அவையும் தவநெறியாகும்.

ஒன்று - ஒன்றுதல்.

பரநெறியே இலக்காக வேண்டும்

1522. நூறு சமயம் உளவாம்; நுவலுங்கால்
ஆறு சமயம், அவ் ஆறுள் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
வீறு, பரநெறி; இல் ஆம் நெறி அன்றே.

நூறு சமய [1]முளவா நுவலுங்கா
லாறு [2]சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கொண்ட நெறிநில்லா
[3]வீறு பரநெறி யில்லா நெறியன்றே[4]. (8)

வேறு பாடம்: 1. முளவால் (இ ஈ) III. 2. சமயமுமவ்வாறுட் (அ இ ஓ) II. 3. ரீறு (அ ஆ ஓ) II நீறு (இ ஈ) IV. 4. நெறியென்றே (ஓ) I நெறியின்றே (ஆ) I நெறிநின்றே (ஈ) I.

கருத்து: உலகில் நூற்றுக் கணக்கான சமயங்கள் உள்ளன. அவை ஆறு சமயங்களில் அடங்கும். அவ்வாறு, ஆறனுள் உள்ள சமயங்கள் கொண்ட நெறிகளைக் கடந்த முடிவு, பரநெறி ஆகும். அதுவே வீடுபேறாம் நெறியாகும்.

இல் - வீடு; முத்தி. பரநெறியே முடிவு ஆதலின், அதுவே வீடுபேறாகிய நெறி என்றார்.

அறியாமையின் உச்சம்

1523. [1]கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்
[2]சுத்த சிவனெங்குந் [3]தோய்வுற்று நிற்கின்றான்
[4]குத்தந் [5]தெரியார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே. (9)

வேறு பாடம்: 1. கற்றுங் (அ ஓ) I. 2. சுத்தச் (ஆ ஈ உ ஓ) I. 3. தோய்வற்று (த) 4. குற்றந் (அ ஆ ஓ) 5. தெளியாதார் (வ).

கருத்து: சுத்த சிவன் (பரசிவன்) தனது சொரூப நிலையில் இருந்தவாறே, எல்லாப் பொருளிலும் 'ஒன்றாய்' நிற்கின்றான். இதை அறியாது. கத்தும் கழுதைகள் போன்ற மூதேவிகள் தமது குற்றத்தை அறியார் ஞானத்தை ஏற்றுக் கொண்டு பாராட்ட மாட்டார். நாளாவட்டத்தில் அஞ்ஞானம் முதிரப்பெற்று, பிறப்பதும் இறப்பதுமே தொழிலாகக் கொள்வர்.

குற்றம் - அறியாமை; குணம் - ஞானம்.

அறிவு வெளியை அடைய வேண்டும்

1524. மயங்குகின்றாரும், மதி தெளிந்தாரும்
முயங்கி, இருவிண் முழைபுகப் பாய்ச்சி
இயங்கப் பெறுவரேல், ஈறு - அது காட்டிப்
பயம் கெட்டவர்க்கு ஓர் பரநெறி ஆமே.

மயங்குகின் றாரு [1]மதிதெளிந் தாரு[2]
முயங்கி [3]யிருவிண் [4]முழைபுகப் பாய்ச்சி[5]
[6]யியங்கப் [7]பெறுவரே [8]லீறது காட்டிப்[9]
பயங்கெட்ட வர்க்கோர் பரநெறி யாமே. (10)

வேறு பாடம்: 1. மதைத் தெளிந் (இ) I. 2. தாரை (த) 3. யிருவினை (ஆ இ ஈ ஓ) I. 4. மூளை முகப் (இ) I. முழைமுகப் (விசு) (தி) (வ), மூழை முகப்பா (த) 5. பாச்சி (அனை. சுவ) V பாச்ச (ஓ) I. 6. யியங்கிப் (சைவ) 7. பெறுவாரே (ஆ இ) III. 8. வீற்ற (அ ஆ) I வீற்று (இ) I. 9. காடிப் (ஆ) I காட்டிற் (சங்)

குறிப்பு: 3 ஆவது அடி, 3 ஆவது சீர். சுவடிகளில் உள்ள பாடம் பொருந்தாமையால், (விசு), (தி) (வ) - பதிப்புகளில் உள்ள பாடம் மேற்கொள்ளப்பட்டது.

கருத்து: உண்மை அறியாமல் மயங்குவோரும், மதி தெளியப் பெற்றோரும் யோக சாதனம் மேற்கொண்டு, மூச்சுக் காற்றைச் சுழுமுனை வழியாக, சகஸ்ராரத்தானமாகிய சிதாகாசத்திற்கு ஏற்றி, அங்கே தமது உணர்வு இயங்கப் பெறுவாராயின், பராசத்தி அவர்க்குச் சிவத்தினைக் காட்டி, அந்நிலையில் தற்போதம் கெட்டு நிற்கும் அவர்கட்குப் பரானந்தம் அருள்வாள்.

உடம்பில் தலை என்பது ஆகாயம் என்பதும், அவ்விடத்திற்கு மூச்சுக் காற்றையும் அதன் வழி பிராண சக்தியையும், உயிருணர்வையும் செலுத்தி, சகஸ்ராரத் தாமரையில் பேரொளிக் காட்சி பெறலாம் என்பதும் முன்னர் அறிந்தோம் (கேசரி யோகம், திருவம்பலச்சக்கரம் என்னும் இயல்கள் காண்க.)

உடம்பில் தெய்வ அனுபவம்

1525. சேயன், அணியன், பிணி இலன், பேர்நந்தி
தூயன் துளக்கு அற நோக்க வல்லார்கட்கு;
மாயன், மயக்கிய மானிடராம் அவர்
காயம் விளைக்கும் கருத்து அறியார்களே.

சேய னணியன் பிணியிலன் பேர்நந்தி
தூயன் றுளக்கற நோக்கவல் லார்கட்கு
[1]மாயன் மயக்கிய மானிட ராமவர்[2]
காயம் [3]விளைக்குங் கருத்தறி யார்களே. (11)

வேறு பாடம்: 1. மாய (ஓ) I. 2. மாவர் (அ) I. 3. விளக்குங் (ஈ) I.

கருத்து: சொரூப இலக்கணம் உடைமையால் யாவர்க்கும் எட்டாதோன். அருள் உடைமையால் அருகே வருபவன், இவ்வுலகத்தே, உடல் தாங்கி வரினும், வினை, மாயைகளால்

கட்டுப்படாதவன் - அவன் எம் பெருமைமிகு நந்தி. புலன்களாலும், மனத்தாலும் அலைவுறாது, தற்போதமும் கெட்டு, நோக்குவார்க்கு (உணர்வார்க்குத்) தன் சொரூபம் புலப்பட நிற்பவன். தனது திரோதான சத்தியால் முன்பு மயக்கிய மாந்தர்க்கு, அவர்கள் உடம்பில் அவன் உண்டாக்கும் அனுபவத்தைப் புறச்சமயிகள் அறியார்.

உயிராற்றலை உணர்க

1526. வழி இரண்டுக்கும் ஓர் வித்து - அதுவான
வழி, பார்மிசை வாழ்தல் உறுதல்;
சுழி அறிவாளன்தன் சொல்வழி முன்நின்று,
அழிவு அறிவார், நெறி நாட நில்லாரே.

[1]வழியிரண் டுக்குமோர் வித்தது வான
[2]வழியது பார்மிசை [3]வாழ்த லுறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
[4]றழிவறி வார்நெறி நாடநில் லாரே. (12)

வேறு பாடம்: 1. விழியிரண் (ஓ) IV. 2. பழியது (அ ஈ ஓ) I. 3. வாழ்த்தல் (உ) I. 4. றழிவார் நெறி (ஆ) I.

கருத்து: சன்மார்க்கம், துன்மார்க்கம் என்ற இரு வழிக்கும் வித்தாவது, உலகில் வாழும் வழியே. சுழுமுனையில் மூச்சைச் செலுத்த அறிந்த ஞானாசிரியனின் சொற்படி, யோக சாதனம் பயின்று, பிராணசத்தி (உயிராற்றல்) அழிவது என்பது என்ன (ஆக்கமுறுவது என்பது என்ன) என்று அறிவோர். புறச்சமயங்களை நாடார்.

யாவர்க்கும் தலைவன்

1527. மாதவர்க்கு எல்லாம் மாதேவர் பிரான் என்பர்,
நாதம் - அது ஆக அறியப்படும் நந்தி
பேதம் செய்யாதே, 'பிரான்' என்று கைதொழில்,
ஆதியும் அந்நெறி ஆகி நின்றானே.

[1]மாதவர்க் கெல்லா [2]மாதேவர் பிரானென்பர்
நாதம தாக வறியப் படுநந்தி
பேதஞ்செய் யாதே [3]பிரானென்று கைதொழி
லாதியு மந்நெறி யாகிநின் றானே. (13)

வேறு பாடம்: 1. மாதவரெல்லாம் (ஓ) IV. 2. மாதேவன் (ஓ) I. 3. பிரானெனக் (ஈ) III.

கருத்து: தவநெறியில் முதிர்ந்தோர்க்கு, மகாதேவனே கடவுள் என்பர். யோகத்தில் 'பரநாதமாக' அனுபவப்படுபவன் அந்த நந்தி. ஆகவே வேறுபாடு கருதாமல், 'அவனே யாவர்க்கும் பிரான்' என்று தொழுதால், ஆதியாகிய அவனும் அந்நிலையில் அருள்வான்.

சிவனே பரம்பொருள்

1528. அரன்நெறி அப்பனை, ஆதிப் பிரானை,
உரன்நெறி ஆகி வந்து உள்ளம் புகுந்தான்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரன் அறியாவிடில் பல்வகை தூரமே.

அரனெறி யப்பனை யாதிப் பிரானை
யுரனெறி [1]யாகிவந் துள்ளம் புகுந்தான்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகை தூரமே. (14)

வேறு பாடம்: 1. யாகியுளம் புகுந்தானை (ஓ) IV யாகவந் (ஆ ஈ) III.

கருத்து: வீட்டுநெறி யாதென நாடும் அன்பரின் சித்தம், சிவநெறித் தந்தையும் எல்லாவற்றையும் தோற்றுவித்தவனும், உணர்விற்கு வலியூட்டும் நெறியாகிய யோக சாதனைக்குப் பயன் நல்கி, உள்ளத்தில் புகுந்தவனும் ஆகிய சிவனே, "பரன்" (வீட்டுலகின் தலைவன்) என்பதை அறியாவிடின், அவர்களின் ஆய்வு நீண்டுகொண்டே செல்லும்.

தூரம் வடசொல் ஆதலின் வலி மிக வில்லை.

தெய்வங்களுள் இருப்பவன்

1529. [1]பரிசறி [2]வானவர் பண்பன் பகலோன்
பெரிசறி வானவர் [3]பேரிற் றிகழுந்
துரிசற நீநினை தூய்மணி வண்ண
னரிதவன் வைத்த [4]வரனெறி தானே. (15)

வேறு பாடம்: 1. பரிசற (விசு) (தி) 2. வானவன் (ஓ) IV. 3. பேற்றிற் (விசு) (சைவ) 4. வறநெறி (விசு) (சங்)

கருத்து: இன்ன தன்மையர் என அறியப்பட்ட 'முத்தொழில் தேவரது' உயிர்க்கு உயிராக இருந்து, அத்தொழில்களைச் செய்விப்பவனும், மிகப்பெரியோர் என அறியப்பட்ட தேவரின் பெயரில், உண்மையில் விளங்குபவனும் ஆகிய சிவபரம்பொருள், பகலாணி போலே யாவர்க்கும் நடுநின்று தலைமைபூண்டுள்ளான். (பகல் ஆயிபோல, நடு நாடியில் நடமாடுகின்றான்) நனவு, கனவு, துயில் என்ற குற்றம் நீங்க, துரியத்தில் நின்று, அவனைத் தியானிப்பாயாயின், தூய இரத்தினம் போன்ற ஒளியுடன் உன் சகஸ்ராரத்தில் விளங்குவான். இவற்றைப் பற்றிக் கூறுவதாக அவன் ஏற்படுத்திய சைவ நெறி புறச்சமயிகளால் உணர்வதற்கு அரியது.

சமயவாதத்திற்கு அப்பால்

1530. ஆன சமயம் அது, இது நன்று எனும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி;
கானம் கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உருவது ஆமே.

ஆன சமய மதுவிது நன்றெனு
[1]மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமி
னூனங் கடந்த வுருவது வாமே. (16)

வேறு பாடம்: 1. மான (த).

கருத்து: "ஆக்கம் தரும் சமயம் அது" என்றும், "அப்படியன்று, இதுவே நன்மை தரும்" என்றும் தம்மில் மாறுபடுபவராகிய, பொய்யான சமய வாதம் பேசும் மாந்தரின் மயக்க நெறியானது ஒழிய, காடு போன்ற சமய வாதத்திற்கு அப்பாற்பட்ட சிவத்தை நாடுவீராக. அவனது சொரூபம், பிற தெய்வங்களின் அழியும் தோற்றத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்.

மாயம் - பொய், மயக்கம் - மாறுபட்ட உரைகள். சமய வாதம் பின்னலுற்றுக்கிடத்தலின் காடு எனப்பட்டது. ஊனம் - குற்றம், ஈண்டுத் தோன்றி அழியும் தன்மை. ஒழிய என்பது ஈறு குறைந்து நின்றது.

வழி தவறினர்

1531. அந்நெறி [1]நாடி [2]யமரர் முனிவருஞ்
செந்நெறி கண்டார் சிவனெனப் பெற்றபின்[3]
முன்னெறி நாடி முதல்வ னருளிலார்
சென்னெறிச் செல்லார் திகைக்கின்ற வாறே. (17)

வேறு பாடம்: 1. நாடிய (விசு) (சங்) 2. முனிவ ரனைவருஞ் (ஆ) IV. 3. பெற்றார் பின் (ஓ) IV.

கருத்து: சிவனது சொரூபத்தைக் காணும் நெறியை (உபாயத்தை)ப் பெற விரும்பி, முதல்வனது அருளைப் பெற்ற, தேவரும் முனிவரும், செம்மையான நெறியைப் (உண்மை ஞானத்தை) பெற்றனர். சிவமே ஆயினர். பிறரோ, முதல்வனின் அருளைப் பெறாதவராய், தாம் தாம் நினைத்த வழியிலேயே முயன்று, செல்ல வேண்டிய நெறியை விடுத்துத் திகைக்கின்றனர். இஃது என்னே!

ஆணவம் அல்ல, அருளே வழிகாட்டி

1532. உறும் ஆறு அறிவதும், உள்நின்ற சோதி
பெறும் ஆறு அறியின் பிணக்கு ஒன்றும் இல்லை,
அறும் ஆறு அதுவானது அங்கியுள் ஆங்கே
இறும் ஆறு அறிகிலர் ஏழைகள் தாமே.

உறுமா றறிவது முண்ணின்ற சோதி
பெறுமா [1]றறியிற் பிணக்கொன்று மில்லை
யறுமா றதுவான [2]தங்கியு ளாங்கே
யிறுமா றறிகில ரேழைக டாமே. (18)

வேறு பாடம்: 1. றறியீர் (ஈ) II. 2. வங்கியு (ஓ) I.

கருத்து: சிவ பரம்பொருளை அடையும் நெறியை அறிவது, உடம்பினுள் நின்ற சோதியைத் தரிசிப்பதாக அமைந்தால், அதைச் சொல்லும் எச்சமயமும் தம்முள் உண்மையில் மாறுபடுவன்வல்ல. ஆன்மாவை விட்டு நீங்க வேண்டும் என்று நினைக்கப்படுகின்ற ஆணவமலம், யோகத்தீயில், (நீங்காமல்) முடிவடைந்து, தான் நின்ற இடத்தை அருளானது பெறச்செய்வதை அறிவிலிகள் அறியார்.

ஆணவமலம். அருளுக்கு இடங்கொடுத்தலை, "இத்தை விளைவித்தல் மலம்" - என உண்மை விளக்க நூல் கூறும் (5 ஆம் பாட்டு) ஆணவம் முடிவடைதலாவது, அது உயிர் அறிவை மறைக்காமல் நிற்றல். ஆணவ மலம் விலகி நிற்றலே அன்றி அழிதல் இல்லை.

பழி எதற்கு?

1533. வழிநடக்கும் பரிசு ஒன்று உண்டு, வையம்
கழி நடக்குண்டவர் கற்பனை கேட்பர்,
சுழி நடக்கும் துயரம்-அது நீக்கி,
பழி நடப்பார்க்குப் பரவலும் ஆமே.

வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்
கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்
சுழிநடக் குந்துய [1]ரம்மது நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே. (19)

வேறு பாடம்: 1. ரம்மதி (த)

கருத்து: சிவபரம்பொருளை அடையும் நெறியில் செல்லும் இயல்பு ஒன்று உண்டு. அதாவது உலக வாழ்வை நீத்து அவனை அடைவது என எண்ணுபவர், புறச்சமயங்கள் கூறும் கற்பனைகளைக் கேட்க. வெள்ளத்தில் உண்டாகும் சுழியைப் போல, வாழ்வில் அல்லற் படுத்தும் துயரத்தை நீக்கி, அதே சமயம், 'பயனின்றி மடிந்தார்' என்று வரக்கூடிய பழியையும் நீக்குதற்காக, அருள்வழியில் நடப்பவர் புகழ்ச்சிக்குரியவர்.

உலகியலை விட்டு ஓடவேண்டா; இவ்வாழ்வையே அருள் வாழ்வு ஆக்குக என்றார்.

வினைப்பயனை விரும்பாமல்

1534. வழி சென்று, மாதவம் வைகின்ற போது
பழி செல்லும் வல்வினைப் பற்று அறுத்து, ஆங்கே
வழி செல்லும் வல்வினையார் திறம் விட்டிட்டு
உழி செல்லில் உம்பர் தலைவன் முன் ஆமே.

[1]வழிசென்று மாதவம் [2]வைகின்ற போது
[3]பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
[4]வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
[5]டுழிசெல்லி லும்பர் தலைவன்முன் னாமே. (20)

வேறு பாடம்: 1. வழிசென்ற (விசு) (தி) (வ) (த) 2. வைக்கின்ற (அ) I. 3. வழிசெல்லும் (அ) I. 4. அழிசெல்லும் (த) 5. டுழிசெல்லு மும்பர் (ஓ) I.

கருத்து: சிவபரம்பொருளை அடையும் வழியில் முயன்று, மாதவத்தைச் செய்யும் போது, பழியுண்டாக்கும் தீவினைகளைச் செய்யும் அவாவை நீக்கி, செய்யும் செயல்வழி வருவதாகிய வினைப் பிடிப்பை நீக்கி (செயல் எல்லாம் சிவன் செயல் எனவே கருதிச் செய்து, அதன் பயனை விரும்பாமல்) வாழ்ந்தால், தேவர் தலைவனைத் தரிசிக்கலாம்.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ - சுவடிகளில் இல்லை.

நூலுணர்வன்று, உயிருணர்வே வேண்டும்

1535. இமயங்களா நின்ற தேவர்கள் ஆறு
சமயங்கள் பெற்றனர், சாத்திரம் ஓத
அமைவு அறிந்தோம் என்பர் ஆதிப்பிரானை
கமை அறிந்தாருள் கலந்துநின்றானே.

இமயங்க [1]ளாநின்ற தேவர்க ளாறு
சமயங்கள் பெற்றனர் சாத்திர மோத[2]
[3]வமைவறிந் தோமென்ப ராதிப் பிரானைக்[4]
கமையறிந் [5]தாருட் கலந்துநின் றானே. (21)

வேறு பாடம்: 1. ளாய்நின்ற (அ இ ஓ) I. 2. மோதி (ஆ ஓ) I. 3. யமையறிந் (ஆ) I; வமையறிந் (இ ஈ ஓ) I. 4. பிரானுக் (ஓ) I பிரானுங் (விசு) (தி) (வ) (த) 5. தாருளங் (ஈ) I.

கருத்து: அறிவில் இமயம் போல் உயர்ந்து நிற்கும் தேவர்கள், ஆறு சமயங்களைப் பின்பற்றி, சாத்திரங்கள் கூறுவதால், ஆதிப்பிரானை - அவனது தன்மையை - அறிந்தோம் என்பர். இது நூலறிவாகி அமைவது. பிரானோ பொறுமையுடையாரின் உயிருணர்வில் கலந்து நிற்கின்றான்.

பொறுமை-எண்ணத்தைச் சிதறவிடாமை. இந்நூல் 'பொறையுடைமை' - இயல், முதற்பாட்டைக் காண்க.

குறிப்பு: இப்பாடல் முதல் 3 பாடல்கள், பதிப்புகளில் 'நிராகாரம்' என்னும் பெயரில் தனி இயலாக உள்ளன. இவற்றுடன் மேலும் 4 பாடல்கள் அவ்வியலில் உள்ளன. அ - சுவடியில் இவ்வியல் இல்லை. ஆ, ஓ - சுவடிகளில் 'நிராகாரம்' என்றும் ஈ - சுவடியில் 'நிராதாரம்' என்றும் தனி இயல் உள்ளதெனினும் முன்னை இயலின் தொடர்ச்சி யாகவே, பாடல்கள் எண் பெற்றுள்ளன. இப்பதிப்பில புறச்சமய தூடணம் என்ற இயலின் தொடர்ச்சியாக இவை கொள்ளப்படுகின்றன.

நினைக்கவில்லையேல் நீங்காது துன்பம்

1536. பாங்கமர் கொன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியி னேரொப்பர்
நீங்கிய வண்ண நினைவுசெய் யாதவ
ரேங்கி யுலகி லிருந்தழு வாரே. (22)

கருத்து: அழகிய கொன்றை மாலை சூடிய, விரிசடைக் கடவுளின் திருவடியைத் தம்மனத்தில் ஏந்திய மாந்தர் சிவனையே ஒப்பர். அவனைத் தம்மின் வேறாகக் கொண்டு, நினையாமலே இருப்போர், துன்பம் தீராமல் ஏங்கி வருந்துவர்.

குறிப்பு : இப்பாடல் ஆ, ஈ - சுவடிகளில் இல்லை.

1537. இருந்தழு வாரு மியல்புகெட் டாரும்
அருந்தவ மேற்கொண் டண்ணலை யெண்ணில்
வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் பிறப்பிலி தானே. (உ)

1538. தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் றானுண்பர்
காரறி வாளர் கலந்து பிறப்பர்கள்
நீரறி வார்நெடு மாமுகிலாமே. (ஆ, உ, ண)

1539. அறிவுடன் கூடி யழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கொடுவினை யாளர்
செறிய நினைக்கிலர் சேவடிதானே. (உ)

1540. மன்னு மொருவன் மருவு மனோமய
னென்னின் மனித ரிகழ்வரிவ் வேழைகள்
துன்னி மனமே தொழுமின் துணையிலி
தன்னையு மாங்கே தலைப்பட லாமே. (ஔ)

அறிவில் தேக்கம்

1541. ஓங்காரத்து உள்ளொளிக்கு உள்ளே உதையம் உற்று,
ஆங்காரம் அற்ற அனுபவம் கை கூடார்,
சாம் காலம் உன்னார், பிறவாமை சார்வுறார்,
நீங்காச் சமயத்து நின்று ஒழிந்தார்களே.

ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே யுதையமுற்
றாங்கார [1]மற்ற வனுபவங் கைகூடார்
சாங்கால முன்னார் பிறவாமை சார்வுறார்
நீங்காச் சமயத்து [2]நின்றொழிந் தார்களே. (23)

வேறு பாடம்: 1. மற்று மமைவது (ஆ இ) III. 2. ணின்றொழிந் (சண்)

கருத்து: ஓங்காரத்தின் உள் ஒளிக்குள் தோன்றுவதும், தற்போதம் கெட்டுத் தரிசிப்பதும் ஆகிய அனுபவம் வாய்க்கப் பெறார்; சாதல் உண்டு என எண்ணார்; பிறவாநெறியைச் சாரார்; தம் எண்ணத்தை விட்டு நீங்காத சமயத்திலேயே நின்றனர். அவர் செயல் என்னே!

79. உட்சமயம்

தலைவன் அவனே; நாடும் வழி பல

1542. இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்த அனாதி புராணன்,
சமையங்கள் ஆறும் தன் தாளிணை நாட
அமைய, அங்கு அழல்கின்ற ஆதிப் பிரானே.

இமையவர் தம்மையு மெம்மையு முன்ன
மமைய வகுத்த [1]வனாதி புராணன்
சமையங்க ளாறுந்தன் [2]றாளிணை நாட
வமையங் [3]கழல்கின்ற வாதிப் பிரானே. (1)

வேறு பாடம்: 1. னாதிப் (சங்) 2. றாளினை (த) 3. குழல்கின்ற (ஓ) II; கழல் நின்ற (இ) I.

கருத்து: விண்ணோரையும், மண்ணோர் ஆகிய எம்மையும், அவரவர் வினைக்கு ஈடாகப் பிறக்குமாறு விதித்த, அனாதியே உள்ள, பழமையான பரம்பொருள். அகச் சமயங்கள் ஆறும், தத்தம் வழியில், தனது திருவடிகளை நாட, தான் (அவற்றிற்கு எட்டாத) பரவெளியில், சொரூபமாகச் சுடர்விடுகின்ற, ஆதி மூலமான தலைவனாக உள்ளான்.

அனாதி - தனக்கு ஆதி இல்லாதவன். புராணன் - பழமையானவன். இவ்விரண்டு தன்மையும் உடையவன். ஆகவே, அவனே யாவர்க்கும் ஆதி என்றார். வேறு கடவுளரை நாடாது, சிவனை நாடுதலின், அகச் சமயங்கள் எனப்பட்டன. அகச் சமயம் இவை என்பது, முன்பு "அண்ணலை நாடிய" என்ற பாடலின் உரையில் கூறப்பட்டது.

குறிப்பு: ஆ - சுவடியில் இவ்வியல் 'சமயம்' என்று பெயர் இடப் பெற்றுள்ளது.

குரைப்பொலி குன்றை அகற்றுமா?

1543. ஒன்று-அது பேரூர், வழி ஆறு அதற்கு உள,
வென்றது போல, இரு முச்சமயமும்
நன்று இது, தீது இது என்று உரையாளர்கள்
குன்று குரைத்து எழும் நாயை ஒத்தாரே.

[1]ஒன்றது பேரூர் வழியா றதற்குள்[2]
[3]வென்றது [4]போல விருமுச் சமயமு
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்[5]
குன்று குரைத்தெழு நாயையொத் தாரே[6]. (2)

வேறு பாடம்: 1. ஒன்றதே (த) 2. றதற்குள் (சங்) 3. ளென்றது (சங்) 4. போலுமிரு (த) 5. யாதர்கள் (த) 6. தார்களே (அ ஈ ஓ) II.

கருத்து: பேரூர் ஒன்று. அத்ற்குச் செல்லும் வழிகள் ஆறு. அது போல, அகச் சமயம் ஒவ்வொன்றும் நன்னெறியில் செலுத்துவதே. இதை மறந்து, ஒரு சமயம் வென்றது போல வைத்து, அது நன்று எனவும், மற்றையவை தீயன எனவும் கூறுவோர், குன்றைக் குரைத்தே அப்புறப்படுத்திவிடலாம் என்று குரைக்கும் நாயை ஒத்தவர் ஆவர்.

சைவ நாயகன், உலகத்தலைவன்

1544. சைவப் பெருமைத் தனிநாயகன் தன்னை,
உய்ய உயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை,
மெய்யர், பெருமையர்க்கு அன்பனை, இன்பம் செய்
வையத் தலைவனை வந்து, அடைந்து, உய்ம்மினே.

சைவப் பெருமைத் தனிநா யகன்றன்னை
யுய்ய வுயிர்க்கின்ற வொண்சுடர் நந்தியை
[1]மெய்யர் பெருமையர்க் கன்பனை யின்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்ம்மினே. (3)

வேறு பாடம்: 1. மெய்யப் (அ ஆ இ) I; எய்ய (த).

கருத்து: சைவ சமயத்தின் பெருமைமிகு தலைவனை, உயிர் உய்யும்பொருட்டு, அதன் உணர்வில் எழுகின்ற ஒள்ளிய சோதி

வடிவான நந்தியை, மெய்ஞ்ஞானம் உடையோராகிய பெருமை உடையோருக்கு அன்பனை, அருளின்பம் தருகின்ற, வையத்தின் தலைவனை நும் தலைவனாக அடைந்து உய்க.

பெருமை என்றதால் புகழும், தனி நாயகன் என்றதால் தலைமையும், உயிருள் எழுதலால், இம்மையில் ஞானானுபவம் வழங்கும் அருளுடைமையும், அடியவர்க்கு அன்பன் என்பதால் எளிமையும், இன்பஞ்செய் தலைவன் என்றதால் பர இன்பமாகிய முத்திப்பேறு அருளும் வண்மையும் கூறினார்.

ஆறு சமயக்கடவுளும் அவனே

1545. சிவன் - அவன் வைத்தது ஓர் தெய்வ நெறியில்,
பவன் - அவன் வைத்த பழவழி நாடி,
"இவன் அவன்" - என்பது அறிய வல்லார்கட்கு,
அவன் அவன் அங்கு உளனாம் கடன் ஆமே.

சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியில்
பவனவன் வைத்த பழவழி நாடி
இவனவ னென்ப தறியவல் லார்கட்
கவனவ னங்குள [1]னாங்கட னாமே. (4)

வேறு பாடம்: 1. தாங்கட (விசு) (சங்) (தி) (த) (வ).

கருத்து: மகா வாக்கியத்தில், 'தத்' என்ற பதத்தால் குறிக்கப்படு பவன் ஆகிய சிவன் அருளியதாகிய சைவ நெறியில்,அவன் அடியார்க்கு அருளும், முறைமையில், குருவாகத் தோற்றம் கொண்டு வரும் செயலை (சத்திநிபாதம்) விரும்பி, அதைப்.பெற்று, அவனே 'தத்' என்ற பதப் பொருள் என்று, சுட்டுக்கடந்து அறிய வல்லவர்களுக்கு, அவன் ஆறு சமயங்களின் இறைவர்களாக, ஆங்காங்கு அருள்புரியும் தன்மை அறியவரும்.

முதலடியில், 'அவன் இவன்' என மாறுக. 'தத்வமசி' என்ற மகாவாக்கியத்தில் 'தத்' (அது) எனக் கூறப்பட்ட பரம்பொருள் சிவனே. "பெம்மான் இவனன்றே" என அவனைச் சுட்டினார் திருஞானசம்பந்தர். அவன் அவன் - வேறு வேறு தெய்வ நிலைகள். கடன் - முறைமை; தன்மை. முறைமையே இறைவனுக்குத் தன்மை ஆயிற்று.

அருள்நெறி உரைப்பது சைவமே

1546. ஆமாறு உரைக்கும் அறுசமயாதிக்குப்
போமாறு தான் இல்லை புண்ணியம் அல்லது; அங்கு
ஆம் ஆர் வழி ஆக்கும் அவ் வேறு உயிர்கட்குப்
போம் ஆறு; அவ் ஆதாரப் பூங்கொடியாளே.

ஆமா றுரைக்கு மறுசம யாதிக்குப்
போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்
[1]காமார் [2]வழியாக்கு மவ்வே றுயிர்கட்குப்[3]
போமாறவ் வாதாரப் பூங்கொடி யாளே. (5)

வேறு பாடம்: 1. காமாம் (ஓ) I. 2. வழியார்க்கும் (ஆ) I. 3. றுயிர்கட்கும் (இ ஈ ஓ) I.

கருத்து: முத்திக்குரிய வழி எனத் தமக்கு அமைந்த வழியில் கூறும் ஆறு சமயங்களுக்கும் சிவபுண்ணியம் (அருள்வழியில் நின்று செய்யும் புண்ணியம்) தவிர, மேற்கதிக்கு ஏற்றும் நெறி வேறில்லை. அதனைச் சைவமே கூறும். அச்சமயங்களைப் பின்பற்றும் வேறு வேறு மனிதர்க்கு, அவர்கள் மேற்கதியை அடையும் பொருட்டு, பொருந்திய அருள்வழியை ஆக்கிக் கொடுப்பவள் ஆதார சத்தி ஆவாள்.

கரையேற்றியவன்

1547. அரநெறி யாவ தறித்தேனு நானுஞ்
[1]சிலநெறி தேடித் திருந்தவந் நாளு
[2]முரைநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
[3]தரநெறி நின்ற தனிச்சுடர் தானே. (6)

வேறு பாடம்: 1. சிவநெறி (அ) IV; சிரநெறி (விசு) (தி) (வ) (த) 2. முரைசெறி (அ) I; சிறைசெறி (ஓ) I; முரநெறி (ஆ) III. 3. தவநெறி (ஈ) III.

கருத்து: சிவ நெறியை அறிந்தவனாகிய நானும், முன்பு வேறு சில நெறிகளைத் தேடியலைந்த காலத்தில், நூல்களும் பிறரும் உரைக்கும் வாசகங்களையே எண்ணமிட்டு, ஆய்வு என்ற கடலில், தத்தளித்தபோது, அதைக் கடந்து கரையேறும் தரத்தில், எனக்குத் துணையாக நின்ற ஒப்பற்ற சோதி, பர சிவமே.

வீடு தரும் நெறி

1548. தேர்ந்த அரனை அடைந்த சிவநெறி;
பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி;
ஆர்ந்தவர் அண்டத்துப் புக்க அருள் நெறி;
போந்து, பிணைந்து, புணர்நெறி ஆமே.

[1]தேர்ந்த வரனை யடைந்த சிவநெறி
பேர்ந்தவ ருன்னிப் பெயர்ந்த பெருவழி
யார்ந்தவ ரண்டத்துப் [2]புக்க வருணெறி
[3]போந்து [4]பிணைந்து புணர்நெறி யாமே. (7)

வேறுபாடம்: 1. சேர்ந்த (ஓ) I; தேர்ந்தவர் தன்னை (ஆ) I. 2. புக் கவ் (விசு) 3. போர்ந்து (சண்) 4. புடைந்து (அ) IV.

கருத்து: ஆய்ந்து தெளிந்த சிவநெறி, பலரும் சிவனை அடைவித்த நெறி. ஆராயாமல், இதனை விட்டுச் சென்றோர், இதன் அருமை உணர்ந்து மீண்டு வந்த பெரு நெறி. இந்நெறியில் நின்றோர் மேற்கதியில் புகுவித்த அருள்நெறி. வீட்டுலகிற் புகுந்து, சிவத்துடன் கலந்து மகிழும் நெறி.

ஆசிரியர் உரைத்தது, பிற்காலத்தில், திருநாவுக்கரசர் வாழ்வில் உண்மையாயிற்று.

1549. ஈரு மனத்தை யிரண்டற வீசுமி
னூருஞ் சகாரத்தை யோதுமி னோதியே
வாரு மரனெறி மன்னியே முன்னியத்
தூருஞ் சுடரொளி தோன்றலு மாமே. (ங)

1550. மினற்குறி யாளனை வேதியர் வேதத்
தனக்குறி யாளனை யாதிப்பி ரான்றன்னை
நினைக்குறி யாளனை ஞானக் கொழுந்தி
னயக்குறி காணி லரனெறி யாமே. (ஆ, ண)

1551. ஆய்ந்துணர் வார்க ளரன்சாத் திரம்பல
வாய்ந்துண ராவகை நின்ற வரனெறி
ஆய்ந்துணர் வாரரன்சேவடி கைதொழு
தேர்ந்துணர் செய்யவோ ரின்பமு மாமே. (ஆ, ஔ)

1552. சைவ சமயத் தனிநாயக னந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத் துளார்க்கு வகுத்து வைத்தானே. (ஔ)

1553. இத்தவ மத்தவ மென்றிரு பேரிடும்
மத்தரைக் காணின் னகுமெங்கள் பேர்நந்தி
யெத்தவ மாகலெ னெங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே. (உ)

1554. ஆமே பிரான்முக மைந்தொடு மாருயி
ராமே பிரானுக் கதோமுக மாறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்குந்
நாமே பிரானுக்கு நரரியல் பாமே. (உ, ஔ)

1555. ஆதிப் பிரானுல கேழு மளந்தவ
னோதக் கடலு முயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமைமயி னின்று பராசத்தி
யாதிக்கட் டெய்வமுமந்தமு மாமே. (அ, ஆ, ஔ)

1556. ஆய்ந்தறி வார்க ளமரர்வித் யாதர
ராய்ந்தறி யாவண்ணம் நின்ற வரனெறி
வாய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழக்
காய்ந்தறிந் தேனிம்மை யம்மைகண் டேனே. (ஆ, ஔ)

1557. அறியவொண் ணாதவ் வுடம்பின் பயனை
யறியவொண் ணாத வறுவகை யாக்கி
யறியவொண் ணாத வறுவகைக் கோசத்
தறியவொண் ணாததோ ரண்டம் பதிந்ததே. (ஆ)

80. சிவகுரு தரிசனம்

குரு சிவமே

1558. பத்தி பணித்துப், பரவும் அடி நல்கிச்
சுத்த உரையால் துரிசு அறச் சோதித்துச்
சத்தும், அசத்தும், சதசத்தும் காட்டலால்,
சித்தம் இறையே சிவகுரு ஆமே.

[1]பத்தி [2]பணித்துப் [3]பரவு மடிநல்கிச்
சுத்த வுரையாற் றுரிசறச் சோதித்துச்
சத்து மசத்துஞ் சதசத்துங் காட்டலாற்[4]
சித்த மிறையே சிவகுரு வாமே[5]. (1)

வேறு பாடம்: 1. பத்திப் (இ ஓ) I. 2. பணிந்து (ஆ இ ஈ ஓ) I. 3. பரவும்படி (ஆ இ) I. 4. காட்டாமற் (இ) II. 5. வாகுமே (ஈ ஓ) II.

கருத்து: திருவடிக்கு அன்பை எனக்கு அருளி, நான் ஏத்திப் புகழ்வதற்குரிய திருவடி என்மீது தீண்டச் செய்து, சொல் அல்லாத சொல்லால் கூறியருளிய பரநாதம் உடைய - உபதேசத்தால், என் உயிரின்கண் இருந்த குற்றங்களை நீக்கி, சிவம், பாசம், ஆன்மாவாகிய நான் - இம் மூன்றையும் எனக்குக் காட்டியமை யால், எனது சித்தவெளியில் தோன்றிய இறைக்காட்சியும், மானிட வுருவில் வந்த ஞானாசிரியனாகிய நந்தியும் ஒருவரே எனத் தெளிந்தேன்.

இறையே சித்தத்தில் தோன்றியவர்; அவரே சிவகுருவாகக் கண் எதிலே வந்தவர் என்க. மணிவாசகர் இதைப் போன்ற அனுபவம் பெற்றே, "புவனியிற் சேவடி திண்டினன் காண்க, சிவன் என யானும் தேறினன் காண்க" என்று பாடுகிறார். (திருவா. திருவண்டப் பகுதி: அடி 61 - 62) திருவடிக் காட்சியும் பரநாத ஒலி கேட்டலும் அருளியல் அனுபவம் (Mystic experience)

சத்து ஆகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறியாது. அசத்தும் அறிவற்றது. ஆதலின் சிவத்தை அறியாது. இவ்விரண்டையும் அறியும் வேறு பொருள் இருக்க வேண்டும். அஃது ஆன்மா. அஃது அசத்தோடு சேர்ந்து அசத்தாகியும், சத்தோடு சேர்ந்து சத்தாகியும் நிற்பதால், 'சதசத்து' எனப்பட்டது. பணித்து - பெறுமாறு அளித்து.

குரு செய்யும் உதவி

1559. பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு
நேசத்த காயம் விடுவித்து நேர் நேரே
கூசு அற்ற முத்தியில் கூட்டலால், நாட்டகத்து
ஆசு அற்ற சற்குரு அம்பரம் ஆமே.

பாசத்தைக் [1]கூட்டியே [2]கட்டிப் பறித்திட்டு
[3]நேசத்த காயம் விடுவித்து நேர்நேரே
கூசற்ற முத்தியிற் கூட்டலா னாட்டகத்[4]
தாசற்ற சற்குரு [5]வம்பர மாமே. (2)

வேறு பாடம்: 1. காட்டியே (த) 2. கட்டுப் (தி), (த), 3. நேயத்த (ஈ) II நேசித்த (விசு) (தி) (வ) 4. நாட்டத்த (ஆ, ஒ, ஓ) II. 5. வப்பர (ஆ இ) III வம்பல (விசு) (தி) (வ).

கருத்து: இறைவன் ஆணவ மலப் பிணிப்புண்டிருந்த ஆன்மாவுக்கு, மாயை, கன்மங்களாகிய மலங்களை உண்டாக்கிப் பிறவியில் சேர்த்து, பிறகு மரணத்தை உண்டாக்கி, இவ்வாறு செய்தலால், உடம்பின்மீது உள்ள பற்றினைப் போக்கியுள்ள நிலையில், உலகில் ஞானாசிரியனாக வரும் சான்றோன், தன் உபதேசத்தால் பதிஞானத்தை அளித்து, ஆணவ மலத்தைப் போக்கி, உயிர் உணர்வு சிவத்தை நேர்முகமாக உணர்வதாகிய முத்திநிலையை அடைவிப்பதால், அகண்டாகார வெளியாயுள்ள சிவமே, சற்குருவாக வந்தான் எனலாம்.

கூசு - கூசுதல், உலகியலார் முன்பு கூசுதல் இன்றி அருள்வாழ்வு வாழ்தல். நேர்நேரே. பதிஞானத்தையும் சிவானுபவத்தையும் மனம், புத்தி முதலிய கருவிகளில் துணை இன்றி, உயிர் உணரும். "உணர்வின் நேர்பட வரூஉம் சிவபோகம்" என்பது சேக்கிழார் மொழி. (பெ. பு. திருஞான பா. 161) கட்டுதலும் பறித்தலும் - பிறவி கொடுப்பதும், நீக்குவதும்.

வழித்துணை

1560. [1]சித்திக ளெட்டொடுந் திண்சிவ மாக்கிய[2]
சுத்தியு [3]மெண்முத்தித் தூய்மையும் யோகத்துச்
சத்தியு மந்திர சாதக போதமும்[4]
பத்தியு நாத னருளிற் பயிலுமே. (3)

வேறு பாடம்: 1. சித்துக்க (ஈ ஓ) I. 2. மாகிய (ஓ) I; மாக்கிச் (இ ஓ) II. 3. மெண்சத்தித் (ஓ) II. 4. போகமும் (ஓ) I; போதகமும் (ஆ ஈ) I.

கருத்து: ஞான வாழ்க்கையைத் தொடக்குதல் மட்டுமன்றி, இறுதி வரை உடனின்று உதவுவதும் குருவின் அருளே என்கின்றார்.

இறைவனிடம் அன்பின் பெருக்கம், மந்திரங்களைத் தியானத்தில் வைத்து சாதகம் செய்தலால் ஏற்படும் ஞானம், யோக ஆற்றலின் பெருக்கம், அதனால் அட்டமா சித்திகள், ஆணவ மலத்திலிருந்து விடுபடுதலாகிய மலசுத்தி, இறுதியாக, ஆன்மாவைச் சிவமே ஆக்கும் தூய்மை ஆகிய இவை யனைத்தும் குருவின் அருளால்தான் நிகழும்.

என்முத்தி - குறிக்கோளாக எண்ணப்படும்.

1561. எல்லா வுலகிற்கு மப்பாலோ னிப்்பாலாய்
நல்லா ருள்ளத்து மிக்கரு ணல்கலா
லெல்லாரு முய்யக்கொண் டிங்கே யளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே. (ஆ, ட)

ஞானகுருவைக் காட்டும் மனித குரு

1562. தேவனும் சித்த குருவும், உபாயத்துள்
ஆவயின் மூன்றாயின கண்டு, உரையாலே
மூவாப் பசு, பாசம் மாற்றியே, முத்திப்பால்
ஆவையும் நல்கும் குருபரன் அன்புற்றே.

தேவனுஞ் [1]சித்த குருவு முபாயத்து
[2]ளாவயின் மூன்றா [3]யினகண் டுரையாலே
மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பா
[4]லாவையு நல்குங் குருபர னன்புற்றே. (4)

வேறு பாடம்: 1. சுத்த (ஆ) II; சித்தக் (ஈ ஓ ஓ) I. 2. ளாவையு (ஓ) I; ளாயவை (ஆ ஓ) II; யாவையு (விசு) (தி) (வ) (த) 3. யுனக்கண் (ஓ ஓ) II; யெனக்கண் (ஈ) II. 4. லாவையினல்குங் (ஆ) I; யாவையு (விசு) (தி) (வ) (த) II.

கருத்து: ஞானாசிரியன் மாணாக்கனிடம் அன்பு கொண்டு, அவனுக்கு உபதேசிக்கும் (பேச்சற்ற) உரையால் தோற்றுவிக்கும் அருட்காட்சியில், உபாய ஞானம் தருவதாகிய சித்தாந்த நூலில் பதி, பசு, பாசம் எனக் கூறப்பட்ட மூன்றையும், இன்ன தன்மை

உடையவை என, நேரே (உயிருணர்வால்) உணரச் செய்து, மகாதேவனும், சித்தத்தில் அப்பொழுது தோன்றியருளிய ஞானகுருவுமான சிவத்தைத் தரிசிக்கச் செய்து, அவ்வுணர்வு, காட்சி ஆகியவற்றின் வலிமையால், மாணவனின் பசுத்துவத்தையும் (ஆணவமலத்தால் அறிவு குறுகிவிட்ட நிலைமை) ஆணவ மலத்தையும், சிவம் மாற்றியருளவும், மாணவன் (ஆகிய சுத்த ஆன்மா) முத்தியை அடையவும் உதவுவான்.

சித்த குரு - இவ்வியல் முதற் பாடலில் கூறப்பட்டது போலச் சித்த வெளியில் தோன்றிய சிவம் - மாணவன் கண்ணெதிரே அமர்ந்திருந்த ஞானாசிரியன், மாணவனின் அகக் காட்சியில் சிவம் தோன்றியருளு மாறு, அருள் செய்தான் என்க. தேவனும் சித்த குருவும் என்பது தேவனாகிய சித்த குரு எனப் பொருள்படும். இதன் விரிவைப் பின்னர் "ஞான குரு தரிசனம்" என்ற இயலில், ஆசிரியர் தெளிவுறக் கூறுவர். அவ்வியலின் ஒரு பாடலிலிருந்து, "சேயன நந்திக்கு என் சிந்தை பெற்றேனே" என்ற அடியை ஈண்டுக் காட்டுதல் சாலும். ஞானம் உபாய ஞானம், உண்மை ஞானம் என இரண்டு வகை. முன்னது கருவிகளால் அறிதல். கல்வி, கேள்வி, உலக அனுபவம் என்ற மூன்றும் இதில் அடங்கும். பின்னது, உயிருணர்வால் நேரே அறிதல். இதனையே இங்கு ஆசிரியர் "கண்டு" என்றார். மூவா - மூவாத. முதுமையுறாத. ஆ (4 ஆம் அடி) - ஆன்மா. பசுத்துவம் நீங்கியமையால், பசு எனத் தடத்தப் பெயரால் கூறாது, ஆன்மா எனச் சொரூபப் பெயரால் கூறினார். முத்திப்பால் - முத்தியடையும் நெறியில்.

குரு வணக்கம்

1563. சுத்த சிவன் குருவாய் வந்து, தூய்மை செய்
யத் தனை நல்கு அருள் காணா அதி மூடர்
பொய்த்தகு கண்ணால், நமர் என்பர்; புண்ணியர்
அத்தன் இவன் என்று அடி பணிவாரே.

சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்
[1]யத்தனை நல்கருள் காணா வதிமூடர்
பொய்த்தகு கண்ணா னமரென்பர் புண்ணிய
ரத்த னிவனென் றடிபணி வாரே. (5)

வேறு பாடம்: 1. தத்தனை (விசு) (தி) (வ) (த)

கருத்து: இயல்பாகவே மலங்களில் நீங்கிய சிவம், மானிட குருவாகத் தோன்றி, மனிதரின் ஆணவ மலத்தைப் போக்கி,

தன்னையே அவர்களுக்குக் கொடுக்கும் பேரருளை உணராத முழுமூடர், அருட்கண்ணால் காணாத காரணத்தால், ஞானா சிரியனை 'நம் போன்ற மனிதர்' என்று கருதிப் பணியா திருப்பர். ஆனால் சிவபுண்ணியர், அப்புண்ணியத்தால் அருட்கண் வாய்க்கப் பெற்றுச் (சித்தத்தில் சிவக்காட்சி கண்டு), சிவனும் மானிட வடிவத்து ஆசாரியப் பெருமானும் ஒருவரே எனத் துணிந்து, அவன் திருவடியைச் சார்பாகக் கொண்டு பணிவர்.

முதலடியில் 'தூய்மை செய்ய' என்ற வினையெச்சத்தை 'தூய்மை செய்து' என மாற்றுக. இஃது அடிக்கண் வந்த வகையுளி.

திசைமாறும் போது . . .

1564. உண்மையிற் பொய்ம்மை ஒழித்தலும் உண்மைப்பால்
திண்மையும், ஒண்மைச் சிவமாய அவ்வரன்
வண்மையும், எட்டெட்டுச் சித்தி மயக்க, வந்த
அண்ணல் அருள் அன்றி யார் அறிவாரே.

[1]உண்மையிற் பொய்ம்மை யொழித்தலு முண்மைப்பாற்[2]
றிண்மையு மொண்மைச் சிவமாய வவ்வரன்
வண்மையு மெட்டெட்டுச் [3]சித்தி மயக்கவந்[4]
[5]தண்ண [6]லருளன்றி யாரறி வாரே. (6)

வேறு பாடம்: 1. உண்மையும் (ஆ இ) III. 2. முண்மைப்பார் (விசு) (தி) (வ) 3. சித்த (இ) IV. 4. மயக்கமு (ஓ) IV. 5. மண்ண (விசு) 6. லறிவன்றி (ஓ) II.

கருத்து: அறுபத்து நான்கு என எண்ணப்படும் சித்திகள் யோகியின் அறிவை மயக்க, அப்பொழுது கருணையுடன் வந்து, ஞானம் என்ற குறிக்கோளைச் சுட்டிக்காட்டும் குருவின் அருள் இல்லாவிடில், மாணவன் மெய்யறிவு கொண்டு பாச ஞானம், பசு ஞானங்களை நீக்குதலும், மெய்யறிவில் வைராக்கியம் வைப்பதும், அவை கண்டு, பேரொளியாகிய சிவம் அருட்செல்வத்தை நல்குதலும் இயலா.

சித்திகள் யோகியைத் திசைமாற்றும்போது, குருவருள் வாய்த்தால், அஃது அவனுக்குக் குறிக்கோளை உணர்த்தும்.

1565. சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே. (அ, ஔ)

1566. குருவே சிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்குங்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. (அ)

சித்தம் சிவன் ஆட்சி

1567. சித்தம் யாவையும் சிந்தித்திருந்த ஆரும்
அத்தன் உணர்த்துவதாகும் அருளாலே;
சித்தம் யாவையும் திண்சிவம் ஆண்டக்கால்
அத்தனும் அவ் இடத்தே அமர்ந்தானே.

சித்த மியாவையுஞ் சிந்தித் திருந்தாரு[1]
மத்த னுணர்த்துவ தாகு மருளாலே
சித்த மியாவையுந் திண்சிவ மாண்டக்கா[2]
லத்தனு மவ்விடத் தேயமர்ந் தானே. (7)

வேறு பாடம்: 1. திருந்திருஞ் (ஓ) I; திருந்தீர் (ஈ) II; துணர்ந்தீர் (ஓ) II.
2. மானக்கா (விசு) (தி) (வ) (த).

கருத்து: யாரும் எது பற்றியும் உள்ளத்தால் சிந்தித்துத் தெளிந்த கருத்துகள் யாவையும், அவர்களது சொந்த அறிவே ஆயினும், அவ்வறிவுக்கு அறிவாய், உள் நின்று உணர்த்துபவன் சிவன். அருளால் அதைச் செய்கின்றான். (இதை மாந்தர் எண்ணுவதில்லை.) அவர்கள் (குருவருளால்) இதனை உணர்ந்து, தம் உள்ளம் சிவத்தின் ஆளுகைக்கு முழுதும் ஆட்பட்டு, 'நிகழ்வன யாவும் அருளே' எனச் சிந்தித்திருக்கப் பெற்றால், சிவன் அவர்தம் சிந்தையைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவான்.

மாலை மணி விளக்கு

1568. தான் நந்தி நீர்மை உட்சந்திக்கச் சீர்வைத்த
கோன் நந்தி, எந்தை குறிப்பு அறிவார் இல்லை
'வான் நந்தி' என்று மகிழும் ஒருவற்குத்
தான் அந்தி அங்கி தனிச்சுடர் ஆகுமே.

[1]தானந்தி [2]நீர்மையுட் [3]சந்திக்கச் சீர்வைத்த
கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்று மகிழு மொருவற்குத்
தானந்தி யங்கி தனிச்சுட ராகுமே. (8)

வேறு பாடம்: 1. தானந்த (ஆ) I. 2. சீர்மையுட் (ஈ ஓ ஓ) III. 3. சந்தித்த (இ ஈ ஓ) II.

கருத்து: சிவத்தின் 'சொரூபத்தை' அன்பன் உணர்ந்துகொள்ளும் பொருட்டு, அவனது உடம்பின் துவாத சாந்த வெளியில் கேட்கும் நாதத்தை வைத்தவன் - அந்நாதமாகவே இருப்பவன் - சிவமே. ஆனால், தலைவனும் தந்தையுமாக உள்ள அவன் அதனை வைத்த குறிப்பைக் (திருவுளக் கருத்தை) குருவை யன்றி, அறிவார் இல்லை. ஆகவே குருவின் அருளால் அந்த நாதத்தில் தியானம் வைத்து, அகண்டாகார வெளியாகச் சிவசொரூபத்தை உணரும் பேறுடை யானுக்குச், சிவம் மாலையிருளில் ஏற்றிய மணிவிளக்குப் போலே, விளக்கமுறத் தோன்றும் இணையற்ற சுடராவான்.

தான் - ஒருவன்; அன்பன், முதல் மூன்றடியிலும் வரும் நந்திப் பெயர்கள் சிவத்தைக் குறிக்கும். சீர் - ஒலி, நாதம். "சீரினுள் (நாதத்துள்) நந்தியின் நீர்மையைச் சந்திக்க" என்று மாற்றுக. குருவைத் தவிர அறிவாரில்லையென உரை கண்டது, இயல் இயைபு நோக்கி. "அந்தி அங்கிச் சுடர்": அங்கி - தீ. "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" என்றும் (திருவா. சிவபு. அடி. 89), "திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே" என்றும் (திருவா. கோ. பதி. 4) மணிவாசக அடிகள் அருளியன காண்க. வான் - அகண்ட வெளி. மகிழ்ச்சிக் காரணம் தெளிவு. இத்தெளிவைக் காட்டும் உவமையே மாலைவிளக்கு. இது பயன் உவமை.

இப்பாடலில் குருவருள் குறிப்பாக உணர்த்தப்பட்டது.

பரஞானமும் அபர ஞானமும்

1569. திரு ஆகிச் சித்தியும் முத்தியும் சீர்மை
அருளாது அருளும் மயக்கு அறு வாய்மை
பொருள் ஆய வேதாந்த போதமும் நாதன்
உரு அருளாவிடில், ஓர ஒண்ணாதே.

[1]திருவாகிச் சித்தியு முத்தியுஞ் சீர்மை
[2]யருளா [3]தருளு [4]மயக்கறு வாய்மை[5]
பொருளாய வேதாந்த போதமு நாத
[6]னுருவரு ளாவிடி லோரவொண் ணாதே. (9)

வேறு பாடம்: 1. திருவாய (ஓ) IV. 2. மருளா (ஈ ஓ) II. 3. வருளு(த) 4. மயக்கற (ஓ) I. 5. வாய்மைப் (விசு) (தி) (வ) (த) 6. னுருவா யருளா (ஆ ஈ ஓ ஓ) II; னுருவாய் வராவிடி (த).

கருத்து: சொரூப சிவம் பேரறிவே வடிவாக நின்று, 'உணர்த்தாமல் உணர்த்துகின்ற' உண்மை, ஆன்மாவிற்குப் பர முத்தியில் கிடைப்பது. அது பரஞானம். அவ்வுண்மையே மல மயக்கத்தை நீக்குதலின், அதுவே முத்தி, அதுவே சித்தி. அதாவது, அதுவே வீடுபேறு. முதலில் அபர ஞானத்தைச் சிவமே குருவடிவம் தாங்கி எழுந்தருளி, மாணவனுக்கு வழங்காவிடின், வேறு யாரும் உணர்த்தியோ, மாணவன் தானே அறிந்தோ, அதனைச் சிந்திக்க இயலாது.

திரு - செல்வம்; இங்கு பேரறிவு. முத்தி - வீடு. சித்தி - பேறு. பாச நீக்கத்தை வீடு என்றும், சிவானுபவ இன்பத்தைப் பேறு (சிவப்பேறு) என்றும் சித்தாந்த நூல்கள் கூறும். சீர்மை - செம்மை; சொரூபம். "செம்பொருள் காண்பது அறிவு" என்ற குறட்டொடரில், செம்பொருள், குணம்குறி அற்ற இறைப்பொருளே யாதல் காண்க. அருளாது அருளல் - சொல்லாமற் சொல்லுதல். மயக்கு - ஆணவ மலத்தால் விளையும் மயக்கம். மயக்கம் - பிறழ்ந்த அறிவு; திரிபு. வாய்மை - இறைவனின் உண்மை. 'சத்' என்பது இதுவே. வேதாந்த போதம் - வேதாந்தத்தைச் சிந்தித்துத் தெளியும் அறிவு. சொரூப் சிவம் பரஞானம் வழங்குவது பின்னே. முற்பட, அவனே மானிடவடிவிற் குருவாக வந்து, அபர ஞானத்தை உணர்த்த வேண்டும் என்பார், "வேதாந்த போதமும்" என உம்மை கொடுத்தார். எதிரது தழீஇய எச்சவும்மை.

கொண்டு கூட்டு: சீர்மை திருவாகி, அருளாது அருளும் மயக்கறு வாய்மை சித்தியும் முத்தியும் (ஆகும்) அவ்வாய்மை பொருளாய் வேதாந்த போதமும் நாதன் உரு அருளாவிடில் ஓர ஒண்ணாது''.

இங்கும் வேண்டும், அங்கும் வேண்டும்

1570. பத்தியும் ஞான வயிராகமும், பர-
சித்திக்கு வித்தாம் சிவோகமே சேர்த்தலால்
முத்தியின் ஞானம் முளைத்தலால், அம்முளை
சத்தி அருள்தரின், தான் எளிதாமே.

பத்தியு ஞான [1]வயிராக மும்பர
சித்திக்கு வித்தாஞ் [2]சிவோகமே சேர்தலான்
[3]முத்தியின் ஞான முளைத்தலா லம்முளை
சத்தி யருடரிற் றானெளி தாமே. (10)

வேறு பாடம்: 1. வைராக்கிய (ஈ) II. 2. சிவயோகமே (ஈ) I. 3. முத்திக்கு (ஓ) IV.

கருத்து: பரசித்தி என்பது பரம்பொருட் பேறு. சிவப்பேறு. அதற்கு வித்திடுவது - தோற்றுவாய் செய்வது - 'சிவோகம்' பாவனை செய்தல். (இதனைக் குரு உபதேசிக்கின்றான்). இப்பாவனையைத் தியானத்தில் வைத்தால் பத்தி, ஞானம், வைராக்கியம் - மூன்றும் தோன்றும். இவற்றால் சாதனை செய்யும்போது, முத்திக்கு நேர்முகக் காரணமான பரஞானம் தோன்றும். அதனை நல்குபவள் பராசத்தி. அவள் அருள் கிடைத்தால், இந்த ஞானம் எளிதில் வாய்க்கும்.

இப்பாடலில் மூன்று படிநிலைகள் கூறப்படுகின்றன. முதலில் குரு சிவோகம் பாவனையை உபதேசிக்கின்றான். இதற்குச் "சந்தி நிபாதம்" எனப்படும் சத்தியின் அருள் மாணவனிடம் பதிதல் என்பது நடந்திருக்க வேண்டும். இரண்டாவது படிநிலை, ஆன்மா பரசிவத்தையும் பராசத்தியையும் தனது சிதாகாசத்தில் (பரவெளியில்) தரிசிக்கும் நிலை. அதற்கும் மேல், மூன்றாவது படிநிலை: ஆன்மா சொருப சிவத்தை உணர்தல் வேண்டும். அதற்குப் பராசத்தி குருவாக இருந்து 'உபதேசிக்க', அதன்படி, அவளையும் விட்டு, உணர்வை மேற்செலுத்த வேண்டும். எனவே, மூன்று படிநிலைகளிலும் சத்தியின் அருள் வேண்டப்படுவதாயிற்று.

வயிராகம் - வைராக்கியம் என்பதன் திரிபு. முத்தியின் - பரமுத்திக்கு ஏதுவாக.

குறிப்பு: சுவடிகளிலும் பதிப்புகளிலும் இதனை அடுத்துள்ள 'பின்னெய்த' என்ற பாடல் சிறு மாற்றத்துடன் பின்னே 'தவம்' என்ற இயலில் வருகிறது. அஃது அங்கு இருப்பதே பொருத்தம். எனவே, இங்கு விடப்படுகின்றது.

ஏகனாகி நிற்கும் இன்பானுபவம்

1571. சிவமான ஞானந் [1]தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் [2]தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத் தேகஞ்[3]
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே. (11)

வேறு பாடம்: 1. தெய்வவொண் (இ) I. 2. தெளியவொன் றாமுத்தி (ஓ) II. 3. தேயேகச் (ஓ) IV; தேகச் (ஓ) I.

கருத்து: ஆன்மாவுக்கு மாயையால் விளைந்த பற்றுக்கள் நீங்கித், தனது சார்பும், அறிவும், முதலும் சிவமே என்ற தெளிவு பிறந்தால், ஞானசித்திகள் வாய்க்கும். ஆன்மா 'தான் கருத்தா அல்லன், தன்னுள் இருந்து நடத்தும் கருத்தா சிவனே' என்னும் தெளி வினைப் பெற்றால், முத்தி வாய்க்கும். அதற்கு மேலும் வளரும் சிவஞானம், ஆன்மா சிவமாகிய பரம்பொருளோடு தன்னை 'ஏகமாக' - ஒன்றாக - உணர்தலாகும். இவ்வாறு சிவமேயாகி நிற்றல், அவனோடு கலந்து, தான் இல்லையாகிவிடுதல் அன்று. சிவம் பேரின்பம் வழங்க, ஆன்மா அதனை, 'நான் துய்க்கின்றேன்' என்ற உணர்வு இன்றித் துய்க்கும்.

நல்குவோன் உண்டெனில், கொள்வோனும் உண்டன்றோ?

அருட் சார்பு

1572. அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்
செறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்
மறந்தொழிந் தேன்மதி [1]மானிடர் வாழ்க்கை
பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே. (12)

வேறு பாடம்: 1. மாண்டவர் (ஈ ஓ) II; மாணவ (ஓ) I.

கருத்து: குருநாதன் பதிஞானத்தை உபதேசிக்க, அதில் தோய்ந்து, தெளிந்து, திருவருள் என் அறிவில் பதியப்பெற்றேன். அருளறிவால் உலகம் முழுவதையும் (இவ்வுலக வாழ்வை) சிந்தித்து, எல்லாம் அருளின் வண்ணமாயிருக்கும் தன்மையை அறிந்து கொண்டேன். ஆதலின், மன - அறிவு கொண்டு வாழும் பான்மையை விட்டொழித் தேன். பிறவிச் சார்பாகிய தத்துவச் சார்பை (36 தத்துவங்களைச் சார்ந்திருத்தலை) நீக்கித் திருவருட் சார்பில் வாழ்கின்றேன்.

'ஓதி' என்பதை 'ஓத' என மாற்றுக. பிரிந்து என்பது எதுகை நோக்கித் திரிந்தது. பிறவி, ஆகுபெயராய் அதன் சார்பைக் குறித்தது. "சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்" என்னும் திருக்குறள் காண்க. (பா. 359)

கண்ணால் யானும் கண்டேன், காண்க

1573. தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்;
பிரிக்கின்ற இந்தப் பிணக்கு அறுத்து, எல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டுகொண்டேனே.

தரிக்கின்ற பல்லுயிர்க் கெல்லாந் தலைவ
னிருக்கின்ற தன்மையை யேது முணரார்
பிரிக்கின்ற விந்தப் பிணக்கறுத் தெல்லாங்
கருக்கொண்ட வீசனைக் கண்டுகொண் டேனே. (13)

கருத்து: ஞானாசிரியன் தோற்றுவித்த சித்த வெளிச் சோதிக் காட்சியை இவ்வியல் முதற் பாடலிற் குறிப்பாகக் கூறிய ஆசிரியர், இங்கு வெளிப்படையாகக் கூறுகின்றார்: உலகில் தங்கி வாழும் பலவகை உயிர்களையும் படைத்துக் காத்து ஒடுக்குகின்ற முதல்வன் உண்டு என்பதைப் பலர் சிறிதும் அறியார். அவனை அறியவிடாது மாந்தர் அறிவைத் தடைப்படுத்தும் ஆணவமல மறைப்பை, மானிட வடிவில், குருவாக எழுந்தருளி வந்து, சிறிதே விலக்கி, என் சித்தவெளியில் சோதியாக நின்ற சிவத்தை - உலகப் படைப்பு முழுவதையும், தன் சங்கற்பத்தில் வைத்தே செய்யும் முதல்வனை - நான் கண்டுகொண்டேன்.

தரிக்கின்ற - சிவனது காத்தல் தொழிலால் வாழ்கின்ற. பிணக்கு - மாறுபாடுகள்; ஆணவமலமும் ஐம்புலன் மயக்கமும். மணிவாசக அடிகள், இவை தமக்கு நீங்கிய இடம் திருப்பெருந்துறையாதலின், அதனைப் "பிணக்கிலாத பெருந்துறை" என்றார். (திருவா. திருக்கழுக்குன்றப் பதிகம். 1) அடிகள் மேலும், தமக்குச் சிவகுரு காட்டியருளிய சித்த வெளிக் காட்சியை, "சங்கரா, கருணையினால், பெரியோன் ஒருவன், 'கண்டுகொள்' என்று, உன் கழல் அடி காட்டிப் 'பிரியேன்' என்று அருளிய அருளும்" என்று கூறுவார். (திருவா. எண்ணப்பதிகம், 2) 'கண்டுகொள்ளுதல்' என்னும் சொல்லாட்சி, திருமந்திரத்துப் போலத் திருவாசகத்தும் வருதல் காண்க. காண் என்பதனினும் 'கண்டுகொள்' என்பது, ஞானாசிரியன்பால் மாணவனுக்கு உள்ள உரிமையைப் புலப்படுத்தும்.

81. திருவடிப் பேறு

நடந்து சிவந்தது நந்தியின் பாதம்

1574. இசைந்து எழும் அன்பில் எழுந்தபடியில்
பசைந்திடும் ஈசனார் பாசத்துள் ஏகச்,
சிவந்த; குரு வந்து சென்னியில் வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து வந்தே.

இசைந்தெழு மன்பி லெழுந்த படியிற்[1]
[2]பசைந்திடு [3]மீசனார் பாசத்து ளேகச்
சிவந்த குருவந்து [4]சென்னியில் வைக்க
வுவந்த குருபத முள்ளத்து வந்தே[5]. (1)

வேறு பாடம்: 1. படியே (ஓ) IV. 2. பசைந்தெழு (ஓ) IV. 3. மீசரைப் (ஓ) II. 4. சென்னிகை (ஓ ஓ) II. 5. வந்ததே (விசு) (தி) (வ)

கருத்து: ஞானாசிரியன் எழுந்தருளித் தனது அடியை என் தலை மீது வைத்துப் பரிச தீக்கை செய்தான். நல்லடியார் உள்ளத்தில்; அவர் அடிமைத் திறத்தில் வாழ இசைந்தமையால், முறுகியெழும் அன்பு கண்டு உவந்து, சிவபெருமான் அவருள்ளத்தில் புகுந்து நின்றது போலே, பாசப்பிணிப்புடைய எனது உள்ளத்திலும் அவன் புகக் கருணை பாலித்தமையால், அவனது திருவடிகள் என் சித்த வெளியில் புகுந்து சிவந்தன.

நல்லன்பரின் உள்ளம் மெத்தென்றிருக்கும். ஆகவே அங்குச் சிவக்காத திருவடிகள், பாசம் நிறைந்த தமது உள்ளத்தின் வல்லென்ற பரப்பிற் பட்டுச் சிவந்தன என்றார்.

மானிட குருவின் திருவடி தீக்கையின் விளைவாகத் தமது சித்தத்தில் திருவருள் பதிந்தமையைத் திருவடிப் பேறாகக் கூறினர். திருவருளே திருவடி. "குரு வந்து சென்னியில் வைக்க" என்ற தொடரில், அவருடைய திருவடி என்பது ஆற்றலாற் பெறப்பட்டது. இதை எண்ணாத முன்னை உரையாசிரியர் "சென்னிகை வைக்க" என்னும் பாடத்தைத் தேர்ந்தனர். "அடியேன் சிரத்தினில் நற்பதமும் அளித்தான் எங்கள் நந்தியே" என்றே ஆசிரியர், தமது வரலாற்றினும் கூறுவர். (இந்நூல் 'வரலாறு' - இயலிற் காண்க.)

இப்பாடலோடு, "தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி, பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும்

பெருமை போற்றி" என மணிவாசக அடிகள் கூறியதை ஒப்புநோக்குக. (திருவா. திருச்சதகம். 69)

அருள் - அரசு

1575. தாள் தந்தபோதே தனைத் தந்த எம் இறை
வாள் தந்து ஞான, வலியையும் தந்திட்டு,
வீடு அந்தம் இன்றியே ஆள்க என விட்டு
அருட்பாடு; இன்முடி வைத்துப் பார்வேந்து தந்ததே.

தாடந்த போதே [1]தனைத்தந்த வெம்மிறை[2]
[3]வாடந்து ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
[4]பாடின் முடிவைத்துப் [5]பார்வேந்து தந்ததே. (2)

வேறு பாடம்: 1. தலைதந்த (ஈ ஓ) III; தலைவந்த (ஓ) I. 2. தெம் மிறை (ஆ இ) I. 3. வாடந்த (ஈ ஒ ஓ) II. 4. பாலின் (ஆ இ ஈ ஓ) II. 5. பார்வந்து (விசு) (தி) (வ) (த).

கருத்து: ஞானாசிரியனாக என் முன் எழுந்தருளித் திருவடி சூட்டிய போதே, தன்னை எனக்குக் கொடுக்க ஆயத்தமாகிய எங்கள் இறைவன், (படிப்படியே என்னைப் பக்குவப்படுத்தி,) மெய்யுணர் வாகிய வாளையும், (நிராசை, வைராக்கியம், தவம், தியாகம் என்னும்) நால்வகைப் படைகளையும் தந்து, இனிய முடியையும் சூட்டி, 'இவ்வரண்மனையில் அளவில்லாத நெடுங்காலம் இருந்து, உலகை அருளால் ஆள்வாயாக' என வரமருளி, அருளிலே வைத்து, இவ்வுலக இறைமையை எனக்குத் தந்தான். அவனுடைய அளப்பருங் கருணை இருந்தவாறு என்னே!

முனிவனுக்கு ஞானத்தை வாள் என்றும், அரசனுக்குப் படைகளை வலிமை என்றும் கூறுதல் மரபு. எனவே, 'ஞான வாள் தந்து' என உருவகம் காண்க. "அருட்பாடு விட்டு" என மாற்றுக. பாடு - பக்கம். ஏழாம் வேற்றமைப் பொருளில் வந்த பெயர்ச்சொல். அருளின்கண் இருக்கச் செய்து என்க. வேந்து - இறைமை. அரசாளும் உரிமை. "திருவருட் செங்கோல் நினக்கு அளித்தோம், நீயே ஆள்க அருள் ஒளியால் என்று அளித்த தனிச்சிவமே"; "தலைகால் இங்கறியாதே திரிந்த சிறியேனைத் தான் வலிந்து ஆட்கொண்டருளித் தடை முழுதும் தவிர்த்தே, மலைவறு மெய்யறிவு அளித்தே அருளமுதம் அருத்தி, வல்லப சத்திகள் எல்லாம் மருவியிடப் புரிந்து, நிலையுறவே தானும் அடியேனும் ஒரு வடிவாய் நிறைய நிறைவித்து, உயர்ந்த நிலையதன்

மேல் அமர்த்தி, அலர்தலைப்பேரருட்சோதி அரசு கொடுத்தருளி ஆடுகின்ற அரசே", "நீ அஞ்சலை என்றருளி வையமிசைத் தனியிருத்தி மணிமுடியும் சூட்டி" என வரும் வள்ளலார் திருமொழிகளை (திருவருட்பா: அருள் விளக்க மாலை, பா. 88, 100, 91) இப்பாடலுடன் ஒப்பு நோக்குக.

சின் முத்திரை

1576. தான் அவன் ஆகிச் சொரூபத்து வந்திட்டு
ஆன சொரூபங்கள் நான்கும் அகன்று அற,
ஏனைய முத்திரை யீறு ஆண்டனன் நந்தி
தான் அடி முன் சூட்டித் தாபித்தது உண்மையே.

தானவ [1]னாகிச் [2]சொரூபத்து வந்திட்டு
வான சொரூபங்க ணான்கு மகன்றற[3]
ஏனைய முத்திரை [4]யீறாண் டனனந்தி
தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே. (3)

வேறு பாடம்: 1. னாதி (ஆ இ) I. 2. சொரூபத்துள் (ஆ இ) III. 3. மகன்றவே (ஒ) II; மகற்றவே (ஆ) II; மகற்றின (விசு) (தி) (த) 4. யீந்தாண்டனன்னந்தி (த) (தி) ; யீந்தாண்ட நன்னந்தி (விசு) (வ).

கருத்து: நான் சிவமாகி, அவனது சொரூபத்தில் அடங்கி, முன்னே எனக்கு இருந்த ஆணவம், கன்மம், மாயை, நான் என்ற அகப்பற்று - ஆகியவற்றால் உண்டாகியிருந்த இயல்புகள் நீங்கிப், பிறவியே அற்றுப்போகுமாறு, இறுதியில் சின் முத்திரை காட்டி ஆட்கொண்ட சிவம், தொடக்கத்தில் தனது திருவடியை எனது தலையிற் சூட்டி என்னை அருள்வாழ்வில் (அடியவர் வாழ்வில்) நிலை நிறுத்தினான்.

சின்முத்திரையை "ஏனைய முத்திரை" எனப்பிரித்துக் கூறயமையால், பிற முத்திரைகளால் முன்னேயும் பல அனுபவங்களைத் தந்தான் என்க. ஈறு - இறுதியில்.

வாய்திறவா அனுபவம்

1577. உரை அற்று, உணர்வு அற்று, உயிர் பரம் அற்று,
திரை அற்ற நீர்போல் சிவமாதல் தீர்வு
கரை அற்ற சத்(தி) ஆதி நான்கும் கடந்த
சொரூபத்து இருத்தினன்; சொல் இறந்தோமே.

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போற் சிவமாத றீர்வு[1]
கரையற்ற [2]சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் [3]திருத்தினன் சொல்லிறந் தோமே. (4)

வேறு பாடம்: 1. றீர்வுற்றுக் (ஓ) II; றீர்த்தங் (ஈ) II; றீர்த்துக் (வி சு) (தி) (வ) (த) 2. சத்தியாதி (சுவ) (இது பொருத்தமான பாடமாயினும் இவ்வடியிற் பதின் மூன்று எழுத்துக்கள் வருதலால், இதன் மருவிய வடிவம் பாடமாகக் (பதிப்புகளில் உள்ளவாறு) கொள்ளப்பட்டது. 3. திருந்தனன் (ஓ) II; திருத்தி நற் (இ) I.

கருத்து: நான் உணர்ந்த இன்ப - அனுபவத்தைச் சொல்ல அறியாமல், 'நான் அதனை அனுபவிக்கின்றேன்' என்ற உணர்வும் இன்றி, உயிரைப் பற்றிய சுமையாகிய பற்றுகள் இன்றி, 'அலையற்ற ஆழ்கடல்போல் அசைவு அற்றிருக்கும் சிவமாக நிறைதல்' என்பது முற்றுப்பெறுவதாகிய - சத்தி, சிவம், பராசத்தி, பரசிவம் என்னும் நான்கு நிலைகளையும் கடந்த - சொரூப சிவத்தை உணரும் பேற்றினை அவன் எனக்கு நல்கினான். அஃது அத்தகையது ஆதலின், பேச்சற்று நின்றேன்.

தீர்தல் - முற்றுப் பெறுதல். "தீர்ந்த அன்பாய அன்பர்க்கு" என்ற ஆட்சியைக் (திருவா. திருச்சத. பா. 69) காண்க. தீர்வு ஆகிய சொரூபம் என இணைக்க. சத்தி முதலிய நான்கும் எளிதில் கடந்து செல்லப்பெறுவன அல்லவாதலின் "கரையற்ற" என்றார். கரை - எல்லை.

1578. குரவ னுயிர்முச் சொரூபமும் கைக்கொண்
டரிய பொருண்முத் திரையாகக் கொண்டு
பெரிய பிரானடி நந்திபேச் சற்று
வுருகிட வென்னையங் குய்யக்கொண் டானே. (அ)

1579. பேச்சற்ற வின்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற வென்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதிக் கடன்மூன்றுங் கைக்கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாடந்து மன்னுமே. (அ, ஔ)

நெறி - ஞானம் - அருள்

1580. இதயத்து நாட்டத்து மென்றன் சிரத்தும்
பதிவித்த [1]வந்தப் பராபர னந்தி
கதிவைத்த வாறுமெய் காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. (5)

வேறு பாடம்: 1. பாதம் (ஈ ஒ ஓ) III.

கருத்து: எனது அனாகதத் தானம், ஆணைத் தானம் (புருவத்து இடை), சகஸ்ராரத் தானம் - இவ்விடங்களில் தன்னை நிலையாக இருத்திக் கொண்ட சிவம், அந்நிலைகளை நான் அடைதற்குரிய நெறியை அமைத்ததும், அவ்வவ்விடங்களின் அனுபவத்தால் மெய்யுணர்வு அருளியதும், நான் ஒழுகும் விதியாக அருளை நல்கியதும் சொல்லைக் கடந்த பெருமை யுடையனவாகும்.

பதிவித்தல் - சகச சமாதி. இது தீக்கை என்கின்ற தொடக்கமன்று; அருளால் பலகாலம் பயின்ற பின்னே வாய்ப்பது.

1581. திருவடி வைத்தென் சிரத்தரு ணோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைச்
கருவழி வற்றிடக் கண்டுகொண் டேனே. (அ ஔ)

1582. திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானங் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல நீக்குந்
திருவடி ஞானந் திண்சித்தி முத்தியே. (அ)

1583. மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்
றாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே. (அ, ஔ)

ஞான உடம்பு

1584. கழல் ஆர் கமலத் திருவடி என்னும்
நிழல் சேரப் பெற்றேன்; நெடுமால் அறியா
அழல் சேரும் அங்கியுள் ஆதிப் பிரானும்
குழல் சேரும் என் உயிர் கூடும் குலைத்தே.

கழலார் கமலத் திருவடி யென்னு
நிழல்சேரப் பெற்றே னெடுமா லறியா
வழல்சேரு மங்கியு ளாதிப் பிரானுங்
குழல்சேரு [1]மென்னுயிர் கூடுங் குலைத்தே[2]. (6)

வேறு பாடம்: 1. மின்னுயிர்க் (விசு); மென்னுயிர்க் (தி) (வ) (த)
2. குலைந்தே (ஈ) I; குலைத்ததே (ஓ) II; குலைந்ததே (விசு).

கருத்து: வேதக் கழல் கட்டிய திருவடி நிழலை அடைந்தேன். திருமாலும் அறியாத சிவம், நெருப்பைப் பிரியாது இருக்கும் வெப்பம் போல, என் உயிரோடும், அதன் தன்மையை மாற்றிக்கூடி, என்னைவிட்டு நீங்காதிருக்கின்றான்.

உள் - உவமவுருபு. குலைத்து - மாற்றி; ஞானவுடம்பாக்கி.

திருவடித் தொண்டின் பயன்

1585. முடிமன்ன ராய்மூ வுலகம தாள்வ
ரடிமன்ன ரின்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன [1]ராய்நின்ற தேவர்க ளீசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே. (7)

வேறு பாடம்: 1. ராய்நின்று (ஓ) I.

கருத்து: சிவபெருமானது திருவடியில் நிலையான சார்புடையோர் எய்தும் இன்பத்திற்கு எல்லையே இல்லை. அவர்கள் மூவுலகிற்கும் அரசுரிமை பெற்று ஆள்வர். இன்று தேவர் உலகில் மன்னராயிருப் போரும் முன்பு, சிவபெருமானுக்குக் குடிகளாய்ப் பொய்த்தலின்றிக் குற்றேவல் செய்தோரே.

மன்னர், (2, 4 ஆம் அடிகள்) - நிலை பெற்றோர்.

ஞானத்தேன்

1586. வைத்தேன் அடிகள் மனத்தினுள்ளே நான்
பொய்த்தே எரியும் புலன்வழி போகாமல்;
எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிடும்
மெய்த்தேன் அறிந்தேன் அவ்வேதத்தின் அந்தமே.

வைத்தே [1]னடிகண் மனத்தினுள் ளேநான்
பொய்த்தே யெரியும் புலன்வழி போகாம
லெய்த்தே னுழலு மிருவினை மாற்றிடு[2]
மெய்த்தே னறிந்தேனவ் வேதத்தி னந்தமே. (8)

வேறு பாடம்: 1. னடிக்கண் (விசு) 2. மாற்றிட்டு (ஓ) I; மாய்த்திடு (ஆ) II

கருத்து: சிவபெருமான் திருவடிச் சார்பு, நிலைத்து நில்லாத தாயினும், உள்ள நேரத்தில், மனத்தை வெதுப்புவதாகிய புலனிச்சையின்படி நான் நடவாதவாறு தடுப்பது. பிறந்து, பிறந்து உழன்று இளைத்தற்கு ஏதுவாகப், பெருகிய வண்ணம் இருக்கும் இருவினைகளையும் நீக்க வல்லது. வேதத்தின் முடிபொருளான அது, மெய்யுணர்வு என்றும், மருந்தாய் அமையும் தேன் என்றும் அறிந்துகொண்டேன். ஆதலால் நான் அத்திருவடி இணையை மறவாது சிந்திக்கின்றேன்.

சொரூபம் கண்டோர்

1587. அடிசார லாமண்ணல் பாத மிரண்டு
முடிசார வைத்தனர் முன்னே முனிவர்
படிசார்ந்த வின்பப் பழவடி வெள்ளங்[1]
குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே. (9)

வேறு பாடம் : 1. வெள்ள (ஓ) I; வெள்ளக் (விசு) (தி) (வ) (தி)

கருத்து: முற்காலத்து முனிவர்கள் சிவபெருமானது திருவடியைப் பற்றுவதற்கு ஏதுவாகக் குருவின் திருவடிகளை வணங்கினர். (அன்பு, ஞானம், வைராக்கியம் - இவற்றில்) படி முறையில் பக்குவம் எய்தியே உணரத்தக்கதாகிய சொரூபத்தின் எல்லையற்ற அகண்டா காரத்தினை உணர்ந்து, அதில் அடங்கி நிற்போராக, அதனோடு சமாதி நிலை கூடி நிற்போரது செயல் இது.

எல்லாம் திருவடியே

1588. மந்திர மாவது மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவது
மெந்தை பிரான்ற னிணையடி தானே. (10)

கருத்து: எம் தந்தையும் தலைவனும் ஆகிய சிவனுடைய திருவடியைத் தியானித்து, அதில் சமாதி கூடுவோர்க்கு (அவை தவிர வேறு ஒன்றிலும் இச்சையில்லையாதலின்) அவர்கட்கு மந்திரமும், நன் மருந்தும், நூல்களும், கொடைச் செயலும், தூய நெறியும், அதன் நற்பயனும் அத்திருவடியே ஆகும்.

மந்திரமும் மருந்தும் நோய் நீக்குவன. நூல்கள் அறநூல்கள். அவையும் கொடைச் செயலும் புண்ணியப் பயன் தருவன. நெறி தூயதாயின், பயன் நல்லதாகும். சுந்தரம் - நல்ல.

82. ஞாதுரு, ஞான, நேயம்

ஒன்றினால் ஆனந்தம்

1589. நீங்காச் சிவானந்த நேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா; படரினு
மாங்கார நீங்கி யதனிலை நிற்கவே
நீங்கா வமுத நிலைபெற லாமே. (1)

கருத்து: முத்திநிலை அனுபவத்தில், அறிவோனாகிய ஆன்மா, அறியப்படும் பொருள் ஆகிய சிவானந்தம், ஆன்மாபெறும் அறிவு என்னும் மூன்றின் நிலைபற்றியும் கூறுகின்றார்.

சிவானந்தம் ஆகிய நேயத்திலே ஆன்மா அழுந்தி நிற்க, அவ்வானந்தம் இடையறாது கிடைக்கும். அவனது அறிவோடு இதுவரை இருந்த ஆணவ மலம், இப்பொழுது விலகிநிற்கும். அவனது அறிவை மறைக்காது. ஒருகால், பழக்கவாசனையால் அது மறைத்தாலும், அதனால் வினையும் நான் என்ற முனைப்பு, திருவருளால், தானே நீங்கும். ஆன்மா தூய்மை பெறும். முன்னைப் போலச் சிவானந்தம் என்ற அமுதம் நீங்காது கிடைக்கும்.

அதன் நிலை - ஆன்மாவின் தனி நிலை. "நேயத்தே நின்றிட, நீங்காச் சிவானந்தம்" எய்தும் என ஒரு சொல் வருவிக்க. பாசம் மறைக்கத் தொடங்கினால், நேயத்தில் நீங்காது நிற்றல் இல்லை.

மூன்றும் ஒன்றாயின

1590. நேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நீங்கிடு[1]
நேயத்தின் ஞாதுரு நேயத்தில் வீடாகு
நேயத்தின் நேயத்தை நேயத்தை யுற்றவர்
ஆயத்தில் நின்ற வறிவறி வாரே[2]. (2)

வேறு பாடம்: 1. நின்றிடு (ஒ ஓ) II. 2. வோரே (இ ஒ) II.

கருத்து: சிவத்தினிடம் அன்பும், சிவானந்தம் பெறுவதில் நாட்டமும் கொண்டு, அவ்வானந்தத்தை அடைந்தவர், அதை நுகர்வரே அன்றி, "அறிவால் அறிகிறோம்" என உணர்வரோ? மாட்டார். சிவானந்தத்தை எய்திய ஆன்மா, அவ்வானந்த அனுபவத்தில் தற்போதத்திலிருந்து விடுபடும். எனவே ஞானமும் இல்லை; ஞாதுருவும் இல்லை. நேயம் ஒன்றே உள்ளது. (இதனுள் அவ்விரண்டும் ஒடுங்கின.) அறிவோன் ஞாதுரு. அவன் ஆன்மா. அறிவு - ஆன்ம போதம் (தற்போதம்). அது ஞானம்; அறியப்படும் பொருள் நேயம். அது சிவானந்தம்.

வேறுபாட்டுணர்ச்சி இல்லை

1591. தான் என்று, அவன் என்று இரண்டாகும் தத்துவம்,
தான் என்ற, அவன் என்ற இரண்டும் தனில் கண்டு
தான் என்ற பூவை அவனடிச் சாத்தினால்
நான் என்று, அவன் என்கை நல்லதொன்று அன்றே.

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென்ற பூவை யவனடிச் சாத்தினா
னானென் றவனென்கை நல்லதொன் றன்றே. (3)

கருத்து: ஆன்மா, சிவம் எனப் பொருள் இரண்டு, ஆனால் இவ்விரண்டையும் ஒருவன் தனது சீவனிலே கண்டு, தான் என்று எண்ணும் தற்போதத்தை அவனுக்கு அர்ப்பணித்தால், தான் வேறு, சிவம் வேறு என்ற உணர்வு அவனுக்குத் தோன்றாது.

தத்துவம் - உண்மைப் பொருள். நல்லது - அப்பொழுது தோன்றும் பொருத்தம் (Relevance)

ஒன்றிப்போனேன்; அச்சமில்லை

1592. வைச்சன வாறாறு [1]மாற்றி யெனைவைத்து
மெச்சப் [2]பரன்றன் வியாத்துவ மேலிட்டு
நிச்சய மாக்கிச் சிவமாக்கி நேயத்தா
லச்சங் கெடுத்தென்னை யாண்டன னந்தியே. (4)

வேறு பாடம்: 1. மகற்றி (ஆ இ ஒ) II (பதிப்புகளில் உள்ள பாடம் மேற்கொள்ளப்பட்டது.) 2. பரமன்றன் (ஆ இ) II.

கருத்து: உலகம், உடம்பு ஆகியவற்றுக்கு மூலப்பொருள்களாக வைத்த 36 தத்துவங்களையும் கடக்கச் செய்து, அவற்றின் துணையை வேண்டாத நிலையில், எனக்கு உயிருணர்வை அளித்தான் சிவபெருமான். பின்பு, தனது வியாபகத்துள்ளே அடங்கச் செய்தான். என்றும் பிரியாமல் அந்நிலையிலேயே இருக்கச் செய்தான். என்னைச் சிவம் ஆக்கினான். இவ்வாறு நேயத்தோடு (அறியப்படுபொருள்) நான் ஒன்றியதால், என்னை அச்சம் நீக்கி ஆட்கொண்டான்.

அச்சம் - எளிமை நோக்கி மலங்கள் மீண்டும் வந்து பற்றுமோ என்னும் அச்சம். நிச்சயமாக்குவதற்கு முன்பு அந்நிலை இருந்தது. சிவமாக்கி ஒன்றுவித்த பின்னரே அச்சம் அகன்றது.

மூடனும் ஞானியும்

1593. முன்னை அறிவு, அறியாத அம்மூடர் போல்
பின்னை அறிவு, அறியாமையைப் பேதித்தான்
தன்னை அறியப் பரன் ஆக்கித் தற்சிவத்து
என்னை அறிவித்து இருந்தனன் நந்தியே.

முன்னை யறிவறி யாதவம் மூடர்போற்
பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்
தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்
தென்னை யறிவித் திருந்தன னந்தியே. (5)

கருத்து: சிவபெருமான் என்னை ஆட்கொள்வதற்கு முன்பும், அறிவுக்கும் அறியாமைக்கும் வேறுபாடு அறியாத மூடனைப்போல்

கிடந்தேன். அவன் ஆட்கொண்ட பின்பும், அவ்வேறுபாடு அறியாதவனாகவே, அவன் செய்துவிட்டான். எவ்வாறு? நான் என்னையே அறிந்து கொள்ளும் பொருட்டு, தத்துவங்களைக் கடந்த - முக்கியமாக, அறிகருவிகளைக் கடந்த - பரநிலையிலே என்னை வைத்தான். தத்துவச் சார்பிலிருந்து நீங்கிய நான் என்னை, 'நானாக' அறியவில்லை. பரசிவத்தோடு வேற்றுமை யில்லாதவனாகவே அறிந்தேன். (பின்பு என்னைத் தனது திருவருள் வியாபகத்தில் அடக்கி, அருளால் அனைத்தையும் அறியச் செய்தான். அஃது என் அறிவோ? அருளறிவு அன்றோ? பின்னர் என்னைச் 'சிவம்' ஆக்கினான். அப்போது, ('நான்' இல்லை) தற்சிவமே (நானாக நின்ற சிவம்) இருந்தது. அதனால், என்னைச் 'சிவமாக' உணர்ந்தேனே யன்றி, 'நானாக' உணரவில்லை.

அறிவு (ஞானம்) தனியே பிரித்தறியப்படவில்லை என்பதையும், அறிபவன் (ஞாதுரு) அறியப்படுபொருளில் (நேயம்) ஒன்றி விட்டதையும் கூறினார்.

அனுபவம் புதுமை

1594. காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்
கோணாத போகமுங் கூடாத கூட்டமு
நாணாத நாணமு நாதாந்த போதமுங்
காணா யெனவந்து காட்டின னந்தியே. (6)

கருத்து: அகக்காட்சி காண்கின்ற உட்புலன் ஆகிய காட்சி, கேள்வி ஆகியவையும், நெறி பிறழாத இன்ப அனுபவமும், பிரிந்தாரைக் கூடுதலின்றி, என்றும் 'ஒன்றாயிருக்கும்' சிவத்தை உணர்ந்து ஒன்றிநிற்கும் சேர்க்கையும், தன் அறியாமைக்குத் தானே வெட்க முறுதலும், நாத தத்துவத்தைக் கடந்த பரவெளி ஞானமும் இவையே, காண்பாய்' என்று சிவபெருமான் எனக்குக் காட்டினான்.

புறப்பொருளால் இன்பம் அனுபவிக்க முயலும்பொழுது, அதனை அடைய நெறிபிறழ நேரலாம். அகத்தில் அருளை நினைந்து இன்புறுதலின், இது நெறி பிறழா இன்பம். இவையெல்லாம் முதற்படி. அடுத்தபடி, இவற்றை ஆன்மா, தான் அறிகின்ற அறிவின்றி அறிதல். காண்கின்றோம் என்னும் உணர்வு இன்றிக் காணுதல் - இது காணாத காட்சி. இது போல ஏனையவற்றையும் கொள்க.

பேசாமையின் பெருமை

1595. மோனங்கை வந்தோற்கு முத்தியுங் கைகூடு
மோனங்கை வந்தோற்குச் சித்தியு முன்னிற்கு
மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்
மோனங்கை வந்தைங் கருமமு முன்னுமே. (7)

கருத்து: மௌனமாய் இருக்க வல்லவர்க்கு முத்தியும், அதன் முன் அட்டமாசித்தியும் எய்தும். அவர்க்கு அசபை மந்திரத்தியானம் முதிர்ந்து பயன்தரும். அவர் சிவமே ஆகி, ஐந்தொழிலும் இயற்றும் வல்லமை பெறுவர். (ஆனால் இயற்றார்.)

மௌனமும், நேயப் பொருளோடு ஞானம் ஒன்றிநிற்றலின் அடையாளம். தென்முகக் கடவுள் உயர் ஞான அனுபவத்தைச் சின்முத்திரையால் மட்டுமன்றி மௌனத்தாலும் உணர்த்தினான் என்பதை எண்ணுக. உணர்வால் சிவத்தோடு ஒருமைப்படுவதனால், அவன் சங்கற்பமாத்திரையால் ஐந்தொழில்களையும் செய்தல் போலத் தாமும் செய்வதாக உணர்வரே அன்றிச் செய்யார் என்க.

மோனத்தால் முத்தி

1596. முத்திரை மூன்றின் முடிந்தது, மூன்றின்பால்,
வைத்த கலை காலம் நால் மடங்கால் மாற்றி
உய்த்த ‘வத்து - ஆனந்தத்து’, ஒண்குரு பாதத்தே
பெத்தம் அறுத்தோர் பிறந்து இறவாரே.

முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின்பால்
வைத்த [1]கலைகால நான்மடங் கான்மாற்றி
உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே. (8)

வேறு பாடம்: 1. கலைகாலை (ஆ) I கலைகால் (விசு) (தி) (வ)

கருத்து: எப்பொருளையும் அறிதல் என்பது ஞாதுரு, நேயம், ஞானம் என்ற மூன்று கூறுபாடுகளால் (units) நிறைவுறும். யோக நெறியில் தமது கட்டு நிலையினின்றும் விடுபட விரும்புவோர், இதில் ஒரு மாறுதலைச் செய்ய வேண்டும். அதாவது: ஞான குருவை அடைந்து, அவன் அருளால், இடைகலை, பிங்கலை வழியாகச் செலுத்தி வரும் மூச்சுக்காற்றைச் சுழுமுனையில் செலுத்துவதுடன்,

அதைப் பூரகம் ஒரு பங்கு, இரேசகம் இரண்டு பங்கு, கும்பகம் நான்கு பங்கு என அமைத்துக் கொண்டு, அந்தக் கும்பகப் பயிற்சியால், மூச்சை 12 அங்குலம் உள் இழுத்து, 8 அங்குலம் மட்டும் வெளிவிட்டு, இதனால் 4 அங்குலம் சிதறிப் போகுமாறு செய்வதை மாற்றி, அம்மூச்சை உச்சந்தலைக்குச் செலுத்துவதால், ஞாதுரு, ஞானம், நேயம் என்ற வேறுபாடு இன்றி, அனைத்தும் நேயம், அதாவது அனைத்தும் சிவானந்தம் என்ற 'பொருள் ஆனந்தமே'; ஞாதுருவின் ஆனந்தமோ, ஞானானந்தமோ அன்று என்று உணர வேண்டும். அவ்வாறு செய்வோர், பிறந்து இறத்தவாகிய கட்டு நிலையில் மீண்டும் அகப்படார். முத்தி அடைவார்.

வத்து ஆனந்தம் - பொருளானந்தம். வத்து - வஸ்து என்ற வடசொல்லின் திரிபு. இராமலிங்க வள்ளலார் பற்றி டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

"Every mystic may not be a poet. Ramalingaswami was both a mystic as will as a true poet draws his experiences from his supra-mental plane of existence. Both of them see the thing - in - itself with their intuition. They are seers - rishis. Their knowledge of anything - concrete or abstract is "thing - dependendent" and not "knower - dependent'. (Vastu tantra but not Kartru - tantra.)

என்று எழுதுவதை - ஈண்டுக் காண்க. *

சென்ற பாடலில், "மோனம் கைவந்தோற்கு முத்தியும் கைகூடும்" என்றவர், இங்கு அதனை விளக்கினார்.

முன்பும் பின்பும்

1597. மேலைச் சொரூபங்கள் மூன்றும், மிகுசத்தி
பாவித்த முத்திரைப் பற்றும் பரஞானம்;
ஆலித்த நட்டமே நேயம்; பகுத்தற்ற
மூலச் சொரூபன் மொழி ஞாதுருவனே.

* *An appreciation given to the Edition of Tiruvarutpa by A. Balakrishna Pillai;* 1958.

மேலைச் சொரூபங்கண் மூன்று மிகுசத்தி
பாலித்த [1]முத்திரைப் பற்றும் பரஞான[2]
மாலித்த நட்டமே நேயம் பகுத்தற்ற[3]
மூலச் சொரூபன் மொழிஞா துருவனே. (9)

வேறு பாடம்: 1. முத்திரை (ஆ) I. 2. பரஞானி (ஓ) II. 3. பகுந்தற்ற (ஓ ஓ) I.

கருத்து: ஆன்மா சொருபசிவத்தை உணர்வதற்கு முன் இருந்த ஞாதுரு, ஞானம், நேயம் என்பவற்றின் இயல்பு வேறு. அதாவது இம் மூன்றும் வேறுபட்டவை. ஆனால், யோகி அருள்மிக்க சத்தியானவள் அருள்கின்ற கேசரி, சாம்பவி என்ற முத்திரைகளைப் பயில, அவனுக்கு வந்து அமைவது, 'இருப்பது சிவம் ஒன்றே', என்னும் பரஞானம் (சிவஞானம்). அந்த ஞானமே வடிவாய், அகண்டாகார வெளியில் சிவம் இயற்றும் திருக்கூத்தே நேயம். அச்சிவத்தோடு பிரிப்பு இன்றி (அன்னியம் இன்றிக்) கலந்து 'சீவன்' என்ற தடத்தநிலையை விட்டுத் தனது மூலமாகிய சொரூபத்தில் ஆன்மாவாக - சுத்த உயிராக நிற்பவன் ஞாதுரு.

பரஞானம் தன்னைத் தானே விளக்குமேயன்றி வேறு ஒன்றால் விளக்க இயலாது. பரம் - கடந்த, சார்பு கடந்த. இப் பாடலின் கருத்தை, "ஞானாகாரத்தினொடு நேயம், மற்ற ஞாதுருவும் நழுவாது நழுவி நிற்கும், ஆனாலும் இதன் பெருமை எவர்க்கு ஆர் சொல்வார்? அதுவானால் அது ஆவர், அதுவே சொல்லும்" என்ற தாயுமான அடிகளின் மொழியுடன் ஒப்புநோக்குக. (ஆகார புவனம். 22) சீவன் - தடத்த நிலையில் உயிரின் பெயர். பசு என்பதும் அது. ஆன்மா என்பது சொருப நிலையில் அதன்பெயர். அறிதலின் சொருபங்கள் (கூறுபாடுகள்) மூன்றின் பின்னைய நிலை மாறிவிட்டதைக் காண்க.

83. துறவு

தவநெறி

1598. இறப்பும், பிறப்பும், இருமையும் நீங்கித்
துறக்கும் தவம் கண்ட சோதிப் பிரானை
மறப்பிலராய், நித்தம் வாய் மொழிவார்கட்கு
அற, பதி காட்டும் அமரர் பிரானே.

இறப்பும் பிறப்பு மிருமையு நீங்கித்
துறக்குந் [1]தவங்கண்ட சோதிப் பிரானை
மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்
கறப்பதி காட்டு [2]மமரர் பிரானே. (1)

வேறு பாடம்: 1. தவங்கண்டே (ஆ) I. 2. மாதிப் பிரானே (ஆ) II.

கருத்து: இறப்பு, பிறப்பு என வரும் பிறவி வட்டத்தையும், இம்மை மறுமைப் பயன்களையும் வேண்டாமல், அவற்றில் பற்றினை விடுத்து, தவத்தால் காண்பதற்குரிய, சோதி வடிவத்து இறைவனை, அத்தவத்தைச் செய்து காணுதலை மேற்கொண்டு, நாள்தோறும் அவனது உண்மையையே சொல்லி வாழ்த்துவார்க்கு, அந்த விண்ணோர் தலைவன், மேற்கூறியவை அறுமாறு செய்து, வீட்டுலகை நல்குவான்.

வாய் - வாய்மை.

குறிப்பு: 'உட்சமயம்' என்னும் அதிகாரத்தை அடுத்து, ஆ, ஐ, ஒ - சுவடிகளில் 'துறவு' 'தவம்' 'தவ தூடணம்' முதலிய அதிகாரங்கள் உள்ளன. இ, ஈ, ஓ - சுவடிகளில் 'சிவ குரு தரிசனம்', 'திருவடிப் பேறு, 'ஞாதுரு ஞான நேயம்' என்ற அதிகாரங்களும் அவற்றை அடுத்துத் 'துறவு' முதலாக மேற்காட்டிய அதிகாரங்களும் உள்ளன. அ, உ, ஊ, எ, - சுவடிகளின் இப்பகுதி ஏடுகள் இப்போதைய பதிப்பின் ஆய்வுக்குக் கிடைக்கவில்லை. 'ஏ, ஒ - சுவடிகளில், 'சிவ குரு தரிசனம்' முதலிய 3 அதிகாரங்களும் நூலின் இறுதிப் பகுதியில் உள்ளன. அவை அங்கு இருத்தல் பொருத்தமுடையதாய்த் தோன்றவில்லை. இப்போதைய பதிப்பு இ, ஈ, ஓ - சுவடிகளைப் பின்பற்றுகின்றது.

துறவால் அருள்பெறலாம்

1599. பிறந்து [1]மிறந்தும்பல் பேதைமை யாலே
[2]மறந்து மலவிருள் நீங்க மறைந்து
[3]சிறந்த [4]சிவனருள் சேர்பரு வத்துத்
துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே[5] (2)

வேறு பாடம்: 1. மிறந்தும் பலபே தைமையான் (ஆ) IV. 2. மறந்த (த) 3. சிறந்து (ஆ) I. 4. சிவனருட் (சங்) 5. யாகுமே (ஆ இ) II.

கருத்து: பிறத்தலும் இறத்தலுமான பிறவிச் சுழலில் சிக்கி, ஆணவ மலம் உண்டாக்கிய பலவகை அறியாமையினால் இறைவனையும், தன்னையும் மறந்து, பின்னர்த் துறவால் பெற்ற அருள் காரணமாக, ஆணவ மலம் நீங்க, முன்பு மறைந்தும், பின்னர் வெளிப்பட்டும் நின்ற சிவனருள் நிறைவாக வந்து சேருகின்ற பக்குவக் காலத்தில், அங்ஙனம் துறந்த ஆன்மாவுக்கு இறைவன் சுடர்விடும் சோதியாய்த் திகழ்வான்.

1600. அறவன் பிறப்பிலி யாரு மிலாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை
துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே (அ, ஔ)

தவநெறி தவறினால்....?

1601. நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்
நெறியின் வழுவின், நெருஞ்சில் முள் பாயும்
நெறியின் வழுவாது இயங்க வல்லார்க்கு
நெறியின் நெருஞ்சில்முள் பாய கில்லாவே.

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தா
னெறியின் வழுவி னெருஞ்சில்முட் பாயு
நெறியின் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியி னெருஞ்சின்முட் [1]பாயகில் லாவே. (3)

வேறு பாடம்: 1. பாயகி (சண்)

கருத்து: துறவு நெறியைத் தோற்றுவித்த இறைவனே அதில் நெருஞ்சில்முள் போன்ற துன்பங்களையும் அமைத்தான். அந்நெறியிலிருந்து விலகுபவர்க்கு நெருஞ்சில்முள் போன்ற அத்துன்பங்கள் வருத்தும். விலகாமல் வாழ வல்லார்க்குத் துன்பம் இல்லை. இதனை 'ஒட்டணி' என்பர். தவறு செய்யத் தூண்டும் சூழலை விலக்க வேண்டும் என்று இதனால் கூறினார்.

புலனில் விழமாட்டேன்

1602. கேடும் கடமையும் கேட்டு வந்து, ஐவரும்
நாடி வளைந்தது நான்கடவேன் - அலன்,
ஆடல் விடை உடை அண்ணல், திருவடி
கூடும் தவம் செய்த கொள்கையன் தானே.

[1]கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரு
நாடி வளைந்தது [2]நான்கட வேனல[3]
னாடல் விடையுடை யண்ண றிருவடி
கூடுந் [4]தவஞ்செய்த [5]கொள்கையன் றானே. (4)

வேறு பாடம்: 1. கேடும் வாதையுங் (ஓ) IV. 2. நான்கடை (ஆ இ) I. 3. னலே (ஓ) I. 4. தவஞ்செய்யுஞ் (ஆ) IV. 5. கொள்கையந்தானே (அ) I கொள்கைதந்தானே (ஆ) IV.

கருத்து: துறவறத்தில் செய்யத்தக்க கடமைகளையும், அவற்றைச் செய்யாமையால் வரும் அழிவையும் குருவின்பால் கேட்டு, அத் துறவறத்தில் ஈடுபட்டு, வெற்றியுடைய காளையை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமானின் திருவடியை, அத்தவத்தின் (யோகம்) பேறாகக் கூடி மகிழும் நிலை உடையேன். ஆதலின், ஐம்புல வேடரும் என்னை மயக்கக் கருதிச் சுற்றி வளைந்தாலும், அவர்கட்கு வயப்படேன்.

கேடு, அழிவாதலின், கடமையால் வரும் ஆக்கம் இங்குக் குறிக்கப்பட்டது. வளைந்தது - சுற்றிச்சூழும் செயல்; வஞ்சச் செயல். அவ்வஞ்சனைக்கு உட்படேன் என்றார். திருவடி கூடுதல் - சகஸ்ராரத்தில் சிவதரிசனம் பெற்றுச் சமாதி கூடுதல். சரியை, கிரியை முதலியன நான்கும் தவம் ஆதலின், ஈண்டு யோகத்தைத் 'தவம்' என்றார். கொள்கை - நெறி.

அருட்சத்தி தரிசனம்

1603. உழவன் உழ, உழ, வானம் வழங்க,
உழவன் உழவினில், பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண் ஒக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவு ஒழிந்தானே.

உழவ [1]னுழவுழ வானம் வழங்க
வுழவ னுழவினிற் [2]பூத்த குவளை[3]
யுழவ னுழத்தியர் [4]கண்ணொக்கு மென்றிட்[5]
டுழவ னதனை [6]யுழவொழிந் தானே. (5)

வேறு பாடம்: 1. னுழவுற (ஆ) I. 2. பூத்தது வேளை (விசு) 3. வேளை (சண்) 4. கண்ணேக்கு (விசு) 5. மென்றெட் (ஆ) I. 6. யுழலொழிந் (விசு) (சங்).

கருத்து: இப்பாடல் ஒட்டணியால் குறிக்கும் பொருள் வருமாறு: யோகசாதகன், யோகத்தில் பயிலுந்தோறும், அவன் மேலும் மேலும் அதில் முன்னேறும் (மேலேறும்) பொருட்டு, அவனுக்குத் துணைநிற்கும் சத்தி, அவனது நெற்றிக்கு நேரே நீலவொளி காணும் பக்குவத்தை வழங்குவாள். அதனை அருட்சத்தி என்று உணர்ந்து

அந்த அருள் வயப்பட்டு (சத்தி நிபாதம்), அவன் "தான் யோகம் பயில்கிறான்" என்ற உணர்வின்றி, அனைத்தும் நடத்துவது அருளே என்று இருப்பான். இதனைத் 'தற் சுதந்திரம் இன்மை' என்பர்.

சிவன் தோழன்

1604. மேல்துறந்து, அண்ணல் விளங்கு-ஒளி கூறுவன்;
நாள் துறந்தாற்கு அவன் நண்பன், அவாவிலி,
கார்துறந்தாற்கு அவன் கண்ணுதலாய் நிற்கும்,
பார் துறந்தாற்கே பதம் செய்ய லாமே.

மேறுறந் தண்ணல் விளங்கொளி கூறுவன்[1]
னாடுறந் [2]தாற்கவ னண்ப னவாவிலி[3]
கார்துறந் [4]தாற்கவன் கண்ணுத லாய்நிற்கும்
பார்துறந் [5]தாற்கே பதஞ்செய்ய லாமே. (6)

வேறு பாடம்: 1. கூற்றுவன் (விசு) (சங்) (தி) (வ) (த) 2. தார்க்கவ . (விசு) (தி) (வ) (த) 3. னவாவலி (இ) IV; னல்லாவிலி (சண்) 4. தார்க்கவன் (விசு) (தி) (வ) (த) 5. தார்க்கே (பதிப்புகள்).

கருத்து: எதிர் காலத்தில் விளையும் பயன்களைத் துறந்து (காணும்) சிவனது பேரொளியைப் பற்றிக் கூறுவேன்; சகஸ்ராரத்தில் அப்பேரொளியைத் தரிசித்து, 'இரவு பகல்' என்ற உணர்வற்று உள்ளோனுக்கு அவன் தோழன். விருப்பம் யாதும் இல்லாதவனாய், அறியாமையையும், அதனை விளைவிப்பதாகிய ஆணவ மல இருளையும் நீக்கியவனுக்கு அவன் நெற்றிக்கண்ணுடன் காட்சி வழங்குவான். உலகப் பற்றைத் துறந்தவனுக்கு வீடுபேறு வழங்குவான்.

மேல், நாள் என்பன பெயர்கள். அவற்றுடன் 'துறந்து', 'துறந்தார்க்கு - என்பவை சேர்ந்து, இரண்டாம் வேற்றுமைத் தொகையாய் நின்ற புணர்ச்சி. முதல் அடியில், 'காணும்' என ஒரு சொல் வருவிக்க. சொல்லெச்சம். கார் - கருமை; இருள், இருமடி ஆகுபெயராய் ஆணவமலத்தைக் குறித்தது. பார் - உலகம்; ஆகுபெயர்.

பதம் செய்பவன் இறைவன் என்க. பதம் - நிலை; வீடு என்னும் நிலை; சாயுச்சிய பதவி. இது பரமுத்தியாயினும், பதம் என்றது நிலை என்னும் பொருண்மை பற்றி.

உடம்பிலேயே நிறை வாழ்வு

1605. நாகமும் ஒன்று, படம் ஐந்து, நால் - அது
போகமும்; புற்றில் பொருந்தி நிறைந்தது;
ஆகம் இரண்டும் படம் விரித்து ஆட்டு ஒழிந்து,
ஏக படம் செய்து, உடம்பு இடல் ஆமே.

[1]நாகமு மொன்று [2]படமைந்து நாலது
[3]போகமும் புற்றிற் பொருந்தி நிறைந்தது
வாக மிரண்டும் [4]படம் விரித் தாட்டொழிந்
[5]தேக படஞ்செய் துடம்பிட லாமே[6]. (7)

வேறு பாடம்: 1. நாகமதொன்று (விசு) 2. படமைந்தினாலது (ஆ ஈ) I. 3. போகமுட் (விசு) 4. படவிரித் (ஆ) I படம் விரிந் (ஓ) IV. 5. தேகப் (சங்) 6. மாமே (விசு) (சண்)

கருத்து: நாகம் ஒன்று. அதற்குப் படம் ஐந்து. (ஐந்து தலை). அது உண்ணும் உணவு நான்கு. புற்றில் வாழ்ந்து வாழ்நாள் நிரம்புகிறது. அந்த நிலையில், அதன் இரண்டு உடம்புகளிலும், படம் விரித்து ஆடுவதை நிறுத்தி, ஒரு படத்தையே விரித்து, வேறு ஓர் உடம்பினுள் புகுந்தது. இப்படி நடந்தது வியப்பன்றோ?

இது 'பிசி' என்னும் வகையைச் சார்ந்த பாடல். இங்கு நாகம், உயிர் ஐந்து படம், ஐம்பொறிகள். போகம் நான்கு - மனம், புத்தி சித்தம், அகங்காரம் என்பவை. புற்று - உடம்பு. இரண்டு உடம்பு - தூலவுடம்பும் சூக்குமவுடம்பும். படம் விரித்து ஆடல் - ஐம்பொறிகளின் வயப்பட்டுச் செயலாற்றுதல். இதுவரை சாதாரண வாழ்க்கை.

இனி, யோக சாதனையில், உயிரானது, உடம்பில் வாழும் போதே, உடலுணர்வு அற்று, அதே சமயம் உடம்பிலேயே நிறை வாழ்வு பெறுகிறது. எவ்வாறு? தூலம், சூக்குமம் என்னும் இரண்டு உடம்பிலும், ஐம்பொறிகளின் சேட்டை ஒடுங்குகின்றது. உயிருணர்வின் நாட்டம், சிவஞானம் பெறுதல் என்ற ஒன்றிலேயே நிற்கிறது. ஆகம் இரண்டும் படம் விரித்து ஆடல் ஒழிதலும், ஏக படம் செய்தலும், உடம்பு இடலும் என்ற மூன்றும் நிறைவாழ்வு என்க. ஏக படம் செய்தல் - ஒரே நோக்கு உடையது ஆதல். ஐம்பொறி வழியே உலகவிடயங்களை நோக்காமல், அருளறிவினால் சிவஞானம்பெற விழைதல்.

இங்ஙனம் கொள்ளும் பொருளுக்கு "உடம்பு இடமாமே" என்ற பாடம் பொருந்தாமை அறிக.

கருணைக் கடல்

1606\. அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்
இவன் தான் என, நின்ற எளியனும் அல்லன்;
சிவன் தான் பலப்பல சீவனும் ஆகும்
நயன் தான் வரும் வழி நாம் அறியோமே.

அகன்றார் வழிமுத லாதிப் பிரானு
மிவன்றா [1]னெனநின் றெளியனு மல்லன்
[2]சிவன்றான் பலப்பல சீவனு மாகு
[3]நயன்றான் வரும்வழி நாமறி யோமே. (8)

வேறு பாடம்: 1. ளெனநின் (ஈ) I. 2. சிவன்றாள் (ஆ) III 3. நவின்றான் (ஓ) I.

கருத்து: துறவியர்க்கு வாழ்க்கை - அடிப்படையாக உள்ள, ஆதியாகிய தலைவன் 'இன்ன உரு, இன்ன நிறம், இன்ன பண்பு' எனச் சுட்டி அறியப்படாதவன். இஃது அவன் 'வேறாய்' நிற்கும் நிலை. ஆனால் அவன் பற்பல உடல்தோறும் நிற்கும் உயிர்களிலும் உலகப் பொருள்களிலும் 'ஒன்றாய்' நிற்கிறான். உயிர்களுடன் 'உடனாய் நின்று' அவர்களை அனுபவத்தில் செலுத்துகின்றான். இந்த 'நீதி' எத்தகையது, எவ்வாறு ஏற்பட்டது என்பதை நாம் அறியவல்லோம் அல்லோம். அவனது அளப்பில் கருணை என்பதைத் தவிர என்ன கூறுவோம்?

அகன்றார் - பற்றுக்களினின்றும் நீங்கியவர். நயன் - நீதி. வழி - ஏது காரணம்.

கோபுரம், கோயில் தோன்றின

1607\. தூம்பு திறந்தன ஒன்பது வாய்தலும்,
ஆம்பற் குழியின் அகம் சுழிப்பட்டது,
வேம்-பொறி நோக்கினென், மீகாமன் கூறையில்,
கூம்பு ஏறிக் கோயில் பழுக்கின்றவாறே.

[1]தூம்பு [2]திறந்தன வொன்பது வாய்தலு[3]
மாம்பற் [4]குழியி [5]னகஞ்சுழிப் பட்டது
[6]வேம்பொறி [7]நோக்கினென் மீகாமன் கூறையிற்[8]
கூம்பேறிக் [9]கோயில் [10]பழுக்கின்ற வாறே[11]. (9)

வேறு பாடம்: 1. தாம்பு (ஈ) I; காம்பு (விசு) 2. துறந்தன (இ) I. 3. வாயிலு (ஆ) III; வாசலு (ஈ) III. 4. குறியி (ஈ) I; குழலியின் (விசு) (தி) (வ); குழலி (த) கஞ்சுளிப் (விசு) (சங்) (வ) 5. லகஞ்சுழிப் (இ) I; அஞ்சுழிப் (தி); னகஞ்சுளிப் (த); கஞ்சுளிப் (விசு) (சங்) (வ) 6. வேம்பேறி (ஆ இ) I. 7. நோக்கினோன் (ஒ) I நோக்கினன் (விசு) (தி) (வ) (த) 8. கூறையிற் (விசு) (தி) (வ) (த) 9. கோயிலிற் (விசு) (வ) (த) 10. பூக்கின்ற (விசு), (தி), (வ) 11. வாமே (இ) I வாரே (சங்).

கருத்து: இஃது ஒட்டணி அமைந்த பாடல். உவமை வருமாறு: (தோணி புயலில் சிக்கியது) அதில் வந்து நிரம்பிய மழை நீரை வெளியேற்றுவதற்கு, அதிலிருந்த ஒன்பது துவாரங்களும் திறக்கப்பட்டன. அப்பொழுது கடலின் தரையில் இருந்த குழியின் காரணமாகச் சுழி தோன்ற, அதில் தோணி அகப்பட்டுச் சுழன்றது. தோணியில் உள்ள இயந்திரங்கள் மிகு உழைப்பால் சூடு ஏறியதைப் பார்த்தேன். அப்பொழுது மாலுமி, தோணிப்பாயின் மீது ஏறிப் பாய்மரத்தின்மீது ஊர்ந்து, உச்சிக்குச் சென்று, தொலைவில், கரையில், கோயிலும் கோபுரமும் சிறிது சிறிதே பார்வைக்குப் படுவதை அறிவித்தலையும் நோக்கினேன்.

நோக்கினென் என்பது இறுதியிலும் இயைந்து, தீவக அணியாய்ப் பொருள் தந்தது. இனி, இவ்வுவமையால் பெறப்படும் பொருள் வருமாறு:-

ஆசிரியர் தமது யோகானுபவத்தினைக் கூறுகின்றார். எனது உடல் யோக சாதனை என்னும் தீவிரமான பயிற்சியில் ஈடுபட்டது. எனது உயிருணர்வை மறைத்த மலமறைப்பு நீங்கி வந்தமையால், ஐம்பொறிகளும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அகக்கருவிகளும், பற்றுக்களை நீக்கும்பொருட்டு, உயிருணர்வுடன் இணைந்து (இயைந்து) இயங்கின. அப்பொழுது, மூலக்கனல், மூச்சக்காற்று, உயிர் உணர்வு என்ற மூன்றும், சந்திரமண்டலத்தில், புருவமத்தியில் உள்ள 'சிற்றம்பலம்' என்னும் குழியில் இணைய, முதலில் வெள்ளொளியும், பிறகு நீலவொளியும் தோன்றின. இந்த அனுபவமே மாறி மாறி ஏற்பட்டது. முன்னேற்றம் இல்லை. ஆன்மா ஆகிய நான் மூலக்கனலின் காரணமாக, மூச்சுக்காற்று வெந்து போவதைக் கவனித்தேன். அந்தக் காற்றாகிய மாலுமி, வாயின் உட்புறத்தில், அண்ணாக்கு உள்ள வழியைக் கேசரி யோகத்தால் திறந்து, நெற்றியின் மேற்பகுதிக்குச் சென்று, மூளையின் நடுப்பகுதிக்கு ஊர்ந்து, சகஸ்ராரம் உள்ள பிரமரந்திரக் குழியை அடைந்தால், இறைவன் இறைவியோடு அமர்ந்த கோயிலை மெல்ல, மெல்லக் காணலாம் என்பதையும் கருதினேன்.

தூம்பு வழி திறந்தன என்பது அடைப்பு நீங்கியமை. குழியின் உட்புறம் சுழிதோன்றியதாவது, யோக அனுபவம் அவ்விடத்தில நின்று, அப்பால் (மேலே) முதிரவில்லை என்பது. வேம் பொறி - வேகும் பொறி; வேகும் கால், வேகும் மூச்சக்காற்று. மூச்சு என்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம் என முன்னும் ஆசிரியர் குறித்தனர். (சரீர சித்தியுபாயம்). இது 'வேகாக் கால்' ஆக வேண்டும் என்க. மீகாமன் மாலுமி; மூச்சுக் காற்றினால் பெருகும் பிராணசக்தி. இப்பிராணசக்தி தலைக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புகின்றது ஆசிரியரின் ஆன்மா. கூறை - தோணிப்பாய்; நெற்றியின் மேற்பகுதி. கூம்பு - பாய்மரம்; புருவமத்தியிலிருந்து உச்சந்தலைக்கு உள்ள ஒருவழி, இதனைக் "கம்பம்" என்பார் வள்ளலார் இராமலிங்கர் (திருவருட்பா, 6 ஆம் திருமுறை: கீர்த்தனைப் பகுதி "ஆணிப் பொன்னம்பலத்தே" என்னும் பாடல்). கோயில் பரமாகாச வெளி. இதனை மேற்பாடலில் வள்ளலாரும் குறிப்பிடுவார் "கொடு முடிமேல் ஆயிரத்தெட்டு மாற்றுப்பொன் கோயில் இருந்ததடி" என்பது அவர் கூற்று. பழுத்தல் - சிறிது சிறிதாகத் தோன்றுதல். (அரும்பு பழமாதல் சிறிது சிறிதாகத் தோன்றுவதே அன்றோ?)

84. தவம்

பகலறியார், இரவறியார்

1608. ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவது இல்லை, நமனும் அங்கு இல்லை,
இடும்பையும் இல்லை, இராப் பகல் இல்லை,
படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே.

[1]ஒடுங்கி நிலைபெற்ற வுத்தம ருள்ள
[2]நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
யிடும்பையு மில்லை யிராப்பக லில்லை
[3]படும்பய னில்லை [4]பற்றுவிட் டோர்க்கே. (1)

வேறு பாடம்: 1. ஒடுங்கும் (ஈ) I. 2. நடுங்கும் (ஓ) IV. 3. கடும்பசி (ஆ இ) IV. 4. கற்றுவிட் (ஆ இ) IV.

கருத்து: திருவருளில் ஒடுங்கி, சிவானுபவத்தில் நிலைபெற்ற (சீவன் முத்தி பெற்ற) உயர்ந்தோர், இறப்பை எண்ணி அஞ்சி நடுங்குவ தில்லை. அவர்கட்கு இறப்பு இல்லை. பிறவித் துன்பம் இல்லை. அவர்களின் சிவானுபவத்தின்போது, காலக்கழிவை அவர்கள்

அறியார். அவர் தாம் செய்யும் உலகியற் செயல்களில் பற்றின்றிச் செய்தலால், வினைப் பயன் அவரைச் சேர்வதில்லை.

ஒடுக்கம், புலன் ஒடுக்கமன்று. அருளில், ஆன்ம உணர்வும் ஒன்றி இருத்தல். நடுங்குதல் - அஞ்சுதல் மட்டுமன்று, வேறு எண்ணம் கொள்ளுதலும் (மனச்சலனம்) ஆகும். இரவு பகல் மாறி வருவதை உணரார் ஆதலின், 'இராப் பகல் இல்லை' என்றார். அதனால், பொருள்கள் இடையே உள்ள வேறுபாடும் உணரார் என்று கொள்க, 'ஒன்று என்று இருப்பார்' அவர் ஆதலின்.

1609. எம்மா ருயிரு மிருநிலத் தோற்றமுஞ்
செம்மா தவத்தின் செயலின் பெருமையு
மம்மா வவனருள் பெற்றவ ரல்லா
லிம்மா தவத்தி னியல்பறி யாரே (ஔ, ண)

1610. பிறப்பறி யார்பல பிச்சைசெய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே. (ஆ, ஔ)

1611. இருந்து வருந்தி யெழிற்றவஞ் செய்யும்
பெருந்தன்மை யாளரைப் பேதிக்க வென்றே
யிருந்திந் திரனே யெவரே வரினுந்
திருந்துதஞ் சிந்தை சிவனவன் பாலே. (ங, ஔ)

1612. கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்
பரந்த சடையன் பசும்பொன் னிறத்த
னருந்தவர்க் கல்லா லணுகலு மாகான்
வரைந்து தொழப்படும் வெண்மதி யானே. (ஆ)

குருவாய் வருவான்

1613. [1]இன்னெய்த வைத்ததோ ரின்பப் பிறப்பினை
முன்னெய்த வைத்த [2]முதல்வனே யெம்மிறை
தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு
மன்னெய்த வைத்த மனமது தானே. (2)

வேறு பாடம்: 1. பின்னெய்த (சைவ) 2. முதல்வனை (விசு) (தி) (த) (வ)

கருத்து: வீடுபேற்றின்பத்தை எய்துதற்காக அமைந்த இனிய பிறவியை நாம் முன்பு பெறுமாறு அருளிய முதல்வனாகிய எம் சிவபெருமான், நிலையான உணர்வைப் பெறுவதற்காகப் பழக்கப்படுத்தப் பெறும் மனம், தன்னை அன்பினால் சாரும் காலத்தில் அவ்வன்புக்கு வயப்பட்டுத் தானே குருவாக எழுந்தருள்வான்.

இன்பம் என்பது முதனிலை அளவாக நின்றது. இன்பப் பிறப்பு - இறைவன் வழிபாடு இன்பம் தருதலின், அதனைச் செய்யும் வாழ்க்கை "இன்பப் பிறப்பு" எனப்பட்டது. வீடு பேற்றுக்காம் பிறவியை முன்னே தந்த முதல்வன், மனம் அன்பால் நினைக்கும்போது, அவ் வீடு பேற்றுக்கு வாயிலாகும் ஞானத்தை நல்கும் சற்குருவாக வருவான் என்றார்.

வினை முடிவு: மனம் தன் எய்தும் காலத்து, எம் இறை தானே வெளிப்படும் என முடிக்க.

அழிவில்லார்

1614. அமைச்சரும் ஆனைக்குழாமும் அரசும்
பகைத்து எழு பூசலுள் பட்டார், நடுவே
அமைத்தது ஓர் ஞானமும் ஆக்கமும் நோக்கி
அமைத்து அழியாது இருப்பார் தவத்தோரே.

அமைச்சரு மானைக் குழாமு மரசும்
[1]பகைத்தெழு பூசலுட் [2]பட்டார் நடுவே
யமைத்ததோர் ஞானமு [3]மாக்கமு நோக்கி
யிமைத்தழி [4]யாதிருப் பார்தவத் தோரே. (3)

வேறு பாடம்: 1. பதைத்தெழு (ஈ) I. 2. பட்டன (இ) I. 3. மாத்தமு (ஓ) I மார்க்கமு (அ ஈ) I. 4. யாதிருந்தார் (ஓ) IV; யாதிருப்பாரவர் தாமே. (இ) தவத்தாரே (அ) IV.

கருத்து: அரசர் தம்முள் பகைத்துச் செய்யும் போரில், தம் அமைச்சரையும் படைகளையும் அரசையும் ஒருங்கே இழந்து, தாமும் மடிகின்றார். ஆனால் தவசிகள், நடுவு நிலை உடையவராய் (சுழுமுனையில் பிராணனைச் செலுத்தி) வீடுபெறுதற்கு அமைந்த ஞானம், வீடு பேறு ஆகியவற்றைப் பெறக் கருதி, தூங்காமல், துரிய நிலையில் உணர்ந்தவாறு, அழியாது இருப்பர்.

1615. சாத்திர மோதுஞ் சதிர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி யகல விட் டோடுமே. (ங, ண)

1616. தவம்வேண்டு ஞானந் தலைப்பட வேண்டிற்
றவம்வேண்டா ஞான சமாதிகை கூடிற்
றவம்வேண்டா மச்சக சன்மார்க்கத் தோர்க்குத்
தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே. (ங)

85. தவ தூடணம்

எது வரை?

1617. ஓதலும் வேண்டா வுயிர்க்குயி ருள்ளுற்றாற்
காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கொண்டாற்[1]
சாதலும் [2]வேண்டா சமாதிகை கூடினாற்
போதலும் வேண்டா புலன்வழி போகார்க்கே. (1)

வேறு பாடம்: 1. மிடங்கண்டாற் (அ இ ஈ) I. 2. வேண்டாஞ் (ஆ இ) I.

கருத்து: இறைவன் உயிர்க்கு உயிராய் நின்று பதிஞானம் உணர்த்தினால், அபர ஞானமார்க்கமாகிய கல்வி வேண்டா. ஆனால் அதுகாறும் வேண்டும். இறைவன் இவ்வுடம்பை அழியாததாக்கி, அதில் ஒளிமயமாக விளங்கினால், அவன்பால் அன்பு செய்ய வேண்டா. அதுகாறும் வேண்டும். சமாதி கைவந்தால் இறப்பு நீங்கும். புலன்களின் வயப்படாதார், உலகியலை நீத்துத் துறவு கொள்ள வேண்டுவதில்லை.

குறிப்பு: 'அ' - சுவடியில் இப்பாடல் முதல் 'சமாதி' என்ற இயல் தொடங்குகிறது. 'இ ஈ ஆ உ' - சுவடிகளில் 'தவதூடணம்' என்ற இயல் தொடங்குகிறது. ஒ - சுவடியில் இப்பாடல் இல்லை. திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பில் இவ்வியலின் பெயர் "தவநிந்தை" என உள்ளது.

எதுவரை வேண்டும்

1618. கத்தவும் வேண்டா கருத்தறிந் தாறினாற்
சத்தமும் வேண்டா [1]சமாதிகை கூடினாற்
[2]சத்தமும் வேண்டா துடக்கற்று நிற்றலாற்[3]
சித்தமும் வேண்டா செயலற் றிருக்கிலே. (2)

வேறு பாடம்: 1. சமாதியைச் (இ) I. 2. சுற்றமும் (ஓ) I. 3. நிற்றலாஞ் (ஆ) I அனைத்துச் சுவடிகளிலும் 4. அடிகளிலும் இரண்டாம் சீர் "வேண்டாம்" என்று உள்ளது. அது பிற்கால வழக்காதலின் தருமபுரப் பதிப்பில் உள்ளவாறு "வேண்டா" எனப் பாடம் கொள்ளப்பட்டது.

கருத்து: நூல்களின் கருத்தைஅறிந்து மனம் அடங்கப்பெறின், அவற்றைப் பின்னும் ஓத வேண்டா. சமாதி வாய்த்தால் 'நாதம்' கேட்டல் வேண்டா. உலகியல் தொடர்பு அறப்பெற்றால், மனத் தூய்மைக்கு வேறு சாதனம் வேண்டா. தன் செயலற்று, 'எல்லாம் சிவன் செயல்' என்று வாழ்ந்தால், செயல் அறமா, பாவமா? எனச் சிந்திக்க வேண்டா.

ஒப்பற்றவர்

1619. விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்
விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்
விளைவறி வார்பண்டை [1]மெய்யறஞ் செய்வார்
விளைவறி வார்விண்ணின் மண்ணின் மிக்காரே (3)

வேறு பாடம்: 1. மெய்யுறஞ் (வ) இப்பாடம் கொண்டவர் 'ஹம்' எனப் பிரித்து 'உறுதி' எனப் பொருள் செய்தார். ஆயின் அவ்வாறு ஒரு சொல் இல்லை. அவர் 'உரம்' என்பதனைத் தவறாக உணர்ந்தார் போலும்.

கருத்து: செயல் எது? ஞானம் விளைவிப்பதே செயல். எனவே பண்டு முதல் இதை உணர்ந்தோர் மெய்த்தவம் செய்வர். ஞான முணர்ந்தோரே உண்மைகளைக் கூறினர். இவரே மெய்யறம் செய்வார். இவரே இவ்வுலகிலும் மேல் உலகிலும் ஒப்பற்றவர். ஆவர்.

மெய்த்தவம் - சிவயோகம். மெய் அறம் - சிவ புண்ணியம்.

முயற்சி தவமாகுமா?

1620. கூடித் தவம் செய்து கண்டேன் குரைகழல்
தேடித் தவம் செய்து கண்டேன் சிவகதி
வாடித் தவம் செய்வது ஏதம்; இவை களைந்து
ஊடிப் பல உலகோர் எத்தவம் ஆமே?

கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்
தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி
வாடித் [1]தவஞ்செய்வ [2]தேத மிவைகளைந்
[3]தூடிப் [4]பலவுலகோ ரெத்தவ மாமே. (4)

வேறு பாடம்: 1. தவஞ்செயத் (அ) I. 2. தேதவ (ஆ இ ஈ ஓ) II. 3. தூடிற் (அ இ ஓ) I. 4. பலவுல கோர் தவமாமே (ஆ) I பலவுலகோ ரெத்தவமே (ஓ) I; பலவுலகோரோத்தவமாமே (இ ஈ) IV பலவுலகோ ரெத்தவரே (பதிப்புகள்).

கருத்து: யோகம் செய்து சமாதி கூடி இறைவனது திருவடியைக் கண்டேன். அவ்யோகத்தால் ஞானத்தைப் பெற நாடி, சிவகதியை உணர்ந்தேன். சமாதி வாய்க்காமலும், ஞானத்தை நாடாமலும், யோக சாதனையால் வருந்துவது வீண். சமாதி யனுபூதியோ, ஞானப் பேறோ - இவ்விரண்டின் நினைவும் இன்றி, உலகினர் உலகியலில் செய்யும் முயற்சிகள் எவ்வகையில் தவம் ஆகும்? ஆகாது.

பணியாவது செய்க

1621. மனத்து உறை மாகடல் ஏழும் கைநீங்கித்
தவத்திடையாளர் தம் சார்வத்து வந்தார்,
பவத்திடையாளர் அவர்பணி கேட்கின்
முகத்துஇடை நந்தியை முந்தலும் ஆமே.

மனத்துறை மாகட லேழுங்கை நீங்கித்[1]
தவத்திடை யாளர்தஞ் சார்வந்து வந்தார்
பவத்திடை யாள ரவர்பணி கேட்கின்
முகத்திடை நந்தியை முந்தலு மாமே. (5)

வேறு பாடம்: 1. நீந்தித் (ஈ) III. 2. யாகா (வ)

கருத்து: மனத்தில் எழும் ஆசை எழுகடல். அதை அணுகாது விலகித் தவம் செய்வோர் தமது உண்மையான சார்பாகிய இறைவனைச் சார்ந்துள்ளார். பிறவி நீங்கப்பெறாதோர் அவர்க்கு மாணவராய்ப் பணி செய்தால், தம் முகத்திற்கு நேரே நந்தியைக் காணக்கூடும்.

நெறிப்படுத்துக

1622. மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டு அற ஈர்த்துப்
புனத்திடை அஞ்சும் போக மறித்தால்
தவத்திடை ஆறு ஒளி தன் ஒளி ஆமே.

மனத்திடை நின்ற மதிவா ளுருவி
யினத்திடை நீக்கி [1]யிரண்டற வீர்த்துப்[2]
புனத்திடை [3]யஞ்சையும் [4]போக மறித்தாற்
றவத்திடை [5]யாறொளி தன்னொளி யாமே[6]. (6)

வேறு பாடம்: 1. யிரண்டையும் (ஆ) II. 2. வீர்ந்து (இ) I. 3. நஞ்சையும் (ஐ) I யஞ்சும் (ஓ) I. 4. புகாமல் (ஓ) III போகமால் (சண்) 5. யோறொளி (ஆ) III. 6. தானே (ஆ) IV.

கருத்து: மனத்தில் வைராக்கியம் என்ற நிலையில் நிற்கும் ஞானம் ஆகிய வாளினால் ஐந்து புலன்களாகிய பசுக்களையும், உலகியல் பாசங்களினின்றும் நீக்கி, சிவத்துடன் இரண்டற நிற்கும்படி செய்து, அவ்வாறு செய்தலால் அவை விடயங்களில் செல்லாமல் தடுத்தால், யோகத்தில் காணும் ஒளி (சிவ ஒளி) உயிரின் ஒளியேயாகிவிடும்.

போகா என்று இருந்தது போலும். ஆறு ஒளி - ஆறு ஆதாரங்களில் காணும் ஒளி.

குறிப்பு: திருவாவடுதுறை ஆதீனப்பதிப்பில், இப்பாடலை அடுத்து, இதை ஒத்ததும் பின் இரண்டு அடிகள் மட்டும் வேறுபடுவதுமான பாடல் இடம் பெற்றுள்ளது.

1623. ஒத்து மிகவுநின் றானை யுரைப்பது
பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுக்கு முனிவனென் னும்பதச்
சத்தான செய்வதுந் தான்றவந் தானே. (க)

தவப் பயன்

1624. இலை தொட்டு, பூப்பறித்து, எந்தைக்கு என்று எண்ணி
மலர் தொட்டுக் கண்டேன், வரும் புலன் காணேன்
தலை கெட்ட நூல் கண்டு தாழ்ந்தது என் உள்ளம்
தலை தொட்டுக் கண்டேன் தவம் கண்டவாறே.

[1]இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி[2]
மலர்தொட்டுக் [3]கண்டேன் [4]வரும்புலன் காணேன்
[5]தலைகெட்ட நூல்கண்டு [6]தாழ்ந்ததென் னுள்ளந்
தலைதொட்டுக் கண்டேன் [7]றவங்கண்ட வாறே. (7)

வேறு பாடம்: 1. இறைதொட்டுப் (அ இ) I. 2. றெத்தின்றி (ஓ) IV. 3. கொண்டே (சண்): கொண்டேன் (சைவ) 4. வரும்புனல் (ஈ) II; வரும் பலன் (இ ஓ) II. 5. தலைதொட்ட (சண்) 6. தடுமாறித்துள்ளந் (ஆ) IV. 7. றவம் பெற்ற வாறே (ஆ) IV.

கருத்து: எந்தை சிவனுக்கு என்று, அவன் பூசைக்காகப் பச்சிலையும் பூவும் பறித்து, பின்பு அகப் பூசையாகிய யோகத்தில் ஆறு ஆதாரங்கள் ஆகிய மலர்களில் அனுபவம் பெற்றேன். ஐம்புலன்கள் விடயங்களைப் பற்றாமல் நின்றன. கழுத்துடன் முடிவுறுதலால் தலையற்றதாகிய சுழுமுனை நாடியை உணர்ந்து என் உள்ளம் அதை விரும்பிற்று. என் மூச்சுக் காற்றையும் உணர்வையும் மூலக் கனலையும் சகஸ்ராரத் தாமரைக்குச் செலுத்தி அங்குச் சிவசத்தியைக் கண்டேன். என் தவம் பலன் தந்தது.

'எந்தைக்கென்றெண்ணி' என்பது நடுநிலைத் தீவகம். தொட்டு - அடைந்தவுடன்; அனுபூதி பெற்று இறைவனை உணர்ந்தவுடன் புலன்கள் ஒடுங்கின என்க. நூல் போல மூலாதாரத்திலிருந்து கழுத்து வரை செல்வது ஆதலின் சுழுமுனையை 'நூல்' என்றார். தலை, ஆகு பெயர். தவம் - தவத்தின் பயன். ஆகுபெயர். தாழ்ந்தது - விரும்பிற்று.

பித்தச் செயல்

1625. படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்கு
இடர் அடையா வண்ணம் ஈசன் அருளும்
விடர் அடை செய்தவர் மெய்த்தவம் நோக்கில்
உடர் அடை செய்வதுஓர் உன்மத்தம் ஆமே.

படர்சடை மாதவம் [1]பற்றிய பத்தர்க்
கிடரடை யாவண்ண மீச னருளும்[2]
[3]விடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கி
லுடரடை [4]செய்வதோ [5]ருன்மத்த மாமே. (8)

வேறு பாடம்: 1. பற்றறி (ஆ) IV பத்திய (சண்) 2. னருளு (விசு) (தி) (வ) 3. மிடரடை (விசு) (தி) (வ) 4. செய்ததோ (அ) III செய்பவ (ஈ) III. 5. ருன் மத்தாமே (ஆ) I; செய்வதொரு மனத்தாமே (சண்) (விசு) (தி) (வ).

கருத்து: சடை தாங்கித் தவம் பயிலும் அன்பர்க்குத் துன்பம் வராத வாறு சிவன் அருள் செய்வான். இதை உளங் கொள்ளாது, மருந்து, மணி, மந்திரம் முதலியவற்றால் தாமே துன்பம் போக்கிக்கொள்ள முனைவோரது 'மெய்த்தவத்தை' எண்ணினால், அது துன்பம் வந்து உடம்பை அடையும் வழியைத் தாமே உண்டாக்கும் பித்தச் செயலே ஆகும்.

விடர் - பிறப்பு. இங்குத் தவத்திற்கு மாறானவை. மெய்த் தவம் என்றது அங்கதம். உடல், உடர் என நின்றது. அடை செய்தல் - அடையச் செய்தல்.

சுற்றி வந்தும் சுங்கச் சாவடியா?

1626. ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போ
யீற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கு[1]
நோற்றுத் [2]தவஞ்செய்யார் நூலறி யாதவர்
சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. (9)

வேறு பாடம்: 1. வாறொக்கும் (விசு) (த) 2. தவஞ் செய்ய (ஆ) IV.

கருத்து: தவம் செய்யும் விரதத்தை மேற்கொண்டு செய்யாதவர் மெய்ந் நூல் அறியார் ஆவர். அவர்கள் தவத்தின் கடுமைக்கு அஞ்சி இரந்துண்டு வாழ்வதற்காகத் துறவு பூண்டது, ஆற்றில் முதலை கிடப்பதைப் பார்த்து அஞ்சி, வேறு ஒரு வழியிற் சென்று அண்மையில் ஈன்ற கரடியைக் கண்டதை ஒக்கும்.

சிவக்கனி

1627. பழுக்கின்ற வாறும் பழம் உண்ணுமாறும்
குழக்கன்று துள்ளி அக்கோணியைப் புக்கால்
குழக்கன்று கொட்டிலில் கட்ட வல்லார்க்கு, உள்
இழுக்காது நெஞ்சத்து இட, ஒன்று மாமே.

பழுக்கின்ற வாறும் [1]பழமுண்ணு மாறுங்
குழக்கன்று [2]துள்ளியக் கோணியைப் புக்காற்[3]
குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்[4]
[5]ளிழுக்காது [6]நெஞ்சத் [7]திடவொன்று மாமே. (10)

வேறு பாடம்: 1. பழமுண்ணும் வாறுங் (ஆ ஈ) III. 2. துள்ளி (ஓ) II. 3. பல்காற் (விசு) (வ); புல்காக் (தி) (த); புல்காற் (சண்) 4. லாருக்கு (ஆ) II.

5. இழுக்காது (ஆ) III. 6. நெஞ்சந் (ஓ) I. 7. திடமென்று (ஈ) II; திடவென்று (ஆ) (இ) I; திட மொன்று (தி).

கருத்து: பிராண வாயு உடம்பினுள் இயங்கும் போது, அதனைத் தலையுச்சியில் பிரமரந்திரத்தில் கட்டவல்லவர்க்கு, உயிருணர் வினுள் சிவ மந்திரத்தைத் தியானமாகப் பதிக்க, சிவக்கனி பழுத்தலும், அதனை உண்ணுதலும் வாய்க்கும்.

குழக்கன்று - பிராணவாயுவைக் குறிக்கும் படிமம். பிறவியை மான் கன்று என்றார் முன்னும். கோணி - உவம ஆகு பெயர்; உடம்பு. கொட்டில் - சகஸ்ராரத்தைக் குறிக்கும் படிமம். 'கேசரி யோகம்' - அதிகாரத்தில் "கட்டக் கழற்கன்று கீழ்நான்று வீழாமல்" என, மூச்சுக்காற்றை இறைவனின் திருவடியில் கட்டுதலைக் கூறினார். (பாடல் எண்: 655) இங்கும் அஃது ஒக்கும்.

சிவமாவதே சித்தி

1628. சித்தம் சிவமாக, செய்தவம் வேண்டாவால்,
சித்தம் சிவானந்தம் சேர்ந்தோர் அற, உண்டால்,
சித்தம் சிவமாகவே சித்தி முத்தியாம்,
சித்தம் சிவமாதல் செய்தவப் பேறே.

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவாற்
சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோ ரறவுண்டாற்'
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே. (11)

வேறு பாடம்: 1. ருறவுண்டாற் (ஓ) III.

கருத்து: உயிருணர்வு சிவமயமானால் தவம் செய்ய வேண்டா. அன்பர், தமது ஆன்ம போதம் கெடப்பெற்று, சிவானந்தம் அனுபவிப்பர். அவர் சிவமயமாதலே சித்தி; முத்தி. தவப்பேறும் அதுவே.

86. அருளுடைமை

அருளே எல்லாம்

1629. பிரானரு ளுண்டெனி லுண்டுநற் செல்வம்
பிரானரு ளுண்டெனி லுண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையு மாகும்[1]
பிரானரு ளாற்பெருந் தெய்வமு மாமே. (1)

வேறு பாடம்: 1. முண்டு (சண்)

கருத்து: சிவபிரான் திருவருள் புரிந்தால் நல்ல செல்வம் கிடைக்கும்; நல்ல ஞானம் எய்தும். வியாபக அறிவு உண்டாகும். சிவமாம் தன்மையும் வாய்க்கும்.

தமிழர்கண்ட மெய்ப்பொருள் யாது?

1630. தமிழ்மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவர்
அவிழும் மனமும் எம் ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவ ஞானமே.

தமிழ்மண் டலமைந்துந் தாவிய ஞான
முமிழ்வது [1]போல [2]வுலகந் திரிவ[3]
ரவிழு [4]மனமுமெம் மாதி யறிவுந்[5]
தமிழ்மண் டலமைந்துந் தத்துவ ஞானமே[6]. (2)

வேறு பாடம்: 1. போலுல கெங்குந் (ஆ) IV. 2. வுலகர் (த) 3. திரிவா (விசு) 4. மனமும் (ஓ) II. 5. யருளுந் (த) 6. மாமே (அ ஈ ஓ) III.

கருத்து: சேர, சோழ, பாண்டிய, தொண்டை, கொங்கு மண்டலங்கள் என்னும் ஐந்து தமிழ் மண்டலங்களிலும் பரவிய ஞானத்தை மக்களுக்குச் சொல்வாரைப் போலச் சிலர் உலவுகின்றனர். (அவர்கள் கூறுவன உண்மையல்ல) உயிர் எனத் தனித்த பொருள் உண்டு. ஆதியாய் நின்று உலகைப் படைத்த இறைவன் அதற்கு வேறாய் உண்டு. உயிர் அந்த முதல்வன் அருளும் பதிஞானத்தால் தன் கட்டுக்களிலிருந்து விடுபட்டு, அறிவு விரியப் பெறுகிறது. (வியாபக நிலையைப் பெறுகிறது) அதனால் சிவமே ஆகும் தன்மை பெறுகிறது. உயிரின் அறிவு என்றும் வியாபகமாக

நிற்க, முதல்வன் அதற்கு ஞானத்தை - சிவானந்தத்தை - நல்கிய வண்ணம் இருப்பான். இதுவே தமிழ் மண்டலம் ஐந்திலும் பரவிய மெய்ப்பொருள் அறிவாகும்.

முதல்வன் ஞானத்தை நல்குதல் எல்லையற்றது. அவன் நல்குந்தோறும், ஆன்மா வியாபக நிலையில் ஆழ்ந்து, சிவானந்தத்தில் மேலும் நன்கு தோய்ந்து இன்புறும் என்பார், "அவிழும் மனமும்" என நிகழ்கால வினையாகக் கூறி, அதற்கு ஏதுவாகலின் "ஆதியறிவு" என்பதை அடுத்துக் கூறினார்.

இப்பாடலில் ஆசிரியர் பொருள் மூன்றே (பதி, பசு, பாசம்) எனக் கூறுகின்றார். உரையாளர் இப்பாடற்கு வெவ்வேறு உரை காண்பர்.

வினையாட்சி முடியும் இடம்

1631. புண்ணிய பாவம் இரண்டு உள பூமியில்
நண்ணும் பொழுது அறிவார் சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் வேர் அறுத்து அப்புறத்து
அண்ணல் இருந்த இடம் ஆய்ந்துகொள்ளீரே.

[1]புண்ணிய பாவ மிரண்டுள பூமியி
னண்ணும் பொழுதறி [2]வார்சில ஞானிக
ளெண்ணி யிரண்டையும் வேரறுத் தப்புறத்[3]
தண்ண [4]லிருந்திட மாய்ந்துகொள் ளீரே. (3)

வேறு பாடம்: 1. புண்ணியம் (த) 2. வார்சிவ (அ) I சிலர் (ஈ) I. 3. துப்புறத் (ஈ) I. 4. லிருப் பிட (ஈ) IV.

கருத்து: வினைப்பயன்கள் புண்ணியம், பாவம் என இரண்டு. சில ஞானிகள் அவை வரும் போது, அவற்றுக்குக் காரணமாகத் தாம் முன்பு செய்த நல்வினையும் தீவினையும் உண்டு என உணர்வர். இனி அவ்வினைகளைச் செய்தலாகாது என்று துணிவர். நல்வினையை விரும்புதலும், தீவினையை வெறுத்தலும் இன்றி, எல்லாம் சிவன் செயலே எனச் செய்வர். அவரது இந்த 'இரு வினை யொப்பினை' நீவிரும் எண்ணி, நல்வினை, தீவினை என்ற இரண்டையும், மூலகன்மத்தையும் நீக்கப்பெற்று, வினையாட்சி முடிந்த இடம் அருளாட்சி தொடங்கும் இடமாதலின், அருள் பெறும் வழியை ஆய்ந்து மேற்கொள்வீராக.

மேலைச் செய்யுளில் பாசம் என்பதைக் குறிப்பாகக் கூறினார். இங்கு மும்மலங்களுள் கன்ம மலத்தை விளக்கி, அதை நீக்கும் இருவினை

யொப்பைச் சுட்டிக் காட்டுகின்றார். நல்வினையே செய்தல் வேண்டும். அதனையும் தன் விருப்பத்தால் செய்யாமல், சிவன் திருவருள் எனச் செய்தால், வினைப் பயன் சேராது. தீவினையும் சிலபோது திருவருட்சம்மதம் ஆகலாம். எனவே வினையை விரும்புதலும் வெறுத்தலும் செய்யாது, அருள்வழி நிற்றல் 'இரு வினை ஒப்பு' என்றார்.

எவ்வடிவில் தோன்றுவான்?

1632. முன் நின்று அருளும் முடிகின்ற காலத்து
நன் நின்று உலகில் நடுவுயிராய் நிற்கும்
பின் நின்று அருளும், பிறவியை நீக்கிடும்
முன் நின்று எனக்கொரு முத்தி தந்தானே.

முன்னின் றருளு [1]முடிகின்ற காலத்து
[2]நன்னின் றுலகின் னடுவுயி ராய்நிற்கும்
பின்னின் றருளும் பிறவியை நீக்கிடு
முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே. (4)

வேறு பாடம்: 1. முடிக்கின்ற (ஆ இ ஈ) III. 2. நண்ணின் (இ ஐ) I.

கருத்து: மூவகை உயிர்கட்கும் அருளும் முறைமை கூறுகின்றார்: வினைகள் நீங்கும் காலத்தில் சகலர்க்குக் குருவடிவாயும், பிரளயாகலர்க்குத் தெய்வ வடிவாயும் இறைவன் அருள்வான். விஞ்ஞானாகலர்க்கு உயிர்க்கு உயிராய் நின்று அருள்புரிவான். பின்னும் உயிர்கள் அருள்நெறியில் வாழ அருள்புரிவான். பிறவியை நீக்குவான். அவன் என் முன் நின்று காட்சி தந்து, முத்தியளித்தான்.

அருளுடைமையின் ஞானம் வருதல்

1633. சிவனரு ளாற்சில தேவரு மாவர்
சிவனரு ளாற்சில தெய்வத்தோ டொப்பர்
சிவனரு ளால்வினை சேரகி லாமை
சிவனருள் கூறிற் சிவலோக மாமே. (அ)

1634. புண்ணிய னெந்தை புனித னிணையடி
நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது
மண்ணவ ராவதும் வானவ ராவது
மண்ண லிறைவ னருள்பெற்ற போதே. (ஆ)

தேரை மாற்றி ஏறுக

1635. காயத்தேர் ஏறி மனப்பாகன் கை கூட்ட
மாயத்தேர் ஏறி மயங்குமவை, உணர்
நேயத்தேர் ஏறி நிமலன் அருள் பெற்றால்
ஆயத்தேர் ஏறி, அவன் சிவனாமே.

காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தே ரேறி மயங்கு மவையுணர்[1]
நேயத்தே ரேறி நிமல னருள்பெற்றா
லாயத்தே ரேறி யவனிவ னாமே. (5)

வேறு பாடம்: 1. மவையுணர்ந்து (அ ஆ ஈ) I.

கருத்து: உடம்பாகிய தேரில் ஏறி, மனமாகிய வலவன் அதைச் செலுத்த, உலகியலில் அகப்பட்டு மயங்கும் உயிர்கள், அன்பு உணர்வாகிய தேரில் ஏறி, மலத்தினின்றும் நீங்கியவனாகிய சிவபெருமானது அருளைப் பெற்றால், அச்சிவன் 'உடனாதல்' என்ற தேரில் ஏறி உயிரை அருளிற் செலுத்த, உயிர் சிவமாம் தன்மை பெறும்.

கை கூட்டுதல் - கை வன்மையால் செலுத்துதல். மாயம் - நிலையாத உலகியல், நிலைத்தது போல் தோன்றும் தோற்றம். அத் தோற்றத்தையே நம்புதலை 'மாயத்தேர் ஏறி' என உருவகித்தார். மயங்குமவை - வினையாலணையும் பெயர். நேசத்தையே கொண்டு உணர்வு பெறுதலின் 'உணர்நேயம்' என்றார். இந்நேசமே சிவனருள் பெறுதற்கு வாயிலாதலின் 'நேயத்தேர் ஏறி' என்றார். இத்தேர்க்கு அருள் வலவனாய் அமைதல் வேண்டும் என்பது குறிப்பு. ஆயம் - கூட்டம்; தோழமை, ஈண்டு உடனாதல். 'ஒன்றாதல்' என்ற நிலையில் இறைவன் உயிரோடு கலந்துள்ளான் ஆயினும், அவ்வுயிர் அருள்பெற்ற நிலையில், ஏற்கனவே 'உடனாகியும் நிற்கும் அவன்', அருளனுபவத்தில் செலுத்துதலின் 'ஆயத்தேர் ஏறி' என்றார். ஏற்கனவே இறைவன் உயிராகியுள்ளான். இப்பொழுது உயிர் சிவமாம் தன்மை பெறுகிறது. "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி" என்பார் மெய்கண்டாரும் (சிவஞானபோதம் 10 ஆம் நூற்பா).

1636. அவ்வுல கத்தே பிறக்கி லுடலொடு
மவ்வுல கத்தே யருந்தவ நாடுவர்
அவ்வுல கத்தே யரனடி கூடுவர்
அவ்வுல கத்தே யருள்பெறு வாரே. (ஆ)

சன்னிதியின் பெருமை

1637. கதிர் கண்ட காந்தம் கனலின் வடிவாம்;
மதி கண்ட காந்தம் மணிநீர் வடிவாம்;
சதிகொண்ட சாக்கி எரியின் வடிவாம்;
எரி கொண்ட ஈசன் எழில் வடிவாமே.

[1]கதிர்கண்ட காந்தங் கனலின் வடிவா
மதிகண்ட காந்த மணிநீர் வடிவாஞ்
[2]சதிகொண்ட [3]சாக்கி [4]எரியின் வடிவா
[5]மெரிகொண்ட வீச [6]னெழில்வடி வாமே. (6)

வேறு பாடம்: 1. கதிர் கொண்ட (இ) I. 2. சதிகொண்டு (இ) I; சரிகொண்டு (ஆ) II; சதிர்கொண்டு (த) 3. தாக்கி (இ) II; தாக்கிற் (ஆ) II. 4. றழலின் (ஆ) II. 5. மெதிர்கொண்ட (த) 6. னெழிலி வடி (தி).

கருத்து: மேலைப்பாட்டில் உயிர் சிவமாந்தன்மை எய்துதலைக் கூறினார். இங்கு அதனையே உவமை முகத்தால் விளக்குகிறார். சூரிய ஒளியில் வைக்கும் சூரிய காந்தக் கல் அச்சூரியனே போலும். சந்திர ஒளியில் வைக்கும் சந்திர காந்தக் கல் அழகிய நீர்மயமாகும். ஒன்றுடன் ஒன்று மோதப்படும் சக்கிமுக்கிக்கல் தீப்பற்றும். இவைபோல, சிவனின் சன்னிதியில் (சிவத்துடன் கூடிய) உயிர் சிவமேயாகும்.

முன்னர் இச்செய்யுட்கு உரை கண்டோர் இவ்வுவமையை உள்ளங் கொள்ளாராயினர். மேலைப் பாட்டுடன் தொடர்ச்சியையும் நினையாராயினர். உயிர் ஈசன் வடிவாம் என எழுவாய் வருவிக்க.

சதி - மோதுதல். வடசொற்றிரிபு. சக்கி, சாக்கி என நீட்டல் விகாரம் பெற்றது.

விடுவேனா அவனை?

1638. நாடும் உறவும் கலந்து எங்கள் நந்தியைத்
தேடுவன், தேடிச் சிவபெருமான் என்று
கூடுவன், கூடிக் குரைகழற்கே செல்ல
வீடும் அளவும் விடுகின்றிலேனே.

நாடு முறவுங் கலந்தெங்க ணந்தியைத்
தேடுவன் றேடிச் சிவபெரு மானென்று
கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல்ல
வீடு மளவும் [1]விடுகின்றி லேனே. (7)

வேறு பாடம்: 1. விடுகின்றதிலேனே (துடி).

கருத்து: கூடுதற்கு அவனைக் காணாமையின், அவன் எங்கு உளன் என்று நாடுதலும், இடையறாத அன்பு கொண்டு உறவு பாராட்டு தலுமாக, என் நந்தியைத் தேடுவேன். அவன் எனது பிடிக்கு அகப்படுவான். நாவார, உயிர் ஆர, 'சிவபெருமான், எம்பெருமான்' என்று கூவி அவனைக் கூடுவேன். அவன் திருவடியில் சேரும் பொருட்டு என் வாணாள் இறுதிக்காறும் விடாமல் முயல்வேன்.

"அவன் கணக்கறிந்தும் விடுவேனோ' என்பார் வள்ளலாரும். (திருவருட்பா 6:23:1) நாடு - முதனிலைத் தொழிற் பெயர்.

87. அவ வேடம்

வேடத்தால் என்ன பயன்?

1639. ஆடம்பரம் கொண்டு அடிசில் உண்பான் பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகள்!
ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் காணீர் சிவனவன் தாள்களே.

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைக[1]
ளாடியும் பாடியு மழுது மரற்றியுந்
தேடியுங் காணீர் [2]சிவனவன் றாள்களே. (1)

வேறு பாடம்: 1. பேதைகா (இ ஒ) IV. 2. சிவனருள் இணைகளே (ஆ) II.

கருத்து: உணவுண்ணுவதே பயனாக, ஆடம்பரமாக, அடியார் போல் வேடம் தாங்கி மக்களை அச்சுறுத்தும் அறிவிலிகளே, வேடத் தால் பயன் யாது? சிவபெருமானைப் பாடியும் மெய்ப் பாடாக ஆடியும், குறை நினைந்து அழுதும், காட்சிதாராரயோ என ஏங்கிப் பன்முறை கூவியும், உள் முகமாகத் தேடியும் அவன் திருவடிகளை எய்துவீராக.

1640. ஞான மிலார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
யீனம தேசெய் திரந்துண் டிருப்பினு
மான நலங்கெடு மப்புவி யாதலா
லீனவர் வேடங் கழிப்பித்த லின்பமே. (ங)

காவல்

1641. இன்பமும் துன்பமும் நாட்டாரிடத்து உள
நன்செயல், புன்செயலால் அந்த நாட்டிற்கு ஆம்
என்ப, இறைநாடி நாள்தொறும் நாட்டினில்
மன்பதை செப்பம் செயின் வையம் வாழுமே.

இன்பமுந் துன்பமு நாட்டா ரிடத்துள
நன்செயல் புன்செய [1]லாலந்த நாட்டிற்காம்
என்ப விறைநாடி நாடொறு நாட்டினின்
மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே. (2)

வேறு பாடம்: 1. லாவது (ஓ) II.

கருத்து: ஒரு நாட்டு மக்கள் எய்தும் இன்பமும் துன்பமும், முறையே அவர்கள் செய்த நல்வினை, தீ வினைகளால் உண்டானவை என்பர். மன்னன் இதை உள்ளங்கொண்டு, நாட்டில் நாள்தோறும் மக்களின் செயல்களைக் கண்காணித்துத் திருத்துவானாயின், நாடு வாழும்.

நாடு கடத்துக

1642. இழிகுலத்தோர் வேடம் பூண்பர் மேலெய்த;
அழிகுலத்தோர் வேடம் பூண்பர் தேவாக,
பழிகுலத்து ஆகிய பாழ்சண்டரானார்
கழிகுலத்தோர்கள், களையப்பட்டோரே.

இழிகுலத் [1]தோர்வேடம் [2]பூண்பர்மே லெய்த
வழிகுலத் தோர்வேடம் பூண்பர்தே வாகப்
பழிகுலத் [3]தாகிய [4]பாழ்சண்ட ரானார்
கழிகுலத் [5]தோர்கள் களையப்பட் டோரே. (3)

வேறு பாடம்: 1. தார் வேட (ஓ) III. 2. முண்பர்மே (ஓ) I. 3. தாராகிய (ஓ) II. 4. பாஞ்சண்ட (அ) I; பாழ்கண்டான்னார் (ஓ) I. 5. தோர்களைக் (ஆ) I.

கருத்து: தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தோர் தாம் உயர்வாகக் கருதப்படும் பொருட்டுத் தவ வேடம் தாங்குவர். ஒழுக்கம் கெட்ட குடும்பத்தோர், தாம் தெய்வம் எனக் கொண்டாடப்படும் பொருட்டு அவ்வேடத்தைப் புனைவர். இவ்விரு சாராரும் பழிக்கு உரியவரே. உண்மையில் இவர் பாழான சண்டாளர் ஆவர். குடும்பப் பண்பு இல்லாத இவர்கள் நாட்டிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

ஞானம் தருவதே நல்ல தவம்

1643. பொய்த்தவம் செய்வார் புகுவர், நரகத்துப்
பொய்த்தவம் செய்பவர் புண்ணியர் ஆகாரேல்;
பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துள் போக்கியும்
சத்தியம் ஞானத்தால் தாங்கும் தவங்களே.

பொய்த்தவஞ் செய்வார் புகுவர் நரகத்துப்[1]
பொய்த்தவஞ் செய்பவர் புண்ணிய ராகாரேற்[2]
பொய்த்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியுஞ்[3]
சத்திய ஞானத்தாற் [4]றாங்குந் தவங்களே. (4)

வேறு பாடம்: 1. நரகத்திற் (ஈ) III. 2. ராகார் (அ ஓ) II. 3. போக்கியஞ் (இ ஈ உ) I. 4. றங்குந் (விசு) (தி) (த) (வ).

கருத்து: பொய்யான தவத்தைச் செய்பவர் புண்ணியர் ஆகார். ஆதலின் அவர் நரகத்தில் புகுவர், இது மெய்த்தவம் போலே இன்பத்தைக் கொடுக்கக் கூடும் ஆயினும் ஞானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ளும் தவமே உண்மையாம்.

1644. பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக
மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைக்கொள்வர்
பொய்வேடம் மெய்வேடம் போதவே பூணினும்
உய்வேட மாகும் உணர்ந்தறிந் தார்க்கே. (அ, ஆ)

88. தவ வேடம்

வேடத்தோர் அல்ல; வேடர்

1645. தவம் மிக்கவரே தலையான வேடர்;
அவம் மிக்கவரே அதிகொலை வேடர்,
அவம் மிக்கவர் வேடத்து ஆகார்; அவ்வேடம்
தவம் மிக்கவர்க்கு அன்றித் தாங்க ஒண்ணாதே.

தவமிக் கவரே தலையான வேட
[1]ரவமிக் கவரே யதிகொலை வேட
ரவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்
தவமிக்க வர்க்கன்றித் தாங்கவொண் ணாதே. (1)

வேறு பாடம்: 1. மவமிக் (அ ஒ ஓ) I.

கருத்து: தவவேடம் பூண்டோருள் சிறந்தோர் மிக்க தவம் செய்வோரே ஆவர். மற்று, வீணான செயல்கள் செய்வோர் தவ வேடம் பூண்டால், அவர் மிக்க கொலைபாதகம் செய்யும் வேடர்களே ஆவர். இவர்கள் தவ வேடம் தாங்குதற்கு உரியர் அல்லர். மிக்க தவம் உடையோரே, அத்தகுதி உடையோர்.

1646. பூதி யணிவது சாதன மாதியிற்
காதணி தாமிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கு முருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. (ஆ , ஔ)

1647. யோகிக் கிடுமது உட்கட்டுக் கஞ்சுளி
தோகைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடையதொன்று
யாகத்து நீறணி யங்கக் கப்பாளஞ்
சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே. (த)

யோக வேடம்

1648. காதணி குண்டலம், கண்டிகை நாகமும்,
ஊதுநற் சங்கும், உயர்கட்டி, கப்பரை;
ஏதம் இல் பாதுகம், யோகாந்தம், ஆதனம்
ஏதம் இல் யோகபட்டம், தண்டம் ஈரைந்தே.

காதணி குண்டலங் கண்டிகை நாகமு[1]
[2]மூதுநற் சங்கு [3]முயர்கட்டி கப்பரை
யேதமில் [4]பாதுகம் யோகாந்த மாதன
மேதமில் [5]யோகபட் டந்தண்ட மீரைந்தே. (2)

வேறு பாடம்: 1. நாதமோ (ஓ) III நாதமு (ஆ) I; நாதமுன் (த) நீறும் (துடி) 2. டூதுநற் (ஓ) III மூதின (ஆ இ) 3. முயர்சட்டிக் (விசு) 4. பாதுகை (விசு) 5. யோக படம் (விசு).

கருத்து: யோகியின் அடையாளங்கள் காதில் அணியும் குண்டலம், நாக உருவில் உள்ள கண்டிகை, சங்கு, ஆறுகட்டி (காதணி) பிச்சைப் பாத்திரம், பாதுகை, யோகநெறி, இருக்கை, யோகபட்டம், யோக தண்டம் என்ற பத்துமே ஆகும்.

எதற்கு அடையாளம்?

1649. நூலும் சிகையும் உணரார் நின்மூடர்கள்
நூலது வேதாந்தம், நுண்சிகை ஞானமாம்
பால் ஒன்றும் அந்தணர் பார்ப்பார் பரம் உயிர்
ஓர் ஒன்று இரண்டினில் ஓங்காரம் ஓதிலே.

நூலுஞ் சிகையு [1]முணரார்நின் மூடர்க
ணூலது வேதாந்த நுண்சிகை ஞானமாம்
பாலொன்று மந்தணர் பார்ப்பார் பரமுயிர்
[2]ஓரொன் [3]றிரண்டினி லோங்கார மோதிலே. (3)

வேறு பாடம்: 1. முணரார் நுண் (ஆ ஓ) I. 2. போரொன் (இ) I. 3. றிரண்டெனி (இ) I.

கருத்து: தவவேடமாகிய பூணூலையும் உச்சிமயிரையும் இன்னவற்றிற்கு அடையாளமென்று மூடர் அறியார். பூணூல் வேதாந்தப் பொருளைச் சுட்டும். உச்சி மயிர் ஞானத்தைச் சுட்டும். இவ்வேடம் பொருந்த அணிந்த அந்தணர் பரம், உயிர் என்ற இரண்டையும் தனித்தனியே உணர்வர். ஓங்காரத் தியானத்தில் இவை இரண்டும் அன்னியம் இன்றி நிற்பதை உணர்வர். அதாவது உயிரில் சிவமும், சிவத்தில் உயிரும் விளங்குவதை உணர்வர்.

உயிரில் சிவம் நிற்றல் 'ஒன்றாதல்' என்ற நிலை சிவத்தில் உயிர் நிற்றல் "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாதல்" என்ற நிலை ஆன்மாவும் சிவமும் பொருட்டன்மையால் வேறு வேறு என்பதைப் "பார்ப்பார் பரம் உயிர்" என்றும், அனுபவத்தில் இவை அத்துவிதமாகும் (ஒன்றுபடும்) என்பதை "இரண்டினில் ஓர் ஒன்று" என்றும் கூறினார்.

குறிப்பு: 1. இப்பாடல் ஈ, ஒ - சுவடிகளில் இல்லை, 2. சுவடிகளிலும் பதிப்புகளிலும் இப்பாடல் முதல் 3 பாடல்கள் 'திருநீறு' என்ற தனி இயலாக உள்ளன. இப்பதிப்பில் 'தவவேடம்' என்ற இயலிலேயே இப்பாடல் சேர்க்கப்பெற்றது. ஏனைய 2 பாடல்களும் இடைச் செருகலாகக் கருதத்தக்கவை.

திருநீறு

1650. கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி
சிங்கார மான திருவடி சேர்வரே (க)

1651. அரசுட னாலத்தி யாகுமக் காரம்
வீரவு கனலில் வியனுரு மாறி
நிரவய னின்மலன் றாள்பெற்ற நீத
ருருவம் பிரம னுயர்குல மாமே. (ஏ)

89. சிவ வேடம்

ஞானம் வேண்டும்

1652. ஞானமிலார் வேடம் பூண்டும் நரகத்தர்;
ஞானமுளார் வேடம் இன்றுஎனின் நன்முத்தர்
ஞானம் உளதாக வேண்டுவோர் நக்கன்பால்
ஞானம் உள வேடம் நண்ணிநிற்பாரே.

ஞானமி லார்வேடம் பூண்டு நரகத்தர்
ஞானமு ளார்வேட மின்றெனி னன்முத்தர்
ஞான முளதாக வேண்டுவோர் நக்கன்பால்'
ஞான முளவேட நண்ணிநிற் பாரே. (1)

வேறு பாடம்: 1. நக்கன் போல் (த)

கருத்து: ஞானம் இல்லாதவர் அடியார் வேடம் பூணினும் நரகமே செல்வர். ஞானம் உடையவர் வேடம் இல்லையெனினும் முத்திபெறுவர். எனவே, ஞானம் பெற விரும்புவோர், சிவபெருமானிடம், அதற்குரிய வேடத்தையே தர வேண்டுவர்.

குறிப்பு: சுவடிகளிலும் பதிப்புகளிலும் இது முதல் 8 பாடல்கள் ஞானவேடம் என்னும் இயலாக உள்ளன. அத்தகைய வேடம் ஒன்று இன்மையால் இயலின் பெயர் 'சிவவேடம்' என மாற்றப்பெற்றுச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் 'ஞானவேடம்' என்னும் தலைப்பு உள்ள இயலின் பாடல்களும் 'சிவவேடம்' என்ற பெயர் உள்ள இயலின் பாடல்களும் இவ்வியலில் சேர்க்கப்பெற்றன. இடைச் செருகலாகக் கருதப்படும் பாடல்கள் அடையாளமிடப்பட்டுள்ளன.

1653. புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை
நன்ஞானத் தோர்வேடம் பூணா ரருணண்ணித்
துன்ஞானத் தோர்சம யத்துரி கள்ளோர்
பின்ஞானத் தோரொன்றும் பேசகி லாரே. (ஆ)

1654. சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கு
மவமான சாதன மாகாது தேரி
லவமா மவர்க்கது சாதன நான்கு
முவமான மில்பொரு ளுள்ளுற லாமே. (ஏ, ஔ)

"ஏதேனும் ஆகார்"

1655. கத்தித் திரிவர் கழுவடி நாய்போலக்[1]
கொத்தித் திரிவர் [2]குரக்கறி ஞானிக
ளொத்துப் [3]பொறியு முடலு மிருக்கவே[4]
செத்துத் திரிவர் சிவஞானி யார்களே[5]. (2)

வேறு பாடம்: 1. நாய்கள் போல் (த) 2. குரகறி (ஆ) I குரக்கிறி (ஓ) I குரக்களி (தி) (விசு), குரற்களி (த) 3. புலனு (ஓ) IV. 4. மிருக்கவும் (த) 5. யோர்களே (சண்)

கருத்து: குரங்கினது அறிவே போல் அலையும் அறிவுடைய போலி ஞானிகள், கழுமரத்தின் அடியில் கத்தும் நாய் போல இடை விடாமல் பேசுவர். உலகியல் இன்பங்களைப் பெறப் பிறரை அல்லற்படுத்துவர். சிவஞானிகளோ, அனுபவிக்கப் பொறிகளும் உடலும் நன்னிலையிலிருந்தும் உலகியல் உணர்வின்றியே இருப்பர்.

1656. அடியா ரவரே யடியார லாதா
ரடியாரு மாகாரவ் வேடமு மாகா
வடியார் சிவஞான மானது பெற்றோ
ரடியா ரலாதா ரடியார்க ளன்றே. (ஆ, ஔ)

எக்கோலமும் தவக்கோலமே

1657. ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாம்
தான் உற்ற வேடமும் தற் சிவயோகமே;
ஆன அவ்வேடம் அருள்ஞான சாதனம்;
ஆனதும் ஆம் ஒன்றும் ஆகாதவனுக்கே.

ஞானிக்குச் சுந்தர [1]வேடமு நல்லவாந்
தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே
[2]யானவவ் வேட மருள்ஞான சாதன
மானது மாமொன்று மாகா தவனுக்கே. (3)

வேறு பாடம்: 1. பேதமும் (ஓ) I. 2. ஞானவவ் (அ ஆ) I; ஞானமவ் (இ) I.

கருத்து: உலகியலார்க்கு உரிய அழகிய கோலமும் ஞானிக்குப் பொருத்தமே. அவன் எக்கோலம் கொண்டாலும் அவன் இருப்பது சிவயோக நிலையிலே. அக்கோலமே அவன் அருளையும் ஞானத்தையும் எய்தும் சாதனமாகும். உள்ளப் பக்குவம் அடையாத வனுக்கு எவ்வேடமும் வேடம் ஆவது மாத்திரமே. அதனால் அவன் பயன் கொள்ளுதல் இல்லை.

சீவன் முத்தன்

1658. ஞானத்தில் நாற்பதம் நண்ணும் சிவஞானி
தானத்தில் வைத்தல் தனி ஆலயத்தனாம்
மோனத்தன் ஆதலின் முத்தனாம் சித்தன்;
ஏனைத் தவசி இவன் எனலாமே.

ஞானத்தி னாற்பத நண்ணுஞ் சிவஞானி
தானத்தில் [1]வைத்தல் தனியால யத்தனா
[2]மோனத்த னாதலின் முத்தனாஞ் சித்த[3]
[4]னேனைத் தவசி யிவனென லாமே. (4)

வேறு பாடம்: 1. வைத்த (விசு) (தி) (வ) (து) 2. மோனத்தி (து) 3. சித்தனாம் (ஆ) I. 4. னேனத் (ஆ இ ஈ ஓ) I.

கருத்து: சிவஞானி 'ஞானத்தில் ஞானம்' என்ற நெறியில் நிற்பவன். இறைவன் இவனது சகஸ்ராரத்தானத்தை இடமாகக் கொண்டு விளங்குவதால், இவனது உடம்பே ஆலயமாகும். மௌன நிலையை எய்தியவன் ஆதலின் இச்சித்தன் முத்திபெற்றவனேயாவான். பிற தவசிகள் இவனைப் போன்றவரோ?

முத்தியின் விளைவு

1659. தான் அறி தன்மையும், தான் அவனாதலும்,
ஏனைய அச்சிவமான இயற்கையும்,
தான் உறு சாதக முத்திரை சாத்தலும்
மோனமும் நந்திபதம் முத்தி பெற்றதே.

[1]தானறி தன்மையுந் தானவ னாதலு
மேனைய வச்சிவ மான வியற்கையுந்
[2]தானுறு [3]சாதக முத்திரை சாத்தலு
[4]மோனமு நந்தி பதமுத்தி பெற்றதே[5]. (5)

வேறு பாடம்: 1. தானற்ற (விசு) (தி) (த); தானன்றித் (வ) (சண்) 2. தானுரு (விசு) 3. சாகா (ஆ) I; சாதக (விசு) (தி) (த) (வ) 4. மேனமு (ஓ) I மேனவும் (தி) 5. பெற்றவே (த).

கருத்து: தன்னை இறைவன் அடிமை என உணர்தலும், தான் சிவமே ஆதலும், உலகத்தில் பிற பொருள் யாவற்றிலும் சிவத்தையே காணும் காட்சியும், சிவன் காட்டிய சாதக முத்திரையைத் தானும் காட்டுதலும், மௌனம் மேற்கொள்ளுதலும், இறைவன் திருவடி - முத்தி - பெற்றமையின் விளைவே.

அடிமைப் பாங்கே சிவ வேடம்

1660. அருளால் அரனுக்கு அடிமை - அது ஆகி,
பொருளாம் தனது உடல் - பொற்பதி நாடி,
இருளானது இன்றி இருஞ்செயல் அற்றோர்
தெருளாம் அடிமைச் சிவவேடத்தாரே.

அருளா [1]லரனுக் கடிமைய தாகிப்
பொருளாந் தனதுடற் [2]பொற்பதி நாடி
யிருளான [3]தின்றி யிருஞ்செய லற்றோர்
தெருளா மடிமைச் சிவவேடத் தாரே[4]. (6)

வேறு பாடம்: 1.மரனுக் (அ) I யரனுக் (ஈ) I. 2. பொற்பது (த) 3. தன்றி (ஓ) I. 4. தோரே (தி).

கருத்து: சிவபிரானது அருட்சத்தியின் செயலால் அவனுக்கு அடியாராகி, மாயேயம் ஆகிய தனது உடலே சிவபிரானுக்குப் பொன்னம்பலமாக விளங்கும் வழியை ஆய்ந்து, ஆணவத்தின் செயலான அறியாமை அற்று, தம் செயல் என எதையும் எண்ணாதோரே, தெளிவுடன் கூடிய, சிவவேடமாகிய அடிமைத் தன்மையைப் பூண்டவர் ஆவர்.

பெரிய செயலே தம் செயல் என எண்ணாதோர் ஏனைச் சிறு செயலையும் அவ்வாறு எண்ணார் ஆதலின் "இருஞ்செயல் அற்றோர்" என்றார். தன் சுதந்திரம் இல்லாத இத்தன்மையை "அடிமைச்

சிவவேடம்" என்றார். மற்றும், இதனால், 'இவ்வடிமைத் தன்மையே சிவவேடம், வேறு கோலம் வேண்டா' என்றும் கூறினார்.

கடலில் சிக்கிய கட்டை

1661. உடலில் துவக்கிய வேடம் உயிர்க்கு ஆகா,
உடல் கழன்றால் வேடம் உடனே கழலும்,
உடல் உயிர் உண்மை ஒன்று ஓர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே.

உடலிற் [1]றுவக்கிய வேட முயிர்க்காகா
வுடல்கழன் றால்வேட முடனே கழலு
முடலுயி [2]ருண்மையொன் றோர்ந்துகொள் ளாதார்
கடலி லகப்பட்ட கட்டையொத் தாரே. (7)

வேறு பாடம்: 1. றுவக்குவே டம்மூயிர்க் (த) 2. ருண்மையின் (உ) I; ருண்மையென் (ஈ ஒ) I.

கருத்து: உடம்பில் கட்டும் வேடத்தோடு உயிர்க்குத் தொடர்பில்லை. உடம்பு இறக்கும்போது வேடமும் உயிரைவிட்டு நீங்கும். உடம்பு, உயிர் - இவைபற்றிய உண்மை ஒன்றையும் எண்ணி உணராதவர், கடல் அலையில் சிக்கிய கட்டை போல அலைக்கழிவு உறுவர்.

என் செயலாவது யாதொன்றும் இல்லை

1662. மயல் அற்று, இருள் அற்று, மாமனம் அற்றுக்
கயல் உற்ற கண்ணிதன் கை இணக்கு அற்றுத்
தயல் உற்றவரொடும் தாமே தாமாகிச்
செயல் அற்று இருந்தார் சிவவேடத்தாரே.

மயலற் றிருளற்று மாமன மற்றுக்
[1]கயலுற்ற [2]கண்ணிதன் [3]கையிணக் கற்றுத்
[4]தயலுற் றவரொடுந் தாமே தாமாகிச்
[5]செயலற் றிருந்தார் சிவவேடத் தாரே. (8)

வேறு பாடம்: 1. கயலற்ற (விசு) (தி) (த) (வ) 2. கண்ணியர் (சண்) 3. கைப்பிணக் (ஆ இ ஈ) I. 4. தயவற் (இ ஈ) I; தயலற் (சண்) 5. செயலற்ற பேறு (ஒ) I.

கருத்து: மாயையால் மயங்குதலும், ஆணவத்தால் அறிவு மறைக்கப் படுதலும் இன்றி, பெண்ணோடு கூடும் கூட்டுறவை நீக்கி, உமையொரு பாகனாகிய சிவபிரானோடு உணர்வு ஒருமித்து, அவனே தான் என ஒன்றி உணர்ந்து, தம்செயல் எதுவும் இல்லை, எல்லாம் அவன் செயலே என்று இருந்தோரே சிவவேடத்தோர் ஆவர்.

தையல் தயல் என விகாரமாயிற்று. செயலற்றிருத்தல் செய்யாமை அன்று, சிவன் செயல் என்று கொண்டு செய்தல். "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே" என்ற திருநாவுக்கரசர் வாக்குக் காண்க.

அகவழிபாடு

1663. ஓடுங் குதிரைக் குசைதிண்ணம் பற்றுமின்
வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே
நாடுமி னந்தியை நம்பெரு மான்றன்னைத்
தேடுமின் [1]பப்பொருள் சென்றெய்த லாமே. (9)

வேறு பாடம்: 1. பொருள் (ஈ) I.

கருத்து: மனிதரே, வெற்று வேடத்தால் என்ன பயன்? மூச்சாகிய குதிரையின் கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து அதை ஒழுங்காகச் செலுத்துக. அந்த அக வழிபாட்டில் சிவபெருமானை அன்புடன் காண முயல்க. நீங்கள் தேடும் இன்பம் அப்பெருமானை உங்கள் உடம்பினுள்ளே தரிசித்துக் கூடுவதால் கிடைக்கும்.

கடிவாளம் பற்றுதல் - ஏற்றி, நிறுத்தி, வெளிவிடும் கணக்கறிந்து நடத்தல்.

90. அபக்குவன்

அறியாமையில் போட்டி

1664. குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. (1)

கருத்து: குருடர் இருவர், தம்முள் வழிகாட்டுவதாகக் கூறி, ஏதேனும் பேரொளி எழும்போது, வழியைவிட்டு விலகி, அங்குமிங்கும்

நடந்து, பின்பு குழியில் விழுவது போல, அறியாமையை நீக்கும் குருவினைக் கொள்ளாமல், அதை நீக்கமாட்டாத ஒருவரைக் குருவாகப் பெற்றவர், சிக்கல் தோன்றும் போது, தத்தமக்குத் தோன்றியவாறு எண்ணி, பயன்பெறாமல் முடிந்து போகின்றனர்.

குருட்டாட்டம் - அறிவுச் சிந்தனைக்கு மாறானது. மயங்கி உணரும் வகையில் இருவரும் ஒருவரை ஒருவர் மிஞ்சம் நிலை. இது காண்பார்க்கும் இகழ்ச்சிக்கு இடமாகும். குருடர் இருவரும் வழி அறியாது, ஒருவர் ஒருவரைப் பிடித்து இழுக்க, இருவரும் குழியில் விழுவர். அதுபோல ஆசிரியரும் மாணவரும் வினை நீக்கும் வழியறியாமல் வினைகளிலேயே மீண்டும் விழுவர். உதவி வேண்டுப வரைவிட, உதவி செய்வோர் வல்லாராக இல்லையேல், இருவரும் துன்புறுவர்.

தானும் அறியான்
சொன்னாலும் அறியான்

1665. மனத்தில் எழுந்தது ஓர் மாயக் கண்ணாடி
நினைக்கில் அதனில் நிழலையும் காணார்,
வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்,
புனக்கடை இச்சித்தும் போகின்ற வாறே. (2)

கருத்து: மனத்தில் ஒரு மாயமான கண்ணாடி உள்ளது. எண்ணிப் பார்த்தால் அதன் நிழலைக்கூடக் காண இயலாது. அந்த மனத்தால் மயக்கமே உண்டாகிறது. அந்த மயக்கத்தால் வினைகள் செய்கின்றனர். அவ்வினைகளின் பயன்கள் தம்மை விட்டு நீங்குதற்கு ஆசிரியர் வழி கூறினாலும் ஏற்கமாட்டார். உலகியலில் தாழ்வான இன்பங்களை விரும்பி, வீணே கழிகின்றார். என்னே அபக்குவரின் நிலை.

கண்ணாடியாக உருவகம் செய்யப்பட்டது ஆணவ மலம். அது தன்னைக் காட்டிக் கொள்ளாது ஆதலின் ‘நிழலையும் காணார்’ என்றார். தாமும் தமது ஆணவத்தை அறியார், ஆசிரியர் அறிவுறுத்தியும் அறியார் என்பது அபக்குவரின் தகுதியின்மையைக் காட்டும்.

புனம் - உலகம். கடை - ஆகுபெயர்.

தாயை அறியாத பிள்ளை

1666. ‘ஏ’ எனில், ‘என்’ எனமாட்டார் பிரசைகள்
வாய்முலை பெய்ய மாதர் நின்று ஊறிடும்,
தாய்முலை யாவது அறியார், தமர் உளோர்
ஊன் நிலை செய்யும் உருவிலி தானே.

[1]ஏயெனி [2]லென்னென மாட்டார் பிரசைகள்
வாய்முலை [3]பெய்ய [4]மாதர்நின் றூறிடுந்
தாய்முலை யாவ தறியார் தமருளோ
ரூனிலை செய்யு [5]முருவிலி தானே. (3)

வேறு பாடம்: 1. பேய்நிலை (ஆ) I. 2. யேயென (ஆ) I. 3. பெய்யு (அ) I. 4. மதுரநின் (ஒ) IV. 5. முருவிலியாந் (துடி)

கருத்து: ‘ஏ’ என்று அழைத்தால், ‘என்ன’ என்று வினவாதவரும் உண்டோ? குழந்தையின் வாயில் மார்பகத்து அமுதத்தை ஊட்டத் தாய் மிகவும் அன்பு கொள்கிறாள். தாயின் மார்பகத்தை அறியாதிருக்கின்றனரே சில குழந்தைகள்! இஃது என்ன வியப்பு! இத்தாயைப் போல, அருட்சத்தி அருளமுதத்தை ஊட்டுவதற்கு அன்பு கொள்கிறாள். அபக்குவர் அவளை அறியாதிருக்கின்றனரே, இஃது என்ன வியப்பு! இவ்வாறின்றி, இறைவனுக்கு அடியார் ஆனோரின் உடம்பில், அந்த உருவமில்லாத இறைவன் கோயில் கொள்கின்றான். இங்ஙனம் அவன் கோயில் கொள்வது, அருட்சத்தியின் அருள் கிடைத்த பின்னரே ஆகும்.

ஊன்நிலை செய்யும் - உடம்பைத் தனக்கு இருப்பு நிலையாகக் (இறைவன்) கொள்வான். உடம்பை நெடுங்காலம் இருக்கச் செய்வான் எனலும் ஆம், சொருபத்தில் உருவம் அற்றவனாகிய சிவம், அடியார்க்கு அருவுருவமாகிய சோதியாக, அவர் உடம்பினுள் விளங்குவான் என்பார், “உருவில் ஊனிலை செய்யும்” என்றார்.

நீ சிவமாவாய்

1667. வாய் ஒன்று சொல்லி, மனம் ஒன்று சிந்தித்து
நீ ஒன்று செய்யல், உறுதி நெடுந்தகாய்!
தீ என்று இங்கு உன்னைத் தெளிவன்; தெளிந்தபின்
பேய் என்று இங்கு என்னைப் பிறர் தெளியாரே.

வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து[1]
நீயொன்று [2]செய்ய லுறுதி நெடுந்தகாய்
[3]தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. (4)

வேறு பாடம்: 1. சிந்திக்க (ஓ) IV. 2. செய்யில் (ஈ ஓ) I. 3. நீயென்றிங் (ஓ) I.

கருத்து: (யோக சாதனைக்கு மன ஒருமைப்பாடு இன்றியமையாதது ஆதலின்) மாணவனே, வாக்கும் மனமும் செயலும் வேறுபட நில்லாதே. நீ யோகத்தில் முதிர்ந்து உன் உணர்வில் சிவத்தை அனுபவிக்கும் நிலை வரும். அப்பொழுது நான் உன்னைச் சிவம் என்றே தெளிவேன். அவ்வாறு தெளிந்தமைக்காகப் பிறர் என்னைப் பேய் என எள்ளியுரையார்.

ஆன்மா சிவம் என்ற தெளிவு - சிவோகம் பாவனை. இஃது அமைதி விளைவித்தலைக் கூறினார். இப்பாடல் ஆன்மாவை விளித்துக் கூறியதுமாம்.

1668. பஞ்சத் துரோகத் ததிபா தகர்தம்மை
யஞ்சச் சமயத்தோர் வேந்த னருந்தண்டம்
விஞ்சச்செய் திப்புவி வேறு விடாவிடில்
பஞ்சத்து ளாகிப் புவிமுற்றும் பாழ்க்குமே. (உ, க)

வினை மோதும்; அதை அறியார்

1669. தவத்திடை நின்றவர் தாம் உண்ணும் கன்மம்
சிவத்திடை நின்றது, தேவர் அறியார்
தவத்திடை நின்றறியாதவர் எல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடு-அது ஆமே.

தவத்திடை நின்றவர் [1]தாமுண்ணுங் கன்மஞ்
[2]சிவத்திடை நின்றது தேவ ரறியார்
தவத்திடை நின்றறி யாதவ ரெல்லாம்
பவத்திடை நின்றதோர் பாடது வாமே. (5)

வேறு பாடம்: 1. தாமுன்னுங் (ஆ ஓ) III. 2. சினத்திடை (இ ஈ ஓ) I.
3. யாதவர்க் (த)

கருத்து: தவம் மேற்கொண்டவர் அனுப்பவிக்கும் பிராரத்த வினை, அவர் அதனை அனுபவிப்பதாக உணராமையால், அவருடன் ஒன்றாய் நிற்கும் சிவனால் அறியப்பட்ட அளவில் நிற்கும். இவ்வாறு வாழும் முறையைத் தேவரும் அறியார். தவம் செய்யாதோர் அனைவரும் பிறந்து பிறந்து வினைப் பயனால் அல்லற்பட வேண்டுவதே.

1670. கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலுந்
தின்றலுஞ் சுஃவுத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை யிறைபா லியற்கை யல்லவே. (ஆ, உ, ண)

ஞான விளக்கு

1671. விடிவது அறியார், வெளிகாண மாட்டார்,
விடியில் வெளியில் விழிக்கவும் மாட்டார்
கடியது - ஓர் உள், நிமை கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கு அது ஆமே.

[1]விடிவ தறியார் வெளிகாண மாட்டார்
[2]விடியில் வெளியில் விழிக்கவு மாட்டார்
கடியதோ [3]ருண்ணிமை [4]கட்டுமின் காண்மின்
விடியாமை காக்கும் விளக்கது வாமே. (6)

வேறு பாடம்: 1. வெடிவ (ஈ ஓ ஓ) I. 2. வெடியில் (அ ஈ ஒ ஓ) I. 3. ரூணிமை (உ) IV; ரூனிடைக் (ஓ) I; ருன்னிமை (இ ஈ ஒ) I; ரூனிமை (த) 4. கட்டுண்மின் (ஓ) I; காட்டுமின் (ஓ) I.

கருத்து: இருள் புலரும் என்பதை அறியார் புலர்ந்து பகல் வந்ததையும் காணார். எல்லையற்ற பரவெளியில் உணர்ந்து நிற்கும் விழிப்பு நிலையைப் (பரசாக்கிரம்) பெறார். இந்த அபக்குவர் நிலை இவ்வாறாக, நீவிர் விரைந்து செல்லும் மனத்தைக் கட்டுக. இமைகளை மூடுக. உள்முகமாகக் காண்க. ஆணவ இருள் புலராமையைத் தடுக்கும் ஞானவிளக்கை அப்போது காணலாம்.

விடி - எல்லை, அளவு. காத்தல் - தடுத்தல். நிமை - இமை.

கடமை மறந்தவன்

1672. வைத்த பசுபாசம் மாற்றும் நெறி வைகி,
பெத்தம் அற முத்தன் ஆகி, பிறழ்வுற்றுத்
தத்துவம் உன்னித் தலைப்படாதவாறு
பித்தான சீடனுக்கு ஈயப்பெறானே.

வைத்த பசுபாச [1]மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த [2]னாகிப் பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் [3]கீயப்பெ றானே[4]. (7)

வேறு பாடம்: 1. மாற்றம் (ஒ) I. 2. னாகியப் (ஓ) I. 3. கியலப் (இ) II. 4. பெறாதானே (ஆ ஈ ஒ ஓ) I.

கருத்து: வியாபகம் உடைய ஆன்மாவைப் பசுவாகக் கட்டுப்படு மாறு செய்வது ஆணவமலம் அதனை நீக்கும் தவநெறியில் வாழ்ந்து, கட்டுநிலை நீங்க, முத்திநிலை எய்தி, உலகியலினின்றும் அருளியலுக்கு மாறி (உலகத்தையே அருள் அனுபவமாக அனுபவித்து) மெய்ப்பொருளாகிய இறைவனையே இடையறாது தியானித்து அவனை அடைதல் கடமை. இதைவிட்டு உலகியலின் பங்களுக்கே பித்துக்கொண்டு அலையும் ஒருவன் சீடன் ஆகான். அவனுக்கு ஞானம் வழங்கலாகாது.

பெத்தம் - உலகப் பந்தங்களில் கட்டுண்டு நிற்றல். முத்தன் - வீடு பேறு அடைந்தவன். கட்டுகளினின்று விடுபடுதல் வீடு. தத்துவம் - என்றும் மாறாத உண்மை; இறைவன். தலைப்படுதல் - இணைதல், ஒன்றுதல். தலைப்படாதவாறு என்பது விரித்தல் விகாரம் ஆயிற்று. இத்தகைய சீடனுக்கு ஞானம் வழங்கலும், அவன் பெறுதலும் கூடா.

ஆகாதன செய்பவன்

1673. மன்னும் மலம் ஐந்தும் மாற்றும் வகை ஓரான்
துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்
பின்னிய பொய்யன், பிறப்பு இறப்பு அஞ்சாதான்
அன்னியனாவான் அசத் சீடனாமே.

மன்னு மலமைந்து மாற்றும் வகையோரான்
றுன்னிய காமாதி தோயுந் தொழினீங்கான்
பின்னிய பொய்யன் பிறப்பிறப் பஞ்சாதா
னன்னிய னாவா னசற்சீட னாமே. (8)

கருத்து: ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்னும் ஐந்து மலங்களும் உயிரைப் பற்றிக் கொண்டு விடாவாயின. அவற்றை நீக்குதல் அரிய சாதனை. அதைச் செய்யான். காமம், கோபம், உலோபம், மோகம், செருக்கு, பமைமை என்னும் ஆறு பகையைப் பகையென்று அறியாது அவற்றில் ஆழ்ந்து கிடப்பான். ஒன்றை மறைக்க ஒன்பது எனப் பலவாகிய பொய் உரைப்பான். பெருந்துன்பமாகிய பிறத்தலையும் இறத்தலையும் துன்பமாக உணராதவன். இவ்வாறு தன் உயிருக்கு ஆகாதவற்றைச் செய்யும் ஒருவன் ஞானத்திற்குத் தொடர்பு இல்லாதவன். எனவே நல்ல சீடனல்லன்.

91. பக்குவன்

வாழ அறிந்தோர்

1674. தொழில் - அறிவாளர் சுருதி கண் ஆகப்
பழுது அறியாத பரம குருவை
வழி அறிவார் நல்வழி - அறிவாளர்
அழிவு அறிவார் மற்றை அல்லாதவரே.

[1]தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாள
[2]ரழிவறி [3]வார்மற்றை யல்லா தவரே. (1)

வேறு பாடம்: 1. தொழுதறி (இ) II. 2. யார்நல் (சண்) 2. ரழியறி (அ) I. 3. யார் மற்றை (ஆ ஒ) I.

கருத்து: ஞானம் வழங்கும் செய்கையை நன்கு அறிந்தவரும், வேதமே தமக்குக் கண்ணாக (வழிகாட்டியாக) அமைய, குற்றமற்ற வாழ்வை நடத்துபவரும் ஆகிய மேலான குருவை வழிபட அறிந்தோரே வாழும் வழியை அறிந்தோர். பிறர், அழியும் வழியை உடையோரே.

கவலையை ஓட்டி என்னை ஆள்க

1675. பதைத்து ஒழிந்தேன் பரமா உனை நாடி,
அதைத்து ஒழிந்தேன், இனி யாரொடும் கூடேன்,
சிதைத்து அடியேன் வினை சிந்தனை தீர
உதைத்து, உடையாய் உகந்து ஆண்டருளாயே.

பதைத்தொழிந் [1]தேன்பர [2]மாவுனை நாடி
[3]யதைத்தொழிந் தேனினி யாரொடுங் கூடேன்
சிதைத்தடி யேன்வினை [4]சிந்தனை தீர
உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே. (2)

வேறு பாடம்: 1. தேபர (ஈ ஓ) I. 2. மாவுன்னை (இ ஓ) III. 3. யதைத் தெழுந் (இ) I. 4. சிந்தின (த)

கருத்து: பரமா, காலனை உதைத்தவனே, உன்னைத் தேடிப் பதைத்தவாறே இருந்தேன். சமய சாத்திரக் காட்டில் அலைந்தேன். புறமாக உன்னை ஆராய்பவரோடு இனிச் சேரமாட்டேன். (உன்னையே சரணடைந்தேன்) என் வினைகளும் கவலையும் தீர, விரும்பி ஆட்கொண்டருள்வாயாக.

"தீர கந்து ஆண்டருள்" எனக் கூட்டுக. அதைத்தல் - அலைதல்.

தியானம் வல்லார்

1676. பதைக்கின்ற போதே பரம் எனும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக்கு ஈயலும் ஆமே.

[1]பதைக்கின்ற போதே [2]பரமெனும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேனின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி
[3]யிசைக்கின்ற வன்பருக் கீயலு மாமே. (3)

வேறு பாடம்: 1. பகைக்கின்ற (அ) I. 2. பரமென்னும் (இ) III. 3. யிதைக்கின்ற (ஈ) I.

கருத்து: ஞானம் எய்துமோ என்று பதைக்கும் உணர்வு வேண்டும். அதே சமயம் நம்மினின்றும் வேறாக நின்று, நம் உள்ளமாகிய

வயலில் 'பரம்' என்னும் விதையை விதைக்கும் முதல்வனைக் கருத்தில் வைத்து, தியானத்தைச் சிதறச்செய்யும் மனத்தை முதற்கண் ஒரு நிலைப்படுத்தி, அதில் இறைவனின் உருவத்தை - மந்திரத்தைப் பொருத்தும் அன்பர் நற்சீடர் ஆவர். அவர்களுக்கு ஞானம் வழங்கலாம்.

பக்குவன்

1677. கொள்ளினு நல்ல குருவினைக் கொள்க
உள்ள பொருளுட லாவி யுடனீக
எள்ளத் தனையு மிடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே. (ங, உ)

1678. சோதி விசாகந் தொடர்ந்திரு தேணண்
டோதிய நாளே யுணர்வது தானென்று
நீதியு ணீர்மை நினைந்தவர்க் கல்ல
தாதியு மேது மறிய கிலானே. (ங, ண)

அருள் விளைய

'1679. தொழில் ஆர, மாமணித் தூய்து ஆன சிந்தை
எழில் ஆர் இறைவன் இடம்கொண்ட போத-
அழல் ஆர் விறகாம் வினை-அது போகக்
கழல் ஆர் திருவடி கண்டு அருள் ஆமே.

தொழிலார [1]மாமணித் [2]தூய்தான சிந்தை
யெழிலா [3]ரிறைவ னிடங்கொண்ட போத[4]
[5]வழலார் [6]விறகாம் வினையது போகக்
கழலார் திருவடி கண்டரு ளாமே. (4)

வேறு பாடம்: 1. மாமணி (சங்) 2. தூயான (அ இ ஈ) I தூயன (ஆ) I. 3. லிறைவன் (விசு) (தி) (வ) (த) 4. போதே (ஓ) II போதம் (அ ஆ) I. 5. மழலார் (உ) I விழலார் (ஓ) II. 6. விறலாம் (அ ஈ ஓ) II.

கருத்து: சரியை முதலிய தவத்தொழில் நிரம்ப, முத்துப் போலத் தூயதான சிந்தையில் சிவம் வீற்றிருப்பதனால் விளையும் ஞானத்தீயில் வினைகள் வெந்து நீங்க - இவற்றினது நிறைவாகச் சிவனது திருவடியைத் தரிசித்தால், அருள் விளையும்.

கண்டு என்பதைக் காண என மாற்றுக.

அறம்செய்வான்; அதையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பான்

1680. சாத்திகனாய்ப், பல தத்துவம் தான் உன்னி
ஆத்திக வேத நெறி தோற்றம் ஆகியே
யாத்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்த வல்லான் - அவன் சத்சீடனாமே.

[1]சாத்திக [2]னாய்ப்பல [3]தத்துவந் தானுன்னி
யாத்திக [4]வேத நெறிதோற்ற மாகியே
[5]யாத்த பிறவியி னஞ்சி யறநெறி
சாத்தவல் லானவன் சற்சீட னாமே. (5)

வேறு பாடம்: 1. சாத்திய (ஓ) I. 2. னாய்பர (விசு) (தி) (வ) (த) 3. தத்துவமுன்னி 4. பேத (விசு) (தி) (வ) (த) 5. யார்த்த (சண்)

கருத்து: சத்துவ குணச்சிறப்புடையவனாய், பல தத்துவங்களையும் சிந்தித்து, வேத நெறியின் உண்மை விளங்க, பிறவியானது வினைகளால் பெருக வளர்வது கண்டு அஞ்சி, அறநெறியை மேற்கொண்டு, அதையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்து விடுபவன் சற்சீடனாவான்.

ஆனந்தசத்தி

1681. சத்தும் அசத்தும் எவ்வாறு எனத்தான் உன்னிச்
சித்தம் உருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந்து ஆனந்தச்
சத்தியில் இச்சை தருவோன் சத்சீடனே.

சத்து [1]மசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்
[2]சித்த முருக்கிச் சிவனருள் கைகாட்ட
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியி [3]லிச்சை [4]தருவோன்சற் சீடனே. (6)

வேறு பாடம்: 1. மசத்துமவ் (ஓ) II. 2. சித்தை (இ ஓ) I. 3. னிச்சைத் (சைவ) 4. தகுவோன்சற் (ஓ) I.

கருத்து: சத்து, அசத்து என்ற நிலைப்பொருள், நிலையாப் பொருள் களின் தன்மையை ஆராயத்தொடங்கி, சிவபிரானுடைய அருள்

தன்னுடைய சிந்தையை உருக்கித் துணைநிற்க, அன்பு பெருகி, ஞானம் பெறுதற்காக, நாளும் வழிபட்டு, ஆனந்தசத்தியாகிய அம்மையிடம் மிக்க ஈடுபாடு கொள்வோன் சற்சீடன்.

ஆனந்தசத்தி - சத்தியின் அருள், வீடுபேறாகிய ஆனந்தத்தை விளைவித்தலின், அவள் ஆனந்த சத்தி எனப்பட்டாள். சிவம், சத்தியிடை வேறுபாடு இன்மையின், சத் - சித் - ஆனந்தம் என்ற இயல்பு, சத்திக்கும் உரியது; "தானந்த மில்லாச் சதானந்த சத்தி" என, ஆசிரியர்; பின்னர்ச் "சிவானந்தக் கூத்து" என்ற இயலிற் கூறுவார்.

குறிப்பு: இப்பாடல் ஈ சுவடியில் இல்லை.

திருவடிதீட்சை

1682. "அடிவைத்து அருளுதி ஆசான் இன்று" என்னா
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த தாய அருட் சத்தியாலே
அடி பெற்ற ஞானத்தன் ஆசு அற்றுளானே.

அடிவைத் [1]தருளுதி [2]யாசானின் றென்னா[3]
வடிவைத்த மாமுடி மாயப் பிறவி
யடிவைத்த [4]தாய வருட்சத்தி யாலே
யடிபெற்ற ஞானத்த னாசற்று ளானே[5]. (7)

வேறு பாடம்: 1. தருளி (ஆ) I. 2. யாசானி (இ) I. 3. றுன்னாய் (ஒ) I; றன்னால் (ஆ) I; றுன்னா (விசு) (தி) (வ) 4. காய (ஆ இ ஒ) I. 5. றுளோனே (சண்)

கருத்து: "ஆச்சாரியப் பெருமானே, இன்று என் தலைமேல் உமது திருவடியை வைத்துத் தீட்சை செய்தருள்வீர்", என்று வேண்டி, தனது பிறவியானது மாயும் பொருட்டுச் சங்கற்பித்ததாகிய, தெய்வவடிவும் , பெரிய முடியும் உடைய அருட் சத்தியினால், குருவின் திருவடி தீட்சை பெற்ற ஞானவான், சற்சீடன் ஆவான்.

குருவின் திருவடி தீட்சை சீடனுக்குப் பதிஞானம் தரும் ஆதலின் 'ஞானத்தன்' என்றார். வடி - வடிவு என்பதன் கடைக்குறை.

கொண்டு கூட்டு: "ஆசான், இன்று அடிவைத்தருளுதி" என்னா, பிறவி மாய அடிவைத்ததாய, வடி வைத்த மாமுடி அருட்சத்தியாலே அடிபெற்ற ஞானத்தன் ஆசற்றுளானே" என வினைமுடிவு செய்க.

குறிப்பு: இப்பாடல் ஈ - சுவடியில் இல்லை.

உள்முக நாட்டம்

1683. சீராரும் ஞானத்தின் இச்சை செலச் செல்ல
ஆராத காதல் குருபரன் பாலாக,
சாராத சாதகம் நான்கும் தன்பால் உற்றோன்
ஆராயும் ஞானத்தனாம் அடிவைக்கவே.

சீராரு ஞானத்தி னிச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்றோ[1]
[2]னாராயு ஞானத்த னாமடி வைக்கவே. (8)

வேறு பாடம்: 1. பாலுற்றா (உ இ) II; பாலுற் (ஒ) I. 2. ராராயு (இ உ) II.

கருத்து: புகழ்மிக்க பதி ஞானத்தில் விருப்பம் ஏற, ஏற, ஆசாரியனிடத்தில் அளவில்லா அன்பு உண்டாக, சீலம், நோன்பு, அறிவு, செறிவு என்ற அரிய சாதனம் நான்கும் வாய்க்கப்பெற்ற சீடன், ஆசாரியன் திருவடி தீட்சை செய்த அளவில், உள்முகமாக நாடும் ஞானத்தைப் பெறுவான்.

சாதனம் - 4; 'அ' - சுவடியில்: சாந்தி, காந்தி, உபாதி, தீட்சை. 'இ'- சுவடியில்: சாந்தி, காந்தி, உபாதனை, தீட்சை.

குறிப்பு : இப்பாடல் "ஈ" சுவடியில் இல்லை

தலையில் அனுபவம்

1684. உணர்த்தும் அதிபக்குவர்க்கே உணர்த்தி
இணக்கு இல் பராபரத்து எல்லையுள் இட்டுக்
குணக்கொடு தெற்கு உத்தர பச்சிமம் கொண்டு
உணர்த்துமின் ஆவுடையான்தன்னை உன்னியே.

உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி
யிணக்கில் பராபரத் தெல்லையு ளிட்டுக்
குணக்கொடு தெற்குத் தரபச் சிமங்கொண்
டுணர்த்துமி னாவுடை யான்றன்னை யுன்னியே. (9)

கருத்து: மிக்க பக்குவம் உடையவரை, சதாசிவத்தைத் தியானித்து உயிருணர்வைப் பெறச் செய்து, இணையற்ற பராபரப்பொருளை அவர் உணரும் இடத்திற்கு அவரைச் செலுத்தி, தலையின் கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய முறையே முன்புறம் (புருவமத்தி)

வலப்பக்கம், இடப்பக்கம், பின்புறம் - என்ற நான்கு இடத்தையும் உணர்வு பெறச் செய்து, பின் தலையுச்சியில் அனுபவம் பெறச் செய்க.

சன்மார்க்கக் குரு

1685. இறை அடி தாழ்ந்து, ஐ வணக்கமும் எய்தி
குறை - அது கூறிக் குணங்கொண்டு போற்றி,
சிறை உடல் நீ அறக் காட்டிச் சிவத்தோடு
அறிவுக்கு அறிவிப்போன் சன்மார்க்கி ஆமே.

இறையடி [1]தாழ்ந்தை வணக்கமு மெய்திக்
[2]குறையது [3]கூறிக் குணங்கொண்டு போற்றிச்[4]
[5]சிறையுட [6]னீயறக் [7]காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. (10)

வேறு பாடம்: 1. தாழ்ந்ததை (ஓ) I. 2. குறையதன் (ஆ) I. 3. கூடிக் (ஆ) I. 4. போற்றச் (விசு) (தி) (வ) (த) 5. சிறைமல (ஆ) IV. 6. நீக்கி (ஆ) IV. 7. சிவத்தொன்றாகக் (ஆ) IV.

கருத்து: நல்ல ஆசாரியன் சிவத்தோடு நின்று, நீ இறைவன் அடியில் பணிந்து ஐந்து வகையாகவும் வணங்கி, உன் குறைகளை விண்ணப்பித்து, அவனது அருட் குணத்தைப் போற்றி, பிறவிச் சிறையிலிருந்து விடுதலைபெற வழிகாட்டி, உனது அறிவுக்குப் பதிஞானத்தை ஊட்டுபவனாவான்.

குறிப்பு: ஓ - சுவடியில் இப்பாடலை அடுத்துள்ள பாடல் இரண்டும் பிற சுவடிகளில் இல்லை. மேலும் அவை இடைச் செருகல் எனக் கருதத்தக்கவை. ஓ - சுவடியில் இப்பாடல்களுடன் 6 - ஆம் தந்திரம் முடிந்தது என்ற குறிப்பு உள்ளது.

1686. வேட்கை விடுநெறி வேதாந்த மாதலால்
வாழ்க்கைப் புலன்வழி மாற்றிச்சித் தாந்தத்து
வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே
தாழ்க்குந் தலையினோன் சற்சீட னாமே. (ஆ, ண)

1687. சற்குணம் வாய்மை தயாவிவே கந்தண்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. (ஔ)

92. ஆறாதாரம்

உடம்பினுள் தாமரை

1688. நாலும் இருமூன்றும் ஈரைந்தும் ஈராறும்
கோலின்மேல் நின்ற குறிகள் பதினாறும்
மூலம்கண்டு ஆங்கே முடிந்த முதல் இரண்டும்
காலம் கண்டான்அடி காணலும் ஆமே.

நாலு மிருமூன்று மீரைந்து மீராறுங்
[1]கோலின்மே னின்ற குறிகள் பதினாறு
[2]மூலங்கண் டாங்கே [3]முடிந்த முதலிரண்டுங்[4]
காலங்கண் டானடி காணலு மாமே. (1)

வேறு பாடம்: 1. கோலிமே (ஓ) I கோலியே (ஆ) I. 2. மூலங்கொண் (ஆ ஈ) I. 3. முடிந்து (தி) (வ) 4. வீரண்டுங் (விசு).

கருத்து: நான்கு இதழ்த் தாமரை வடிவாகிய மூலாதாரம், ஆறு இதழ்த் தாமரை வடிவாகிய சுவாதிட்டானம், பத்து இதழ்த் தாமரை வடிவாகிய மணிபூரகம், பன்னிரண்டு இதழ்த் தாமரை வடிவாகிய அனாகதம் ஆகிய நான்கு ஆதாரங்களும் முதுகுத் தண்டில் அமைய, அதன்மேல் அமைந்த பதினாறு இதழ்த் தாமரை வடிவாகிய விசுத்தி உள்ளிட்ட ஐந்து ஆதாரங்களிலும், மூலாதாரம் தொடங்கி இறுதி வரை அனுபவம் பெற்று, இரண்டு இதழ்த் தாமரை வடிவாகிய ஆக்ஞை என்ற ஆதாரத்தில் இறைவனுடைய திருவுருவைக் காணலாம்.

ஒவ்வொர் ஆதாரத்தின் ஒவ்வோர் இதழையும் ஓர் எழுத்தால் குறிப்பர். கோல் - முதுகுத் தண்டு. மூலம் - மூலாதாரம், காலம் கண்டான்அடி - ஈண்டு ‘அடி’ என்பது திருவருள். ஆக்ஞையில் உள்ள சக்கரத்தை ‘முதல்’ என்றது, அருட்சத்தியின் கருணை கிடைத்த பிறகு, முதலில் அனுபவம் பெறும் இடம் ஆதலின். விசுத்திவரை குண்டலினியாகவும், ஆக்ஞையிலிருந்து அருட்சத்தியாகவும், சத்தி செயற்படுவாள். மாலும் அயனும் காணாத அடியாதலின், “அடிகாணலும்” என்பதன் உம்மை சிறப்பு.

நீராதாரம்

1689. ஈராறு நாதத்தில், ஈரெட்டாம் அந்தத்தில்
மேதாதி நாதாந்தம் மீது ஆம் பராசத்தி
போத - ஆலயத்து அவிகாரம் தனில், போதம்
ஏது ஆர் இவ் ஆதாரம் மீதானம் உண்மையே.

ஈராறு நாதத்தி லீரெட்டா மந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தி
போதா [1]லயத்த விகாரந் தனிற்போத
[2]மேதாரி [3]வாதார மீதான முண்மையே[4]. (2)

வேறு பாடம்: 1. லயந்த (அ ஆ ஈ ஒ ஓ) I; லயாந்த (இ) I சுவடிகளில் உள்ள பாடம் பொருந்தவில்லை யாதலின் பதிப்புகளில் உள்ள பாடம் மேற் கொள்ளப்பட்டது. 2. மேதாதிட யாதார (ஓ) I. 3. யாதார (துடி) 4. வுண்மையே (அ ஈ ஒ ஓ) I.

கருத்து: நாத தத்துவத்தில், சூரிய மண்டலத்தில் பன்னிரண்டு கலைகளிலும், நாதாந்தத்தில், சந்திர மண்டலத்தில் பதினாறு கலைகளி லும் விளங்கும் பராசத்தி, அறிவுக் கோயிலாக விளங்கும் யோகியின் உடம்பில், அவன் உணர்வு எந்த வேறுபாட்டையும் உணராது இருக்கும் நிலையில், காரணத்தால் அமையும் ஆதாரங் களின் மேல், அவற்றைக் கடந்து ஓர் இடத்தில் விளங்குவாள். இவ்விடம் நிராதாரம் ஆகும். ஆதாரங்களில் அடையும் அனுபவம் காரணத்தால் அமையும். நிராதார யோகானுபவம் காரணமின்றி அமையும்.

வரம் வழங்கும் வள்ளல்

1690. மேல் என்று, கீழ் என்று, இரண்டு அறக் காணுங்கால்
தான் என்றும் நான் என்றும் தன்மைகள் ஓர் ஆறும்
பாரெங்கும் ஆகிப் பரந்த பராபரம்
கார் ஒன்று கற்பகம் ஆகி நின்றானே.

[1]மேலென்று கீழென் றிரண்டறக் காணுங்காற்[2]
[3]றானென்று நானென்றுந் தன்மைக ளோராறும்[4]
பாரெங்கு மாகிப் பரந்த பராபரங்[5]
[6]காரொன்று கற்பக [7]மாகிநின் றானே. (3)

வேறு பாடம்: 1. மேலென்றுங் (ஓ) IV. 2. காணுற (ஈ) IV. 3. தானென்னுந் (தி) 4. ளோராறு (இ ஈ) I. 5. பராபரன் (த) 6. காரென்று (இ ஓ) I காரென்றுங் (ஈ) IV. 7. மாகநின் (விசு)

கருத்து: உலகப் பொருள்களில் எல்லாம் 'ஒன்றாதல்' என்னும் நிலையில் ஒன்றி நிற்கும் இறைவன், யோகி எந்த வேறுபாட்டையும் எண்ணாது தியானத்தில் தரிசிக்கும்போது, இறைவனாகிய தான் வேறு, ஆன்மாவேறு எனப் பிரித்துக்காட்டும் இறைக் குணங்கள் ஆறினை யோகிக்கு வழங்கி, மேகம் போல வரையாது வழங்கும் கற்பகம் போல, விளங்குவான்.

இறைக்குணங்கள் ஆறு: அவா இன்மை, ஈசுவரத் தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம் என்பவை.

உவமையாகிய மேகத்துடன் வேறுபாடு காணாதவாறு உள்ள கற்பகம் போல, ஆன்மா, இறைவனோடு தன்னை வேறுபாடு காணாதவாறு இறைவன் நிற்பான் என்ற பொருளும் குறிப்பால் உணர்த்தப்பட்டது. உவமைக்கு உவமை கூறுதல் மரபன்றாயினும் ஆசிரியர் கூறியமை இக்குறிப்பாற் போலும்.

இது நிராதார யோகத்தில் இறைவன் வழங்கும் வரம் ஆகும். முன்பு பிராசாத யோகத்தை விளக்கிய ஆசிரியர், இங்கு அது தரும் பிரசாதம் ஆகியபேறு என்ன் எனக் கூறுகின்றார்.

குறிப்பு: இதனை அடுத்துள்ள "ஆதார சோதனை" என்னும் பாடல், சகமார்க்கம் என்னும் இயலில் வந்தது. ஆதலின் இங்கு விடப்படுகிறது.

கொண்டு கூட்டு: "பாரெங்குமாகிப் பரந்த பராபரம், மேலென்று கீழென்று இரண்டறக் காணுங்கால், தான் என்றும் நான் என்றும் தன்மைகள் "ஓராறும், கார் ஒன்று கற்பகமாகி நின்றானே" என வினைமுடிவு செய்க.

சுக்கிலத்தைச் சக்தியாக மாற்ற

1691. மேதாதியாலே விடாது ஓம் எனத் தூண்டி
ஆதார சோதனை அத்துவ சோதனை
தாது ஆரமாகவே தான் எழச் சாதித்தால்
ஆதாரம் செய் போகம் ஆவது காயமே.

மேதாதி யாலே விடாதோ மெனத்தூண்டி
யாதார சோதனை யத்துவ சோதனை[1]
[2]தாதார மாகவே தானெழச் சாதித்தா
லாதாரஞ் செய்போக மாவது காயமே. (4)

வேறு பாடம்: 1. சோதனைக் (ஓ) I. 2. காதார (ஓ) I.

கருத்து: பிரணவ மந்திரத்தைத் தியானித்து, தொடர்ந்த பயிற்சியால், மேதை முதலிய சந்திர கலைகளை உணர்வில் இணைத்துக் கொண்டு, ஆதாரங்களில் அனுபவம் பெறுதல், அத்துவாக்களைச் சுத்தி பண்ணுதல் ஆகியவற்றால் சுக்கிலம் கனலாக - (சத்தியாக) மாறிச் சகஸ்ராரம் வரை எழுமாறு செய்தால், இவ் ஆதார யோகத்தால் உடம்பு சிவானந்தம் அனுபவித்தற்கு இடமாகும்.

ஓங்கார அமுதம்

1692. ஆறு அந்தமும் கூடி ஆகும் உடம்பினில்
கூறிய ஆதாரம் ஆறும் குறிக்கொண்மின்
ஆறிய அக்கரம் ஐம்பதின், மேலாக
ஊறிய ஆதாரத்து ஓர் எழுத்தாமே.

ஆறந்த முங்கூடி யாகு முடம்பினிற்
கூறிய வாதார [1]மாறுங் குறிக்கொண்மின்
ஆறிய வக்கர [2]மைம்பதின் மேலாக[3]
வூறிய வாதாரத் தோரெழுத் தாமே. (5)

வேறு பாடம்: 1. மற்றுந் (அ இ ஈ ஓ) I. 2. மைந்தின் (ஆ) II மாமைந்தின் (இ) II. 3. மேலே (அனை. சு. வ.) திருவாவடுதுறை யாதீனப் பதிப்பின் படி பாடம் கொள்ளப்பட்டது.

கருத்து: ஆறு அத்துவாக்களும் கூடி உண்டான உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களையும் கருத்தில் கொள்க. பயன்கொள்க. மந்திரம், பதம், வன்னம் - என்ற அத்துவாக்களுள் அடிப்படையான வன்னம் 51 எழுத்துக்கள் ஆகும். அவற்றின் பீஜம் (விதை) ஓம் என்ற பிரணவம். இதுவே ஆதாரம் ஆறனுள் சிறந்த ஆக்ஞையில் அமுதம் ஊறும் அனுபவத்தை உண்டாக்குவது.

மாயைகளின் காரியம்

1693. ஆகும் உடம்பும் அழிகின்ற அவ் உடல்
போகும் உடம்பும் பொருந்திய வாறுதான்
ஆகிய அக்கரம் ஐம்பது தத்துவம்
ஆகும் உடம்புக்கும் ஆறு அந்தமாமே.

ஆகு முடம்பு [1]மழிகின்ற வவ்வுடல்[2]
போகு முடம்பும் பொருந்திய வாறுதா
னாகிய வக்கர மைம்பது தத்துவ
மாகு முடம்புக்கு மாறந்த மாமே. (6)

வேறு பாடம்: 1. மழிகின்றவ்வுடம்பும் (ஓ) I. 2. வவ்வுடம்பும் (ஆ) I வவ்வுடம்பு (ஓ) I.

கருத்து: பிறக்கின்ற உடம்பும், அது அழியும்போது, அதனினின்றும் பிரிந்து செல்லும் சூக்குமவுடம்பும் எங்ஙனம் இயைபு (பொருத்தம்) உடையன என்றால், வன்னம் என்ற அத்துவா முதல், தத்துவம் என்ற அத்துவா வரை உள்ள சுத்த மாயை, அசுத்த மாயை என்பவற்றின் காரியமே இவ்விருவகை உடம்புகளும் என்க. அந்த ஐந்து அத்துவாக்களைக் காரியப்படுத்துவதற்குத் துணைக் கருவியாக உள்ளது கலை என்னும் அத்துவா ஆகும்.

அதனை இப்பாடலில் ஆறாவதாக உள்ள அந்தம் என்றார். அந்தம் என்பது ஈண்டு அத்துவாவைச் சுட்டும்.

சிவமாகும் நேரம்

1694. ஆயும் மலரின் அணிமலர் மேலதும்,
ஆய இதழும் பதினாறும் அங்கு உள,
தூய அறிவு சிவானந்தமாகிப் போய்
மேய அறிவாய் விளைந்தது தானே.

[1]ஆயு மலரி [2]னணிமலர் மேலது
[3]மாய [4]விதழும் பதினாறு மங்குள
தூய வறிவு சிவானந்த மாகிப்போய்
மேய வறிவாய் விளைந்தது தானே. (7)

வேறு பாடம்: 1. ஆய (த) 2. னனிமலர் (ஓ) I. 3. வாய (ஓ) IV. 4. விதழும் (ஓ) I.

கருத்து: ஆராய்ந்து பார்க்கும் இடமாகிய இருதயத்தில் உள்ள ஆதாரமாகிய அநாகதம் என்பது ஒரு தாமரை மலர். அதன் மேல் இருப்பது மற்றோர் ஆதாரமாகிய அழகிய தாமரை மலர். அதுவே விசுத்தி. அதில் 16 இதழ்கள் உள்ளன. அங்குச் சாந்தி கலை தொடங்குகிறது. இக்கலையில், ஆன்மாவின் கட்டற்ற அறிவு சிவானந்தமாகி, மேலும் சென்று சிவமாகும். "என்னுயிரே, என்னறிவே, எனக்கு இனிய உறவே" என்றார் வள்ளலாரும். திருவருட்பா (6 - ஆம் திருமுறை அருள்விளக்கமாலை - 1)

93. அண்டலிங்கம்

அதுவே எல்லாம்

1695. இலிங்கம்-அது ஆகுவது ஆரும் அறியார்
இலிங்கம்-அது ஆகுவ எண்டிசை எல்லாம்
இலிங்கம்-அது ஆகுவ எண்ணெண் கலையும்
இலிங்கம்-அது ஆக எடுத்தது உலகே.

இலிங்கம [1]தாகுவ தாரு மறியா
ரிலிங்கம [2]தாகுவ [3]வெண்டிசை யெல்லா
மிலிங்கம தாகுவ [4]வெண்ணெண் கலையு
மிலிங்கம தாக வெடுத்த துலகே[5]. (1)

வேறு பாடம்: 1. தாவதியாரு (அ) III. 2. தாவது (அ இ ஈ ஒ ஓ) I. 3. எண்டிசை (அ இ ஒ ஓ) I; தெண்டிசை (ஆ) I; மெண்டிசை (ஈ) I. 4. தண்ணெண் (ஓ) I; தென்னெண (துடி) 5. துலகமே (இ)

கருத்து: இலிங்கத்தின் சிறப்பை ஒருவரும் அறியார். அஃது ஒரு பொருளின் அடையாளமன்று. எட்டுத்திசையிலும் உள்ள எல்லாப் பொருளாகவும் இருப்பது அதுவே. அறுபத்து நான்கு கலைகளாக உள்ளதும் அதுவே. அனைத்திலும் 'ஒன்றாக'க் கலந்துள்ள பரம்பொருளை உலகவர் இலிங்கத்தில் வழிபடுவர்.

படைப்பவன்

1696. உலகு இல் எடுத்தது சத்தி முதலா,
உலகு இல் எடுத்தது சத்தி வடிவாய்,
உலகு இல் எடுத்தது சத்தி குணமாய்,
உலகம் எடுத்த சதாசிவம் தானே.

உலகி லெடுத்தது சத்தி முதலா
[1]வுலகி லெடுத்தது சத்தி வடிவா
யுலகி லெடுத்தது சத்தி குணமா
[2]யுலக மெடுத்த 3சதாசிவந் தானே. (2)

வேறு பாடம்: 1. யுலகி (அ ஆ இ ஓ) I. 2. யுலகி லெடுத்த (ஆ இ ஈ ஓ) I. 3. சதாசிவன்றானே (இ) III.

கருத்து: உலகோர் சிறந்தெடுத்துப் போற்றும் சதாசிவம், உலகமாகிய இல்லத்தைச் சத்தியின் துணை கொண்டு படைத்தான். மாயாசத்தியை முதற் காரணமாகக் (மூலப்பொருளாக) கொண்டு படைத்தான். சத்தியின் வடிவுடன் தானும் இணைந்து நின்று படைத்தான். சத்தியின் குணமாகிய அருளால் படைத்தான்.

இலிங்கத்திருமேனி இவற்றை எல்லாம் குறிக்கிறது என்பது கருத்து.

அறிவு தருபவன்

1697. போகமும் முத்தியும் புத்தியும் சித்தியும்
ஆகமும் ஆறாறு தத்துவத்து அப்பாலாம்
ஏகமும் நல்கி இருக்கும் சதாசிவம்
ஆகம் - அது அத்துவாவால்; சிவமாமே.

போகமு முத்தியும் புத்தியுஞ் சித்தியு
மாகமு மாறாறு தத்துவத் தப்பாலா
மேகமு நல்கி யிருக்குஞ் சதாசிவ
மாகம [1]தத்துவா [2]வாற்சிவ மாமே. (3)

வேறு பாடம்: 1. வைத்துவா (ஓ) I; தத்துவ (ஆ) I வத்துவா (விசு) (தி) (வ) 2. ராய்ச்சிவ (ஆ) IV; வாறுஞ் சிவமே (சங்)

கருத்து: சதாசிவம் ஆன்மாக்களுக்கு முறையே உலக வாழ்வில் போகமும், வீட்டுலகில் முத்தியும், உலகியல் நடத்துதற்கு அறிவும், அருளியவை அனுபவித்தற்கு ஞானமும், சித்திகளும், அவற்றை அனுபவித்தற்கு உரிய உடம்பும் அளித்தருளி, ஆன்மா, பக்குவம் அடைந்து சிவதரிசனம் பெறும் காலத்தில் 36 தத்துவங்களையும் கடந்து நிற்கும் பரசிவமாய் விளங்குவான். அவனது உடல் அத்துவா ஆயினும் அவன் எல்லாம் கடந்த, உருவமற்ற சிவமே.

அத்துவா ஆறு; வன்னம், பதம், மந்திரம், கலை, புவனம், தத்துவம் என்பவை. இவற்றுள், மந்திர வடிவமாக இருப்பவன் இறைவன்.

1698. ஏத்தின ரெண்ணிலி தேவரெம் மீசனை
வாழ்த்தினர் வாசப் பசுந்தென்றல் வள்ளலென்
றார்த்தன ரண்டங் கடந்தப் புறநின்று
காத்தன னென்னுங் கருத்தறியாரே. (உ, க)

1699. ஒண்சுட ரோனயன் மால்பிர சாபதி
ஒண்சுட ரான விரவியோ டிந்திரன்
கண்சுட ராகிக் கலந்தெங்குந் தேவர்கள்
தண்சுட ராயெங்குந் தற்பர மாமே. (ஆ, ண)

பரவெளிக் காட்சி

1700. தாபரத்துள் நின்று அருள வல்லான் சிவன்
மா பரத்து உண்மை வழிபடுவார் இல்லை;
மா பரத்து உண்மை வழிபடுவார்க்கு ஒரு
பூ-அகத்துள் நின்ற பொற்கொடி ஆமே.

தாபரத் துண்ணின் றருளவல் லான்சிவன்
மாபரத் துண்மை வழிபடு வாரில்லை
மாபரத் துண்மை வழிபடு வார்க்கொரு[1]
பூவகத் துண்ணின்ற பொற்கொடி யாமே. (4)

வேறு பாடம்: 1. வாளொரு (ஆ ஈ ஒ ஓ) II; வாழர்க்குப் (இ) I வாளர்க்கும் (விசு); வாளர்க்குப் (சங்)

கருத்து: சிவன் இலிங்கத் திருமேனியில் எழுந்தருளி அன்பர்க்கு அருள் வழங்குவான். ஆயினும் அவன் பரவெளியில் உள்ளமையை அறிந்து, அந்த நிலையில் வழிபடுவோர் இவர். யோகமுறையில் அங்ஙனம் வழிபட்டால், உடம்பில், தலை யுச்சியில், சகஸ்ராரத் தாமரையில் நின்ற பராசத்தியுடன் அவன் தரிசனம் நல்குவான்.

1701. தூய விமானமுந் தூலமு தாகுமா
லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்
பாய பலிபீடம் பத்திர லிங்கமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. (ஔ)

1702. முத்துடன் மாணிக்க மொய்த்த பவளமுங்
கொத்துமக் கொம்பு சிலைநீறு கோமதம்
அத்தன்ற னாகம மன்ன மரிசியா
முய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே. (க)

1703. துன்றுந் தயிர்நெய்பால் துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனலிர தஞ்சலம்
வன்றிறல் செங்கல் வடிவுடை வில்லம்பொன்
தென்றியங் கொன்றைத் தெளிசிவ லிங்கமே. (ங)

1704. மறையவ ரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவ ரர்ச்சனை யேயபொன் னாகும்
குறைவிலா வசியர்க்குக் கோமள மாகும்
துறையுடைச் சூத்திரர் தொல்வாண லிங்கமே. (ஏ)

1705. அதுவுணர்ந் தேனொடு தன்மையை நாடி
யெதுவுண ராவகை நின்றன னீசன்
புதுவுணர் வான புவனங்க ளெட்டும்
இதுவுணர்ந் தென்னுடல் கோயில்கொண் டானே. (ஔ)

உணர்வினுள் இருக்கின்றான்

1706. அகலிடமாய், அறியாமல் அடங்கும்
உகல் இடமாய், நின்ற ஊன் - அதனுள்ளே
பகல்-இடமாம்; முன்னம் பாவ வினாசன்
புகலிடமாய் நின்ற புண்ணியன் தானே.

அகலிட மாயறி யாம லடங்கு
[1]முகலிட மாய்நின்ற வூனத னுள்ளே
பகலிட [2]மாமுன்னம் பாவ வினாசன்[3]
புகலிட மாய்நின்ற புண்ணியன் றானே. (5)

வேறு பாடம்: 1. முகிலிட (ஆ ஓ) I. 2. மாய் முன்னம் (அ ஓ) I; மாமுளம் (த) 3. விரிஞ்சன் (இ) II.

கருத்து: முன்னைப் பிறப்பிற் செய்த பாவங்களைப் போக்கு பவனும், இனி வினை செய்யாமைக்குப் புகலிடமாக உள்ளவனும் ஆகிய புண்ணிய மூர்த்தி, அகன்ற அண்டத்தில் யாரும் அறியாமல் மறைந்துறைகின்றான். அழியும் தன்மைத்தாகிய உடம்பினுள், பகுத்தறிவதாகிய உணர்வினை இடமாகக் கொண்டு நிற்கின்றான்.

1707. போது புனைகழல் பூமிய தாவது
மாது புனைமுடி வானக மாவது
நீதியு ளீசன் உடல்விசும் பாய்நிற்கும்
ஆதி யுறநின்ற தப்பரி சாமே. (ஔ)

அண்டமே இலிங்கம்

1708. [1]தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணாந்
[2]திரைபொரு நீரது மஞ்சன சாலை
வரைதவழ் மஞ்சுநீர் வானுடு மாலை
கரையற்ற நந்தி கலையுந்திக் காமே. (6)

வேறு பாடம்: 1. தரையற்ற (அ ஆ ஈ ஓ) I. 2. திரைபெறு (விசு)

கருத்து: அண்டலிங்கத்திற்கு ஆவுடை பூமி; பாணம் ஆகாயம்; கடல் நீராடும் இடம்; மேகமே மஞ்சனநீர்; விண்மீன்கள் மாலை; எட்டுத் திக்கும் ஆடை.

94. பிண்டலிங்கம்

உடம்பே இலிங்கம்

1709. மானுட ராக்கை வடிவு சிவலிங்க
மானுட ராக்கை வடிவு சிதம்பர
மானுட ராக்கை வடிவு சதாசிவ
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. (1)

கருத்து: மனித உடலின் அமைப்பு இலிங்கம் போன்றது. சிதம்பரம் என்னும் ஆகாயத்தானம் உடம்பின் தலையுச்சியில் உள்ளது. சக்தியும் சிவமும் உடம்பில் உறைகின்றனர். உடம்பின் ஆதாரத் தானங்களில் இறைவனின் திருக்கூத்தை - சோதியைக் - காணலாம்.

ஐம்பூதங்களை வெல்ல

1710. 'உலந்திலர், பின்னும் உளர்' என நிற்பர்
நிலம் தரு நீர், தெளி, உள்ளவை செய்யப்
புலம் தரு பூதங்கள் ஐந்தும் ஒன்றாக
வலம்தரு தேவரை வந்தி செய்யீரே.

[1]உலந்திலர் பின்னு முளரென நிற்பர்[2]
நிலந்தரு நீர்தெளி [3]யுள்ளவை செய்யப்
புலந்தரு பூதங்க ளைந்துமொன் றாக
வலந்தரு தேவரை வந்திசெய் யீரே. (2)

வேறு பாடம்: 1. உலந்திலர் (அ ஓ) I உலந்தில ரேனும் (ஆ) II; உலந்திலிர் (து) 2. நிற்பீர் (தி) 3. யூனவை (அ ஈ ஓ ஓ) II.

கருத்து: உடம்பில் ஐந்து பூதங்களும் உள்ளன. அதாவது நிலமும், அதை உண்டாக்கிய நீரும், அதை உண்டாக்கிய தீயும், அதைத்தந்த காற்றும், காற்றை உண்டாக்கிய ஆகாயமும் உள்ளன. அவற்றை யோகசாதனையில் பக்குவப்படுத்தினால் உடம்பு அழியாது; நிலை நிற்கும். அதற்கு, அப்பூதங்கள் ஐந்தையும் ஒருங்கே வெல்லத் துணை செய்யும் இறைவனை வழிபடுக.

தெளி - ஆகாயம். வலம் - வெற்றி.

ஐம்பூதங்களே இறைவன் வரும் வழி

1711. கோயில் கொண்ட அன்றே குடிகொண்டது ஐவரும்;
வாயில் கொண்டு ஆங்கே வழிநின்று அருளுவர்;
தாய் இல் கொண்டாற்போல் தலைவன் என்னுள் புக,
வாயில் கொண்டு ஈசனும் ஆள வந்தானே.

கோயில் கொண் டன்றே குடிகொண்ட தைவரும்[1]
வாயில்கொண் டாங்கே வழிநின் றருளுவர்[2]
தாயில்கொண் டாற்போற் றலைவனென் னுட்புக
வாயில்கொண் [3]டீசனு மாளவந் தானே. (3)

வேறு பாடம்: 1. வைவரும் (விசு) 2. றருளுவீர் (சங்) 3. டீசனும் வாழவந் (ஆ இ) I.

கருத்து: ஆன்மா பிறவி எடுத்தபோதே ஐம்பூதங்களும் அதற்கு உடம்பாக உருவாயின. அவை ஐந்து பொறிகளாகிய வாயில்களை உண்டாக்கி, ஆன்மா அவற்றின் மூலம் அறிவு பெற உதவுகின்றன. தலைவ னும் ஈசனும் ஆகிய சிவன், தாய்ப்பசு வீடு தேடி வந்து, தன் கன்றுக்கு ஊட்டுவது போல, எனது உடம்பினுள் புகுவதற்கும் இந்த ஐம்பூதங்களே வாயிலாக நிற்கின்றன.

ஐம்பூதங்களும் உதவுதல் பற்றி, "அருளுவர்" என்றார்.

ஐம்புலன்களின் தன்மையை மாற்றினான்

1712. கோயில் கொண்டான் அடி கொல்லைப் பெருமறை
வாயில்கொண்டான் அடி நாடிகள் பத்து உள
பூசைகொண்டான் புலன் ஐந்தும் பிறகிட்டு
வாயில் கொண்டான் எங்கள் மாநந்தி தானே.

கோயில்கொண் டானடி [1]கொல்லைப் பெருமறை[2]
வாயில்கொண் டானடி நாடிகள் பத்துள
பூசைகொண் டான்புல னைந்தும் பிறகிட்டு[3]
வாயில்கொண் டானெங்கண் மாநந்தி தானே. (4)

வேறு பாடம்: 1. தொல்லைப் (ஒ) I. 2. பெரும்பறை (அ) I; பெருமுறை (இ) I. 3. புறத்திட்டு (ஆ) II.

கருத்து: எம் இறைவன் நந்தி காடுபோல மிகுந்த வேதத்தில் திருவடி பதித்துள்ளான். அவன் மனித உடம்பை, வீடுபேறு அடையும் சாதனமாக வைத்துள்ளான். அவ்வுடம்பில் சிறந்தவை பத்து நாடிகள். அவற்றைக் கொண்டு செய்யும் யோகமாகிய அக வழிபாட்டை ஏற்றான். ஐந்து புலன்களையும் தன்மை மாற்றி, தன்னை அனுபவிக்கும் வாயிலாக்கினான்.

95. சதாசிவ லிங்கம்

தோற்றம்

1713. கூடிய பாதம் இரண்டும் படிமிசை;
பாடிய கை இரண்டு எட்டுப் பரந்து எழும்;
தேடும் முகம் ஐந்து; செங்கயல் மூவைந்து;
நாடும் சதாசிவ நல்லொளி முத்தே.

கூடிய பாத மிரண்டும் படிமிசை
பாடிய கையிரண் [1]டெட்டுப் பரந்தெழுந்
தேடு [2]முகமைந்து [3]செங்கயன் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே. (1)

வேறு பாடம்: 1. டெட்டும் (துடி) 2. முகமைந்துஞ் (த) 3. செங்கணின் (தி); செங்கையின் (விசு)

கருத்து: சதாசிவருக்குத் திருவருள் கலந்த திருவடிகள் இரண்டும் பூமி மீது உள்ளன. அடியார்கள் புகழ்ந்து பாடிய கைகள் பத்தும் திசையெங்கும் பரவியுள்ளன. ஐந்து முகம் உள்ளன. கயல்போன்ற கண்கள் பதினைந்து உள்ளன. அவரது திருமேனி முத்துப் போல வெண்ணிறம் உடையது.

1714. வேதா நெடுமா லுருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவு நாதமு
மாதார சத்தியு மந்தச் சிவனொடும்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே. (அ)

1715. ஆகின்ற சத்தியி னுள்ளே கலைநிலை
யாகின்ற சத்தியி னுள்ளே கதிரெழ
வாகின்ற சத்தியி னுள்ளே யமர்ந்தபின்
னாகின்ற சத்தியு ளத்திசை பத்தே. (அ)

1716. அத்திசைக் குள்ளே யமர்ந்தன வாறங்க
மத்திசைக் குள்ளே யமர்ந்தன நால்வேத
மத்திசைக் குள்ளே யமர்ந்தன் சரியையோ
டத்திசைக் குள்ளே அமைந்த சமயமே. (அ, உ)

1717. சமயத் தெழுந்த வவத்தையீ ரைந்துள
சமயத் தெழுந்த விராசியீ ராறுள
சமயத் தெழுந்த சதிர ரெட்டுள
சமயத் தெழுந்த சதாசிவந் தானே. (அ)

ஐந்து முகமும் நிறமும்

1718. நடுவு, கிழக்கு உத்தரம், மேற்கு
நடுவு படிகம் நற்குங்கும வன்னம்
அடைவுஉள அஞ்சனம், செவ்வரத்தம், பால்
அடியார்க்கு அருளிய முகம் இவை ஐந்தே.

[1]நடுவு கிழக்குத்தெற் குத்தர மேற்கு
நடுவு [2]படிகநற் குங்கும வன்ன
[3]மடைவுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பா
[4]லடியார்க் கருளிய முகமிவை யைந்தே[5]. (2)

வேறு பாடம்: 1. நடுவுள (ஈ) I. 2. படிக நிறங் (ஓ) II. 3. மடையுள (சங்) 4. லடியேற் (ஈ ஓ) I. 5. யஞ்சே (துடி).

கருத்து: சதாசிவனுக்கு ஐந்து முகம். நடுவில் உள்ளது ஈசானம்; அதன் நிறம் படிகம். கிழக்கு நோக்கியது தத்புருடம்; நிறம் குங்குமம். தெற்கு நோக்கியது அகோரம்; நிறம் கருமை. வடக்கு நோக்கியது வாமதேவம்; நிறம் செம்மை. மேற்கு நோக்கியது சத்தியோசாதம்; நிறம் பால் போன்ற வெண்மை.

1719. அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றாளே. (அ)

1720. சத்தி தராதல மண்டஞ் சதாசிவஞ்
சத்தி சிவமிக்க தாபர சங்கமஞ்
சத்தியுருவ மருவஞ் சதாசிவஞ்
சத்திசிவ தத்துவ முப்பத் தாறே. (ந)

1721. தத்துவ மாவ தருவஞ் சராசரந்
தத்துவ மாவ துருவஞ் சுகோதயந்
தத்துவ மெல்லாஞ் சகலமு மாய்நிற்குந்
தத்துவ மாகுஞ் சதாசிவன் றானே. (ஔ)

கடந்தவன் என்னுட் கலந்தான்

1722. கூறுமின், ஊறு சதாசிவன், எம் இறை
வேறு உரைசெய்து மிகைப் பொருளாய் நிற்கும்;
ஏறுகை செய்தொழில் வானவர் தம்மொடும்
மாறு செய்வான் என் மனம் புகுந்தானே.

[1]கூறுமி னூறு சதாசிவ னெம்மிறை
[2]வேறுரை செய்து [3]மிகைப்பொரு ளாய்நிற்கு
[4]மேறுகை செய்தொழில் [5]வானவர் தம்மொடும்
மாறுசெய் வானென் மனம்புகுந் தானே. (3)

வேறு பாடம்: 1. கூறுமிகு (ஆ) I. 2. வேதேறாருரை செய்து (இ ஒ ஒ) I. 3. மிகப்பொரு (அ ஆ ஓ) I. 4. மேறுரை (ஈ) I; பேறுகை (ஆ) I. 5. பேர்வானவரோடு (ஆ) I.

கருத்து: என் உள்ளத்தில் சிவானந்தமாக ஊறும் சதாசிவனைப் போற்றுக. எப்பொருளை, யாரைக் கூறினாலும், அவன் கடந்த பொருளாகவே இருப்பான். புகழ் ஏணியில் ஏறிக் கொண்டிருக்கும் தேவர்களினும் அவன் மாறுபட்டவன். அவன் என் உணர்வில் புகுந்தான்.

செய்து என்பதைச் 'செய்ய' என மாற்றுக. தொழில் உடையோர் தேவர். சிவனோ ஞானமாத்திரை அன்றிச் சங்கற்ப விகற்பங்கள் இல்லாதவன். இஃது ஒரு வேறுபாடு.

சதாசிவனைத் தெளிந்தேன்

1723. இருளார்ந்த கண்டமு மேந்து மழுவுஞ்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையு
மருளார்ந்த சிந்தையெம் மாதிப் பிரானைத்
தெருளார்ந்தென் னுள்ளே தெளிந்திருந் தேனே. (4)

கருத்து: தனக்கே யுரிய அடையாளமாக நீலகண்டமும், மழுவாயுதமும், சடைமேல் அணிந்த பிறைமதியும், அன்பர்க்கு அவர் வேண்டுமுன் அருளும் கருணையும் உடைய எம் முழு முதல்வனை, அவனே அளித்த பதிஞானம் கொண்டு, எனது உணர்வினுள்ளே தெளிவாக உணர்ந்துள்ளேன்.

இதனால் சதாசிவனின் தலைமையும் அருளும் கூறப்பட்டன.

1724. சத்திதா னிற்கின்ற வைம்முகஞ் சாற்றிடி
லுத்தரம் வாம முரையற் றிருந்திடும்
தத்துவம் புரவி தற்புரு டன்சீர்
மத்த வகோரம் மகுடத்தீ சானனே. (அ)

1725. நாணுநல் லீசான நடுவுச்சி தானாகுந்
தாணுவின் றன்முகந் தற்புருட மாகும்
காணு மகோர மிருதயங் குய்யமாம்
மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே. (அ)

1726. நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவசங் கண்ணம்பு
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாம்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னாகும்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. (உ)

1727. எண்ணி லிதய மிறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே. (உ)

குண்டலிசத்தி மாறி . . .

1728. சத்தி நாற்கோணம் சகம் உற்று இருந்திடும்
சத்தி அறுகோணம் சயனத்தை உற்றிடும்
சத்தி நல் வட்டம் சலம் உற்று இருந்திடும்
சத்தி உருவாம் சதாசிவம் தானே.

சத்திநாற் கோணஞ் [1]சகமுற் றிருந்திடுஞ்
சத்தியறு கோணஞ் சயனத்தை யுற்றிடுஞ்
[2]சத்திநல் வட்டஞ் [3]சலமுற் றிருந்திடுஞ்
சத்தி யுருவாஞ் [4]சதாசிவந் தானே. (5)

வேறு பாடம்: 1. சல முற்று நின்றிடுஞ் (இ ஒ ஓ) II. 2. சத்திநால் (அ ஆ இ) I. 3. சகல முற்றிடுஞ் (அ) II; சலமற் (த) 4. சதாசிவன்றானே (சங்)

கருத்து: குண்டலி சத்தி நாற்கோண வடிவமாய் உள்ள மூலாதாரத்தில், உலகியல் காரியங்களுக்கு உதவியாக நிற்பாள். அவள் அறுகோண வடிவமாய் உள்ளதும், காற்றின் இருப்பிடமு மாகிய விசுத்தியின் அருட்சத்திக்கு இடம் அளித்துத் தான் உறங்குவாள். அருட்சத்தி ஆகாயத் தானமாகிய உச்சந் தலையில் அமுத ஊற்றை உண்டாக்கி வீற்றிருப்பாள்.

வட்டம் - ஆகாயம். உடம்பில் மூலாதாரம் நிலத்தின் இடம். கழுத்து காற்றின் இடம், தலை ஆகாயத்தின் இடம்.

சதாசிவனை அனுபவிக்க

1729. மால் நந்தி எத்தனை காலம் அழைக்கினும்
தான்நந்தி அஞ்சின் தனிச் சுடராய் நிற்கும்;
கால் நந்தி, உந்தி கடந்து கமலத்தின்
மேல், நந்தி ஒன்பதின் மேவிநின்றானே.

மானந்தி யெத்தனை கால மழைக்கினுந்
தானந்தி யஞ்சின் றனிச்சுட ராய்நிற்குங்
கானந்தி [1]யுந்தி கடந்து கமலத்தின்
மேனந்தி யொன்பதின் மேவிநின் றானே[2]. (6)

வேறு பாடம்: 1. யுந்திக் (ஆ இ) I. 2. றாளே (அ ஓ) I.

கருத்து: பிரகிருதி மாயை (மூலப்பகுதி) யிலிருந்து உண்டானது உலகம். இந்த உலகப்பற்றுப் பெருகிட நின்று, இறைவனை எத்தனை காலம் அழைத்தாலும், அவன் ஐந்து முகங்கொண்ட சதாசிவமாய் - தனிச் சுடராய் நிற்பது அன்றி, அனுபவத்திற்கு வாரான். அப்பற்றை நீக்கி, யோகம் பயின்று, மூச்சக்காற்றின் வலிமையைப் பெருக்கி, மூலக்கனலை மேல் நோக்கி எழுப்பி, சகஸ்ராரத் தாமரையின் மேல் ஒன்பது அங்குல இடத்தில் உள்ள அனுபவத்தானத்தில் அவனைப் பெற்று அனுபவிக்கலாம்.

மான் - பிரகிருதிமாயை. கால் - காற்று. இறைவன் அனுபவத்துக்கு வராமல் தனியே நிற்பான் என்று சொல்லவே, அனுபவத்தில் ஆன்மாவோடு கலத்தல் தெளிவாகும்.

என் தலையில் சோதி

1730. ஒன்றியவாறும். உடலினுடன் கிடந்து
என்றும் எம் ஈசன், நடக்கும் இயல்பு அது;
தென்தலைக்கு ஏறத் திருந்து சிவனடி
சென்று தொழுதேன் என் நெஞ்சத்தின் உள்ளே.

ஒன்றிய வாறு முடலி னுடன்கிடந்
[1]தென்றுமெம் மீசன் னடக்கு மியல்பது[2]
[3]தென்றலைக் கேறத் [4]திருந்து சிவனடி
நின்று [5]தொழுதேனென் னெஞ்சத்தி னுள்ளே. (7)

வேறு பாடம்: 1. தொன்றுமெம் (ஈ) I. 2. மியல்வது (ஆ இ ஓ) I. 3. தென்றலைத்தேறத் (ஆ இ ஈ) I. 4. திருந்துஞ் (ஆ இ) III. 5. தொழுதனனென் (விசு).

கருத்து: உடம்பில் நாடிகளாக உள்ள ஆறு ஆதாரங்களில் இறைவன் பொருந்தி அனுபவம் அளித்தான். அஃது ஈசன் ஆதிநாள் தொட்டு அன்பர்க்கு அருளும் முறை. அவனது திருவடி என்

சகஸ்ராரத்தில் சோதிமயமாக விளங்கியது. அதை உணர்வால் வணங்கினேன்.

தென் - அழகிய இறைவன் திருவடி தம் தலையில் பொருந்தியமையைக் கூறுகின்றார். என் உடம்பில் என்றும் நடக்கும் மூச்சுக்காற்று யோகசாதனையால், ஆறு ஆதாரங்களிலும் பொருந்தி, உச்சந் தலைக்கு ஏறியது என்றும் ஒரு பொருள் விளைதல் காண்க.

இடகலை, பிங்கலை மூச்சை முறையே சந்திர கலை, சூரிய கலை என்றும், அவை இறைவன் திருவடி என்றும் கூறுதல் யோக நூல் வழக்கு. 'திருந்துதல்' என்பது, தலைக்கு மேலும் சந்திர கலை பரவுதலைக் குறிக்கும்.

உள்ளக்கோயிலில் ஓங்கார வணக்கம்

1731. உணர்ந்தேன் உலகினில் ஒண்பொருளானை,
கொணர்ந்தேன் குவலயம் கோயில் என் நெஞ்சம்
புணர்ந்தேன், புனிதனும் பொய் அல்ல மெய்யே;
பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே.

உணர்ந்தே னுலகினி லொண்பொரு ளானைக்
[1]கொணர்ந்தேன் குவலயங் [2]கோயிலென் னெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் [3]பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டு.மொலியே. (8)

வேறு பாடம்: 1. குணர்ந்தேன் (சங்) 2. கோயிலே (அ) 3. பொய் யல்லன் (த)

கருத்து: இவ்வுடம்பில் வாழும் இப்பொழுதே, இறைவன் இவ்வுடம்பில் ஒளிமயமாக விளங்குவதை உணர்ந்தேன். எனது இதயக் கோயிலுக்கு என் மூலாதாரச் சத்தியைக் கொண்டு வந்தேன், அங்கு இறைவனைப் புணர்ந்தேன். இவை பொய் அல்ல; உண்மையே. பகல் போல வெளியாக அனுபவமான அவனைப் பாட்டொலியால் - பிரணவத்தின் ஒலியால் - பணிந்தேன். பகல் போல் விந்து (ஒளி) விளங்கிற்று. பாட்டின் ஒலிபோல் நாதம் விளங்கிற்று. விந்து நாதங்களாக சகஸ்ராரத்தில் எனக்கு இறைவன் அனுபவமானான்.

பகலொளிபோல் அவன்ஒளி; பாட்டொலிபோல் அவன்ஒலி என்க. உம்மை எச்சவும்மை.

அழிப்பான்; காத்தலும் செய்வான்

1732. ஆங்கு அவை மூன்றினும் ஆரழல் வீசிடத்
தாங்கிடும் ஈரேழும் தான் அடுவான் அதில்;
ஓங்கிய ஆதியும் அந்தமும் ஆம் என;
ஈங்கு இவைதம் உடல் இந்துவும் ஆமே.

ஆங்கவை மூன்றினு மாரழல் வீசிடத்
தாங்கிடு [1]மீரேழுந் தானடு வானதி
லோங்கிய வாதியு மந்தமு மாமென
வீங்கிவை தம்முட லிந்துவு மாமே. (9)

வேறு பாடம்: 1. மீரெழுத்தானது (அ) I; மீரெழுத்தானடு (ஓ) I; மீரேழு (சைவ); மீரேழுட்டானடு (த).

கருத்து: சதாசிவன் பிற தெய்வங்களை விடச் சிறந்தவன், ஆதியும் அந்தமும் தானே எனப் பதினான்கு உலகங்களையும், சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்றும் நெருப்பைச் சொரிய வைத்து அழிப்பான். அதுமட்டுமோ? உலகின்கண் உயிர்களின் உடலில் உள்ள சந்திர மண்டலத்தில் தானே விளங்கி, அவ்வுடலை அழியாமலும் நிறுத்துவான்.

இந்து - சந்திரமண்டலம். தானே காக்கும் உலகங்களை அழிப்பான் என்க.

யோகி உடம்பு

1733. தன்மேனி [1]தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவ லிங்கமாந்[2]
தன்மேனி தற்சிவன் றற்சிவா னந்தமாந்
தன்மேனி தானாகுந் தற்பரந் தானே. (10)

வேறு பாடம்: 1. தான்சிவ (இ ஆ) IV. 2. மாய்நிற்குந் (த) (சங்)

கருத்து: யோகியே சதாசிவமாய் நிற்றலைக் கூறுகிறார்: யோகியின் உடம்பு அவன் அனுபவத்தில் அருவுருவாம் சிவலிங்கம் ஆகும். அதுவே உருவத்திருமேனியாய், சதாசிவமாய் நிற்கும், பின்னர், அந்த நிலையையும் கடந்து சிவனாக (நாத தத்துவ இறைவனாக) நிற்கும். அவ்வனுபவத்தால் சிவானந்தம் உண்டாகும். அதையும் கடந்து, அப்பால் உள்ள பரநிலையை (மேல்நிலை) யும் அடையும்.

தற்சிவம் - தான் சிவம் என்றே உணரும் நிலை. சதாசிவலிங்கம் என்றது, சதாசிவன் உருவத்தை. சாதாக்கியத் தத்துவத்தில் உள்ளவன் சதாசிவன். அதற்குமேல் நாதம். அதற்குமேல், தத்துவம் கடந்த பரநிலை, இதனைப் பரசிவம் என்பர்.

உயிரில் சிவம்; உலகில் சத்தி

1734. ஆரும் அறியார் அகாரம் அவன் என்று;
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி;
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடும் ஓசையது ஆமே.

ஆரு மறியா ரகார மவனென்று[1]
பாரு முகாரம் [2]பரந்திட்ட நாயகி[3]
தார [4]மிரண்டுந் தரணி முழுதுமாய்
மாறி யெழுந்திடு மோசைய தாமே. (11)

வேறு பாடம்: 1. மதாவது (ஆ இ) IV. 2. பகுந்திட்ட (ஆ இ) I. 3. நாடிலத் (இ) I. 4. மிரண்டு (அ) I.

கருத்து: பிரணவத்தில் அகரம் உயிரைக் குறிப்பது ஆயினும், அவ்வுயிரில் "ஒன்றாக" இருப்பவன் சிவன் என யாரும் அறியார். ஆகவே அகரமாய் உள்ளவன் அவன். உலகமும் பொருள்களும் தம்மில் சத்தி உகரமாய், வியாபகமாய்ப் பரவியிருக்கப்பெற்றவை ஆகும். சுருங்கக் கூறின், உயிரில் சிவமும் பொருள்களில் (உடம்பில்) சத்தியும் 'ஒன்றாதல்' நிலையில் உளளனர். பிரணவத்தின் உறுப்புக்களுள் அகரமும் உகரமும் ஆகிய இவ்விரண்டும் "உலகு எல்லாம் ஆகி", இரண்டும் கலந்து 'ஓ' என ஒலிக்கின்றன. "ஈரெழுத்தாலே இசைந்தங்கு இருவராய்" என ஆசிரியர் முன்னும் (அசபை) கூறினார். அகர உகரங்கள் புணர்ச்சியில் ஒலி மாறுதலை, "மாறி எழுந்திடும் ஓசை" என்றார். சத்தியும் சிவமும் கலந்தது சதாசிவம் என்க.

இலிங்கம் பிரணவமே

1735. இலிங்க நற்பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கம் நற்கண்டம் நிறையும் மகாரம்
இலிங்கத்து உள்வட்டம் உறையும் உகாரம்
இலிங்க அகாரம் நிறைவிந்து நாதமே.

இலிங்கநற் பீட மிசையுமோங் கார
மிலிங்கநற் கண்ட நிறையு மகார
மிலிங்கத்துள் வட்ட [1]முறையு முகார
மிலிங்க [2]வகார நிறைவிந்து நாதமே. (12)

வேறு பாடம்: 1. நிறையு (ஒ) I; மிறையு (இ ஒ) I. 2. மகாரம் (ச ங்) (சைவ); மகார முகார (த)

கருத்து: சிவலிங்கமும் பீடமும் இணைந்து பிரணவ வடிவம் ஆகும். இலிங்கத்தின் உச்சி மகரமாகும். பீடத்தின் வடிவம் உகரம் ஆகும். இலிங்கத்தின் தண்டுப் பகுதி (பாணம்) அகரம் ஆகும். இலிங்கம் முழுதும் நாதவிந்துக்கள் பரவியுள்ளன.

96. ஆன்ம லிங்கம்

1736. அகார முதலா யனைத்துமாய் நிற்கு
முகார முதலா யுயிர்ப்பெய்து நிற்கு
மகார வுகார மிரண்டு மறியி
லகார வுகார மிலிங்கம தாமே. (அ)

விந்து - நாதச் சேர்க்கை

1737. ஆதாரம் ஆதேயம் ஆகின்ற விந்துவும்
மேதாதி நாதமும் மீதே விரிந்தன;
ஆதார விந்து அதிபீட நாதமே
போதா இலிங்கப் புணர்ச்சி-அது ஆமே.

ஆதார மாதேய மாகின்ற விந்துவ[1]
மேதாதி நாதமு மீதே விரிந்தன
வாதார விந்து வதிபீட நாதமே
போதாவி லிங்கப் புணர்ச்சிய தாமே. (1)

வேறு பாடம்: 1. தெய்வமு (த)

கருத்து: விந்து ஆதாரம்; தாங்குவது. நாதம் ஆதேயம்; தாங்கப்படுவது. சந்திர மண்டலத்தின் கலைகள் ஆகிய மேதை முதலான பதினாறுடன் இணைந்து, யோகிக்கு உடம்பில் அனுபவமாகின்ற நாதம் இங்கே குறிக்கப்பட்டது. விந்து பீடமாய் (ஆவுடையாய்) அமைய, நாதம் ஆகிய பாணம் அதன் மேல் அமைகின்றது. விந்து நாதங்களின் சேர்க்கையே இலிங்கம்.

விந்து புள்ளி வடிவானது. நாதம் தண்டத்தின் (கோல்) வடிவானது. ஆன்மா 'சிவோகம்பாவனை' செய்து, சிவமும் தானும் வேறல்ல என்ற நிலையில் சிவத்தினை அனுபவிக்கும்பொழுது, விந்து, நாதம் இரண்டும் அனுபவப்படும். பின்னர் பரவிந்து, பரநாதம்-இரண்டும் அனுபவப்படும். பரம் என்ற நிலையில் விந்து, நாதங்கள் அடுக்கடுக்காக அனுபவப்படும் ஆதலின், இவ்விரண்டும் ஒவ்வொரு முறையில், ஆதாரம், ஆதேயம் என்னும் இரண்டாகவும் இருக்கும். இது பற்றியே "ஆதாரம் ஆதேயம் ஆகின்ற விந்துவும் நாதமும் மீதே விரிந்தன" என்றார்.

போதா-போதம்; அறிவு. ஆன்மா "தானே சிவம்" என அனுபவித்தலின், ஆன்மலிங்கம் ஆயிற்று.

குறிப்பு: 'ஓ' - சுவடியில் இப்பாடல் இல்லை.

சத்தியும் சிவமும்

1738. சத்தி சிவமா மிலிங்கமே தாபரஞ்
சத்தி சிவமா மிலிங்கமே சங்கமஞ்
சத்தி சிவமா மிலிங்கஞ் சதாசிவஞ்
சத்தி சிவமாகுந் [1]தாபரந் தானே. (2)

வேறு பாடம்: 1. தற்பரந் (ஓ) III.

கருத்து: சத்தி, சிவம் என்னும் இருவரும் கலந்தே நிலையியல், இயங்கியற் பொருள்களைப் படைத்தனர். அவற்றுள் 'ஒன்றாதல்' என்ற நிலையில் உள்ளனர். இலிங்கத் திருமேனியின் பெயர் சதாசிவம் என்பது. திருக்கோயிலில் உள்ள தூல லிங்கமும் சதாசிவமே.

உயிர்களில் ஆண், பெண் வேறுபாடு உள்ளமைக்குக் காரணம் கூறினார்.

சோதி யாது?

1739. தான்நேர் எழுகின்ற சோதியைக் காணலாம்
வான்நேர் எழுகின்ற ஐம்பது அமைந்திடம்
பூ நேர் எழுகின்ற பொற்கொடி தன்னுடன்
தானே எழுந்த அகாரம் அது ஆமே.

தானே [1]ரெழுகின்ற சோதியைக் காணலாம்[2]
வானே ரெழுகின்ற [3]வைம்ப தமைந்திடம்[4]
பூநே ரெழுகின்ற பொற்கொடி தன்னுடன்
றானே [5]யெழுந்த வகாரம தாமே. (3)

வேறு பாடம்: 1. யெழுகின்ற (ஓ) IV. 2. காண்கிலாம் (இ) I. 3. வன்பதந் (ஆ) IV; வைம்பதம் (இ) IV. 4. தந்திடிற் (ஆ) IV வந்திடிற் (இ) IV; தமர்ந்திடம் (சங்) (சைவ) 5. யெழுகின்ற (விசு) (தி) (வ) (த), - ரெழுகின்ற (சைவ); ரெழுந்த (த)

கருத்து: ஐம்பத்தோரெழுத்தும் சூக்குமமாய் இருக்கும் ஓசை நாதம் அந்த நாதம் உள்ள இடத்தில், சோதி, உயிர் உணர்விற்குப் புலனாகும். அச்சோதி யாது? ஆன்மவுணர்வும் சிவமும் ஒன்றே யாகிக் கலந்து, சகஸ்ராரத் தாமரையில் சத்தியுடன் விளங்கும் சிவமே என்க.

அகாரம் - ஆன்மா. "அகாரம் உயிரே" என்ற இந்நூற் பாடல் காண்க.

1740. விந்துவு நாதமு மேவு மிலிங்கமாஞ்
விந்துவ தேபீட நாத மிலிங்கமா
மந்த விரண்டையு மாதார தெய்வமாய்
வந்த கருவைந்துஞ் செய்யு மவையைந்தே. (அ, ஔ)

இலிங்கத்தில் தத்துவங்கள்

1741. சத்திநற் பீடந் [1]தகுநல்ல வான்மமாஞ்[2]
சத்திநற் [3]கண்டந் தகுவித்தை தானாகுஞ்
சத்திநல் லிங்கந் [4]தகுஞ்சிவ தத்துவஞ்
சத்திநல் லான்மாச் சதாசிவந் தானே. (4)

வேறு பாடம்: 1. தருநல்ல (ஓ) I. 2. வான்மா (அ ஈ ஓ) II வானமா (ஓ) II; வாற்றுமா (இ) IV. 3. கண்டத் (சங்) 4. தருஞ்சிவ (அ ஓ) I.

கருத்து: இலிங்கத்தின் சத்தி பீடம் ஆன்ம தத்துவமாகும். அதன் கழுத்து வித்தியாதத்துவம் ஆகும். அதன் பாணம் சிவதத்துவமாகும். அதன் உயிர் சதாசிவமே.

உயிர் - பொருள்; சத்தியை உடைய பொருள்.

பதிஞனத்தைக் கொண்டு ஆராய்ந்தேன்

1742. மனம் புகுந்து என் உயிர் மன்னிய வாழ்க்கை
மனம் புகுந்து இன்பம் பொழிகின்ற போது
நலம் புகுந்து என்னொடு நாதனை நாடும்
விலம் புகுந்து ஆதியும் மேற்கொண்டவாறே.

மனம்புகுந் [1]தென்னுயிர் மன்னிய வாழ்க்கை
மனம்புகுந் தின்பம் பொழிகின்ற போது
நலம்புகுந் [2]தென்னொடு நாதனை நாடும்
[3]விலம்புகுந் தாதியு [4]மேற்கொண்ட வாறே. (5)

வேறு பாடம்: 1. தேனுயிர் (ஆ) I. 2. தன்னொடு (ஓ) I. 3. நிலம் புகுந் (ஆ இ) I; இலம் (விசு). 4. மெறகொண்ட (த)

கருத்து: என் நாதன் என் மனத்தில் புகுந்து, உயிரில் நிலை பெற்றான். அந்த வாழ்க்கையில் என் மனத்தில் இன்பம் புதுவதாக நிறைந்தது. எனக்குப் பதிஞானம் தந்தான். அதைக் கொண்டு என்னையும் நாதனையும் ஆராயும் அனுபவத்தில், ஆதியாகிய அவன் என்னோடு கலந்து உறைதலை உணர்ந்தேன்.

விலம் - பிலம் என்பதன் போலி; குகை.

உடம்பில் புகுந்து வாழ்கின்றான்

1743. பராபரன், எந்தை, பனிமதி சூடி,
தராபரன், தன் அடியார் மனக்கோயில்
சிராபரன், தேவர்கள் சென்னியில் மன்னும்
அராம் அரன் மன்னி மனத்து உறைந்தானே.

பராபர னெந்தை பனிமதி சூடி[1]
[2]தராபரன் றன்னடி [3]யார்மனக் கோயில்
சிராபரன் றேவர்கள் சென்னியின் மன்னு
[4]மராமரன் மன்னி மனத்துறைந் தானே. (6)

வேறு பாடம்: 1. சூடிற் (இ) I. 2. றராபரன் (இ) I. 3. யார்மனங் (ஆ இ ஓ) III. 4. பராபரன் (அ) I; மராபரன் (வ-1)

கருத்து: மிக்க மேம்பட்ட தெய்வம்; என் தந்தை; சந்திரனைச் சடையிலணிந்தவன்; உலகத்தைக் காப்பவன்; அடியாரின் மனக்

கோயிலிலும் தலையுச்சியிலும் விளங்குபவன்; தேவர்கள் தலைவன், 'ஹ்ராம்' என்ற பீஜத்தால், துதிக்கப்படும் அரன். அவன் என் உடம்பில் புகுந்து மனத்தில் வாழ்கின்றான். 'ஹ்ராம்' என்பது அராம் என ஆளப்பட்டது.

அறியாதவர் சொல்

1744. 'பிரான் அல்லன், நாம்' எனின், பேதை உலகம்
குரால் என்னும் என் மனம் கோயில் கொண்ட ஈசன்
அராநின்ற செஞ்சடை, அங்கியும் நீரும்
பொராநின்றவர் செய் அப்புண்ணியன் தானே.

பிரானல்ல [1]னாமெனிற் பேதை யுலகங்
[2]குராலென்னு மென்மனங் [3]கோயில்கொண் டீசன்
அராநின்ற செஞ்சடை யங்கியு நீரும்
பொராநின் [4]றவர்செய்யப் புண்ணியன் றானே. (7)

வேறு பாடம்: 1. தாமெனிற் (ஓ) III. 2. குரானென்னு (அ ஆ ஈ ஓ) I குராவென்று (ஓ) I. 3. கோயில்கொளீசன் (ஓ) III. 4. றவர்செய்ய (அ) I.

கருத்து: "இறைவன், உயிர் என இரு பொருள் இல்லை. நாம் இறைவனின் தோற்றமே" என உலகத்தோர் கூறுவராயின், அவர் அறியாதோரே. பசு ஆகிய எனது மனத்தில் கோயில் கொண்டுள்ள ஈசன் எத்தகையோன் எனின், பாம்பு தங்கிய செஞ்சடையான். புகையும் நீரும் சுமந்து வழிபட்டவர் செய்த புண்ணியத்தின் பயனாக அவருக்குக் கிடைப்பவன்.

அங்கி - நெருப்பு. மூலக்கனலை உச்சந்தலைக்குக் கொண்டு சென்ற யோகியர் என்ற பொருளும் விளைந்தது.

யாத்திரை செல்வதில்லை

1745. அன்று நின்றான், கிடந்தான் அவன் என்று
சென்று நின்று எண்டிசை ஏத்துவர் தேவர்கள்;
என்றும் நின்று ஏத்துவன் எம்பெருமான் தன்னை
ஒன்றி என் உள்ளத்தின் உள் இருந்தானே.

[1]அன்றுநின் றான்கிடந் தானவ னென்று[2]
சென்றுநின் றெண்டிசை யேத்துவர் தேவர்க
ளென்றுநின் றேத்துவ னெம்பெரு மான்றன்னை
யொன்றியென் னுள்ளத்தி னுள்ளிருந் தானே. (8)

வேறு பாடம்: 1. அன்றிநின் (ஒ) I. 2. னென்றுஞ் (ஆ இ) III; இங்கு வெண்டளை தடவில்லை யெனினும் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ளவாறே பதிப்பிக்கப்பட்டது. (த) மட்டும் தன்னை "னென்றென்று". எனக் காட்டுகின்றது.

கருத்து: தேவர்கள் எம்பெருமானை, 'அன்று அங்கு நின்றான்' இன்று 'அங்குக் கிடந்தான்' என்று ஏதேனும் ஓர் இடம், உருவம், காலம் பற்றி, எல்லாத் திசைக்கும் சென்று வழிபடுவர். யானோ, என் உயிருணர்வில் பொருந்தி மனத்தினின்றும் நீங்காதிருக்கும் அப்பெருமானை, என்றும் யான் இருந்த இடத்திலிருந்தே வழிபடுகின்றேன்.

அன்று - வெவ்வேறு காலத்தைக் காட்டும் சொல். நின்றான், கிடந்தான் என்பன இறைவனின் பல்வேறு உருவத்தைக் காட்டும்.

97. ஞான லிங்கம்

குருவும் அவனே

1746. உருவும் அருவும் உருவோடு அருவும்
மருவும் பரசிவன் மன்பல் லுயிர்க்கும்
குருவும் என நிற்கும் கொள்கையன் ஆகும்
தரு என நல்கும் சதாசிவன் தானே.

உருவு மருவு [1]முருவோ டருவு
மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்குங்
குருவு மெனநிற்குங் கொள்கைய னாகுந்
தருவென [2]நல்குஞ் [3]சதாசிவன் றானே. (1)

வேறு பாடம்: 1. மருவோ டுருவு (ஆ இ ஈ ஒ ஓ) III பதிப்புகளில் உள்ள பாடம் கொள்ளப்பட்டது. 2. நிற்குஞ் (ஒ) II. 3. சதாசிவந்தானே (ஒ ஓ) I.

கருத்து: ஞானலிங்கம் என்பது ஞானம் நல்கும் முதல்வன் என்பது பட நின்றது. ஞானமே சொருபமாகக் கொண்ட சதாசிவன், உரு, அரு, அருவுரு - இம் மூன்று நிலையிலும் தடத்த வடிவம் கொள்ளும் பரசிவன், பல்வகை உயிர்க்கும் கற்பகத் தருப்போல வேண்டுவன அளித்தலன்றி, அவரவர் நிலைக்கு ஏற்பக் குருவாகவும் வந்து பதிஞானம் நல்குவான்.

1747. நாலான கீழ துருவ நடுநிற்க
மேலான நான்கு மருவ மிகுநாப்பண்
ணாலான வொன்று மருவுரு நண்ணலாற்
பாலா மிவையாம் பரசிவன் றானே. (உ, ஔ, ண)

குருவாய் வருவான்

1748. தேவர் பிரானை, திசைமுக நாதனை,
நால்வர் பிரானை, நடுவுற்ற நந்தியை
ஏவர் பிரான் என்று இறைஞ்சுவர்? அவ்வழி
ஆவர்; பிரான் அடி அண்ணலும் ஆமே.

தேவர் பிரானைத் [1]திசைமுக நாதனை[2]
நால்வர் பிரானை நடுவுற்ற நந்தியை
யேவர் பிரானென் றிறைஞ்சுவ ரவ்வழி
யாவர் பிரானடி யண்ணலு மாமே. (2)

வேறு பாடம்: 1. திசைமுகர் (த) 2. மாதனை (அ ஓ) I.

கருத்து: மகாதேவனை, திசைக்கு ஒரு முகமாக ஐந்து முகம் உடையவனை, பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் என்ற நால்வர்க்கும் தலைவனை, சுழுமுனை நாடியில் இயங்கும் நந்தியை யார் தம் தலைவன் எனக் கொண்டு வணங்குவாரோ, அவர்க்குக் குருவாக வந்து ஞானோபதேசம் செய்வான். அந்த ஞானம் கொண்டு அவனது திருவடியை அடையலாம்.

சிவவழிபாடா, சத்தி வழிபாடா?

1749. வேண்டிநின்றே தொழுதேன் வினை போய் அற;
ஆண்டு, ஒரு திங்களும் நாளும் அளக்கின்ற
காண் தகையானொடு கன்னி உணரினும்
மூண்ட கை மாறினும் ஒன்றது ஆமே.

வேண்டிநின் றேதொழு தேன்வினை போயற[1]
வாண்டொரு திங்களு நாளு மளக்கின்ற
காண்டகை யானொடு [2]கன்னி யுணரினு
[3]மூண்டகை மாறினு மொன்றது வாமே. (3)

வேறு பாடம்: 1. வேரற (ஆ இ) 2. கன்ணி (த) 3. மூண்டமை (ஆ)

கருத்து: மனிதர்கள் இறக்கின்றார்கள். ஆண்டுகள் நடக்கின்றன. அந்தக் கால தத்துவத்தையும் கடந்தவன் சிவபிரான். அவனோடு சத்தியை வேறு என்று கருதித் தனித்தனியே வணங்கினாலும், தனி வழிபாட்டு ஒழுக்கம் மாறி, இருவரும் ஒருவரே என்று உணர்ந்து வழிபட்டாலும் ஒன்றே.

வேறுபாடற்ற நிலையே ஞானம். கை - ஒழுக்கம்.

1750. ஆதி பரந்தெய்வ மண்டத்து நற்றெய்வஞ்
சோதி யடியார் தொடரும் பெருந்தெய்வ
நீதியுண் மாதெய்வ நின்மல னெம்மிறை
பாதியுண் மன்னும் பராசத்தி யாமே. (ஆ, ஔ)

இறைவனின் உண்மை நிலை

1751. சத்திக்கு மேலே பராசத்தி, தன்னுளே
சுத்தசிவ பதம், தோயாத தூவொளி
அத்தன் திருவடிக்கு அப்பாலைக்கு அப்பாலாம்;
ஒத்தவும் ஆம்; ஈசன் தானான உண்மையே.

சத்திக்கு மேலே பராசத்தி தன்னுளே
சுத்த சிவபதந் தோயாத தூவொளி[1]
யத்தன் றிருவடிக் கப்பாலைக் கப்பாலா
[2]மொத்தவு [3]மாமீசன் றானான வுண்மையே. (4)

வேறு பாடம்: 1. தூவெளி (இ) I; தூய்வெளி (ஆ) I; தூய்வொளி (அ) I. 2. மொத்தமா (அ) I; மொத்தமும் (ஈ) I. 3. மாமீசர் (இ ஈ ஒ ஓ) III.

கருத்து: 36 தத்துவத்துள் அடங்கியது சத்தி அதற்குமேல், தத்துவம் கடந்தது பராசத்தி, அதைக் கடந்தது சுத்த சிவம். அதற்கு மேல் திகழ்வது ஒன்றிலும்தோயாத நிஷ்கள சிவம். ஈசனின் சொருப உண்மை, அன்பரின் அனுபவத்திற்கு வரும் திருவடியாகவும் நிற்கும். அதற்கு அப்பாலும் விளங்கும்.

இறைவன் சொருபம் அளவற்றது என்றார். அன்பரின் ஞானப்பக்குவம் வளர, வளர, அவனது சொருபத்தின் உண்மை நிலைகள் அனுபவத்திற்கு வரும்.

ஆனால், அந்தச் சொருபத்திற்கு எல்லை காண இயலாது.

அண்டவெளியில் ஆண்டவன்

1752. கொழுந்தினைக் காணின் குவலயம் தோற்றும்
எழும் தடம் காணில் இருக்கலும் ஆகும்
பரம்தடம் காணின் பார்பதி மேலே
திரண்டு எழக் கண்டவன் சிந்தை உளானே.

கொழுந்தினைக் காணிற் குவலயந் தோன்று
[1]மெழுந்தடங் காணி லிருக்கலு மாகும்
[2]பரந்தடங் காணிற் [3]பார்பதி மேலே
திரண்டெழக் [4]கண்டவன் சிந்தையு ளானே. (5)

வேறு பாடம்: 1. மெழுங்கடங் (அ) I; மெழுந்திடங் (விசு) (வ) (தி)
2. பரந்திடங் (விசு) (தி) (வ) 3. பார்ப்பதி (ஆ ஈ ஓ) I; பாபதி (அ) I.
4. கண்டவர் (ஆ இ) III.

கருத்து: ஞானக்கொழுந்தாகிய முதல்வனை உணர்ந்தால், உலகத்தை உள்ளவாறு உணரலாம். அவன் நமது உடம்பில் எழுகின்ற இடம் மூலக்கனல் வளரும் மூலாதாரமாகிய ஓம குண்டம். அதை ஓம்பினால், அவன் நம் உடம்பில் சகஸ்ராரத்தில் வீற்றிருப்பான். அதற்கு மேலே, பரவெளிக்கு வழியைக் கண்டால், உலக நாயகன் அண்ட வெளியில் (பரமாகாசத்தில்) காட்சியளிப்பான். அதைக் கண்டவனது சிந்தையில் பரசிவன் என்றும் இருப்பான்.

இப்பாடலுக்கு யோகநூல் வழியில் அன்றிப் பிறவகையில் உரை காண முற்பட்டு இடர்ப்படுவர் சிலர்.

சிவமும் சத்தியும் கூடும் இடம்

1753. எந்தை பரமனும் என் அம்மை கூட்டமும்
முந்த உரைத்து, முறைசொல்லின் ஞானமாம்;
சந்தித்திருந்த இடம் பெருங்கண்ணியை
உந்தியின் மேல் வைத்து உகந்திருந்தானே.

எந்தை பரமனு மென்னம்மை கூட்டமு[1]
முந்த வுரைத்து முறைசொல்லின் ஞானமாஞ்
சந்தித் திருந்த விடம்பெருங் கண்ணியை
யுந்தியின் மேல்வைத் துகந்திருந் தானே[2]. (6)

வேறு பாடம்: 1. கூட்ட (ஈ ஓ) I. 2. தேனே (தி)

கருத்து: பரசிவமும், பராசத்தியும் ஆகிய இருவர் இயல்பும், அவ்விருவரும் கூடும் இயல்பும் கூறி, அஃது யோகிக்கு அனுபவப்படும் முறையைக் கூறினால், அது ஞானமாகும். அதாவது இவற்றைச் சொல்லால் அல்லாமல் அனுபவத்தாலேயே உணரக் கூடும். சிவமும் சத்தியும் யோகியின் உடம்பில் கூடும் இடம் தலையுச்சி. அவ்விடத்தில் சிவன் சத்தியோடு கூடி மகிழ்ந்திருப்பான்.

பெருங்கண்ணியை உகந்திருந்தான் என முடிக்க. உந்தி - உயர்ச்சி. இங்குத் தலையுச்சி.

இருவர் செய்யும் விளையாட்டு

1754. சத்தி சிவன் விளையாட்டாகும் உயிர் ஆக்கி
ஒத்த இரு மாயா கூட்டத்திடை யூட்டிச்
சுத்தம் - அது ஆகும் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவம் அகம் ஆக்குமே.

சத்தி [1]சிவன்விளையாட் டாகு முயிராக்கி
[2]யொத்த விருமாயா கூட்டத் திடையூட்டிச்[3]
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்[4]
[5]சித்தம் புகுந்து [6]சிவமக மாக்குமே[7]. (7)

வேறு பாடம்: 1. சிவன் விளையாட்டா முயிராக்கி (ஆ இ ஓ) I; முயிராகி (விசு) (தி) (வ) 2. லொத்த (த) 3. திடைப்பூட்டிச் (ஆ இ) I. 4. விரிபித்துச் (ஓ) I பிறிவித்துச் (சைவ) 5. சித்த மகிழ்ந்து (இ) IV. 6. சிவமய (அ) I. 7. மாகுமே (அ ஈ) I; மாமே (ஓ) I.

கருத்து: சத்தியும் சிவனும் தம் விளையாட்டு ஆகிய படைப்பினைச் செய்து, உயிர் தன் வினைகளை அனுபவித்தற்கு ஏற்ற, மாயா காரியமான உடம்புடன் பிறக்கச் செய்து, சுத்த உணர்வாம் துரியத்தை எய்தச் செய்து, உயிருணர்வு மட்டும் உள்ள அந்நிலையில் அவ்வுணர்வில் புகுந்து, உயிரைச் சிவமாக்கும்.

உலகப்படைப்பைச் சிவன், சத்தி இருவரும் முயற்சியின்றிச் செய்தலால் "சத்தி சிவன் விளையாட்டு" என்றார்.

குறிப்பு: துடிசை கிழார் பதிப்பில் இப்பாடல் இல்லை.

1755. சத்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சத்தி சிவமுமாஞ் சிவன்சத்தி தானாகுஞ்
சத்தி சிவமன்றித் தாபரம் வேறில்லை
சத்திதா னென்றுஞ் சமைந்துரு வாகுமே. (ஆ உ)

98. சிவலிங்கம்

என்ன உருவம் என்பேன்?

1756. குரைக்கின்ற வாரிக் குவலயம், நீரும்
பரக்கின்ற காற்றும் பயில்கின்ற தீயும்
நிரைக்கின்ற வான் - இவை நீண்டு, அகன்றானை
வரைத்து வலம் செய்யுமாறு அறியேனே.

குரைக்கின்ற [1]வாரிக் குவலய நீரும்
பரக்கின்ற [2]காற்றும் பயில்கின்ற தீயு
நிரைக்கின்ற [3]வானிவை [4]நீண்டகன் றானை
வரைத்து வலஞ்செயு மாறறி யேனே. (1)

வேறு பாடம்: 1. வாறே (அ) I; வாறிற் (இ ஓ) I; வாற்றிற் (ஆ) I; வாறுங் (ஈ) I. 2. காற்றுப் (சைவ) 3. வாயுவை (அ) I; வாறிவை (ஆ இ ஓ) I. 4. நின்றகன்றானை (அ) III; நீண்ட கண்ணாளை (ஓ) I.

கருத்து: கடல் சூழ்ந்த உலகம், நீர், காற்று, தீ, இவை நிரல்பட விளங்கும் இடமான ஆகாயம் - இவ் ஐந்து பூதங்களிலும், அவ்வவற்றின் தன்மையாய் விரிந்து நின்றும், அவற்றைக் கடந்தும் உள்ள இறைவனை, ஒரு குறியிட்டு வணங்கி வலம்வர வழியறியேன்.

உண்மையான குறி இல்லை என்றார்.

உருவமும் கொள்ளலாம்

1757. வரைத்து வலம் செய்யுமாறு இங்கு ஒன்றுண்டு;
நிரைத்துவரு கங்கைநீர், மலர் ஏந்தி;
உரைத்து அவன் நாமம் உணரவல்லார்க்குப்
புரைத்து எங்கும் போகான் புரிசடையோனே.

வரைத்து வலஞ்செய்யு [1]மாறிங்கொன் றுண்டு
நிரைத்து வருகங்கை நீர்மல ரேந்தி
யுரைத்தவ னாம முணரவல் லார்க்குப்
புரைத்தெங்கும் போகான் புரிசடை யோனே. (2)

வேறு பாடம்: 1. மாறுமிங்கொன் (ஆ இ ஈ ஒ) II.

கருத்து: சிவனை ஒரு குறியில் வைத்து வழிபடும் வகை ஒன்றுண்டு. அவன் வெள்ளமிட்டு வரும் கங்கையைச் சடையுள் அடக்கிக் கொண்டவன், வன்னியும் கொன்றையும் தும்பையும் ஆகிய மலர்களைச் சூடியவன். அவன் திருப்பெயரை உருவேற்றி, தியானத்திலும் நிறுத்த வல்லோர்க்கு, அச்செஞ்சடைப் பெருமான் அவரோடு உடனிற்பானே அன்றி அவர் உடம்பின் துளைகள் வழியே எங்கும் செல்லான்.

கங்கை, நீர் மலர் என்றதால் பகீரதன் வழிபட்டதும், அடியார் வழிபட்டதும் குறித்தார்.

புலன் இன்பம் தந்தான்

1758. ஒன்று எனக் கண்டேன்எம் ஈசன் ஒருவனை
நன்று என்று அடியிணை நான் அவனைத் தொழ
வென்ற ஐம்புலனும் மிகக் கிடந்து இன்புற
அன்று என்று அருள்செய்யும் ஆதிப் பிரானே.

ஒன்றெனக் [1]கண்டேனெம் மீச னொருவனை[2]
நன்றென் றடியிணை நானவ னைத்தொழ
வென்றைம் புலனு மிகக்கிடந் தின்புற
[3]வன்றென் றருள்செய்யு மாதிப் பிரானே. (3)

வேறு பாடம்: 1. கண்டேயெம் (சங்) (சைவ) 2. னொருவன் 3. வன்றின்னருள் (ஆ) III.

கருத்து: எம் ஈசனை ஒரே பரம்பொருள் என உணர்ந்து, அவன் அடியைத் தொழுதேன். என்னால் வெல்லப்பட்ட புலன்கள், அவன் காரணமாக மிகவும் இன்புற்றன. அவன் அன்றும் அருள்செய்தான். இனி என்றும் அருள்பாலிப்பான்.

அவன் அடியிணை தொழ என்க. ஏழன் உருபு தொக்கது. இன்புறுமாறு அருள் செய்யும். அன்று - தொழுத அப்பொழுதே. ஒன்று - ஒன்றுதலை உடையன். தொழிலாகு பெயர் என்றுமாம்.

1759. மலர்ந்தயன் மாலு முருத்திரன் மகேசன்
பலந்தெழு மைம்முகன் பரவிந்து நாத
நலந்தரு சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. (அ, ஔ)

சிவகதி சேர

1760. மேவி எழுகின்ற செஞ்சுடரூடு சென்று
ஆவி எழும் அளவு அன்றே, உடல்உற
மேவப்படுவதும், விட்டு நிகழ்வதும்
பாவித்து அடக்கின் பரகதி தானே.

மேவி யெழுகின்ற செஞ்சுட ரூடுசென்
றாவி யெழுமள வன்றே யுடலுற
மேவப் படுவதும் விட்டு நிகழ்வதும்
பாவித் தடக்கிற் பரகதி தானே. (4)

வேறு பாடம்: 1. வீட்டு (ஈ) I. 2. பரதேகி (ஆ) I.

கருத்து: மூலக்கனலோடு உயிருணர்வு கூடி எழுகின்ற அளவு உடம்பில் உள்ள ஆதாரங்களிலும் அதற்குப் பின்னர் நிராதார நிலைகளிலும் இறையனுபவம் கிடைக்கும். இவ்யோகத்தைப் பயின்றால் உயிர் மேலான சிவகதியை அடையும்.

99. சம்பிரதாயம்

1761. உடல்பொரு ளாவி யுதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியி னடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடிய பிறப்பறக் காட்டின னந்தியே. (ஔ, ட, த)

1762. உயிருஞ் சரீரமு மொண்பொரு ளான
வியவார் பரமும்பின் மேவும் பிராணன்
செயலார் சிவமும் சிற்சத்தி யாதிக்கே
யுயலார் குருபர னுய்யக்கொண் டானே. (அ, ஔ)

1763. பச்சிம திக்கிலே வைச்சவா சாரியன்
நிச்சலு மென்னை நினையென்ற வப்பொரு
ளுச்சிக்குக் கீழது வுண்ணாக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே. (ஆ, ஔ)

1764. பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
யொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கித்
தட்டொக்க மாறினன் தன்னையு மென்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே. (க. ங)

இப்பாடலை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "தரிக்கின்ற" என்ற பாடல் "சிவகுரு தரிசனம்" - இயலில் வந்தது.

1765. கூடு முடல்பொரு ளாவி குறிக்கொண்டு
நாடி யடிவைத் தருண்ஞான சத்தியாற்
பாட லுடலினிற் பற்றற நீக்கியே
கூடிய தானவ னாக்குங் குறிக்கொண்டே. (அ, ஆ, ஔ)

மும்மலம் போக்கினான்

1766. கொண்டான் அடியேன் அடிமை குறிக்கொள்ள,
கொண்டான் உயிர், பொருள், காயக் குழாத்தினை
கொண்டான் மலமுற்றும் தந்தவன் கோடலால்
கொண்டான் என ஒன்றும் கூறகிலேனே.

கொண்டா னடியே [1]னடிமை குறிக்கொள்ளக்
கொண்டா னுயிர்பொருள் காயக் குழாத்தினைக்
கொண்டான் [2]மலமுற்றுந் தந்தவன் கோடலாற்
கொண்டா னெனவொன்றுங் [3]கூற கிலேனே. (1)

வேறு பாடம்: 1. னடிமைக் குறிதனை. (ஈ) II; னடிகைக் குறிதன்ன (இ) I. 2. பலமுற்றுங் (விசு) (தி); கூடிநிலானே (இ) I; கூறிற்றிலானே (ஈ) I.

கருத்து: அடியேன் அடிமைப்பண்பில் தவறாது நிற்றலால், என் அடிமைப்பணியை இறைவன் ஏற்றான். என் உயிர், பொருள், உடல் என்ற மூன்றையும் எடுத்துக் கொண்டான். மலங்கள் முழுவதையும் நீக்கினான். அவற்றுள் மாயா மலம், கன்ம மலம் - இரண்டையும் அவனே தந்தான் ஆதலால் அவன் கொண்டான் எனக் கூறலும் முறையன்று.

குறிப்பு: இப்பாடலும் மற்றம் சில பாடல்களும் 'சம்பிரதாயம்' என்னும் தலைப்பில், சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ளன. அவற்றுள் இடைச் செருகல்களை அடையாளமிட்டுக் காட்டி, ஏனைய 5 பாடல் மட்டும் இவ்வியலுக்கு, இப்பதிப்பிற் கொள்ளப்பட்டன. இவை 'சிவகுரு தரிசனம்' என்ற இயலில் இடம் பெறுவது பொருத்தமாக இருக்கும்.

1667. குறிக்கின்ற தேகமுந் தேகியுங் கூடி
நெறிக்கும் பிராண னிலைபெற்ற சீவன்
பறிக்கின்ற காயத்தைப் பற்றிய நேர்மை
பிறக்க வறியாதார் பேயுட னொப்பரே. (உ)

1768. உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்று
முணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை
யுணர்வுடை யார்க ளுணர்ந்தவக் கால
முணர்வுடை யார்க ளுணர்ந்துகண் டாரே. (உ)

எப்படிப் போற்றுவேன்

1769. காய் அபரத்தில் அலைந்து, துரியத்துச்
சாயல் அறிந்து, குவிந்து சகலத்தில்
ஆய அவ்வாறே அடைந்து திரிந்தேற்குத்
தூய அருள்தந்த நந்திக்கு என் சொல்வதே!

[1]காய பரத்தி [2]லலைந்து துரியத்துச்
[3]சாய [4]லறிந்து குவிந்து சகலத்தி
[5]லாயவவ் வாறே யடைந்து திரிந்தேற்குத்[6]
தூய வருடந்த நந்திக்கென் சொல்வதே. (2)

வேறு பாடம்: 1. காயப் பரப்பி (ஓ) II; காயப் பரத்தி (த) 2. லசைந்து (ஆ) I. 3. சால (ஓ) II. 4. விரிந்து (அ) I; வறிந்து (ஆ) I; விருந்து (சங்) 5. லாய வவ்வாறடைந்து (இ) I; லாயவவ் வாறாறடைந்து (ஓ) II. 6. திரிந்தோர்க்குத் (ஓ) II.

கருத்து: துன்பம் வருத்துகின்ற உலகியலில் வீணே முயன்று, துரிய நிலை இன்பத்தின் தன்மையைக் கேள்வியால் அறிந்து, ஆனால் மும்மலமும் நீங்காத சகல நிலையிலேயே வினைப்பயன்களை அனுபவித்துக் கொண்டிருந்த எனக்குக் குருவாக வந்து நந்தி அருள் வழங்கியதை, எங்ஙனம் போற்றுவேன்?

என்ன உபதேசித்தான்?

1770. நான் என, நீ என வேறு இல்லை நண்ணுதல்,
ஊன் என, ஊன் உயிர் என்ன உடன் நின்று
வான் என, வானவர் நின்று மனிதர்கள்
தேன் என, இன்பம் திளைக்கின்ற வாறே.

நானென நீயென வேறில்லை நண்ணுத
லூனென [1]வூனுயி ரென்ன வுடனின்று
வானென [2]வானவர் நின்று மனிதர்க
டேனென வின்பந் திளைக்கின்ற வாறே. (3)

வேறு பாடம்: 1. யானுயி (அ) I. 2. வானவராய் (அ) I.

கருத்து: குருவின் உபதேசம் வருமாறு: "நான் வேறு, நீ வேறு என்பது இல்லை. எனவே ஒருவர் மற்றொருவரை வந்தடைதல் என்பது இல்லை. உடம்பையும் அதனுள் வாழும் உயிரையும் போல நான் உனக்கு உடனாக நிற்கிறேன். ஆதலின் இந்நிலையை அறிந்த மனிதர், வானுலகில் வாழும் தேவரைப்போல, இன்பம் அனுபவிக்கிறார்கள்.

அறியத் தொடங்கினால் அறிவு போகும்

1771. அவனும் அவனும் அவனை அறியார்,
அவனை அறியில் அறிவானும் இல்லை,
அவனும் அவனும் அவனை அறியில்
அவனும் அவனும் அவன் இவன் ஆமே.

அவனு மவனு மவனை யறியா
ரவனை யறியி [1]லறிவானு மில்லை
யவனு மவனு மவனை யறியி
லவனுமவனு மவனிவ னாமே. (4)

வேறு பாடம்: 1. லறிவாரு (சுவ) I; பதிப்புகளில் உள்ளவாறே கொள்ளப் பட்டது.

கருத்து: உலகியலில் உள்ளார் எத்துணைப் புகழ் வாய்ந்தோராய், பிறரால் பெருஞ்சுட்டு உடையாராயினும், இறைவனை - 'தத்' எனக் குறிக்கப்படும் அந்தப் பொருளை - அறியமாட்டார். ஒருவன் இறைவனை அறியப்புகுந்தால், தற்போதத்தை இழப்பான். அவ்விடத்தே சிவபோதமே நிறையும். வேறு வேறு வகையான உலகியல் அறிவை உடையோர், இறைவனை அறிந்தால், அந்த அறிவெல்லாம் கொள்ளை போகும். அவ்விடத்தில் சிவபோதம் நிறையும்.

அனுபவத்திலும், அது இல்லாத போதும்

1772. "நான் இதுதான்" என நின்றிடில், நாடொறும்,
ஊன்இது தான் உயிர் போல் உணர்வான் உளன்
வான் இரு மாமுகில் போல் பொழிவான் உளன்
நான் இது, அம்பர நாதனும் ஆமே.

நானிது தானென [1]நின்றிடி னாடொறு
மூனிது தானுயிர் போலுணர் வானுளன்
[2]வானிரு [3]மாமுகில் போற்பொழி வானுளன்
நானிது [4]வம்பர நாதனு மாமே. (5)

வேறு பாடம்: 1. நின்றவ (விசு) (தி) (வ) (த); நின்றிவ (இராம) 2. வானின் (ஈ) 3. மாமழை (த) 4. வாம்பரன் (த)

கருத்து: அனுபவத்தில் "நான் சிவமாகிய இப்பொருளே" என்று உணர்ந்தால், நம் உடம்பில் உயிர்போலே, இறைவன் வீற்றிருப்பான். மேகம் மழை, பொழிவது போல அருளைப் பொழிவான். அனுபவம் விலகிய நிலையில் நான்வேறு; அண்ட வெளியில் தலைவனாய் இருப்பவன் வேறு.

1773. பெருந்தன்மை தானென யானென வேறா
யிருந்தது மில்லைய தீச னறியும்
பொருந்து முடலுயிர் போலுமை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே. (அ)

100. திருவருள் வைப்பு

எது உண்மை?

1774. பொருள், போதம் ஈசன் இரவும் பகலும்;
உரு-அது ஆவது உயிரும் உடலும்;
அருள்-அது ஆவது அறமும் தவமும்,
பொருள்-அது உள்நின்ற போகமது ஆமே.

[1]பொருள்போத மீச னிரவும் பகலு
[2]முருவது வாவ துயிரு முடலு
மருளது வாவ தறமுந் தவமும்
பொருளது [3]வுண்ணிறை [4]போகம தாமே. (1)

வேறு பாடம்: 1. இருபத மாவதிரவும் (ஓ) IV. 2. முருவரு (ஆ) I. 3. புன்றிறை (ஓ) I. 4. போதம (ஆ) I.

கருத்து: உலகப்பொருள்களும் இறைஞானமும் முறையே இரவும் (இருள்) பகலும் (ஒளி) போன்றவை. ஈசனது உரு, மக்களின் உயிரும் உடம்பும் ஆகும். அருள் பெற்றோர் செய்வன அறமும் தவமும். உண்மையாவது அகவுணர்வால் நுகரும் சிவானந்தமே.

குறிப்பு: பதிப்புகளில் இப்பாடலுக்கு மாறாக, "இருபதமாவது" என்ற பாடல் உள்ளது. ஆயின், சுவடி ஒன்றிலும் அஃது இல்லை. அதில் முதலடி மட்டும் வேறுபடுகிறது.

இருள் விலகும் ஒளி வரும்

1775. காண்டற்கு அரியன் கருத்திலன் நந்தியும்
தீண்டற்கும் சார்தற்கும் சேயனாத் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளியாம் நெஞ்சம்
ஈண்டிக் கிடந்து அங்கு இருள் அறுமாறே.

காண்டற் கரியன் கருத்தில னந்தியுந்
தீண்டற்குஞ் சார்தற்குஞ் [1]சேயனாத் தோன்றிடும்
வேண்டிக் கிடந்து விளக்கொளி யாநெஞ்ச[2]
மீண்டிக் கிடந்தங் கிருளறு மாறே[3]. (2)

வேறு பாடம்: 1. சேயெனத் (அ) I; சேயனாய்த் (ஆ) III; சேய்நாதந் (இ) I. 2. யானெஞ்ச (விசு) (தி) (வ) (இராம) 3. மாமே (அ) IV.

கருத்து: அபர ஞானமாகிய பாச ஞானம் உடையோர்க்கு நந்தி காணற்கு அரியவன். அவர்கள் கருத்திலும் இரான். அவனை அணுகவோ தொடவோ அவர்களால் இயலாதவாறு, தொலைவில், விலகியே இருப்பான். அன்பர்கள் அவனை வேண்டித் தவங்கிடக்கின், அவர்கள் நெஞ்சத்தில் சேர்ந்திருந்த ஆணவமல இருள் விலக, இறைவன் விளக்குப்போல் ஒளி வீசுவான்.

குறிப்பு: இதனை அடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "குறிப்பினினுள்ளே" என்ற பாடல், சிறிது வேறுபாட்டுடன், முன்னர், "பிரத்தியாகாரம்" - இயலில் வந்தது. எனவே, இங்கு விடப்படுகிறது.

சார்ந்தால்தான் அறியலாம்

1776. தேர்ந்து அறியாமையின் சென்றன காலங்கள்
பேர்ந்து அறிவான் எங்கள் பிஞ்ஞகன் எம் இறை
ஆர்ந்து அறிவார் அறிவே துணையாம் என,
சார்ந்து அறிவான் பெருந்தன்மை வல்லானே.

தேர்ந்தறி யாமையிற் [1]சென்றன காலங்கள்
பேர்ந்தறி [2]வானெங்கள் பிஞ்ஞக னெம்மிறை
யார்ந்தறி வாரறி வேதுணை யாமெனச்
சார்ந்தறி [3]வான்பெருந் தன்மைவல் லானே. (3)

வேறு பாடம்: 1. காலங்கள் சென்றன (ஆ) I; காலங்கள் போயின (இ) IV. 2. யானெங்கள் (த) 3. வாம் பெருந் (ஆ) IV.

கருத்து: உலகியல் நன்றா, அருளியல் நன்றா என ஆய்ந்து அறியாமையினால் வாழ்நாள் வீணே கழிகின்றது. ஆணவ மலம் நீங்கின், அப்பொழுது எமது இறைவனாகிய பிஞ்ஞகன் அறியப்படுவான். நல்லன்பர் அவன் அருளும் 'பதி ஞானம்' துணை நிற்க, அவனை அனுபவித்து அறிவார். கருணைக்கடலாகிய அவன், தன்னைச் சார்ந்தவரால் மட்டுமே அறியப்படுவான்.

பிஞ்ஞகன் - தலைக்கோலம்.

வினையழிந்த பின்

1777. தானே அறியும் வினைகள் அழிந்தபின்
நானே அறிகிலன் நந்தி அறியுங்கொல்?
ஊனே உருகி உணர்வை உணர்ந்தபின்
தேனே அனையன் நம் தேவர் பிரானே.

தானே [1]யறியும் [2]வினைக ளழிந்தபின்[3]
னானே யறிகிலன் னந்தி யறியுங்கொ
லூனே [4]யுருகி யுணர்வை யுணர்ந்தபின்
றேனே யனையனந் தேவர் பிரானே. (4)

வேறு பாடம்: 1. யழியும் (த) 2. வினையு மறிந்தபின் (அ) IV. 3. ளறிந்தபின் (ஆ இ ஈ) I. 4. யுருக்கி (ஆ இ ஈ) I.

கருத்து: என் வினைகளை நந்தி அறிந்தே, அவற்றின் பயனை நான் நுகருமாறு தந்தான். அவற்றை அவன் என் பக்குவம் நோக்கி அழித்தலும் செய்தான். அவை அழிந்தபின் சிவானந்தம் வாய்த்தது. அப்பொழுது “என்னை நான் என்பது அறியேன்”. அவன் அறிவான் போலும். தேகவுணர்வு கெட்டு, உள்ளுணர்வைப் பெற்ற பின் தேவர் பிரான், எனக்குத் தேன்போலத் தித்தித்தான்.

அடிமையானேன்; வாழ்கிறேன்

1778. நான் அறிந்து அன்றே இருக்கின்றது ஈசனை
வான் அறிந்தார் அறியாது மயங்கினர்
ஊன் அறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண் சுடர்
தான் அறியான், பின்னை யார் அறிவாரே?

[1]நானறிந் [2]தன்றே யிருக்கின்ற தீசனை[3]
வானறிந் தாரறி யாது மயங்கின
ரூனறிந் துள்ளே யுயிர்க்கின்ற வொண்சுடர்
தானறி [4]யான்பின்னை [5]யாரறி வாரே. (5)

வேறு பாடம்: 1. யானறிந் (தி); நானறி (ஆ) I. 2. தின்றே (ஓ) IV நன்றே (ஆ) I. 3. வீசனை (இ) IV; நந்தியை (ஈ) IV. 4. யார் பின்னைச் (ஆ) I. 5. சாரறி (ஆ) I.

கருத்து: ஈசன் என்னை ஆட்கொண்டபோதே, அவனை ‘ஆண்டான்’ என்று அறிந்து, அடிமையாக இருக்கின்றேன். அதனால் வாழ்கின்றேன். ஆனால் வானுலகில் உள்ளோர், அவ்வுலகப் பதவிகளை ஆண்டு மயங்கினரே அல்லாமல், அவனை அறியவில்லை. அவன் உண்மை அன்பரின் உடம்பை இடமாகக் கொண்டு, அங்கு உயிராய் நின்று, ஒளியாக விளங்கி அனுபவம் தருகின்றான். தன் பெருமையை அவனே அறியான். அவ்வாறிருக்க, யார்தாம் அவனை அறிவார்?

அருளறிவு

1779. அருள் எங்கும் ஆன அளவை அறியார்
அருளை நுகர, அமுது ஆனதும் தேரார்
அருள் ஐங்கருமத்து அதி சூக்கம் உன்னார்
அருள் எங்கும் கண் ஆனது ஆர் அறிவாரே?

அருளெங்கும் மான வளவை யறியா
ரருளை நுகரமு தானதுந் தேரா
ரருளைங் கருமத் ததிசூக்க முன்னா
ரருளெங்குங் கண்ணான தாரறி வாரே. (6)

வேறு பாடம்: 1. நுகருமமு தானதுந் (ஒ) I; நுகராரமுத முகந்தோ (இ) IV.

கருத்து: அருள் அனைத்து இடத்திலும் வியாபகமாய் இருத்தலை அறியார். அருள் யோகியர் நுகரக் கிடைக்கும் அமுதம் என்றும் அறியார். படைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் இறைவன் செய்தற்கு அடிப்படைக் காரணம் அருள் என்பதை அறியார். இவ்வாறாதலின் அருள் - அறிவே அனைத்தையும் ஒருங்கே கண்டு, உயிர்கட்குக் காட்டுவது என்பதை யார் அறியக் கூடும்?

திருவருள் செய்வது என்ன?

1780. அறிவில் அணுக அறிவு-அது நல்கி,
பொறிவழி ஆசை புகுத்தி, புணர்ந்திட்டு,
அறிவு - அது ஆக்கி, அடியருள் நல்கும்
செறிவொடு நின்றார் சிவம் ஆயினாரே.

அறிவி [1]லணுக வறிவது நல்கிப்
பொறிவழி யாசை புகுத்திப் புணர்ந்திட்[2]
டறிவது வாக்கி [3]யடியரு ணல்குஞ்
செறிவொடு நின்றார் சிவமாயி னாரே. (7)

வேறு பாடம்: 1. லணுவுக் கறிவது (ஆ) II. 2. புணர்த்தி (ஆ இ)
3. யடியது (அ) I; யருளது (ஆ) II; லருளது (இ) II.

கருத்து: பேரறிவுப்பொருளாகிய சிவத்தைச் சார்ந்து நிற்பதற்குரிய பதிஞானம் விளையச் செய்து, அதுகாறும் பொறிபுலன்களின் வழியே ஓடிய இச்சை போன்றதோர் இச்சையைச் சிவத்திடம்

கொள்ளச்செய்து (இதுவே நாயக நாயகி நிலை) தானும் ஆன்மாவோடு கலந்து, அதனை அறிவுருவாக்கி, அடியாருடன் கூட்டும் தன்மையை உடையது திருவருள். அதனைப் பெற்ற அன்பர் சிவமே ஆகுவர்.

பொறி வழி இச்சை புகுத்தி: இதனை உணரும்பொழுது, சங்கராச்சாரியர் சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறியுள்ள, கீழ்வரும் கருத்தை ஒப்புநோக்கலாம்.

“இங்கே ப்ரேமாநுபவத்தையும் சொல்லணும். இச்சா சத்தி, காமேச்வர - காமேச்வரி என்றெல்லாம் மூல தத்துவத்தைப் பற்றிச் சொன்னது, ரொம்ப சூ மமான, பரிசுத்தமான சிருங்காரத்தைச் சேர்ந்தது. ஒரு சாந்தமான ஆதாரத்தோடேயே சக்தி பின்னிக்கொண்டு, சகல சிரு டியும் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் அப்படி “ஸிம்பாலிக்காகத்’ தெரிவித்திருக்கிறது. இதிலே தோஷமே இல்லை என்பதால்தான், சாதனாந்தத்திலே அனேக மஹான்களுக்கு யோகானுபவ, ஞானானுபவங்களைப் போலவே, சிருங்காரானு பவமும் ஏற்படும்படியாக அம்பாள் பண்ணியிருக்கிறாள் (இந்த) மஹான்களுக்கு ஐக்கியத்திற்கு முன் ‘ஸ்டேஜில்’ ‘நாயிகாபாவம்’ ஏற்பட்டிருக்கிறது. (தெய்வத்தின் குரல், ஆறாம் பகுதி, சௌந்தர்ய லஹரி விளக்கம் - பக்கம் 884 - 885)

அருளால் அனைத்தும் செய்தான்

1781. அருளில் பிறந்திட்டு, அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழிந்து இளைப்பு ஆற்றி, மறைந்திட்டு
அருளான ஆனந்தத்து ஆரமுதூட்டி
அருளால் என் நந்தி அகம் புகுந்தானே.

அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளி [1]லழிந்திளைப் [2]பாற்றி மறைந்திட்
[3]டருளான [4]வானந்தத் தாரமு தூட்டி
யருளாலென் னந்தி யகம்புகுந் தானே. (8)

வேறு பாடம்: 1. லழித்தினைப் (ஓ) I. 2. பாறி (விசு) (தி) (வ) 3. வருள்பொர (இ) I; டருளார (ஈ) I. 4. வவ்வந்தத் (த)

கருத்து: என் நந்தி, என்னை அருளால் பிறப்பித்து, காத்து, அழித்து இளைப்பாரச் செய்து, என் அறிவைத் திரோபவத்தால் மறைத்து, அருள் என்னும் ஆனந்த அமுதினை ஊட்டி, அருளினால், என் மனத்திற் புகுந்தான்.

ஆற்றி, ஊட்டி என்றும் பிற வினைகளை ஆண்டுள்ளமையால், முதல் இரண்டு அடிகளில் உள்ள தன்வினைகளையும் பிற வினைகள் ஆக்கிக் கொள்க.

1782. அருளா லமுதப் பெருங்கட லாட்டி
யருளா லடிபுனைந் தார்வமுந் தந்திட்
டருளான வானந்தத் தாரமு தூட்டி
யருளாலென் னந்தி யகம்புகுந் தானே. (அ, ஆ)

எல்லாம் அருளின் செயலே

1783. பாசத்தில் இட்டது அருள், அந்தப் பாசத்தில்
நேசத்தை விட்டது அருள் அந்த நேசத்தில்
கூசற்ற முத்தி அருள், ‘அந்தக்’ கூட்டத்தில்
நேசத்துத் தோன்றாநிலை அருள் ஆமே.

பாசத்தி லிட்ட தருளந்தப் பாசத்தி
னேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்
கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தி
னேசத்துத் தோன்றா நிலையரு ளாமே. (9)

வேறு பாடம்: 1. னேசத்துந் (அ) I; னேசற்றுந் (இ ஒ) I.

கருத்து: ஆன்மாவை மாயை, கன்மம் என்ற மலங்களுடன் தொடர்பு படுத்தி அவற்றால் விளையும் பந்தத்தால் கட்டுப்படச் செய்வது இறைவன் அருளே. பொருள்கள் மீதும் மக்கள் மீதும் தன் உடலின் மீதும் உள்ள பற்றை விடச் செய்வதும் அருளே. இறைவனிடம் இடையறாப் பேரன்பு பூண்டு, தடைப்படா நிலையாகிய முத்தியை ‘அடையச் செய்வதும் அருளே. இறைவனுடன் கலந்து பேரன்புடன் நிற்றலாகிய இந்நிலையில் அவன் வேறு, நான் வேறு’ என்று ஆன்மா உணராமல் இருத்தற்குக் காரணமாவதும் அருளே.

நேசத்தின் காரணமாக வேறுபாடு தோன்றாத ஒருமைப்பாடு உண்டாகியது. இஃது ஆன்மநேய ஒருமைப்பாடு. இப்பாடல் கருத்தை மணிவாசகர் “பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு” என்பர். (திருவா. திருப்பொற்சுண்ணம், 20) “பின்றாநேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார்” என்ற அவர் திருமொழியும் காண்க (திருவா. திருச்சத. 24) கூசு - முதனிலைத் தொழிற் பெயர்; கூசுதல். தனது காரணத்திற்கு ஆகுபெயர்.

உறவாகி வந்தான்

1784. பிறவாநெறி தந்த பேரருளாளன்
மறவா அருள் தந்த மாநந்தி, யார்க்கும்
அறஆழி அந்தணன், ஆதி, பராபரன்
உறவாகி வந்து என் உளம் புகுந்தானே.

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா வருடந்த [1]மாநந்தி யார்க்கு[2]
மறவாழி யந்தண னாதிப் பராபர
னுறவாகி வந்தெ னுளம்புகுந் தானே. (10)

வேறு பாடம்: 1. மாதவ நந்தி (ஓ) IV; மாமலர் நந்தி (ஓ) II. 2. யாகு (ஈ) I.

கருத்து: எனக்கு மீண்டும் பிறவாமைக்கு ஏதுவாகிய வீடுபேற்றை நல்கிய பேரருட் செல்வன். அவனை என்றும் மறவாதபடிக்கு வரம் தந்தவன். பெருமையுடைய நந்தி. யார்க்கும் அறம் காட்டும் அறக்கடல். கருணாமூர்த்தி. முன்னோன். மேலானவன். அத்தகு பெரியோன் எளியேனுக்கு உறவாகி வந்து என் உள்ளத்தில் புகுந்தான்.

என்னோடு கலந்தான்

1785. அகம் புகுந்தான் அடியேற்கு அருளாலே,
அகம் புகுந்தும் தெரியான் அருளில்லோர்க்கு,
அகம் புகுந்து ஆனந்தமாக்கிச் சிவமாம்
அகம் புகுந்தான் நந்தி ஆனந்தியாமே.

அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே
யகம்புகுந் துந்தெரி யானரு ளில்லோர்க்
ககம்புகுந் தானந்த மாக்கிச் சிவமா
[1]மகம்புகுந் தானந்தி [2]யானந்தி யாமே. (11)

வேறு பாடம்: 1. யகம்புகுந் (அ ஓ) IV. 2. வானந்தி (அ) I.

கருத்து: நந்தி அருளால் எனது சிந்தையுள் புகுந்தான். அவனது அருளால் பெறும் பக்குவம் இல்லாதாருக்கு, அவன் அவருடன் 'ஒன்றாய்' நின்றாலும், அது தெரியாது. எனது உயிரினுட் புகுந்து ஆனந்தம் அளித்து, பின்னர்ச் சிவமேயாய் நின்ற என்னோடு கலந்தான். அவன் ஆனந்த வடிவினன்.

அருளின் செய்கை

1786. ஆயும் அறிவோடு, அறியாத மாமாயை
ஆய கரணம், படைக்கும் ஐம்பூதமும்
ஆய பல இந்திரியம் அவற்றுடன்
ஆய வரும் ஐந்தும் ஆம் அருட் செய்கையே..

ஆயு மறிவோ டறியாத மாமாயை
[1]யாய கரணம் [2]படைக்குமைம் பூதமு
மாய பலவிந் திரிய மவற்றுட
னாய [3]வருமைந்து [4]மாமருட் செய்கையே. (12)

வேறு பாடம்: 1. மாயாக் (அ) IV மாயக் (ஒ) IV; மாய (ஈ) IV. 2. அடைக்குமைம் (த) 3. வருடைந்து (அ இ ஆ ஒ) I; வருளைந்து (ஒ) I; வனைத்துமா (த) 4. மாயருட் (அ இ ஒ) I; மவ்வருஞ் (த)

கருத்து: ஆராயும் தன்மை உடையதாகிய ஆன்மாவும், அறியப் படாதவையாகிய (தம்மைக் காட்டாதவை) ஆணவம், மாயைகளும், அவற்றைத் தோய்ந்து செயற்படும் மனம் முதலிய அகக் கருவிகளும் ஐம்பூதமும், ஐம்பொறிகளும், அவற்றுடன் ஐந்து, ஐந்தாக வரும் புலன்கள், செயற் கருவிகள் ஆகியவையும் அருளால் தோற்றுவித்து இயக்கப்படுபவையே.

ஆன்மா புருடன் என்ற தத்துவத்துடன் சேர்த்துச் சீவான்மா ஆக்கப்படுதலால், அதுவும் தோற்றுவிக்கப்படுவது என்றார். ஆணவம் முதலிய மலங்களும் உள்ள பொருள்களேயாயினும் காலம், இடம் நோக்கி அவற்றைச் செயற்படுத்துதலின் அவையும் தோற்றுவிக்கப் படுகின்றன என்றார்.

அருள் அன்றி இல்லை

1787. அருளே சகளமும், ஆய பவுதிகம்
அருளே சராசரம் ஆய மலமே,
இருளே, வெளியே எனும், எங்கும் ஈசன்
அருளே சகளத்தன் அன்றி இன்று ஆமே.

அருளே [1]சகளமு மாய பவுதிக
மருளே சராசர மாய மலமே[2]
யிருளே வெளியே யெனுமெங்கு மீச
னருளே சகளத்த னன்றியின் றாமே. (13)

வேறு பாடம்: 1. சகலமு (விசு) (தி) (வ) (இராம) 2. வமலமே (சங்)

கருத்து: இறைவன் மேற்கொள்ளும் சகளத் திருமேனியும் அருட் சத்தியுடன் கலந்து, சுத்த மாயையைக் கலக்கி, உருவாக்கியதே, அசுத்த மாயையிலிருந்து உருவாக்கப்படும் பூத காரியமாகிய சராசரங்கள், அதே அருட்சத்தியுடன் சேர்ந்து இறைவன் படைப்பவையே. அறியாததாகக் கிடக்கும் ஒரு பரப்பும், ஞானானு பவத்திற்கு இடமான ஒரு பரப்பும் இறைவனின் சகளத் திருமேனிகளே. அவையும் அருட்டிரு மேனிகளே. ஆகவே அருள் அன்றி எதுவும் இல்லை.

அருள் என்பதைச் "சகளத்தன்" என்பதன் பின்னும் கூட்டுக.

ஒன்பது நிலைகள்

1788. சிவமொடு சத்தி, திகழ்நாதம் விந்து
தவமான ஐம்முகன், ஈசன், அரனும்,
பலமுறு மாலும் பதுமத்தோன் ஈறா
நவம்-அவையாகி நடிப்பவன் தானே.

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான வைம்முக னீச னரனும்
பவமுறு [1]மாலும் பதுமத்தோ னீறா[2]
நவமவை யாகி [3]நடிப்பவன் றானே. (14)

வேறு பாடம்: 1. மால்பது (இ) IV. 2. னிறுதி (ஆ இ) IV. 3. நடப்பவன் (அ ஒ) I.

கருத்து: இறைவன் கொள்ளும் சகளத்திருமேனிகளைக் கூறுகின்றார். நவநிலைகள் எனப்படும் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் அருவம் நான்கும், சதாசிவன் என்ற அருவுருவம் ஒன்றும், மயேச்சுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்றும் உருவம் நான்கும் இறைவன் மேற்கொண்டு அருள் வழங்கும் திருமேனிகளே.

அருட்கண்

1789. அருட்கண் இலாதார்க்கு அரும்பொருள் தோன்றா;
அருட்கண் உளோர்க்கு எதிர்தோன்றும் அரனே
இருட்கண்ணினோர்க்கு இங்கு இரவியும் தோன்றா
தெருட்கண்ணினோர்க்கு எங்கும் சீரொளி ஆமே.

அருட்கண் ணிலாதார்க் கரும்பொரு டோன்றா
[1]வருட்கண் ணுளோர்க்கெதிர் தோன்று மரனே
யிருட்கண்ணி [2]னோர்க்கிங் கிரவியுந் தோன்றா
தெருட்கண்ணி னோர்க்கெங்குஞ் சீரொளி யாமே. (15)

வேறு பாடம்: 1. வருட்கண்ணினோர்க் கெதிர் (ஓ) IV. 2. னோர்க் கங் (ஓ) IV.

கருத்து: அருளறிவு பெறாதார்க்குத் தெய்வக் காட்சி கிடைக்காது. அது பெற்றவர்க்கோ, சிவபெருமான் எதிரே காட்சி நல்குவான். இஃது எதைப் போல எனின், இருட்படலம் மறைந்துள்ள கண்ணில் சூரியனுடைய ஒளிக் கிரணங்களும் தோன்றா. நல்ல பார்வையுடை யார்க்கு எங்கும் உள்ள பொருள்கள் புலப்படும். அதுபோல என்க.

ஞானமாகிய கண் உடையோர்க்கு எங்கும் இறை ஒளியே தோன்றும். அருட் கண்ணையே 'தெருட் கண்' என்றும் கூறினார், அருளால் ஞானம் வருதல் பற்றி.

பிரியாத சத்தி

1790. தானே படைத்திடுந் தானே யளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே. (16)

வேறு பாடம்: 1. காத்திடுந் (விசு)

கருத்து: அருளே ஐந்தொழிலும் இயற்றும். ஐந்தொழில் தலைவர் கட்கும் இவற்றைச் செய்யும். அவர்கட்கும் பிறர்க்கும் அருளி, முத்தி வழங்கும். எங்கும் வியாபியாக உள்ள இறைவனினின்றும் பிரியாத சத்தியாக நிற்கும்.

1791. தலையான நான்குந் தனதரு வாகு
மலையா வருவுரு வாகுஞ் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகுந்
துலையா விவைமுற்று மாயல்ல தொன்றே. (அ, ஔ)

அருள் விளையாட்டு

1792. ஒன்று - அதுவாலே உலப்பிலி தான் ஆகி,
நின்றது; தான்போல் உயிர்க்கு உயிராம் நிலை
துன்றி அவை அல்ல ஆகும்; துணை என்ன
நின்றது, தான் விளையாட்டு என்னும் நேயமே.

ஒன்றது [1]வாலே [2]யுலப்பிலி தானாகி
நின்றது [3]தான்போ லுயிர்க்குயி ராநிலை
துன்றி யவையல்ல [4]வாகுந் துணையென்ன
நின்றது தான்விளை யாட்டென்னு நேயமே[5]. (17)

வேறு பாடம்: 1. பாலே (த) 2. யுலப்பிலா (அ) I. 3. தாம்போல் (அ ஆ இ ஈ) I; தன்போல் (த) 4. தாகுந் (த) 5. ணேயமே (விசு) (தி) (வ).

கருத்து: சிவம் ஒன்றே. ஆனால் அளவில்லாத உயிர்களுள் ஒவ்வொன்றுடனும் 'ஒன்றாய்' நின்று, அந்தக் காரணத்தால் 'அளவில்லாத பல' என்று ஆயிற்று. அதுபோல, தானே உயிருக்கு உயிராக இருக்கும் நிலையையும் மேற்கொண்டு, அக்காரணத்தால், அவ்வுயிர்களினின்றும் 'வேறாகவும்' நிற்கும். அதுபோல, தானே உயிருக்குத் துணையாகி, 'உடனாகி' நிற்கும். அஃது அவனது அருள் விளையாட்டு ஆகும்.

'அதனாலே' எனச்சாரியை பெறவேண்டுவது, இயல்பாயிற்று. ஒவ்வோர் அடியிலும் 'தான்' என்பது எழுவாய்; சிவத்தைக் குறிக்கும். 'நேயம் என்னும் விளையாட்டு' என மாற்றுக. நேயம், அருள்.

1793. நேயத்தே நின்றிடு நின்மலன் சத்தியோ
டாயக் குடிலையு ணாத மடைந்திட்டுப்
போயக் கலைபல வாகப் புணர்ந்திட்டு
வீயத் தகாவிந்து வாக விளையுமே. (அ, ஔ)

1794. விளையும் பரவிந்து தானே வியாபி
விளையுந் தனிமாயை மிக்கமா மாயை
கிளையொன்று தேவர் கிளர்மனு வேதத்
தளவொன் றிலாவண்ட கோடிக ளாமே (அ ஔ)

101. அருளொளி

பிறப்பு இறப்பைத் தாண்டார்

1795. அருளில் தலைநின்று, அறிந்து அழுந்தாதார்
அருளில் தலைநில்லார், ஐம்பாசம் நீங்கார்
அருளிற் பெருமை அறியார், செறியார்
அருளின் பிறந்திட்டு, இறந்து, அறிவாரே.

அருளிற் றலைநின் [1]றறிந்தழுந் தாதா
ரருளிற் றலைநில்லா ரைம்பாச நீங்கா
ரருளிற் பெருமை யறியார் செறியா[2]
ரருளிற் பிறந்திட் [3]டிறந்தறி வாரே. (1)

வேறு பாடம்: 1. றறிந்தமிழ் தாரா (விசு) 2. சேயோ (ஓ) I. 3. டறிந்தறி (ஆ ஓ) I.

கருத்து: அருளில் ஈடுபட்டு, இறைவனைப் பதிஞானத்தால் அறிந்து, அதில் தோய்ந்து அறியாதோர், மேன்மேலும் அவ் அருளில் ஈடுபட்டு வாழார். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்னும் ஐந்து மலங்களினின்றும் விடுபடார். அருள் காரணமாகப் பிரியும் செயலின் பெருமையை அறியார். தற்போதம் ஒடுங்கப் பெறார். இறைவனது பொதுவான அருளினால் பிறந்தும் இறந்தும், மாறி மாறி வருவதையே அறிவார்.

மாறாத நிலையாகிய வீடுபேற்றை அடையார் என்க.

அருளில் ஆடுகின்றேன்.

1796. வாராவழி தந்த மாநந்தி,பேர் நந்தி
ஆரா அமுது அளித்தான் நந்தி, பேர் நந்தி,
பேர் ஆயிரம் உடைப் பெம்மான் பேர் ஒன்றினில்
ஆரா அருட்கடல் ஆடுக என்றானே.

வாரா வழிதந்த மாநந்தி பேர்நந்தி
யாரா வமுதளித் தானந்தி பேர்நந்தி
பேரா யிரமுடைப் பெம்மான்பே ரொன்றினி
லாரா வருட்கட லாடுகென் றானே. (2)

வேறு பாடம்: 1. வானந்தி (ஈ) IV. 2. போரா (விசு) 3. லாடுகின் (அ) I.

கருத்து: எனக்குப் பிறவாமை நல்கிய, பெருமையுடைய, பேருருவம் கொண்ட நந்தி, அம்மட்டில் அமையாது, பருகத்தெவிட்டாத அருளமுதமும் வழங்கினான். பின்னும் நான் அருள்வாழ்வு வாழ்தற் பொருட்டு, ஆயிரம் பேருடைய அப்பெருமாள், திருவைந்தெழுத்து ஆகிய ஒரு பெயரைக் கொண்டே எந்நாளும் அருட்கடலில் திளைத்தாடுமாறு பன்முறை அருள் செய்தான்.

என்னுயிர்க்கு உயிர்

1797. ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் கண்டேன் சிவன் பெருந்தன்மையை,
கூடியவாறே குறியாக் குறிதந்து, என்
ஊடு நின்றான் அவன் தன் அருள் உற்றே.

ஆடியும் பாடியு மழுது மரற்றியுந்
தேடியுங் கண்டேன் சிவன்பெருந் தன்மையைக்[1]
கூடிய வாறே குறியாக் குறிதந்தெ[2]
[3]னூடுநின் றானவன் றன்னரு ளுற்றே. (3)

வேறு பாடம்: 1. தண்மையை (ஒ) IV. 2. குறித்தெ (ஈ) II. 3. னூடுகின்ற (ஆ) I.

கருத்து: சிவனது காட்சியைக் கண்ட மகிழ்ச்சியால் ஆடியும், பாடியும், அக்காட்சி மறைந்தமையால் துயருற்றுப் புலம்பியும், மீண்டும் அவனைக் காண்பதற்காகத் தேடியும், ஆக இவ்வாறு அவன் பேரியல்பினை அறிந்தேன். அவன் எனக்கு அருளை வழங்கலுற்று, ஓர் இடம் எனக் குறித்தல் இன்றி, என்னைக்கலந்து, என் உயிருக்கு உயிராக நின்றான்.

1798. உற்ற பிறப்பு முறுமல மானதும்
பற்றிய மாயப் படல மெனப்பண்ணி
அற்றனை நீயென் றடிவைத்தான் பேர்நந்தி
கற்றன விட்டேன் கழலணிந் தேனே. (உ, க)

சிறந்த அறிஞர்

1799. விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே [1]வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் [2]விளங்கும் [3]விளக்கவர் தாமே. (4)

வேறு பாடம்: 1. வேதினை (அ இ ஈ ஒ ஓ) I. 2. விளக்கும் (ஆ ஈ) I. 3. விளக்காவர் (த)

கருத்து: உணர்வு என்னும் விளக்கினை ஒளிரச் செய்து, அவ்வொளி யால் பரமாகாயமாகிய இறையை நோக்குக. அப்பரமாகாய ஒளியால், பிறப்பு, வினை, ஆணவமலம் என்ற வேதனைகள் நீங்கும். தமது அறிவை மேன் மேலும் விளக்கவல்ல இவ்விறையொளியைக் காணும் அருளாளர், அறிவுடையோருள் வைத்து, மிக்க அறிவுடையோராவர்.

இருளும் ஒளியும்

1800. ஒளியும் இருளும் ஒருக்காலும் தீரா;
ஒளியுளோர்க்கு அன்றே ஒழியாது ஒழியும்?
ஒளிஇருள் கண்ட கண்போல, வேறாய் உள்
ஒளி இருள் நீங்க, உயிர் சிவம் ஆமே.

ஒளியு மிருளு [1]மொருக்காலுந் தீரா[2]
[3]வொளியுளோர்க் கன்றே [4]யொழியா தொழியு
மொளியிருள் கண்டகண் போலவே றாயுள்[5]
ளொளியிரு [6]ணீங்க வுயிர்சிவ மாமே. (5)

வேறு பாடம்: 1. மொருக்காலுதிய (அ) I. 2. தீர (தி) (சண்) 3. வொளியுளவோர்க் (அ ஆ இ ஒ ஓ) II. 4. யொளியாதொளியும் (அ இ ஈ ஒ ஓ) I; விழியாதொளியும் (தி) 5. றாயுள்ள (இ ஈ) II. 6. ணீங்கி (ஆ இ) IV.

கருத்து: ஒளியையும் இருளையும் மாறி மாறிக் காணும் நிலை ஒருகாலும் நீங்காது. ஞானம் உடையர்க்கன்றோ அந்நிலை முற்றும் நீங்கும்? கண் ஒளியையும் இருளையும் தான் வேறாயிருந்து காண்பதுபோல், உயிர் தன்னைத் தத்துவங்களினின்றும் வேறாய் நிறுத்திக்கண்டபின், அவ்வுயிர் சிவத்தைச் சார்ந்து, மலம் நீங்கி, ஞானம் பெற்றுச் சிவமாக நிற்கும்.

உலகியலில் இருந்து கரையேறியது எப்படி?

1801. புறமே திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே புகுந்து, என்னை நின்மலன் ஆக்கி,
அறமே புகுந்த எனக்கு ஆரமுது ஈந்த
திறம் ஏது என்று எண்ணித் திகைத்திருந்தேனே.

புறமே [1]திரிந்தேனைப் பொற்கழல் சூட்டி
நிறமே [2]புகுந்தென்னை நின்மல னாக்கி
யறமே [3]புகுந்தெனக் காரமு தீந்த
திறமே தென்றெண்ணித் திகைத்திருந் தேனே. (6)

வேறு பாடம்: 1. திரிந்தென்னைப் (அ ஒ) IV. 2. புரிந்தென்னை (ஓ) III. 3. புரிந்தெனக் (இ) IV.

கருத்து: உலகியல் பற்றி வாழ்ந்த என்னைத் தன் திருவடி சூட்டுதலால் அடியான் ஆக்கி, என் சிந்தையிற் புகுந்து, மலம் கெடுத்து, அதன் பின் அருளற வாழ்வு மேற்கொண்ட எனக்கு அமுதம் அளித்த வகை என்ன? என்று திகைத்திருக்கின்றேன்.

எந்த ஞானம் சிவகதியில் சேர்க்கும்?

1802. அருளது வென்ற வகலிட மொன்றும்
பொருளது வென்ற புகலிட மொன்று
மருளது நீங்க மனம்புகுந் தானைத்
[1]தெருளறும் பின்னைச் சிவகதி யாமே. (7)

வேறு பாடம்: 1. தெருளலும் (சண்)

கருத்து: மயக்கம் நீங்கச் சிவஞானம் அருளிச் சிவன் ஆன்மாவின் மனத்தில் நின்றபிறகு, அவன் அருளை எய்தியபின், உலகவாழ்வு அருள்வாழ்வாகும் எனவும், இங்கே காண்பன, கேட்பன, உறுவன எல்லாம் அவன் அருள் என்ற அனுபவம் பிறக்கும் எனவும், உடல் நீங்கியபின் ஆன்மாவுக்குச் சிவமே புகலிடம் ஆவான் எனவும் ஞானம் வந்தால், சிவகதி வாய்க்கும்.

அருளையும் பொருளையும் தெளிந்தால் வீடுபேறு எய்தும் என்பது கருத்து.

1803. கூறுமின் னீர்முன் பிறந்திங் கிறந்தமை
வேறொரு தெய்வத்தின் மெய்ப்பொரு ணீங்கிடும்
பாறணி யும்முடல் வீழவிட் டாருயிர்
தேறணி யோமிது செப்பவல் லீரே. (உ, க)

102. சிவபூசை

நடமாடக் கோயில்

1804. உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
[1]தெள்ளத் [2]தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் [3]காள மணிவிளக்கே[4] (1)

வேறு பாடம்: 1. தெள்ளித் (ஒ) III. 2. தெளிவார்க்குச் (ஆ ஒ) III. 3. கள மணி (ஒ) II; காளா (இ) I. 4. விளக்காமே (ஈ ஒ) IV விளக்கே (இ) II.

கருத்து: ஞானிகளுக்கு அவர் தம் உள்ளமே கருவறை. உடம்பு திருக்கோயில். கருவறையில் உறையும் வள்ளற் பெருமானுக்கு, ஞானியின் வாயே கோபுரவாயில். அவர்தம் உயிரே சிவலிங்கம். ஐந்து புலனும் ஐந்தலை நாகம். அவை தம் தலைகளில் ஏந்திய மணிகளால் விளக்கு எடுப்பனவாம்.

காளம் - நஞ்சு, ஆகுபெயராய்ப் பாம்பைக் குறித்தது. அது குண்டலிசத்தி. அதனால் எய்தும் யோகானுபவத்தில் உயிர்ச்சோதியின் நடுவண் விளங்கும் சிவசோதியைச் சிவலிங்கம் என்று கூறினார். குண்டலியை அதன்மேல் கவிந்திருக்கும் ஐந்தலை நாகம் என்றார். சிவன் ஆன்ம உணர்வின்கண் விளங்குவானாதலின் “சீவன் சிவலிங்கம்” என்றார்.

பாட்டே படையல்

1805. வேட்டு, அவி உண்ணும் விரிசடை நந்திக்குச்
காட்டுஅவி நாம் இலம்; காலையும் மாலையும்
ஊட்டு அவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டு அவி; காட்டுதும்; பால் அவி ஆமே.

வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
[1]காட்டவி [2]நாமிலங் காலையு மாலையு
மூட்டவி யாவன [3]வுள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் [4]பாலவி யாமே. (2)

வேறு பாடம்: 1. காட்டவு (விசு); காட்டவும் (த) 2. நாவிலங் (ஈ) I நாண்மலர் (ஆ) II; யாமிலம் (த) 3 . லுள்ளங் (விசு) 4. பாலனுமாமே (ஆ) II.

கருத்து: ஆன்ம போதமாகிய அவியுணவை விரும்பி உண்ணும் சிவபெருமானுக்கு, அதனை நாம் அளிக்கவியலாது. காலையும் மாலையும் நாம் ஊட்டத்தக்க அவியுணவு, அவனது உள்ளத்தைக் குளிர்விக்கும் பாட்டே ஆகும். அது பாற்சோற்றை ஒத்ததுமாகும். ஆகவே எம்பெருமானுக்கு அதனை அளிப்போம்.

யோக பூசை

1806. பால்-மொழி பாகன், பராபரன் தான் ஆகும்
மான சதாசிவன் தன்னை ஆவாகித்து,
மேல்முகம் ஈசானமாகவே கைக்கொண்டு
சீல்முகம் செய்யச் சிவனவன் ஆமே.

பான்மொழி பாகன் பராபரன் றானாகு
[1]மான சதாசிவன் றன்னையா வாகித்து
மேன்முக மீசான மாகவே கைக்கொண்டு
சீன்முகஞ் செய்யச் சிவனவ னாமே. (3)

வேறு பாடம்: 1. மான்கொடிச் (விசு)

கருத்து: (யோக சாதனையில் உயிராற்றலை மிகுவிப்பவள் ஆகிய) பராசத்தியின் பங்கில் சிவன் உறைவதாகிய ஒரு வடிவம் சதாசிவ வடிவம். அதனை யோகசாதனையில் சகஸ்ராரத்தில் எழுந்தருளச் செய்து, ஈசன் வடிவத்தில் மேல் நோக்கிய முகமாகிய ஈசான முகம் என்றே பாவித்து, யோக ஒழுக்கம் பயில, யோகி சிவனேயாக மாறுவான்.

சிவனாவது, உணர்வால் மட்டுமே.

புறப்பூசையும் செய்ய வல்லவர்

1807. நினைவதும் வாய்மை மொழிவது மல்லாற்
கனைகழ லீசனைக் காண வரிதாங்
கனைகழ லீசனைக் காண்குற வல்லார்
புனைமலர் நீர்கொண்டு போற்றவல் லாரே. (4)

கருத்து: தியானிப்பதும் புகழைப் போற்றுவதுமன்றி, ஈசனைக் காணல் அரிய செயலாகும். யோக சாதனத்தால் அவனைக் காணவல்லார், புற வழிபாடாகிய பூவும் நீரும் கொண்டு ஆற்றும் சிவபூசையையும் நன்கு செய்பவரே ஆவர்.

வழிபாட்டின் பயன்

1808. மஞ்சனம், மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினுள் ஈசன் நிலாவிய காரணம்
அஞ்சு அமுதாம், உபசாரம் எட்டு - எட்டொடும்
அஞ்சலியோடும் கலந்து அர்ச்சித்தார்களே.

மஞ்சன மாலை நிலாவிய வானவர்
நெஞ்சினு ளீச 'னிலாவிய காரண
மஞ்சமு தாமுப சாரமெட் டெட்டொடு
மஞ்சலி யோடுங் கலந்தர்ச்சித் தார்களே. (5)

வேறு பாடம்: 1. னிலைபெறு (சண்)

கருத்து: திருமஞ்சன நீரோடும் பூமாலையோடும் பூசனை செய்த தேவர்களின் நினைவில் ஈசன் என்றும் நிற்பதற்குக் காரணம், பஞ்சாமிர்தம் படைத்துப் பதினாறு உபசாரம் செய்து, அஞ்சலி முத்திரை பிடித்து அவனை வணங்கினர் என்பதே.

எளிய செயலே

1809. புண்ணியம் செய்வார்க்குப் பூ உள, நீர் உள,
அண்ணல் அது கண்டு அருள்புரியாநிற்கும்,
எண் இலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ணறியாமல் நழுவுகின்றாரே.

புண்ணியஞ் செய்வார்க்குப் [1]பூவுள நீருள
வண்ண லதுகண் டருள்புரி யாநிற்கு
மெண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாம னழுவுகின் றாரே. (6)

வேறு பாடம்: 1. பூவுண்டு நீருண்டு (ஓ) IV.

கருத்து: சிவபூசை சிவபுண்ணியமாகும். அதைச் செய்வது எளிது. ஏனெனில் அதற்குரிய சாதனங்களாகிய பூவும் நீரும் எங்கும் உள்ளவை. அவைகொண்டு அன்பர் வழிபடின், பெருமான் அருள்புரிவான். ஆனால் எத்துணையோ பாவிகள், இவ் எளிய வழியில் ஈசனை அணுகி நலம் பெறாமல் வீணே கழிகின்றனர்.

1810. அத்த னவதீர்த்த மாடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தவர் பாதத்தைச்
சுத்தம தாகவே விளக்கித் தெளிக்கவே
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே (உ, ஓ)

1811. மறப்புற்று விவ்வழி மன்னிநின் றாலுஞ்
சிறப்பொடு பூநீர் திருந்தமுன் னேந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ண
மறப்பெற வேண்டும் மமரர் பிரானே. (க)

1812. ஆரா தனையு யமரர் குழாங்களுந்
தீராக் கடலும் நிலத்தும தாய்நிற்கும்
பேரா யிரமும் பிரான்றிரு நாமமு
மாரா வழியெங்க ளாதிப் பிரானே (க, ண)

1813. ஆனைந்து மாட்டி மயரர் கணந்தொழத்
தானந்த மில்லாத் தலைவ னருளது
தேனுந்து மாமல ருள்ளே தெளிந்ததோர்
பாரைங் குணமும் படைத்துநின் றானே. (ஆ)

1814. உழைக்கொண்ட பூநீர் ஒருங்குட னேந்தி
மழைக்கொண்ட மாமுகின் மேற்சென்று வானோர்
தழைக்கொண்ட பாசந் தயங்கிநின் றேத்தப்
பிழைப்பின்றி எம்பெரு மானரு ளாமே. (அ)

1815. வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்
குள்ளக் கடற்புக்கு வார்சுமை பூக்கொண்டு
கள்ளக் கடல்விட்டுக் கைதொழ மாட்டாதா
ரள்ளற் கடலுள் எழுந்துநின் றாரே. (அ, க)

1816. கழிப்படுந் தண்கடற் கௌவை யுடைத்து
வழிப்படு வார்மலர் மொட்டறி யார்கள்
பழிப்படு வார்பல ரும்பழி வீழ
வெளிப்படு வோருச்சி மேவிநின் றானே. (க, ச)

அவனைச் சாருக

1817. பயன் அறிவு ஒன்று உண்டு; பன் மலர் தூவிப்
பயன் அறிவார்க்கு அரன் தானே பயிலும்
நயனங்கள் மூன்று உடையான் அடி சேர
வயனங்களால் என்றும் வந்து நின்றானே.

பயனறி வொன்றுண்டு பன்மலர் தூவிப்
பயனறி வார்க்கரன் றானே பயிலு
நயனங்கள் மூன்றுடை யானடி சேர
வயனங்க ளாலென்றும் வந்துநின் றானே. (7)

கருத்து: பயனை அறியும் அறிவு ஒன்றுண்டு. அதாவது சிவனைப் பல்வகை மலரும் தூவி வழிபட்டு, அதன் பயனை அனுபவத்தால் அறிபவர்க்கு, சிவன் அவர் உள்ளத்தில் தானே அடிக்கடி காட்சி தருவான். முக்கண்ணன் ஆகிய அப்பெருமானைச் சார்ந்துநின்றால், ஏதேனும் ஓர் உபாயத்தால் அவன் எழுந்தருளிச் சிவானுபவம் வழங்குவது உறுதி.

1818. ஏத்துவர் மாமலர் தூவித் தொழுதுநின்
றார்த்தெம தீச னருச்சே வடியென்றென்
மூர்த்தியை மூவா முதலுரு வாய்நின்ற
தீர்த்தனை யாருந் துதித்துண ராரே. (அ)

பலராய் நிற்பவன் அவனே

1819. தேவர்களோடு இசை வந்து மண் நாள்தொறும்
பூவொடு நீர்சுமந்து ஏத்து இப்புனிதனை
மூவரில் பன்மை, முதல்வனாய் நின்று அருள்
நீர்மையை யாவர் நினைக்க வல்லாரே.

தேவர்க ளோடிசை வந்துமண் ணாடொறும்[1]
பூவொடு நீர்சுமந் தேத்திப் புனிதனை
மூவரிற் பன்மை முதல்வனாய் நின்றரு
[2]ணீர்மையை யாவர் நினைக்கவல் லாரே. (8)

வேறு பாடம்: 1. ளோர்திசை (த) 2. ணோடாறும் (அ ஐ) I ணோடுறு (சண்) (விசு) (தி) (வ) 3. நீர்மையராவர் (ஆ) I.

கருத்து: நாள்தோறும் தேவர்களோடு மண்ணுலகினரும் வந்து, தனது புகழை ஏத்தும் இந்தப் புனிதனை - மூவராக அதிட்டிக்கும் போது பன்மையாகவும், அவர்களுக்கு முதல்வனாக, ஒருமை யாகவும் சிவன் நிற்கும் தன்மையை நினைப்பவர் யார்?

உடல் குளிர்க

1820. உழைக்கவல் [1]லோர்நெடு நீர்மல ரேந்திப்
பிழைப்பின்றி யீசன் பெருந்தவம் பேணி
யிழைக்கொண்ட பாதத் தினமலர் தூவி
மழைக்கொண்டல் போலவே [2]மன்னிநில் லீரே. (9)

வேறு பாடம்: 1. லோர்நடு (சைவ) (விசு) (தி) (வ) 2. மண்ணினில்லாரே (ஓ) I.

கருத்து: பணி செய்ய வல்லோரே, மிக்க நீரும் பூவும் கொணர்ந்து, தவறாமல் சிவ வழிபாடு செய்து, நெஞ்சத்தில் நிலவும் சிவன் திருவடியிலும் மலர் தூவும் பாவனை செய்து, இறையனுபவத்தால் மேகம் போல உடல் குளிர்ந்து விளங்குவீர்களாக.

உழைக்க - அணுகி நிற்க.

1821. வென்று விரைந்து விரைப்பணி யென்றனர்
நின்று பொருந்த விறைபணி நேர்படத்
துன்று சலமலர் தூவித் தொழுதிடிற்
தொன்றிடு நித்தலுங் கூறிய வாறே (அ, க)

1822. சாத்தியும் வைத்துஞ் சயம்புவென் றேத்தியு
மாத்தியை நாளும் மிறையை யறிகிலா
ராத்தி மலக்கிட் டகத்தழுக் கற்றக்கால்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே (அ, க)

சிவலிங்கத்தில் எழுந்தருளச் செய்தல்

1823. ஆவிக் கமலத்தி [1]னப்புறத் தின்புற
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்[2]
கூவிக் கருதிக் கொடுபோய்ச் சிவத்திடைத்
தாவிக்கு மந்திரந் தாமறி யாரே. (10)

வேறு பாடம்: 1. லன்புறத் (ஓ) I னைப்புறத் (ஆ ஈ) I. 2. நந்திக்கு (ஒ ஓ) II.

கருத்து: உயிருணர்வு சென்று பொருந்தும் சகஸ்ராரத் தாமரை யாகிய சிதாகாசத்தில் இன்பமாக உலாவும் நந்தியை, தியானித்து, அழைத்துச் சிவலிங்கத்தில் தாபிக்கும் மந்திரத்தை உலகவர் அறியார்.

வழிபாட்டால் ஒளி காண்க

1824. சாணாகத் துள்ளே [1]யழுந்திய மாணிக்கங்
காணு மளவுங் கருத்தறி வாரில்லை
பேணிப் [2]பிறக்கிப் [3]பெருக்க நினைவோர்க்கு
மாணிக்க மாலை மனம்புகுந் தானே. (11)

வேறு பாடம்: 1. யழுத்திய (ஓ) I. 2. பெருக்கிப் (ஓ) I. 3. பெருக்கி (சண்) (சைவ)

கருத்து: இறைவன் எண் சாண் அளவுள்ள உடம்புள்ளே மறைந்து உள்ள மாணிக்கம். அதனைக் காணும் வரை, இக்கருத்தை நம்புவோர் இல்லை. அவனை யோக சாதனத்தால் வழிபட்டு, ஒளியாகக் கண்டு, அக்காட்சியை மிகுதியும் காண விரும்பு

வோர்க்கு, அவன் அவரது உயிருணர்வில் மாணிக்க மலையாகக் காட்சி தந்து. மனத்திலும் குடிபுகுவான்.

மலை என்பது நீட்டல் விகாரம் பெற்றது.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ, ஐ - சுவடிகளில் இல்லை.

குடியிருக்க வருவான்

1825. பெருந்தன்மை நந்தி, பிணங்கு இருள் நேமி
இருந்தன்மையாலும், என் நெஞ்சு இடம் கொள்ள
வரும் தன்மையாளனை, வானவர் தேவர்
தரும் தன்மையாளனைத் தாங்கி நின்றாரே.

[1]பெருந்தன்மை நந்தி பிணங்கிரு ணேமி
யிருந்தன்மை யாலுமென் னெஞ்சிடங் கொள்ள
வருந்தன்மை [2]யாளனை வானவர் தேவர்
தருந்தன்மை [3]யாளனைத் தாங்கிநின் றாரே. (12)

வேறு பாடம்: 1. பெருந்தண்மை (ஓ) I. 2. யாலும் (ஓ) II. 3. யாலும் (ஓ) II.

கருத்து: திருவருள் ஆகிய பெரும் பண்பு உடையோனும், உயிரின் அறிவை மறைக்கும் ஆணவமலத்தை ஓட்டும் சக்கரப்படை போன்றவனும் ஆகி, இவ்வியல்புகளால் என் நெஞ்சிற் குடிகொள்ளுதற்கு வரும் நந்தியை, வேண்டுவார்க்கு வேண்டுவதே தரும் கருணையாளனை, வானவரும் தேவரும் தம் முடிமேல் தாங்கினர்.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ, ஐ - சுவடிகளில் இல்லை. இதையடுத்து ஆ - சுவடியில்.

கானுறு வேங்கை கடிகமழ் சந்தனம்
பூவுறு மென்மனம் போக்கு வரவில்லான்
றானுறு மெங்கள் சரீரத் திறைவனை
யூனைவிட் டேகிநா னுய்யக் கொண்டேனே”

என்ற பாடலும்,

இ - சுவடியில் அதற்கு மாறாக,

"கானுறு வேங்கை கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கிலும்
ஊனுற நோக்கி யுணர்ந்தவர்க் கல்லது
வானவர் நாடு வழி திறவாதே''

என்ற பாடலும் உள்ளன.

அவை ஆசிரியர் கருத்தோடு மாறுபடுகின்றன. குருபூசை என்ற அடுத்த இயலில் பிற்காலத்தார் சேர்த்த பாடலை ஒத்துப் பிற்காலத்தார் அவற்றை எழுதிச் சேர்த்திருக்கக் கூடும்.

1826. சமைய மலசுத்தி தன்செய லற்றிடு
மமைய விசேடமு மானமந் திரசுத்தி
சமைய நிர்வாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமா னார்க்கபி டேகமே (த)

103. குருபூசை

வழிபாட்டை விடேன்

1827. ஆகின்ற நந்தி அடித்தாமரை பற்றிப்
போகின்ற உபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற ஆதாரம் ஆறாறு - அதனின்மேல்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே.

ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையு
மாகின்ற வாதார மாறா றதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே. (1)

கருத்து: எனக்கு ஆக்கமாகும் என் குருபிரான் நந்தியின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு அவர் காட்டிய நன்னெறியில் செல்லத் துணைநிற்கும் திருவைந்தெழுத்தையும், சிவ வழிபாட்டையும், ஆறு ஆதாரங்களையும் கடந்து, அப்பால் நிராதார யோகம் செய்யும் பாங்கினையும் யான் கைவிடேன்.

மேல்நிலைப்பேறுகட்கு எல்லாம் குருநாதனை வழிபடுவதே வழி என்பது கருத்து.

1828. கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினு
மூனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே (உ, க, ப)

குறிப்பு: 'ஓ' - சுவடியில் மட்டும் உள்ளது. அ, இ - சுவடிகளில் மிகவும் திரிந்து, பின் 3 அடிகள் முற்றிலும் வேறாகக் காணப்படுகிறது.

ஞானச் சிந்தனை

1829. மேவிய ஞானத்தில் மிக்கிடின் மெய்ப்பரன்
ஆவயின் ஞானநெறி நிற்றல் அர்ச்சனை
ஓ அற உட்பூசனை செய்யின் உத்தமம்
சேவடி சேரல் செயல் - அறல் தானே.

மேவிய ஞானத்தின் மிக்கிடின் மெய்ப்பர[1]
[2]னாவயின் ஞான நெறிநிற்ற லர்ச்சனை
யோவற வுட்பூ சனைசெய்யி னுத்தமஞ்[3]
சேவடி சேரல் [4]செயலற றானே. (2)

வேறு பாடம்: 1. மெய்கண்டன் (இ) IV (இப்பாடம் 'மெய்கண்டான்' என இருந்திருக்கலாம்) 2. னாவையுண் (அ) I; னாவியின் (தி); னாவையின் (சண்) 3. னுத்தமன் (ஆ) I. 4. செயலறற் (சண்)

கருத்து: மேலைப்பாட்டில் குருநாதனின் உபதேசத்தின்படி பூசை செய்தலையும் நிராதார யோகம் செய்தலையும் குறிப்பிட்டவர், இப்பாடலில் அவற்றை விளக்குகின்றார். குருநாதன் அருளிய பதி ஞானத்தினைச் சிந்தித்து, அனுபவித்து, அதில் முதிர்ந்தால், உண்மைப் பொருளாகிய பரம் பொருளே ஆகலாம். அவ்விடத்தில் (அச்சமயத்தில்; அப்பக்குவத்தில்) ஞானச் சிந்தனையே, புறவழி பாட்டின் அர்ச்சனையை ஒத்ததாம். இடையறாது அகப்பூசை செய்தல் உத்தம வழிபாடாகும். அதில் இறைவன் திருவடியில் ஒன்றி நிற்பதே, தன் செயல் அற்று நிற்பதாகும்.

நிராதார யோகம் செயலற்று நிற்றல் எனக் குறிக்கப்பட்டது.

ஆதாரம் கடந்தது பேரின்பம்

1830. உச்சியும் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின்; நச்சி 'நம' என்னும் நாமத்தை
விச்சுமின்; விச்சி, விரிசுடர் மூன்றினும்
நச்சுமின், பேர்நந்தி நாயகன் ஆகுமே.

உச்சியுங் காலையு மாலையு மீசனை
நச்சுமி னச்சி 'நமவென்னு நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினு
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே[2]. (3)

வேறு பாடம்: 1. நம வென்று (அ) I. 2. னாமே (அ ஓ) I.

கருத்து: மேல், நிராதார யோகம் கூறியவர், இங்கும் அதனையே கூறகிறார்: அகப்பூசையாகிய நிராதார யோகத்திற்கு இன்ன நேரம் என்று வரையறுக்காமல், எப்போதும், இறைவனை அவ்வழியில் வழிபடுதலை விரும்புக. விரும்பி, திருவைந்தெழுத்தை மூலாதாரத்தில் ஆழ நிறுத்துக. நிறுத்தி, ஆதாரங்களைக் கடந்து செல்லும் பொழுது, அக்கினி, சூரியன், சந்திரன் ஆகியோரின் மண்டலங்களில் அனுபவம் பெற்று, அவற்றைவிட மிகுதியாக அவற்றின் தலைவனாகிய நந்தியை விரும்புக. அவன் தரும் பேரின்பத்தை நிராதார யோகத்தில் பெறலாம்.

வித்து - விதை; வினைச் சொல். இது விச்சு எனப் போலி ஆகியது.

1831. புண்ணிய மண்டலம் பூசைநூ றாகுமாம்
பண்ணிய மேனியும் பத்துநூ றாகுமாம்
எண்ணிலிக் கைய மிடிற்கோடி யாகுமாற்
பண்ணிடில் ஞானியூன் பார்க்கில் விசேடமே. (உ, க)

சிவனுக்கு ஏற்ற தியானம்

1832. இந்துவும் பானுவும் இயங்கும் தலத்திடை
வந்தித்தது எல்லாம் அசுரர்க்கு வாரியாம்;
இந்துவும் பானுவும் இயங்காத் தலத்திடை
வந்தித்தல் நந்திக்கு அது அர்ச்சனை ஆமே.

இந்துவும் பானுவு [1]மியங்குந் தலத்திடை
வந்தித்த [2]தெல்லா [3]மசுரர்க்கு வாரியா
மிந்துவும் பானுவு [4]மியங்காத் தலத்திடை
வந்தித்த [5]னந்திக்க தர்ச்சனை யாமே. (4)

வேறு பாடம்: 1. மிலங்குந் (விசு) 2. தெல்லாஞ் சுரர்க்கும் (ஓ) I. 3. மசுரர்க்கே (ஆ இ) III. 4. மிலங்காத் (விசு) 5. னந்திக்கு மா பூசை (சண்).

கருத்து: சந்திர கலையும் சூரிய கலையும் இயங்கும் இடகலை, பிங்கலை நாடிகளில் மூச்சு இயங்கும்பொழுது செய்யும் தியானம் அசுரர்களுக்கு உகந்தது. சுழுமுனையில் மூச்சு இயங்கும்பொழுது செய்யும் தியானமே நந்திக்கு ஏற்றது.

உயர்ந்த வழிபாடு

1833. இந்துவும் பானுவும் என்று எழுகின்றது ஓர்
விந்துவும் நாதமும் ஆகி, மீதானத்து இடை
சிந்தனை சாக்கிராதீதத்தே சென்றிட்டு
நந்தியைப் பூசிக்க நற்பூசை ஆமே.

இந்துவும் பானுவு மென்றெழு கின்றதோர்
விந்துவு நாதமு [1]மாகிமீ தானத்தே
சிந்தனை சாக்கிரா தீதத்தே சென்றிட்டு[2]
நந்தியைப் பூசிக்க நற்பூசை யாமே. (5)

வேறு பாடம்: 1. மாகியீசானத்தே (அ) II. 2. சேணிட்டு (ஓ) III.

கருத்து: உயிருணர்வும் மூச்சுக் காற்றும் சேர்ந்து சந்திரமண்டலத்தில் முறையே விந்துவும் நாதமுமாக உணரப்படும். அவை அவ்விடத்தைத் தாண்டி, சகஸ்ராரத் தாமரையை அடையும்போது, உணர்வு சாக்கிரம் கடந்த நிலையில் செல்லும். அந்நிலையை உடைய வழிபாடு உயர்ந்த வழிபாடாகும்.

சதாசிவனை அனுபவித்தல்

1834. மன, பவனங்களை மூலத்தால் மாற்றி
அனித உடல் பூதம் ஆக்கி, அகற்றி
புனிதன் அருள்தனில் புக்கிருந்து இன்பத்
தனியுறு பூசை சதாசிவத்து ஆமே.

மனபவ னங்களை மூலத்தான் மாற்றி
[1]யனித வுடற்பூத மாக்கி யகற்றிப்
புனித [2]னருடனிற் புக்கிருந் தின்பத்[3]
[4]தனியுறு பூசை [5]சதாசிவத் தாமே. (6)

வேறு பாடம்: 1. யனிக (ஆ) I. 2. யருளிற் (ஓ) II. 3. தின்பந் (ஓ) I 4. தினியுறு (அ) I; தனியிறு (ஓ) I. 5. சதாசிவற்காமே (ஆ இ ஈ) III; சதாசித் (ஓ) I.

கருத்து: மனத்தின் ஓட்டத்தையும், மூச்சு இடகலை, பிங்கலை நாடிகளிற் செல்லுதலையும் மூல மந்திரத் தியானத்தால் நிறுத்தி, நிலையற்றதாகிய உடலை அதன் காரணமாகிய ஐம்பூதங்களில் ஒடுக்கி, அப்பூதங்களைத் தன்மாத்திரைகளில் ஒடுக்கி, திருவருளில் தோய்ந்திருந்து, நிராதாரமாகச் செய்யும் இன்பப் பூசையே சதாசிவ நிலையை ஆன்மாவுக்கு அளிக்கவல்லது.

பவனம் - காற்று. மூலத்தால் - மூலக் கனலை மேல் நோக்கிச் செலுத்தும் முயற்சியால் எனலும் ஆம். அளித்தம், அனிதம் என இடைக் குறைந்தது. ஒடுக்குதல், மறத்தல். தனி - எதையும் சாராத தனிமை.

1835. பகலு மிரவும் பயில்கின்ற பூசை
யியல்புடை யீசற் கிணைமல ராகப்
பகலு மிரவும் பயிலாத பூசை
சகலமுந் தான்கொள்வன் தாழ்சடை யோனே. (அ, உ)

104. மகேசுவர பூசை

அடியார் உண்டது ஆண்டவன் உண்டதே

1836. பட மாடக் கோயிற் பரமற்கு ஒன்று ஈவர்;
நடமாடு அக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈவீர்;
நடமாடு அக்கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
பட மாடக் கோயிற் பரமற்கு அது ஆமே.

படமாடக் கோயிற் பரமற்கொன் றீவர்[1]
நடமாடக் கோயி [2]னம்பற்கொன் றீவீர்[3]
நடமாடக் கோயி னம்பற்கொன் றீயிற்[4]
படமாடக் கோயிற் [5]பரமற்க தாமே. (1)

வேறு பாடம்: 1. நீவீர் (ஈ ஓ) I; நீய (இ ஆ) IV; நீயின் (சங்) 2. நம் பர்க்கங் (இ ஆ) IV. 3. நீயீர் (ஓ) IV; காகா (ஆ இ) IV. 4. நீந்தாற் (ஆ இ) IV. 5. பகவிற்க (சங்).

கருத்து: ஓவியம் போல விளங்கும் மாடக்கோயிலில் வீற்றிருக்கும் பரமனுக்கு உணவு படைப்பர் மாந்தர். நீவீர் அத்துடன் அமையாது, நடமாடும் கோயிலான அடியார்களுக்கு உணவு படைப்பீர்களாக. ஏனெனில், அடியார்களுக்கு உணவு படைத்தால், கோயிலில் உறையும் பரமனுக்குப் படைத்தது போல, அவனைச் சென்று சேரும்.

அடியார் ஏற்றதனை ஆண்டவனும் ஏற்பான் என்பது கருத்து. பரமற்குப் படைப்பவர் சிவபூசை ஒன்றே செய்ய, அடியார்க்குப் படைப்பவர் மாகேசுர பூசையும் சேர்த்துச் செய்தல் பெறப்பட்டது.

உலகிற்கே கொடுப்பது போல்

1837. [1]தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்[2]
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி யெடுத்துரைத் தானே. (2)

வேறு பாடம்: 1. தண்டுறு (ஆ இ) I. 2. தாமுவந் (ஆ இ) IV.

கருத்து: கேடற்ற சிந்தையுடைய அடியார் மகிழ்ந்துண்ட உணவு, மூன்று உலகில் உள்ளாரும் உண்டதாகும். அவர்கள் மகிழ்ந்து ஏற்ற பொருள், மூன்று உலகினரும் ஏற்றுக்கொண்டதாகும் - என்று எட்டுத் திசையும் அறிய நந்தி உரைத்தான்.

குருவுக்குப் படையுங்கள்

1838. மாத்திரை ஒன்றினில் மன்னி அமர்ந்து உறை
ஆத்தனுக்கு ஈந்த அரும்பொருளானவை
மூர்த்திகள் மூவர்க்கும் மூவேழ் குரவர்க்கும்
தீர்த்தம் - அது ஆம், அது தேர்ந்து கொள்ளீரே.

மாத்திரை [1]யொன்றினின் மன்னி யமர்ந்துறை
யாத்தனுக் கீந்த வரும்பொரு ளானவை[2]
மூர்த்திகண் மூவர்க்கு மூவேழ் குரவர்க்குந்
தீர்த்தம [3]தாமிது சேர்ந்துகொள் ளீரே[4]. (3)

வேறு பாடம்: 1. தன்னில் (அ) II. 2. ளானது (விசு) (தி) (வ) 3. தாமது (விசு) (தி) (வ) 4. வீரே (விசு) (வ) (தி).

கருத்து: இங்கு மயேசுவரன் எனக் குருநாதனைக் குறிப்பிடுகின்றார்: ஒரு மாத்திரைக் காலத்தில் நெஞ்சில் வந்தமர்ந்து, நெடுநேரத் தியானப் பொருளாய் நின்று, தனது சீடனுக்கு அருள்பாலிக்கும் அன்புடையவனாகிய மயேசுவரனுக்கு (குருநாதனுக்கு) அளித்த அரிய பொருள், மும்மூர்த்திகளுக்கும், மூத்தோராகிய ஏழு குரவர்க்கும் உரிய தூய பொருளாகும் என்பதை அறிக.

1839. அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே. (சு, ங)

1840. ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந்தொண்டர் நினைவின் பயனிலை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே. (க)

அடியார் வழிபாடு

1841. "ஏறுஉடையாய், இறைவா, எம்பிரான்" என்று
நீறு, அணிவார் அடியார் நிகழ் தேவர்கள்
ஆறு அணி செஞ்சடை அண்ணல் இவர் என்று
வேறு அணிவார்க்கு வினை இல்லை தானே.

ஏறுடை யாயிறை வாவெம் பிரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்க
ளாறணி செஞ்சடை யண்ண லிவரென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே. (4)

கருத்து: (அன்பு பெருகப் பெற்று) "காளை ஊர்தியுடையாய், இறைவனே, எம் தலைவா" என்று உருகி அழைத்து, நீறு அணியும் அடியார் இவ்வுலகில் நடமாடும் தேவரே ஆவர். கங்கையை முடிக்கு அணிந்த தலைவனே இவர்கள் என்று, அவர்களைத் தனித்தனி வழிபடுவோர்க்கு வினை நீங்கும்.

அணிதல் (4 ஆம் அடி) - வழிபடுதல்.

குருவே நினைவு

1842. சீர்நந்தி கொண்டு திருமுகமாய்விட்ட
பேர்நந்தி என்னும் பிறங்கு சடையனை
யான் நொந்து நொந்து, வரும் அளவும் சொலப்
பேர் நந்தி என்னும் பிதற்று ஒழியேனே.

சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி யென்னும் பிறங்கு சடையனை
[1]யானொந்து நொந்து வருமள வுஞ்சொலப்
பேர்நந்தி யென்னும் பிதற்றொழி யேனே. (5)

வேறு பாடம்: 1. மா நொந்து (ஈ) I.

கருத்து: நந்தியாகிய சிவபிரானது புகழைத் தானே ஏந்தி, அவனாகவே ஆகிவிட்ட குருநாதனை, யான் ஆன்மிகப் படிநிலை களில் மிகவும் வருந்தி, காட்சி காணும்வரை, சொல்லியவாறே இருப்பதற்கு ஒரு பெயர் வேண்டும் ஆதலின், 'நந்தி' என்னும் பெயரைப் பிதற்றுதலைக் கைவிடேன்.

இறைவனைத் தேடத் துணை

1843. அழிதகவு இல்லா அரனடியாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்குஇருள் நீங்கும்;
பழுது படாவண்ணம் பண்பனை நாடித்
தொழுது எழ, வையகத்து, ஓர் இன்பம் ஆமே.

[1]அழிதக வில்லா வரனடி யாரைத்
தொழுதகை [2]ஞாலத்துத் தூங்கிரு ணீங்கும்
பழுது படாவண்ணம் [3]பண்பனை நாடித்
தொழுதெழு வையகத் தோரின்ப மாமே. (6)

வேறு பாடம்: 1. அழுக்க (அ) I. 2. ஞானத்துத் (ஈ) I. 3. பண்பினை (அ) I.

கருத்து: அழிவு இல்லாத சிவனடியாரை வணங்குபவன், தன்னுயிரைத் தொடர்ந்து பற்றுவது ஆகிய ஆணவ மலம் நீங்கப் பெறுவான். அது காரணமாக, குற்றம் வாராதவாறு, சிவபெருமானை 'உள்முகமாகத் தேடி, தரிசித்து, வணங்கி, உலகில் ஒப்பற்ற பேரின்பம் எய்துவான்.

சித்தம் சிவனிடம்

1844. பகவற்கு அது ஆகிலும் பண்பு இலர் ஆகிப்
புகும் மத்தராய் நின்று பூசனை செய்யும்
முகமத்தோடு ஒத்துநின்று ஊழிதோறு ஊழி
அகமத்தர் ஆகி நின்று ஆய்ந்தொழிந்தாரே.

[1]பகவற்க தாகிலும் [2]பண்பில ராகிப்
புகுமத்த [3]ராய்நின்று பூசனை செய்யும்
முகமத்தோ டொத்துநின் றூழிதோ றூழி
யகமத்த ராகிநின் றாய்ந்தொழிந் தாரே. (7)

வேறு பாடம்: 1. பகவற்கே (விசு) (தி) (வ) 2. பற்றில (த) 3. ராய் நின்ற (அ) I.

கருத்து: சிவபெருமானுக்குப் பித்து உண்டு எனினும், அடியார் சிலர், உலகில் பண்பின்மை பொருந்தாது - என்பதைப் பொருட்படுத் தாமல், எங்கும் பித்தராகவே திரிந்து, அன்பர்கள் தம்மை மாயேசுர பூசை செய்யும் உபசாரங்களை ஏற்றுக்கொண்டு, தம் உள்ளம் இறைக்காதல் என்ற பித்தினை விடாது நிற்க, நுணுகிய ஞானம் பெற்று, அந்த ஞானநிலையிலேயே நிற்பர். இத்தகையோர் எல்லாக் காலங்களிலும் உண்டு. அது மத்தராய் நிற்றலாகிய பண்பு.

புகுதல் - எங்கும் வருதல்; பூசனை நடைபெறும் இடத்திற்கு வருதல். முகமம் - முகமன் என்பதன் மரூஉ. ஆய்தல் - நுணுகுதல்; நுண்ணிய ஞானம் உடையவராதல். ஒழிதல் - ஒரு நிலையில் நிற்றல். "விற்கையினின்றிடை வீழ, விம்முற்று நின்றொழிந்தான்" (கம்ப. அயோ. கங்கை, 29) சிவஞானியர் தன்மையை, 'பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே சீலமிகு ஞானியர்தம் செய்கை பராபரமே" என்பர் தாயுமானார். (தாயு. பராபர, 143)

1845. வித்தக மாகிய வேடத்த ருண்டவூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே (ஓ, க)

1846. தாழ்விலர் பின்னும் முயல்வ ரருந்தவம்
ஆழ்வினை யாழ வவர்க்கே யறஞ்செய்யும்
ஆழ்வினை நீக்கி யருவினை தன்னொடும்
போழ்வினை தீர்க்குமப் பொன்னுல காமே (ஔ, ங)

105. அடியார் பெருமை

நாட்டுக்கு நன்மை

1847. திகைக்கு உரியான் ஒரு தேவனை நாடி
நகைக்கு உரியான் ஒரு ஞானி இருக்கின்
பகைக்கு உரியார் இல்லை, பார்மழை பெய்யும்,
அகக்குறை கேடு இல்லை அவ்வுலகுக்கே.

[1]திகைக்குரி யானொரு தேவனை நாடி[2]
[3]நகைக்குரி யானொரு [4]ஞானி யிருக்கின்
பகைக்குரி யாரில்லை பார்மழை பெய்யு
மகக்குறை கேடில்லை யவ்வுல குக்கே. (1)

வேறு பாடம்: 1. சிகைக்குரி (அ) I; திசைக்குரி (ஆ) I; தெகைக்குரி (ஓ) I. 2. நாடுந் (சங்) 3. வகைக்குரி (அ ஒ ஓ) III. 4. வாதி (அ ஒ ஓ) III.

கருத்து: எட்டுத் திசைகளுக்கும் உரிய ஒரே முழுமுதற்றலைவனை அகத்தால் நாடி, தரிசித்துப் பேரின்பம் நுகர்தற்கு உரிய ஞானமுடைய சிவனடியான் ஒரு நாட்டில் வாழ்ந்தால், அந் நாட்டைப் பகைத்துப் பொருவோர் இரார். நல்ல மழை பெய்யும். விளைபொருள்கள் குறைவின்றிப் பெருகும். மக்கள் மறுமையில் நற்கதி பெறுதற்குத் தடையில்லை.

நகை - இன்பம்.

குறிப்பு: ஆ, இ - சுவடிகளில் இவ்வியலின் பெயர் 'அடியார் பெருக்கம்' என உள்ளது.

எல்லாம் எனக்குள்

1848. கொண்ட குழியும் குலவரை உச்சியும்
அண்டரும் அண்டத்து அமரரும் ஆதியும்
என்டிசையோடும் வந்து என் கைத்தலத்தினுள்
உண்டு என, நாம் இனி உய்ந்தொழிந்தோமே.

கொண்ட [1]குழியுங் குலவரை யுச்சியு
மண்டரு மண்டத் தமரரு மாதியு
மெண்டிசை யோரும்வந் தென்கைத் தலத்தினு
[2]ளுன்டென நாமினி யுய்ந்தொழிந் தோமே[3]. (2)

வேறு பாடம்: 1. குறியுங் (ஓ) II. 2. முண்டென (ஆ இ) III; ளுண்டெனி னாமினி (விசு) (தி) (வ) 3. தேனே (அ இ ஓ) II.

கருத்து: நீரை மிகக் கொண்ட பெரும்பள்ளமாகிய கடலும், சிறந்த மலையின் உச்சியும் ஆகிய இடங்களில் வாழும் உயிரினங்களும், விண்ணுலகில் வாழும் தேவர்களும், உலகைப் படைத்த பிரமனும், எட்டுத்திசைகளிலும் வாழ்வோரும் என் கையில் அகப்படுவர் என்றால் நமக்கு வீடுபேறு கிடைக்கும் என்பது உறுதி.

எல்லா உலகிலும், எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்பவன் இறைவன். அவனே தமக்குள்ளும் விளங்குகிறான் என்பதை அடியார்கள் உணரும் போது "அகம் புறமும் பொலிந்து நின்ற பூரணமாய்" அவன் விளங்குவான். எல்லாம் தனக்குள்ளும் வந்து விட்டது போல் ஓர் அனுபவம் உண்டாகும். அதனை "என் கைத்தலத்தினுள் உண்டென" எனக் கூறினார்.

கடலும் மலையும் கூறவே, ஏனைப் பூதங்களும் குறிப்பாய் அடங்கின. "கனலைக் காற்றைக் கனைகடலை குலவரையைக் கலந்து நின்ற பெரியானை" என்றார் அப்பரடிகள். (தேவா: 6 ஆம் திருமுறை: கோயில்:1) பள்ளமும் உச்சியும் கூறியது, இடைப்பட்ட எல்லாப் பொருள்களையும் உயிரினங்களையும் தழுவுதற்கு. ஆதி என்றது படைப்பு முதல்வனாகிய சிவனையும் குறிக்கும்.

ஒன்றே எல்லாம்; அதுவும் என்னுள்

1849. அண்டமும் ஏழும் அகண்டமும் ஆவியும்
கொண்ட சராசர முற்றும், குணங்களும்
பண்டை மறையும் படைத்து அளிப்பு ஆதியும்
கண்ட சிவனும் என்கண் அன்றி இல்லையே.

[1]அண்டமு மேழு மகண்டமு மாவியுங்
கொண்ட சராசர முற்றுங் குணங்களும்
பண்டை மறையும் [2]படைத்தளிப் பாதியுங்
கண்ட சிவனுமென் கண்ணன்றி யில்லையே. (3)

வேறு பாடம்: 1. அண்டங்களேழு (விசு) (தி) (வ) 2. படைத்தழிப் (ஈ) IV படைத்தனிப் (சங்); படைப்பளிப் (த)

கருத்து: இப்பாடல், ஆசிரியர் அடியாருணர்வைத் தம் மேலிட்டுக் கூறியது. அண்டமும், கீழ் ஏழு, மேல் ஏழு உலகங்களும், ஆன்மாக்களும், சராசரம் முழுவதும், குணங்களும், வேதங்களும், படைத்தல் முதலிய ஐந்தொழில்களும், இவற்றை எல்லாம் சங்கற்ப மாத்திரையால் நடத்தும் சிவபரம்பொருளும் என்னிடத்தில் அல்லாமல், தனித்தனியாக இல்லை.

இது ஒன்றாய்க் காணும் காட்சி. "ஒன்றென்றிரு" என்றார் ஒளவையாரும்.

ஞானக்கண்ணால் காணலாம்

1850. பெண் அல்ல; ஆண் அல்ல; பேடு அல்ல; மூடத்துள்
உள்நின்ற சோதி; ஒருவற்கு அறி ஒண்ணா;
கண் இன்றிக் காணும், செவி இன்றிக் கேட்டிடும்
அண்ணல் பெருமையை ஆய்ந்தது மூப்பே.

பெண்ணல்ல வாணல்ல பேடல்ல மூடத்து[1]
[2]ளுண்ணின்ற சோதி யொருவற் கறியொணாக்
[3]கண்ணின்றிக் காணுஞ் [4]செவியின்றிக் கேட்டிடு
மண்ணல் பெருமையை யாய்ந்தது மூப்பே[5]. (4)

வேறு பாடம்: 1. மூடத் (அ, இ) II. 2. துண்ணின்ற (அ இ) II. 3. கண்ணன்றிக் (ஆ) I. 4. செவியன்றிக் (ஆ ஒ ஓ) I. 5. மூவரே (ஓ) II.

கருத்து: பெண் உருவங்களோ, ஆண் உருவங்களோ, அலி உருவங்களோ, உண்மையில் இறைவனது சொரூபம் அல்ல. ஒருவன் இறைவனை ஆராயப்புகுந்தால், தனது அறியாமையால் அவனைக் காணமாட்டான். ஆனால் அவனுக்குள்ளேதான் இறைவனாகிய சோதி நிற்கின்றான். ஆன்மாவிற்குப் பக்குவம் ஏற்பட்டால், அது இறைவனைத் தன் கண்ணின் துணை இல்லாமலே காணும். காதின் துணை இல்லாமலே இறைவனின் பேச்சைக் கேட்கும். அங்ஙனம் அஃது அறிவது, தனது ஞான முதிர்ச்சியினால் ஆகும்.

உலகமே இறைவன் திருமேனி

1851. இயங்கும் உலகினில் ஈசன் அடியார்
மயங்கா வழிசெல்வர், வானுலகு ஆள்வர்;
புயம் கெழும் எண் - திசை, போது பாதாளம்
மயங்கா வயிரண்டம் மாமுடி தானே.

இயங்கு முலகினி லீச னடியார்
மயங்கா வழிசெல்வர் வானுல காள்வர்
[1]புயங்கெழு மெண்டிசை போது பாதாள
[2]மயங்கா வயிரண்ட மாமுடி தானே. (5)

வேறு பாடம்: 1. புயங்களு (விசு) (தி) (வ) 2. மயங்காப் பகிரண்ட (விசு) (வ) (தி) (த)

கருத்து: ஈசனுக்கு உலகே உடம்பாம். எவ்வாறு? எட்டுத்திசையும் அவன் தோள்கள். பாதாளம் வரை உள்ளது அவன் திருவடி. அவனது திருமுடியோ பெரிய அண்டத்தின் முகடு ஆகும். இவ்வாறு விசுவ ரூபியாக இறைவனை அடியார் காணப் பெறுவதால், அவர்கள் தாம் வாழும் வாழ்வில் மயக்கத்திற்கு (அறிவுக் குழப்பத்திற்கு) இடங்கொடார். இறந்தபின் வானுலகை ஆள்வர்.

பகிரண்டம் வயிரண்டமெனத் தமிழாயிற்று.

உள்முக ஞானம்

1852. அகம் படிகின்ற நம் ஐயனை ஒரும்
அகம் படி கண்டவர் அல்லலில் சேரார்;
அகம்படி உள்புக்கு அறிகின்ற நெஞ்சம்
அகம்படி கண்டார் அழிக்கலும் எட்டே.

அகம்படி [1]கின்றநம் மையனை யோரு
மகம்படி கண்டவ ரல்லலிற் சேரா
ரகம்படி யுள்புக் கறிகின்ற நெஞ்ச
மகம்படி கண்டா [2]ரழிக்கலு மெட்டே. (6)

வேறு பாடம்: 1. நின்றன வைவனை யேரு (அ) I; கின்றவைவனையேரு (ஒ ஓ) I கின்றதம் (தி) 2. மழிக்கலு (சைவ) (தி) (வ) (த)

கருத்து: சித்தத்தில் வந்து அமர்கின்ற சிவபெருமானை, மனம் தனது நினைவிற்குக் கொண்டு வந்து நினையும்படி பழகியவர் துன்புறார். உள் முகமாகச் சென்று இறைவனை அறிந்து, தம் நெஞ்சிலிருந்து தற்போத உணர்வை (Ego) நீக்கியவர், எட்டு உறுப்பாலாகிய தம்து நுண்ணுடம்பை அழிப்பர். (வீடு பேறடைவர்).

2ம் ஆம் அடியில் 'அகம்படி' என்பதற்கு அடிமைப் பணி எனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். எட்டு: தன்மாத்திரை ஐந்தும், மனம், புத்தி, சித்தம் என்ற மூன்றும். இவற்றைக் கருவிகளாகக் கொண்டது 'புரியட்டகவுடம்பு' என வழங்கும் நுண்ணுடம்பு.

உயிர் நிலத்தில் உழவு

1853. கழிவும் முதலும், எம் காதல் - துணையும்
அழிவும் - அது ஆய் நின்ற ஆதிப் பிரானைப்
பழியும் புகழும் படுபொருள் முற்றும்
ஒழியும் என் ஆவி உழவுகொண்டானே.

கழிவு [1]முதலுமெங் காதற் றுணையு
மழிவும தாய்நின்ற வாதிப் பிரானைப்
பழியும் புகழும் படுபொருள் முற்று
மொழியுமென் னாவி [2]யுழவுகொண் டானே. (7)

வேறு பாடம்: 1. முதலுங் (சங்) 2. யுளவு கொண்டானே (அ) I; யளவு கொண்டானே (ஈ) I.

கருத்து: சென்ற பிறப்புக்களில் எம்முடன் ஒன்றாய் நின்றவனும், இந்தப் பிறப்பினைத் தந்தவனும், எம்முடைய அன்புத் துணையாக உடன் நிற்பவனும், இப்பிறப்பினை ஒடுக்குபவனுமாகிய சிவபரம்பொருளை வணங்குவதில், பழியும், புகழும், வேறு எப்பயனும் கருதாத என் உயிரை, அவன் உழுது பக்குவப் படுத்துகின்றான்.

வழி வழியடிமை

1854. என் தாயோடு என் அப்பன் ஏழ்-ஏழ் பிறவியும்
அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்
ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினான்
நின்றான் முகில்வண்ணன் நேரெழுத் தாயே.

[1]என்றாயோ டென்னப்ப [2]னேழேழ் பிறவியு
மன்றே சிவனுக் கெழுதிய வாவண[3]
மொன்றா யுலகம் படைத்தா னெழுதினா
னின்றான் முகில்வண்ண [4]னேரெழுத் தாயே[5]. (8)

வேறு பாடம்: 1. என்றாயு (அ) I. 2. னேழென் (அ) I. 3. வாவன (அ) I. 4. னேரெழுந் (சைவ) 5. தாமே (அ) I.

கருத்து: ஒரு பிறவியில் என் பெற்றோராக இருந்தோர், எனது அப்பிறவியிலும் வருகின்ற எல்லாப் பிறவிகளிலும், நான் சிவனுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று ஆவணம் எழுதினர். அதை எழுதியவன் பிரமன். சாட்சிக் கையெழுத்திட்டவன் திருமால்.

பெற்றோரின் எண்ணம், அடுத்தபிறவியில், பிரமனால் ஆவணமாக, என் தலையெழுத்தாக எழுதப்பெற்றது என்க.

கைவிட முடியுமா?

1855. துணிந்தார் அகம்படி துன்னி உறையும்
பணிந்தார் அகம்படி பாற்பட்டு ஒழுகும்
அணிந்தார் அகம்படி ஆதிப்பிரானைக்
கணிந்தார் ஒருவற்குக் கைவிடலாமே.

துணிந்தா ரகம்படி துன்னி யுறையும்
பணிந்தா ரகம்படி பாற்பட் டொழுகு
மணிந்தா ரகம்படி யாதிப் பிரானைக்
கணிந்தா ரொருவற்குக் கைவிட லாமே. (9)

கருத்து: 'சிவனே தலைவன்' என நம்பும் அடியாரின் உள்ளத்தில், அவருக்கு நெருக்கமாக உறைபவன். தன்னைப் பணிந்தவரின் விருப்பத்திற்கு ஏற்ப நடப்பவன். தன்னைத் தியானிப்பவர்க்கு மணிமாலை போன்ற அணியாக விளங்குபவன். அவனைச் செபித்தோர் கைவிட இயலுமா?

கணித்தார் என்பது மெலித்தல் விகாரம் பெற்றது.

சிவப்பணியின் பயன்

1856. தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்ய;
புலமிசை நீக்கிய பொன்னுலகு ஆளும்
பலம் இசை செய்யும் படர் சடையோனே.

தலைமிசை வானவர் தாழ்சடை நந்தி
[1]மிலைமிசை வைத்தனன் மெய்ப்பணி செய்யப்
[2]புலமிசை [3]நீக்கிய பொன்னுல காளும்
பலமிசை செய்யும் படர்சடை யோனே. (10)

வேறு பாடம்: 1. யிலைமிசை (அ) I; மலைமிசை (இ ஈ ஓ ஓ) III.
2. புலைமிசை (ஆ ஈ ஓ) III. 3. நீங்கிய (சைவ)

கருத்து: தேவர்களின் தலையில் நந்தி தன் திருவடிகளை, அவர் அடியவராகிச் சிவப்பணி செய்யும் பொருட்டுச் சூட்டினான். அப்பணிக்குப் பயனாக, வானவுலகத்திலிருந்து அவர்களை நீக்கி, வீட்டுலகத்தில் சேரும்படி செய்பவன் அப்பெருமான்.

மிலைதல் - முதனிலை அளவாக நின்றது; சூடுதல்.

அடியார் வழிபாடு

1857. அறியாப் பருவத்து அரன் அடியாரைக்
குறியால் அறிந்து, இன்பம் கொண்டது அடிமை;
குறியார்; சடைமுடி கட்டி நடப்பார்;
மறியார் புனல்மூழ்க மாதவமாமே.

அறியாப் பருவத் தரனடி யாரைக்
குறியா லறிந்தின்பங் கொண்ட தடிமை
குறியார் சடைமுடி [1]கட்டி நடப்பார்
மறியார் புனன்மூழ்க மாதவ மாமே. (11)

வேறு பாடம்: 1. கூட்டி (த)

கருத்து: இளமைப் பருவத்திலேயே சிவனடியாரை அவரது வேடத்தால் அறிந்து, பணி செய்து இன்புறுவது அடியார் பக்தியாகும் (சங்கம பக்தி). அடியார் எப்பயனும் கருதார். சடை

தரித்திருப்பார். அவர்களது திருவடி கழுவிய நீரைத் தலைமேல் தெளித்துக் கொள்ள, தவத்தின் பயன் கிடைக்கும்.

அடியார்க்கு அடியாரின் பெருமை

1858. அவன்பால் அணுகியே அன்பு செய்வார்க்குச்
சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லன்;
அவன்பால் அணுகியே நாடும் அடியார்
இவன்பால் பெருமை இலயம்-அது ஆமே.

அவன்பா லணுகியே யன்புசெய் வார்க்குச்[1]
சிவன்பா லணுகுதல் செய்யவும் வல்ல
[2]னவன்பா லணுகியே நாடு மடியா
ரிவன்பாற் பெருமை [3]யிலயம தாமே. (12)

வேறு பாடம்: 1. வார்கள் (விசு) (தி) (வ) (த) 2. ரவன்பா (தி) (த) 3. யில்லையதாமே (அ) I.

கருத்து: சிவனடியானிடம் அன்பு செய்பவரை, அவன் சிவனிடம் நெருங்கிச் செல்லச் செய்வான். அங்ஙனம் சிவனடியார்க்குப் பக்தி செய்யும் அடியாரின் பெருமை, சிவனடியாரின் பெருமையை ஒத்ததே.

1859. முன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்க
ளெண்ணிறந் தன்பால் வருவ ரிருநிலத்
தெண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே. (உ, ட)

1860. சிவயோகி ஞானி செறிந்தவத் தேச
மவயோக மின்றி யறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே. (ஔ)

தேவரே போல்வர்

1861. மேலுணர் [1]வான்மிகு [2]ஞாலம் படைத்தவன்
மேலுணர் [3]வான்மிகு [4]ஞாலங் கடந்தவன்
மேலுணர் [5]வார்மிகு ஞாலத் தமரர்கள்
மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே. (13)

வேறு பாடம்: 1. ரான்மிகு (த) 2. ஞானம் (அ ஆ இ ஈ) I. 3. ரான்மிகு (த) 4. ஞானங் (அ ஆ இ) I. 5. ரார்மிகு (த).

கருத்து: பிரமனும், திருமாலும், தேவரும்போலச் சிவனடியாரும் முக்கால உணர்வு உடையோர் ஆவர்.

அடியார் பசிதீர்த்தல்

1862. எட்டுத் திசையும் இறைவன் அடியவர்க்கு
அட்ட அடிசில் அமுது என்று எதிர்கொள்வர்
ஒட்டி ஒருநிலம் ஆள்பவர் அந்நிலம்
விட்டுக் கிடக்கில் விருப்பு அறியாரே.

எட்டுத் திசையு மிறைவ னடியவர்க்
கட்ட வடிசி லமுதென் றெதிர்கொள்வ
ரொட்டி யொருநில மாள்பவ ரந்நிலம்
விட்டுக் கிடக்கில் [1]விருப்பறி யாரே. (14)

வேறு பாடம்: 1. விருப்பில்லை தானே (த)

கருத்து: சிவனடியார் உண்பதற்கெனச் சமைத்த உணவு அமுதம் என்று எங்கும் உள்ள நன்மக்கள் ஒப்புகொள்வர். ஒரு சிறிய நிலத்தை வைத்திருப்போர், அதில் ஒரு பகுதி தரிசு போனால் வருந்துவர். (அதுபோல, சிறிது அளவே உணவு சமைப்போரும், அதனைச் சிவனடியார் உண்ண வாய்ப்பு இல்லையேல் வருந்துவர்.)

இறுதி இரண்டு அடிகள் ஒட்டணி.

குறிப்பு: அ, ஒ - சுவடிகளும் பதிப்புகளும் இப்பாடலையும் அடுத்த பாடலையும் "போசன விதி" என்ற இயலில் வைக்கும். ஒ - தவிரப் பிற சுவடிகள் அடியார் பெருமை இயலின் தொடர்ச்சியாக வைக்கும்.

கோவிலின் நிலைபேறு

1863. அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்
உச்சியம் போதாக, உள் அமர் கோயிற்குப்
பிச்சை பிடித்து உண்டு, பேதம் அறநினைந்து
இச்சைவிட்டு, ஏகாந்தத்து ஏறி இருப்பரே.

அச்சிவ [1]னுண்ணின் றருளை யறிந்தவ
ருச்சியம் போதாக [2]வுள்ளமர் கோயிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்
[3]திச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே. (15)

வேறு பாடம்: 1. னுண்ணின்ற வருளை (சங்) 2. வுள்ளமார் (ஓ) I. 3. திச்சையிட் (இ) I.

கருத்து: (உலகைப் படைத்த) சிவன் தம் உள்ளேயும் நிற்கும் கருணையை அறிந்த சிவனடியார், அவன் அமர்ந்த கோயிலாகிய தமது உடம்பிற்குப் பிச்சை யேற்று உண்டு, தமக்கென வேறு இச்சை இன்றி, தனிமையில் அவன் அருளில் திளைத்திருப்பர்.

ஏறி இருத்தல் - உயர் நிலை பெறுதல்.

செய்ய வேண்டிய வேளாண்மை

1864. விச்சுக் கலமுண்டு [1]வேலிச்செய் யொன்றுண்டு
உச்சிக்கு முன்னே யுழவு விளைந்தது[2]
[3]அச்சங் கெடச்செய் [4]யறுத்துண்ண மாட்டாதா
ரிச்சைக்குப் பிச்சை [5]யிரக்கின்ற வாறே. (16)

வேறு பாடம்: 1. மேலச்செய் (ஆ இ) III. 2. சமைந்தது (சங்) 3. அச்சங் கெட்டச் செய் (சங்) 4. தறுத்துண்ண (ஓ) I. 5. யொக்கின்ற (ஆ) II.

கருத்து: விதைக் கலம் இருக்கிறது. வேலியிட்ட வயலும் இருக்கிறது. நாள்தோறும் உச்சிப்போதுக்கு முன்பு செய்த உழவு பயன் தந்தது. (பயிர் விளைந்தது). இனி வரும் நாளில் உணவுக்கு யாது செய்வோம் என்ற அச்சம் இன்றி, அவ்வயலில் அறுவடை செய்து உண்ணலாம். ஆனால் இச்செயல்கள் செய்யத் திறனற்றோர், தம் இச்சையின் பொருட்டு இரந்து திரிகின்றனர். (என்னே பாவம்)

இப்பாடல் உருவகம் அன்று. இதில் உள்ள சொற்கள் படிமங்களாய் நின்று ஒரு பொருள் குறித்தன. அது வருமாறு: விச்சுக்கலம் என்பது பன்னிரண்டு அங்குலம் உள்ள பிராணவாயு. செய் என்பது சகஸ்ராரத் தாமரை. உச்சிக்கு முன்னே என்பது புருவமத்தி. உழவு என்பது அமுதம் வரச்செய்த முயற்சியும் அருளும். அறுத்தல், வரையறுத்தல். சகஸ்ராரத்தில் இறைவனைத் தரிசித்து அமுதம் உண்ணாதோர், உலகியல் விருப்பங்களை நிறைவு செய்ய வேண்டி இரந்து திரிகின்றனர். அமுதம் உண்டார்க்குப் பசி தோன்றாது என்றும் உணர்த்தினார்.

குறிப்பு: இப்பாடல் முதல் 5 பாடல்களைச் சில சுவடிகளும் பதிப்பு களும் "பிட்சாவிதி" என்ற இயலில் வைக்கும். பொருத்தம் நோக்கி, "அடியார் பெருமையின்" தொடர்ச்சியாகக் கொள்ளப் படுகின்றன.

ஏன் பிச்சை ஏற்றீர் ஐயா?

1865. பிச்சை ஏற்றான் பிரமன் தலை தன்னிலே,
பிச்சை ஏற்றான் பிரியாள் நல்லறம் செய்ய,
பிச்சை ஏற்றான் பிரமன் சிரம் காட்டிட,
பிச்சை ஏற்றான் பிரமன் பரம் ஆகவே.

பிச்சையேற் றான்பிர மன்றலை தன்னிலே
பிச்சையேற் றான்பிரி [1]யாணல் லறஞ்செய்யப்
பிச்சையேற் றான்பிர மன்சிரங் காட்டிடப்[2]
பிச்சையேற் [3]றான்பிர மன்பர மாகவே. (17)

வேறு பாடம்: 1. பிரியாநல் (சுவ) V; பிரியா (விசு); பிரியாதளஞ் செய்ய (த) 2. காட்டிப் (த) 3. றான்பிரான் (த)

கருத்து: சிவன் பிரமகபாலத்தை ஓடாக ஏந்தி, ஆன்மதற் போதத்தைப் பிச்சையாக ஏற்றான். தன்னிற் பிரியாதவளாகிய சத்தி, காஞ்சியில் முப்பத்திரண்டு அறங்களையும் செய்ய, தான் வறிஞனாய் இரந்துண்டான். பிரமன் ஆணவத்தால் தலையறுப் புண்டதைக் காட்டப் பிச்சை எடுத்தான். பிரமனிலும் தான் உயர்ந்தவன்; பரம்பொருள் என்று உலகம் உணருமாறு பிச்சை எடுத்தான்.

வழி காட்டுகின்றான்

1866. [1]பரந்துல கேழும் படைத்த பரம[2]
னிரந்துணி [3]யென்பவ [4]ரெற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையு மடியா
ரிரந்துண்டு தன்கழ லெட்டச்செய் தானே[5]. (18)

வேறு பாடம்: 1. பரந்தே முலகம் (ஆ) III. 2. பிரானை (சங்) 3. யென்பர்க ளெற்றுக் (சங்) (விசு) என்பத் (த) 4. ரெத்தந் திரத்துக்கும் (அ) I. 5. மாறே (விசு).

கருத்து: பரமன் ஏழு உலகங்களையும் படைத்தமையால் அவற்றை உடையவன். அவன் இரந்துண்டான் என்பர். ஏன் இரந்தான்? தன்

அடியையே என்றும் எண்ணியிருக்கும் அடியார், பசிக்குப் பிச்சை ஏற்று உண்டு, தன் அடியை அடையத் தவம் செய்வதற்காக என்க. என்பவர் - அண்மை விளி.

அடியார் துன்பம் அறியாதவனா?

1867. வர இருந்தான் வழி நின்றிடும் ஈசன்;
தர இருந்தான் தன்னை, நல்லவர்க்கு இன்பம்;
பொர இருந்தார் புகலே புகல் ஆக
வர இருந்தால், அறியான் என்பது ஆமே.

வரவிருந் தான்வழி நின்றிடு மீசன்
றரவிருந் தான்றன்னை நல்லவர்க் கின்பம்
பொரவிருந் [1]தார்புக லேபுக லாக
வரவிருந் தாலறி [2]யானென்ப தாமே. (19)

வேறு பாடம்: 1. தான்புக (விசு) (த) 2. யாரென்ப (ஓ) I.

கருத்து: ஈசன் தன்னை நாடுவோரின் வழித்துணை ஆவான். பற்று விட்டவர்க்குத் தன்னையே தருவன். துன்பம் மேன்மேல் வந்து மோத, ஈசன் திருப்பதமே சரண் என்று இருப்பார்க்கு இன்பம் உண்டாகுமாறு, அவன் தோன்றி அருள்வான். அங்ஙனம் இருக்க, அவன் அடியாரின் துன்பம் அறியாதவன் என்று கூற இயலுமா?

நல்லவர் - குற்றம் நீங்கியவர். குற்றம், இங்கு உலகியற் பற்று.

கொண்டு கூட்டுக: "ஈசன் வர இருந்தான் வழி நின்றிடும். நல்லவர்க்குத் தன்னைத் தர இருந்தான்; (துன்பம்) பொர, புகலே புகலாக இருந்தார் இன்பம் வர இருந்தால் (அவன்) அறியான் என்பது ஆமே."

பசி என்ன செய்யும்?

1868. அங்கார் பசியு மவாவும் வெகுளியுந்
தங்கார் சிவனடி யார்சரீ ரத்திடை
பொங்கார் [1]புவனத்துப் புண்ணிய லோகத்துத்[2]
தங்கார் சிவனைத் [3]தலைப்பட்ட வாறே. (20)

வேறு பாடம்: 1. புவனத்தும் (ஈ ஓ) I. 2. லோகத்துந் (ஈ ஓ) I. 3. தலைப்பட்டவரே (ஆ இ) I தலைப்படுவாரே (சங்) (த)

கருத்து: சிவனடியார் உடலில் தோன்றும் பசி, (உள்ளத்தில் தோன்றும்) பெருவிருப்பம், கோபம் - இவற்றால் தடைப்படார். மீண்டும் மீண்டும் தோன்றுகின்ற மண்ணுலகப் பிறப்பு, புண்ணிய உலகப் பிறப்பு ஆகியவற்றில் பிறவார். ஆயின் சிவனை அடைவர்.

அங்கி ஆர் என்பது அங்கார் எனச் செய்யுள் நோக்கித் திரிந்தது. சரீரத்திடை அங்கியார் பசி எனக் கூட்டுக.

வேண்டாமையே உயர்வு

1869. மெய்யக ஞான மிகத்தெளிந் தார்களுங்[1]
கையக [2]நீண்டார் கடைத்தலைக் கேசெல்வ[3]
ரையம் புகாம லிருந்த தவசியார்
வையக மெல்லாம் வரவிருந் தாரே. (21)

வேறு பாடம்: 1. தெளிவார்களும் (அ) III. 2. நீட்டார் (த) 3. கேசெல்லார் (த)

கருத்து: உண்மையான சிவஞானம் உடையோரும் பிச்சை ஏற்று உண்பவராய், இல்லறத்தார் வீட்டு வாயிலில் நிற்பர். ஆனால் அங்ஙனம் பிச்சை ஏற்காமல், இருந்த இடத்திலேயே இருந்த அடியார், மக்கள் எல்லாம் தம்மிடம் வருமாறு இருப்பர்.

106. முத்திரை பேதம்

முத்திரையின் உதவி

1870. நால், ஏழு மாறவே நண்ணிய முத்திரை
பாலான மோன மொழியில் பதிவித்து
மேலான நந்தி திருவடிமீது உய்க்கக்
கோலாகலம் கெட்டுக் கூடும் நன் முத்தியே.

நாலேழு [1]மாறவே நண்ணிய முத்திரை
பாலான மோன [2]மொழியிற் பதிவித்து
மேலான நந்தி திருவடி மீதுய்க்கக்
கோலா [3]கலங்கெட்டுக் கூடுநன் முத்தியே. (1)

வேறு பாடம்: 1. மாகவே (அ) I. 2. மொழிவீர் (ஓ) I. 3. கலங்கேட்டுக் (சங்)

கருத்து: மனம், ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, ஆக 11 தத்துவங்களும் பசு போத வழியை விட்டுப் பதிபோத வழிக்கு மாற, அதனால் கைவரும் முத்திரைகள் உயிரைப் பிரணவத்தில் பதியச் செய்யும். அப்பிரணவம் சிவனது திருவடியில் உயிரை எய்துவிக்கும். ஆரவாரம் அடங்க, அத்திருவடியில் ஒன்றி நிற்கும் முத்தி வாய்க்கும்.

ஞானக்கருவி

1871. துரியங்கள் மூன்றும் சொருகு - இடன் ஆகி,
அரிய உரைத்தாரம் அங்கே அடக்கி
மருவிய சாம்பவி கேசரி உண்மை
பெருகிய ஞானம் பிறழ் முத்திரையே.

துரியங்கண் [1]மூன்றுஞ் சொருகிட னாகி
[2]யரிய வுரைத்தார மங்கே யடக்கி[3]
மருவிய சாம்பவி கேசரி யுண்மை
பெருகிய ஞானம் [4]பிறழ்முத் திரையே. (2)

வேறு பாடம்: 1. மூன்று (ஆ இ) I. 2. லரிய (அ) I. 3. யடங்கி (ஓ) I; யடங்கிடு (ஓ) II. 4. பிழைமுத் (ஓ) I.

கருத்து: கேவல துரியம், சகல துரியம், சுத்த துரியம் என்னும் மூன்று அவத்தைகளும் அடங்கும் இடமாகி, பேசும் நாக்கை உள்முகமாக மடக்கி அமைவனவாகிய சாம்பவி, கேசரி என்னும் முத்திரைகள் அடுத்தடுத்துப் பயிலும்போது, உண்மை ஞானம் பெருகுதற்குக் கருவியாகும்.

தாரம் - நாக்கு. சொருகுதல் - செருகுதல் என்பதன் மருஉ. சகல துரியம், மத்தியா லாவத்தை ஐந்தனுள் ஒன்று. பிறழ்தல் மாறுதல்; ஒன்றன் பின் ஒன்றாகப் பயிலப்படுதல். அவத்தைகள் பற்றிப் பின்பு கூறுவார்.

முத்திரையின் உயர்வு

1872. சாம்பவி நந்திதன் அருட் பார்வையாம்;
ஆம் பவம் இல்லா அருட்பாணி முத்திரை
ஓம் பயில்வு ஓங்கிய உண்மையைக் கேசரி
நாம்பயில் நாதன் மெய்ஞ்ஞான முத்திரையே.

[1]சாம்பவி நந்தி தன்னருட் பார்வையா[2]
[3]மாம்பவ மில்லா [4]வருட்பாணி முத்திரை
யோம்பயில் [5]வோங்கிய [6]வுண்மையைக் கேசரி
நாம்பயி னாதன்மெய்ஞ் ஞானமுத் திரையே. (3)

வேறு பாடம்: 1. சாம்பல (ஓ) I. 2. பார்வை (அ இ ஓ) I. 3. யாம்பல (அ ஆ இ ஓ) I. 4. வருட்பான (ஆ இ) I. 5. லோங்கிய (அ ஓ) I. 6. வுண்மைக் (இ ஓ) I; வுண்மைய (விசு) (தி) (வ); வுண்மையக் (த)

கருத்து: சாம்பவி முத்திரை சிவனது திருக்கண் பார்வையை ஒத்தது. உயிர்களின் பிறப்பை நீக்கும் செய்யும் சிவனது சின்முத்திரையைப் போன்றது, பிரணவத்தில் ஓங்கிய உண்மை அனுபவத்தை நாம் பயில்வதற்குக் கருவியாகிய கேசரி முத்திரை ஆகும். அது மெய்ஞ்ஞான முத்திரையாகும்.

பாணி முத்திரை - கையால் காட்டப்படும் முத்திரை; சின்முத்திரை. பயில்வு - பயிற்சி. நாதன் மெய்ஞ்ஞானம் - பதி ஞானம்.

கொண்டு கூட்டு: நந்தி அருட்பாணி முத்திரை ஓம் பயில்வு ஓங்கிய உண்மையை நாம் பயில் கேசரி நாதன் மெய்ஞ் ஞான முத்திரை.

மோன முத்திரை

1873. தானத்தின்உள்ளே சதாசிவம் ஆயிடும்;
ஞானத்தின்உள்ளே நற்சிவம் ஆதலால்,
ஏனைச் சிவமாம் சொரூபம் மறைந்திட்ட
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே.

தானத்தி னுள்ளே சதாசிவ மாயிடு[1]
ஞானத்தி னுள்ளே நற்சிவ மாதலா
லேனைச் சிவமாஞ் சொரூப மறைந்திட்ட[2]
மோனத்து முத்திரை முத்தாந்த முத்தியே. (4)

வேறு பாடம்: 1. னாயிடு (சங்) 2. மிறந்திட்ட (இ) III மறைத்திட்ட (ஓ) IV.

கருத்து: ஆதாரத்தில் (சகஸ்ராரத்தில்) தோன்றும் இறைக்காட்சி சதாசிவம்; நிராதாரத்தில தோன்றுவதே பரசிவம். ஆதலால் உருவமாகிய மாகேசுவர மூர்த்தங்கள் மறைதற்குச் சாம்பவி, கேசரி என்னும் முத்திரைகள் கருவியாகி மௌனத்தை விளைவிக்கும். அதன்பின் முத்தி வாய்க்கும். அந்த முத்தி சாயுச்சியம் ஆகும்.

சொரூபம் - உருவம். முத்தாந்தம் - பதமுத்திகளைக் கடந்தது; பரமுத்தி.

உண்மையான மவுனம்

1874. வாக்கும் மனமும் - இரண்டும் மவுனமாம்;
வாக்கு மவுனத்தில் வந்தாலும் மூங்கையாம்;
வாக்கும் மனமும் மவுனமாம் சித்தரே
ஆக்கும் அச் சுத்தத்தை யார் அறிவார்களே?

வாக்கு மனமு [1]மிரண்டு மவுனமாம்
வாக்கு மவுனத்து வந்தாலு மூங்கையாம்
வாக்கு மனமு [2]மவுனமாஞ் சித்தரே[3]
[4]யாக்குமச் [5]சுத்தத்தை யாரறி வார்களே. (5)

வேறு பாடம்: 1. மாண்டு (ஓ) IV. 2. மவுனமால் (ஆ இ ஓ) I; மவுனமா சுத்நரே (சங்) 3. சுத்தரே (சைவ); சுத்தமே (த) 4. யாக்கும் (இ) II. 5. சுகத்தை (இ) II.

கருத்து: வாக்கு, மனம் என்ற இரண்டும் அடங்குவதே மவுனம். வாக்கு மட்டும் அடங்கினால், ஊமை. வாக்கு, மனம் - இவற்றை அடக்கிய சித்தர் அடைந்த சுத்தநிலையை யார் அறிய இயலும்?

1875. யோகத்தின் முத்திரை யோரட்ட சித்தியா
மேகத்த ஞானத்த முத்திரை யெண்ணுங்கா
லாகத் தருவேத கேசரி சாம்பவி
யோகத்த கேசரி யோகமுத் திரையே. (அ)

யோக சித்தி

1876. யோகி எண்சித்தி அருளொளி வாதனை;
யோகிதன் புத்தி புருடார்த்த நன்னெறி;
ஆகும் நன் சித்தியும் ஆதார சோதனை;
ஏகமும் கண்டு, ஒன்றில் எய்தி நின்றானே.

யோகியென் சித்தி [1]யருளொளி வாதனை
[2]யோகிதன் புத்தி [3]புருடார்த்த நன்னெறி
[4]யாகுநன் [5]சித்தியு மாதார சோதனை[6]
யேகமுங் கண்டொன்றி [7]லெய்திநின் றானே. (6)

வேறு பாடம்: 1. யருளொலி (விசு) (தி) (வ) 2. போகிதன் (ஒ ஓ) I யோகிகள் (அ) I போகிதண் (தி) 3. புருடாந்த (ஆ) I. 4. யாகுநம் (ஓ) I; யாகுநன் (ஓ) I. 5. சத்திய (விசு) சத்தியு (தீ) (வ) (த) 6. யோசனை (இ) I. 7. யெய்திநின் (ஆ) I; யோகிநின் (இ) I.

கருத்து: யோகி எய்துவதற்கு உரிய எண்சித்தி, அருள்ஒளியில் வாழ்வதாகும். அதன் முன்னர் அவன் தனது அறிவால் புருடார்த் தங்களை அறிந்து வாழ்வான். (அருள் வாழ்வு சிவனால் அளிக்கப் பெறுவது) மேற்கண்ட சித்தி, ஆதார சோதனை மூலம் அடையப் படுவதாகும். அதன் முடிவில் அவன் ஏகமாக உள்ள உண்மைப் பொருளைக்கண்டு, அதில் ஒன்றி நிற்பான்.

வாதனை, வாசனை என்பதன் திரிபு. வாசனை என்பது இடம். அஃது ஆகுபெயராக, வாழ்வை உணர்த்திற்று. யோகி தன் அறிவால் உணர்ந்த வீடுபேறு என்ற நான்காம் புருடார்த்தத்தை அருள் மூலமாகவே எய்த இயலும் என்கிறார். அவனது அறிவு வீடுபேற்றைச் சுட்டிக் காட்டும்; அவ்வளவே. அருளைப் பெறுவதற்கு யோக 'சாதனை வேண்டும். இச்சாதனை ஆறு ஆதாரங்களில் அனுபவம் பெறுவதை உள்ளடக்கியது. ஏகம் - ஒன்றான பரம்பொருள். "ஏகமேவ அத்விதீயம்" என்றது வேதம். "ஒன்றவன் தானே" என்றார் ஆசிரியர்.

புதிய சிந்தை

1877. **துவாதச மார்க்கம் எண் சோடச மார்க்கமாம்**
அவாவறும் ஈரை வகை; அங்கம் ஆறும்
தவா அறு வேதாந்த சித்தாந்தத் தன்மை
நவா அகமோடு உன்னல் நற்சுத்த சைவமே.

துவாதச [1]மார்க்கமெண் சோடச மார்க்கமா
மவாவறு மீரை வகையங்க மாறுந்
தவாவறு வேதாந்த சித்தாந்தத் தன்மை[2]
நவாவக மோடுன்ன னற்சுத்த சைவமே. (7)

வேறு பாடம்: 1. மார்க்கமென் (ஓ) IV; மார்க்க வெண் (ஆ இ) I. 2. நன்மை (அ ஓ) III.

கருத்து: தலையுச்சிக்கு மேல் பன்னிரண்டு அங்குலம் வரை உள்ள துவாதசாந்த வெளியில் அனுபவம் பெறுதலாகிய யோகத்தின் பயனே சோடச பிராசாத கலையின் பயனுமாம். ஞானேந்திரியம் ஐந்தும் கன்மேந்திரியம் ஐந்தும் அவாவிற்கு இடமாதல் நீங்கும்.

ஆறு அங்கங்களை உடைய வேதங்களின் முடி பொருளாகிய வேதாந்ததின் சித்தாந்தம் யாது என்று புதிய 'சிந்தையால் எண்ணுதல் சுத்த சைவ நெறி ஆகும்

3 ஆம் அடி முதற்சீர் 'தவா வரு' என இருக்கலம் எனத் தோன்றுகிறது. ஆயினும் சுவடிகளில் உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றது. தவா - தவாது; நீங்காது. ஈறு கெட்ட எதிர் மறைவினையெச்சம். வேதாந்த சித்தாந்தம் - சைவசித்தாந்தம்; வேதாந்தம் இன்னது என்ற முடிபு. நவ என்பது நவா என நீண்டது. பிராசாத கலையனுபவத்தில் அருள் - அறிவு வாய்த்தலால், அதைப் 'புதிய சிந்தை' என்றார். சீவகரணம் சிவகரணமாக மாறுதலே இப் புதுமை.

சைவ முத்திரை

1878. மோனத்து முத்திரை முத்தர்க்கு முத்திரை
ஞானத்து முத்திரை நாதர்க்கு முத்திரை
தேனிக்கு முத்திரை சித்தாந்த முத்திரை
[1]கானிக்கு முத்திரை கண்ட சமயமே. (8)

வேறு பாடம்: 1. காணிக்கு (த)

கருத்து: மௌன முத்திரை சீவன்முத்தரின் அடையாளம். சின் முத்திரை குரு நாதரின் அடையாளம். இனிமையான அனுபவங் களுக்குக் கருவியாகும் முத்திரைகள் யோக சித்தாந்தத்திற்கு உரியன. இங்ஙனம் சைவம், புகழ்ந்துபாடற்குரிய பல முத்திரை களைப் பெற்றுள்ளது.

கானித்தல் - பாடுதல்; கானம் என்னும் சொல்லடியாகப் பிறந்தது.

மலமாசு நீங்க

1879. தூநெறி [1]கண்ட சுவடு நடுவெழும்
பூநெறி [2]கண்டது பொன்னக மாய்நிற்கு
மேனெறி [3]கண்ட [4]வெண்மதி மேதினி
நீனெறி கண்டுள நின்மல னாமே (9)

வேறு பாடம்: 1. கொண்ட (ஓ) I. 2. கண்ட (அ) I. 3. கண்டது (சண்) 4. மென்மதி (அ) I; வென்பதி (இ) I; வெண்மதில் (ஈ) I.

கருத்து: பிராணனாகிய காற்று சுழுமுனை வழியாக ஏறி, கழுத்தின் அருகில் உள்ள அண்ணாக்கின் வழியாகத் தலைக்கு ஏறும். அங்குச்

சகஸ்ராரத் தாமரை நிமிரப்பெற்று, யோகி சிவத்தைத் தரிசிப்பான். இம்மேல்நிலையனுபவம் வாய்ப்பது சந்திர மண்டலத்திலாகும். இதனைப் பெற்றவன் மலமாக நீங்கப்பெறுவான்.

107. பூரண குகை நெறிச் சமாதி

யோகி இறந்த பின்

1880. வளர்பிறையில் தேவர்தம்பாலின் மன்னி
உளர்-ஒளி பானுவின் உள்ளே ஒடுங்கித்
தளர்வு இல் பிதிர்பதம் தங்கிச் சசியுள்
உளது உறும், யோகி உடல்விடில் தானே.

வளர்பிறை யிற்றேவர் தம்பாலின் மன்னி[1]
யுளரொளி பானுவி னுள்ளே யொடுங்கித்[2]
[3]தளர்வில் [4]பிதிர்பதந் தங்கிச் சசியு
ளுளதுறு மியோகி [5]யுடல்விடிற் றானே. (1)

வேறு பாடம்: 1. மின்னி (ஓ) I. 2. யொடுங்கின் (ஆ) I. 3. தளர்விற் (ஆ இ) I. 4. மதிபதந் (அ) II. 5. யுடல்விட்டாற் (அ ஒ ஓ) III.

கருத்து: யோகி உடம்பை நீத்தால், அந்நிகழ்ச்சி வளர்பிறையில் நடந்ததாயின், தேவர் உலகில் வாழ்ந்து, பிறகு சூரியனின் மண்டலத்தில் ஒடுங்கி, பின் பிதிர் உலகத்தில் இருந்து, நிறைமதி (பௌர்ணமி) நாளில் சிவத்திடம் ஒருங்குவான். (சிவமாவான்).

இது யோகி அடையும் விதேக முத்தி. இவ்வாறு முத்தியடையும் வரை அவரது உடம்பை எரித்தலாகாது; சமாதியில் வைக்க வேண்டும் என்பது இயலின் கருத்து.

உளர் ஒளி - எல்லாப் பொருளின் இடத்தும் வியாபிக்கும் ஒளி. உளது - என்றும் உள்ள சிவம்.

நிரந்தர சமாதி

1881. தானிவை [1]யொக்குஞ் சமாதிகை கூடாது
போன வியோகி புகலிடம் போந்துபி[2]
னானவை தீர நிரந்தர மாயோக
மானவை [3]சேர்வ [4]ரருளின்சார் வாகியே. (2)

வேறு பாடம்: 1. யோகச் (ஈ) I. 2. போந்தபி (ஆ இ ஈ) III. 3. சேர்வா (விசு) (இராம) 4. மருளின்சார் (இராம)

கருத்து: மேற் சொல்லிய பாடலில் குறித்த பக்குவத்தைப் பெறினும், முழுச் சமாதி கைவரப் பெறாத யோகி உடம்பை விட்டால், உரிய இடத்தில் பிறந்து, எஞ்சியுள்ள வினைகளை நுகர்ந்து, அருள்வாழ்வு பெற்று, நிரந்தரயோக சமாதி பெறுவான்.

தான் - அசை. மாயோகம் - நிராதார யோகம். நிரந்தரமாயோகம் - நிரந்தர நிலையைத் தரும் யோகம்.

உயர்சித்திக்கு முன்

1882. தான் இவ்வகையே புவியோர் நெறித்தங்கி
ஆன சிவயோகத்து ஆம் ஆறு ஆம் அவ்விந்துத்
தானத்தில் அந்தச் சிவயோகியாகும் முன்
ஊனத்து ஒண் சித்திவந்து ஓர் காயம் ஆகுமே.

தானிவ் வகையே [1]புவியோர் நெறித்தங்கி[2]
யான சிவயோகத் [3]தாமாறா மவ்விந்துத்
[4]தானத்தி லந்தச் சிவயோகி யாகுமுன்
[5]னூனத்தொண் சித்திவந் தோர்காய மாகுமே. (3)

வேறு பாடம்: 1. புவியே (ஆ இ) I. 2. நெறிதங்கி (சண்) 3. தாமாறும் வரைந்து (ஓ) I. 4. தானதி (ஒ ஓ) I. 5. னூனத்தோர் (ஓ) IV; னூனத்தொன் (அ, இ, ஈ) I.

கருத்து: யோகி உலகினரின் வாழ்க்கை முறையையே பெற்று, பெரிய சிவயோகம் எய்தி, அதன் பயனாக, சுத்தமாயா புவனத்தில் பிறந்து, அங்குச் சிவத்துடன் ஒன்றுவான். அதற்கு இடையே, இப்பூதவுடலிலேயே ஒரு சித்தி பெற்று, நல்லுடம்பாக மாறப் பெறுவான்.

யோகம் முதிரவேண்டும்

1883. [1]சிவயோகி ஞானி சிதைந்துடல் விட்டாற்
[2]றவலோகஞ் [3]சார்ந்துபின் றான்வந்து கூடிச்
சிவயோக ஞானத்தாற் சேர்ந்தவர் நிற்பர்[4]
புவலோகம் [5]போற்றுநற் புண்ணியத் தோரே. (4)

வேறு பாடம்: 1. சிவயோக (ஈ ஓ) III. 2. தவயோகம் (ஆ இ) I. 3. சார்ந்து விண்ணான் (ஈ) I. 4. நிற்பன் (த) 5. போற்றுநர் (சைவ) (த)

கருத்து: சிவயோகியாகிய ஞானி, நிலைதளர்ந்து உடம்பை நீத்தால், தவலோகம் சேர்ந்து, பின்பு மண்ணுலகிற் பிறந்து, சிவயோகம் முதிர்ந்து, அதன் பயனாக எய்தும் சிவஞானத்தால், சிவத்துடன் ஒன்றுவான். அவன் மேல்உலகமாகிய புவர்லோகத்தோரும் போற்றத்தக்க புண்ணியவான் ஆவான்.

மீண்டும் பிறப்பார்

1884. ஊனம் இல் ஞானி, நல்யோகி உடல் விட்டால்
தான் அற மோனச் சமாதியுள் தங்கியே
தான் அவனாகும் பரகாயம் சாராதே
ஊனமில் முத்தராய், மீளார் உணர்வுற்றே.

ஊனமில் ஞானிநல்லி யோகி யுடல்விட்டாற்[1]
[2]றானற மோனச் சமாதியுட் டங்கியே
தானவ னாகும் பரகாயஞ் சாராதே
யூனமின் முத்தராய் மீளா ருணர்வுற்றே[3]. (5)

வேறு பாடம்: 1. யுடல்பட்டாற் (இ) III. 2. றான்றன் (ஓ) I. 3. ருணற்வற்றே (அ) I; னுணர்வுற்றே (த)

கருத்து: குற்றமற்ற ஞானியாகி யோகி, உடம்பை நீத்தால், சீவ போதம் கெடச் சமாதியில் இருந்து சிவமே ஆவதற்கு இடமாவ தாகிய ஓர் உடம்பைப் பெற்றுப் பிறவாமல், முத்தியடையமாட்டார்.

1885. செத்தார் பெறும்பய னாவ தேதெனில்
செத்து நீர் சேர்வது சித்தினைக் கூடிடில்
செத்தா ரிருந்தார் செகத்தில் திரிமலஞ்
செத்தார் சிவமாகி யேசித்தர் தாமே. (அ, ங, ட)

அருட்பேறு

1886. உன்னக் கருஇட்டு, உரவோன் அரன்அருள்
பன்னப், பரனே அருட்குலம் பாலிப்பன்
என்னப் புதல்வற்கு வேண்டி இடு ஞானி
தன் இச்சைக்கு ஈசன் உருச்செய்யும் தானே.

உன்னக் கருவிட் டுரவோ னரனருள்[1]
பன்னப் பரனே யருட்குலம் பாலிப்ப[2]
னென்னப் [3]புதல்வற்கு வேண்டி யிடுஞானி
[4]தன்னிச்சைக் கீச னுருச்செய்யுந் தானே. (6)

வேறு பாடம்: 1. னருளினிற் (ஆ) IV; னருடனிற் (இ) IV. 2. பாரிப்ப (ஆ இ) I. 3. புதல்வர்க்கும் (சண்) 4. யுன்னிச்சைக் (விசு)

கருத்து: தியானத்தில் பீஜமந்திரத்துடன் சிவனது நாமத்தை வைத்துப் பலகாலும் சிந்திக்க, அவன் அருள்வாழ்வு தருவான். அந்த அருளைச் சீடனுக்கு அளிக்கும் குருவின் விருப்பப்படி, சீடனை இறைவன் உருவாக்குவான்.

ஆகாயம் போல் . . .

1887. எங்கும் சிவமாய், அருளா்ம், இதயத்துத்
தங்கும் சிவஞானிக்கு எங்கும் ஆம் தற்பரம்
அங்கங்கு என நின்று, சகம் உண்ட வான் தோய்தல்
இங்கே இறந்து, எங்குமாய் நிற்கும் ஈசனே.

எங்குஞ் சிவமா யருளா மிதயத்துத்
தங்குஞ் [1]சிவஞானிக் கெங்குமாந் தற்பர
மங்கங் [2]கெனநின்று சகமுண்ட வான்றோய்த
லிங்கே யிறந்தெங்கு மாய்நிற்கு மீசனே. (7)

வேறு பாடம்: 1. சிவஞானத் தெங்குமாந் (அ ஆ இ ஈ ஓ) II; கென நின்றகமுண்ட (த)

கருத்து: அருள்வாழ்வு வாழும் சிவஞானிக்கு எங்கும் சிவமே விளங்கும். ஆகாயம் ஏனைய பூதங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது போல், சிவமேயான ஞானி தன்னுள் அனைத்தையும் காண்பான். ஆகாயம் தனக்கென உருவம் உடையதன்று. அது போல, ஞானி தம் அளவில் இறந்தவர். ஆனால் எங்கும் கலந்தவர்.

இது ஞானியின் உணர்ச்சியைக் கூறிற்று.

1888. அந்தமில் ஞானிதன் னாகந் தீயினில்
வெந்திடின் னாடெலாம் வெப்புறத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும்வை யகமே. (ந)

குறிப்பு: இப்பாடல் முதல் 13 பாடல்கள் சமாதிக்கிரியை என்னும் அதிகாரமாக உள்ளன. இவை அனைத்தும் நூற்கருத்துடன் பொருந்தாதவை.

1889. எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடின்
அண்ணல்தன் கோயி லழலிட்ட தாங்கொக்கும்
மண்ணில் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பா ரரசே.

1890. புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணி யனல்கோக்கி னாட்டி லழிவாகு
மண்ணி லழியி லலங்கார பங்கமா
மண்ணுல கெல்லா மயங்குமனல் மண்டியே. (ங, உ)

1891. அந்தமில் ஞானி அருளை அடைந்தக்கா
லந்த வுடறான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரு
மந்தமி லின்ப வருள்பெறு வாரே.

1892. நவமிகு சாணாலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணாகக் கோட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச் சாணாக்கி
பவமறு நற்குகை பத்மா சனமே. (ங, ண)

1893. தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கான முயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்து மிடங்களே (க, ண)

1894. நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம ரோசமு மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யு நேர்மைய தாமே. (க)

1895. பஞ்ச லோகங்க ணவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
முஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன்செய்த நற்சுண்ணம் பொதியலு மாமே. (ந)

1896. நள்குகை நால்வட்டம் படுத்ததண் மேற்சாரக்
கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுந்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்
தொள்ளிய தூப முவந்திடு வீரே. (ஐ, க)

1897. ஓதிடும் வெண்ணீற்றா லுத்தூளங் குப்பாய
மீதினி விட்டா சனத்தினின் மேல்வைத்துப்
போதறு சுண்ணமு நீறும் பொலிவித்து
மீதி லிருத்தி விரித்திடு வீரே.

1898. விரித்தபின் னாற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமிள நீருங்
குருத்தலம் வைத்தோர் குழைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே. (ஐ)

1899. மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே. (க)

1900. ஆதன மீதி லரசு சிவலிங்கம்
போது மிரண்டினி லொன்றைத்தா பித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்
காதலிற் சோடசங் காணுப சாரமே. (க)

108. விந்துற்பனம்

விந்துவின் தோற்றம்

1901. உதயத்தில், விந்துவில் ஓங் குண்டலியும்;
உதயக் குடிலை வயிந்தவம்; ஒன்பான்
விதியின் பிரமாதிகள், மிகுசத்தி,
கதியில் கரணம் கலை, வைகரியே.

[1]உதயத்தில் விந்துவி [2]லோங்குண் டலியு
முதயக் [3]குடிலை [4]வயிந்தவ மொன்பான்
விதியிற் [5]பிரமாதி [6]கண்மிகு சத்தி
கதியிற் கரணங் கலைவை கரியே. (1)

வேறு பாடம்: 1. உதயத்த (இ) III. 2. லோங்குகுண் (ஈ) I; லோமுதற் குண்டலி (இ) II. 3. குடிலில் (அ ஒ ஓ) II. 4. வையிந்த (அ) I. 5. பரமாதி (அ ஈ ஓ) I. 6. தண்மிகு (ஆ) I.

கருத்து: படைப்புக் காலத்தில், விந்துசத்தி, குண்டலி சத்தி ஆகியவை முறையே சிற்சத்தியிடமிருந்தும், சிவத்தினிடமிருந்தும் வெளிப்பட, இவை இரண்டின் செயற்பாட்டால், சுத்தமாயையிலிருந்து, குடிலை (நாதம்) முதலாகிய வயிந்தவங்கள் எனப்படும் ஒன்பது நிலைகளில் உள்ள பிரமன் முதலியோர், அவர்களின் சத்திகள், நிவிருத்தி முதலிய ஐந்து கலைகள், வைகரி முதலிய ஐவகை வாக்குகள் ஆகியவை தோன்றும்.

வயிந்தவம் - விந்து எனப்படும் சுத்த மாயைலிருந்து தோன்றியவை. இவற்றுள் நாதம் என்பது குடிலை. குடிலையை உதயமாகக் (முதலாக) கொண்ட ஒன்பதும் வயிந்தவம் எனப்படும். பிரமாதிகர் எனக் கூட்டுக்.

சத்திகள்: மனோன்மணி, மகேஸ்வரி, உமை,இலக்குமி, சரஸ்வதி.

கலைகள் ஐந்து: நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை.

வாக்கு ஐந்து: பரா, சூக்குமை, மத்திமை, பைசந்தி, வைகரி. படைப்புப் பற்றி ஆசிரியர் முன்பே கூறினாரே எனின், அங்குப் படைப்பு முழுவதையும் கூறினார், இங்கு யோகியின் உடம்பில் மூலாக்கினியால் சுக்கிலம் (விந்து) தீயாகமாறுவது பற்றிக் கூறவந்தவர், அதில் விந்து என்னும் சுத்தமாயையின் தொடர்பைக் கூறுகின்றார்.

இரண்டிலும் ஆன்ம தத்துவம்

1902. செய்திடும் விந்துவின் பேதத்தின் ஐயைந்தும்
செய்திடும் நாத பேதத்திறன் நாலாறும்
செய்திடும் மற்றவை ஈரிரண்டு அற்றன
செய்திடும் ஆறாறு சேர்தத்துவங்களே.

செய்திடும் [1]விந்துவின் [2]பேதத்தி னையைந்துஞ்
செய்திடும் நாதபே தத்திற னாலாறுஞ்
செய்திடு மற்றவை யீரிரண் டற்றன[3]
செய்திடு மாறாறு சேர்தத்து வங்களே. (2)

வேறு பாடம்: 1. விந்துபேதத்திற (விசு) 2. பேதத்திற (ஓ ஓ) II. 3. டற்றென (ஓ) I டொன்று (ஆ, இ) II; டிற்றிறஞ் (விசு) (தி) (வ).

கருத்து: சுத்த மாயையில் ஆன்ம தத்துவங்கள் இருபத்தைந்து. அசுத்த மாயையில் அவை இருபத்து நான்கு. விந்து, பரவிந்து, நாதம், பரநாதம் என்ற நான்கு சிவ தத்துவங்களே சுத்த மாயையில் உள்ளன. இவை 36 தத்துவங்களை எண்ணும் போது வருவன.

அசுத்த மாயையில் உள்ளவை போலச் சுத்த மாயையிலும் 36 தத்துவங்கள் உண்டு.

பரவிந்துவே தாயகம்

1903. வந்திடும் பேதம் எலாம் மன் பரவிந்து;
தந்திடும் மாமாயை; வாகேசி தற்பரை
உந்து குடிலையோடு ஏழுறு குண்டலி
விந்துவில் இந்நான்கும் மேவா விளங்குமே.

வந்திடும் பேத [1]மெலாமன் பரவிந்து[2]
தந்திடு மாமாயை வாகேசி தற்பரை
உந்து [3]குடிலையோ [4]டேமுறு குண்டலி
[5]விந்துவி [6]லிந்நான்கு மேவா விளங்குமே. (3)

வேறு பாடம்: 1. மெலாமன் (அ) I மெல்லாம் (இ) II மேயாம் (ஈ) II. 2. பரவிந்துவும் (ஈ) II. 3. குடிலியோடு (அ) I. 4. டோமுறு (அ ஆ இ ஈ) I டாறு (ஓ) II. 5. விந்துவை யென்னாம (ஆ) II. 6. ணாமமே (இ) II.

கருத்து: தத்துவ வகைகள் எல்லாம் பரவிந்துவில் தோன்றுவன. முதலில் பரவிந்து சுத்த மாயையைச் செயற்படுத்தி, வாகீஸ்வரி, தற்பரை, நாதம், குண்டலிசத்தி ஆகியவற்றைத் தோற்றுவிக்கும்.

மாமாயை என்பதும் விந்து என்பதும் சுத்தமாயை.

மனம் ஒடுங்கும் இடம்

1904. விளங்கு நிவிர்த்தாதி மேவு அகர - ஆதி
வளம்கொள் உகார மகாரத்துள், விந்து
களங்கம் இல் நாத-அந்தம் கண்ணின், உள் நண்ணி
உளம்கொள் மன-ஆதியுள் அந்தமும் ஆமே.

[1]விளங்கு நிவிர்த்தாதி [2]மேவக ராதி
வளங்கொ ளுகார மகாரத்துள் விந்து
களங்கமி னாதாந்தங் கண்ணினுண் ணண்ணி[3]
யுளங்கொண் [4]மனாதியு ளந்தமு மாமே. (4)

வேறு பாடம்: 1. விளங்கு நீவித்தாகி (அ) I; நிவித்தாதி (ஈ ஒ ஓ) I. 2. மேவாதாரதி (ஒ) I. 3. நன்றி (ஒ ஓ) I. 4. மனாதியுண்மந்தமு (ஆ இ) I மனாதியுண்மந்த (த).

கருத்து: நிவிர்த்திகலை முதலிய ஐந்து கலைகள் சுத்த மாயையில் தோன்றும். அக்கலைகளிலிருந்து அ, உ, ம என்ற மூன்று கலைகள் விரிந்து பிரணவம் ஆகும். பிரணவத்தினுள் விந்து, நாதம் என்பவை அடங்கி நின்று விரிவதை யோகத்தின் போது உணர்ந்தால், விந்து தத்துவம் சுத்த மாயையில் தோன்றிய அளவுடன் நில்லாது, அசுத்த மாயைத் தத்துவங்களாகத் தோன்றி, உயிரின் கருவியாகச் செயற்படும் மனம் முதலிய அந்தக் கரணங்களினுள்ளும் தொடர்பு கொண்டு, அவற்றின் அந்தமாக (முடியும் இடமாக) இருப்பதை உணரலாம்.

அதாவது, தியானத்தில் மனம் ஒடுங்கும் போது, உயிருணர்வில் ஒடுங்குவது மட்டும் அன்று; விந்து தத்துவத்திலும் ஒடுங்குதலை யோக சாதனையில் பெறமுடியும். வேறுவகையாகக் கூறினால் யோகத்தில் அசுத்த மாயா கரணங்கள் சுத்த மாயா கரணங்களாகும் நிலை உண்டு. அவ்வகையில், மனம் விந்து தத்துவத்தில் ஒடுங்கும்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என அந்தக் கரணம் நான்கு. பிரணவம் அ, உ, ம, விந்து, நாதம் என்ற கலைகள் என்பதை ஆசிரியர்

'கலைநிலை' என்ற இயலில் கூறினார். அந்த அனுபவத்திற்கு 'ஏரொளிச் சக்கரம்' என்ற இயலில் சக்கரம் அமைத்தார்.

சிவத்தினைப் போல்

1905. அந்தமும் ஆதியும் ஆகிப் பராபரன்
வந்த வியாபி எனல் ஆய அந்நெறி
கந்தம் - அது ஆகிய காரண காரியம்
தந்து, ஐங்கருமமும் தான் செய்யும் வீயமே.

அந்தமு மாதியு [1]மாகிப் பராபரன்
வந்த வியாபி யெனலாய வந்நெறி
கந்தம தாகிய காரண காரியந்
தந்தைங் கருமமுந் [2]தான்செய்யும் வீயமே. (5)

வேறு பாடம்: 1. மாதிப் (அ) I; மாகும் (ஆ இ ஈ) II. 2. தாஞ்செய்யும் (ஆ) I.

கருத்து: சிவபரம்பொருள் உலகிற்கு ஆதியும் அந்தமும் ஆகி, தான் படைத்த உலகில் வியாபியாக நிற்பதுபோல, சுத்தமாயையிலிருந்து விந்து தத்துவத்தைப் படைத்து, அதிலிருந்து ஏனைய. சுத்த மாயா தத்துவங்களையும் புவனங்களையும் படைத்தலால், விந்து அவனைப் போலக் காரணமும் காரியமும் ஆகும்.

இறைவன் ஆதியாதலின் காரணம் ஆகி, வியாபியாக நிற்றலின் காரியமும் ஆவான். கந்தம் - கிழங்கு. வித்தை நோக்கக் கிழங்கு காரியம்; முளையை நோக்க, அது காரணம். ஐந்தொழில் எனக் கூறினும் இங்குக் கருதப்பட்டது படைப்பு மட்டுமே.

அகமும் புறமும் விந்து

1906. வீயம் - அது ஆகிய விந்துவின் சத்தியால்
ஆய அகண்டமும் அண்டமும் பாரிப்பக்,
காய ஐம்பூதமும் காரிய மாயையில்
ஆயிட, விந்து அகம், புறம் ஆமே.

வீயம தாகிய விந்துவின் சத்தியா[1]
[2]லாயவ கண்டமு மண்டமும் பாரிப்பக்
காயவைம் பூதமுங் காரிய மாயையி[3]
[4]லாயிட விந்து வகம்புற மாமே. (6)

வேறு பாடம்: 1. சாதியா (ஓ) II. 2. மாயவ (அ) I. 3. மாயையின் (அ) III. 4. வாயிட (அ) I.

கருத்து: வித்தாகிய விந்துவின் ஆற்றலினால் அகண்டமும். அண்டமும் தாங்கப்பட்டு நிற்க, ஐம்பூதங்களும் அசுத்த மாயையில் தோன்றிட, விந்து காரணமாய் அகத்தேயும், காரியமாய்ப் புறத்தேயும் விளங்கும்.

அகண்டமும் அண்டமும் அசுத்த மாயையில் தோன்றுவன வாயினும், அவை நிற்பது விந்து தத்துவத்தின் ஆற்றலால் என்க.

விந்துவும் நாதமும்

1907. புறம் அகம் எங்கும் புகுந்து ஒளிர் விந்து
நிறம்-அது வெண்மை; நிகழ்நாதம் செம்மை,
உற மகிழ்சத்தி சிவபாதம் ஆயுள்
திறனொடு வீடு அளிக்கும் செயல் கொண்டே.

புறமக மெங்கும் புகுந்தொளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதஞ் செம்மை
[1]யுறமகிழ் சத்தி சிவபாத மாயுட்
டிறனொடு [2]வீடளிக் [3]குஞ்செயல் கொண்டே (7)

வேறு பாடம்: 1. புரமகிழ் (அ) I. 2. நிற்குஞ் (ஓ) II. 3. செய்திடல் (அ) I குஞ்செய் (ஆ) I.

கருத்து: அகத்திலும் புறத்திலும் ஒளிசெய்கின்ற விந்துவின் நிறம் வெண்மை. நாதத்தின் நிறம் செம்மை. விந்துவாய் உள்ள சத்தி, சிவத்துடன் சேர்தலைத் தன் அனுபவத்திற் காணும் யோகிக்கு, அவை அவனிடம் பதிந்து, ஆயுள், வீடு பேறு இரண்டையும் அளிக்கும்.

தாங்கும் சத்தி

1908. கொண்ட இவ் விந்து பரமம் போல் கோது அற
நின்ற படம் கடமாய் நிலைநிற்றலின்,
கண்டு அகல் ஆதியின் காரண காரியத்து
அண்டம் அனைத்துமாய் மாமாயை ஆமே.

கொண்டவிவ் விந்து [1]பரமம்போற் கோதற
நின்ற [2]படங்கட மாய்நிலை நிற்றலிற்
கண்டக லாதியிற் காரண காரியத்
தண்ட மனைத்துமாய் மாமாயை யாமே[3]. (8)

வேறு பாடம்: 1. பிரமம் போற் (ஆ இ) I. 2. படங்குடிலையய் நிலை (இ) II; படங்குடிலாய் (த) 3. யாகுமே (சுவ) V.

கருத்து: விந்து பரசிவத்தைப் போலக் காரணமாயும் காரியமாயும் நிற்கும். நூல் துணியாதல் போலவும் மண் குடமாதல் போலவும் அசுத்த மாயையாகிய மூலத்திலிருந்து பிரபஞ்சம் உண்டாகும். அது போல சுத்தமாயா புவனங்களில் விந்துவிலிருந்து உண்டாகும். இதனை நிமித்த காரணமாக இருந்து செய்பவள் ஆதிசத்தி. விந்து, சுத்தமாயையை நோக்கக் காரியம். சுத்தமாயா புவனங்களை நோக்கக் காரணம். அசுத்தமாயா பிரபஞ்சத்திற்கும் தாங்கும் சக்தி விந்துவே. அவ்வகையில் அதற்கும் விந்துவே காரணம் எனலாம்.

தாமரையில் அன்னம்

1909. அது வித்திலே நின்று அங்கு அண்ணிக்கும் நந்தி
இது வித்திலே உளவாற்றை உணரார்
மது வித்திலே மலர் அன்னம்-அது ஆகிப்
பொது வித்திலே நின்ற புண்ணியன் தானே.

அதுவித்தி லேநின்றங் கண்ணிக்கு நந்தி
யிதுவித்தி லேயுள [1]வாற்றை யுணரார்[2]
மதுவித்தி லேமல [3]ரன்னம தாகிப்
பொதுவித்தி லேநின்ற புண்ணியன் றானே. (9)

வேறு பாடம்: 1. வாறை (சண்) 2. யுணரா (அ இ ஓ) I. 3. னேனம (ஓ) I.

கருத்து: விந்துவாகிய (சுத்தமாயை) அந்த வித்தில் சிவம் கலந்துள்ளதே போலச் சுக்கிலத்திலும் உள்ளான் இவ்வாறு நின்ற தன்மையை மக்கள் உணரார். (ஆயின் யோகி உணர்வான்) தேனும் மகரந்தமும் நிறைந்த தாமரை மலரில் (சகஸ்ராரத் தாமரையில்) வீற்றிருக்கும் அன்னமாகச் சிவன் விளங்குவான்.

அது இது - என்பன அந்த, இந்த என்ற பொருளில் வந்தன. பொது வித்து - தலையுச்சி. அனைவர்க்கும் பொதுவாதலில் உச்சியைப் ‘பொது’ என்றார்.

1910. வித்தினி லன்றி முளையில்லை யம்முளை
வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை
வித்து முளையு முடனல்ல வேறல்ல
அத்தன்மை யாகு மரனெறி காணுமே. (அ, ங)

உணவின் சாரம்

1911. அருந்திய அன்னம் - அவை மூன்று கூறாம்
பொருந்தும் உடல், மனம், போம்மலம் என்ன;
திருந்து முடல்மனமாம் சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம் - அது ஆமே.

அருந்திய [1]வன்ன மவைமூன்று கூறாம்
பொருந்து முடன்மனம் [2]போமல மென்னத்
திருந்து [3]முடன்மன மாங்கூறு சேர்ந்திட்
டிருந்தன முன்னா ளிரதம தாமே[4]. (10)

வேறு பாடம்: 1. வண்ண (ஈ ஒ ஓ) I. 2. போமய (அ) I. 3. முடண்மல (ஈ ஓ) I. 4. தாகுமே (சுவ) V.

கருத்து: உண்ட உணவு உடல், மனம் ஆகியவற்றை வளர்ப்பன எனவும் மலமாகக் கழிவன எனவும் மூன்று கூறுகளாகப் பிரியும். மலம் நீங்க, மற்ற இரண்டு கூறுகளால் சாரம் உண்டாகும். முன்னாள் உண்ட உணவின் சாரத்தால் (அதற்கு ஏற்ப) உடலும் மனமும் வளரும்.

இரதத்தால் ஆகும் என முடிக்க. இரதம் - இரசம் - சாரம்.

உடம்பில் விந்து தோற்றம்

1912. இரத்தம் முதலான ஏழ்தாது மூன்றின்
உரிய தினத்தின் ஒருபுற் பனி போல்
அரிய துளிவிந்து ஆகும் ஏழ் மூன்றின்
மருவிய விந்து வளரும் காயத்தே.

இரத முதலான [1]வேழ்தாது மூன்றி
னுரிய தினத்தி னொருபுற் பனிபோ
லரிய துளிவிந்து வாகுமேழ் மூன்றின்
மருவிய விந்து வளருங்கா யத்தே[2]. (11)

வேறு பாடம்: 1. வேழ்தாதின் (அ) I. 2. யத்திலே (சுவ).

கருத்து: இரதம் முதலிய ஏழு தாதுக்களுள், இரதம், இரத்தம், சுக்கிலம் என்ற மூன்றும் கூடி விந்து ஆகும். அது புல் நுனியில் உள்ள பனித்துளிபோல் இருக்கும். அது ஆணின் உடம்பில் 21 நாட்கள் வரை வளரும்.

விந்தாற்றல்

1913. காயத்திலே மூன்று நாளில் கலந்திட்டுக்
காயத்துடன் மனம் ஆகும் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
மாயத்தே செல்வோர் மனத்தோடு அழியுமே.

காயத்தி [1]லேமூன்று நாளிற் கலந்திட்டுக்
[2]காயத்து டன்மன மாகுங் கலாவிந்து
நேயத்தே நின்றோர்க்கு நீங்கா விடாமையின்
[3]மாயத்தே [4]செல்வோர் மனத்தோ டழியுமே. (12)

வேறு பாடம்: 1. லேழ்மூன்று (த) 2. காயத்துட் டன்மன (சண்) 3. மாயத்தைச் (ஓ) I. 4. செல்வோர்க்கு (இ) I.

கருத்து: இறையன்பு பூண்டோர்க்கு விந்து (இருபத்தொரு நாள் வளர்ந்தபின்) மூன்று நாட்கள் உடம்பில் ஆற்றலாகக் கலந்து இருந்து, மனமண்டலத்தில் கலையாற்றலாக அனுபவப்படும். அவர்களின் விந்துவை வெளிப்படுத்தாமையால், அது ஆற்றலாக மாறி அவரிடம் நீங்காமல் நிற்கும், ஆனால், உலக மாயையில் சிக்குண்டு புலன் வழிச் செல்வோர்க்கு அவ்விந்து, அவர்கள் மனத்தின் எண்ணத்தால் கெட்டு நீங்கும்.

விடாமையின் என்பதற்கு இறையன்பை விடாமையால் என்றும் பொருள் கொள்ளலாம். உடம்பில் உற்பத்தியான விந்து கலா விந்துவாக மாறுவதே, அது சுத்தமாயைத் தன்மை அடைவதைக் காட்டும். இங்குக் கலா என்பது நிவிருத்தி, பிரட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்ற கலைகள். அப்பொழுது உடம்பின் கருவிகளும், மனமும் சுத்த தத்துவமாக மாறுவதை, “காயத்துடன் மனம் ஆகும் கலா விந்து” என்றார். இதனைச் ‘சீவ கரணம் சிவகரணமாதல்” என்பர். இது யோகசாதனை.

மாயத்தே செல்வோர்க்கு மனமும் அழியும் என்பது ஒரு நயம்.

அறிந்தும் கெடுகிறார்

1914. அழிகின்ற விந்து அளவை அறியார்;
கழிகின்ற தன்னை உள்-ஆகக் கலுழ்ந்தோர்,
அழிகின்ற காயத்து அழிந்து அயர்வு உற்றோர்
அழிகின்ற தம்மை அறிந்தொழியாரே.

அழிகின்ற விந்து வளவை யறியார்
கழிகின்ற [1]தன்னையுள் ளாகக் கலுழிந்தோ
ரழிகின்ற காயத் தழிந்தயர் வுற்றோ
ரழிகின்ற [2]தம்மை யறிந்தொழி யாரே. (13)

வேறு பாடம்: 1. தன்னையுட் காக்கலுந் தேரார் (ஓ) IV; தனையுட் காக்கலுமோல் (த) 2. தம்மையுள் (ஆ இ) I; தன்மை (தி).

கருத்து: போகத்தில் நீங்கும் விந்துவின் அளவை அறியாத மக்கள், தம்மால் அறியப் படாது, அவ்விந்துவுடன் நீங்கும் இறைவன், தம் உடம்பில் கலந்து நின்றும், அதை அறியாது வருந்தியவர் ஆவர். அவர்கள் தமது நல்ல உடம்பையும் அழித்துத் தாமும் தளர்ச்சி அடைவார். ஆன்மாவாகிய தாம் ஆற்றல் குன்றிக் கெடுவதை அறிந்து, விந்துவினை வீணாக்குவதை நிறுத்தமாட்டார்.

இறைவன் தமது உடம்பில் கலந்து நின்றாலும் அதை உணராது, உலகத் துன்பங்களில் உழன்று வருந்தியவர் என்க.

109. விந்துச் செயம்

போகசரவோட்டம்

1915. பார்க்கின்ற மாதரைப் பாராது, அகன்று உளே
ஓர்க்கின்றது உள்ளம் உருக்கி, அனல் மூட்டி,
பார்க்கின்ற கண், ஆசை பாழ்பட, மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே.

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றளே[1]
யோர்க்கின்ற [2]துள்ள [3]முருக்கி யனன்மூட்டிப்[4]
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற [5]யோகி சிவயோகி தானே[6]. (1)

வேறு பாடம்: 1. தகன்றுபோய் (விசு) (தி) (வ) 2. வுள்ளத் (அ) I வுள்ள (ஓ) III. 3. முருக (ஓ) III; துருக்கி (அ) I. 4. வழன்மூட்டிப் (ஓ) III.

கருத்து: பார்க்கத்தக்க அழகுடைய பெண்டிரைப் பாராது, விலகி, அகமுகமாக எண்ணுவதாகிய உள்ளத்தைப் பெற்று, இறையன்பினால் உள்ளத்தை உருக்கி, அத்துடன் அமையாது, யோகத்தையும் பயின்று, மூலக்கனலை மூட்டி, ஆசைகள் சிதையுமாறு, கண்பார்வையை நாசியின் அடியில் வைக்கும் யோகி சிவயோகியாவான்.

மூலம் - மூக்கின் அடி; புருவமத்தி. அகமுகப் பார்வையும் இறையன்பும் கொண்டே யோகம் பயில்க என்கிறார் . "மாதரைப் பாராதகன்று" என்பதால் ஐம்பொறிகளையும் அடக்குதல் கூறினார்.

குறிப்பு: இப்பாடல் முதல் 1923 - ஆம் பாடல் வரை ஆ, இ, ஒ - சுவடிகளில் இல்லை.

உடம்பின் நன்மை அழியும்

1916. தானே அருளால் சிவயோகம் தங்காது
தானே அக்காமாதி தங்குவோனும் உட்கும்;
தானே அதிகாரம் தங்கின், சடம் கெடும்;
ஊனே அவற்றுள், உயிர் ஓம்பா மாயுமே.

தானே யருளாற் சிவயோகந் தங்காது
தானேயக் காமாதி தங்குவோ னும்முட்குந்[1]
தானே யதிகாரந் தங்கிற் சடங்கெடு
மூனே [2]யவற்று ளுயிரோம்பா மாயுமே. (2)

வேறு பாடம்: 1. னுமூட்கத் (அ) I; னுமுட்குந் (ஓ) I 2. யவத்துற் (த)

கருத்து: அருள்உதவ, அதனல் சிவயோகத்தைத் தொடர்ந்து பயிலாமல், இடையே காமம், கோபம், இவறன்மை, மையல், செருக்கு, பகைமை என்னும் குணங்களால் தடைப்படுவோன், தன் தவற்றை எண்ணி அஞ்சுவான். இக்குணங்கள் ஒரோவழி அன்றி, அவனிடம் ஆட்சி செலுத்துமாயின், அவனது உடம்பின் நன்மை அழியும். உடம்பு அக்குணங்களின் இடையே சிக்கி உயிரைப் பாதுகாவாமல் அழியும்.

ஓம்பா - ஈறு கெட்ட எதிர் மறைவினையெச்சம். சடம் - மாயை; ஈண்டு, மாயையின் தன்மை. அதாவது விளக்கம் செய்தல். "மாயா தனு

விளக்காம்" என்பது சாத்திரம். அதிகாரம் - அதிகரித்தல்; செல்வாக்குப் பெறுதல்.

புணரும் நாள்

1917. மாயாள் வசத்தே சென்றார் இவர் வேண்டில்
ஓயா இருபக்கத்துள், வளர்பக்கத்துள்
ஏயா எண் நாள் இன்பமேல், பனி; மூன்றிரண்டு
ஆயா அபரத்துள் ஆதிநாள் ஆறு ஆமே.

மாயாள் வசத்தே [1]சென்றா ரிவர்வேண்டி
லோயா விருபக்கத் துள்வளர் பக்கத்து
ளேயாவெண் ணாளின்ப [2]மேற்பனி மூன்றிரண்[3]
டாயா வபரத்து [4]ளாதிநா ளாறாமே. (3)

வேறு பாடம்: 1. சென்றிவர் வேண்டி (விசு) (திரு) (வ); சென்றி வரவேண்டி (சங்); ரிவர்வேண்டில் (த) தருமபுரப்பதிப்புத் தவிர, ஏனையபதிப்புகளிலும் சுவடிகளிலும் முதல் அடியில் 11 எழுத்தே உள. இஃது ஆசிரியரின் யாப்பன்று ஆயினும் உள்ளவாறு பதிப்பிக்கப் பெற்றது. 2. மேற்பன (சுவ) (விசு) பதிப்பின் பாடம் மேற்கொள்ளப் பட்ட து. 3. மூன்றிடை (அ) II. 4. ளாகிநா (ஈ) I.

கருத்து: மயக்கம் செய்யும் மாயையால் இவர் (யோகியர்) பெண்டிர்பால் மனம் வைத்தால், பூர்வம், அபரம் என்னும் இரண்டு பக்கங்களுள், பூர்வ பக்கத்தில் (வளர்பிறை) முதல் எட்டு நாள் பொருந்தாதனவாகும். இன்பம் துன்பமாகும். அடுத்து வரும் ஆறு நாள் போகம் செய்க. அபர பக்கத்தில் (தேய்பிறை) முதல் ஆறுநாள் புணர்க.

பனி - துன்பம். தொழிலாகு பெயர்.

யோகிக்கும் பிறர்க்கும் புணர்ச்சி நாள்

1918. ஆறு, ஐந்து, பன்னொன்றும் அன்றிச் சக மார்க்கம்
வேறு அன்பு வேண்டுவோர் பூவரின் பின்னம் தோடு
ஏறும் இருப்பத்தொரு நாளிடைத் தோங்கும்
ஆறின் மிகுத்து ஓங்கும் அக்காலம் செய்யவே.

ஆறைந்து பன்னொன்று மன்றிச் சகமார்க்கம்
வேறன்பு வேண்டுவோர் பூவரிற் பின்னந்தோ[1]
டேறு மிருபத் தொருநா ளிடைத்தோங்கும்
ஆறின் மிகுத்தோங்கு மக்காலஞ் செய்யவே[2]. (4)

வேறு பாடம்: 1. பின்னைந்தோ (ஈ ஓ) I. 2. செய்தவே (அ) I.

கருத்து: யோகநெறியில் செல்வோர், மகளிர் பூப்பு எய்திய பின்பு, ஐந்து, ஆறு, பதினொன்று ஆகிய நாட்களில் அன்றி மற்ற நாளில் புணர்க. பிற நெறிகளில் செல்வோர், கருப்பாசயத்தின் இதழ் குவிந்துகொண்டே வரும் இருபத்தொருநாட்களுள், முன் ஆறு நாட்களில் புணர்க.

தொடங்கும் என்பது தோங்கும் என மருவியது. காலம் செய்தல் காலம் போற்றல்.

புணர்ச்சி நேரம்

1919. செய்யும் அளவில், திருநாள் முகுத்தமே
எய்யும் கலை, காலம், இந்து பருதிகால்
நையும் இடத்து; ஓர்ந்து, நன்காமநூல் நெறி
செய்க, வலம் இடம் தீர்ந்து விடுகவே.

செய்யு [1]மளவிற் [2]றிருநாண் முகுத்தமே[3]
யெய்யுங் கலைகால [4]மிந்து பருதிகா
னையு [5]மிடத்தோர்ந்து [6]நன்காம நூனெறி
செய்க வலமிடந் தீர்ந்து விடுகவே[7]. (5)

வேறு பாடம்: 1. மளவிலத் (ஈ) I மளவுந் (ஓ) I. 2. றிறநாண் (ஈ) I திருநான் (விசு) (வ) றிருணன் (திரு) 3. முகூர்த்தமே (சைவ) 4. மிந்துப் (அ ஈ) I. 5. மிடந்தேர்ந்து (ஈ) I; மிடத்தோர் (ஓ) I மிடத்தோ டி (விசு) (தி) (வ) 6. னன்காம (விசு) (திரு) (வ) 7. விடுக்கவே (விசு) (திரு) (வ)

கருத்து: மேற்பாட்டில் கூறப்பட்டவாறு, காலம் போற்றும்பொழுது, போகத்துக்கு உரிய நாள், முருத்தம் என அறியும் காலமாவது, மூச்சு சந்திர கலையிலிருந்து மாறிச் சூரிய கலையில் ஓடும் காலமாகும். அதனை ஊன்றி நோக்கி, அக்காலத்தில் காமநூல் நெறிப்படி புணர்க. விந்துவை விடும் பொழுது மூச்சினைச் சுழுமுனையில் செலுத்தியவாறு விடுக.

கால் - மூச்சு. வலம் இடம் தீர்ந்து - வலமும் இடமும் அன்றி நடுநாடியில். இந்து - சந்திரன். பருதி - சூரியன். சந்திர கலை இடகலை. சூரிய கலை - பிங்கலை.

கொண்டு கூட்டு: எய்யும் காலம், இந்துகலை என மாற்றிக் கூட்டுக.

ஆசையில்லாது புணர்க

1920. விடும்; கால் முனைந்து, இந்திரியங்களைப் போல்
நடுங்காது இருப்பான்; முனை ஐந்தும் நண்ணப்
படும் காதல் மாதின்பால் பற்ற அற விட்டுக்
கடுங்கால், கரணம் கருத்துறக் கொண்டே.

[1]விடுங்கான் [2]முனைந்திந் திரியங்க ளைப்போ
னடுங்கா [3]திருப்பான் [4]முனையைந்து நண்ணப்
படுங்காதன் மாதின்பாற் பற்றற விட்டுக்
கடுங்காற் கரணங் கருத்துறக் கொண்டே. (6)

வேறு பாடம்: 1. விடுங்காண் (விசு) (தி) 2. முனைந்தவிந் (அ) I; முளைந்தவிந் (ஈ) I; முளைந்திந் (ஓ) I. 3. திருப்பர் (அ) II; திருப்பானு (விசு) (தி) (வ) 4. துளையைந்து (அ) II; னுனையைந்து (ஓ) I; மையைந்து (விசு) (தி) (வ)

கருத்து: ஐம்புலன்களும் சுவைகாணும் பெண்ணிடம், அறவே பற்றின்றி, தன் ஐம்பொறிகளைப் போலவே மூச்சுக்காற்றும் சலனமின்றி இயங்க, விரைந்து செல்லும் காற்றுப்போலே விரைந்து இயங்கும் மனத்தைத் தன் வயமாக்கி விந்துவை விடுவான்.

புணர்ச்சியில் விந்துவை வெளிப்படுத்தும்போது, இந்த மன நிலையுடன் இருப்பான் என்பது கருத்து. யோகி தோன்றா எழுவாய்.

முனைந்து நடுங்காது - விரைந்தும், பதற்றத்தோடு கூடியும் இயங்காமல் மூச்சுக்காற்று விரைந்து, சலனப்பட்டு இயங்கினால் விந்து விரயமாகும். புலன்கள் சுவை கண்டாலும் பொறிகள் பதற்றம் அடையலாகாது என்பதோர் நயம் காண்க. சிற்றின்ப விருப்பத்தோடு புணரலாகாது என்பது திரண்ட கருத்து.

கொண்டு கூட்டு: இந்திரியங்களைப் போல், கால் முனைந்து நடுங்காது இருப்பான் என்று கூட்டுக. பின்னர், "கருத்துறக் கொண்டு விடும்" எனப் பூட்டுவிற் பொருள்கோள் கொள்க.

அழகை நோக்காமல் அகமுகமாப் பார்

1921. கொண்ட குணனே, நலனே, நற்கோமளப்
பண்டை உருவே, பகர் வாய்ப் பவளமே,
மீண்டு தனமே மிடைய விடும் போதில்,
கண்ட கரணம் உள் செல்லக் கண்டே விடே.

கொண்ட குணனே நலனேநற் கோமளப்[1]
பண்டை யுருவே [2]பகர்வாய்ப் பவளமே
[3]மிண்டு தனமே [4]மிடைய விடும்போதிற்
கண்ட கரணமுட் செல்லக்கண் டேவிடே[5]. (7)

வேறு பாடம்: 1. கோமள (அ) I; கோமளம் (த) 2. பகர்வாய் (சு வ) V. 3. விண்டு (விசு) 4. விரைய (ஓ) II; விடய (அ) I; மிடையே (திரு) 5. டேவிட்டே (ஈ) I.

கருத்து: காதலுக்குரிய பெண்ணின் பண்பு, அழகு, இளமையுடன் கூடிய கட்டுடல், வாயாகிய பவளம், நெருங்கும் மார்பகம் - இவையாவும் கருத்தில் நெருங்க, அந்தக் கரணங்கள் அவற்றில் ஈடுபடாமல் அகமுகமாகச் செல்லச் செய்து, விந்துவை விடுவாயாக.

ஜாதகம் தொடங்குவது எப்போது?

1922. விட்டபின், கர்ப்பவுற்பத்தி விதியிலே
தொட்டு, உறும் காலங்கள் தோன்ற, கருதிய,
கட்டிய வாணாள், சாநாள், குணம், கீழ்மை, சீர்
பட்ட நெறி ஈது - என்று எண்ணியும் பார்க்கவே.

[1]விட்டபின் கர்ப்ப வுற்பத்தி விதியிலே
தொட்டுறுஞ் காலங்க டோன்றக் கருதிய[2]
கட்டிய வாணாள்சா நாள்குணங் கீழ்மைசீர்[3]
பட்ட நெறியீதென் றெண்ணியும் பார்க்கவே. (8)

வேறு பாடம்: 1. விட்டிடிற் (ஓ) III. 2. கருதியே (துடி) 3. கீழ்மை சீர்ப் (துடி)

கருத்து: அங்ஙனம் விந்துவைக் கருவில் சேர்த்த பிறகு, கற்பவுற்பத்தி விதிப்படி, அந்தச் சீவனுக்கு வரையறுத்த வாழ்நாள் இவ்வளவு என்பதும், சாகும் நாள் இன்னது என்பதும், அதன்

நற்குணம், தாழ் குணம், புகழ் இன்னவை என்பதும், விந்து கருவில் பதிந்த நாள், முகூர்த்தம் ஆகியவற்றைக் கொண்டு எண்ணிப்பார்க்க இயலும்

ஒருவனுக்கு ஜாதகம் கணிப்பது, அவன் தாயின் கருவில் புகுந்த காலத்திலிருந்தே என்பதைக் கூறுகிறார்.

வருவது வந்தே தீரும்

1923. பார்த்திட்டு வைத்துப் பரப்பு அற்று, உருப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீங்கியே
சேர்த்து உற்று, இரு திங்கள் சேராது அகலினும்
மூப்புற்றே பின்னாளில் ஆம் எல்லாம் உள்ளவே.

பார்த்திட்டு [1]வைத்துப் [2]பரப்பற் றுருப்பெற்று
வார்ச்செற்ற கொங்கை மடந்தையை நீங்கியே[3]
[4]சேர்த்துற் றிருதிங்கள் [5]சேரா தகலினு
[6]மூப்புற்றே பின்னாளி [7]லாமெல்லா முள்ளவே[8]. (9)

வேறு பாடம்: 1. வையத்துப் (திரு) (விசு) (வ) 2. பரப்பாற் (சங்) 3. நீங்காமல் (அ) II; நீக்கியே (சங்) 4. சேற்றுந்திருந்திங்கள் (அ) I தேசறத்துழற் (ஓ) I. 5. சோராதவரேனும் (ஓ) I; சேரா வகலினு (ஈ) III. 6. மூப்புற்ற (ஈ) III. 7. லெல்லாமா (த) 8. முன்னவே (ஓ) III.

கருத்து: இடமும் காலமும் பார்த்துக் கருவில் பதிக்கப்பெற்று, கருப்பையில் எவ்விதப் பரபரப்பும் இன்றி வளர்ந்து, தாயை நீங்கி உலகில் பிறந்து இரண்டு மாதம்கூட நிரம்பாமல் குழந்தை இறந்தாலும், அது பின்னாளில் வளர்ந்து எய்த வேண்டிய உணர்வுகளை எல்லாம் கருவிலேயே அனுபவிக்கும்.

விந்துவும் சோதியும்

1924. வித்து இடுவோர்க்கு அன்றி மேல் ஓர் விளைவு இல்லை
வித்து இடுவோர்க்கு அன்றி மிக்கு ஓர் அறிவு இல்லை
வித்தினில் வித்தை விது அற உணர்வரேல்
மத்தில் இருந்தது ஓர் மாங்கனியாமே.

வித்திடு வோர்க்கன்றி மேலோர் விளைவில்லை[1]
வித்திடு வேர்க்கன்றி மிக்கோ ரறிவில்லை[2]
வித்தினில் வித்தை [3]விதற வுணர்வரேன்[4]
[5]மத்தி லிருந்ததோர் மாங்கனி யாமே. (10)

வேறு பாடம்: 1. வினையில்லை (ஓ) II. 2. ரழிவில்லை (அ ஓ) I. 3. விதி ரத்துணரேன் (ஒ) I; விதறவுணர்வதொன் (ஒ) I. 4. வுணர்வோர்க்கு (த) 5. மைத்தி (அ ஈ ஒ ஓ) I.

கருத்து: விதைப்பவருக்கே விளைவு கிடைக்கும். (அதுபோல) விந்துவை யோக சாதனையில் கனலாக்குபவர்க்கே ஞானம் கிடைக்கும். உடம்பில் ஊறும் விந்துவுக்கும், தாங்கும் ஆதாரமாகச், சுத்த மாயா தத்துவமான விந்து இருப்பதைச் சலனமின்றி உணர்ந்தால், மாங்கனியும் அதன் மத்தியில் உள்ள கொட்டையும், அக்கொட்டையிலிருந்தே கனி கிடைத்ததை உணர்த்திக் கொண்டிருப்பதைப் போல, உடம்பிற்கு ஆதாரம் ஆகிய விந்து (சுத்தமாயைத் தத்துவமான ஒளி) அவ்வுடம்பிலேயே வெளிப்படும்.

மாங்கனி தோன்றக் காரணம் மாமரத்தின் விதை. அது கொட்டையாக மாம்பழத்தின் மத்தியில் இருக்கிறது. மாம்பழத்தில் மட்டுமே கொட்டை, மத்தைப் போலப் பெரிதாக இருக்கிறது. கொட்டை காரணம், கனி காரியம். அவை உடனாகவே இருப்பது போல, உடம்பில் தோன்றும் விந்து (ஒளி) காரியம். விந்து தத்துவம் காரணம். உடம்பில் தோன்றும் விந்து காரியம். விந்து தத்துவம் காரணம். யோக சாதனையில், உடம்பின் விந்துவே, விந்து தத்துவத்தால் ஒளிமயமாகி உடம்பிலேயே வெளிப்படுகிறது. அப்போது விந்துவும், ஒளியும் உடம்பில் உடன் நிற்கின்றன.

விது - தவறு. குற்றியலுகரம் போற் புணர்ந்தன.

மத்தில் இருந்ததோர் மாங்கனி - மாம்பழத்தின் மத்தியில் ஒரு மத்துப் போலக் கொட்டை உள்ளது. மத்துடன் இருந்த எனப் பொருள் செய்து உருபு மயக்கமாகக் கொள்க. பிறரெல்லாம் எவ்வெவ்வாறோ பொருள் கொண்டு மயங்கினர்.

பிறவிக்கு விதை

1925. கருத்துளில் அக்கரம், ஆவியும், யாவும்;
கருத்துளில் ஈசன் கரு உயிரோடும்;
கருத்து-அது வித்தாக, காரண காரியம்
கருத்து உறுமாறு இவை கற்பனைதானே.

[1]கருத்துளி லக்கர [2]மாவியு மியாவுங்[3]
[4]கருத்துளி லீசன் [5]கருவுயி ரோடுங்
[6]கருத்தது [7]வித்தாகக் காரண காரியங்
[8]க்ருத்துறு மாறிவை கற்பனை தானே[9]. (11)

வேறு பாடம்: 1. கருத்தினி (விசு) (தி) (வ) 2. மாயுவு (ஓ) IV. 3. மாயுங் (இ ஈ) I; மாகுங் (ஆ) II. 4. கருத்தினி (ஓ) III; கருத்துளனீசன் (விசு) (தி) (வ) 5. கருவியுயிரோடுங் (அ) II. 6. கருத்து (இ, ஈ, ஓ) I. 7 . வித்தாய்க் (சங்) 8. கருத்துற (சங்) 9. தாமே (துடி)

கருத்து: உயிர் கருவில் பதியும் போதே, அதன் கருத்தில் கலை, காலம் முதலிய எல்லாம் அமைந்துவிடும். ஈசனும் உடன்இருப்பான். உயிரின் கருத்து, பல பிறவிக்ளாகத் தொடர்ந்து வருவ்து. அக்கருத்தே பிறவிக்கு வித்தாக இருக்க, அதை அறியாமல், வேறு நினைப்பன எல்லாம் மாந்தரின் கற்பனையே.

விந்துவினால் நன்மை

1926. ஒழியாத விந்து உடன்நிற்க நிற்கும்
அழியாப் பிராணன் அதிபலம் சத்தி;
ஒழியாத புத்தி, தவம், செபம், மோனம்
அழியாத சித்தி உண்டாம் விந்து வற்றிலே.

ஒழியாத விந்து வுடனிற்க நிற்கு
மழியாப் [1]பிராண ணதிபலஞ் சத்தி[2]
யொழியாத புத்தி தவஞ்செப மோன[3]
மழியாத சித்தியுண் [4]டாம்விந்து வற்றிலே. (12)

வேறு பாடம்: 1. பிராம (அ) I. 2. சித்தி (அ, ஈ, ஓ) I. 3. யோக (ஆ இ) II. 4. டாம்வித்து விந்திலே (அ) I.

கருத்து: உடம்பை எரிக்காத மூச்சும், மிக்க் வலிமையும், சத்தியின் துணையும் - ஆக இத்துணையும் உடைய விந்து தத்துவம், உடம்பில் சோதியாக அனுபவப்படுமாறு யோகிக்குக் கிடைக்கும். விந்து வற்றினால் (உடம்போடு சக்தியாக ஒன்றுபட்டால்) நிலைத்த புத்தி, தவம், செபம், மௌனம் ஆகியவையும் மரணமில்லாமையும் உண்டாகும்.

விந்துவை எரிக்க

1927. வற்ற அனலைக் கொளுவி, மறித்து எரித்து
உற்ற சுழுனைச் சொருகிச் சுடர் உற்று
முற்றும் மதியத்து அமுதை முறை முறை
சென்று உண்பவரே சிவயோகியாரே.

வற்ற வனலைக் கொளுவி மறித்தெரித்[1]
துற்ற [2]சுழுனைச் சொருகிச் சுடருற்று
முற்று மதியத் தமுதை முறைமுறை
செற்றுண் பவரே சிவயோகி யாரே. (13)

வேறு பாடம்: 1. மறித்தேறி (ஆ இ) I; மறித்தேற்றி (விசு) (திரு) (வ)
2. சுழியனல் (சங்).

கருத்து: மூலக்கனலை மூட்டி, விந்து கீழ்நோக்காது தடுத்து, அதை எரித்துச் சக்தியாக்கி, சுழுமுனை வழியாகச் சகஸ்ராரத்திற்கு ஏற்றி, சோதியைத் தரிசித்து, சந்திர மண்டலத்தின் அமுதை மீண்டும், மீண்டும் சுரப்பித்து உண்பவரே சிவயோகியர் ஆவர்.

வற்ற - ஆசைகள் குறையும்படி. விந்து வறள என உரை கொள்ளுதல் ஆசிரியர் கருத்திற்கு மாறானது. கொளுவி - பொருத்தி; சத்தியைக் கொண்டு பொருத்தி.

விந்துவைப் பேண வரும் நலம்

1928. யோகியும் ஞானியும் உத்தம சித்தனும்
யோகியும் ஞான புரந்தரன் ஆவோனும்
மோகம் உறினும் முறைஅமிர்து உண்போனும்
ஆகிய விந்து அழியாத அண்ணலே.

யோகியு ஞானியு முத்தம சித்தனும்
[1]போகியு [2]ஞான புரந்தர னாவோனு
மோக முறினு [3]முறையமிர் துண்போனு
மாகிய விந்து வழியாத வண்ணலே. (14)

வேறு பாடம்: 1. யோகியு (சங்) 2. ஞானியும் (அ) I. 3. முரையமிர் (அ) I.

கருத்து: யோகி, ஞானி, சித்தன், போகி, ஞானக்காவலன், உடம்பில் முறைப்படி சுரக்கும் அமுதை உண்பவன் - இத்துணைத் தகுதியும்

யாருக்கு உண்டு என்றால், மோகமுற்றாலும் விந்து அழியப் பெறாத பெரியோனுக்கே உண்டு என்க.

"ஆகிய அண்ணல், விந்து அழியாத அண்ணலே" என முடிக்க.

கனலில் அமுதல்

1929. அண்ணல் உடல் ஆகி அவ் வன்ன விந்துவும்
மண் இடை மாய்க்கும் பிராணனாம் விந்துவும்
கண்ணும் கனலிடைக் கட்டிக் கலந்து எரித்து
உண்ணில் அமிர்தாம்; யோகிக்கு அறிவாமே.

அண்ண லுடலாகி [1]யவ்வன்ன விந்துவு
[2]மண்ணிடை மாய்க்கும் பிராணனாம் விந்துவுங்
கண்ணுங் கனலிடைக் கட்டிக் கலந்தெரித்
துண்ணி [3]லமிர்தா மியோகிக் கறிவாமே. (15)

வேறு பாடம்: 1. யவ்வனல் (ஈ) II. 2. மண்ணலுடலாகுமறவிந்துச் சுடரடர் (அ) IV. 3. லமிர்தாகில் (ஓ) III; லமிர்தாகி (சங்)

கருத்து: யோகிக்குக் கருவி கரணம் எல்லாம் சிவ கரணமாகப் பெற்று, சிவனது உடலாக உள்ள விந்துவும், உயிர்ச்சத்தியாகிய தூல விந்துவும் மூலக்கனலில் சேர்த்து எரிக்கப்பட்டு, சோதி அனுபவம் உண்டானால், அமுதம் கிடைக்கும். ஞானம் பெருகும்.

புலனாசை ஒழிய . . .

1930. அறியாது அழிகின்றது ஆதலால். நாளும்
பொறிவாய் அழிந்து புலம்புகின்றார்கள்
அறிவாய் நனவில் அதீதம் புரியச்
செறிவாய் இருந்து சேரவே மாயுமே.

அறியா தழிகின்ற [1]தாதலா னாளும்
[2]பொறிவா யழிந்து புலம்புகின் றார்க
ளறிவாய் நனவி லதீதம் புரியச்
செறிவா [3]யிருந்து சேரவே மாயுமே. (16)

வேறு பாடம்: 1. வாதலா (ஓ) III. 2. பொறியாலழிந்து (ஓ) III. 3. யிருவிந்து (சுவ) II (விசு) பதிப்பில் உள்ள பாடம் மேற்கொள்ளப் பெற்றது.

கருத்து: அறியாமையால் தூலவிந்து வீணாகின்றது. மாந்தர் ஐம்பொறிகளின் வாயிலாகக் கொள்ளும் ஆசையால் வலிமை அழியப்பெற்றுப் புலம்புகிறார்கள். அறிவைப் பெறுவதே நாட்டமாய், விழிப்பு நிலையிலேயே துரியாதீதத்தை (சாக்கிரத்தில் அதீதம்) அனுபவித்தால், தூல விந்து உடம்புடன் ஒன்றி, விந்து மாயை (சுத்த மாயை) யுடன் சேரும். அப்பொழுது பொறியாசை மாயும்.

சோதியிலே தூய்மை பெறலாம்

1931. மாதரை மாயா, அருங்கூற்றம் என்று உன்னக்
காதல தாகிய காமம் கழிந்திடும்;
சாதலும் இல்லை சதகோடி ஆண்டினும்
சோதியின் உள்ளே துரிசு அறும் காலமே.

மாதரை [1]மாயா வருங்கூற்ற மென்றுன்னக்
காதல தாகிய காமங் கழிந்திடுஞ்[2]
சாதலு மில்லை சதகோடி யாண்டினுஞ்
சோதியி னுள்ளே துரிசறுங் காலமே[3]. (17)

வேறு பாடம்: 1. மாய (இ) I. 2. கழித்திடுஞ் (ஈ ஓ) I. 3. காலே (அ) IV.

கருத்து: பெண்டிரை மாயை என்றும், எமன் என்றும் நினைத்தால், அவரிகடம் ஆசை கொள்ளுதல் நீங்கும். தூல விந்து வீணாகாமை யால் மரணம் இல்லை. பற்பல காலம் சிவசோதியுடன் கூடி ஆணவ அழுக்குகள் நீங்கப் பெறலாம்.

மூச்சுடன் வந்து சத்தி

1932. காலம் கடந்தவன்காண் விந்து செற்றவன்;
காலம் கடந்து அழிந்தான் விந்து செற்றவன்;
காலங்களின் விந்து செற்று, உற்ற காரிகை
காலின்கண் வந்த கலப்பு அறியாரே.

காலங் கடந்தவன் காண்விந்து செற்றவன்
காலங் [1]கடந்தழிந் தான்விந்து செற்றவன்
காலங் களின்விந்து செற்றுற்ற காரிகை
காலின்கண் வந்த கலப்பறி யாரே. (18)

வேறு பாடம்: 1. கடந்த வழி விந்து (ஆ இ) II.

கருத்து: தூல விந்துவை அடக்கியவன் காலம் கடந்து வாழ்பவன் ஆவான். விந்துவால் வெல்லப்பட்டவனோ, காலத்தினால் வெல்லப் பட்டு வீழ்வது உறுதி. உரிய காலத்தில் தூல விந்துவை எரித்து, குண்டலி சத்தி அக்கனலோடும் மூச்சுக் காற்றோடும் மேல்நோக்கி ஏற, எய்தும் சிவானுபவத்தை, அவனை ஒத்தவர் அறியார்.

1933. கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காத
னலத்தக வேண்டி னாரி யுதரக்
கலத்தின் மலத்தைத்தன் சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே. (ஊ, ஐ)

1934. மேலா நிலத்தெழு விந்துவு நாதமுங்
கோலா னடத்திக் குறிவழி யேசென்று
பாலா மமிர்துண்டு பற்றறப் பற்றினால்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே. (ஆ, க)

1935. விந்து விளைவும் விளைவின் பயன்முற்று
மந்த வழிவு மடக்கத்தி லாக்கமு
நந்திய நாதமு நாதத்தாற் பேதமுந்
தந்துணர் வோர்க்குச் சயமாகும் விந்துவே. (ஆ, ண)

1936. விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய வங்கியி னாலே நயந்தெரித்
தந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே. (அ)

சிவ யோகம்

1937. அமுதச்சசிவிந்து ஆம் விந்து மாள
அமுதப் புனல் ஓடி, அங்கியின் மாள
அமுதச் சிவயோகம் ஆதலால், சித்தி
அமுதப் பிலாவனம் ஆங்கு உறும் யோகிக்கே.

அமுதச் [1]சசிவிந்து வாம்விந்து மாள
வமுதப் [2]புனலோட வங்கியின் மாள
வமுதச் [3]சிவயோக மாதலாற் சித்தி
யமுதப் [4]பிலாவன மாங்குறும் யோகிக்கே. (19)

வேறு பாடம்: 1. சிவ விந்து (ஈ) III. 2. புனலோடி (ஓ) IV. 3. சிவபோக (சங்) 4. பலாவன (விசு)

கருத்து: குளிர்ந்த சந்திர மண்டலத்தில் சுத்தமாயா தத்துவமாகத் தோன்றும் விந்துவில் (பேரொளியில்) தூல விந்து ஒடுங்கும். அங்கு அமுதம் சுரந்து, உடலெங்கும் பரவும். உயிருணர்வு சிவாக்கினியில் ஒன்றி நிற்பதாகிய யோகம் உண்டாகும். இன்பமயமான சிவபோகம் கிடைக்கும். அந்தப் போகம் அமுத வெள்ளமே ஆகும்.

ஆம் விந்து - உடம்பில் உண்டாகும் தூல விந்து. பிலாவனம் - தடாகத்தில் மூழ்குவோனுக்கு மயிர்க்கால் தோறும் குளிர்ச்சி ஏறுதல் போன்ற செயல்.

போகமே யோகம்

1938. யோகம் அவ்விந்து ஒழியாவகை உணர்ந்து,
ஆகம் இரண்டும் கலந்தாலும் ஆங்கு உறு
போகம் சிவயோகம்; போகி நற்போகமாம்;
மோகம் கெட முயங்கார் மூடர் மாதர்க்கே.

[1]யோகமவ் விந்து வொழியா வகையுணர்ந்[2]
தாக மிரண்டுங் கலந்தாலு மாங்குறு[3]
போகஞ் [4]சிவயோகம் போகிநற் போகமா
மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே. (20)

வேறு பாடம்: 1. யோகமாம் (ஓ) I. 2. வகைபுணர்ந் (அ ஆ இ ஒ) I. 3. மாங்கிறாய் (ஒ ஓ) I; மாங்கறாப் (ஆ இ) I; மாங்கிறாப் (சங்) 4. சிவபோகம் (அ ஒ ஓ) I.

கருத்து: யோக சாதனையால், விந்து நீங்காத வழியை அறிந்து, மாதரோடு உடம்பு கலக்கப்பெற்றாலும், அங்கே விளையும் போகம் போகம் அன்று; சிவயோகம். போகி நுகரும் நல்ல போகமும் ஆகும். ஆனால் மூடர், மாதர்க்கு மோகம் தீரும்படி புணர மாட்டார்.

காதல் கொள்ளார்

1939. மாத ரிடத்தே செலுத்தினு மவ்விந்து
காதலி னால்விடார் யோகங் கலந்தவர்
மாத ருயிராசை கைக்கொண்டே வாடுவர்
காதலர் போன்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே. (21)

கருத்து: யோகத்தில் சிவத்துடன் ஒன்றிநிற்கப் பெற்றவர் (ஒரு நோக்கத்திற்காக) மாதரிடம் போகம் செய்து, விந்துவைச் செலுத்தினாலும், அதனைக் காதலோடு செலுத்தமாட்டார். மாதரே அவரிடம் காதலர் போல மிக்க ஆசைகொண்டு வாடுவர்.

தூலவிந்துவே ஒளியாகும்

1940. சாற்றிய விந்து சயம் ஆகும்; சத்தியாம்;
ஏற்றிய மூலத்தழலை எழ மூட்டி
நால்திசை ஓடா நடுநாடி நாதத்தோடு
ஆற்றி அமுதம் அருந்த விந்து ஆகுமே.

சாற்றிய விந்து சயமாகும் சத்தியா
[1]மேற்றிய மூலத் தழலை யெழமூட்டி
நாற்றிசை [2]யோடா நடுநாடி நாதத்தோ
டாற்றி யமுத மருந்தவிந் தாகுமே[3]. (22)

வேறு பாடம்: 1. லேற்றிய (ஓ) IV. 2. யோட (சங்) 3. தாருமே (ஒ ஓ) I தாமே (சைவ).

கருத்து: தூல விந்துவை வெல்லலாம். அதுவே ஆற்றலாக மாறும். எங்ஙனம் எனின், சுழுமுனை வழியே சகஸ்ராரத்திற்கு ஏற்றுவதற்காக, மூலாதாரத்தில் தீயை மூட்டி, நாலா பக்கமும் அது சிதறாமல் சுழுமுனையில் ஏற்றி, அங்கு நாதத்தோடு சேர்ந்து நிற்கச்செய்து, அமுதினை உண்ண, சுத்தமாயா தத்துவமான விந்து நம் உடம்பில் இடம்பெறும் (ஒளியைத் தரிசிக்கலாம்).

மூலத்தில் ஒடுங்கும்

1941. விந்துவும் நாதமும் மேவ, கனல் மூள,
வந்த அனல் மயிர்க்கால்தொறும் மன்னிட,
சிந்தனை மாற, சிவம் அகம் ஆகவே,
விந்துவும் மாளும் மெய்க்காயத்தில் வித்திலே.

விந்துவு நாதமு மேவக் கனன்மூள[1]
வந்த வனன்மயிர்க் காறொறு மன்னிடச்
சிந்தனை [2]மாறச் [3]சிவமக மாகவே
விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே. (23)

வேறு பாடம்: 1. கனன் மூல (ஈ) I; கனன்மூழ்க (ஆ) I. 2. மாற்றிச் (அ இ) II. 3. சிவயோக (ஈ) I.

கருத்து: தலையுச்சியில் விந்துவும் நாதமும் பொருந்துமாறு மூலக்கனல் மூண்டு எரியும். அதன் வெப்பம் உடல் முழுதும் பரவும். சிந்தனை உலகியலை விட்டுச் சிவத்தினிடமாக மாறும். சிவோகம் பாவனை ஏற்படும். உடம்புக்கும் உலகுக்கும் ஆதாரமாயுள்ள விந்துதத்துவத்தில் தூல விந்து ஒடுங்கும்.

மேல் விளைவு

1942. வித்துக் குற்று உண்பான் விளைவு அறியாதவன்;
வித்துக் குற்று உண்ணாமல், வித்துச் சுட்டு உண்பவன்
வித்துக் குற்று உண்பானில் வேறு அலன்; ஈற்றவன்
வித்துக் குற்று உண்ணாமல், வித்து வித்தான் அன்றே?

வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றுண்ணாமல் வித்துச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறல னீற்றவன்[1]
வித்துக்குற் றுண்ணாமல் [2]வித்துவித் தானன்றே[3]. (24)

வேறு பாடம்: 1. னீறலன் (அ ஓ) III; னீற்றன் (ஓ) I; நீத்தன் (ஆ) I; நீத்தவன் (இ) I; னீற்றலன் (ஈ) I. 2. விரித்துவித் (ஆ) I; வித்து விற்றானன்றே (த) 3. தானதே (ஓ) II.

கருத்து: விதைக்கு வைத்த தானியத்தைக் குற்றி உண்பவன் மேல் விளைவை அறியாதவன் ஆகிறான். அதை வறுத்து உண்பவனும் அப்படியே. இவ்விருவரும் அல்லாத யோகி விதையை வயலில் விதைக்கின்றான்.

உவமையால் குறித்த பொருள்: வித்து - தூல விந்து. வித்தை வித்தல் - யோகசாதனையில் சுத்தமாயா விந்துவை அடையத் தூலவிந்துவைப் பயன்படுத்துதல். இது பிறிது மொழிதல் அணி.

வித்துச் சுட்டு உண்பவன் - யோகத்தை உலகியலுக்குப் பயன் படுத்துபவன்.

ஒடுங்கும் இடம் சோதி

1943. அன்னத்தில் விந்து அடங்கும்படி கண்டு,
மன்ன, பிராணனாம் விந்து மறித்திட்டு
மின் ஒத்த விந்து - நாதாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாயும் காயத்திலே.

அன்னத்தில் விந்து [1]வடங்கும் படிகண்டு
மன்னப் பிராணனாம் விந்து மறித்திட்டு
மின்னொத்த விந்துநா தாந்தத்து விட்டிட
வன்னத் திருவிந்து மாயுங்கா யத்திலே. (25)

வேறு பாடம்: 1. மடங்கும் (அ) I; வடக்கும் (ஆ) I.

கருத்து: அன்னமய கோசம் ஆகிய உடம்பில் விந்து ஒன்றும் முறையை அறிந்து, அதைக் கீழ்நோக்காதபடி தடுத்து, மூச்சுக்காற்றால் மேலேற்றி, விந்து, நாதம் என்பவை (சுத்த மாயா தத்துவங்கள்) அனுபவமாகும் இடமான சகஸ்ராரத்தில் சேரும்படி செய்தால், ஆற்றலான அவ்விந்து, சுத்த மாயா விந்துவுடன் (சோதியுடன்) சேரும்; அதில் ஒடுங்கும்.

விந்து நாதாந்தம் - விந்து, நாதங்கள் உணரப்படும் இடம்; சகஸ்ராரம் விந்து ஆற்றலாக (கனலாக) மாறுதலின் "வன்னச் திருவிந்து" என்றார். காயத்தில் - உடம்பின் இடமாக நின்று. மாய்தல் - சுத்தமாயா விந்துவுடன் இணைதல்.

பொன்னுடற்பேறு

1944. அன்னம், பிராணன் என்று ஆர்க்கும் இரு விந்து;
தன்னை அறிந்து உண்டு சாதிக்க வல்லார்க்குச்
சொன்னமாம் உருத்தோன்றும்; எண் சித்தியாம்;
அன்னவர் எல்லாம் அழிவற நின்றதே.

அன்னம் [1]பிராணனென் றார்க்கு மிருவிந்து
தன்னை யறிந்துண்டு சாதிக்க வல்லார்க்குச்
சொன்ன மாமுருத் தோன்றுமெண் சித்தியா
மன்னவ ரெல்லா மழிவற நின்றதே. (26)

வேறு பாடம்: 1. அன்னப் பிராண னாம் (விசு).

கருத்து: உணவால் அடையும் விந்து (தூல விந்து), மூச்சால் அடையும் விந்து (சுத்தமாயா விந்து) என, யாவரும் அடையத்தக்க ஆற்றல் இரண்டு. இத்தன்மையை அறிந்து, இவ்விரண்டாலும் பயன்கொள்பவர்க்குப் பொன்னுடல் வாய்க்கும். அட்டமா சத்தி கைகூடும். அவர் அழியாமல் வாழ்வர்.

அருட்சோதி அனுபவம்

1945. நின்ற சிகாரம் நினைக்கும் பிராணனா,
ஒன்றும் மகாரம் ஒரு மூன்றோடு, ஒன்றுஅவை
சென்று, பராசத்தி விந்து செயந்தன்னை
ஒன்ற, உரைக்க உபதேசம் தானே.

நின்ற சிகார நினைக்கும் பிராணனா
[1]வொன்று மகார மொருமூன்றோ டொன்றவை
சென்று பராசத்தி விந்து செயந்தன்னை
யொன்ற [2]வுரைக்க வுபதேசந் தானே. (27)

வேறு பாடம்: 1. மொன்று (ஓ) I; யொன்று (அ ஆ ஓ) III. 2. வுரைத்த (ஓ) I.

கருத்து: திருவைந்தெழுத்தில் சிகாரம் சிவத்தைக் குறிப்பது. யோகிக்குத் திருவைந்தெழுத்துத் தியானத்தில் அவ்வெழுத்தே உயிராற்றலாக நிற்கும். உயிராற்றலே மூலக்கனல். அது சுழுமுனை வழியாக மேலேறிக், கண்களில் ஒளியாக வெளிப்படும். பிறகு புருவ மத்தியில் உயிருணர்வுடன் சேர்ந்து பராசத்தியின் அருளுடன் இணைந்து அருட்சோதியாக உணரப்படும். அதனை வயநம என்ற எழுத்துக்கள் குறிக்கும். அந்நிலையில் விந்து வெல்லப்படும். இந்த அனுபவம் திருவைந்தெழுத்து உபதேசத்தின் பயன்.

"ஒன்றும் மகாரம் ஒரு மூன்றோடு" என்பது 'வயநம' என்னும் எழுத்துக்களைக் குறிக்கும். வ - பராசத்தி. ய - ஆன்மா. ந - திரோதான சத்தி. ம - மலசத்தி. "ஒன்றும் மகாரம்" என்பது தன் ஆற்றல் குன்றும் மலசத்தி. சிவத்தின் அருளால் மலசத்தி ஆற்றல் குன்றிச் சிவமேயாகி நிற்றலை முன்பு "மகார நடுவே" என்ற பாடலில் (766) கூறினார்.

ஒன்றவை - ஒன்றிய அவை. இறந்தகாலம் தொக்க வினைத்தொகை. மலசத்தி ஒடுங்க, திரோதான சத்தி அருட்சத்தியாக, அச்சத்தியில் ஆன்மா ஒன்றிநிற்கும். அருட் சத்தியே சுத்த மாயா விந்துவாகக் காட்சி தரும். சிவம் நாதமாக அனுபவப்படும். இதனை "விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடில்" என்ற பாடலில் (508) கூறினார்.

குருவே அனுபவம்

1946. தானே உபதேசம், தானல்லது ஒன்று இல்லை
வானே உயர்விந்து, வந்த பதினாலு,
மான் நேர் அடங்க, அதன் பின்பு புத்தியும்,
தானே சிவகதித் தன்மையன் ஆமே.

தானே யுபதேசந் [1]தானல்ல தொன்றில்லை
[2]வானே [3]யுயர் விந்து வந்த பதினாலு
மானே ரடங்க வதன்பின்பு புத்தியுந்
தானே [4]சிவகதித் [5]தன்மைய னாமே. (28)

வேறு பாடம்: 1. தானல்லா (ஆ இ) III. 2. ஆனே (சங்) 3. யுயிர்விந்து (அ) I. 4. சிவகதி (சைவ) 5. தன்மையு (ஓ) III.

கருத்து: உபதேசக் கிரமமாக வரும் திருவைந்தெழுத்தே சிவானுபவத்தைத் தரும். அதில் மகர கலையாகச் சிவமும், விந்துவும், பிற 14 கலைகளும் ஆகச் சந்திரகலை பதினாறும், பிரகிருதி தத்துவமும் ஒடுங்கும். அதன்பின் ஆன்மாவின் தற்போதமும் ஒடுங்கும். ஆன்மாவுக்குச் சிவகதியாகச் சிவமே விளங்கும். ஆகவே தானே உபதேசம்; தானே அனுபவம் என்க.

பிரணவத்தில் உள்ள மகாரம் சிவமே என்பதை 'அகாரம் உயிரே' என்ற பாடலிற் (810) கூறினார். சந்திர கலைகளைப் பற்றிச் 'சந்திர யோகம்' என்னும் அதிகாரத்தில் காண்க.

எப்போது 'சிவம் ஆகும்'?

1947. விந்துவும் நாதமும் விளைய, விளைந்தது
வந்த இப் பல்லுயிர், மன் உயிருக்கு எலாம்;
அந்தமும் ஆதியும் ஆம் மந்திரங்களும்;
விந்து அடங்க விளையும் சிவோகமே.

[1]விந்துவு நாதமும் [2]விளைய விளைந்தது
[3]வந்தவிப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலா
மந்தமு மாதியு மாமந்தி ரங்களும்
விந்து வடங்க விளையும் சிவோகமே[4]. (29)

வேறு பாடம்: 1. விந்துவுணர்தம் (த) 2. விழைவு (ஓ) I. 3. வந்தவப் (ஆ) I. 4. சிவயோகமே (ஒ ஓ) I.

கருத்து: உலகில் உள்ள சராசரங்களுக்கெல்லாம், விந்து நாதங்களின் ஆதாரத்தில் உள்ள அசுத்த மாயையிடமிருந்து உடம்பு தோன்றியது. அவற்றுக்கும் மந்திரங்களுக்கும் விந்துவே ஆதியும் அந்தமும் ஆகும். ஆகவே ஆன்ம வுணர்வு விந்துவில் அடங்கினால் 'சிவமாதல்' என்ற அனுபவம் அதற்கு ஏற்படும்.

"மன்னுயிர்க்கெல்லாம் தோற்றம் விளைந்தது" என ஒரு சொல் வருவிக்க.

விந்து சோதி தோன்றினால்

1948. வறுக்கின்ற வாறும், மனத்து உலா வெற்றி
நிறுக்கின்ற வாறும், அந்நீள்வரை ஒட்டில்
பொறிக்கின்ற வாறும், அப்பொல்லா வினையை
அறுக்கின்ற நாள் வரும் அத்திப் பழமே.

வறுக்கின்ற வாறு [1]மனத்துலா வெற்றி
நிறுக்கின்ற வாறுமந் நீள்வரை யொட்டிற்[2]
பொறிக்கின்ற வாறுமப் பொல்லா வினையை
யறுக்கின்ற நாள்வரு மத்திப் பழமே (30)

வேறு பாடம். 1. மனத்தலா (ஓ) I; மனத்துளா (விசு) 2. யெட்டிற் (ஓ) I; யொட்டிப் (விசு) (திரு) (வ).

கருத்து: தூல விந்துவை ஒடுங்கச் செய்வது யாது? மனத்தினை வெற்றிகொள்ளும் வகை யாது? சகஸ்ராரத்தில் விந்து நாதங்களின் சேர்க்கையில் உயிருணர்வைப் பதிக்கும் வகை யாது? நம் பொல்லாத வினைகளைப் போக்கும் நாளில், யோக சாதனையில் வாய்க்கும் விந்து சோதியே ஆகும்.

அத்தீப் பழம் - என்பது விகார மாயிற்று. தீப்பழம் போன்ற விந்து என்க.

குறிப்பு. இதனையடுத்துச் சுவடிகளிலும் பதிப்புகளிலும் உள்ள "விந்து வுநாதமும்" என்ற பாடல் "திருவம்பலச் சக்கர" வியலில் வந்தது. எனவே இங்கு விடப்படுகிறது.

சூக்கும நாதம்

1949. மனத்தொடு சத்து, மன் அஞ்சு ஏவி, அன்ன
இனத்து எழுவார்கள் இசைந்தன நாடி;
மனத்தில் எழுகின்ற வாக்கு வசனம்
கனத்த இரதம் அக்காமத்தை நாடிலே.

மனத்தொடு [1]சத்து [2]மனஞ்சேவி யன்ன
வினத்தெழு வார்க ளிசைந்தன நாடி
மனத்தி லெழுகின்ற வாக்கு வசனங்
கனத்த விரதமக் காமத்தை நாடிலே. (31)

வேறு பாடம்: 1. சத்தி (ஓ) I. 2. மனஞ்செவியென்ன (விசு) (திரு) (வ)

கருத்து: உயிருணர்வு விந்து (சோதி) வில் இயைந்து நிற்க, மனம் அவ்வுணர்வில் ஒன்றி நின்றால், ஐம்புலன்களை ஆட்சி கொண்டு, விந்துவின் இனமாகிய, சூக்கும நாதத்தை (பிரணவம்) உணர்வர். (உட்புலனால் கேட்பர்) ஆனால் மனம் காமத்தை விரும்பினால் அதில் தோன்றும் சூக்கும வாக்கும், அதன் வெளிப்பாடாக வெளியே புலப்படும் ஒலியுடைய பேச்சும் தூல நாதமாகவே அமையும். புலனின்பப் பொருளை விரும்புவோர் தூல நாதத்தைத் தமது செவியால் கேட்பதே அன்றி, நுண்ணிய நாதமாகிய பிரணவத்தைத் தம்முள்ளே கேட்கப் பெறார்.

"அஞ்சு அன்ன இனம்" எனக் கொண்டு, வெளிப்புலன்கள் ஐந்திற்கும் இணையான உட்புலன் ஐந்து எனக் கொள்ளலுமாம். இதனைக் குமர குருபரர், "அடங்கா ஐம்புலன் அடங்கினர்க்கு அம்ம ஒடுங்கா ஐம்புலன் உளத்தினும் உளவே" என்பர். (பண்டார மும்மணிக்கோவை, 26)

சத்து - விந்து. மனம், பிராணன் (மூச்சுக் காற்று) - இரண்டும் தொடர்புடையன வாதலின், பிராணனால் மூலக் கனலை எழுப்பி, தூல விந்துவை எரித்து, விந்து (சுத்தமாயை) அடையப்படுதலை "மனத்தொடு சத்து இசைந்தன" என்றார்.

கொண்டு கூட்டு: மனத்தொடு சத்து இசைந்தன நாடி மன் அஞ்சு ஏவி, அன்ன இனத்தெழுவார்கள் எனக் கூட்டுக.

நாதம் உறையும் இடம்

1950. சத்தமும், சத்தமனமும், மனக்கருத்து
ஒத்து அறிகின்ற இடமும் அறிகிலர்;
மெய்த்து அறிகின்ற இடம் அறிவானவர்க்கு
அத்தன் இருப்பிடம் அவ்விடந்தானே.

சத்தமுந் சத்த மனமு மனக்கருத்
தொத்தறி கின்ற விடமு மறிகிலர்
மெய்த்தறி கின்ற விடமறி வானவர்க்
கத்த னிருப்பிட மவ்விடந் தானே. (32)

வேறு பாடம்: 1. மொய்த்தறி (ஆ இ) I. 2. வாளர்க்கு (அ ஓ ஓ) II.

கருத்து: நாதமும், அதை அறியப் புகுந்து, அதுவே ஆகின்ற உயிருணர்வும், அவ்வாறு அத்துவிதமாய் ஒன்றி நின்று நாதத்தை அறியும் புருவமத்தி ஆகிய இடமும் மாந்தர் அறியார். அவ்விடத்தை அறிபவர்க்குச் சிவன் அங்கே உறைகின்றான். ஏன்? சிவன் நாதமே ஆதலின்.

மனம் - இங்கு ஆன்மா. மனக்கருத்து - உயிருணர்வு.

உடலில் ஐம்பூதம்

1951. உரம் அடி மேதினி; உந்தியில் அப்பாம்;
விரவிய தன் முலை மேலைக்கீழ் அங்கி;
கருமுலை மீமிசை, கைக்கீழில் காற்றாம்;
விரவிய கந்தர மேல்வெளி ஆமே.

[1]உரமடி மேதினி யுந்தியி லப்பாம்
விரவிய [2]தன்முலை [3]மேலைக்கீ ழங்கி
கருமுலை மீமிசை கைக்கீழிற் காற்றாம்[4]
விரவிய [5]கந்தர மேல்வெளி யாமே. (33)

வேறு பாடம்: 1. உரவடி (த) 2. தண்முலை (ஓ ஓ) I; நன்முலை (த) 3. மேவியக் (ஓ) IV. 4. காறாம் (சங்); காலாம் (சைவ). 5. வந்தர (சுவ) பதிப்புகளின் பாடம் கொள்ளப்பட்டது.

கருத்து: உடம்பில் இடுப்பின் கீழேயுள்ள வலிய பகுதி நிலம்; தொப்பூள் நீர். மார்பிலிருந்து கீழ்ப்பகுதி தீ. கழுத்திலிருந்து மார்பு வரை காற்று. கழுத்தின் மேலே உள்ள பகுதி ஆகாயம்.

கந்தரம் - கழுத்து.

110. ஆதித்தன் நிலை

ஒளி அளிப்பவன் சிவன்

1952. செஞ்சுடரோன் முதலாகிய தேவர்கள்
மஞ்சு உடை மேரு வலம் வரு காரணம்,
எம் சுடர், ஈசன், இறைவன் இணையடி
தம் சுடராக, வணங்கும் தவமே.

'செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கண்
மஞ்சுடை மேரு வலம்வரு காரண
மெஞ்சுட ரீச னிறைவ னிணையடி
தஞ்சுட ராக வணங்குந் தவமே. (1)

வேறு பாடம்: 1. செஞ்சடையோன் (ஈ) II.

கருத்து: சூரியன் முதலிய தேவர்கள் மேரு மலையை நாளும் வலம் வருவதற்குக் காரணம், கயிலையில் வீற்றிருக்கும், எமது சோதி வடிவாகிய சிவபெருமானின் இணையடிகளை வணங்கி, அவனால் தமக்கு ஒளி அளிக்கப்பெறவேண்டும் என்பதே.

பன்னிரு சூரியரும் சிவபெருமானாலே ஒளி வழங்கப் பெறுகின்றனர் என்பது.

குறிப்பு: இப்பாடல் ஆ, இ - சுவடிகளில் இல்லை. இவ்வியல் முதல் 5 இயல்கட்குப் பெயரிடுவதில் சுவடிகள் தம்முள் வேறுபடுகின்றன. சுவடிகளின் பெரும்பான்மை, பழைமை, பாடற்கருத்து - இவற்றை அடிப்படையாக வைத்து, இப்பதிப்பில், இயல்களின் பெயர்கள் சுவடிகளிலிருந்து தேர்ந்தெடுத்து மேற்கொள்ளப்படுகின்றன.

ஆதி மூர்த்தி

1953. பகலவன், மாலவன், பல்லுயிர்க் கெல்லாம்
புகல் - அவனாய் நின்ற புண்ணிய நாதன்
இகலவன், ஏழு உலகும் உற ஓங்கும்
பகலவன், பல்லுயிர்க்கு ஆதியும் ஆமே.

[1]பகலவன் மாலவன் பல்லுயிர்க் கெல்லாம்
புகலவ னாய்நின்ற புண்ணிய நாத
[2]னிகலவன் னேழுல கும்முற வோங்கும்
பகலவன் பல்லுயிர்க் காதியு மாமே. (2)

வேறு பாடம்: 1. அகலவன் (சங்) 2. னிகலற (ஓ) IV.

கருத்து: சூரியனே திருமாலும் சிவனும் ஆவான். இருளோடு மாறுபட்டு அதை ஓட்டுபவன். தீமையை எரித்து அழிப்பவன். உயிர்களுக்கு ஆதியும் அவனே.

சிவபெருமான் சூரியனிடம் வைத்த சத்தியை வைத்து இவ்வாறு கூறினார்.

அன்பு வேண்டும்

1954. ஆதித்தன் அன்பினோடு ஆயிர நாமமும்
சோதியின் உள்ளே சுடரொளியாய் நிற்கும்;
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினும்
ஆதியில் அன்பு பழுக்கின்றவாறே.

ஆதித்த [1]னன்பினோ டாயிர நாமமுஞ்
சோதியி னுள்ளே சுடரொளி யாய்நிற்கும்
வேதியர் வேண்டினும் விண்ணவர் சொல்லினு
மாதியி லன்பு பழுக்கின்ற வாறே. (3)

வேறு பாடம்: 1. மேனா (ஆ இ) II.

கருத்து: முன்பு சூரியன் ஆயிரம் பெயரும் (சிவனை மகிழ்விக்க) சொல்லி வழிபட, சிவன் சூரியனின் சோதியினுள் சுடரொளியாக நின்றான். அத்திருப்பெயர்களை அந்தணர் கூறினாலும், தேவர் கூறினாலும், அவர்கள் முதலில் சிவனிடம் அன்பு முதிரப்பெற வேண்டும்.

திருப்பெயரை மிக்க அன்புடன் கூறினாலே பயன் விளையும் என்றார்.

சூரியனே சிவனும் சத்தியும்

1955. தானே யுலகிற்குத் தத்துவ னாய்நிற்குந்
தானே யுலகிற்குத் தையலு மாய்நிற்குந்
தானே யுலகிற்குச் [1]சம்புவு மாய்நிற்குந்
தானே யுலகிற்குத் தண்சுட ராகுமே. (4)

வேறு பாடம்: 1. சயம்புவு (ஓ) II.

கருத்து: அண்டாதித்தனே உலகுக்கு மெய்ப்பொருள்; சத்தி அவனே; சிவம் அவனே; சந்திரனும் அவனே.

உடம்பிலும் சூரியன்

1956. வலையம் முக்கோணம், வட்டம் அறு கோணம்,
துலை இரு வட்டம் துய்ய இதழ் எட்டில்,
அலையும் மேல் வட்டத்தில் ஈரெட்டு இதழா
மலைவு அற்று உதித்தனன் ஆதித்தனாமே.

வலயமுக் கோணம் [1]வட்ட மறுகோணந்
துலையிரு வட்டந் துய்ய விதழெட்டி[2]
[3]லலையுமேல் வட்டத்தி லீரெட் டிதழா
[4]மலைவற் றுதித்தன [5]னாதித்த னாமே. (5)

வேறு பாடம்: 1. விட்ட (விசு) 2. விதுமெட்டி (விசு) 3. லலைவுற்ற (அ) III; வலையுற்ற (ஓ ஓ ஈ) I. 4. யலைவற் (அ) I வலைவற் (ஈ ஓ) III. 5. னாதித்தன்றானே (அ) III.

கருத்து: முறையே முக்கோணம், அறுகோணம், இருவட்டம் என்ற வடிவங்களை உடைய மூலாதாரம், சுவாதிட்டானம், மணி பூரகம் என்ற ஆதாரங்களிலும் 16 இதழ்கள் கொண்ட தாமரை ஆகிய விசுத்தி என்ற ஆதாரத்திலும் சூரியன் உதித்தனன்.

உடம்பாகிய பிண்டத்திலும் சூரியன் உதிப்பான் என்பது கூறினார்.

முச்சுடரும் சூரியனே

1957. ஆதித்தன் உள்ளில் பிரணவம்; முக்கோணத்தில்
சோதித்து இலங்கும் சூரியன்; நாலா அங்கு
ஏதம் உறும் கேணி சூரியன்; எட்டிலாச்
சோதிதனில் நீட்டின் சோடசம் தானே.

ஆதித்த னுள்ளிற் [1]பிரணவமுக் கோணத்திற்
சோதித் [2]திலங்குநற் சூரிய னாலாவங்[3]
கேத முறுங்கேணி சூரிய னெட்டிலாச்[4]
[5]சோதி தனினீட்டிற் சோடசந் தானே. (6)

வேறு பாடம்: 1. லானமுக் (இ) II. 2. திரங்குநற் (சங்) 3. னாலாங் (அ ஆ இ ஒ ஓ) I. 4. னெட்டிற் (சங்) 5. சோதிதன் னீட்டிற் (சங்); சோதிதன்னீரெட்டிற் (த)

கருத்து: உடம்பினுள் இருக்கும் அக்கினிகலை, சூரியகலை, சந்திரகலை என்பவை, அண்டாதித்தன் பிண்ட ஆதித்தனாக உள்ளபோது, வெவ்வேறு நிலைகளில் பெறும் வெவ்வேறு கலைகளே. உடம்பு முழு திலும் மூலாதாரம் முதல் தலையுச்சிவரை பிரணவ வடிவமாக இருப்பவன் சூரியனே. அவன் முக்கோணவடிவமாயுள்ள மூலாதாரத்தில் அக்கினியாக 64 கலைகளுடன் விளங்குகிறான். மூலாதாரத்திற்கு மேலே நான்காக உள்ள ஆதாரங்களுள், மணிபூரகத்திற்குமேல் அநாகதம், அதன் மேல் விசுத்தி வரை, கலைகள் பன்னிரண்டாகக் குறைந்து, சூரியன் என்ற பெயருடன் விளங்குவான். பிறகு யோகசாதனையினால் அவனுடைய ஆற்றலை, எளிதில் எட்ட இயலாத சோதியாகச் சிவபெருமான் விளங்கும் சகஸ்ராரம்வரை நீட்டினால், 16 கலைகள் உடைய சந்திரனாக விளங்குவான்.

சூரியன் பிரணவமே ஆதலால், அதன் அகரம் மணிபூரகத்திலும், உகரம் அநாகதத்திலும், மகரம் விசுத்தியிலும், விந்து ஆக்ஞையிலும், நாதம் சகஸ்ராரத்திலும் விளங்கும். சோதித்து - ஒளிவீசி.

குறிப்பு: 2 ஆம் அடி 4 ஆம் சீர்: நாலாவங் என்ற பாடங்கிடைக்காமை யால் அடுத்த வடி முதற்சீர் 'கேதம்' எனக்கொண்டு, துன்பம் எனப்பொருள் செய்து இடர்ப்பட்டனர் பிறர் எல்லாம். ஏதம் எனப் பிரித்துக் குறை எனப்பொருள் கொள்க. கேணி - வட்டவடிவம். ஆதாரங்களை வட்டம் எனல் மரபு. (1956 - ஆம் பாடல் காண்க).

பராசத்தி லீலை

1958. ஆதித்த னோடே யவனி யிருண்டது
பேதித்த [1]நூலும் பிதற்றிக் கழிந்தது
சோதிக்கு ணின்று துடியிடை செய்கின்ற
வேதப் பொருளை விளங்குகி லீரே[2]. (7)

வேறு பாடம்: 1. நாலும் (ஓ) I; நூறும் (ஓ) I. 2. வீர்ந்ரே (துடி)

கருத்து: மேற்பாடலில் கண்டவாறு, சிவசோதியை எட்டிச் சந்திர கலையாக நிற்கும் சூரியன், பின்னர்ச் சிவசோதியில் கலந்து சிவகலை யாகிவிடும். அப்போது சூரியன் எனத் தனியே இல்லை. இதை அனுபவத்திற் பெறும் யோகிக்கு உலகமும் உலக போகமும் இல்லை. சிவானுபவமே உண்டு. இவ்வுயர் அனுபவத்தை, வேறு வேறான நூல்கள் கூற இயலாமல் பிதற்றின. இது உண்மையில் சொல்லுக்கு அடங்காதது. இது, முதலில் சூரியனுக்குள்ளேயும் பிறகு சிவனோடும் நிற்கின்ற பராசத்தி கூட்டிவைக்கும் அனுபவம்; வேதத்தின் உண்மைப்பொருள். இதை அனுபவத்தால் உணராதிருக்கின்றீர்களே! இது விந்தையன்றோ?

அக்கினியாக வந்து சூரியனாய்த் தோன்றுவான்

1959. பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி;
யாருக்கும் காண ஒண்ணாத அரும்பொருள்
நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே.

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண் ணாத வரும்பொரு
ணீருக்குந் தீக்கு நடுவே யுதிப்பவ
னாருக்கு [1]மெட்டாத வாதித்தன் றானே. (8)

வேறு பாடம்: 1. மெட்டாதம் மாதித்தன் (சைவ)

கருத்து: உடம்பில் நிலம் என்ற பூதத்திற்கு இடமான சுவாதிட்டானத் திற்குக் கீழே, மூலாதாரத்தில் சூரியன் அக்கினியாகத் தோற்றம் கொள்கிறான். மணிபூரகத்திற்கும் அநாகதத்துக்கும் இடையே சூரியனாய்த் தோன்றுகின்றான். அவன் யாரும் காணவும் எட்டவும் இயலாதவன்.

கண்ணில் தெரிந்த ஆனந்தம்

1960. மண்ணை இடந்து, அதின் கீழ் ஓடும் ஆதித்தன்
விண்ணை இடந்து வெளிசெய்து நின்றிடும்;
கண்ணை இடந்து களிதந்த ஆனந்தம்
எண்ணும் கிழமைக்கு இசைந்து நின்றானே.

மண்ணை யிடந்ததின் கீழோடு மாதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடுங்
கண்ணை யிடந்து [1]களிதந்த வானந்த
மெண்ணுங் கிழமைக் கிசைந்துநின் றானே. (9)

வேறு பாடம்: 1. கழிந்தந்த (அ) I; களிசெய்த (த)

கருத்து: மண்ணைத் தாண்டி அதற்கும் கீழே அண்டவெளியில் செல்லும் சூரியன், விண்ணைக் கடந்து, அதே அண்டவெளியில் விளங்குகின்றான். அச்சூரியன் நமது கண்ணில் ஒளியூட்டிப் பேரொளியாம் சிவத்தைக் காட்டியதால் ஆனந்தம் அனுபவித்தேன். ஆதலால் அவன் யான் தியானிப்பதற்கு உரிமையுடையவனாய் இருக்கிறான்.

சூரியன் வரும் வழி

1961. பாரை இடந்து பகலோன் வரும் வழி
யாரும் அறியார்; அருங்கிடை நூலவர்
தீரன் இருந்த திருமலை சூழென்பர்;
ஊரை உணர்ந்தார் உணர்ந்திருந்தாரே.

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரு மறியா [1]ரருங்கிடை நூலவர்
தீர னிருந்த திருமலை சூழென்ப[2]
[3]ரூரை யுணர்ந்தா ருணர்ந்திருந் தாரே. (10)

வேறு பாடம்: 1. ரருங்கடை (ஓ) I. 2. சூழென்று (த) II. 3. ரூனை (ஈ ஓ) II; ரூரா. (ஆ இ) I; ஊரை (த)

கருத்து: நிலத்தைப் பிளந்துகொண்டு சூரியன் வரும்வழியை ஒருவரும் அறியார். வேதம் பயின்றவர், அது மேரு மலையைச் சூரியன் வலம் வருதல் என்பர். ஆனால் அதன் உண்மை, சகஸ்ரதள

அனுபவம் உடையவரே உணர்ந்து கொண்டுள்ளார். சூரியனின் ஒளி கழுமுனை வழியே ஏறி, தலையுச்சி சென்று, வலக்கண்ணில் வெளிப்படுதலை அவர் அறிவார்.

ஊர் - உடம்பு.

(i) பிண்டாதித்தன்

சிவனே சூரியன்

1962. நின்று மிருந்துங் கிடந்து நடந்தென்றுங்[1]
[2]கன்றாய நந்தி கருத்து ளிருந்தனன்
[3]கொன்று மலங்கள் குழல்வழி யோடிட
வென்று விளங்கும் விரிசுடர் காணுமே (1)

வேறு பாடம்: 1. நடந்தெதுங் (அ ஈ ஒ ஓ) I; நடந்துங் (சைவ) 2. கன்றவை (ஆ இ) II; கன்றிய (த) 3. கொண்டு (ஈ) I; தொன்று (ஆ இ) I.

கருத்து: இளமைமிக்க நந்தி என் உடம்பினுள் இருந்து பல செயல்களைச் செய்து, என் உணர்வில் நின்றான். அவன் மலங்களைக் கொன்று, சுழுமுனை வழியாக மேலேறிச் சூரியனாக விளங்குகின்றான்.

தம்மை உணர்பவரே வாழ்பவர்

1963. ஆதித்தன் ஓடி அடங்கும் இடம் கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை உணர்ந்தவர்;
பேதித்து உலகம் பிதற்றும் பிதற்று எலாம்
ஆதித்தனோடே அடங்குகின்றாரே.

ஆதித்த னோடி யடங்கு மிடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெலா
மாதித்த னோடே யடங்குகின் றாரே. (2)

வேறு பாடம்: 1. சூசுழதீக்கு (ஆ ஓ) I. 2. நல்லவர் (அ) I. 3. வேதித் (அ) I.

கருத்து: 'ஆதித்தன் வளர்ந்து, பின்பு சென்றடைய வேண்டிய இடம் எது' - என்று கண்டு, அங்கு அதனைச் செலுத்த வல்லவர்,

யோகசாதனையின் மூலம் தம்மை உணர்ந்தவர் ஆவார். மக்கள் தம்மை உணரும் நெறியில் செல்லாது, வேறு வேறு நெறிகளில் சென்று பிதற்றித் திரியும் வாழ்க்கை, சூரியனின் நிலையை அறியாமல் வீணே அழியும்.

சூரியன் ஒடி அடங்கும் இடத்திற் சாதித்தல் - வலக்கண்ணில் உதிக்கும் சூரியனை இடக்கண்ணுக்கு மேல் உள்ள பகுதிக்குக் கொண்டு வருதல். இதனைச் 'சந்திரயோகம்' என்னும் அதிகாரத்தில் "வளர்கின்ற ஆதித்தன் தன் கலை ஆறும், தளர்கின்ற சந்திரன் தன்கலை ஆறும்" என்ற பாடலிலும் (723) கூறினார். இவ்வாறு கொண்டு வரும்போது, சந்திர மண்டலம் முழுமையாக உருவாகும். எனவே, ஆதித்தன் அடங்கும் இடம் என்பது சந்திர மண்டலத்தின் தொடக்கம்.

சந்திர மண்டலத்தை அறியாது, ஆதித்த மண்டலத்துடன் அமைபவரே பலவாறு பிதற்றித்திரிவர்.

சந்திர மண்டலத்தை அறிந்தவர்

1964. [1]உருவிப் புறப்பட் டுலகை வலம்வந்து
சொருகிக் கிடக்குந் துறையறி வாரில்லை
சொருகிக் கிடக்குந் துறையறி வாளர்க்
குருகிக் கிடக்குமென் னுள்ளன்பு தானே. (3)

வேறு பாடம்: 1. உருகிப் (ஆ இ) I.

கருத்து: சூரியன் மூலாதாரத்திலிருந்து, சுவாதிட்டானத்தை உருவிச் சென்று, உடம்பு என்ற உலகை வலம் செய்து, தலையில் சந்திரனின் பகுதியில் (இடப்பக்கம்) அடங்குவதை அறிபவர் அரியர். அவ்வாறு அறிந்தவர்க்கு நான் அன்பு செய்கிறேன்.

(ii) மன வாதித்தன்

உடலில் பௌர்ணமி

1965. எறிகதிர் ஞாயிறும் இன்பனி சோரும்
எறிகதிர் சோமன் எதிர்நின்று எறிப்ப
இரு கதிர் உள்ளே இயங்கும் என் ஆவி
ஒரு கதிர் ஆகில், உவா-அது ஆமே.

எறிகதிர் [1]ஞாயிறு [2]மின்பனி சோரு
மெறிகதிர் சோம னெதிர்நின் றெறிப்ப
[3]விருகதி ருள்ளே [4]யியங்குமென் னாவி
யொருகதி ராகி லுவாவது வாமே. (1)

வேறு பாடம்: 1. நாயிறு (அ, ஆ, ஓ) I. 2. மிப்பணி (அ) I; மீன்பரி (ஈ) I; வின்பரி (ஆ) I; மின்பரி (இ) I. 3. விரிகதி (ஒ) I. 4. விளங்குமென் (த)

கருத்து: சூரியனும் சந்திரனும் இடக்கண்ணுக்கு மேல் எதிர் எதிராக நின்று ஒளி வீச, என் உயிருணர்வும் ஒளிவீசி அவற்றுடன் இணைந்தால், அது பௌர்ணமி ஆகும்.

இதனைச் சந்திர யோகம் என்னும் அதிகாரத்தில் "வேறுறச் செங்கதிர்" என்ற பாடலிலும் (725) கூறினார்.

பிறையும் நிறைமதியும்

1966. சந்திரன் சூரியன்தான் வரின் பூரணை;
முந்திய பானுவில் இந்து வந்து ஏய்முறை
அந்த இரண்டும் உபயநிலத்து அறச்
சிந்தை தெளிந்தார் சிவம் ஆயினாரே.

சந்திரன் சூரியன் றான்வரிற் பூரணை[1]
முந்திய பானுவி லிந்துவந் தேய்முறை[2]
அந்த விரண்டு [3]முபய நிலத்தறச்[4]
சிந்தை தெளிந்தார் சிவமாயி னாரே. (2)

வேறு பாடம்: 1. பூரண (அ ஆ ஈ ஒ ஓ) I; பூசனை (விசு) (திரு) (வ) 2. தேபிறை (ஈ) III. 3. முபாய (ஆ இ) I. 4. நிலத்திற் (விசு) (தி) (வ).

கருத்து: சூரியனின் இடத்தில் சந்திரன் வந்து பொருந்துவது பிறைக்காலம்; சந்திரனின் இடத்தில் சூரியன் வந்து பொருந்துவது பௌர்ணமி. சந்திரன், சூரியன் இரண்டும் தலையின் இடம், வலம் என்ற பக்கங்களை நீக்கி, சகஸ்ராரத்திற்குச் செல்ல, யோகி ஞானம் எய்திச் சிவமே ஆவான்.

1967. ஆங்கு கலையோ டருக்க னனன்மதி
ஆங்கு கலையிடை நான்கென லாமென்பா
ராங்கு மருக்க னனன்மதி யோடொன்ற
வாங்குமப் பூரணை யாமென் றறியுமே (அ, க)

யார் அறிவார்?

1968. ஈரண்டத்து அப்பால் இயங்கிய அவ்வொளி
ஓர் அண்டத்தார்க்கும் உணரா உணர்வது;
பேரண்டத்தூடே பிறங்கொளியாய் நின்றது;
ஆர் அண்டத்தக்கார்? அறியத்தக்காரே?

ஈரண்டத் தப்பா லியங்கிய வவ்வொளி
யோரண்டத் தார்க்கு முணரா வுணர்வது
பேரண்டத் தூடே பிறங்கொளி யாய்நின்ற
[1]தாரண்டத் தக்கா ரறியத்தக் காரே. (3)

வேறு பாடம்: 1. ஆரண்டத் (த)

கருத்து: சூரிய கலை, சந்திர கலை - இவ்விரண்டையும் எய்திய யோகி, சிவனைச் சோதிவடிவில் தரிசிப்பான் ஆயினும், இக்கலைகள் யாவற்றையும் கடந்து விளங்குவது சிவம். எவ்வண்டத்தில் வாழ்பவராலும் உணர முடியாதது. 'இப்பெரிய அண்டவெளியில் ஒளியாய் விளங்குகிறது' என்பது அன்றி, அதன் நிலையை நாம் யாது அறிவோம்? அதை அணுக வல்லார் இல்லை, அறிய வல்லாரும் இல்லை.

"கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின் நோக்கரிய நோக்கே" என்றார் மணிவாசகரும் (திருவா. சிவ. அடி 75 - 76)

சிவனருள் வேண்டும்

1969. ஒன்பதில் மேவி உலகம் வலம்வரும்,
ஒன்பதும் ஈசன் இயல், அறிவார் இல்லை;
முன்பு அதில் மேவி முதல்வன் அருள் இலார்
இன்பம் இலார், இருள்சூழ நின்றாரே.

ஒன்பதின் மேவி யுலகம் வலம்வரு[1]
மொன்பது மீச [2]னியலறி வாரில்லை
[3]முன்பதின் மேவி முதல்வ னருளிலா
ரின்ப [4]மிலாரிருள் சூழநின் றாரே. (4)

வேறு பாடம்: 1. யுலகமலம்வரு (த) 2. மென்பது (அ) 3. னியல்பற் (அ ஆ இ) 4. முன்பதி (அ ஒ ஓ) 5. லாவிருள் (ஓ).

கருத்து: மன வாதித்தன் நிலம் முதலிய ஒன்பது நிலைகளிலும் பொருந்தி, உடம்பாகிய உலகத்தை வலம்வரும். இவ்வொன்பது நிலைகளும் சிவனது சத்தி நிலைகளாகும். இதனை மக்கள் அறியார். ஆன்மா முன்பே இவற்றில் பொருந்தியுள்ளதாயினும் சிவத்தின் அருள் இல்லாதவர் பேரின்பம் பெறார். ஆணவமலம் நீங்கப் பெறார்.

(iii) ஞானாதித்தன்

ஞானத்தின் தொடக்கம்

1970. விந்து அபரம், பரம் - இரண்டாய் விரிந்து
அந்த அபரம், பரநாதம் ஆகியே
வந்தன; தம்மில் பரம் கலை ஆதி வைத்து
உந்தும் அருணோதயம் என்ன உள்ளத்தே.

[1]விந்து [2]வபரம் பரமிரண் டாய்விரிந்
[3]தந்த [4]வபரம் பரநாத மாகியே[5]
வந்தன தம்மிற் பரங்கலை யாதிவைத்
துந்து மருணோ தயமென்ன வுள்ளத்தே[6]. (1)

வேறுபாடம்: 1. விந்துப் பரம்பர (அ, இ) I. 2. விபரம் (ஓ) I. 3. தந்த வந்தப் பரம்பரம் (அ) IV. 4. வபர (த) 5. மதாகியே (ஈ) II. 6. வுள்ளதே (அ ஈ) I.

கருத்து: சுத்தமாயையில் விந்து இரண்டு வகை; நாதம் இரண்டு; அவை முறையே பரவிந்து, அபர விந்து; பரநாதம், அபரநாதம் என்பவை. இவற்றுள் பரநாதமும் அபர்விந்துவும் நிவிருத்தி கலை முதலிய ஐந்து கலைகளை உண்டாக்கி, ஆன்மாவின் இடத்தே ஞானத்தின் தொடக்கமெனச் செலுத்தும். இது ஆன்மாவினிடத்தில் ஞான சூரியனின் உதயம் ஆகும். ஆன்மாவிற்கு ஞானத்தைத் தருபவள் சிற்சத்தி. அவள் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை எனப்பெயர் கொண்டு, முறையே ஆன்மாவைப் பந்தத்திலிருந்து விடுவித்தல், மீள 'நோக்காதவாறு நிறுத்துதல், அனுபவ ஞானத்தைத் தருதல், துன்பங்கள் நீங்கி அமைதி பெறுவித்தல், அதையும் கடந்த நிலையை அளித்தல் - என்ற ஐந்து செயல்களைச் செய்வான். அவள் இவற்றைச் செய்வதற்கு இடமாய்

நிற்கும் சுத்தமாயைத் தத்துவங்களும் நிவிர்த்தி முதலிய கலைகள் எனப் பெயர் பெறும்.

இவ்வைந்தும் பரநாதமும் அபரவிந்துவும் கூடிப் பிறப்பன என்று ஆசிரியர் இப்பாடலில் கூறுகிறார். சத்தி ஞான சூரியனாகக் கூறப்படுகிறாள். சத்தியால் ஆன்மாவினிடத்தே தோன்றும் விளக்கம் மனவாதித்தனாகும்.

3 ஆம் அடி : பரம் - மேலான.

ஐவகை வாக்கு

1971. உள்ள அருணோதயத்து எழும் ஓசைதான்,
தெள்ளும் பரநாதத்தின் செயல் என்பவால்,
வள்ளல் பரவிந்து வைகரி ஆதி வாக்கு
உள்ளன ஐங்கலைக்கு ஒன்றாம் உதையமே.

உள்ள வருணோ [1]தயத்தெழு மோசைதான்
றெள்ளும் பரநாதத் தின்செய லென்பவால்[2]
வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
குள்ளன வைங்கலைக் [3]கொன்றா முதையமே. (2)

வேறு பாடம்: 1. தயம் தோசையதாய்த் (அ ஈ) I; தயமதோகை யதாய்த் (ஓ) I. 2. லென்பதால் (ஓ) IV; லென்பர் (இ ஈ) II; லாதலால் (த) 3. கொன்று (த).

கருத்து: ஆன்மாவினிடத்தே தோன்றும் ஞானசூரியனின் அருணோதயத்தில் உண்டாகும் 'ஓசை' பரநாதத்தின் செயல் ஆகும். இப்பரநாதமும் பரவிந்துவும் சிற்சத்தியால் இயைந்துநிற்க, ஐந்து கலைகளிலிருந்தும் ஐந்து வாக்குகள் தோன்றும்.

ஐவகை வாக்கு - பரம், சூக்குமை, மத்திமை, பைசந்தி, வைகரி.

யாவர்க்கும் ஞானம் வழங்குவோன்

1972. தேவர்பிரான், திசை பத்து உதயம் செயும்
மூவர்பிரான் என்பர் முன் ஒரு காலத்து;
நால்வர் பிரான், நடுவாய் உரையாநிற்கும்
ஏவர் பிரான் என்பர் விண்ணவர் தாமே.

தேவர்பி [1]ரான்றிசை பத்துத யஞ்செயு
மூவர்பி [2]ரானென்பர் முன்னொரு காலத்து
நால்வர்பி ரானடு வாயுரை யாநிற்கு
[3]மேவர்பி ரானென்பர் விண்ணவர் தாமே. (3)

வேறு பாடம்: 1. றிசையத் (ஈ ஒ ஓ) I. 2. ரானென (விசு) 3. மேவுபி (ஓ) II.

கருத்து: சிவபிரான் ஞான சூரியனாக, எல்லாத் தேவர்கட்கும் ஒளி வழங்கி, பத்துத் திசைகளிலும் தோன்றி வரும் வியாபகன். முத்தொழில் மூர்த்திகள் மூவர்க்கும் அத்தொழில் அளித்த தலைவன். அவர்களுடன் மகேசனும் சேர, நால்வராய் நிற்பார்க்கும் அவன் தலைவன். அவர்களின் உயிரின் மையப் பொருள் அவன். மற்றுமுள்ள தேவர், மனிதர், அசுரர் முதலியோர்க்கும் தலைவன் அவனே.

யாவர்க்கும் உயிரினுள் நின்று ஞானம் தரும் ஞான சூரியன் சிவனே என்றார்.

என் இதய ஆகாயத்தில் எழுகின்ற சூரியன்

1973. பொய் அலன், மெய்யன்; புவனாபதி, எந்தை,
மை இருள் நீக்கும் மதி, அங்கி, ஞாயிறு,
செய் இருள் நீக்கும் திருவுடை நந்தி என்
கை இருள் நீங்கக் கலந்து எழுந்தானே.

[1]பொய்யலன் மெய்யன் புவனா பதியெந்தை
[2]மையிரு [3]ணீக்கு [4]மதியங்கி ஞாயிறு
செய்யிரு ணீக்குந் திருவுடை நந்தியென்
கையிரு [5]ணீங்கக் கலந்தெழுந் தானே. (4)

வேறு பாடம்: 1. பொய்யிலன் (அ ஆ இ ஈ) I. 2. மெய்யிரு (சங்) 3. ணீங்கி (அ ஓ) I. 4. மதிமயங்கி (அ) I. 5. ண்க்கக் (ஈ) I.

கருத்து: புவனங்களுக்குத் தலைவன்; என்றுமுள்ள உண்மைப் பொருள்; அன்பால் என் தந்தை போல்வான்; அறியாமையை நீக்கும் சந்திரன்,அக்கினி, சூரியன் - இவர்களாக என்னுள் நிற்பவன்; மாயையை நீக்கும் ஞானச் செல்வன். அவன் எனது சிறிய உயிரில் உள்ள இருளையும் நீக்குதற்கு, என்னுள் கலந்து, என் அறிவு வெளியில் எழுந்தான்.

ஆன்மாவின் அறிவு தத்துவங்களிலிருந்து விடுபடும் பொழுது, அறிவுவெளி (சிதாகாயம்) எனப்படும்.

ஞானாதித்தன் சிவபெருமானே

1974. தனிச் சுடர் எற்றித் தயங்கு - இருள் நீங்க,
அனித்திடும் மேலை அருங்கனி ஊறல்
கனிச்சுட ராய்நின்ற கைலையில் ஈசன்
நனிச் சுடர் மேல்கொண்ட வண்ணமும் ஆமே.

[1]தனிச்சுட [2]ரெற்றித் தயங்கிரு ணீங்க
[3]வனித்திடு மேலை யருங்கனி யூறல்
கனிச்சுட ராய்நின்ற கைலையி லீச
னனிச்சுடர் மேல்கெண்ட [4]வண்ணமு மாமே. (5)

வேறு பாடம்: 1. தனிச்சுடர் நெற்றித் (ஒ) I. 2. ரெற்றித்தாயங்கிரு (து) 3. வளித்திடு (அ ஆ ஒ) I. 4. வன்னமு (அ இ) I.

கருத்து: ஞான சூரியன் ஒளி வீசுதலால், அதுவரை அறிவுபோலக் காட்டிக்கொண்டிருந்த ஆணவ மல இருள் நீங்க, உயிருள் இனிக்கும் கனிச்சாறு போன்ற சந்திர மண்டலத்து அமுதம் கிடைக்கும். அந்தப் பேறு எத்தகையது என்றால், ஞானக்கனியாய், சோதி வடிவாய் விளங்கும் கயிலையில், அவ்வொளியின் மேல் பேரொளியாகச் சிவபெருமான் விளங்குவதைப் போன்றது.

உவமை போலக் கூறினாலும், நேயமும் ஞானமும் ஞாதுருவும் ஒன்றாகக் காணும் திரிபுடி ஞானத்தால் ஞான சூரியனே ஈசன் என்றார்.

தம்மானை அறியாத சாதியார்

1975. நேர்அறிவாக நிரம்பிய பேரொளி
போர் அறியாது, புவனங்கள் போய்வரும்;
தேர அறியாத திசை யொளி ஆயிடும்
ஆர் அறிவார்? இது நாயகம் ஆமே.

நேரறி வாக் நிரம்பிய பேரொளி
[1]போரறி யாது புவனங்கள் போய்வருந்
தேரறி யாத [2]திசையொளி யாயிடு
மாரறி [3]வாரிது நாயக மாமே. (6)

வேறு பாடம்: 1. பேரறி (அ ஆ) I. 2. சேயொளி (ஓ) I. 3. வாரது (த)

கருத்து: ஆன்மாவிற்கு உண்மை ஞானமாக (அனுபவ ஞானமாக) நிற்கும் ஞானசூரியன், இது, அது என்ற பேதமின்றி எல்லாப் புவனங்களிலும் வியாபித்து நிற்கும். இங்ஙனம் திசை எங்கும் பரவியிருந்தாலும், அறிவாராய்ச்சியினால் அதனை அறிய இயலாது. யார்தாம் அதனை அறிவார்? ஒருவருமிலர். அங்ஙனம் அறியாராயினும், அவரை, பிறரை, அகிலத்தை - எல்லாம் ஆளும் தலைவன் அச்சூரியனே.

சர்வக்ஞன்

1976. மண்டலத்துள்ளே மலர்ந்து எழும் ஆதித்தன்
கண்ட அகத்துள்ளே கதிரொளி ஆயிடும்
சென்ற இடத்து, எட்டுத் திசை எங்கும் போய்வரும்
நின்ற இடத்தே நிலை நேர் அறிவார்க்கே.

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு மாதித்தன்
[1]கண்டகத் துள்ளே கதிரொளி யாயிடுஞ்
சென்றிடத் தெட்டுத் திசையெங்கும் போய்வரும்
நின்றிடத் தேநிலை நேரறி வார்க்கே. (7)

வேறு பாடம்: 1. கண்டடத் (ஈ ஓ) I; கண்டிடத் (த)

கருத்து: சூரியன், பிண்ட ஆதித்தனாக, உடம்பில் அக்கினி, சூரிய, சந்திர மண்டலங்களில் விளங்குகிறான். அவனை மனத்தில் நிறுத்தி, அகமுகமாகத் தியானிக்க, ஞான ஆதித்தனாக விளங்குவான். பரம் பொருளின் ஞான சொரூபத்தை நேருக்கு நேராகக் காண்பவர், இருந்த இடத்திலிருந்து கொண்டே எங்கும் சென்று வரும் ஆற்றலை ஞானசூரியன் தரும்.

போய்வரும் என்பது, போய்வரச் செய்யும் எனப் பொருள்படும்; ஊர் செல்லும் வழி என்பதைப் போல.

மூவரும் அவனே

1977. நாபி, கண், நாசி, நயனநடுவினும்
தூபியோடு ஐந்தும் சுடர்விடு சோதியைத்
தேவர்கள், ஈசன், திருமால், பிரமனும்
மூவருமாக உணர்ந்திருந்தாரே.

நாபிகண் ணாசி நயன நடுவினுந்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்க ளீசன் றிருமால் பிரமன்
மூவரு மாக வுணர்ந்திருந் தாரே. (8)

கருத்து: பிண்டமாகிய உடம்பில், தொப்பூழ், கண், மூக்கு, இடக்கண் நடு, தலையுச்சி என்னும் ஐந்து இடங்களிலும் ஒளி வீசித் திகழும் ஞானாதித்தனைத் தேவர்கள், திருமால், ஈசன், பிரமன் என்ற மூவர் எனத் தனித்தனியே உணர்ந்து வணங்கினர்.

தூபி - ஸ்தூபி என்னும் வடமொழிச் சொல்லின் திரிபு.

(iv) சிவாதித்தன்

சிவ சூரியன் வருகை

1978. அன்றிய பாச இருளும் அஞ்ஞானமும்
சென்றிடும், ஞானச் சிவப்பிரகாசத்தால்;
ஒன்றும் இரு சுடராம் அருணோதயத்
துன்று இருள் நீங்குதல் போலத் தொலைந்ததே.

அன்றிய பாச விருளுமஞ் ஞானமுஞ்
சென்றிடு ஞானச் சிவப்பிர காசத்தா
லொன்று [1]மிருசுட ராமரு ணோதயத்[2]
[3]துன்றிரு ணீங்குதல் போலத் தொலைந்ததே. (1)

வேறு பாடம்: 1. மிராவரும் மரு (த) 2. ணோதயந் (விசு) 3. தொன்றிரு (ஓ) IV.

கருத்து: ஆன்மாவினிடத்துச் சிவசூரியன் பிரகாசித்தால், ஆணவ மலமும், அறியாமையும் நீங்கும். எவ்வாறு? பேரொளியாம் சூரியனின் அருணோதயத்தில், இருள் விலகுதல் போல.

ஒன்றானான்; வேறானான்

1979. கடம் கடம் தோறும் கதிரவன் தோன்றில்,
அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்;
விடம் கொண்ட கண்டனும் மேவிய காயத்து
அடங்கிட நின்றதும் அப்பரிசாமே.

[1]கடங்கடந் தோறும் கதிரவன் றோன்றி[2]
லடங்கிட மூடி [3]லவற்றி லடங்கான்
விடங்கொண்ட கண்டனு மேவிய காயத்
தடங்கிட நின்றது மப்பரி சாமே. (2)

வேறு பாடம்: 1. கடங்கடோறுங் (அ, ஓ) I. 2. றோன்றிடி (அ) I. 3. லவையிற்றி (அ ஆ இ) II.

கருத்து: தண்ணீர்க் குடம்தோறும் சூரியன் தோன்றினாலும், அக்குடங்களை மூடினால், அவன் அவற்றினுள் அடங்கி மறையான். நீலகண்டனாகிய சிவபெருமான் (ஆன்மா வாழும்) உடம்பில் இருக்கின்றமையும் அது போன்றதே.

சூரியனின் வியாபகம் குடத்துடன் அமையாமை போல், இறைவன் வியாபகம் உடம்புடன் அமையாது.

ஒளியாய் விளங்கி இருளாய் மறைவான்

1980. தானே விரிசுடர் மூன்றும் ஒன்றா நிற்கும்
தானே அயன் மால் என நின்று தாபிக்கும்
தானே உடல், உயிர் வேறு ஒன்ற நின்றுளன்
தானே வெளி, ஒளி, தான் இருட்டு ஆகுமே.

தானே விரிசுடர் மூன்றுமொன் றாநிற்குந்
தானே யயன்மா லெனநின்று தாபிக்குந்
தானே யுடலுயிர் [1]வேறொன்ற நின்றுளன்
றானே வெளியொளி தானிருட் டாமே[2]. (3)

வேறு பாடம்: 1. வேறொன்று (ஓ) I; வேறொன்றி (ஓ) I; வேறொன்றாய் (ஆ) I; வேறன்றி (சங்) (த) 2. டாகுமே (அ ஓ) II.

கருத்து: சிவ பரம்பொருள், தானே சூரியன், சந்திரன், அக்கினி என்னும் மூன்று சுடர்களுள்ளும் ஒளியாய் நிற்கிறான். தானே பிரமன், மால், இருவருள்ளும் நின்று, தானே பரம்பொருள் என்பதை மெய்ப்பிக்கிறான். தானே உடம்பிலும், உயிரிலும் தனித்தனி ஒன்றி நிற்கிறான். தானே அண்டவெளியும் அதில் ஒளியுமாக நிற்கிறான். தானே இருளாகவும் உள்ளான்.

அவன் மறைதல் இருள் ஆகும். அவனது சொரூபம் அறியப் படாமல் மறைந்தே இருத்தலினை இருள் என்றார். இருவரையே கூறினும் உருத்திரனோடு மூவர் என்க.

சீவகரணம் சிவகரணமாகின்றது

1981. தெய்வச் சுடர் அங்கி, ஞாயிறும், திங்களும்,
வையம், புனல், அனல், மாருதம், வானகம்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயிர்
ஐவர்க்கு இடம் இடை ஆறு அங்கம் ஆமே.

தெய்வச் சுடரங்கி [1]ஞாயிறுந் திங்களும்[2]
[3]வையம் புனலனன் மாருதம் வானகஞ்
சைவப் பெரும்பதி தாங்கிய பல்லுயி
ரைவர்க் கிடமிடை யாறங்க மாமே. (4)

வேறு பாடம்: 1. நாயறுந் (அ) I. 2. திங்களு (அ) I. 3. மைவப் (அ) I.

கருத்து: சிவாக்கினி சூரியன், சந்திரன், நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் எட்டுத் தத்துவங்களாக நின்று, சிவபரம்பொருள் காக்கும் பல உயிர்களும் பஞ்சபிரம மந்திரங்களுக்கும் ஷடங்க மந்திரங்களுக்கும் இடமாகும்.

சிவாக்கினி என யோக நூல் மரபுப்படி கூறியது இயமானன் என்றும் புருடன் என்றும் வழங்கும் தத்துவத்தை. எட்டுத்தத்துவங்களாகவும் சிவன் நிற்பான் என்றது, அவற்றில் அவன் கலந்து 'ஒன்றாய்' உள்ள நிலையை. இடை - இடம். பஞ்சபிரம மந்திரங்கள்: ஈசானாயநம, தத்புருஷாய நம, அகோராயநம, வாமதேவாயநம, சத்யோ ஜாதாயநம என்பவை. இவை சிவபெருமானின் ஐந்து முகங்களுக்கும் உரியவை. ஷடங்க மந்திரங்கள்: ஹ்றருதயாய நம, சிரசாயை நம, சிகாயை நம, கவசாய நம, அஸ்த்ராய நம, நேத்ரேப்யோ நம என்பவை. இவை மாந்தரின் ஆறு உறுப்புக்களுக்கு உரியவை.

சிவசூரியன் யோகியின் உடம்பில் சிவாக்கினியாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும் முறையே 64, 12, 16 கலைகளாக இடம்கொள்வான். அவன் சகஸ்ராரத்தை அடையும் போது, யோகியின் தலை சிவானுபவத்திற்கு இடமாகிச் சிவனுடைய திருமுகமாகவே கருதப்பட்டுப் பஞ்சப் பிரம மந்திரத் தியானத்திற்குரிய இடமாகிறது. நிலம் முதலிய ஐந்து பூதங்களும் யோகியின் உடம்பில் சிவ கரணங்களா வதால், ஷடங்க மந்திரங்களைத் தியானிக்கும் இடமாகின்றன. இதனைச் சீவகரணம் சிவகரணமாதல் என்பர்.

111. பசுவிலக்கணம்

(i) பிராணன்

மூச்சாக உள்ளான்

1982. உன்னும் அளவில் உணரும் ஒருவனை,
பன்னும் மறைகள் பயிலும் பரமனை,
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்னமயன் என்று அறிந்து கொண்டேனே.

[1]உன்னு மளவி லுணரு மொருவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
யென்னு ளிருக்கு மிளையா விளக்கினை
[2]யன்ன [3]மயனென் றறிந்துகொண் டேனே. (1)

வேறு பாடம்: 1. உண்ணு (அ ஆ ஓ) I. 2. யன்மையனென் (தி) 3. மய மென் (சங்)

கருத்து: சிவபெருமான் மூச்சுக் காற்றாக விளங்குவதை ஆசிரியர் அனுபவத்தால் அறிந்து கூறுகின்றார். நினைத்தவுடனே உணர்வில் வருபவனை, வேதங்கள் பன்முறை கூறிக் துதிக்கப்பெறுபவனை, என்னுள் இருக்கும் ஒளிகுன்றா விளக்கை, அம்சம் மந்திரத்தால் உணர்த்தப்படும் மூச்சுக் காற்றின் மயமாக உள்ளவன் என்று அறிந்தேன்.

சிவனை மனத்தால் நினைத்தவுடன் தியானம் கைகூடுவதை, உயிருணர்வில் அவன் உணரப்படுவதை ஆசிரியர் அறிந்தார். அவனைப் பெருஞ்சோதியாகக் கண்டார். தம் உயிரும், மூச்சுக் காற்றும், சிவனும் ஒன்றே என, 'அநந்நியபாவம்' உற்றார்.

அம்ச மந்திரத்தை இந்நூல், அசபை அதிகாரத்திலும் அறியலாம். சிவன் மூச்சுக் காற்றாக இருத்தலை, "என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு என்னுளே நிற்கும் இன்னம்பரீசனே" என்றார் திருநாவுக்கரசரும் (ஐந்தாம் திருமுறை, 21.1)

பிரியா இரண்டு அன்னம்

1983. அன்னம் இரண்டு உள ஆற்றங்கரையினில்;
துன்னி இரண்டும் துணை பிரியாதன;
தன்னிலை அன்னம் தனி ஒன்று - அது என்றக்கால்
பின்னை மடவன்னம் பேறு அணுகாதே.

அன்ன மிரண்டுள வாற்றங் கரையினிற்[1]
[2]றுன்னி யிரண்டுந் துணைபிரி யாதன[3]
தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்காற்
[4]பின்னை மடவன்னம் பேறணு காதே[5]. (2)

வேறு பாடம்: 1. கரையினி (அ) I. 2. லுன்னி (அ) I. 3. யாதனந் (ஓ) I; யாதன்ன (இ) I; யாதன்னந் (ஈ) I. 4. பின்ன (விசு) (தி) (வ) 5. காதன்றே (துடி).

கருத்து: உயிர் வாழ்க்கை ஆகிய ஆற்றங்கரையில் இரண்டு அன்னங்கள் உள்ளன. அவை ஒன்றை ஒன்று பிரியாதவை; நெருங்கியிருப்பவை, அவற்றுள் ஒன்று தன் நிலையில் என்றும் நிற்பது. (மற்றொன்று அதைச் சார்ந்தது). ஆனால் சார்ந்திருக்கும் அன்னம், தான் தனியானது (மற்றொன்று தன்னின் வேறானது) என்று எண்ணினால் வீடுபேறு அடையாது.

இப்பாடல் உருவக வணி. தன்னிலை - எதையும் சாராத தனிநிலை; தானே அறிவாய் உள்ள நிலை. பின்னைமடவன்னம் - மற்றோர் அன்னம். மடவன்னம் என்றமையால், சார்ந்தே அறிவுபெறுதலை உணர்த்தினார். அன்னங்களாக உருவகிக்கப்பட்டவை பரமான்மாவும் சீவான்மாவும். புத்தியாகிய ஆற்றங்கரை என்றும் கொள்ளலாம். அன்னங்கள் வேறானவையே அன்றி, அன்னியமானவை அல்ல. சைவசித்தாந்தப்படி, அத்வைதம் என்பதற்கு இவ்வாறு ஆகமங்கள் விளக்கம் செய்தனவாதலின், இது பிற்காலத்தில் சுத்தாத்துவிதம் எனப்பட்டது. சீவான்மாவும் பரமான்மாவும் அன்னமாக உருவகிக்கப் பட்டமையின், அன்னம் என்பதன் தொனிப்பொருளாய் அம்சம் - பிராணன் - என்ற பொருள் உண்டாகிறது. இப்பாடலில் உள்ள உருவகம், உபநிடதத்தில் கூறப்படும் 'ஒரு மரத்துப் பறவைகள் இரண்டு' என்ற உருவகத்தை ஒத்துள்ளது.

மூச்சுக்காற்று இடகலை, பிங்கலைவழி மாறி, மாறி ஓட, மனம் அதன்வழிச் செல்வதால், ஆன்மா இறைவனைத் தன்னின் வேறாகக் கொள்ளும் என்றார்.

(ii) புருடன்

பொய்யான காட்சி

1984. வைகரி யாதியு மாயா மலாதியும்
பொய்கரி யான புருடாதி பேதமு
[1]மெய்கரி ஞானங் [2]கிரியா விசேடமுஞ்[3]
செய்கரி யீச னனாதியே செய்ததே (1)

வேறு பாடம்: 1. பெய்கரி (ஓ) I. 2. கிரிகை (ஓ) I. 3. விசேடத்துச் (சங்); விசேடத்தால் (த).

கருத்து: வைகரி முதலிய நான்குவகை வாக்குகளையும், அசுத்தமாயையில் பிறப்பவையான ஏழு வித்தியாதத்துவங் களையும், பொய்யான சாட்சியாக நின்று உணரும்புருடத்துவதை யும், அதை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் ஐந்து கிலேசங்களையும், உண்மையான சாட்சியாகிய ஞானத்தால் உணரச்செய்யும் சிறப்புச் செய்கைகளையும் இறைவன் முன்பே உண்டாக்கியுள்ளான். ஆன்மா பிரகிருதிமாயையின் காரியங்களான 24 ஆன்ம தத்துவங்களையும் அனுபவிக்க, அது புருடன் என்றும் ஒரு நிலையை மேற்கொள்ள வேண்டும்.

புருடன் என்பது ஒரு தனித் தத்துவம் அன்று. எனவே, 'பொய்கரியான புருடாதி' என்றார். ஆன்மா வைகரி முதலிய வாக்குகளை உணர, ஞானம் பெறவேண்டும். அந்த மெய்ஞ் ஞானத்தை ஊட்டுவதற்கு உரிய வழிகள். பல உண்டு. "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும் கேட்பான் புகில் அளவில்லை" என்பார் ஞான சம்பந்தர். (3ஆம் திருமுறை; பொது, பாசுரம்:4) ஆன்ம தத்துவம் 24: மனம், புத்தி, சித்தம், அகங்காரம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; மெய், வாய், கண், மூக்கு, செவி; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்; நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். வித்தியா தத்துவம் 7: காலம் நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை. ஆன்மா, புருடன் என்ற நிலையை மேற்கொண்டமையால், இறைவனை அறியாது என்றார்.

(iii) அணுவன்

உள்ளம் அவனை அறியாது

1985. அணுவில் அணுவினை, ஆதிப் பிரானை
அணுவில் அணுவின்னை ஆயிரம் கூறு இட்டு
அணுவில் அணுவை அணுக வல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலும் ஆமே.

அணுவி லணுவினை யாதிப் பிரானை
யணுவி லணுவினை யாயிரங் கூறிட்
டணுவி லணுவை யணுகவல் லார்கட்
கணுவி லணுவை யணுகலு மாமே. (1)

கருத்து: உயிருக்கு உள்ளுயிராக உள்ளவனை, உயிருக்கு உடம்பையும், புவன, போகங்களையும் படைத்துக் கொடுத்த தலைவனை, (யார் அணுக இயலும் எனின்), ஓர் அணுவுக்கும் அணுவாக உள்ள ஒன்றை ஆயிரம் பங்குகளாகப் பிரித்து, அவற்றுள் ஒரு பங்கை அறியும் திறம் யாருக்கு உள்ளதோ, அவன் உயிர்க்கு உயிரான தலைவனை அறியக்கூடும்.

உயிரல்லாத பிறவற்றை ஆய்ந்து மூலத்தைக் கண்டறிதல் போல, உயிரின் மூலத்தைக் காண இயலாது என்றபடி. உடம்பிற்குள் உயிர் இருப்பினும் உயிர் வேறேயாதல் போல, உயிர்க்குள் உயிராக இறைவன் இருப்பினும் அவன்வேறு என்றவாறு.

அணுவைப் பல கூறிடல் அரிதாதல் போல, இறைவனை அறிதலும் அரிது. இதனை ஆசிரியர் முன்னும், "உள்ளமும் தானும் உடனே இருக்கினும் உள்ளம் அவனை உருவறியாதே" என்றார் (பாடல் 191).

ஆணவ மலத்தால் மறைப்புண்ட நிலையில் உயிர், அணு எனப்படும். அந்த மறைப்பு இறையருளால் விலக, உயிர் ஓரளவு வியாபக அறிவு பெற்று, அவனை ஓரளவு உணர்ந்து, தானும் அவனும் வேறல்லர் என உணர்ந்து நிற்கும். உயிர் தன் நிலையில் அணு என அறியப்பட்டாலும், ஆணவ மலத்தால் மறைப்புண்டமையால் இறைவனை அறியாது என்றார்.

வித்துக்குள்ளே சத்து

1986. படர்கொண்ட ஆலத்து வித்து - அது போல,
சுடர்கொண்ட அணுவினைத் தூவழி செய்ய,
இடர்கொண்ட பாச - இருள் அற ஓட்ட
நடர்கொண்ட நல்வழி நாடலும் ஆமே.

படர்கொண்ட [1]வாலத்து வித்தது போலச்
சுடர்கொண் [2]டணுவினைத் [3]தூவழி செய்ய[4]
விடர்கொண்ட [5]பாச விருளற வோட்ட[6]
நட்ர்கொண்ட நல்வழி நாடலு மாமே. (2)

வேறு பாடம்: 1. வாலது (ஆ இ ஓ) I; வாலதின் (சங்) 2. டணுவனைத் (ஓ) III. 3. தூய்வெளி (ஆ) I. 4. செய்யும் (சங்) 5. மாயா (ஈ) II. 6. வோட்டி (இ ஓ) I.

கருத்து: ஆலமரத்தின் விதையில், அம்மரத்தின் அனைத்து உறுப்புகளும் அடங்கியிருத்தலைப் போல, ஆன்மாவில், வினைகளால் ஏற்படும் உலக அனுபவத்தை நுகர்தற்கு உரிய இயல்பும், பற்று நீங்கி இறைவன் திருவருளைச் சார்வதற்கு ஏற்ற இயல்பும் அடங்கியுள்ளன. மெய்ஞ்ஞானம் ஆகிய ஒளியினால், ஆன்மாவைத் தூய வழியில் செல்லச் செய்தால், ஆணவமலமாகிய இருளை ஓட்டுதற்கு, நடராசப்பெருமான் வைத்த நன்னெறியை அது நாடும்.

இங்கு நன்னெறி என்பது வீடுபேறு.

கலப்பால் ஒன்று, தன்மையால் வேறு

1987. அணுவுள் அவனும், அவனுள் அணுவும்
கணு அற நின்ற கலப்பு - அது உணரார்
இணையிலி ஈசன் -அவன் எங்கும் ஆகித்
தணிவுஅற நின்ற சராசரத் தானே.

அணுவுள் [1]ளவனு [2]மவனுள் ளணுவுங்
[3]கணுவற நின்ற கலப்ப துணரா
ரிணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற [4]நின்ற [5]சராசரத் தானே. (3)

வேறு பாடம்: 1. எணுவனு (ஆ இ ஈ) II. 2. எணுவுள் (அ) I. 3. கணுவுற (ஆ) I. 4. நின்றான் (விசு) (தி) (வ) 5. சராசரந் (ஆ இ) I.

கருத்து: ஆன்மாவில் சிவனும், சிவனுள் ஆன்மாவுமாகப் பிரிவின்றி நிற்கும் கலப்பை மாந்தர் அறியார். ஒப்பற்ற சிவன் சராசரம் எங்கும் வியாபகமாகி, அவ்வியாபகத்தில் சிறிதும் குறைவின்றி நின்றான்.

ஆன்மாவும் இறைவனும் பிரிவின்றி இருத்தல் எப்போதும் உண்டு. ஆன்மாவினுள் இறைவன் 'வியாப்பியாக' - ஒன்றாதல் தன்மை உடையவனாக - இருப்பதும் எப்போதும் உண்டு. ஆன்மா வீடுபேற்று நிலையில் சிவனது அருள் வியாபகத்துள் அடங்கியிருக்கும். (தற்போதம் கெட்டு சிவபோதம்பெற்று நிற்கும்) அதுவன்றி, சிவனைப் போல, தானே எங்கும் வியாபித்திருக்காது. இதை உணர்த்தவே, "அவன் எங்கும் ஆகித் தணிவற நின்ற சராசரத்தான்" என்றார். ஆன்மா - இறைவன் தொடர்பு அத்துவிதத்தொடர்பு என முதலில் கூறிப் பின், ஆன்மா இறைவனாகிவிடாது என உணர்த்தினார். இதனைக் 'கலப்பால் ஒன்று, பொருட்டன்மையால் வேறு என்பர். உலக வாழ்வின் போது, ஆணவமலத்தின் தொடர்பால் அணு எனப் பெயர் பெறும் ஆன்மா, அம்மலம் நீங்கிய வீடுபேற்றிலும், இறைவன் அண்டமெங்கு மாய் விளங்குதலை நோக்க, "அணுவே" என்றார்.

(iv) சீவன்

பார்க்க முடியுமா சீவனை?

1988. மேவிய சீவன் வடிவு - அது சொல்லிடில்,
கோவின் மயிர் ஒன்று நூறு உடன் கூறு இட்டு
மேவிய கூறு - அது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறு நூறாயிரத்து ஒன்றே.

[1]மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது வாயிர மாயினா[2]
லாவியின் கூறுநூ றாயிரத் தொன்றே[3]. (1)

வேறு பாடம்; 1. ஓவிய (அ) I. 2. மானா (அ இ ஓ) II. 3. தொன்றாமே (துடி)

கருத்து: சீவனின் வடிவம் யாது எனின்: பசுவின் ஒரு மயிரை நூறு கூறு இட்டு, அவற்றுள் ஒன்றை ஆயிரம் கூறு இட்டால், அவ்வாயிரத்தின் ஒரு கூறே ஆகும்.

அணுவாகச் சொல்லப்படும் உயிரே சீவன் என்றும் சொல்லப்படும். சீவனின் வடிவு மிகவும் நுண்ணியது என்றார்.

குறிப்பு: இதற்கு அடுத்ததாகப் பதிப்புகளில் உள்ள "ஏனோர் பெருமையன்" என்னும் பாடல் பின்னர், "தோத்திரம்" என்னும் அதிகாரத்திலும் காணப்படுகிறது. அது சுவடிகளில் 'சீவன்' - அதிகாரத்தில இல்லை. 'தோத்திர' - அதிகாரத்தில் இருப்பதே பொருத்தம் எனக்கொண்டு, இப்பதிப்பில், இங்கு அப்பாடல் சேர்க்கப்படவில்லை.

பழக்க வாசனை

1989. உண்டு, தெளிவன் உரைக்க, வியோகமே
கொண்டு பயிலும் குணமில்லை ஆயினும்
பண்டு பயிலும் பயிர்ச் சீவனார், பின்னைக்
கண்டு சிவன்உருக் கொள்வர் கருத்துளே.

[1]உண்டு [2]தெளிவ னுரைக்க வியோகமே
கொண்டு [3]பயிலுங் குணமில்லை யாயினும்
[4]பண்டு பயிலும் [5]பயிர்ச்சீவ னார்பின்னைக்[6]
கண்டு சிவனுருக் கொள்வர் கருத்துளே. (2)

வேறு பாடம்: 1. உண்டுந் (ஆ இ ஈ ஓ) I. 2. தெளிவென் (த) 3. மயிலுங் (சங்) 4. பண்டும் (ஓ) III. 5. பயில்சீவ (ஓ) I. 6. னார்மின்னை (ஓ) I.

கருத்து: பயிர்போலும் இளமைத்தன்மையுடைய சீவன், இறையனுபவம் பெற்று, இறைவனே மெய்ஞ்ஞானத்தை உபதேசிக்க, அதனால், அவனைத் தன்னின் வேறாகக் கருதும் இயல்பு உடையதாய் இராது ஆயினும், உலகியலில் பலகரலம் பயின்ற காரணத்தால், சிலவேளை இவ்வியல்புலிருந்து மாறி, பிறகு தனது குறையை உணர்ந்து, சிவோகம் பாவனை செய்யும்.

தெளிவன் - ஞானமே உருவான இறைவன்.

எதைச்சேருமோ, அதைப்போல ஆகும்

1990. மாயா உபாதி வசத்து ஆகும்; சேதனத்து
ஆய குரு - அருளாலே அதில் தூண்டட,
ஒயும் உபாதியோடு ஒன்றாது உயிர்
ஆய துரியம் புகுந்து அறிவாகுமே.

[1]மாயா வுபாதி வசத்தாகுஞ் சேதனத்
தாய குருவரு ளாலே யதிற்றூண்ட
வோயு முபாதியோ [2]டொன்றியொன் றாதுயி
ராய துரியம் புகுந்தறி வாகுமே[3]. (3)

வேறு பாடம்: 1. மாய (ஆ ஓ) I. 2. டொன்றினென் (சைவ) 3. வாகவே (ஓ ஓ) II; வார்களே (ஆ இ ஈ) II.

கருத்து: உயிர் மாயையின் காரியமாகிய துன்பத்தில் தோய்ந்து!, தானும், அசத்துப்பொருள் போல நிற்கும், ஞானமே வடிவான குருவின் அருளால் அது ஞானநெறியில் செலுத்தப்பட்டு, செயல் ஒடுங்கும். மாயா உபாதிகளில் பொருந்தியும், பொருந்தாமலும் துரிய நிலையில் புகுந்து, ஞானமே வடிவாக நிற்கும்.

உயிர் சார்ந்ததன் வண்ணமாதலை விளக்கினார். துரியம் - உயிரின் உணர்வு நிலைகளுள் ஒன்று. விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்ற நிலைகளைக் கடந்து, கருவிகளாலன்றி, உயிர் நேரே உணரும் நிலை.

உயிர் தனது அறிவு முற்றிலும் மாயையிலிருந்து விலகி, நேரே இறைவனை உணர்ந்து நிற்கும் இக்காரணம் பற்றி அது சிவிக்கும் அளவில் நிற்றலின் சீவன் என்ற தலைப்பு இட்டு விளக்கினார்.

(V) பசுவன்

கற்றாலும் பயன் என்ன?

1991. கற்ற பசுக்கள் கதறித் திரியினுங்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு
முற்ற பசுக்க ளொருகுடம் பால்போது
[1]மற்ற பசுக்கள் [2]வறட்பசுத் தானே. (1)

வேறு பாடம்: 1. மற்றைப் (ஈ) IV. 2. வறள்பசுத் (விசு) (தி) (வ), வறள்பசு வாந் (துடி)

கருத்து: கல்வியுடைய மாந்தர் சொற்களைப் பேசித் திரிந்தாலும் , வாதமிடுதலில் வெற்றியுற்றோர் விருதுகள் மேற்கொண்டு சிறப்புப் பெற்றாலும் (அவ்விருசாராரும் அனுபவம் இலர் ஆதலின் பயன் இலர்) இறைவனை உணர்ந்தோர் (சிலரே ஆயினும்) அவரது ஞானம் குடம் பால் நிறைந்ததே போல நிறைவானது. மற்றமக்கள் வறண்ட பசுக்களைப்போன்றவரே.

உயிரைப் பசு என்பது சைவமரபு. அதற்கு ஏற்ப, உயிரின் பயன் ஆகிய ஞானத்தைப் பால் என்றார். கொற்றப் பசுக்கள் என வருவது, .எதுகை நோக்கி இயல்பாகிறது.

குறிப்பு: உயிரைப் பசு என்றலே மரபு ஆயினும், சுவடிகளில் பசுவன் என்ற சொல்லாட்சி இருத்தலின், அது மேற்கொள்ளப்பட்டது.

தோட்டத்தையே சுற்றி
வந்தால் என்ன செய்வது?

1992. கொல்லையில் மேயும் பசுக்களைச் செய்வது என்?
எல்லை கடப்பித்து இறைவன் அடிக்கூட்டி
வல்ல, செய்து ஆற்ற மதித்தபின் அல்லது
கொல்லைசெய் நெஞ்சம் குறிப்பு அறியாதே.

கொல்லையின் [1]மேயும் பசுக்களைச் செய்வதென்
னெல்லை கடப்பித் திறைவ னடிக்கூட்டி[2]
வல்லசெய் தாற்ற மதித்தபி னல்லது
கொல்லைசெய் நெஞ்சங் குறிப்பறி யாதே[3]. (2)

வேறு பாடம்: 1. மேவும் (ஓ) I. 2. னடிகூட்டி (ஆ இ ஈ ஒ ஓ) I. 3. யாரே (அ) I.

கருத்து: கொல்லையில் மேயும் பசுக்களைப்போல், புலன்அனுபவம் பெற்று, அவ்வளவில் மகிழும் மக்களை என்ன பயன்பெறச் செய்ய இயலும்? அவர் பயனற்றோரே. இறைவன் மக்களை புலன் எல்லை, மன வெல்லை, அறிவெல்லை - ஆகிய அளவுகளைக் கடக்கச் செய்து, தன் திருவடியை எண்ணச் செய்து, ஆற்றல்மிக்க செயல்களைச் செய்விக்கத் திருவுள்ளம் கொண்டால் அன்றி, உலகியலிலேயே ஆழ்ந்து கிடப்போரின் மனம், வாழ்க்கையின் கருத்தை (நுட்பத்தை பயனை) அறியாது.

ஆற்றல் மிக்கசெயல் - அருளாற்றலால் செய்யும் செயல். பாலை ஆப்பயன் என்பர். அதுபோல் மனித வாழ்வின் பயன ஞானம், ஆனந்தம், நிலை பேறு என்பன. இவற்றை எய்தா வாழ்வு பயனற்றது என்பார், ஆன்மாவைப் பசு என்று கூறும் மரபை ஒட்டிப் பசு உவமை கூறினார். அடிக்கூட்டி - ஏழாம் வேற்றுமைத் தொகை.

(vi) போதன்

பிரியா இரட்டையர்

1993. சீவன் என, சிவனார் என்ன, வேறு இல்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்;
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவன்ஆயிட்டு இருப்பரே.

சீவ னெனச்சிவ [1]னாரென்ன வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ [2]னாயிட் டிருப்பரே. (1)

வேறு பாடம்: 1. னென்ன (அ ஆ இ ஈ ஓ) II; னாரன்ன (ஓ) I. 2. னாயிட்டிங் கிருப்பரே (துடி)

கருத்து: சீவனும் சிவனும் தனித்தனியாக இல்லை; பிரிவின்றிச் சேர்ந்தே உள்ளனர். அங்ஙனம் இருந்தும் சீவன் (ஆணவமல மறைப்பின் காரணமாக) சிவனை அறிய வியலாமல் வாழ்கிறது. (அந்த மறைப்பு நீக்கி) அது சிவனை அறியும்போது சீவன், (தற்போதம் கெட்டு) தன்னைச் சிவனின் வேறு என எண்ணாமல், உணர்வால் சிவமாகி நிற்கும்.

உணர்வும் நினைவும் செயலும் வேறுஇல்லையாதலின், சீவன் என ஒன்று இல்லை என்னும்படியே இருக்கும். ஆயிட்டு, ஆக என்னும் பொருளின் வந்த வினையெச்சம்.

கண்காணி

1994. குணவிளக்கு ஆகிய கூத்தப் பிரானும்
மணவிளக்கு ஆகிய மன்உயர்க்கெல்லாம்
பண விளக்கு ஆகிய பல் தலை நாகம்
கண விளக்கு ஆகிய கண்காணி ஆமே.

குணவிளக் காகிய கூத்தப் பிரானு
[1]மணவிளக் காகிய மன்னுயிர்க் கெல்லாம்
பணவிளக் காகிய பஃறலை நாகங்[2]
கணவிளக் காகிய கண்காணி யாமே[3]. (2)

வேறு பாடம்: 1. மனவிளக் (அ ஆ ஈ ஓ) I. 2. நாதங் (ஆ இ) I. 3. யாகுமே (ஆ இ ஓ) I.

கருத்து: கருணையில் சிறந்தவனாகிய நடராசப் பெருமான், ஞானத்தையே விளக்காகக் கொண்டு வாழும் உயிர்களுக்கு, அவை, படத்தில்மணி மின்னும் ஐந்து தலைப்பாம்பு போன்ற ஐம்பொறி களின் வசமாகி விடாதவாறு கண்காணிப்பவன் ஆவான்.

அவன் ஞான விளக்கை அளித்து மேற்பார்வை இடுவான் என்க. மனவிளக்கு, எதுகை நோக்கித் திரிந்தது. பஃறலை - பல தலை. கணவிளக்கு - விளக்குக் கூட்டம். இறைவனின் சோதி விளக்குக் கூட்டம் போன்றது. ஐம்புலனும் அறிவே ஆதலின் அதனை, இரத்தினங்களை உடைய ஐந்தலைப் பாம்பு என்றார்.

என் அறிவானான்

1995. அறிவாய், அறியாமை நீங்கியவனே
பொறிவாய் ஒழிந்து எங்கும் தான் ஆனபோதன்,
அறிவாய், அவற்றினுள் தானாய், அறிவின்
செறிவு ஆகி நின்ற அச்சீவனும் ஆமே.

[1]அறிவா யறியாமை நீங்கி யவனே
பொறிவா [2]யொழிந்தெங்குந் தானான போத
[3]னறிவா யவற்றினுட் டானா யறிவின்[4]
செறிவாகி நின்றவச் சீவனு மாமே. (3)

வேறு பாடம்: 1. அறிவறியாமை (அ) I. 2. யொழத்தெங்குந் (தி) 3. மறிவா (அ ஓ) I. 4. யறிவன் (ஓ) I.

கருத்து: வீடு பேற்றில், சீவனின் அறிவாகவே நிற்கும் சிவன், போதன் எனப்பட்டான். அவனது தன்மை இப்பாடலில் கூறப்படுகிறது: சிவன் ஞானவடிவன். இயல்பாகவே பாசத்திலிருந்து நீங்கியவன். அவன் தன் பொறிகளால் அறியாமல், தான் எங்கும் அறிவாகக் கலந்திருப்பதால், அனைத்தையும் ஒருங்கே அறிபவன். அவன் சீவனில், அதன் அறிவாக நிற்பான்; அதுவாகவே நிற்பான்.

விளக்கமாகத் தோன்றும் அறிவு போதம் எனப்படும். வீடுபேற்றில் சீவர்களின் போதமாக நிற்பவன் சிவன்.

முப்பொருள் அனுபவம்

1996. ஆறாறின் தன்மை அறியாது இருந்தேனுக்கு
ஆறாறின் தன்மை அறிவித்தான் பேர்நந்தி;
ஆறாறின் தன்மை அருளால் அறிந்தபின்
ஆறாறுக்கு அப்புறம் ஆகி நின்றானே.

ஆறாறின் றன்மை யறியா திருந்தேனுக்[1]
காறாறின் றன்மை யறிவித்தான் பேர்நந்தி
யாறாறின் றன்மை [2]யருளா லறிந்தபின்
னாறாறுக் கப்புற மாகிநின் றானே. (4)

வேறு பாடம்: 1. திருந்தோனுக் (ஓ) I. 2. யறிவா (இ) II.

கருத்து: முப்பத்தாறு தத்துவங்களின் உண்மைத் தன்மையை அறியாமலிருந்த எனக்கு, என் குருவாகிய நந்தி அதனை அறிவித்தான். அவன் அருளால் நான் அதனை அறிந்தபின், அவன் அத்தத்துவங்களைக் கடந்த பொருளாக விளங்கினான்.

இவ்வொரு பாடலில், ஆசிரியர், தத்துவம், ஆன்மா, சிவம் இவற்றின் தன்மையை உணர்த்தியுள்ளார். தத்துவங்கள் மாயா காரியம். ஆன்மா அவற்றின் வேறானது. இறைவன் தத்துவங்களிலும், ஆன்மாவிலும் நின்றாலும், அவற்றைக் கடந்தவன்.

அருள் ஒளி காணார், இருளில் அலைவார்

1997. சிவம் ஆகிய அருள், நின்று அறிந்(து) தே ரார்
அவம் ஆம் மலம் ஐந்தும் ஆவது அறியார்
தவம் ஆய செய்து தலைப்பறிகின்றார்
நவமான தத்துவம் நாடகிலாரே.

சிவமா கியவரு [1]ணின்றறிந் தேரா[2]
ரவமா மலமைந்து மாவ தறியார்
தவமாய செய்து [3]தலைப்பறி கின்றார்
நவமான தத்துவ [4]நாடகி லாரே. (5)

வேறு பாடம்: 1. ளின்றறிந் (ஆ இ) I; ணன்றறிந் (ஓ) I. 2. தோரா (விசு) (தி) (வ) 3. தலைப்படு (ஓ) II. 4. நாடகில் (ஓ) III.

கருத்து: மனிதர் சிவமேயான திருவருளை, அவ்வருள் வழியில் வாழ்ந்து, அறிந்து, மேன்மேலும் சிந்திக்கமாட்டார். பயனற்ற ஐந்து

மலங்களும் நீங்க வழியின்றித் தமக்குப் பிறவிகள் தோன்றுவதற்குக் காரணமாக நிற்பதை அறியார். காமியமான தவங்களைச் செய்து, அவற்றினால் ஆற்றல் பெற்று, அதனால் செருக்குக்கொண்டு தலையறுக்கப்படுகின்றார். புதியதாகிய மெய்ஞ்ஞானத்தைப் பெற விருப்பங்கொள்ள மாட்டார்.

முதல் அடி: அறிந்து என்பது ஈறு தொக்கது. *ஐந்து மலம்* : ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. தலைபறிபடுதல், தலைப்பறிதல் என மருவியது. பிரமன் செருக்குக் கொண்டு தலையறுப்புண்ட வரலாறு காண்க.

கிளியைப் பறக்கவிட்டுக் காக்கையை வளர்ப்பதா?

1998. நாள்தோறும் ஈசன் நடத்தும் தொழில் உன்னார்
நாள்தோறும் ஈசன் நயந்து ஊட்டல் நாடிடார்
நாள்தோறும் ஈசன் நல்லோர்க்கு அருள் நல்கலால்
நாள்தோறும் நாடார் அந்நாள் வினையாளரே.

நாடோறு மீச னடத்துந் தொழிலுன்னார்
நாடோறு மீச னயந்தூட்ட னாடிடார்
நாடோறு [1]மீசனல் லோர்க்கரு ணல்கலா[2]
னாடோறு [3]நாடாரந் நாள்வினை யாளரே. (6)

வேறு பாடம்: 1. மீசனே (அ) I. 2. நல்கறா (த) 3. நாடார்கணாள்வினை (ஆ இ ஈ) III.

கருத்து: ஆன்மாக்களின் பொருட்டுச் சிவபெருமான் நாள்தோறும் ஐந்தொழில் நடத்துதலை எண்ணார். தமக்குப் போகத்தைத் தருதலை எண்ணார். நல்லோர்க்கு அவன் அருள் வழங்குவதால், அவ்வருளைப் பெற முனையார். வினைகளைப் புதிது புதிதாய்ச் செய்து, (பிறப்புக்கே வழி செய்கின்றனர்).

நயந்து - கருணையால் விரும்பி. போகம் - வினைப்பயனாகிய இன்ப துன்பங்கள். நாள் மலர் என்பது போல், நாள்வினை புது வினையைக் குறிக்கும். சிவன் ஐந்தொழில் நடத்துதல் அறிந்து, எல்லாம் அவன் செயல் என்று இராமல், தமது செயல் என்றே எண்ணிச் செய்து, வினைகளைச் சேர்த்துக்கொள்கின்றார்கள் என்க.

திருமந்திரம் இரண்டாம் பகுதி முற்றும்

பாட்டு முதற்குறிப்பு
அகர நிரல்

எண் : பாட்டெண்

அ

அகம்படி	1852
அகம்புகுந்	1785
அகரமாயி	1839
அகலிட	1706
அகன்றார்	1606
அகார்	1836
அங்கார	1768
அச்சிவ	1863
அஞ்சிட்ட	1024
அஞ்சுமுக	1719
அஞ்சொன்	1099
அடிசார	1587
அடியா	1656
அடிவைத்	1682
அடுக்குந்	1133
அடைந்திடும்	1313
அணுவி	1985
அணுவுள	1987
அண்டத்	1348
அண்டமுத	1198
அண்டமுமே	1849
அண்ணலுட	1929
அண்ணலை	1490
அண்ணலைநாடிய	1520
அண்ணிக்கும்	1508
அது விது	1143
அது விது	1218
அது விது	1488
அது விதுவென	1174
அது வித்	1909
அதுவுணர்ந்	1705
அத்தமில்	1888
அத்தனவ	1810
அத்திசைக்	1716
அந்தநடு	1079
அந்தமிலா	1021
அந்தமில்	1891
அந்த முமாதி	1905
அந்தமுமீறு	1253
அந்தம்	1066
அந்திப்பன்	1489
அந்நெறி	1531
அப்பது	1248
அமுதச்சசி	1937
அமுதம்தாக	1394
அமைச்சரு	1614
அம்பன்ன	1136
அம்மனை	1240
அம்முத	1251
அம்மையு	1241
அரசுட	1651
அரநெறி	1547
அரனெறி	1528
அருங்கரை	1483
அருட்கண்	1789
அருந்திய	1911
அருளது	1802
அருளாலமு	1782
அருளார	1660
அருளிற்	1781
அருளிற்றலை	1795
அருளெங்கு	1779
அருளே	1787
அருள்	1061
அவளை	1043
அவனு	1771
அவன்பா	1858
அவ்வின	1256

அவ்வுல 1636
அழிகின்ற 1914
அழிதக 1843
அளந்தே 1114
அளியொத்த 1054
அறவன் 1600
அறிந்த 1278
அறிந்திடு 1250
அறிந்திடு 1271
அறிந்திடுஞ் 1332
அறிந்திடுவார் 1314
அறிந்துணர்ந் 1572
அறியாப் 1857
அறியவொண் 1557
அறியாதழி 1930
அறிவா 1995
அறிவார் 1044
அறிவான 1122
அறிவி 1780
அறிவுட 1539
அறிவும் 1456
அறுகாற் 1482
அன்பினுரு 1441
அன்றிய 1978
அன்றிரு 1374
அன்றுநின் 1745
அன்னத் 1943
அன்னமிரண் 1983
அன்னம் 1944
அன்னிய 1470

ஆ

ஆகம 1415
ஆகாச 1249
ஆகிய 1211
ஆகின்ற சத் 1715
ஆகின்ற சந் 1354
ஆகின்ற நந் 1827
ஆகின்ற நாள் 1206
ஆகின்ற மண் 1367
ஆகின்ற மூலத் 1366
ஆகின்ற மூவ 1067
ஆகுமுடம்பு 1693
ஆங்கவை 1732
ஆங்குகலை 1967
ஆடம்பரங் 1639
ஆடியும் 1797
ஆணைய 1120
ஆதன 1900
ஆதாரசோத 1477
ஆதாரமாதே 1737
ஆதித்தனன் 1954
ஆதித்தனுள் 1957
ஆதித்தனோடி 1963
ஆதித்தனோடே 1958
ஆதிபரந் 1750
ஆதிப்பிரா 1555
ஆதியனாதி 1113
ஆதியனாதிய 1104
ஆதியனாதியு 1109
ஆதிவயிரவி 1089
ஆதிவித 1059
ஆமநு 1210
ஆமயன்மா 1196
ஆமயன்மா 1228
ஆமாறுரைக்கு 1546
ஆமேசதா 1336
ஆமேபிரான் 1554
ஆமேயெழுத் 1290
ஆமேவப் 1280
ஆமேயதோ 1398
ஆமேயனைத் 1328
ஆமையொன் 1194
ஆயத்து 1515
ஆயிழை 1207
ஆயுமலரி 1694
ஆயுமறிவுங் 1226
ஆயுமறிவோ 1786
ஆய்ந்தறி 1556
ஆய்ந்துணர்ந் 1551
ஆராதனை 1812

ஆருமறி 1734
ஆருமுரை 1292
ஆருயி 1100
ஆரேதிரு 1188
ஆலமுண் 1199
ஆலிக்குங் 1150
ஆவிக்கம 1823
ஆவின 1254
ஆவின 1111
ஆறந்த 1692
ஆறாறின் 1996
ஆறிடும் 1840
ஆறியிருந்த 1128
ஆறிரு 1287
ஆறுசம 1518
ஆறைந்து 1918
ஆற்றிற் 1626
ஆனசம 1530
ஆனவராக 1062
ஆனைந்து 1813
ஆனைமயக்கு 1404

இ

இசைந்தெழு 1574
இடங்கொண்ட 1014
இட்டவிதழ் 1299
இணையார் 1409
இதயத்து 1580
இதுபணிந் 1439
இதுவப் 1159
இத்தவ 1553
இந்துவி 1176
இந்துவும் 1832
இந்துவும் 1833
இமையங் 1535
இமையவர் 1542
இயங்கு 1851
இரதமுத 1912
இரவும் 1123
இரவும் 1513
இராசியுட் 1257
இருக்குஞ் 1455
இருட்டறை 1499
இருணீக்கி 1501
இருந்தனர் 1357
இருந்தவிச் 1378
இருந்தழு 1537
இருந்தனடன் 1135
இருந்தனளேந் 1103
இருந்தனளேந் 1173
இருந்தனளேந் 1178
இருந்து 1611
இருவினை 1512
இருளது 1108
இருளார்ந்த 1723
இருள் சூழறை 1502
இலிங்கநற் 1735
இலிங்கம 1695
இலைதொட்டுப் 1624
இல்லடைந் 1403
இழிகுலத் 1642
இறப்பும் 1598
இறையடி 1685
இனியதென் 1095
இன்பக் 1117
இன்பமுந் 1641
இன்னெய்த 1613

ஈ

ஈரண்டத் 1968
ஈராறு 1689
ஈருமனத்தை 1549
ஈறது 1177

உ

ஊகங்கண்ட 1033
உகந்தனள் 1379
உகந்து 1151
உச்சியும் 1830
உடலான 1424
உடலிற் 1661
உடல் 1761
உடையவ 1129

உணர்த்து 1684
உணர்ந்திருந் 1359
உணர்ந்துட 1053
உணர்ந்துல 1158
உணர்ந்தெழு 1209
உணர்ந்தே 1731
உணர்ந்தொழிந் 1237
உணர்வுடை 1768
உண்டில்லை 1055
உண்டு 1989
உண்டோ 1388
உண்மை 1564
உதயத் 1901
உத்தமன் 1029
உயர்ந்து 1484
உயிருஞ் 1762
உயிர்க்குயி 1430
உய்ந்தன 1445
உரமடி 1951
உருவம் 1235
உருவிப் 1964
உருவு 1746
உரைத்த 1080
உரைத்திடுங் 1006
உரையற் 1577
உலகிலெடுத் 1696
உலந்திலர் 1710
உள்ளக்கரு 1886
உள்ளத்திதை 1106
உள்ளத்தினுள்ளே 1171
உள்ளத்துமுள் 1517
உள்ள்த்துளே 1516
உள்ளம் 1804
உள்ளவரு 1971
உள்ளொளி 1184
உழவனுழ 1603
உழைக்க 1820
உழைக்கொண்ட 1814
உறங்கு 1097
உறுமாறறி 1532
உறைபதி 1191
உற்ற 1798
உற்றிட 1343
உன்னிட்ட 1269
உன்னு 1982

ஊ

ஊருமுலக 1405
ஊழி 1443
ஊனமில் 1884

எ

எங்குஞ் 1887
எடுக்கின்ற 1020
எடுத்த 1009
எட்டாகிய 1296
எட்டுத் 1862
எண்ணமர் 1385
எண்ணிலா 1889
எண்ணிவிதய 1727
எந்தைபர 1753
எந்தைபிரா 1016
எம்மாருயி 1609
எய்திட 1192
எய்திய 1506
எல்லா 1561
எழுத்தவை 1252
எழுத்தொடு 1446
எளியன 1487
எறிகதிர் 1965
என்றங் 1393
என்றாயோ 1854
என்றுமெழு 1223
என்னம்மை 1118

ஏ

ஏகம்பரா 1295
ஏடங்கை 1057
ஏதும் 1297
ஏத்தின 1698
ஏத்துவர் 1818
ஏந்திழை 1186

ஏயெனி 1166
ஏய்ந்த 1352
ஏரொளி 1242
ஏறுடை 1841

ஐ

ஐம்முத 1320

ஒ

ஒடுங்கி 1608
ஒண்சுட 1699
ஒத்தசெங் 1449
ஒத்தடங் 1052
ஒத்து 1623
ஒழியாத 1926
ஒளிக்கும் 1331
ஒளியது 1335
ஒளியு 1800
ஒன்பதின் 1969
ஒன்றதுபே 1543
ஒன்றதுவா 1792
ஒன்றியவாறு 1730
ஒன்றியசக் 1351
ஒன்றுமிரண் 1423
ஒன்றெனக் 1758

ஓ

ஓங்காரத் 1541
ஓங்காரி 1063
ஓடுங் 1663
ஓதலும் 1617
ஓதிடும் 1897
ஓதியநந்தி 1070
ஓதியவன் 1110
ஓரிலிதுவே 1294
ஓரைம்பதின் 1220

க

ககாராதி 1293
கங்காளன் 1650
கடங்கடந் 1979
கடந்தவன் 1386
கண்டங்க 1411
கண்டசிலம்பு 1075
கண்டவிச் 1322
கண்டவிச் 1377
கண்டிடு 1260
கண்டிடுஞ் 1309
கண்டுகொளும் 1316
கண்டுகொண் 1507
கண்டெண் 1155
கண்ணுடை 1154
கண்ணுடை 1370
கதிர்கண்ட 1637
கத்தவும் 1618
கத்தித் 1555
கத்துங் 1523
கரந்துங் 1612
கருத்துளி 1925
கருத்துறுங் 1193
கலக்குநாள் 1933
கலந்திரு 1028
கலந்துநின் 1202
கலப்பறி 1349
கலைத்தலை 1102
கழலார் 1584
கழிப்படுத் 1816
கழிவுமுத 1853
கற்பன 1407
கற்றபசு 1991
கன்றலு 1670
கன்னித்துறை 1504
கன்னியுங் 1107
கன்னியொளி 1156

கா

காணலு 1338
காணாத 1594
காணுமிரு 1082
காணும்பல 1077
காணும்பொரு 1289
காண்டற் 1775
காதணி 1648
காதுப்பொ 1410
காயத்தி 1913

காயத்தே 1635
காயபரத் 1769
காரணிசத் 1375
காரணிமந் 1078
காரொளி 1261
காலங்க 1932
காலரை 1276
காலவி 1203
கானுறு 1828

கி

கிரியை 1434

கு

குணவிளக் 1994
குண்டலக் 1040
குத்து 1152
கும்பக் 1116
குரவ 1578
குருட்டினை 1664
குருவே 1566
குரைக்கின்ற 1756
குலாவிய 1101
குவிந்தனர் 1401
குறிக்னின்ற 1767
குறைவது 1288

கூ

கூடித்தவஞ் 1620
கூடியதம் 1274
கூடியபாத 1713
கூடியமுக் 1010
கூடுமுடல் 1765
கூபத்துச் 1383
கூவிய 1086
கூறியகன்னி 1169
கூறியசக் 1272
கூறுமினூறு 1722
கூறுமினெட்டு 1318
கூறுமின்னீர் 1803

கே

கேடறு 1414
கேடிலி 1395
கேடில்லை 1342
கேடுங் 1602

கை

கையவை 1281

கொ

கொங்கீன்ற 1165
கொடியதி 1185
கொடியாறு 1030
கொண்டகன 1358
கொண்ட குண 1921
கொண்ட குழி 1848
கொண்டங் 1402
கொண்டவிக் 1008
கொண்டவிம் 1277
கொண்டவிவ் 1908
கொண்டனள் 1092
கொண்டானடி 1766
கொம்பனை 1048
கொல்லையின் 1992
கொழுந்தினைக் 1752
கொள்ளினு 1677

கோ

கோயில்கொண்டன் 1711
கோயில்கொண்டா 1712
கோலக்குழவி 1090
கோனக்கன் 1438

ச

சடங்கது 1180
சட்கோணந் 1298
சத்தமுஞ் 1453
சத்தமுஞ் 1950
சத்திக்கு 1751
சத்திசிவன் 1738
சந்தி சிவன் 1754
சத்தி சிவன் 1755
சத்தி தரா 1720
சத்திதா 1724
சத்திநற் 1741
சத்திநாற் 1728
சத்தியி 1221

சத்தியு 1217
சத்தியென் 1187
சத்து 1406
சத்து 1681
சத்து 1417
சந்திரன் 1966
சமயங் 1493
சமயத் 1717
சமயம் 1436
சமாதி 1190
சமைய 1826
சயில 1496
சரியாதி 1435
சற்குணம் 1687
சன்மார்க்க 1216
சன்மார்க்க 1467
சன்மார்க்க 1468
சன்மார்க்கந் 1473
சன்மார்க்க 1469

சா

சாணாகத் 1824
சாதன 1034
சாத்திக 1680
சாத்தியும் 1822
சாத்திர 1615
சாம்பவி 1284
சாம்பவி 1872
சாயுச்சி 1498
சார்ந்த 1433
சாலோக 1492
சாற்றறி 1428
சாற்றியவிந்து 1940
சாற்றிய வேதம் 1088
சாற்றுஞ் 1462

சி

சிகைநின்ற 1083
சித்தஞ் 1628
சித்தமி 1567
சித்தி 1560
சிந்தையி 1356
சிந்தையில் 1189
சிந்தையினுள்ளே 1127
சிந்தையிவள்ளே 1356
சிவகதி 1521
சிவஞானி 1654
சிவமல்ல 1519
சிவமாகிய 1997
சிவமான 1571
சிவமொடு 1788
சிவயோகி 1860
சிவயோகி 1883
சிவனரு 1633
சிவனவன் 1545
சிவனே 1565

சீ

சீராரு 1683
சீர்நந்தி 1842
சீவனெனச் 1993
சீவப்ப 1304

சு

சுத்தசிவ 1426
சுத்தசிவன் 1563
சுத்தம 1416
சுத்தவம் 1042

சூ

சூடிடு 1195
சூடுமி 1197
சூலங் 1071
சூலந்தண் 1384
சூழ்ந்தெழு 1368

செ

செஞ்சுட 1952
செத்தார் 1885
செய்திடும் 1902
செய்யதிரு 1302
செய்யன் 1505
செய்யு 1919

சே

சேயனணி 1525
சேர்ந்தகலை 1026

சேர்ந்தவ 1334
சேவடி 1319

சை

சைவசம 1552
சைவஞ் 1497
சைவப் 1463
சைவப் 1544

சொ

சொல்ல 1153
சொல்லிய 1244

சோ

சோதி 1678

சௌ

சௌமுத 1306

ஞா

ஞாலம் 1246
ஞானச் 1461
ஞானத் 1452
ஞானத் 1459
ஞானத் 1658
ஞானமி 1640
ஞானமி 1652
ஞானம் 1457
ஞானிக்குடன் 1458
ஞானிபுவி 1412

த

தக்கபரா 1163
தங்கிய 1495
தண்டறு 1837
தத்துவ 1721
தமிழ்மண் 1630
தரிக்கின்ற 1573
தரித்திடுந் 1145
தருவழி 1360
தரையுற்ற 1708
தலைமிசை 1856
தலையான 1791
தலைவி 1050
தவத்திடை 1669
தவமிக் 1645
தவம் வேண் 1616
தனமது 1365
தனிச்சுட 1974
தனிநா 1239
தன்பா 1454
தன்மனை 1893
தன்மேனி 1733
தன்னுளு 1337
தன்னைய் 1418

தா

தாங்கிய 1372
தாங்கியுல 1231
தாங்குமி 1510
தாடந்த 1575
தாபரத் 1700
தாமக் 1081
தாமேலுறை 1119
தாமேலுறை 1130
தாரகை 1259
தாரத்தி 1391
தாரமு 1167
தாவித்த 1142
தாழ்விலர் 1846
தாளணி 1039
தாளதி 1341
தாளதி 1381
தானது 1330
தானத்தி 1873
தானந்த 1213
தானந்தி 1568
தானவ 1466
தானவ 1576
தானறி 1659
தானாவயிந் 1037
தானான 1162
தானிகழ் 1212
தானிவை 1881
தானிவ்வகை 1882
தானெங் 1045
தானென் 1591

தானேகழ 1327
தானேதலைவி 1064
தானேபடைத் 1790
தானேயரு 1916
தானேயறி 1777
தானேயுப 1946
தனேயுல 1955
தானேயெழுந் 1350
தானேயெழுந் 1121
தானே ரெழு 1739
தானே விரி 1980
தானே வெளி 1347

தி

திகைக்குரி 1847
திரிபுரை 1036
திருந்து 1222
திருமன்னு 1486
திருவடிஞா 1582
திருவடிவைத் 1581
திருவாகிச் 1569

தீ

தீம்புன 1500

து

துணிந்தா 1855
துரியங்க 1871
துவாதச 1877
துன்றுந் 1703

தூ

தூநெறி 1879
தூம்பு 1607
தூயவிமா 1701
தூரறி 1538

தெ

தெய்வச் 1981
தெரிசிக்க 1964
தெளிந்திடு 1275
தெளிவறி 1465
தென்னன் 1069

தே

தேர்ந்தவர 1548
தேர்ந்தறி 1776
தேர்ந்தெழு 1161
தேவர்களோ 1819
தேவர்பிரானை 1748
தேவர்பிரான் 1972
தேவனுஞ் 1562

தை

தையனல் 1093

தொ

தொடங்கி 1234
தொடியார் 1140
தொழிளறி 1674

தோ

தோத்திரஞ் 1058
தோறபோர்வை 1303
தோன்றிடும் 1225

ந

நடந்தது 1132
நடந்த 1279
நடந்திடுநா 1324
நடந்திடும்பா 1312
நடுவு 1718
நணுகினு 1511
நண்ணிய 1460
நலந்தரு 1308
நல்குந் 1038
நல்லதென் 1012
நல்லொளி 1018
நவகுண்ட 1005
நவமிகு 1892
நவாக்கரிசக் 1305
நவாக்கரி 1307
நவிலும் 1137
நவிற்று 1230
நள்குகை 1896
நற்குகை 1894
நற்குட 1011
நன்மணி 1389

நா

நாகமு 1605

நாடறி	1285
நாடிகண்	1096
நாடுநக	1431
நாடுமுற	1638
நாடோறு	1998
நாணுநல்	1725
நாதனு	1205
நாபிகண்	1977
நாலஞ்	1286
நாலான	1747
நாலித	1144
நாலுமிரு	1688
நாலேழு	1870
நாவுக்கு	1373
நானறிந்	1778
நானிது	1772
நானென	1770
நானென்	1427
நி	
நிலாமய	1201
நினைத்திடு	1310
நினைவதும்	1807
நின்றசிகார	1945
நின்றதிரி	1041
நின்றதுபுந்தி	1396
நின்றது வண்	1262
நின்றபரா	1125
நின்றவணே	1051
நின்றவயி	1087
நின்றவிக்	1019
நின்றவிச்	1376
நின்றவிச்	1387
நின்றன	1208
நின்றன	1224
நின்றா	1056
நின்றிடுமேழு	1339
நின்றிடுமேழ்	1344
நின்றிடும்	1258
நின்றுதொழு	1485
நின்றுமிருந்	1962
நீ	
நீங்காச்	1589
நீர்தரு	1315
நு	
நுண்ணறி	1215
நூ	
நூலுஞ்	1649
நூறு	1522
நெ	
நெஞ்சுசிரஞ்	1726
நெறியது	1227
நெறியைப்	1601
நெறிவழி	1442
நே	
நேயத்தே	1590
நேயத்தே	1793
நேரறி	1975
நேர்தரு	1311
நேர்ந்திடு	1429
ப	
பகலவன்	1953
பகலுமிர	1835
பகவற்	1844
பகையில்லை	1291
பகையில்லை	1325
பசுபாச	1471
பச்சிம	1663
பச்சை	1380
பஞ்சத்	1668
பஞ்சலோ	1895
படர்கொண்ட	1986
படர்சடை	1625
படமாடக்	1836
பண்ணிய	1353
பதைக்கின்ற	1676
பதைத்தொழிந்	1675
பத்தன்	1440
பத்திட்	1022
பத்திபணித்து	1558

பத்தியு	1570
பத்துத்	1437
பத்துமுக	1168
பயனறி	1817
பரந்த	1362
பரந்திருந்	1364
பரந்துல	1866
பராசத்தி	1046
பராசத்தி	1157
பராபர	1743
பரிசறி	1529
பழுக்கின்ற	1627
பன்மணி	1073
பன்னிரண்	1065
பா	
பாகம்	1204
பரங்கமர்	1536
பாசத்தி	1783
பாசத்தைக்	1559
பாசமதா	1369
பாசம்பசு	1494
பாருக்குக்	1959
பாரையிடந்து	1961
பார்க்கலு	1270
பார்க்கின்ற	1915
பார்த்திட	1032
பார்த்திட்டு	1923
பார்ப்பதி	1023
பாலனு	1124
பாலித்	1181
பான்மொழி	1806
பி	
பிச்சை	1865
பிணங்கி	1478
பிதற்றி	1105
பிரானரு	1629
பிரானல்ல	1744
பிரிவின்றி	1170
பிறந்து	1599
பிறப்பறி	1610
பிறவா	1784
பு	
புகையில்லை	1333
புண்ணியநந்தி	1085
புண்ணியனாகி	1329
புண்ணியனெந்தை	1634
புண்ணியஞ்	1809
புண்ணியபாவ	1631
புண்ணியமண்	1831
புண்ணியமா	1890
புரிந்தருள்	1172
புறமக	1907
புறமே	1801
புனையவல்	1138
புன்ஞானத்	1653
பூ	
பூசனை	1076
பூசனை	1282
பூசனைச்	1390
பூசிக்கும்	1301
பூசித்தல்	1481
பூதியணி	1646
பூரணந்	1419
பூரித்த	1074
பூவினிற்	1444
பெ	
பெட்டடித்	1764
பெண்ணல்ல	1850
பெண்ணொரு	1148
பெருந்தன்மை	1773
பெருந்தன்மை	1825
பெற்றான்	1238
பே	
பேசிய	1085
பேச்சற்றநன்	1149
பேச்சற்றவின்	1579
பேணிப்பிறவா	1448
பேதையிவ	1400
பேரொளி	1361

பேறுடை 1317

பை

பைங்கொடி 1131

பொ

பொய்த்தவஞ் 1643
பொய்யலன் 1973
பொய்வேடம் 1644
பொருள் 1774
பொற்கொடிமா 1232
பொற்கொடியா 1399
பொன்னார் 1413

போ

போகஞ்செய் 1047
போகமு 1697
போதுபுனை 1707
போற்றி 1139

ம

மங்கையு 1179
மஞ்சன 1808
மணிமுடி 1363
மண்டலத் 1371
மண்டலத் 1976
மண்ணி 1392
மண்ணை 1960
மதித்திடு 1273
மந்திரசக் 1268
மந்திரமாவது 1588
மயக்கு 1524
மயலற் 1662
மருட்டிப் 1503
மருவுந் 1474
மருவொத்த 1126
மலர்ந் 1759
மறப்புற் 1811
மறையவ 1704
மனத்திடை 1622
மனத்திலெழுந் 1665
மனத்துறை 1621
மனத்தொடு 1949
மனபவ 1834
மனம்புகுந் 1742
மன்னும 1673
மன்னுமொ 1540

மா

மாட்டிய 1017
மாதரிடத் 1939
மாதரை 1931
மாதவமாக 1031
மாதவர்க் 1527
மாதுநல் 1146
மாத்திரை 1838
மாமாயை 1035
மாயம் 1236
மாயாவு 1990
மாயாள் 1917
மார்க்கங் 1214
மார்க்கஞ் 1472
மாலை 1514
மாறாத 1420
மானந்தி 1729
மானுட 1709

மி

மினற்குறி 1550
மின்னா 1013

மீ

மீதுசொரிந் 1899

மு

முக்கணன் 1015
முச்சது 1134
முடிமன் 1585
முத்தநற் 1025
முத்தர் 1432
முத்திரை 1164
முத்திரை 1596
முத்துடன் 1702
முத்து 1182
முன்னிருந் 1859
முன்னின் 1632
முன்னை 1593

மூ

மூன்றுள 1175

மெ

மெய்கண்ட 1027
மெய்ப்பொரு 1340
மெய்யக 1869
மெல்லியல் 1072
மெல்லியல் 1141
மெல்லிய 1323

மே

மேதாதியீ 1060
மேதாதியா 1691
மேலறிந் 1007
மேலாநிலத் 1934
மேலாமருந் 1200
மேலுணர் 1861
மேலென்று 1690
மேலைச் 1597
மேல்துறந் 1604
மேல்வரும் 1245
மேல்வைத்த 1583
மேவியசக் 1300
மேவியசற் 1480
மேவிய சீவன் 1988
மேவியமண் 1183
மேவிய ஞானத் 1829
மேவியெழு 1760

மோ

மோனங்கை 1595
மோனத்து 1878

யோ

யோகச்சம 1451
யோகச்சமா 1475
யோகத்தின் 1875
யோகநற் 1160
யோகமவ் 1938
யோகமும் 1476
யோகிக் 1647
யோகிக்கு 1450
யோகியு 1928
யோகியெண் 1876

வ

வணங்கிடுந் 1326
வந்தடி 1229
வந்திடுமா 1255
வந்திடும் 1903
வரவிருந் 1867
வருத்த 1084
வரைத்து 1757
வலய 1956
வழிசென்று 1534
வழிநடக் 1533
வழியிரண் 1526
வழுத்திடு 1321
வளங்கனி 1479
வளர்பிறை 1880
வறுக்கின்ற 1948
வற்ற 1927
வன்னி 1243

வா

வாக்கு 1874
வாசித்தும் 1491
வாயுமன 1166
வாயொன்று 1667
வாராவழி 1796

வி

விச்சுக் 1864
விடிவ 1671
விடுங்கான் 1920
விட்டபின் 1922
விண்ணமர் 1382
விண்ணினை 1422
வித்தக 1845
வித்திடு 1924
வித்தினி 1910
வித்துக்குற் 1942
விந்துவப் 1970
விந்துவிளை 1935
விந்துவு 1263

விந்துவு	1740
விந்துவு	1941
விந்துவு	1947
விந்துவென்	1936
விரிந்தபின்	1898
விரிந்தவிவ்	1265
விரிந்தவெழுத்	1247
விரும்பி	1447
விரையது	1266
விளக்கினை	1799
விளக்கொளி	1345
விளங்கிடுமேல்	1346
விளங்கிடு	1397
விளங்கு	1904
விளங்கொளியாய்	1233
விளைந்த	1267
விளையும்	1794
விளைவறி	1619
வினைகடிந்	1112
வீ	
வீசமிரண்	1264
வீயமதா	1906
வெ	
வெளிப்படு	1091
வெள்ளக்	1815
வெள்ளடை	1147
வென்றிட	1219
வென்று	1821
வே	
வேடங்	1425
வேட்டவி	1805
வேட்கை	1686
வேண்டிநின்	1749
வேண்டிய	1283
வேதாநெடு	1714
வேதாந்தங்	1421
வேதாந்தஞ்	1408
வேயன	1094
வை	
வைகரி	1984
வைச்சன	1592
வைத்தபசு	1672
வைத்தபொரு	1049
வைத்திடும்	1355
வைத்தே	1586

பின்னிணைப்பு - II

இரண்டாம் பகுதியில் இருமுறை வந்த பாடல்கள்
(நூலில் அவ்வவ்விடங்களில் குறிப்புகள் தரப்பட்டுள்ளன)

பாட்டு முதற் குறிப்பு

1. இரவும் பகலும்
2. உணர்ந்தெழு மந்திரம்
3. கானுறு கோடி
4. ஊழிதோறூழி
5. உய்ந்தனமென்பீர்
6. சைவப் பெருமை
7. ஆதார சோதனை
8. பின்னெய்த
9. தரிக்கின்ற
10. அவ்வுலகத்தே
11. ஆயுமலரின்
12. உணர்வுடையார்
13. ஏறுடையாயிறை
14. கொல்லையின்

பின்னிணைப்பு – III

கலைச் சொல் அகர நிரல்

எண் : பாட்டெண்

அகங்காரம் –	ஆணவ மலத்தால் விளையும் தன்முனைப்பு	1589
அசத்து –	நிலையில்லாப் பொருள்	1417
அணு –	உயிர்	1985
அதோமுகம்		1135, 1336
அத்துவ சோதனை–	அத்துவாக்களைச் சுத்தி செய்தல்	1691
அரவு –	குண்டலி	1275
அருட்கண் –	அருளறிவு	1789
அருட் சத்தி –	சத்தியின் இயல்பான நிலை	1682
அன்னம் –	அம்ச மந்திரம்	1481, 1982
ஆகம வகை 9 –		1415
ஆடு –	மேடராசி	1256
ஆதனம் –		1120
ஆதார சோதனை –	ஆறு ஆதாரங்களில் மூச்சைச் செலுத்துதல்	1477
	ஆதாரங்களில் அனுபவம் பெறுதல்	1691
	ஆதார யோகத்தால் அடையப் பெறும் பேறு	1876
ஆயும் அறிவு –	ஆன்மா	1786
ஆவாகனம் –	எழுந்தருள்வித்தல்	
ஆறு அங்கம் –	ஆறு ஆதாரம்	1185
இருகை –	இடகலை, பிங்கலை நாடிகள்	1374
இருதய மந்திரம் –	அங்க மந்திரம் ஆறனுள் ஒன்று	1082
இருள் –	ஆணவ மலம்	1081, 1779
உபசாந்தம் –	போக்கு வரவு அற்ற – சலனம் அற்ற – நிலை	1498
உபசாரம் 16 –		1808
உருத்திரம் –	சத்தியின் மூல மந்திரம் (இது யசுர்வேதத்தின் பகுதியான 'ஸ்ரீருத்ரம்' அன்று.)	1163

ஊர்	–	சகஸ்ராரம்	1961
ஏரொளிச் சக்கரம்			1243
ஐங்கருமத்தள்	–	சத்தி	1211
ஐங்கருமம்			1779
ஐம்பாசம்	–	ஐம்மலம்	1795
ஐம்மலம்			1466
ஒரெழுத்து	–	பிரணவம்	1692
கமலம்	–	சகஸ்ராரம்	1052
கலை	–	சத்திகலை	1051
காந்தாரம்	–	ஆறு ஆதாரம்	1186
காமியம்	–	விரும்புபவை	1293
காரியமாயை	–	அசுத்த மாயை	1906
குளம்	–	ஆக்ஞை என்ற ஆதாரம்	1186
கை	–	நாடி, சுழுமுனை	1506
கைகள்	–	இடகலை, பிங்கலை	1011
கேசரி	–	ஒரு முத்திரை	1871
கோதண்டம்	–	புருவமத்தி	1210
சகலநிலை	–	பிறப்பு (முந்நிலையுள் ஒன்று)	1769
சகலம்	–	உயிரின் வகையுள் ஒன்று	1769
சங்கு முத்திரை			1086
சதசத்து	–	உண்மைப் பொருளையும், பொய்ப் பொருளையும் அறிவதாகிய ஆன்மா	1558
சத்தி வித்தை	–	சத்தி தரிசனம்	1458
சத்து, அசத்து, சதசத்து			1558
சத்து	–	உண்மைப்பொருள், இறைவன்	1417
சாக்கிராதீதம்	–	துரியாதீதம்	1498
சாம்பவி	–	ஒரு முத்திரை	1871
சித்தர்	–	சிவஞானியர்	1432

சிவகதி			1946
சிவோகம் பாவனை	–	'நான் சிவமானேன்' என்ற பாவனை	1417
சிவோகம்	–	சிவமாதல்	1947
சுவா	–	சுவானுபூதி	1099
சுழுனை	–	சுழுமுனை	1927
சூலமுத்திரை			1083
சேதனம்	–	அறிவுடைய பொருள்	1990
சொரூபம்	–	உருவம்	1873
	–	இயல்பு நிலை	1577
சொல்	–	பிரணவம்	1018
சோடச மார்க்கம்	–	சோடசப் பிராசாத கலை தொடர்புள்ள யோகம்	1877
தந்திரம்	–	யோகத் தியான முறை	1268
தற்பரத்தாள்			1124
தாபரம்	–	இலிங்கம்	1700
தாரம்	–	ஆதாரம்; பிரணவம்	1734
துரிசு	–	மலங்கள்	1407
தென் மூலை	–	மூலாதாரம்	1095
நவநிலை	–	சிவனது ஒன்பது நிலைகள்	1788
நாதாந்தம்	–	பரவெளி	1594
நாராயணன்	–	சிவனது பெயர்களுள் ஒன்று	1078
பஞ்ச தசாட்சரி மந்திரம்	–	சத்தியின் மூல மந்திரம் (புவனாபதி சக்கர வடிவில் உள்ளது)	1164
பரநாதம்			1970
பரவிந்து			1038
பராபரை	–	பரமும் அபரமுமாக விளங்கும் சக்தி	1416
பராவித்தை	–	சத்தியின் மூல மந்திரம் (பஞ்சதசாட்சரி மந்திரம்)	1163, 1295
பாசம்	–	மாயையால் உண்டாகும் பந்தம்	1783

பாதம்	–	சத்தி நிபாதம்	1423
பாழ்	–	அகண்ட வெளி	1343
பிராசாதயோகம்			1080
பிராணாயாம மந்திரம்	–	அம்ச மந்திரம்	1085
பிலம்	–	இதயக் குகை; 'சித்' –ஆகும் சித்தம்	1742
பிள்ளைத்தடம்	–	புருவமத்தியிலிருந்து சகஸ்ராரத்திற்கு மூச்சு செல்லும் வழி	1106
பூரண கும்பம்	–	பூரணகும்பகம்	1078
மந்திரராயு	–	மந்திரங்களில் முதன்மையானது, (திருவைந்தெழுத்து)	1186
மன்று	–	சகஸ்ராரம்	1051
மாமாயை	–	சுத்தமாயை	1035
மான்	–	பிரகிருதி	1064, 1730
முத்தன்	–	முத்தி பெற்றவன்	1072
மூலமலம்			1262
மூலம்	–	மூலமந்திரம்	1834
		மூலாதாரம்	1366
வட்டம்	–	ஆகாயம்	1034, 1728
வயிந்தவம்	–	சுத்தமாயையின் காரியம்	1035
		சுத்தமாயையில் தோன்றும் தத்துவம்	1901
வன்னி	–	சிவ சோதி	1024
	–	மூலக்கனல்	1026
	–	சிவாக்கினி	1242
	–	சிவம்	1252
விசுத்தி	–	ஓர் ஆதாரம்	1184
வித்தை	–	தியான முறை	1307
விந்து	–	நாதம்	1124
ஓர் யோகானுபவம்			
விந்துத் தானம்	–	சுத்த மாயா புவனம்	1882

பின்னிணைப்பு – IV

கலைச்சொல் விளக்கம்

1.	ஆனந்தம் 3	..	பொருளானந்தம், அறிவானந்தம், ஞானானந்தம்
2.	உபசாரங்கள் 16	..	எழுந்தருள்வித்தல், நிலை – பெறுவித்தல், திருவருட் சன்னிதி, நல்வரவு கூறல், புறத்தார்க்குப் புலப்படாமை, அறிவு சிவத்தில் கலத்தல், திருவடியில் நீர்விடுதல், நீர்பருகுதல், திருமுடியில் நீர் விடுதல், பூமாலை சூட்டல், நற்புகை, விளக்கு – ஏந்தல், படைத்தல், பருக அளித்தல், ஜபம் செய்தல், ஒளி வழிபாடு.
3.	எண்குணம்	..	சிவபிரானின் குணங்கள் : தன் வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கையுணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பிலின்பம் உடமை.
4.	கட, பட நியாயம்	..	நூல் துணியாதலும், மண் குடம் ஆதலும்.
5.	கேவலம்–சகலம்–சுத்தம்	..	அறிவின் தரத்தை (quality of knowledge) வைத்து உயிர்களை மூன்று வகைப்படுத்துவர். என்றும் உளதாகிய ஆணவ மலத்தால், முழுவதும் மறைக்கப்பட்ட அறிவோடு, தன்னையும், வேறு எதனையும் அறியாமல், அறியாமை இருளில் கிடக்கும் உயிர் கேவல நிலையிலுள்ளது. இது முதலாவது படிநிலை. வளர்ச்சிப் படியில் அடுத்தது: உயிரினுடைய ஆணவ மலத்தைப் பிரிப்பதற்காக அதற்கு அறிவு ஊட்டும் பொருட்டுச் சிவம் அதற்குப் பிறவியைக் கொடுக்கிறான். இந்த

நிலையில் அதற்கு மூன்று மலங்களும் உண்டு. இது சகல நிலை. வளர்ச்சிப் படியில் இறுதி நிலை: உயிர் அறிவு வளரப் பெற்று முறையே மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மூன்று மலங்களிலிருந்தும் விடுபட்டுத் தூய அறிவு உடையதாகும். இது சுத்த நிலை. இந்த நிலைகளை அவத்தைகள் என்றும் அழைப்பர்.

6. சகளம்–நிஷ்களம் .. சிவம் மாந்தர்க்கு அருள் வழங்குவதற்காக, அவர்கள் தன்னை வழிபட்ட உருவத்தோடு அவர்களுடைய உணர்வுக்குப் புலப்படுவான். இவ் உருவம் சகளம் எனப்படும். காற்று முதலியவை உருவமற்ற பொருட்கள். ஆகவே அருவம். சிவத்தை அருவ மாகவும் வழிபடலாம். அதுவும் சகளமே. நிஷ்களம் என்பது சிவத்தினுடைய இயல்புத் (சொரூபத்) திருமேனியாகும். இதனை அகண்டாகாரவெளி என்பர். திருமூலர் இதனைத் திருவம்பலம் என்பார்.

7. சக்கரம் – இது வட்டம் எனப் பொருள்படும். அண்ட கோளங்கள், கோள்கள், உலகம் முதலியன வட்ட வடிவின. பிண்டமாகிய உடம்பும் அண்டத்தில் உள்ளவை போன்ற சில தன்மைகளை உடையது. அண்டம் வட்டமாக இருத்தலின் 'அண்ட சக்கரம்' என்றனர். பிண்டம் (உடம்பு) தனக்கு ஆதாரமாக உடைய நரம்புத் தானங்களை 'நாடிகள்' என வழங்கி, அவற்றுள் யோக நெறிக்குச் சிறப்பான நடுநாடியில்; இடுப்பிலிருந்து புருவமத்தி வரை உள்ள உணர்வு அனுபவ – உடலனுபவச் சந்தி இடங்களை 'ஆதாரம்' என வழங்கி, இவ் ஆதாரங் களைச் 'சக்கரம்' என்றனர். உயிரும் உடம்பின் நரம்பு மண்டலமும் கூடி

அனுபவிக்கும் இன்ப அனுபவ இடங்கள் இவை. யோகானுபவம் என்பது இவ்வனுபவமே. (இதை 'ஆதார யோகம்' என்பர். நிராதார யோகம் வேறு.) உடம்பில் உள்ள ஆதாரம் ஆறு. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவை. இவற்றையும் 'சக்கரம்' என்பது யோகநூல் வழக்கு.

மந்திரத்தியான முறையில், தியானிக்கப்படும் "சிறப்பு மந்திர வரிசைகளை" அமைத்து அவற்றையும் 'சக்கரம்' என்று வழங்கினர். "ஸ்ரீ சக்கரம்", "திருவம்பலச் சக்கரம்" என்பவை சான்று. அவற்றைத் தகட்டில் எழுதி அதை 'இயந்திரம்' என்றனர். இயந்திரம் என்பது கருவி.

8. சத்தி வகைகள் .. ஞானமே அருட்சத்தி, இதுவே இயல்பு (சொரூபம்). இது பராசத்தி என்றும் வழங்கும். தடத்த நிலையில் அது திரோதான சத்தி ஆகும். அது இச்சை, ஞான, கிரியை சத்திகளாக, 3 வகையில் தொழிற்படும். சத்தி காரிய வேறுபாட்டால் பலவகைப்படும்.

9. சத்து–அசத்து–சதசத்து .. பொருள்களை உண்மைப் பொருள், நிலையில்லாப் பொருள் என இருவகை யாகப் பிரிக்கலாம். இறைவன் உண்மைப் பொருள். அவன் 'சத்' எனப்படுவான். பிற பொருள்கள் அனைத்தும் தோன்றி மறைவன வாதலின் அவை நிலையில்லாப் பொருள். அவை தாமாக இயங்க மாட்டா. அவை 'அசத்' எனப்படும். உயிர்கள் இவ்விரண்டு வகையிலும் சேரமாட்டா. அவை இறைவனைச் சார்ந்து அவனைப் போலவே 'சத்' ஆகும். அதற்கு முன்னர் அவை பொருள்களைச் சார்ந்து 'அசத்' ஆகும்.

			இவ்வகையில் உயிர் சத், அசத் என்னும் இரண்டையும் அறியும். ஆதலால் 'சதசத்து' எனப்படும்.
10.	சாதகம் 4	..	சீலம், நோன்பு, அறிவு, செறிவு.
11.	சித்தர்	..	சித்துப் பொருளை அதாவது அறிவுப் பொருளை அறிந்து அதன் மயமானவர். 'சித்' என்பது சித்தம் என்பதனையும் குறிக்கும். அதன் பொருள் உயிருணர்வு என்பது.
12.	சித்து – அசித்து	..	பொருள்கள் அறிவுடையன, அறிவில்லாதன என இரு வகைப்படும். இவை முறையே சித், அசித் எனப்படும். இறைவனும் உயிர்களும் முதல்வகை. பிற பொருள்கள் எல்லாம் இரண்டாம் வகை.
13.	சுத்த மாயையில் தோன்றும் சத்திகள்	..	வாகீஸ்வரி, தற்பரை, நாதம், குண்டலி
14.	ஞாதுரு, நேயம், ஞானம்	..	ஞாதுரு – அறிபவன், நேயம் – அறியப்படும் பொருள் ஞானம் – அறிவு
15.	தடத்தம் – சொரூபம்	..	உண்மைப் பொருள்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றை இரண்டு வகையில் நோக்கலாம். ஒன்று காரியத்திற்காக மேற்கொள்ளும் நிலை (Functional Form) இதைத் தடத்தம் என்பர். மற்றொன்று உண்மை நிலை (Absolute Form) இதை சொரூபம் என்பர். கீழே பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் இந்த இரண்டு நிலைகளிலும் வழங்கப்படும் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

பொருள்	தடத்தம்	சொரூபம்
1. பதி	பதி (பலவகைத் தெய்வ உருவங்கள்)	சிவம்
2. பசு	பசு (உயிர்)	ஆன்மா
3. பாசம்	பாசம்	மலம்

16.	தாது 7 ..	இரதம், இரத்தம், எலும்பு, சுக்கிலம், தசை, தோல், மூளை
17.	பதமுத்தி 3 ..	சாலோகம் – சிவலோக வாழ்வு சாமீபம் – சிவனுக்கு அண்மை சாரூபம் – சிவனது உருவத்தைப் பெறுதல்
	பரமுத்தி	சாயுச்சியம் – (வீடுபேறு)
18.	பரம் – அபரம் ..	பரம் – கடந்த பொருள், மேலானது. அபரம் – உலகத் தொடர்புடையது.
19.	பன்னீர் இராசி ..	மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.
20.	பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் ..	உயிர் ஆணவ மலத்தால் கட்டுண்டிருக்கும் போது பெறும் அறிவு பாச ஞானம். உயிர் தன்னை அறிதல் பசு ஞானம். உயிர், தனது பதியையும், பதியால் தன்னையும் உலகையும் அறிவது பதிஞானம்.
21.	பெத்தம், முத்தி ..	பெத்தம் – ஆணவ மலத்தால் கட்டுண்ட நிலை. முத்தி – அக்கட்டிலிருந்து விடுபட்ட நிலை.
22.	மாயை ..	இது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்று வகைப்படும். மாயை என்பது உருவமில்லாத ஓர் ஆற்றலாகும். அதனை, மாயாசத்தி என்பர். இவற்றின் விளக்கத்தை, 'முப்பத்தாறு தத்துவங்கள்' என்னும் தலைப்பில் (முதற் பகுதிப் பின்னிணைப்பு) காண்க. இவற்றுள் சுத்த மாயை 'விந்து' என்றும், அசுத்த மாயை 'மோகினி' என்றும் காரிய மாயை என்றும் பிரகிருதி மாயை மூலப் பகுதி என்றும், மான் என்றும் வழங்கப்படும்.

23.	மும்மலங்களின் வகைப்பாடு (சகசமலம் – ஆகந்துக மலம்)	..	ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்கள். இவற்றுள் ஆணவம் இயற்கையானது, என்றும் உள்ளது. இது உயிரின் அறிவை மறைத்துக் கொண்டு, அது உண்மையை அறிய ஒட்டாமல், அதனோடு சேர்ந்தே இருக்கின்றது. உயிரின் இயற்கையில் (தன்மையில்) ஒரு பகுதியாகவே இருக்கிறது. ஆகவே இதனைச் 'சகச மலம்' என்பர். மாயை என்ற மலம் தனித் தலைப்பில் விளக்கப்பட்டது. ஆணவ மலத்தை உயிரிலிருந்து பிரிப்பதற்காகவே இறைவன் உயிருக்கு மாயா மலத்தோடு தொடர்பை உண்டாக்கி அதைப் பிறவி எடுக்கச் செய்கின்றான். ஆகவே இந்த மாயாமல காரியம் என்றும் உள்ளதல்ல; இடையில் வருவது. கன்மம் என்பது வினைப் பயன். பிறவி எடுத்த உயிர், தான் செய்த வினை யின் பயனை அனுபவிக்கவே வேண்டும். ஆகவே இதுவும் இடையில் வந்ததே. இக்காரணத்தால் மாயை, கன்மம், இரண்டும் 'ஆகந்துக மலம்' எனப்படும்.
24.	வயிந்தவம்	..	சுத்த மாயையில் தோன்றும் சிவம், சத்தி, சாதாக்கியம், மாயேச்சுரம், சுத்தவித்தை என்ற ஐந்து தத்துவங் களுமாகும். இவற்றுள் சிவம் என்பதை நாதம் என்றும், குடிலை என்றும் வழங்குவர். சத்தி என்பதை விந்து என்றும் வழங்குவர். இவை சிவமும் சத்தியும் தடத்த நிலையில் கொள்ளும் வடிவங்கள்.

பின்னிணைப்பு – V

சிறப்புப் பெயர் அகர நிரல்

எண் : பாட்டெண்

அபிராமி	1038
அமுதேஸ்வரி	1340
ஆதித்தன்	1954
ஆரிய நங்கை	1169
ஆவின் கிழத்தி	1110, 1111
இச்சா, ஞான, கிரியா சத்திகள்	1125
ஈசி – சத்தி	1036
ஐம்முகன் – சதாசிவன்	1788
ஓங்காரி – சத்தி	1063
கபாலினி – சத்தி	1197
காலவி – காலமாக உள்ளவள்	1203
சடாதரி – சத்தி	1127
சண்டிகை – சத்தி	1040
சம்பு – சிவன்	1955
சித்தாந்தம்	1408
சிவசத்தி	1127
சுத்த சைவம் – சமயத்தின் பெயர்	1415
சுத்த சைவர்	1413
சைவ சித்தாந்தம்	1407
தற்பரை – சத்தி	1064
திரிபுரை – சத்தி	1035, 1140
தில்லை மன்று	1055
நாதாந்தம்	1038, 1408
நாரணி – சத்தி	1036
பராசத்தி	1047
பராபரை	1060
பரிபுரை–சிலம்பணிந்தவள்–சத்தி	1036
பிஞ்ஞகன் – சிவன்	1227, 1776
புவனாபதி – சத்தி	1061,1139, 1237
சிவன்	1973
போக சத்தி – நுகர்ச்சி தருபவள்	1158
மந்திர சண்டிகை – சத்தி	1203
மனோன்மணி – சத்தி	1036, 1051, 1109
முக்கண்ணி – சத்தி	1057
மேரு	1952
யோகினி சத்தி – யோகியர்க்கு அருள்புரியும் சத்தி	1158
வயிரவி – சத்தி	1065

அருஞ்சொல் அகர நிரல்
எண் : பாட்டெண்

உயிரெழுத்துக்கள்:

அகங்காரம் – முனைப்பு 1589
அகம்படி – உள்ளுறுப்பு 1208
– உள்முகம் 1194
– அடிமைப்பணி 1852
– உள்ளம் 1855
அக்கரம் – எழுத்து 1693
அங்கி – மூலக்கனல் 1161
அங்குலி – அங்குலம் 1179
அஞ்சமுது – பஞ்சாமிர்தம் 1808
அஞ்சனம் – கருமை 1718
அணங்கி – வருத்தி 1478
அண்டுதல் – அணுகுதல் 1968
அண்ணித்தல் – இனித்தல் 1974
அண்ணியன் – கருணை உடையோன் 1329
அதைத்தல் – அலைதல் 1675
அந்தித்தல் – அடக்குதல், முடித்து வைத்தல் 1489
அபர பக்கம் – தேய் பிறை 1917
அபரம் – உலகியல் 1769
அம்பரம் – ஆகாயம், பரமாகாயம் 1773
அம்பு – நீர் 1136
அருணோதயம் 1970
அர்ச்சனை 1230, 1310
அலர்தல் – ஒளி பெறுதல் 1017
அவி – வேள்வியில் சொரியும் உணவு 1805
அழிதகவு – அழிவு 1843
அறவாழி – அறக்கடல், இறைவன் 1784
அனித்தம் – நிலையில்லாதது 1834
அனுவாரணி – அணுவில் அணு வானவள் ; சத்தி 1226
அனோரணி – அணோரணி என்பதன் திரிபு; அணுவில் அணுவானவள் 1042
ஆ – ஆன்மா 1149, 1373
ஆகம் – உடம்பு 1605, 1697
ஆகோசனம் – கோரோசனை 1354
ஆடம்பரம் – 1639
ஆத்தம் – ஆப்தம், உறவு 1032
ஆத்தன் – அன்புடையவன் 1840
ஆதேயம் – தாங்கப்படுவது 1737
ஆமம் – உணவு, அமுதம் 1200
ஆயம் – கூட்டம் 1236
ஆய்தல் – நுண்மையடைதல் 1844
ஆருடம் – ஏறுதல் 1253
ஆர்தல் – அனுபவித்தல் 1776
ஆலித்தல் – மகிழ்தல் 1276
ஆவணம் – பத்திரம் 1884
ஆவாகித்தல் – எழுந்தருளச் செய்தல் 1806
ஆவுடையான் – சிவன் 1684
ஆளி – ஆள்பவள் 1169

இகல் – மாறுபாடு 1953
இடை – இடம் 1981
இந்து – சந்திரன் 1833
– சந்திர மண்டலம் 1732
இந்துகை – சந்திர மண்டலம் 1253
இரதம் – சாரம் 1911
இரவி – சூரியன் 1789
இலம்பியம் – பேறு 1233
இலயம் – ஒப்பு 1858
இலிங்கம் – சிவபரம் பொருள் 1011
இழைதல் – நிலவுதல் 1820

உகத்தல் – விரும்புதல் 1675
உகல் – நீங்குதல் 1706
உடு – விண்மீன் 1708
உட்கட்டம் – உள்ளார்ந்த கட்டமைப்பு 1265
உட்குதல் – அஞ்சுதல் 1916
உத்தரம் – வடக்கு 1160
உந்தி – உயர்ச்சி, உயர்ந்த இடம், தலையுச்சி 1753
உலப்பிலி – அழியாதவன் 1792
உலப்பு – அழிதல் 1343
உபாதி (உவாதி) – துன்பம் 1990
செயற்கை 1190
உழைத்தல் – அணுகி நிற்றல் 1820, 1822
உள்ளொளி – பதிஞானம் 1334
ஊறல் – உடம்பில் ஊறும் அமுதம் 1974
ஊனம் – பூதவுடல் 1882
எண்ணெண்கலை – 64 கலைகள் 1695
எய்தல் – அறிதல் 1505
ஏகாந்தம் – தனிமை 1863
ஏதம் – வீண் 1620
ஏமம், ஏம் – பாதுகாப்பு 1081, 1210
ஒன்றுதல் – பொருந்துதல் 1017
ஓ – இடையறவு 1829

மெய்யெழுத்துக்கள்:

கடம் – குடம் 1908
கடி – காவல் 1399
கணித்தல் – தியானித்தல் 1855
கணு – பிரிவு 1987
கண் – அறிவு 1779
கண்காணி – மேற்பார்வை இடுவோன் 1994
கண்டம் – கழுத்து 1348
கண்ணியம் – பெருமை 1329
கந்தரம் – கழுத்து 1268
கப்பரை – பிச்சைப் பாத்திரம் 1648
கமை – பொறுமை 1535
கம்பலை – ஒலி 1105
கரி – சாட்சி 1984
கரீடணி – ஆகர்ஷணி என்ற வடமொழிச் சொல்லின் திரிபு 1041
களி – மயக்கம் 1399
காந்தம் – 1637
காமுகை – விருப்பம் உடையவள் 1209
காளம் – நஞ்சு 1803
– பாம்பு 1804
காற்பதி – மூக்கு 1023
கானித்தல் – பாடுதல் 1878
கிஞ்சுகம் – முருக்கம் பூ 1072
கிடுகு – கேடயம் 1378
கிழமை – உரிமை 1960
குகை – நரக (உலக) ம் 1333
குங்குமம் – 1165
குசை – கடிவாளம் 1663
குண்டிகை – குடம் 1195
– கலசம் 1374
குரால் – பசு 1744
குழி – கடல் 1848
கூசு – தடை 1783
கெந்தம் – சுக்கிலம் 1076
கெமுதம் – ஆனந்தம் 1394
கேள் – உறவு 1341
கை – சிறுமை 1973
– ஒழுக்கம் 1749
கைதவம் – வஞ்சனை 1192
கொல்லை – காடு 1500
கொற்றம் – வெற்றி 1991
கோலாகலம் – ஆரவாரம் 1870
கோன் – ஆயன் 1438
சங்கமம் – கலப்பு 1738
சங்கை – எண்ணிக்கை 1140
சடங்கு – செயல் 1179
சண்டர் – சண்டாளர் 1642
சயனம் – உறக்கம் 1728

சயில லோகம் – இமயமலை 1496
சரிதை – செயல் 1420
சாக்கி – சக்கி முக்கிக்கல் 1637
சாக்கிராதம் – 1833
சாதகம் – பயிற்சி 1033, 1187
சாதாரணம் – இயல்பு 1477
சாதகம் – பயிலுதல் 1560
சாத்தவி – சாத்துவிக குணம் உடையவள் 1127
சாரித்தல் – சூழ்தல் 1074
சிதம்பரம் – ஆகாயத்தானம் 1709
சிலம்புதல் – ஒலித்தல் 1349
சிவகதி – 1215, 1802
சிறகு – எல்லை 1007
சிவானந்தம் – 1694
சிறுகால் – இளமைப் பருவம் 1482
சுருதி – வேதம் 1462
சூக்கம் – நுட்பமான; காரணம் 1779
செந்தமிழ் – தமிழ்நெறி 1079
செம்மாத்தல் – நிமிர்தல் 1137
செறிதல் – உணர்வு கலத்தல் 1795
சைவப் பெரும்பதி – சிவன் 1981
சொருகுதல் – அடங்குதல் 1871
சொன்னம் – சுவர்னம் – தங்கம் 1944
சோடசம் – பதினாறு 1957
தச்சு – அமைத்தல்; வசியப்படுத்தல் 1355
தடம் – இடம்; வழி 1752
தணத்தல் – நீங்குதல் 1360
தணிவு – குறைவு 1987
தண்டு – கேடு; முதனிலைத் தொழிற்பெயர் 1837
தண்டுதல் – கெடுதல் 1837
தந்திரம் – நூல் 1588
தபோதனர் – அடியார் 1837
தமருகம் – உடுக்கை 1280
தமாலம் – பச்சிலை 1059
தமிழ் மண்டலம் ஐந்து – 1630
தம்பலம் – தாம்பூலம், வெற்றிலைக் கூழ் 1097
தரு – கற்பக மரம் 1746
தலைநிற்றல் – ஈடுபடுதல் 1795
தலையரிதல் – தலை வெட்டப்படுதல் 1997
தவம் – யோகம் 1619
தளி – கோயில் 1487
தாணு – சிவன் 1103
தாது – சுக்கிலம் 1691
தாபரம் – நிலையான பொருள் 1738
– நாட்டப்பட்டது; லிங்கம் 1700
தாபித்தல் – நாட்டுதல் 1824
தாயம் – உரிமை 1236
தாரகை – நட்சத்திரம் 1223
தாரம் – மனைவி 1166
– நாக்கு 1871
– பிரணவம் 1734
தாழ்தல் – விரும்புதல் 1624
திதம் – ஸ்திதம் – நிலையானது 1143
திருக்கு – வளைவு 1041
திருமுறை – தோத்திரப் பாடல்கள் 1057
தீர்த்தம் – தூய பொருள் 1840
துரத்தல் – ஓட்டுதல் 1216
துவக்குதல் – கட்டுதல் 1661
தூபி – உச்சி 1977
தெருவம் – உலகம் 1235
தெருள் – தெளிவு – ஞானம் 1789
தெளி – ஆகாயம் 1710
தென் – அழகிய 1730
தேறுதல் – தெளிதல் 1319
தேனித்தல் – இனித்தல் 1878
தோத்திரம் 1057
நடர் – கூத்தாடுவோர் – சிவபெருமான் 1986
நயன் – நீதி 1606
நழுவுதல் – வீணே கழிதல் 1816
நாகம் – ஆகாயம் 1013
நாமம் – புகழ் 1312
நாயகி – 1311

நாவி – புனுகுபூனை 1444
நாள்வினை – புதுவினை, ஆகாமியம் 1998
நிமை – இமை 1671
நிரந்தரம் – எப்போதும்; நிலை 1866
நிராகாரம் – கண்டனம் 1423
நீவுதல் – விலகுதல் 1497
நூக்குதல் – போக்குதல் 1093
நெருஞ்சில் 1601
நேமி – சக்கரம் (ஆயுதம்) 1825
நேரெழுத்து – சாட்சி 1854
பகல் – பகுத்தறிவு 1706
பகவன் – இறைவன் 1107
பகுத்தல் – விளக்கமாகப் பேசுதல் 1321
பச்சிமம் – மேற்கு 1684
பஞ்சு – ஐந்தாவது 1024
படம் – துணி 1908
படி – நிலம் 1713
படிகம் – 1057
பணித்தல் – தருதல் 1558
பதவை – வழி 1199
பதைத்தல் – விரைதல் 1019
பரம் – சுமை 1577
பரித்தல் – மேற்கொள்ளுதல் 1484
பரியந்தம் – முடிவு 1198
பவம் – பிறப்பு 1669
பவனம் – காற்று 1834
பவுதிகம் – பூதகாரியம்; உலகமும் பொருள்களும் 1787
பள்ளி – இருக்கை 1487
– கல்விச்சாலை 1335
பறி – பொன் 1349
பாகம் – பக்குவம் 1047
பாசம் – கயிறு 1368
பாதுகம் – காலணி 1648
பாரம்பரியம் – மரபு 1221
பாவ வினாசன் – பாவம் போக்குபவன் 1706
பாவித்தல் – தியானித்தல் 1765
பானு – சூரியன் 1833
பிச்சையிறுத்தல் – இரத்தல் 1864
பிணக்கு – மாறுபாடு 1573
பிணைதல் – கலத்தல் 1237
பிண்டம் – உடம்பு 1348
பிதிர்பதம் – பிதிர் உலகம் 1880
பிரசைகள் – மக்கள் 1666
பிரணவம் – 1268
பிராணி – சீவன் 1224
பிலம் – குகை 1741, 1742
பிலாவனம் – தெளித்தல் 1937
பிறகிட்டு – மாற்றி 1712
பிறக்குதல் – ஒளி வீசச் செய்தல் 1824
பிறழ்தல் – ஒன்றன்பின் ஒன்றாகப் பயிலப்படுதல் 1871
பேணுதல் – வழிபடுதல் 1824
பொழில் – நிலவுலகம் 1315
பொறிதல் – புழுங்குதல் 1332
போதம் – ஞானம் 1774, 1560
போதனம் – உபதேசம் 1031
போதனை – அரசிலை 1034
போர் – வேறுபாடு 1975
மஞ்சன சாலை – நீராட்டும் இடம் 1708
மஞ்சனம் – நீராட்டுதல் 1808
மண்டை – கலம் 1393
மதோமகி – பெரியதினும் பெரியாள் – சத்தி 1226
மத்து – உன்மத்தம் என்பதன் திரிபு, களிப்பு 1052
மருட்டுதல் – மாற்றுதல் 1171
மன்பகை – மக்கள் 1641
மன்றன் – சிற்றம்பலவன் 1125
மாகன் – சிவன், மாகமாக (பரமாகாயமாக உள்ளவன்) 1225
மாதுரிகை – இனிமையகப் பேசுபவள் 1192
மின்னாள் – ஒளியுருவுடையாள் 1012
மீ – மேல் 1689
மீகாமன் – கப்பல் செலுத்துவோன் 1607
முகமம் – முகமன் என்பதன் மரூஉ, உபசாரம் 1844

முக்கால ஞானம் – 1059
முசலம் – உலக்கை 1062
முந்தல் – கண் முன்னே
காணுதல் 1621
முப்புரம் – 1006
முயற்றி – முயற்சி 1105
முரித்தல் – கெடுத்தல் 1314
மூர்த்தம் – வடிவம் 1358
மூர்த்தி – வடிவம் 1035
மெய்ப்பொருள் – சிவம் 1339
மையல் – மயக்கம் 1093
மோனை – முதல் 1213
யோகபட்டம் 1648
வம்பு – மணம் 1048
வயனம் – உபாயம் 1817
வராகம் – பன்றி 1062
வரைத்தல் – குறியிடுதல் 1756
வள்ளம் – கிண்ணம் 1171
வாதனை – வாசனை–வாழ்வு 1876
வாய் – உண்மை; மை யீறு
கெட்ட பண்புப் பெயர் 1598
வாரி – கடல் 1756
– உகந்தது 1832
வாருணை – அமுதம் 1185
விடி – எல்லை 1671
விது – சந்திரன் 1488
– தவறு 1924
விந்து – சுக்கிலம் 1932
வியாத்துவம் – வியாபகம் 1592
– பரவி நிற்கும் பண்பு 1592
வியாபி – வியாபகம் உடையவன்,
சிவன் 1790
வியோமம் – பராகாயம் 1141
வியோகம் – வேறு 1989
விரேசம் – விரேசனம் என்ற
வடமொழிச் சொல்லின்
திரிபு; கழிதல் 1078
வினவுதல் – உள்முகமாக
ஆராய்தல் 1012
வீசம் – பீஜம் – வித்து எழுத்து 1264
வீயம் – பீஜம் – விதை 1905
வேணு – மூங்கில்; சுழுமுனை 1082
வேந்து – இறைமை 1575

(முன்பக்க தொடர்ச்சி)

1981 - ஆம் ஆண்டில் "சிறந்த கல்லூரி முதல்வர்" எனத் தமிழக அரசின் விருது பெற்றார்.

இலக்கணம், மொழியியல், காப்பிய இலக்கியம், திருமுறைகள், சைவ சித்தாந்தம் ஆகியவை இவர் பயிலும் சிறப்புத் துறைகள். இசையில் பயிற்சி பெற்றவர்.

"பழந்தமிழகத்தில் கலைகளும் அறிவியலும்" என்னும் பொருள் பற்றி 1962 - இல் ஆய்வேடு வழங்கி, "எம். லிட்.," பட்டமும், "இராமலிங்க சுவாமிகளின் நூல்கள்" பற்றி 1968 - இல் ஆய்வேடு வழங்கி "பிஎச்.டி." பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்றார்.

இராமலிங்க சுவாமிகள் பற்றி இவர் எழுதிய ஆங்கிலநூல் : "Life and Teachings of st. Ramalingar" – மும்பைப் பாரதீய வித்யாபவனத்தால் 1973 இல் வெளியிடப் பட்டது.

இவர் எழுதிய பிற நூல்கள் : உருவும் உணர்வும், பண் சுமந்த பாடல், கல்லும் கனியாகும், மக்களை எட்டிய மறைத் தமிழ், பன்னிரண்டாம் திருமுறை – ஓர் ஆய்வு, திருக்குறள் சிந்தனை, பாடுவார் முத்தப்பரின் 'செயங் கொண்டார் சதகத்திற்கு உரை, பண்டித மணி கதிரேசனாரின் 'மண்ணியல் சிறு தேர்' – நாடக நூலுக்கு உரை ஆகியவை.

இவரது மேற்பார்வையில் 20 மாணவ மாணவியர்கட்கு மேல், ஆய்வு நடத்தி, "பிஎச். டி." பட்டம் பெற்றுள்ளனர்.

இந்நூல் ...

திருமந்திரப் புதிய பதிப்பின் இவ் விரண்டாம் பகுதி, சிவயோகத்தின் உள்ளே நம்மை அழைத்துச் செல்கின்றது. 'மந்திரம், தந்திரம், யந்திரம்' என்று பரவலாகப் பேசப்படும் செய்திகளை இதில் சாஸ்திர பூர்வமாகத் தெரிந்து கொள்ளலாம். சிவயோகத்தில் மந்திரங்கள் பெறும் இடம் என்ன என்பதைப் பற்றியவை இவை. மந்திரம் – நிலை நிறுத்துவது. அக்ஷரம் – அழியாதது. அக்ஷரங்களால் ஆகிய மந்திரம், தானும் அழியாது; தன்னைத் தியானிப்பவரையும் அழியாமல் காக்க வல்லது.

சிவயோகத்திற்கு உதவும் சிவசத்தியின் மந்திரங் களும், யந்திரங்களும் (சக்கரங்கள்) இப்பகுதியில் விளக்கப் படுகின்றன. சத்தி ஆற்றலாக நம்மிடம் – நம் உடம்பிலேயே – இருக்கின்றாள். அவளது மந்திரத்தைத் தியானித்து, யோக சாதனை செய்தால் அருளாற்றல் பெறலாம். அருள் வாழ்வு வாழலாம். சிவத்தை உணரலாம். சிவமே ஆகலாம்.

அடுத்துச் சைவ சமயம் பேசப்படுகின்றது. சிவனோடு மனிதர் கொள்ளக் கூடிய 4 உறவுகள் (உணர்வுச் சம்பந்தம்) குறிப்பிடப்படுகின்றன. ஆன்மீக குருவின் அவசியம், அவன் தன்மை, பெருமை, அவன் செய்யும் உதவி ஆகியவை யோக சம்பந்தத்துடன் விளக்கப்படுகின்றன. புற வழிபாடும் அக வழிபாடும் யோகத்துடன் இணைத்துக் கூறப்படுகின்றன.

பின்பு, யோக இயலிலேயே மீண்டும் நுழைந்து, சூரியன், உடம்பில் ஊறும் விந்து, அதைக் கட்டுதல் ஆகியவை விளக்கப்படுகின்றன.

அடுத்து உயிரைப் பற்றிய – நம்மைப் பற்றிய – தத்துவச் செய்திகளோடு, இப்பகுதி நிறைவு பெறுகின்றது.